புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஸெப்டம்பர் ௴ 13௳ [ந. 61.

## ஜப்பான் தெற்கு நோக்கி வியாபித்தல்.

"ஜப்பான் மிகக் குரூரமாகவும், அதிவேகமாகவும் படைபெடுத்துக்கொண்டு வருகிறது. அது வாலிப சேஷ்டையுடன்கூட ஆனால் கட்டுப்பாட்டுக்குட்பட்டு ஒழுங்கான முறையிலும் இருந்துவருகிறது. ராஜ்ஜியத்தை அபிவிருத்தி செய்ய இதர ஜாதிகளைப் பிடிப்பதுதான் இத்தேசத்தின் குணங்களாகும். ஜப்பான் நீதியாக பிறர் தேசங்களைக் கவர நியாயம் இருப்பதுபோல் சொல்லிக்கொண்டு மத ஆவேசம் பிடித்து சாம்ராஜ்ஜியம் ஸ்தாபிக்க தேவ தூதர்கள்போல பாவித்துக் கொள்ளுகிறது. இந்தக் காரணங்களினால்தான் அதற்கு அதிக பலம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆகையால் அதை அடக்க அதைக்காட்டிலும் அதிக பலம் வேண்டும்; அல்லது ராணுவ அதிகாரத்தை அழிக்கும்படியான ஜனங்களின் கிளர்ச்சி ஏற்படவேண்டும் என்று பிரபல 'பத்திராதிபர், ஜான் குந்தர், 1939-ம் வருஷம் ஜூன் மாதத்தில் எழுதியிருக்கிறார். அப்பொழுது அவர் சொல்லிய ஜப்பானைப்பற்றிய அபிப்பிராயம் இந்நிலைமைக்கும் பொருந்தக்கூடியதாகவே கருதலாம்.

### அதன் சரித்திரப்போக்கு.

1868-ம் வருஷத்தில் மற்ற இதர அரசாங்கங்களின் வரிசையில் ஒன்றாகச் சேர்ந்ததுமுதல் வெளிப்படையாகவோ, ரகசியமாகவோ இதர பிரதேசங்களில் வியாபிக்கும் கொள்கையை ஜப்பான் பின்பற்றி வருகிறது. அது 1895-ம் ஆண்டில் சைனா-ஜப்பானிய யுத்தத்தில் சைனாவிடமிருந்து பார்மோஸா, க்வான்டுங்

முதலிய நாடுகளை ஜப்பான் முதல்முதலில் கைப்பற்றிக்கொண்டது. இதுதான் அதன் சாம்ராஜ்ஜிய ஸ்தாபனத்திற்கு ஆரம்பம். க்வான்டுங் ஒரு தீபகற்பம். அதைப்பற்றி நாம் விஸ்தாரமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த இடத்தில் தான் பேர்போன க்வான்டுங் சைனியம் பூராவும் சேகரிக்கப்பட்டு, அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

69403

தூரக்கிழக்கிலும், உலகம் பூராவும் ஜப்பானின் மகத்தான காரியத்தைப் பரவச்செய்ய கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ராணுவக் கக்ஷிக்கு 'க்வான்டுங்' சைனியம் ஏற்பட்டது ஒரு அங்குரார்ப்பணம். இந்தச் சைனியம் 1931-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 18-ம் தேதியில் மூக்டனில் நடந்த கலவரத்தைக் கிளப்பி, அதை வியாஜமாக வைத்துக்கொண்டு மஞ்சூரியாவை பலாத்காரமாகச் சேர்த்தும், மஞ்சுகோவில் பொம்மை அரசாங்கம் ஏற்படுத்தியது. இடைநடுவில் ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் போர் நடந்தது. அதன் முடிவாக தன் சாம்ராஜ்ஜியத்துடன் அது கொரியாவைச் சேர்த்துக் கொண்டது. க்வான்டுங் தீபகற்பத்தைச் சைனாவுக்கு திருப்பிக்கொடுக்கும்படி நிர்பந்தித்து வந்த ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ருஷ்யா, ஜெர்மனி இவைகளையும் அலக்ஷியம் செய்தது. ஜப்பானின் தற்கால சரித்திரமும் அதேமாதிரி ஆக்கிரமிக்கும் கொள்கை என்று தெளிவாகிறது. 1937-ம் வருஷத்தில் போர் துவக்கப்போவதாகச் சொல்லாமல் போரில் புகுந்து சைனாவிலுள்ள அநேக பிரதேசங்களில் போர் செய்தும், கிழக்கு மாகாணங்களில் பொம்மை அரசாங்கமும் ஸ்தாபித்து வருகிறது. 'உடன்படிக்கை' துறைமுகங்கள் ஐரோப்பா தேசங்களுக்கு திருப்திசெய்ய கொடுக்கப்பட்டன. அத்தேசங்களை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் அவைகளை சைனாவிடம் பிடுங்கிக்கொண்டது. தெற்கே ஹைனன் தீவையும் பிடித்துக்கொண்டது. கிங்போவுக்கு எதிரேயுள்ள முக்கியமான தீவையும் ஆக்கிரமித்துக்கொண்டது. கடைசியாக பலவந்தமாகக் கைப்பற்றிக்கொண்டது பிரெஞ்சு குடியேற்ற நாடான இந்தோ-சைனாதான்.

இவையெல்லாம் மேல் நாட்டார் எச்சரிக்கைக்கும், ஆக்ஷேபனைக்கும் மீறி வெளிநாட்டு மந்திரி மத்ஸுவோகா 1938-ல் தூரக்கிழக்கில் 'புதிய திட்டம்' ஏற்படுத்தப்போவதாக வெளிப்படையாகச் சொல்லிவந்த கொள்கையை முன்னிட்டு ஏற்பட்டது. ஆனபோதிலும், இது புதிதல்ல. பழைய யுக்திதான். 1927-ம் வருஷம் தனக்கா—மெமோரியல் பத்திரத்தில் இதே அபிப்பிராயத்தை பெரிய வார்த்தைகளால் உலகத்தாருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. "கிழக்கு ஆசியாவிலுள்ள கஷ்டங்களைத் தீர்ப்பதற்காக நாம் இரும்பு ஆயுதங்களைக் கொண்டு ரத்தத்தை சிந்தச்செய்யும் கொள்கையை மேற்கொள்ளவேண்டும். (இது ஜெர்மன் தலைவரான பிஸ்மார்க்கின் வாக்கியம்). இது ஜெர்மானியரின் கொள்கையும் ஆகும். உலகத்தையே ஜயிக்கப் போகிறார்களாம். (என்ன அடக்கமான திட்டம்!) இதற்காக ஜப்பான் ஐரோப்பாவையும், ஆசியாவையும் ஜயிக்கவேண்டும். அதற்கு முதலில் சைனாவை ஜயிக்கவேண்டும். சைனாவை ஜயிக்க



மங்கோலியா, மஞ்சூரியா இவற்றை ஜயிக்கவேண்டும். இந்த திட்டத்தைப் பூர்த்தி செய்ய 10 வருஷங்கள் ஆகும் என்று ஜப்பான் நினைக்கிறது." ஆரம்பம் முதலிலிருந்து ஒவ்வொரு சமயங்களில் அவசியத்தை முன்னிட்டு மறுத்த போதிலும், ஜப்பானுடைய நிரந்தரமான கொள்கை இதுவே. மங்கோலியாவின் வெளிப்புறம் இன்னும் ருஷ்யாவின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. இதில் ஜப்பான் தோல்வியடைந்தது கவனிக்கத்தக்கது. ஜப்பானின் தூண்டுதலில் சேராமலிருக்கும்படி இந்த முக்கியமான பிரதேசத்தை ருஷ்யா வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துவருகிறது. ஜப்பான் அங்கு பிரவேசித்தால் ருஷ்யா அத்துடன் சண்டைபோடுமென்று ஸ்டாலின் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஐரோப்பாவில், ருஷ்யா போரில இறங்கியிருக்கும்பொழுது, ஜப்பான் இந்தப் பிரதேசத்தில் என்ன செய்யப்போகிறதென்று இனி தெரியவேண்டும்.

ஆசியா கண்டத்தின் கிழக்கு சமுத்திரக்கரை பூராவிலும், கொரியாவிலும், ஸெய்கோன் வரையிலும் உள்ள பாகத்தையும், ஹொங்கேயிலும் ஜப்பான் ஆக்கிரமித்திருப்பது உலக நடவடிக்கைகளில் ஒரு பெரிய சம்பவம். ஹைனன் தீவு அக்கியாப்பிலிருந்து 1,000 மைல் தூரம். ஸ்பிராட்லி தீவுகள் சிங்கப்பூருக்கும், மனிலாவுக்கும் நடுவே உள்ள கோட்டில் இருக்கின்றன. இந்தோ-சைனா கரை நெடுக விமானத் தளங்களை ஜப்பான் அமைத்திருக்கிறது. ஹைனன் தீவைக் கைப்பற்றியவுடன் சென்ற வருஷம் ஒரு சமயத்தில் ஜெர்மனி சிற்பிகளும் அந்தத் தீவில் இறங்கினதாகக் கேள்விப்பட்டோம். ஜப்பானும் அந்தத் தீவை துரிதமாகவும், திறமையாகவும் பலப்படுத்தியிருக்கவேண்டும். இம்மாதிரி தாய்லாந்து, மஞ்சூரியா இவைகளின் எல்லைப்புறங்களிலிருந்துகொண்டு ஜப்பான் மறுபடியும் "தூரக்கிழக்கில் புதிய திட்டத்தில்" சேர்ந்து பெரிய கிழக்கு ஆசியாவில் சமத்துவமாகவும், சுபீக்ஷமாகவும் இருக்கவேண்டுமென்று நிர்ப்பந்தித்து வருகிறது.

ஹாலந்தும், பிரான்ஸும் அடிமையாக்கப்பட்டபிறகு தென் பஸிபிக் சமுத்திரத்தின் தீவுகளிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களின்பேரில் ஜப்பான் விசேஷ அனுதாபம் காட்டுவது வியக்கத்தக்கதல்ல. இப்பொழுது அதற்கு எண்ணெய்யும், ரப்பரும் தேவை. அமெரிக்கா அதற்கெதிராக நடந்துகொண்டால் அதன் ஆகாயப்படைக்கு முக்கிய பொருளான எண்ணெய் ஸப்ளைக்கு ஜப்பான் வழி செய்துவிடவேண்டும். ஆகையால் கோபாயாஷியின் தலைமையில் வியாபார தூதுகோஷ்டி நெதர்லாந்து, கிழக்கு இந்தியத் தீவுகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அங்குள்ள டச்சுக்காரர்கள் கஷ்டம் சம்பவிக்குமோவென்று அவர்களிடம் ஒரு பேச்சும் வைத்துக்கொள்ளவில்லை. யோஷிஸாவா என்பவரால் கிழக்கு இந்தியத் தீவுகளிலிருந்து முக்கியமான சில சாதகங்கள் கோரப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளில் ஜப்பானுக்கு ஆராய்ச்சி செய்யும் பாத்தியம் இருப்பதாகச்சொல்லும் திண்ணக்கமும் ஏற்பட்டது. ஜப்பானுக்கும் கிழக்கு இந்தியத் தீவுகளுக்கும் விமானப் போக்குவரத்து ஏற்படுத்துவதாகவும் அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் விஷி, பிரெஞ்சு ஸர்க்கார் யுனைடெட் ஸ்டேட்ஸுடன் டாக்கரிலிருந்து தென்அமெரிக்காவிலுள்ள ஸான்ஸ்—

ஸால்வடோர் வரை விமானப் போக்குவரத்து சாதனம் ஏற்படுத்தக் கோரியது. இது பார்வைக்கு சாப்தீகமாகயிருந்தாலும், டாக்கரிலிருந்து தென் அமெரிக்காவில் தாக்க ஜெர்மனிக்கு ஆதாரம் ஏற்பட்டுவிடும். யோஷிஸாவா கிழக்கு இந்தியத் தீவுகளில் ஜப்பானியர்கள் 'ஒரு' வியாபாரம் செய்யவும், சிற்பிகள் இருக்கவும் அனுமதி கோரினர். ஆனால் டச்சுக்காரர்கள் பிரிடனுடனும், அமெரிக்காவுடனும், அடிக்கடி கலந்துவந்ததால் ஜப்பானுடைய லோகோபகாரத் திட்டத்திற்கு இச்சைப்படவில்லை.

இந்த பாய்ச்சல்காட்டும் காரியங்களெல்லாம் அரசியல் பேச்சுக்குத்தக்க சுத்திச் சுழட்டும் பேச்சால் மறைக்கப்படுகின்றன. இதெல்லாம் உலகத்தாரின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று செய்யும் யுக்திகள். ஆனால் இவைகளெல்லாம் பசப்பு வார்த்தைகள். ஆனால் அதன் அழுத்தமான உள் எண்ணங்கள் இதில் கண்டிருக்கும் தலைவர்களும், பத்திராதிபர்களும் எழுதியதிலிருந்து புலப்படும். அவைகளில் இரண்டை உங்களுக்கு எடுத்துக்கூறி, அவைகள் எவ்வளவு தூரம் அங்கீகரிக்கக்கூடியவை என்பதை நீங்களே தீர்மானிக்கலாம்.

“ஜப்பான் தூரக்கிழக்கில் அமைதியும், சுபிக்ஷமும் உள்ள சுவர்க்கமாகச் செய்யும் பெருந்தன்மை பொருந்திய முயற்சியை அழிக்க எத்தனிக்கும் எந்த ஸமஸ்தானத்தையும் தோற்கடிக்க வல்லமையுள்ள ஜப்பானுக்குப் பலமான கப்பற்படை அவசியம்வேண்டும்,” என்று ஒரு இடத்தில் எழுதியிருக்கிறது. மற்றொரு இடத்தில் “பிரதேசங்களை யுக்தமாகப் பிரிப்பதும், தேசத்தின் பொருளாதாரமும், கொள்கையும், தேச சமாதானத்திற்கு அடிப்படையாக இருக்கவேண்டும். உலகத்தில் அமைதி உண்டாக்குவதே ஜப்பானின் முக்கிய நோக்கம். உலகத்தைக் காப்பாற்ற ஜப்பானுக்கு இருக்கும் தோற்றம் உலகத்தில் வேறெந்த தேசத்திற்கும் இல்லை.” கடைசியாக “இந்த தேசத்தில் தோன்றியிருக்கும் எந்தப் பெரிய பிரச்னையிலும் ஜப்பானின் சமாதானக்கொள்கை மேலிட்டிருப்பது கண்கூடாகக் காணலாம். சைனா-ஜப்பான் யுத்தம், ருஷ்யா ஜப்பான் யுத்தம், மஞ்சூரியாவில் இப்போதுள்ள போர்கள், இவைகள் ஜப்பான் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும், தூரக்கிழக்கில் உறுதிப்பாடு ஏற்படுத்துவதற்காகவும் என்று தெரிகிறது.” இந்தக் கடைசி மேற்கோள் இதற்கு முந்தி பிரதம மந்திரியாகவும் இப்பொழுதுள்ள புதிய மந்திரி சபையில் ஒரு அதிகாரமும் இல்லாமல் வெறும் மந்திரியாகயிருக்கும் ஹிரோநுமா பிரபுவால் சொல்லப்பட்டது.

## அந்தரங்கமான காரணங்களும், பகிரங்கமான காரணங்களும்.

சமயம் வாய்ந்தபோது கொள்ளையடிக்கலாம் என்பது அவர்கள் கொள்கை. இதற்கு அவர்கள் ஒரே ஜாதியாரென்றும், ஒரே மதஸ்தர்கள் என்றும் பொய்யான காரணங்களைச் சொல்லுகிறார்கள். மேலும் பொருளாதாரக் குறைவாலும், பிரஜா நெருக்கடியாலும், இதர தேசங்களைப் பிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதென்று நியாயம் சொல்லப்படுகிறது. இதைச் சற்று கவனிப்போம்.



ஜப்பானுக்கு ஏராளமாகக் கப்பல் வியாபாரம் இருக்கின்றது. அதன் வியாபாரக் கப்பல்கள் உலகத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களிலிருந்து விலை பொருள்கள் தருவித்து இங்கே சாமான்களாகச்செய்து உலகத்திலுள்ள முக்கியமான வியாபார ஸ்தலங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன. அதன் தொழில் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருப்பதால், அதன் பொருள்கள் எல்லாவற்றையும் குறைந்த விலைக்கு விற்கக்கூடியதாகயிருக்கிறது. இதற்காகத்தான் கைத்தொழில்கள் செய்யப்படாத பொருள்கள் முக்கியமாகவும், தயார் செய்யப்பட்ட பொருள்களை அதிகம்வாங்கவும், இப்பொழுதுபடையெடுக்கப்பட்டதும், நிர்ப்பந்தப்படுத்தப்பட்டதுமான சைனா உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. சைனாவில் இப்பொழுது வியாபாரம் தொலைந்ததற்குக் காரணம் ஜப்பானுடைய மண் ஆசையே. 1931-ம் வருஷத்திலேயே மஞ்சுகோ ஆக்கிரமிக்கப்பட்டது. அதில் உள்ள ஏராளமான நிலக்கரியும், இரும்பும் ஜப்பான் வசமாகிவிட்டன. “பொருளாதார அவசியமிருப்பதாக” ஜப்பான் சொல்லுவது வெறுங்கட்டுக்கதை.

ஜனத்தொகை அதிகரிப்பதினால் வியாபிக்கவேண்டிய அவசியமிருப்பதாகச் சொல்வது இரண்டாவது வாதம். மஞ்சுகோ ஆக்கிரமிக்கப்பட்டு பத்து வருஷம் ஆகிறது. கோடிக்கணக்கான சீனர்கள் மஞ்சுகோவிற்குப் போயிருக்கிறார்கள். ஆனால் அங்கு குடியேறின ஜப்பானியர்கள் கொஞ்சம்தான். ஏனெனில் அது குளிர்ந்த பிரதேசம். அவர்களுடைய தேசத்தில் உதாரணமாக கொக்கயிடோ, ஜப்பானின் வடக்குப்பாகம் பாதியில்தான் மனிதர்கள் வசிக்கிறார்கள். பார்மோஸாவும், கொரியாவும் முறையே 1895, 1905 முதல் ஜப்பானியர்கள் வசமிருந்தாலும் அந்தப் பிரதேசங்களில் கொஞ்சம் ஜப்பானியர்கள்தான் வசிக்கிறார்கள்.

'லெபன்ஸராங்,' 'வெல்டான்ஷராங்' என்பவர்களின் கொள்கைகளாகிய “பலவானே நீதிமான்” “இதுதான்எங்களுடைய கடைசியான தேசாக்கிரமணம்” என்றதை கையாண்டு, 'பொருளாதாரத் தட்டு', 'ஜனத்தொகையின் அதிகம்' இவைகளை ஈடு செய்வது தவறாகாது என்று எல்லாம் பாசாங்கு செய்துகொண்டு ஜப்பான் கடைசியாக சமாதானத்தை விரும்பும் ராஜ தந்திரிகளை ஏமாற்ற இம்மாதிரி செய்துவருகிறது.

## இந்தப் பிரச்னையில் இந்தியாவுக்குள்ள அக்கரை.

ஜப்பானுடன் ஏற்படக்கூடிய யுத்தத்தில் இந்தியாவிற்குள்ள பலன்கள் என்னவென்பது தெரியும். ஸைக்கோன், கிரால் பூசந்தி, திருச்சிறுப்பள்ளி இவைகளெல்லாம் தென்மடல் அக்ஷாம்ஸத்தில் இருக்கின்றன. ஸைக்கோன் கோரமாண்டல் சமுத்திரக்கரையிலிருந்து 1,600 மைலுக்குள் இருக்கிறது. பூசந்திக்கும் நமது கரைக்கும் 1,200 மைல் இருக்கிறது. ஆகையால் தாய்லாந்தின் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றவேண்டியது மெத்த அவசியம். ஏதாவது கெடுதல் நேரிடும் பக்ஷத்தில் பர்மாவின் கிழக்கு எல்லைப்புறத்தில் பாதுகாக்க பிரிடன் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. (இதை ஜப்பான் பத்திரிகைகளில் “தாய்லாந்தின்பேரில் படையெடுக்க பிரிடிஷ் பட்டாளங்கள் சேகரிப்பு” என்று

கூறப்படுகிறது). இதற்கு இந்தியத் துருப்புகள் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது. இதற்கும் கிழக்கே இந்தியத் துருப்புகள் இருக்கின்றன. ஏற்கனவேயுள்ள துருப்புகளுடன் மலேயாவுக்கும் புதிய துருப்புகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன என்று சமீபத்தில் வெளிவந்த சமாசாரம் மூலம் தெரிகிறது. இந்தச் சண்டையில் முதல் முதலில் கூர்க்க பட்டாளங்கள் மலேயாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. இவைகளும் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து இவைகளிலுள்ள எல்லாவித படைப் பகுதிகளும், ஏற்கனவே அனுப்பிய உதவிப் பட்டாளங்களும் சேர்ந்து இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானது உலகத்தின் ஒரு பகுதி பாதுகாப்பிற்கும் ஜயிக்கமுடியாத நிலப்படையாக விளங்குகிறதென்று கண்டிருக்கிறது. சிங்கப்பூரில் பாதுகாப்பிற்காக கப்பற்படையும், விமானப்படையும் ஏற்பாடு செய்திருப்பதைக் குறித்து இந்த யுத்த நிலய அறிக்கைப் பத்திரிகையில் சமீபத்தில் கூறியிருப்பதால் நாம் அதைப்பற்றி இங்கு ஒன்றும் சொல்லவில்லை. அது முக்கியமான விஷயமானதால் தனியாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் ஜப்பானியர்கள்தான்.

ஜப்பானியர்களுடைய குரங்குத்தனமான வியாபிக்கும் முயற்சியால் பாதிக்கப்படுகிறது பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் ஒன்றுமட்டுமல்ல. நெதர்லாந்து கிழக்கு இந்தியத் தீவுகளில் அமெரிக்காவிலுள்ள வியாபாரப் பற்றுனது அமெரிக்காவை ஜப்பான் ஆதிக்கத்திற்கு கீழ்வர இஷ்டப்படும்படிவிடவில்லை. பிலிப்பைன் தீவுகளுக்கு 1946-ம் வருஷத்தில் ஸ்வதந்திரம் கிடைக்கவேண்டியிருக்கிறது. ஸ்வதந்திரம் கொடுத்தால் இதை ஜப்பான் வாயில் போட்டுக்கொள்ளும். ரூஸ்வெல்டு சர்ச்சிலுடன் சேர்ந்துகொண்டு ஜப்பானில் போர்க் கிளர்ச்சி செய்கிறவர்களுக்கு "இதை உடனே நிறுத்தவேண்டுமென்று" கடுமையான எச்சரிக்கை செய்திருக்கிறார்.

பிரிடனைப்போல் அமெரிக்காவும் சைனாவுக்கு யுத்த தளவாடங்கள் கொடுத்து அனுப்பியிருக்கிறது. சுங்கிங்குக்கு ஒரு ராணுவ தூதகோஷ்டி அனுப்பியிருக்கிறது; ஜப்பானின்வடக்கே ஸைபீரியாவிற்கும், அலாஸ்காவிற்கும் இடையில் விமானப்போக்குவரத்து ஏற்படுத்தியிருக்கிறது; அலியூஷியன் தீவுகளிலுள்ள டச்சுத் துறைமுகத்திலும் இதர விமான தளங்களிலும் அமெரிக்க எஞ்ஜினியர்களும் மும்முரமாக யிருக்கின்றனர். அமெரிக்க துருப்புகளும் பாதுகாப்புப் படைகளும் வந்திருக்கின்றன. ருஷ்யாவுக்கு வ்ளாடிவாஸ்டாக் மூலம் அமெரிக்கா யுத்த தளவாடங்களை அனுப்புவதை ஜப்பான் ஆக்ஷேபித்ததை அமெரிக்கா உடனே அதைத் தள்ளுபடி செய்தது. உடனே வழக்கம்போல் ஜப்பான் தன் கொள்கையை மாற்றிக்கொண்டு வாஷிங்டனிலுள்ள ஜப்பானிய தூதரைக்கொண்டு ஜப்பானிய பிரின்ஸ் கோனுயி அனுப்பிய சங்கதியைக் கொடுக்கச் செய்தும், அட்மிரல் நோமுராவுடன் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு பேசும்படி கேட்டுக்கொண்டது. இதன் முடிவு என்னவாகுமென்று தெரிந்துகொள்ள உலகத்தார் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மியூனிச்சில் நடந்தமாதிரியாக பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு சமாதான திட்டத்தை கொண்டுவருவாரென்று எதிர்



பார்க்கப்படவில்லை. அமெரிக்காவில் சமாதானப் பேச்சு நடக்கும்போது "சரித்திரத்தில் கேட்டிராத அபாயகரமான நிலைமை ஜப்பானுக்கு ஏற்பட்டிருப்பதாக" பிரின்ஸ் கோனுயின் இனிவரும் கூட்டாளி அறிவிக்கிறார். அவர் சொல்லுவது உண்மையே. அது ஜப்பானைச் சுற்றி தாக்கப்பட்டதினால் உண்டானதில்லை. இந்தோ-சைனாவில் புகுந்து ஆழந்தெரியாமல் காலிட்டுக்கொண்டதுதான். நாஜியர்கள் சொல்லுகிறபடி பிடுங்கிக்கொண்டு பிற்பட்டு சமாதானம் சொல்வது என்ற கொள்கைப்படி செய்யவிடாமல் இது சமயம் யுனைடெட் ஸ்டேட்ஸும், பிரிடனும் துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொண்டுவிட்டன. இதற்கு பிரின்ஸ் கோனுயி தனிக் கடிதாசி எழுதியனுப்பினார். இந்த நடவடிக்கைகள் ஜப்பானை பயமுறுத்திவிட்டது.

ஜப்பான் தேசத்தினர்கள் நாஜியின் மயக்க மருந்தினால் ஏமாந்துவிடாமல் அநேகம்பேர் இருக்கிறார்கள். அவர்கள் அச்சு நாடுகளுடன் சேர்ந்து ஹிட்லரின் தூண்டுதலுக்கு இணங்கி யுத்தத்தில் பிரவேசிக்க சம்மதிக்கவில்லை. ஒரு விதமான உத்தியோகப்பற்றுள்ள குருட்டு ஜோஸ்யம் சொல்லக்கூடியது. அது "நியூஸ் வீக்லி" பத்திரிகை ராஜ தந்திரியின் போக்கு எவ்வாறு என்று எடுத்துச் சொல்லியிருக்கிறது. கடைசியாக 1942-ம் வருஷத்தில் நேசதேசத்தார்கள் யுத்தத்தில் ஜயிப்பார்கள் என்று அது நம்புகிறது. அந்த முடிவுக்கு மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. முதலாவது பிரிடன்பேரில் நடந்த யுத்தத்தில் ஹிட்லர் ஜயிக்கவில்லை. இரண்டாவது அட்லாண்டிக்கில் நடந்த யுத்தத்தில் முக்கிய இடங்களில் பிரிடன் ஜயித்துவிட்டது; மூன்றாவது, ருஷ்யாவை ஜயிக்க ஹிட்லர்போட்ட காலவரை திட்டம் ரொம்ப நாட்களுக்கு முந்தியே கடந்துபோய் இன்னும் பெரிய சைனியங்கள் ஒருவித முடிவன்றியில் முந்தியும் பிந்தியும் அலைகுலைந்து வருகிறார்கள்.

இருந்தாலும் ஜப்பான் அச்சு நாடுகளில் ஒன்று. அது அபாயகரமானது. ஸ்டெரயிட்ஸ் ஸெட்டில்மெண்டு கவர்னர் ஸர். ஷென்டன் தாமஸ் அதற்கு எதிராக தெளிவான எச்சரிக்கை அதைப்பற்றி விடுத்திருக்கிறார். ஜப்பான் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. அதன் படைகள் தாய்லாந்து எல்லையில் தெற்கு இந்தோ-சைனாவில் இருக்கின்றன. ஜப்பான் அச்சுநாடுகளைச் சேர்ந்த ஒரு நபர் என்று பிரசுரப்படுத்தியிருக்கிறது. இவைகளை நாம் மறக்கக்கூடாது. நாம் ஆக்கிரமிப்பவரல்ல. தூரக்கிழக்கில் நாம் பின்வாங்குபவர் அல்ல. யுத்தம் நம்மால் வராது. நாம் சமாதானத்தைத்தான் விரும்புகிறோம். சமாதானத்தை உறுதிப்படுத்த ஆக்கிரமிப்புக்குப் புறங்காட்டாமல் நிலைநிற்பதுதான நல்லவழி என்று சொல்லியிருக்கிறார். "நாம் தாக்கப்பட்டால் ஜயம் கிடைக்கும்வரை நாம் போராடுவோம். யுத்தம் நேர்ந்தால் அது சமயம் மலேயா ஜனங்களும் பிரிடிஷ் மக்களைப்போல் தைரியம், உறுதி, அமரிக்கை, பரித்தியாகம் காட்டுவார்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்."

மலேயாவுக்கு சோதனை நேரம், இந்தியாவுக்கும் சோதனை நேரம்தான். அப்படி நேர்ந்தால் இந்திய ஜனங்களும் அவ்வாறு இருப்பார்களென்று நாமும் உறுதியாக இருப்போம்,

வைத்துக்கொண்டு விமான எதிர்ப்பு ஏற்படாமல் ஏற்கனவேயே காவல் புரிந்து வருகின்றன. இவ்விமானங்கள் காலை முதல் மாலைவரையில் ஆகாயத்திலேயே இருக்க முடியும். சமீபத்தில் ஒரு விமானம், தளத்திற்குத் திரும்பிவராமல் 18 மணி நேரம் காவல் புரிந்ததாம்.

இந்த தூரக்கிழக்குப் பிராந்தியத்திற்கு இன்னும் அதிகமாக விமானங்கள் வருவதால் பஸிபிக் பிரதேசம் பூரா நம்முடைய விமானங்கள் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். டச்சுக் கிழக்கிந்தியக் கப்பல் இலாகா, ஏராளமான கடல் விமானங்கள் கலிபோர்னியாவிலுள்ள ஸான்டி கோவிலிருந்து ஜாவாவிலிருக்கும் ஸௌரபயாவிற்கு அனுப்ப ஏற்பாடு முடிந்துவிட்டதாக அறிவித்திருக்கிறது. பெரிய குண்டு பாரத்தை வெகு தூரங்களுக்கு ஏற்றிச் செல்லக்கூடிய ஏராள வடஅமெரிக்க வெடிவிமானங்களை வாங்குவதற்கு டச்சுக் கிழக்கிந்தியச் சைனிய இலாகா ஏற்பாடு செய்துவிட்டது. ஏற்கனவேயே பிலிபைன் தீவுகளுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் விமான இலாகா அதிக விமானங்களை அனுப்பிவருகிறது. இனிமேலும் மலேயாவிற்கும் இந்தியாவிற்கும் வர வேண்டிய வெடிவிமானங்கள் பஸிபிக் மூலமாக ஆகாய மார்க்கமாகவே வரும்.

இந்தோ-சைனாவில் விமான தளங்களை ஒழுங்குப் படுத்திக்கொண்டு, மறு யுத்தத்திற்கு ஜப்பான் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைக் குறித்து தூரக்கிழக்கு நாடுகளைப் பார்த்தவர்களுக்குள்ளேயே அதிக அபிப்பிராய பேதமிருக்கிறது. சிலர் இன்னும் மூன்று வாரத்திற்குள் ஜப்பான் சரி செய்துவிடுமென்றும் சொல்லுகிறார்கள். மூன்று மாதங்கள் பிடிக்குமென்றும் மற்றும் சிலர் சொல்லுகிறார்கள். இந்த மாறுபட்ட அபிப்பிராயங்கள், இனி ஜப்பான் என்ன செய்யும் என்பதைச் சரியாக அறிந்துகொள்ளாததினால்தான் ஏற்படுகின்றன. உதாரணமாக தாய்லாந்தை நோக்கி ஜப்பான் சென்றால் அதற்குக் கப்பற் படையின் உதவி அவசியமிராது. ஆனால் டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகளை ஆக்கிரமிக்க வேண்டுமானாலும், மலேயா, போர்னியோ இவைகளை எதிர்க்க விரும்பினாலும்தான் கப்பற்படையின் உதவி தேவையாயிருக்கலாம். சிங்கப்பூர் கோட்டைக்கு சமீபத்தில் உள்ள மலேயாவின் தென்பாகத்தையும், போர்னியோவையும் கிழக்கிந்தியத் தீவுகளையும் தாக்கினால் கப்பற்படை ஈடுபட அவசியம் ஏற்படும். அப்பொழுது கம்ரான் குடாவில் கப்பல் தளத்தைச் சரியாக ஸ்தாபிக்கப் போதுமான அவகாசம் வேண்டியிருக்கும். ஆனால் கம்ரான் குடா கப்பல்தளமாக உபயோகிப்பதில் பல குணதோஷங்கள் இருக்கின்றன. பிரிடிஷ் டச்சுக் கப்பல் தளங்களில் இயற்கையான சாதகம் இருப்பதுபோல் இங்கேயில்லை. மேலும் கப்பல்கள் கொஞ்சநேரம் தான் தங்கிச் செல்லலாம்.

தாய்லாந்து எல்லைப்புறத்தின் வழியாக மலேயாவை ஜப்பான் படையெடுக்க விரும்பினால் 500 மைல் தூரம் நெருங்கிய காட்டு மார்க்கமாகச் செல்லவேண்டியிருக்கும். இது மிகவும் சிரமசாத்தியம். கீழ்கடலோரமாகச் சைனியத்தை கப்பலில் கொண்டுவந்து இறக்குவதும் முடியாது. ஏனெனில் நெடுகில் ஒரு மலைத்தொடர் இருக்கிறது. இதில் சிலகாட்டு வழிகள்தான் உண்டு.



மேலும் போர்னியோவில் விரோதி சைனியம் பிரவேசிப்பதற்கு அதிகச் சிரமப்படும். பெருங்காடுகளில் புகுந்து செல்வதுபோல்தான் பட்டினங்களில் புகுந்து செல்லவேண்டும். மேலும் இங்கிருப்பவர்கள் சில முக்கிய பொருள்களை அழித்துவிட்டதால் எதிரிகள் வியாதியால் அவஸ்தைப்பட வேண்டிவரும். ஆகையால் சிங்கப்பூரையோ கிழக்கிந்தித் தீவுகளையோ எதிர்க்க நேரிட்டால் இயற்கை அமைப்பு எதிரிகளுக்கு பாதகமாய்தான் இருக்கிறது.

கிழக்கு இந்தியத் தீவுகள், மலேயா, பர்மா முதலிய இடங்களிலிருந்து கப்பல், ரயில் மார்க்கமாக ஜப்பானியர்கள் வெளியேறுகிறார்கள். சிலர் மலேயாவிலேயே வந்ததுவரட்டுமென்று இருக்கப் பார்க்கிறார்கள். ஆனால் ஜோகூரிலுள்ள ஜப்பானியர்களை ஆகஸ்டு 31-ம் தேதிக்குள் 14 தினங்கள் தவணை கொடுத்து வெளியேறும்படி சொல்லிவிட்டார்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 6—9—41-லிருந்து 12—9—41-வரை.

**ஸ்பிட்ஸ்பேர்கன்.**—இந்த வார சமாசாரத்தில் மிகவும் ஆவலைக் கொடுக்கக்கூடிய சமாசாரம் பிரிடிஷ், கனேடியன், நார்வே தேசத்துப் படைகள், ஸ்பிட்ஸ்பெர்கன் தீவில் இறங்கியதுதான். ஸ்பிட்ஸ்பெர்கன் தீவு வடதுருவ சமுத்திரத்தில் கிரேட் பிரிடனின் வட கிரீன்லாந்துக்கும் வடதுருவ ருஷ்யாவுக்கும் இடையிலும் கோடி முனைக்கு 1,500 மைலுக்கு அப்பாலும் இருக்கிறது. இதற்கு ஸ்வால்பார்டு என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஆதியில் இது ஒருவருடைய சொத்துமில்லை. 1920-ம் வருஷத்தில் இந்தத் தீவு நார்வேக்குச் சொந்தமான தீவுயென்று நேச தேசத்தினர் அங்கீகரித்தனர். ஆகையால் நார்வே அரசாங்கத்தின் சம்மதத்தின் பேரில் இந்தப் படையெழுச்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் அதிக ஜனங்கள் வசிக்காமல் போனாலும் அதில் ஏராளமாக நிலக்கரிச் சுரங்கம் இருப்பது இதன் பெருமைக்கு முக்கிய காரணம். ஜெர்மானியர்களுக்கு நிலக்கரித் தட்டு ஏற்பட்டிருந்தாலும், சண்டை ஆரம்பித்த ஒரு வருஷத்தில் ஜெர்மானியர்கள் ஸ்பிட்ஸ்பெர்கன் தீவிலுள்ள நிலக்கரியைக் கைக்கொள்ளவில்லை. ஏனெனில் இந்தத் தீவில் ஒரு பாகமான மேஸன்ஸ் பார்க் பிராந்தியத்தில் உள்ள நிலக்கரியில் ருஷ்யர்களுக்குப் பாத்தியம் இருக்கிறது. ஆனால் ருஷ்யாவுடன் விரோதம் ஆரம்பித்த பிறகு ஜெர்மானியர் இதைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு சமயத்தில் இரண்டு கப்பல்கள் வீதம் கொள்ளைப்பொருள் கொண்டுவரப்பட்டு வந்தன. நேசதேசத்தார்கள் எதிர்ப்பார்கள் என்ற பயத்தால் கொஞ்சமாக கொண்டுவரப்பட்டுவருகிறது.

பிரிடிஷார் இந்தத் தீவில் இறங்கியது ஏற்கனவே லாபோடன்ஸ், நார்விக், அண்டால்ஸ்நீஸ், மோல்டி இவைகளில் வந்திறங்கினதுபோல் இருந்தாலும் இதிலுள்ள விசேஷம் படையெழுச்சியின் தைரியமும் ஆபத்தக்கட்டமான காரணம்தான்.

## அனுபந்தம் I.

# ஜப்பானின் கைத்தொழில் நிலைமை.
# அதைக்கொண்டு யுத்தத்தில் ஈடுபடலாமா?
# யுத்தத்திற்கு லாயக்காக முடிவடைந்த முயற்சிகள்.

அநேகமாக ஒரு வருஷத்திற்குப் போதுமான சாமான்களும் எண்ணெயும் ஜப்பான் சேமித்துவைத்திருப்பதாக மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் தலை அங்கத்தில் ஆகஸ்டு 23-ம்தேதி எழுதியிருந்தது. இந்த சேகரத்தைக்கொண்டு கவனித்தால் ஜப்பானுடைய பொருளாதார நிலை மிகவும் குறைவானதுதான். பெருந் தொழிற்சாலைகளும் யுத்த தளவாடங்கள் செய்யவும் தேவையான இரும்பில் ஐந்தில் எட்டு பங்கு வெளிநாட்டிலிருந்து வரும் இரும்பு மண்ணையும், இரும்புப் பாளங்களையும், துண்டுகளையும் எதிர் பார்க்கவேண்டியிருக்கிறது. இரும்பு மண் அநேகமாக பிரிடிஷ் மலேயாவிலிருந்தும் பிலிப்பைன் தீவுகளிலிருந்தும் வரவேண்டியிருக்கிறது. இவ்வருஷம் வரை எல்லாத் துண்டு இரும்பும் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்துதான் வந்தது. இப்பொழுது அது நிறுத்தப்பட்டது. நிலக்கரி எப்பொழுதும் குறைவுதான். எஃகு வேலைக்கு லாயக்கான மட்டமான உலோகங்கள் போதுமான அளவு வந்து சேராது. ஆனால் ஜப்பானில் தாமிரமும், இந்தோ-சைனாவில் டங்ஸ்டனும் கொஞ்சம் கிடைக்கிறது. கொஞ்ச நாளைக்கு விசேஷமான எஃகும், யந்திரங்களும், யந்திர ஆயுதங்களும் எங்குமிருந்து வரவில்லை.

ஜயித்த நாடுகளிலிருந்தும் ஜப்பானுக்குச் சாதகமேற்படவில்லை. 1940-ம் வருஷத்தில் மஞ்சகோவிலிருந்து அடைந்த ஒரு யன் மதிப்புள்ள சாமானுக்கு மூன்று யன் மதிப்புள்ள சாமான் அனுப்பவேண்டியிருந்தது. சைனாவில் ஆக்கிரமித்த பாகங்களிலும் அமைதி ஏற்படுத்த முடியாததாலும் சாமான்களை உற்பத்தி செய்யக்கூடிய சாமர்த்தியமில்லாததாலும் சுரங்கவேலை, பஞ்சு உற்பத்தி இவைகளை விருத்திசெய்ய முடியவில்லை. கலிபோர்னியாவிலிருந்தும், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும் பல கப்பல்களில் எண்ணெய் அதிகம் வந்துகொண்டிருந்தது. ஆனால் சமீபத்தில் சில மாதங்களாக விமானத்துக்கு லாயக்கான உயர்தர பெட்ரோல் வரத்து நின்றுவிட்டது. இந்த எண்ணெய் குறைந்ததால் பஸிபிக்கின் தென்பாகத்தில் யுத்தம் ஏற்பட்டால் ஜப்பான் வெகுதூரம் விமானம் நடத்திச் செல்லமுடியாது.

பத்து வருஷங்களுக்கு முன்வரை நெசவு முதலிய சிறிய கைத்தொழில்கள்தான் ஜப்பானில் உண்டு. பெரிய கைத்தொழில்களும் எஞ்ஜினியரிங் கைத்தொழிலும் ரொம்ப ஆரம்பநிலையிலிருக்கிறதை ஜப்பானியரே ஒப்புக்கொள்ளுகிறார். இக்கைத்தொழில்களெல்லாம் உள்நாட்டு விளைவுபொருள்களைக் கைக்கொள்ளமுடியாமல் வெளிநாட்டு யந்திர சாமான்களின் உதவியால்தான் நடந்து வந்ததென்பது ஒரு முக்கிய விஷயம். இனிமேல் அவைகள் கிடைக்காது. உள்நாட்டிலிருக்கும் யந்திர சாமான்கள் சிறியவை. ஆகையால் விமான உற்பத்திக்கு இது ஒருகுறை; பிரகிருதம் சைனியம், கப்பற்படை இவ்விரண்டிலும் மாதம்



ஒன்றுக்கு எல்லாவகைகளிலும் 250 யந்திரங்கள் தான் செய்யப்படுகின்றன. இது உண்மையானால் ஜப்பான் படைக்கு 1,500 விமானங்களுக்குமேல் இருக்க முடியாது. பெரும் யுத்தம் வந்தால் இவைகளுக்கு ஈடு செய்யமுடியாமல் போய்விடும்.

சென்ற வருஷத்திலிருந்து யுத்தசாமான்களின் உற்பத்தியும் அதிகமல்ல. பத்து வருஷமாகத் தொடர்ந்து சண்டை செய்துவருவதால் மனிதர்களும் யந்திரங்களும் ஓய்ந்து விட்டன.

முக்கியமான ஜப்பானிய கைத்தொழிலில் மும்முரமாக வேலைகள் செய்யப்படவில்லை. வெளிநாட்டிலிருந்துவரும் சாமான்களை ஜனநாயக நாடுகள் அதிகம் வாங்கிக்கொண்டாலும் ஜப்பானின் யுத்த முயற்சி போதுமான அளவு இல்லை. ஜப்பான்மேல் கட்டுப்பாட்டைத் தக்கவாறு செய்யப் பார்த்தால் சீக்கிரத்தில் எல்லாவற்றையும் அழித்து ஜப்பான் வெற்றியடையப் பார்க்கவேண்டும். அல்லது 1931-லிருந்த நிலைக்குப் போகவேண்டும். அதாவது சமாதான நிலைதான், அது முதல் யுத்தம் தொடங்கியும் ஜப்பானுக்கு ஒருவித லாபமும் காணோம். இதற்குள் ஜனநாயக அரசாங்கங்கள், ஜப்பானிய சிறிய தொழிலாளிகளுக்கு சில உதவியைக் காட்டினால் ஜப்பானியக் கைத்தொழில் சரியானபடி சாமான்கள் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லமுடியாது. ஏனெனில் இப்போதுள்ள கைத்தொழில் நிலையைக் கொஞ்சநாள் வரையில் தாக்காட்டி ஜனநாயகங்களின் மடத்தைப் பிடுங்கப் பார்க்கும்.

---

## அனுபந்தம் II.

# பஸிபிக் சமுத்திரத்தின் தென்பாகத்தில் திருப்திகரமான முஸ்தீப்பு.
# ஆக்கிரமித்த நாடுகளுக்கு அதிக விமான உதவி.
# ஜப்பானின் அடுத்தபடியான நடவடிக்கையைப் பற்றி ஹிட்லரின் அபிப்பிராயம்.

டெயிலி டெலகிராப்பின் சிங்கப்பூர் நிருபர் எழுதியது :—

ஆஸ்திரேலியாவில் கட்டப்பட்ட பிரிஸ்டல்-ப்யூபர்ட் மூழ்கி விமானங்களின் ஸப்ளை முதலில் மலேயாவுக்கும் டச்சு கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் அனுப்பப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விமானங்களைக்கொண்டு சிங்கப்பூருக்கு வரும் பாதைகளையும், ஜாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய முக்கிய ஸ்தானங்களையும் காபந்து செய்ய அதிக உபயோகமுள்ளவை என்று கருதப்படுகிறது. மலேயா, கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள கைதேர்ந்த விமானிகள் கிழக்கு பாகத்தில் எவ்விதமான சண்டையையும் செய்ய இவை போதுமானதென்று நம்புகிறார்கள்.

இவைகளைக்கொண்டு ஆர்ச்சிபிலாகோ தீவுகளுக்கிடையேயுள்ள குறுகிய ஜலசந்திகள் வழியாக விரோதிகளுடைய சண்டைக் கப்பல், போக்குவரவுக் கப்பல், ஸப்ளைக் கப்பல் இவைகளைக் குறிதவறாமல் தாக்கலாம். கடாலினா பறக்கும் படகுகளால் இந்து மஹா சமுத்திரத்திலுள்ள பவளத் தீவுகளைத் தளங்களாக

மேலும் மிகவும் ரகசியமாகவும் எதிரி முற்றிலும் திடுக்கிடும் படியாகவும் ரத்தம் எதுவும் சிந்துதலன்றியும் ஒரு வெடிகுண்டுகூடப் போடாமலும் ஒரு எதிரிகூட வந்து தோன்றாமலும் இந்தத்தீவு வசப்பட்டுவிட்டது. 1,50,000 டன் நிறையுள்ள நிலக்கரி எதிரிக்குக் கிடைக்கக்கூடியதை தீக்கிரையாக்கப்பட்டது. அநேகமாக சுரங்கத்தில் வேலை செய்கிறவர்களும், சிலர் மாலுமிகளும் சேர்ந்து 700 முதல், 1,000-வரை உள்ள ஜனத்தொகை அவர்கள் கூலியைக் குறைத்ததற்காக ஜெர்மானியர் பேரில் வெறுப்புக் கொண்டிருந்தார்கள். பஞ்சம் ஏற்படும் தருவாயில் லோபோடனில் நடந்தது. இன்று அவர்களைக் குரூரமாக நடத்தாதிருக்கும் பொருட்டு அவர்களை எதிரிவசையிலிருந்து தப்பச்செய்து அந்தத் தீவைக் காலி செய்து போகச் செய்தனர். அப்படி வெளியேறி வந்தவர்கள் பிரிடிஷ் சுரங்கங்களிலும், கப்பல்களிலும் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தப் படையெழுச்சி பிரிடனுக்கு வெளியே இந்தச் சண்டையில் கனேடியர்கள் நடத்திய முதல் சம்பவம். அது முக்கியமானது. தெற்கே இரான் மூலமாகவும் அதே சமயத்தில் வட ருஷ்யாவிற்குப்போகப் பாதையும் திறக்கப்பட்டிருக்கிறது. நல்ல நேரத்தில் ஸ்காண்டிநேவியா மூலம் எதிரியைத் தாக்க இது மிகவும் உதவியாக இருக்கும்.

**கிரீர் சம்பவம்.**—யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான ஐஸ்லாந்திற்குத் தபால்கொண்டு செல்லும் கிரீர் என்னும் நாசகாரியை செப்டம்பர் மாதம் 4-ம தேதி "ரெயிக்ஜாவிக்" என்ற இடத்திற்குத் தென்மேற்கே 220 மைலுக்கு அப்பால் அமெரிக்கா பக்கமுள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று வெடிகுண்டு போட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது. ஆனால் தன் தற்காப்புக்காக ஒரு 'டார்பிடோவை அனுப்பியது. அந்த நீர்மூழ்கிக் கப்பலின் கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை. இந்த சம்பத்தைக் குறித்து ஒன்றும் தெரியாதென்று முதலில் மறுதளித்த ஜெர்மானியர் இப்பொழுது நீர்மூழ்கிக் கப்பல் தங்களுடையதாவென்றும், நடந்த சம்பவங்களை மாற்றிக்கூறினார்கள். அதாவது அமெரிக்க நாசகாரிதான் முதலில் நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கியதென்றும், அந்த நீர்மூழ்கிக் கப்பலுக்குத் தன்னைத் தாக்குகிறது இன்னதென்றுகூட தெரியாமல் தற்காப்புக்காக, வெடிகுண்டு போட்டதென்றும், குறி தவறிவிட்டதென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஜனாதிபதி ரூஸ்வெல்டு யுனைடெட் ஸ்டேட்ஸில் பொதுஜன அபிப்பிராயத்தில் கிளர்ச்சி உண்டாக்க இம்மாதிரி சம்பவம் நேரும்படி செய்யவேண்டுமென்று உத்தரவு செய்திருப்பதாகக்கூறி அயோக்கியத்தனத்துடன் அவமானம் உண்டாக்குகிறார்கள்.

**கப்பல் கோள்ளை.**—இவ்வாரத்தில் மூன்றாவதான விஷயம் மற்றொரு அமெரிக்கக் கப்பல் அமுக்கப்பட்டது. 5-ம் தேதி வெள்ளிக்கிழமை இது மத்தியக்கிழக்கு நாடுகளுக்கு சாமான் ஏற்றிச் செல்லும்போது, ஸூயஸுக்கு 200 மைல் தெற்கே டோடிகானிஸிலிருந்து ஒரு விரோதி மூழ்கி விமானத்தால் தாக்கப்பட்டிருக்கலாம்.



**ஸெஸ்ஸா.**—இவைகளைவிடப் பெரியதொரு சமாசாரம் கொஞ்சம் தாமதமாகக் கிடைத்திருக்கிறது. ஆகஸ்டு 17-ம் தேதி ஐஸ்லாந்திற்குத் தென்மேற்கில் 300 மைல் தூரத்தில் அமெரிக்காவிற்குச் சொந்தமான இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. முதலில் இக்கப்பல் டேனிஷ்காரர்களுக்குச் சொந்தமாக இருந்து பிறகு அமெரிக்கர்கள் வாங்கினார்கள். தாக்கப்படும் சமயத்தில் பனாமா கொடியுடன் பறந்தது. யுத்த தளவாடங்கள் இல்லாமல் ஐஸ்லாந்திய அரசாங்கத்தாருக்கு ஆகாரப்பொருள்தான் இதில் வந்தது. ஆனால் பகுத்தறிவு இல்லாமல் தோன்றியபடி தாக்கும் நாஸிக்கு ஆகாரமாயிருந்தாலென்ன, எந்த நாட்டிற்குப் போனால்தானென்ன.

**சமுத்திரத்தில் அச்சு நாடுகளின் நஷ்டம்.**—இந்த வாரத்தில் ஜெர்மனி, இதாலிக்குச் சொந்தமான கப்பல்கள், ஏடிரியாடிக், மத்தியதரைக்கடல்களிலும், லிபியன் கடற்கரையிலும், வடகடலிலும் மூழ்கடிக்கப்பட்டதால் அதிகச் சேதம். பிரிடிஷ் கப்பற்படையாலும், கப்பலுக்கு உதவும் விமானத்தாலும், நீர்மூழ்கிகளாலும்தான் அதிகச் சேதம் உண்டாக்கப்பட்டது. ஐந்து விரோதிக் கப்பல்களும், ஏழு நாசகாரிகளும் சென்றதில், பிரிடிஷ் விமானங்களால் இரண்டு கப்பல்கள் நேரே தாக்கப்பட்டும், இரண்டு சேதமும் ஆக்கப்பட்டன. தங்களுடைய கப்பலைப் பார்த்து விரோதிகளே சுட்டுக்கொண்டதால், இங்குமங்கும் சிதறிவிட்டன. அடுத்தபடியாக மெஸ்ஸினா குடாவுக்கு அருகில், இதாலிய பெரிய கப்பல் ஒன்று பிரிடிஷ் நீர்மூழ்கியால் கவிழ்க்கப்பட்டது. மூன்றாவதாக ஒரு ஜெர்மன் நாசகாரியும், (பிரம்ஸி) என்ற குரூயிஸரும், ஒரு டிராலரும், மர்மன்ஸ்க் முனையில் மூழ்கடிக்கப்பட்டன. இங்கிலீஷ் கால்வாயில் இரண்டு ஜெர்மன் ஸப்ளைக் கப்பல்களும், மத்தியதரைக்கடலில் ஒரு இதாலிய சிறு கப்பலும் கவிழ்க்கப்பட்டன. இப்படியாக ஸர் ஸின்கிளேர் சொல்லுகிறபடி எதிரி கையாளும் முறையே அவனுக்கு இரட்டிப்பு மடங்கான நஷ்டத்தை விளைத்திருக்கிறது.

**அட்லாண்டிக் யுத்தம்.**—நாளுக்கு நாள் நமக்குச் சாதகமாகத்தான் இருந்து வருகிறது. சென்ற வருஷத்திற்குள் ஜூலை மாதத்தில்தான் குறைவான சேதம். ஆனால் பிரிடிஷ் கப்பல்களின் நடமாட்டம் குறைவானதினால்தான் என்று விரோதி சொல்லுகிறான். அது முழுப்பொய். ஏனென்றால் வாரத்தில் சராசரியாக கிரேட் பிரிடனுக்கு 85,000 டன்னுக்கு மேலாகவே துணைக்கப்பல்களுடன் வந்து சேருகின்றன. அட்லாண்டிக்கில் இவைகள் எதிரி யூ-படகுகளும், பாம்பர் விமானங்களும், கண்ணிகளும் இருப்பதாகச் சொல்லும்பொழுதே உல்லாசமாகவும், பயமில்லாமலும் வந்ததை மிஸ்டர் சர்ச்சில் கூட சமீபத்தில் பார்த்தார். இதற்கு அமெரிக்கக் கப்பல்களும் சேர்ந்து துணைபுரிவதுதான் காரணம். பிரிடிஷாருக்கு ஏற்பட்ட நஷ்டத்தைவிட மூன்றுமடங்கு அதிகமாக விரோதிக்கு நஷ்டம். ஆனால் 10 அல்லது 20 மடங்கு அதிகமாக உலகம் பூரா பிரிடிஷ் கப்பல்கள் சஞ்சாரம் செய்தன. பிரிடிஷ் நேசதேசங்களுக்குச் சொந்தமான 2,000 கப்பல்கள் பிரயாணம் செய்ததில் 400 கப்பல்கள்வரை யுத்தப் பிரதேசத்திலேயே சென்றன.

**ருஷ்ய யுத்தம்.**—ருஷ்யாவின் விஸ்தாரமான பொட்டல்களில் இங்குமங்கும் தட்டுத் தடுமாறிக்கொண்டும் அடிபட்ட பெரும் ஸர்ப்பம்போல் நெளிந்து யுத்தம் செய்கிறான். இன்னும் பூராவாக மடியவில்லை. ருஷ்யர்களுடைய ஸ்வதந்திரத்திற்கு இருப்பிடமான லெனின்கிராட் கிவ், ஒடெஸ்ஸா மூன்றிலும் எதிரி இன்னும் முன்னேறவில்லை. லெனின்கிராட்டுக்கு 25 மைல் கிழக்கேயுள்ள ஷிலிஸ்ஸல்பர்க் பிடித்து சூழ்ந்துகொண்டதாகச் சொல்லுவதும் ஸ்விர் நதிக்கரையில் பின்னர்கள் முன்னேறி வருவதாகச் சொல்லுவதும் ஊர்ஜிதமாகவில்லை. மூர்மன்ஸ்க், ரிபின்ஸ்க், மாஸ்கோவுக்குச் செல்லும் இருப்புப் பாதைகள் கெடுதல் அடையவில்லை. மேற்கு, தென்மேற்கு பாகத்திலுள்ள பீட் கட்டைகள் நிறைந்த புல்வோகோ மலையின் பள்ளத்தாக்கு வழியாகத்தான் வந்திருக்கமுடியும். மூன்று வாரங்களாக நடந்தேறிவரும் யுத்தத்தில் நடுபாகத்தில் எதிர்ச் சண்டைகளால் எதிரி தாக்கப் பட்டிருக்கிறான். அல்பேனியாவில் முறியடிக்கப்பட்டும், 50 கிராமங்களிலிருந்து துரத்தப்பட்டும் ஸ்மாலென்ஸ்க்கை நோக்கியும் விரட்டப்பட்டான். இதில் எதிரிக்கு 3 சைனியப் பிரிவுகள் சேதம். 'ஆனலிஸ்டு' என்ற பத்திரிகை கூறும் விதமாக ஜெர்மானியரின் கதி நடுபாகத்தில் நேரும் சண்டையைப் பொருத்திருக்கிறது. பிரிவடைந்த ஜெர்மன் சைனியத்தில் ஷிலிஸ்ஸல்பர்க்கை பிடித்ததாகச் சொன்னால் இதே சைனியம்தான் ருஷ்ய எதிர்ப்பால் துளைக்கப்பட்டு துரத்தப்பட்டது.

இன்னும் கீவையும் ஒடெஸ்ஸாவையும் நெருங்கிச் செல்ல நீபர் நதி கடக்கப் படவில்லை.

**பிரிடிஷ் உதவி.**—நீண்ட காலத்திற்கு தேவையாயுள்ள உதவியை அமெரிக்காவிலிருந்து எதிர் பார்ப்பதால் அவசரத் தேவைகளை பிரிடன் அனுப்புகிறது. ஸெப்டம்பர் 9-ம் தேதி மிஸ்ட்டர் ஹியுடால்டன், சிக்கனச் சண்டை இலாகா மந்திரி 'அதிகமான' கப்பல்களில் ரப்பர், டின், கம்பளி, ஈயம், சணல், அரக்கு முதலியதை ருஷ்யாவுக்கு வருகிறதாகத் தெரிவித்தார். நூற்றுக்கணக்கான விமானங்கள் சேர்ந்துகொண்டும் பாதி வழியிலும் இருக்கின்றன. அமெரிக்காவுக்காக துஸ்டர் அவெரல் ஹாரிமனும், பிரிடனுக்காக லார்டு பீவர்புருக்கும் மாஸ்கோவில் ராணுவ உதவியைப்பற்றி சர்ச்சை செய்யப்போவார்கள். ருஷ்ய யுத்தம் நெடுநாள் நீடிக்கும். இதை தெரிந்துகொண்டு மாரிகாலத்திற்கும் ஹிட்லர் ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது.

**பின்லாந்தின் நிலை**—சென்ற வருஷத்திற்குமுன் ருஷ்யர்கள் பின்லாந்தை எதிர்த்த சமயத்தில் நேசதேசங்கள் அதிகக் கருணை பாராட்டி வந்தது. இப்பொழுது ருஷ்யாவை அது எதிர்த்த பொழுது நேசதேசங்களின் நட்பை இழந்து விட்டது. தான் இழந்த நாட்டை திரும்பியடைவதற்காக மாத்திரம்தான் ஜெர்மனியுடன் சேர்ந்து சண்டையிடுவதாகச் சொன்னதை சிலர் ஆமோதித்தினர். அப்படியானால் அதன் எண்ணம் ஸாலியா, கூஸமோ, துவா, முதலிய பழைய பின்லாந்து நாடுகள் திரும்பிப் பிடிக்கப்பட்டதால் நிறைவேறிவிட்டது. இனி சண்டையை நாட்டின் தற்காப்புக்காகப் போடுவதாக பின்லாந்து சொல்வது தவறாகும். இருந்தாலும் தன் எல்லையைக் கடந்து ஸ்விர் நதிவரையில் சென்று



ஜெர்மன் படையுடன் சேர்ந்து, லெனின்கிராட்டுக்கு வடக்கில் வரும்பாதையை அடைக்க முயற்சிப்பது பீல்ட் மார்ஷல் மானர்ஹீமின் நாஸிக்குச் சாதகமான எண்ணத்தைத் தெரியப்படுத்துகிறது. ஆனால் 'சண்டையை நிறுத்தி மறுபடி சேர்ந்தத் தொழில்களை ஆரம்பிக்க இன்னும் சமயம் வரவில்லை', என்று அவர் சொல்லுவதால் அவர் நாஸி தொந்தரவு அதிகமாகி யுத்தத்தை விரும்பாத பின்லாந்து ஜனங்களைப் பலாத்காரமாக யுத்தத்தில் ஈடுபடும்படி செய்கிறது வியக்தமாகத் தெரிகிறது. பின்லாந்தில் முந்திய வெளிநாட்டு மந்திரியும், சமரச ஜனநாயகக் கக்ஷித் தலைவரான மிஸ்ட்டர் டானரின் மொழிகளைக் கவனிக்கும் பொழுது யுத்தம் பின்லாந்துக்காரருக்கு விருப்பமில்லை என்பதும் பிரிடன், அமெரிக்காவைக் கலந்துகொண்டு ருஷ்யா பின்லாந்துமேல் சண்டை தொடுக்க வில்லையென்று உறுதிகொடுத்தால் பின்லாந்து சண்டையை உடனே நிறுத்திவிடும் என்று தெரிகிறது. பீல்ட் மார்ஷல் மானர்ஹீம் என்பவர் ருஷ்யாவிடமிருந்து கரிலியாவை வாங்கிக்கொண்டு சமாதான திட்டங்களைச் சர்ச்சை செய்ய தீர்மானித்ததாயும், ருஷ்யா அதற்கு மறுத்ததாகவும் தெரிகிறது. இது எப்படியானாலும் தற்போதிய நிலை பின்லாந்துக்குக் கெடுதல்தான். ஜெர்மனி அனுப்புவதாகச் சொன்ன 15,000 டன் கோதுமை ஒரு நாளும் வந்துசேராது. நல்லறிவு யடைந்து யுத்தக் கொள்கையை மாற்றினாலொழிய இதுவரை பின்லாந்துக்கு ஆகார சாமான்கள் அனுப்பி வந்த பிரிடனும், அமெரிக்காவும் இனி நிறுத்திவிடும். ஏற்கனவேயே பிரிடன் கப்பல் சீட்டுகள் அனுப்பாமல் பொருளாதாரக் கட்டுப் பாட்டை பூர்த்தி செய்துவிட்டது.

**இரான்.**—எல்லாவிதமான ஆங்கில-ருஷ்ய விருப்பங்களைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. அவையாவன:—(1) ஜெர்மானிய, இதாலிய, ஹங்கேரிய, ருமேனிய அரசாங்கங்களின் சம்பந்தத்தை உடனே நிறுத்திவிடவேண்டும். (2) ஜெர்மானியரை ஒப்புவிக்கவேண்டும். (3) இரானியது துருப்புகளைக் குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டுபோகவேண்டும்; ஆனால் ஆயுதங்களை வைத்துக் கொள்ளலாம். இந்த ஜெர்மானியர்களை இந்தியாவுக்குக் கொண்டுபோவதற்குமுன் பந்தோபஸ்துடன் காவலில் வைக்கப்படும்.

**சாக்குப்போக்கு.**—ஜப்பானுக்குச் சந்தர்பம் தவறிவிட்டது. 'சரியான சமயத்தில் ஒரு வருஷத்திற்குமுன் ஜப்பான் சண்டையை ஆரம்பித்திருந்தால் அப்படிச் செய்திருக்கலாம். இப்பொழுது அவ்விதமான வேகம் குறைந்து விட்டதாகக் காணப்படுகிறது. அது ஜப்பானுக்கு நன்மைதான்,' என்று சிங்கப்பூருக்கு வந்திருக்கும் மிஸ்ட்டர் டப்கூபர் சொன்னார். இந்தோ-சைனாவை ஜப்பான் ஆக்கிரமித்தவுடன் தாமதமில்லாமல் பிரிடனும் அமெரிக்காவும் பொருளாதாரக் கட்டுப்பாட்டை செய்ததுதான் முக்கிய காரணமாகும். ஆனாலும், பஸிபிக்கில் நெருக்கடி இன்னுமிருப்பதால் பூராவாக ஜப்பான் பின்வாங்கிவிட்டதென்று சொல்லமுடியாது. பிரின்ஸ் கோனாயி ரூஸ்வெல்டுக்கு எழுதிய கடிதமும் ரூஸ்வெல்டு-நோமுரா பேச்சும் ரகசியமாகயிருக்கிறது. ஒருக்கால் இவ்விதமான பேச்சு வார்த்தையென்ற காரணம் வைத்துக்கொண்டு யுத்த முயற்சியை பலப்படுத்திக்கொண்டு சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம்.

**ஜெர்மனியில் சண்டை.**—ஜெர்மனியை பிரிடிஷ் விமானங்கள் அதிகமாகவும் அடிக்கடியும் பல இடங்களிலும் தாக்கிவருவதால் எதிரிக்கு கவலையைச் செய்து வருகிறது. சென்ற சனிக்கிழமை இரவு ஜெர்மன் விமான இலாகா ஒலிபரப்பில் பிரிடிஷார் 'அதிகக் கடுமை'யாய் இருக்கிறதாகச் சொல்லப்பட்டது. அதோடு விமான யுத்தமும் கஷ்டமாக இருக்கிறதாம். கடந்த செவ்வாய்க்கிழமை வரை எட்டு இரவுகளில் நான்கு தடவை பெர்லின் படையெடுக்கப்பட்டது. புனு ரப்பர் தொழிற்சாலையும், ஹால்லிலுள்ள மருந்து சாமான் செய்யுமிடமும், ஹென்ஷல் எஞ்ஜின்கள் செய்யும் இடமான கஸ்ஸலும், மான்ஹீம், ஆஸ்டெண்டு, டங்கர்க், ப்ரெஸ்ட் முதலிய இடங்களும் லக்ஷியமாக இருந்தன. இவைகளைப்பற்றி ஜெர்மானிய பத்திரிக்கைகளில் வரும் கணக்கிலிருந்தே தெரிய வரும். பிரிடிஷ் விமானங்களின் பலமும் ஒரு லக்ஷியத்தில் இரண்டு புறத்திலும தாக்கப்படும் விதமும் ஜெர்மன் பத்திரிகைகளில் சொல்லப்படுகின்றன. சாதாரணமுறையில் எப்போதாவது பிரிடன்மேல் ஜெர்மன் விமானங்கள் வருவதைத் தவிர வேறே இல்லையென்பதை ஜெர்மானியரே ஒப்புக்கொள்ளுகின்றனர்.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**இரான்.**

இரானில் ஜனங்கள் அமைதியாகவும், நேச தேச படையெடுப்பு தள்ள முடியாதென்ற மனப்பான்மையுடனும் இருந்து தங்கள் வேலைகளை முன்போல் செய்துவருகிறார்கள் என்று பிரிடிஷ்படைகளிலிருந்து வரும் அறிக்கைகள் கடிதங்கள் மூலம் தெரியவருகிறது. சென்ற பத்துவருஷங்களாக, முஸ்லீம் நாடுகளுடன் சிநேக பாவத்துடனும் கௌரவ புத்தியுடனும் இருந்துவருகிறதாக பிரிடன் சொன்னதையும் பல காரியங்களால் காண்பித்து வந்ததையும் உண்மையென்று வறவேற்று நம்பப்படுகிறது. ஆனால் அச்சுநாட்டு வழக்கங்களுக்கு இவை நேரே வேற்றுமையுள்ளதாகும். (ஆசியா வாசிகளும், ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களில் உள்ளவர்களும், ஜெர்மன் வீரர்களுடைய புதிய பிரபு அரசாங்கத்திற்கு அடிமைகளாக இருக்கவேண்டும் என்ற டாக்டர் டாரேயின் மொழிகளும், ஸெனுஸ்ஸிஸ் என்ற முகமதிய சமயத்தார்களை கிரேஸியானி படுத்திய பாடும் அச்சுநாட்டு வழக்கங்களுக்கு திருஷ்டாந்தங்களாகும்). பாலஸ்தீனத்தில் நாம்எடுத்துக்கொண்டநடவடிக்கை பிசகானாலும் பிரிடிஷ்காரரின் நோக்கங்கள் கெடுதலாக ஒன்றும் இல்லை. அதை அரசாளுவது சிரம சாத்தியம்; பிரிடிஷார்களுக்கு அங்கே சமார்த்தியக் குறைவு என்று தான் குற்றம் சாற்றப்பட்டது.

ஆகையால் இரானில் ஆங்கில-ஸோவியத் ராணுவ நடவடிக்கையைப்பற்றி இந்நாட்டில் சில முஸ்லீம்கள் சந்தேகமடைந்து, ஏன் இவர்கள் அங்கே இருக்கிறார்கள் என்றும் எவ்வளவு காலம் அங்கே இருக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்றும் குறும்பாகக் கேட்பது வெட்கமாக இருக்கிறது.



**இரானில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை அவசியமும் தர்மமுமாகும்.**

இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்லுவதென்றால் பெரும் வியாசம் எழுதலாம். ஆனாலும் சில முக்கிய விஷயங்களைச் சொன்னால் போதுமானது.

(1) நடுக்கிழக்கு நாடுகள், ருஷ்யா, இந்தியா முதலியவைகளைத் தற்காப்பு செய்வதற்கு பாரஸீகம் ஒரு ரயில்வே ஜங்ஷன்போல கேந்திரஸ்தானமாகும்.

(2) அச்சுநாட்டு முறைகள் அநேகமாக இங்கே ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் நாஸிச் சைனியம் ஏற்கனவேயுள்ள ஐந்தாம்படையாளரை அனுசரித்து வந்து, இரான், இராக், பாஹ்ரின், முதலிய இடங்களில் கிடைக்கும் 160 லக்ஷம் டன் எண்ணெயைக் கைப்பற்றி, ஸாடாபாத் ஒப்பந்தத்தை முறித்து, ஸிரியா, இராக், டிரான்ஸ்ஜார்டினியா, ஆப்கனிஸ்தானம், இந்தியா முதலியதை நேரே பயமுறுத்தியுமிருப்பார்கள்.

(3) ஆகையால் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியான அவசியம் வந்துவிட்டது. ஏற்கனவேயே அபிஸீனியாவுக்கும், அல்பேனியாவுக்கும் உதவிக்குப் போகாததிற்காக பிரிடிஷ்காரர்கள் போதும் என்று நினைக்கும்படி குற்றம் சாற்றப்பட்டார்கள்.

(4) தர்ம நியாயத்தின்படி பார்த்தால், நாஸிக் கொள்கை நாகரிகத்திற்கு விரோதமானதல்லவா? பொய், களவு, தீங்கு முதலியவைகளை ராஜீயக் கொள்கைகளாகக் கொள்வதை வெறுத்து ஜனநாயகத்தை விரும்புகிறவர்கள், நாஸித் தன்மையை எங்கே பார்த்தாலும் தொலைக்கச் சண்டைபோடுவது சரியல்லவா? இதற்கு உலகத்தின் முக்கால்பாகம் 'சரிதான்' என்று பதிலுரைக்கிறது. ஆகையால் இரானில் புகுந்து நாஸிகளைத்தான் அடித்தோம் என்பது நிச்சயம்!

(5) எவ்வளவு காலம் அங்கேயிருக்க நேரிடும்? என்றும் கேட்கப்படுகிறது. எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலம் தான் என்பது வியக்தமான—சரியான—விடையாகும். மறுபடி உள்ளே ஜெர்மானியரை வரவிடாமல் செய்யவேண்டும். அவர்களைத் தவிர அந்நாட்டில் விரோதிப் பிரதிநிதி ஸ்தாபனங்களும் கூட்டங்களும் இருக்கின்றன. இவைகளை, வான்பேபன், டாக்டர் க்ரோபா, ஜெருஸலத்துத் தலைவன் முதலியோரைத் தடுத்தமாதிரி நாட்டை ஆக்கிரமிக்காமலும் பாதுகாக்கவேண்டும்.

(6) எப்பொழுதாவது வெளியே சென்றுவிடுவார்களா? என்று கேட்டால் நம் எண்ணங்கள் முடிவடைந்தால் நிச்சயமாகப் போய்விடுவோம். எவ்வித காரணத்தினாலும் அனுக்கிரமிப்பு என்றுதான் சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் ஆணை செய்திருக்கிறார்களே. அவ்விதம் செய்வார்களென்பதற்கு அத்தாக்ஷி வேண்டுமென்றால் சென்ற யுத்தத்தில் இரான் பூரா நிரம்பியிருந்த பிரிடிஷ் சிப்பாய்கள், வெளியே போகும்படி சொல்ல இரானுக்கு சக்தியில்லாதபோது ஒரு ஆள்கூட பாக்கியில்லாமல் சென்றுவிட்டார்கள். தன் விருப்பப்படி அரசாங்கம் நடத்திக் கொள்ள பெர்ஸியா அதன்பிறகு விடப்பட்டது.

பாரஸீகத்தில் கிரேட் பிரிடனுக்கு ஒருவிதமான சுயலாபமும் இல்லை. அது அந்நாட்டிற்குச் செய்யவேண்டியதை செய்துவிட்டது; இதை அந்நாட்டு ஜனங்கள் உணர்ந்தும் வெளிப்படையாக காண்பித்தும் இருக்கிறார்கள். இவ்விதமாக யுத்தமில்லாமல் உள்ளே பிரவேசித்தால் நாஸிகளை ஹிம்ஸித்து விரட்டிவிடலாம். அப்பொழுது நேசதேசங்களுக்கும், ருஷ்யர்களுக்கும் உதவி செய்யலாம். இதுவே ஹிட்லருக்கு பாதகம்தான். அவன் ஒழிந்த பிறகு எவ்விதமாகவோ இஷ்டப்படி காரியங்களைச் செய்துகொள்ள பெர்ஸியா மறுபடியும் விடப்படும்.

v v v v v v v v v v v v v

**துருக்கியின் குழப்பம்.** துருக்கியிருக்கும் நிலையில் வேறே யாராவது இருந்தால் என்ன செய்யும் என்பதைச் சொல்லுவது சிரமமான காரியம்! பிரிஸிடெண்டு இனேனுவும் ஸராஜுருலுவும் தங்கள் சமார்த்தியத்தை வெகு நேர்த்தியாகவே காண்பித்து வருகின்றனர். பல தேசங்கள் நடுநிலை வகிப்பது முடியாதென்று விட்டபோதிலும் நெடுநாளாக இவர்கள் விரும்பிய நடுநிலையை வகித்து வருகின்றனர். இருந்தாலும் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்துவருகிறார்கள். ருஷ்யாவும் பிரிடனும் இரானில் எடுக்க நேர்ந்த நடவடிக்கையினாலும் துருக்கிக்கு ஒருவிதமான சாதகமும் ஏற்படவில்லை.

எந்தப் பக்கத்தில் துருக்கியர் சேர்ந்துகொள்ள விரும்புவார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. நம் பக்கம்தான் சேருவார்கள். ஆனால் ஆறுமாதங்களாக துருக்கியின் எல்லைப்புறத்தில் ஜெர்மன் துருப்புகள் இருக்கின்றன. விரும்பப்படாத ஜெர்மானியர் பல்கேரியாவில் புகுந்து பல்கேரியர்களை உத்ஸாகப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடும்படி தூண்டுகின்றனர். ஆனால் அவர்கள் ருஷ்யர்களை எதிர்க்காமலும் இருக்கலாம். துருக்கியைச் சுற்றியுள்ள பல தீவுகளில் ஜெர்மானியரும் இதாலியரும் ஏற்கனவேயே புகுந்திருக்கின்றனர். ஈஜியன் கடலுக்குள் பிரவேசிக்கும் மார்க்கத்திலுள்ள கிரீட்டும் நாஸி வசம் இருக்கிறது. இத்துடன் இல்லாமல் வான் பேபன் என்பவர் அங்காராவுக்கும் பெர்லினுக்கும் அடிக்கடி போய்வந்துகொண்டு இருதேசங்களுக்கும் ஒற்றுமை ஏற்படுத்தப் பார்க்கிறார். இவர் எண்ணம் பலிக்காதபோனாலும் ஐந்து வருஷங்களுக்கு முன்பு இவர்தான் அடிக்கடிபோய் ஆஸ்திரியாவின் ஸ்வதந்திரத்தை சமார்த்தியமாகக் கெடுத்தவர். இப்படியெல்லாம் நாலா பக்கங்களிலும் எதிரிகள் சூழ்ந்திருந்தாலும் தான் தப்பித்துக்கொள்ளப் பார்க்கும். அப்பொழுது துருக்கி மந்திரிகள் தொந்தரவு தாங்காமல் வான் பேபன் காட்டும் சில பகட்டான பொருளாதார, வியாபார சாதகங்களுக்கு ஏமாறலாம்.

உண்மையில், (பிரிடனுடன் ஒற்றுமை சம்பந்தப்பட்ட வரையில்) இராக், ஸிரியா, இரானில் நேர்ந்த மூன்று சடும் நிலைமைகளில் துருக்கி கௌரவமாகவே நடந்துகொண்டது. ஜெர்மனியின் சிநேகிதர்களுக்கு சாமான்களோ சைனியமோ தன் தேசத்தின் வழியாக அனுப்ப அனுமதிக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் ஜெர்மனி, துருக்கியில் ஆக்கிரமணம் செய்ய முயற்சித்ததை சரியாக துருக்கி எதிர்த்தது. ஆனால் இரான் சம்பந்தமாக ஜெர்மானியரின் நடத்தையை



துருக்கியில் உள்ள பத்திரிகைகள் உத்ஸாகமில்லாமல் பேசியது ஆச்சரியமாக இராது. ஏனென்றால் ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் உபரியாகத் தொந்தரவு செய்வதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் மாண்டிரீக்ஸ் ஏற்பாட்டுக்கு விரோதமாக இதாலிய சண்டைக் கப்பல்களையோ, (பிரெஞ்சுக் கப்பல்களையோ) டார்டனல்ஸ் மூலம் போக அனுமதிக்கும்படி நிர்ப்பந்திப்பார்கள் என்று துருக்கி நினைக்க ஹேது இருக்கிறது. இப்படிச் செய்வதற்கு வான் பேபன் ஒரு கக்ஷியைச் சொல்லுவார். அதாவது ருஷ்ய-பிரிடிஷ் நடவடிக்கையை இரானில் எடுத்துக்கொண்ட பிறகு துருக்கி நாலு பக்கங்களிலும் சூழப்பட்டுவிட்டதால், துருக்கியின் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்த துருக்கியில் ஜெர்மன் துருப்புகளும், கருங்கடலில் அச்சு நாட்டுக் கப்பற்படையும் வருவது அவசியமென்று சொல்லுவான். இவ்விதமான வசனங்கள் ஆதாரமற்றதானாலும், முஸ்டாபா கமாலின் புதிய நிலையில் ஸ்வதந்திரத்தை விரும்பும் துருக்கியரால் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப்படலாம்.

மேலும் ஜெர்மனியும் கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். புடென்னிக்குப் பின்புறமாகச் செல்ல கடல் மார்க்கமாக ஒரு பாதுகாப்புப் படையை கருங்கடல் பாதையில் அவசியம் அனுப்பும்படி இருக்கும். அப்பொழுது டார்டனல்ஸ் வழியே சென்றால் துருக்கி நேசதேசங்களுடன் சேர்ந்துகொள்ளுமென்று ஜெர்மானியருக்கு பயமிருக்கும். இப்படியெல்லாம் பல விதங்களில் ஆலோசிக்கக்கூடியதாக நிலை இருக்கிறது. இதில் ஜோஸ்யம் சொல்லுவது பிரயோஜனமில்லை. இதுவரை இனேனு செய்து வந்தமாதிரி செய்து வந்தால் அதுவே நமக்குப் போதுமானது. துருக்கியரின் சிநேகம் நமக்கு நல்ல சமயங்களில் அதிக உதவியாக இருந்தது. இனிமேலும் நமக்கும்—ருஷ்யர்களுக்கும்—அதிக உதவியாக இருக்கும். ஆகையால் மிகவும் சிரமமான நிலையிலிருக்கும் இவர்களுக்கு நம் அனுதாபத்தை காண்பிப்போம். ருஷ்யாவுடன் ஹிட்லர் யுத்தத்திற்குப் போகும்போது, இரண்டு பெரிய சத்துருக்கள் எதிர்த்து மடிவார்களென்று நினைத்ததுபோக அது முடிவாவதற்குள் இரான் சம்பவத்திலிருந்து ஜெர்மானியர் எதிரிடையாக துருக்கி வழிபோக முயற்சித்தால் சமயத்தில் அப்பொழுது துருக்கியின் நிலை கஷ்டமானதுதான். இந்த விஷயத்தை பிரிடிஷ் ராணுவ இலாகாவும் அறியும்.

v v v v v v v v v v v v v

**சாக்குப்போக்கு.** ஜப்பானிய ராணுவக் கக்ஷியினர் மிகவும் பயங்கர நிலையிலிருந்துகொண்டு சில சமயங்களில், இனிமேலும் அப்படியேதான் இருப்போமென்று அவர்கள் சொல்லிக்கொள்ளுவது நகைப்பை உண்டாக்குகிறது. அமெரிக்க எண்ணெய்க் கப்பல்கள் வ்ளாடிவாஸ்டாக் மூலம் அனுப்புவதானபேச்சு இதற்கு ஒரு திருஷ்டாந்தமாக எடுத்துக்கூறலாம். லாஸ்ஏன்ஜல்ஸைவிட்டு இந்தக் கப்பல்கள் அநேகத் துணைக் கப்பல்களுடன் ஆகஸ்டுமாதம் 18-ம் தேதி புறப்பட்டவுடன் ஜப்பானியர் பிரமாதமாகப்பேசினார்கள். "வ்ளாடிவாஸ்டாக் மூலம் யுத்த தளவாடங்களை ருஷ்யாவிற்கு ஸப்ளை செய்வதைப் பார்த்துக்கொண்டு ஜப்பான் சும்மா இருக்கமுடியாது" என்று அதிகார வர்க்கத்திலிருந்த ஒருவர் ஓங்கிப்பேசினார். அதேமாதிரி

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **1—9—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ஸிஸிலி (Sicily).** | | |
| தரையிலிருக்கும் விமானங்கள்—ஜெர்பினி (Gerbini), காமிஸோ (Comiso) | ...... | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| **இதாலி (Italy).** | | |
| ரயில் வண்டி. பொஸாலோ (Pozzallo) | ...... | பீரங்கிகளால் தாக்கப்பட்டன. |
| கப்பல்கள்.— வெடிமருந்துகள் செய்யும் தொழிற்சாலைகள், இருப்புப்பாதை, வியாபாரக் கப்பல், கடல்விமானம்—க்ரோடோம் (Crotome). | ...... | ...... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகம் கப்பல்கள்—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| ரஸ்தாக்கள், இருப்புப்பாதை—ட்ரிபோலி (Tripoli)க்கு மேற்கே. | ...... | சேதமாயின. |
| விமான தளங்களிலுள்ள கட்டடங்கள்—மெல்லஹா (Mellaha) | ...... | ...... |
| துறைமுகம், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi). | ...... | கப்பல்கள் தாக்கப்பட்டன. |
| மோட்டார் வண்டிகள்—பார்ஸ் (Barce)க் கருகில். | ...... | யந்திர பீரங்கிகளால் தாக்குதல். |
| விமானம் இறங்குமிடம் — எல்கஸாலா (El Gazala). | 1 விமானம். | தீக்கள் மூட்டப்பட்டன. |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| விமானப் போர், விமான நிலயங்களிலுள்ள விமானம், விரோதி ஸ்தானங்கள்.—யுத்த அரங்கம் பூராவும். | 27 விமானங்கள். | 39 விமானங்கள். |
| **2—9—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகல்.—விரோதி காவல் கப்பல்—நார்வீஜியன் (Norwegian) சமுத்திரக்கரை. துறைமுகம்.—ப்ரெமன் (Bremen) ... | ...... | 1 கப்பல் நாசமடைந்தது. மற்றொன்று தாக்கப்பட்டது. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **2—9—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.** | | |
| விமான எதிர்ப்புகள்.—வடக்கு பிரான்ஸ் (France), இங்கிலீஷ் கால்வாய் (English Channal) | ...... | 2 பைடர் விமானங்கள். |
| விரோதி ஸப்ளைக் கப்பல்.—டங்கர்க் (Dunkirk)க்கு அப்பால். | 2 பாம்பர் விமானங்கள். | கப்பல் புகையால் சூழப்பட்டது. |
| இரவில்.—ரயில் போக்குவரத்துகள், தொழிற்சாலைகள்.—பிராங்க்பர்ட் (Frankfurt). | ...... | கட்டடங்கள் நொறுங்கின; தீக்கள் மூட்டப்பட்டன. |
| பிரதான ரயில்வே ஸ்டேஷன்கள், ராணுவ லக்ஷியங்கள்.—பெர்லின் (Berlin). | ...... | ...... |
| தொழிற்சாலைகள்.—மான்ஹீம் (Manheim). | ...... | ...... |
| துறைமுகங்கள்.—ஆஸ்டெண்டு (Ostend), டங்கர்க் (Dunkirk). | 9 விமானங்கள். | ...... |
| **ஸிஸிலி (Sicily).** | | |
| விமான நிலயங்கள்.—காமிஸோ (Comiso) ஜெர்பினி (Gerbini). | நஷ்டமில்லை. | 1 விமானம். |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| 7 நாசகாரிகள் துணைபுரியப்பட்ட 5 விரோதிக் கப்பல்கள்.—ஸ்பார்டியுன்டோ (Spartiuento), கிழக்கு முனை, ஸார்டீனியா (Sardinia). | ...... | 1 பெரிய கப்பல் தகர்க்கப்பட்டன. மற்றொன்று தீப் பிடிக்கப்பட்டது. 2 சிறிய கப்பல்கள் சேதமடைந்தன. |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| சைனிய வாஸஸ்தலங்கள், தபால் தந்தி ஆபீஸ்.—டெர்ன (Derna). | ...... | சேதமடைந்தன. |
| விமானம் இறங்குமிடம்.—எல் கஸாலர் (El Gazala). | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| உத்தியோகஸ்தர்கள் வசிக்குமிடங்கள்.—பார்டியா (Bardia). | ...... | ...... |
| சாமான் கிட்டங்கிகள்.—காம்பூத் (Gambut). | ...... | தீப்பிடித்தன. |

பத்திரிகைகளிலும் பலமான பயமுறுத்தல்களுடன் இந்த சமாசாரம் வெளியிடப்பட்டது. பிறகு மிஸ்டர் சர்சில் செய்த பிரசங்கத்தில் ஜப்பானைக் குறித்து "இவ்விதம் செய்வதை நிறுத்திவிடவேண்டும்" என்று ஒரே வாக்கியத்தில் சொல்லிமுடித்தார். பிற்பட்டு ருஷ்ய கவர்ன்மெண்டாரும், ருஷ்யாவிற்கும் வரும் எண்ணெய்க் கப்பல்கள் சம்பந்தமாக ஜப்பான் தலையிடுவது, ருஷ்யாவுடன் 'சிநேகிதப்பான்மையில்லாத நடவடிக்கை' எனக் கருதப்படும், என்று ஒரு அறிக்கை மூலம் வெளியிட்டார்கள். (இது என்ன சிநேகிதம்). அமெரிக்க சாமான்களை வழக்கமாக வாங்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஜப்பான் அனுமதியிலோ, அனுமதியில்லாமலோ அவைகள் பத்திரமாகப் போய்ச்சேரவேண்டும் என்ற அமெரிக்க கவர்ன்மெண்டாரின் எண்ணத்தை மிஸ்டர் கார்டல் ஹல்லும் வெளியிட்டார். அப்படிச் சொன்னதில் ஜப்பானின் மனப்பான்மை எவ்விதம் மாறுபாடையடைந்தது என்று பாருங்கள்.

"ஜப்பானிய கடற்கரையோரமாக எண்ணெய்க் கப்பல்களை அனுப்புவதில், நியாய விரோதமில்லாதபோதிலும், ஜெர்மானியருக்கு மனோவேதனைக்கு இடம் கொடுக்கும் என்று" ஒன்றும் அறியாததுபோல் ஜப்பானிய ரேடியோக்கள் இப்பொழுது பேசுகின்றன.

மேலும் அட்லாண்டிக் சமுத்திரத்தின் மத்தியில் அமெரிக்க பிரஸிடெண்டும் மிஸ்டர் சர்ச்சிலும் சந்தித்த காரணமாக இக்கப்பல்கள் அனுப்பப்பட்டதாக ஜப்பானில் பேசிக்கொண்டு சும்மா இருந்துவிட்டனர். எப்படி நம்முடைய மனச்சாக்ஷியே நம்மை பயங்காளிகளாகச் செய்கிறது!

v v v v v v v v v v v v v

**அடக்கப்பட்டது.** ஸார்டீனியாவிலுள்ள கார்க் என்னும் ஒரு வகை நெட்டிக்காடுகளை கப்பற்படைக்கு உதவி புரியும் விமானங்கள் அழித்து நிர்தூளியாக்கியது ஒரு மெச்சத் தகுந்த விஷயம். இந்த நெட்டிக்கரியை ஜெர்மானியரின் முகத்தில் 'ஹிட்லர் மீசைபோல்' வரைய முடியுமென்று பிரிடிஷ் தளகர்த்தர் பரிகாசமாய்ச் சொன்னார். இது வெறும் பரிகாச வார்த்தையாகாது.

ஏனென்றால் இக்காடுகள் அழிந்தால் அச்சுநாட்டு ஆகாரத்திலும் விமான உற்பத்தியிலும் பலத்த நஷ்டம் ஏற்பட்டது. பல போலிச்சாமான்கள் செய்ய இந்த நெட்டி உபயோகமாகிறது. இதைத்தவிர:—

(1) ரெபர்ஜிரேட்டர்போன்ற ஐஸ் பெட்டிகளுக்கும்,

(2) விமான எஞ்ஜின்களுக்குத் தேவையான சிறுபாகங்களுக்கு வாஷர்கள்போடவும்,

(3) ஜோடுகளில் அடித்தோலுக்குப் பதிலாக உபயோகிக்கவும் உதவும். பிரிடனின் பொருளாதார முற்றுகையினால், இதாலிக்கும் ஜெர்மனிக்கும் தோல் அதிகம் வருவதில்லை, ஆதலால் கார்க்தான் உபயோகப்படுத்தப்படுகிறது.

முக்கியமாக நெட்டிவேலை தொழிற்சாலைகள் ஸ்பெயின், போர்சுகல் இந்த இரண்டு இடங்களிலும்தான் இருக்கின்றன. நிறை குறைந்தாலும்,



அதிக விஸ்தாரத்தை அடக்கக்கூடிய பெருமன் இருக்கிறபடியால் இவைகள் ஜாஸ்தியாக ஏற்றுமதில்லை. இவ்விடங்களிலிருந்து ஸப்ளை ஜாஸ்தியில்லாததினால் சமீபத்தில்தான் ஸார்டீனியாவில் ஏராளமான தோட்டங்கள் புதிதாக உண்டாக்கப்பட்டன.

v v v v v v v v v v v v v

**நேசத்தின் பிரார்த்தனை தினம்.** கோவில்கள், சோரி, சர்ச்சு முதலியவைகளில் செய்த விசேஷப் பிரார்த்தனைக்குப் பிறகு டவுன்ஹால் பொதுக்கூட்டம் மனதைக் கவர்ந்தது. இதற்குமுன் டவுன் ஹாலில் இவ்வளவு பெரிய கூட்டம் கூடினதில்லை. இதில் ஸமஸ்தானத்தின் ஒவ்வொரு ஜாதியினரும் வந்து, அங்கே செய்யப்பட்ட உபந்நியாசங்களை கவனமாகக் கேட்டார்கள். அவ்வுபந்நியாசங்கள் விசேஷக் கருத்தும் உணர்ச்சியும் பொருந்தியிருந்தன. அங்கு அதிகமாக ஜனங்கள் வந்ததிற்கு, ஹிஸ் ஹைனஸ் மஹாராஜா அவர்கள் பிரஸன்னமாயிருந்து ஆரம்ப உபந்நியாசத்தைச் செய்தது ஒரு காரணமாகும். இதெல்லாம், புதுக்கோட்டையில் ஏற்பட்ட யுத்த உணர்ச்சியையும், மேன்மை தங்கிய சக்கிரவர்த்தியிடமுள்ள விச்வாஸத்தையும் ஆச்சரியத்தையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் பிரிடிஷ் சிப்பாய்களும் பொதுமக்கள் காட்டும் தீவிரமான தைரியத்தையும், புதிய சிநேகிதர்களான ருஷ்யர்களின் தியாகத்தையும் இவர்கள் உணர்ந்திருக்கிறதும் தெரியவருகிறது. சுமார் 1,500-க்கு மேற்பட்ட ஜனங்கள் பேச்சு ஸ்வாரஸ்யத்தை மட்டும் அனுபவிக்காமல் மூன்றாவது யுத்த வருஷத்தில் தங்களால் இயன்றபடி வெற்றிக்காக தங்கள் ஓய்வு நேரத்தையும் மீதப் பணத்தையும் தியாகம் செய்வார்களென்று நினைக்கப்படுகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **1—9—41.** (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—துறைமுகம்-ப்ரெமன் (Bremen). | ...... | பலத்த சேதம். |
| | சாயந்திரம்.—ஒரு விரோதி துணைக் கப்பல் பிரெஞ்சு (French)க் கடற்கரைக்கப்பால். | 1 விமானம். | ...... |
| | காவல்படை எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne). | 1 விமானம். | பலத்த சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**2—9—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் அரங்கம் முழுவதிலும். | 28 விமானங்கள். | 52 விமானங்கள். |

**3—9—41.** (புதன்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | இரவில்.—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest). | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | துறைமுகம், ஒரு நாசகாரி, வியாபாரக் கப்பல்—ட்ரிபோலி (Tripoli). | ...... | நாசகாரி மூழ்கடிக்கப்பட்டது; கப்பல் சேதமடைந்தது. |
| | விரோதி சாமான் வைக்குமிடங்கள்—காம்பூத் (Gambut)தின் வடக்கே. | ...... | ...... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| | காலாட்படை, விமானச் சண்டைகள், தரையிலிருக்கும் விமானங்கள்—யுத்த அரங்கம் முழுவதிலும். | 27 விமானங்கள். | 56 விமானங்கள். |

பால்டிக்(Baltic) கடல்.

| | | | |
|---|---|---|---|
| | விரோதிக் கப்பல்கள் வேவுபார்க்கும் படகுகள்—பால்டிக் (Baltic)க் கடல். | ...... | 1 கப்பலும், 1 வேவு பார்க்கும் படகும் மூழ்கடிக்கப்பட்டன; 2 கப்பல்கள் சேதமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**4—9—41.** (வியாழக்கிழமை)

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—தொழிற்சாலை—மாஸிங்கார்ப் (Mazingarbe). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg). | 7 பகல் பைடர் விமானங்கள். 1 பகல் பாம்பர் விமானம். | ...... |
| | கப்பல் துறைகள்—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | 11 பகல் பைடர் விமானங்கள். |
| | இரவில்.—விரோதி டாங்கி—பிரிடானிய (Britany)க் கடற்கரைக்கப்பால். | ...... | ...... |
| | தொழிற்சாலை.—லாபெல்லிஸ் (Lapallice). | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வண்டிகள் வைக்கும் பண்டகசாலைகள் கட்டடங்கள்—ட்ரிபோலி (Tripoli). | ...... | கட்டடங்கள், நொறுங்கின; பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள், தொழிற்சாலைகள், சைனிய வாஸஸ்தலங்கள், விமான நிலயம்—பார்ஸ் (Barce). | ...... | ...... |
| | விரோதி விமானம் இறங்குமிடம்.—ஸிரெனைகா (Cyrenaica). | ...... | கூடாரங்களும், சாமான் வைக்குமிடங்களும், தீப் பிடித்தன. |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| | கப்பல்கள்—கட்ரோன் (Catrone), துறைமுகம் தெற்கு இதாலி (Italy). | ...... | 1 வியாபாரக் கப்பல் தாக்கப்பட்டது. |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள்—ஜெர்பினி (Gerbini), கடேனியா (Catania). | ...... | தீக்கள் மூட்டப்பட்டன; 2 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**4—9—41.** (*வியாழக்கிழமை*)—*தொடர்ச்சி.*

**ருஷ்ய விமானங்களால்.**

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விரோதி சைனியங்கள், விமானமும், விமான நிலயங்களும்—*யுத்த அரங்கம் பூராவும்.* | 7 *விமானங்கள்.* | 61 *விமானங்கள்.* |

## ஜெர்மனி (Germany).

| | | |
|---|---|---|
| பேர்லின் (Berlin). | 2 *விமானங்கள்.* | *பெருந்தீக்கள் மூட்டப்பட்டன.* |

**5—9—41.** (*வெள்ளிக்கிழமை*).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| *ஒரு தகவலுமில்லை.* ... | ... | ... |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| துறைமுகம், கப்பல்கள்—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | 1 *கப்பல் தாக்கப்பட்டது.* |
| விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்—*டேர்னு* (Derna). | ...... | *வெடிகளும், தீக்களும் கிளம்பின.* |
| போக்குவரவு மோட்டார்கள் தங்குமிடம்,—*டேர்னு* (Derna)*வுக்குத் தெற்கில்.* | ...... | *தீப்பிடித்தன.* |
| விரட்டப்பட்ட விமானங்களும், போக்குவரவு மோட்டார்களும்.—*மார்டுபா* (Marttuba). | ...... | ...... |
| விமான நிலயங்கள்.—*பார்டியா* (Bardia), *எலாடெம்* (Eladem). | ...... | ...... |

**ருஷ்ய விமானங்களால்.**

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| பான்ஸர் சைனியமும், விமானச் சண்டைகளும்.—*யுத்த அரங்கம் முழுவதிலும்.* | 11 *விமானங்கள்.* | 23 *விமானங்கள்.* |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**6—9—41.** (*சனிக்கிழமை*).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விரோதிக் கப்பல்கள்—*ஆஸ்லோ* (Oslo) *துறைமுகத்தில்.* | *நஷ்டமில்லை.* | *கப்பல்கள் சேதமாயின.* |
| இரவில்.—ஒருவித ரப்பர் தொழிற்சாலை—*ஹல்ஸ்* (Huls), *ரைன்லாந்து* (Rhineland). | ...... | *பெருந்தீக்கள் கிளம்பின.* |
| தொழிற்சாலைகள்.—*ரூர்* (Rhur) ... | ...... | *சேதமாயின.* |
| துறைமுகம், மீன் எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை—*பெர்கோஸா* (Berghso), *நார்வேயிலுள்ள* (Norway). | ...... | *தொழிற்சாலை தீப்பிடித்தது.* |

## மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| மூன்று நாசகாரிகளால் துணை புரியப்பட்ட மூன்று வியாபாரக் கப்பல்கள்—*மத்தியதரைக்கடல்* (Mediterranean). | ...... | 1 *வியாபாரக் கப்பல் நாசமாயிற்று.* |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| ராணுவ தளவாடங்கள் வைக்குமிடங்கள், கட்டடங்கள்.—*பெங்காஸி* (Benghazi). | ...... | *நேராகத் தாக்கப்பட்டன.* |
| கட்டடங்கள்.—*பேர்க்கா* (Berka) ... | ...... | ...... |
| விரோதி விமானங்கள்—*எல்ட்மிமி* (Eltmimi). | ...... | 5 *விமானங்கள் நாசமாயின; இன்னும் அநேகம் சேதமாயின.* |
| விமான நிலயங்கள்.—*எல்கஸாலா* (El Gazala), *மார்டுபா* (Martuba). | ...... | 1 *விமானம்.* |
| விமான நிலயம், கட்டடங்கள்.—*எலாடெம்* (Eladem). | ...... | *தீக்கள் மூட்டப்பட்டன.* |
| விரோதி பீரங்கி ஸ்தானங்கள்—*டொப்ருக்* (Tobruck)*குக்கு கிழக்கு.* | ...... | ...... |

## ஸிஸிலி (Sicily).

| | | |
|---|---|---|
| விமான நிலயங்கள்.—*காமிஸோ* (Comiso), *கடேனியா* (Catania), *ஜெர்பினி* (Gerbini). | 1 *விமானம்.* | *அநேக விமானங்கள் சேதமாயின.* |

| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **3—9—41.** (புதன்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| இரவில் சில இடங்கள்.—இங்கிலாந் (England)தின் வடகிழக்குக்கரை. | ...... | ஒருவரும் கொல்லப் படவில்லை; சொற்பச் சேதம். |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| மால்டா (Malta) ... | ...... | கொஞ்சம் பேர்களுக்குக் காயம்; ஒருவரும் கொல்லப்படவில்லை. |
| **4—9—41.** (வியாழக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| சில இடங்கள்.—பிரிடன் (Britain) கிழக்குக்கரை. | ...... | சேதமுமில்லை; ஒருவரும் கொல்லப்படவுமில்லை. |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| காலையில்.—மால்டா (Malta) | ... 6 விமானங்கள்; அநேகம் சேதமாயின. | ...... |
| பிற்பகலில்.—மால்டா (Malta) | ... 3 விமானங்கள்; இன்னும் அநேகம் சேதமாயின. | 2 விமானங்கள். |
| **எகிப்து (Egypt).** | | |
| கெய்ரோ (Cairo)வுக்கு சுற்றியுள்ள பிரதேசங்கள். | ...... | ஒருவர் கொல்லப்பட்டார்; 20 பேர் காயமடைந்தனர். |
| ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | ...... | 2 பேர் கொல்லப்பட்டனர்; 3 பேர் காயமடைந்தனர். |
| **5—9—41.** (வெள்ளிக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—ஸ்காத்லாந் (Scotland)தின் வடகிழக்கில் ஒரு ஸ்தலம். | ... ... | சேதம் சொற்பம். |



| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **5—9—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **எகிப்து (Egypt)** | | |
| அலெக்ஸான்டிரியா (Alexandria) ... | ... ... | 3 பேர் கொல்லப்பட்டனர். |
| ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம் ... | ...... | 2 பேர் கொல்லப்பட்டனர்; ஒருவர் காயமடைந்தனர். |
| **6—9—41.** (சனிக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| இரவில்—அங்கு மிங்கும் சில இடங்கள்—இங்கிலாந்(England)தின் தென்மேற்கு கிழக்கு பாகங்கள். | ...... | சொற்பச் சேதம்; ஒருவரும் கொல்லப்படவில்லை. |
| **எகிப்து (Egypt).** | | |
| ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம்—2 விமானங்கள். | | சேதமில்லை. |
| **சைப்ரஸ் (Cyprus).** | | |
| நிகோஸியா(Nicosia). | ...... | ...... |
| **7—9—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| இரவில்—சில இடங்கள்—இங்கிலாந் (England)தின் தென்கிழக்குக்கரை, கிழக்குக்கரை. | ...... | சொற்பச்சேதம்; கொஞ்சம் பேர்கள் கொல்லப்பட்டனர். |
| சில இடங்கள்.—ஸ்காத்லாந்தின் (Scotland) கிழக்குக்கரை. | ...... | ...... |
| **8—9—41.** (திங்கட்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| அங்குமிங்கும் தனிப்பட்ட இடங்கள்—இங்கிலாந் (England) தின் கிழக்கு, தென்கிழக்குக்கடற்கரை ஓரமுள்ள ஜில்லாக்கள். | ...... | சொற்பச்சேதம். |
| **லிபியா (Libya).** | | |
| டோப்ருக் (Tobruck) ... | ...... | சேதமில்லை. |
| **ருஷ்யா (Russia).** | | |
| மாஸ்கோ (Moscow) ... | ...... | வீடுகளுக்குச் சொற்பச்சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 6—9—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்—யுத்த அரங்கம் பூராவும். | ...... | ...... |
| | ஜெர்மானியர்களால் கட்டப்பட்ட பாலங்கள்—க்மார் (Khmar) நதிக்கு குறுக்கே. | 33 விமானங்கள். | 62 விமானங்கள். |
| 7—9—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—துணைக் கப்பல், ஸப்ளைக் கப்பல்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | ...... | துணைக் கப்பல் தகர்க்கப்பட்டது; கப்பல் தீப்பிடித்தது. |
| | விமான எதிர்ப்புகள்.—பிரான்ஸ் (France)ஸின் வடபாகத்திலும், இங்கிலீஷ் கால்வா (English Channel)யிலும். | 2 பகல் பைடர் விமானங்கள்; 2 பாம்பர் விமானங்கள். | 1 விமானம். |
| | இரவில்.—பேர்லின் (Berlin) ... | ...... | பலத்த விமான எதிர்ப்புகள். |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—கீல் (Kiel) ... | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—பொலாயின் (Boulogne). | 20 பாம்பர் விமானங்கள். | 4 பைடர் விமானங்கள். |
| | விமான நிலயங்கள்—கிழக்கில் ஹாலந்து (Holland) முதல் (Britanny) வரை. | 1 விமானம். | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | தங்குமிடங்கள், கப்பல் துறைகள் காலியான துறைகள்—பாலர்மோ (Palermo). கடற்கரைக்காவல் ஸ்டேஷன், ரயில்வே ஸ்டேஷன்—ஹெகாடா (Hcata). | ...... ...... | பெருந்தீக்கள் கிளம்பின. ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | டேர்னு (Derna), காபுஸோ (Capuzzo), பார்டியா (Bardia), | நஷ்டமில்லை. | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 7—9—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி விமான நிலயங்கள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள், துருப்புகள்—யுத்த அரங்கம் பூராவும். | 24 விமானங்கள். | 71 விமானங்கள். |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | புகாரெஸ்ட் (Bucharest) ... | நஷ்டமில்லை. | ...... |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 2—9—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), வடகிழக்கு இங்கிலாந்து (England), கிழக்கு இங்கிலாந்திலுள்ள கடற்கரைப் பிரதேசங்கள். | ...... | சொற்பச்சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | டோப்ருக் (Tobruck) ... | ...... | சொற்பச்சேதம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் கால்வாய் பிரதேசம் ... | ...... | ஒருவர் கொல்லப்பட்டனர்; 5 பேர்கள் காயமடைந்தனர். |

ஹிட்லர் இப்போது செய்துவருகிறான். தெற்கு ருஷ்யா மூலமாக கருங்கடலுக்குப்பாய அவன் பிரயத்தனப்படுகிறான். வெளியே அவனுடைய கூட்டாளிகளைக் கொண்டு பலதிக்குகளிலும் நேசதேச போலீஸ்படையைப் பிரித்துவிட்டு சேதம் உண்டாக்கப் பிரயத்தனப்படுகிறான். எல்லா திசையிலும் அவனைச் சுற்றி சூழ்ந்து நெருங்கி வரும் படையில் பலஹீனமான பாகத்தைத் தேடி வருகிறான். அவன் இப்பொழுது உண்மையில் தற்காப்பு நிலைமையில் இருக்கிறபோதிலும் அவன் தாக்கித்தான் வர வேண்டும். இல்லாவிடில் அவன் கூட்டாளிகள் அவன் தோற்றுவிட்டதாகத் தெரிந்து அவனைத் தனியாக விட்டுவிடுவார்கள்.

ஹிட்லர் இப்பொழுதும் ருஷ்யாவை தாக்கி வருகிறான். ஜப்பானைப் பிரிடனுடனும், ருஷ்யாவுடனும், தூரக்கிழக்கிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸுடனும் யுத்தம் புரியும்படி நிர்பந்தப்படுத்திவருகிறான். விஷி பிரெஞ்சுக்காரரையும் பிரிடனுடனும் முடிவில் யுனைடெட் ஸ்டேட்ஸுடனும் சண்டையிடும்படி தன்னால் முடிந்தவரையில் தூண்டி, வடமேற்கு ஆபிரிக்காவில் ஜெர்மனிக்கு யுத்தம் புரிய கப்பல் தளங்களும், ஆகாய விமான தளங்களும் பெற முயலுகிறான்.

ஸிரியாவிலும், இராக்கிலும், காகேஸஸிலும் உள்ள பிரிடிஷாருக்கு எதிராகவும், ருஷ்யாவுக்கு எதிராகவும், போர் புரிய ஜெர்மன்படைக்கு வழிவிடும்படி துருக்கியை நிர்பந்தித்து வருகிறான். இரானிலும், ஆப்கனிஸ்தானத்திலுள்ள அவனுடைய ஏஜெண்டுகள் இந்தியாவை மிரட்டியும், ஸிரியா, இராக், காகேஸஸ் இவைகளைப் பின்புறத்திலிருந்து பயமுறுத்தியும் வருகிறார்கள்.

### தென் அமெரிக்காவில் கிருத்திரமங்கள்.

தென் அமெரிக்கா பூராவும் லத்தீன் அமெரிக்க குடியரசு நாடுகளின் அரசாட்சிகளில் கலக்கம் உண்டாக்கும் பொருட்டும் அவர்களுடைய கொள்கையை மாற்றுவதற்கும் ஹிட்லர் குழப்பங்களையும், கிருத்திருமங்களையும் உண்டாக்கி வருகிறான்.

இந்த முயற்சிகளெல்லாம் பிறர் மனதைக்குழப்ப ஹிட்லரின் பயமுறுத்தும் வழிகள். முக்கியமாக எதிரிகளைச் சேரவொட்டாமல் பிரிப்பதற்காக இரண்டாவதாக ஜெர்மானியர்களுக்கு உத்ஸாகத்தையும் தைரியத்தையும் மூட்டி அவர்களைத் தளரவிடாமல் பலப்படுத்துவதற்காகவும் இந்த தந்திரங்களை உபயோகப்படுத்துகிறான்.

ருஷ்யாவுக்கு எதிராக ஜெர்மனியின் தாக்குதலில் மூன்றாவது படையெடுப்பு நிச்சயமான முடிவு, அதாவது கீவ், ஒடெஸ்ஸா, மாஸ்கோ, லெனின்கிராட் இவைகளைக் கைப்பற்றினால் ஒழிய மகத்தான ஜயம் அடைந்ததாக ஜெர்மன் ராணுவத் தலைமை காரியாலயத்தினர் சொல்லிவருவது ஜெர்மானியர்களுக்கு நம்பிக்கை ஊட்டாது.

இந்தச் சந்தர்பத்தில் ஜெர்மன் ராணுவ அறிக்கைப் பத்திரிக்கைகளுக்கும் ருஷ்ய ராணுவ அறிக்கைப் பத்திரிக்கைகளுக்கும் வெளிப்படையாக பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஏற்கனவே இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே ஜெர்மன் தாக்குதலின் முதல் தோற்றம் ஆரம்பித்த பிறகு ஜெர்மன் ராணுவத் தலைமை காரியாலயத்தினர் தோற்ற எதிரிகளைத் தொடர்ந்து அழித்து வருவதாகவும்



அல்லது திட்டப்படி எல்லாம் நடந்து வருவதாகவும் சொன்னார்கள்.

ருஷ்ய ராணுவ அறிக்கைப் பத்திரங்களில் ஜெர்மன் முழுப்படையோ அல்லது பகுதிகளோ அழியும்வரை ஜெர்மானியர்கள் ஜயித்ததாகச் சொல்லும் விவரங்களுக்கு மறுப்புச் சொல்லாமல் மௌனமாக இருந்தனர். முன்புள்ள மௌனம் சாதிக்கும் தந்திரமே இப்பொழுதும் கையாளப்பட்டு வருகிறது. ஆகையால் ஜெர்மன் அறிக்கை பத்திரிகைகளிலிருந்து ஜெர்மானியர் சொல்லுவதற்கு ருஷ்ய அறிக்கைப் பத்திரிகைகள் மறுப்புச் சொல்லாதது முன்னிட்டு ஜெர்மானியர்கள் சொல்வதை ஒப்புக்கொள்வது மூடத்தனம்.

### ருஷ்யாவும் பிரிடனும் ஜெர்மனிமேல் எதிர்ப்பு.

ருஷ்யாவும் பிரிடனும் தற்காப்பு செய்துகொண்டிருப்பதாகத் தோன்றினாலும், இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்க்க ஜெர்மனியை எதிர்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பலத்த ருஷ்ய ஆகாய விமானங்கள் பெர்லினைத் தாக்கிவருகின்றன. பிரிடிஷ் விமானப்படையோ மேற்கு ஜெர்மனியிலுள்ள யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளை அல்லும் பகலும் தாக்கி வருகின்றனர். இந்தத் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து சேதத்தை உண்டாக்குகின்றன.

இதோடு பிரிடிஷ் கப்பற்படையும், விமானப்படையும், எதிரி கப்பல் போக்குவரத்தைத் தடுத்தும், கப்பல்களை மூழ்கடித்தும் வருகின்றன. இந் நிலைமையில் ஜெர்மனிக்கு பொருளாதார முற்றுகை ஏற்பட்டு அதன் மென்னை அடைத்துவிடும் போலிருக்கிறது. ஜூலை மாதத்தில் மாத்திரம் 4,59,000 டன் நிறையுள்ள விரோதிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டோ பழுதாக்கப்பட்டோ விட்டன. அதற்குப் பிறகு இன்னும் பலமான சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. வடஆபிரிக்காவில் இதாலிக்கும், ஜெர்மனிக்கும், லிபியாவிலுள்ள தன் படைகளுக்கு உணவுப் பொருள்கள் ஸப்ளை செய்வதில் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அங்கு பிரிடிஷ் விமானப் படையும், தென் ஆபிரிக்கா விமானப் படையும், நிலப்பாதுகாப்பு படையும் ஜெர்மன் படைகளை மறித்துக் கொண்டன. ஆகையால் இவைகளை ருஷ்யாவுக்கு அனுப்ப முடியவில்லை.

### நேசநேசந்துப் படைகளில் வேறு வம்புகளைச்செய்து பார்க்கவேண்டியிருக்கிறது.

இந்த சந்தர்ப்பங்களில் தன்னால் முடிந்தவரையில் வேறு வம்புகளை உண்டாக்க ஹிட்லர் முயற்சிக்கிறான். தனக்குச் சாதகமாகச் சேர்ந்து போரிடும்படி விஷி ஸர்க்காரைத் தூண்டியிருக்கிறான். தளகர்த்தர் வேகாண்டு உள்பட அநேக பிரெஞ்சு உத்தியோகஸ்தர்கள் இந்தக் கொள்கையை எதிர்ப்பதாக நம்பப்படுகிறது. ஆக்கிரமித்த பிரான்ஸ் ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸ் இவைகளிலுள்ள பிரெஞ்சுக்காரர்களும் இதை எதிர்க்கிறார்கள். அட்மிரல் டார்லான் தேசத்துரோகி என்று கருதப்படுகிறான். அவன் நிலைமையும் ஹிட்லரை ஒத்ததுதான். ஜெர்மனி தோற்றுவிட்டால் அவன் தேசத்தார்கள் அவனுக்கு கொஞ்சமும் இரக்கம் காட்டமாட்டார்கள் என்று நமக்குத் தெரியும். ஹிட்லர் தோல்வியடையாமல் தப்பினால் தானும் தப்பிப் பிழைக்கலாமென்று நம்பிக்கையுடன்

# அபாயமும் விவேகமும்.

---

இரண்டு வருஷங்களாக இக்கடும்போர் நடந்தேறிவருவதில் இந்தியாவில் ஒரு ஜெர்மன் வெடிவிமானத்தின் உறுமல் சப்தம் கலக்கத்தைச் செய்யவில்லை. ஹிட்லர் சைனியங்களாகிற பேய்களுக்கு இந்தியா இரையாகவில்லை. (சென்ற யுத்தத்தில் எம்டன் கப்பல்போல்) சமுத்திரத்திலிருந்து ஒரு கப்பலும் இப்பொழுது தாக்கி ஓடவில்லை. ஐரோப்பிய நாடுகளில் மாத்திரம் 70,000 போலிஷ் பொதுமக்கள் ஜெர்மானியரால் கொலை செய்யப்பட்டார்கள். ஜெர்மன் யூ-படகுகளை ஓட்டிச் செல்பவர் பெயர் வாங்குவதற்கு ஒன்றுமறியாத குழந்தைகளை அட்லாண்டிக் கடலில் அமிழ்த்தினார்கள். பாதுகாப்பில்லாத ஐரோப்பிய பட்டிணங்களில் குறுக்கே பாய்ந்து எங்கும் விடாமல் நாசத்தை விளைவித்தனர். நிலைகுலைந்து ஓடினவர்களை, தயவுக்காக கதரும்பொழுதே விமானங்களால் பாய்ந்து குண்டுகளால் சுட்டனர். சைனாவில் புருஷர்களைக் கொன்று, ஸ்திரிகளை மானபங்கம் செய்து, லாஹிரி வஸ்துக்கள் கொடுத்து பயமுறுத்தி தங்களுடன் சேரும்படி சொன்னார்கள். இவ்விதமான கஷ்டங்களை அனுபவிக்காமல் இந்தியா பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

இந்திய சிப்பாய்கள் மேற்கேயிருக்கும் தற்காப்பு ஸ்தலங்களுக்குச் சென்று இதாலியரை ஆபிரிக்க நாடுகளை இழக்கும்படி செய்தார்கள். கிழக்கே எதிரிகளின் ஆக்கிரமண பயமே ஏற்படாமல் தைரியமாக நிற்கிறார்கள். தரையிலும் சுற்றிலுமுள்ள மலைப் பிராந்தியங்கள்வழியாக எதிரி வராமல் பார்த்துக் கொள்ளுகின்றன. இவ்வித அமைதியை ஸ்தாபிக்க சமாதானம், கைத்தொழில், தியாகம் முதலியதும் இங்கே இருக்கிறது.

அச்சுநாடுகளின் சூழ்ச்சி முறைகளுக்கு வசப்படாமல் தற்காப்பு பலமாகத்தானிருக்கிறது. இருந்தாலும் சில இடங்களில் எதிரி எவ்விதமோ குடைந்து உள்ளே செல்லப் பார்த்தான். எல்லைப்புறத்தில் பாதுகாப்பு செய்கிறவர்களை ஏமாற்றி உள்நாட்டில் புகுர சில யுக்திகள் செய்துபார்த்தான். ஆனால் அவனுடைய எண்ணங்கள் இந்தத் தந்திரங்களின் உதவியால் சில இடங்களில் பலித்தன. கிழக்கு நாடுகளிலும் "மேதாவியான உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன்" என்ற கொள்கைகளைக்கொண்டு சிலரை ஏமாற்றினான். இராக்கில் லஞ்சம் கொடுத்து துர்புத்தி புகட்டி வசப்படுத்த முயற்சிசெய்தான். இவன் சதியாலோசனைகளைக் கேட்க அதிகப்பேர் இல்லாதபோனாலும் கேட்க இருக்கும் சிலரைக்கொண்டு இராக்கைப் பிடித்து இந்தியாவுக்கு வரும் பாதைகளையும் கைப்பற்றியிருப்பான். ஆனால் சரியான சமயத்தில் சரியான விதமாக பிரிட்டன் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. இராக்கில் முன்பின் நடந்ததைப்பற்றி யார் எப்படி நினைத்தாலும் இந்தியச் சிப்பாய்களுக்கு உண்மை நன்றாகத் தெரியும்.

ஸிரியாவிலுள்ள விமான நிலயங்களைப் பிடித்துக்கொண்டு நாஸி விமானங்களும்வந்து அங்கே துரோகச் சிந்தனையை தூண்டிவிடப் பார்த்தார்கள். ஆனால்



பலிக்கவில்லை. இராக்கில் ஒன்றும் செய்யமுடியாததால் ஸிரியாவிலும் இரானிலும் சூழ்ச்சியையே தொழிலாகக்கொண்ட நாஸிகள் தங்களுக்கு இடப்பட்ட போதனைகளைச் செய்ய ஆரம்பித்தனர். ஸிரியாவிலேயே உள்நாட்டுக் கலகத்தை உண்டுபண்ணி அதில் பலர் இறந்தனர். யுத்தமேற்படாமல் மூன்று நாட்கள் இரானில் எடுத்துக்கொண்ட சரியான நடவடிக்கையினால் ஜெர்மானியர் திட்டங்கள் கவிழ்ந்தன. இல்லாவிட்டால் ஜெர்மன் விமானங்கள் இந்தியப் பட்டிணங்களுக்கு அருகாமையிலும் வந்திருக்கும்.

ஒருவிதமாக நிலைமையை அடக்கிவிட்டோம். இருந்தாலும் வேரோடு நாஸித் தீங்குகளைக் களைந்து எறிந்தால்தான் ஆபத்து நீங்கி சமாதானம் ஏற்படும். இதிலிருந்து இந்தியா விவேகத்தை அடையலாம். ஆபத்து வந்த காரணத்தினால் ஒற்றுமையடையப் பார்க்கவேண்டும். ஜனங்களுக்கிடையே பிளவு ஏற்பட்டால் அந்தச்சாக்கில் ஹிட்லர் உள்ளே நுழைந்துவிடுவான். அவனும் அவனுடன் கூடினவர்களும் இவ்விதமான பிளவுகளைப் பரிசீலனை செய்து தேசத்தை இந்த உதவியால் சுலபமாகப் பிடுங்கப் பார்க்கின்றனர். சில சமத்தில் சைனியத்தினால் நாடுகளைப் பிடிப்பது சிரமமானதால் ஆங்காங்குள்ள வித்தியாசங்களைத் தூண்டிவிட்டு காரியத்தை முடிக்கப் பார்க்கலாம்.

நாட்டினுள்ளும் பிறருடனும் வித்தியாசங்களைப் பாராட்டாமல் இருப்பதென்பது அவனுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. நாடுகளின் ஒற்றுமை ஹிட்லரை முறியடிக்கும், வேற்றுமை அவனுக்கு சாதகமாகும். அவ்வொற்றுமையை இந்தியா காண்பித்தால் உலகத்தின் முக்கால் பாகத்தோடு தன் முழுபலத்துடன் சேர்ந்ததாக சந்தோஷமும் கௌரவமும் அடையலாம். அப்பொழுது "ஹிட்லர் குழந்தைகளை பயமுறுத்தும் பூச்சாண்டியென்றும் உலகத்திற்கு வீண் பயத்தை பரவச் செய்கிறவனென்றும்" தெரியவரும். உலகம் உண்மையில் பயப்படாது.

---

## ஹிட்லர் துரத்தி ஓடுக்கப்பட்ட குற்றவாளி.
## நேசதேசத்து போலீஸார் வசமிருந்து தப்பமுயல்வது.
## கூட்டுக்களவாணிகள் வெளியிலிருந்து வழி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியதின் அவசியம்.
## டார்லானும் ஜப்பானும் ஏன் ஹிட்லருக்கு உதவிசெய்ய வேண்டும்?

விக்ஹாம் ஸ்டீட் பேசியது.

கொள்ளைக் கூட்டத்தின் தலைவர் போலீஸாரினால் சூழப்பட்டு அழியக் கூடியதாக பயம் நேர்ந்தால் முதலில் அவன் பாய்ந்து வெளியே ஓட முயல்வான். இரண்டாவது அப்படித் தப்பிப் போக முடியாமல் போனால், போலீஸாரைச் சுட்டுத் தள்ளிவிட்டு தானும் இறக்கப் பார்க்கிறான். இம்மாதிரிதான்

ஹிட்லருக்கு உதவி செய்ய அவன் சம்மதப்படுகிறான்.

ஜப்பானுடைய நிலைமையும் இதே மாதிரிதான். சென்ற 10 வருஷங்களாக ஜப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கையை ஏற்படுத்தியவர்கள் ஜெர்மனி ஜயிக்குமென்று நம்பியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் தங்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்ள முடியவில்லை. மாற்றினால் ஆபத்துத்தான்.

இதனால்தான் ஹிட்லரின் மற்ற சகாக்கள்போல அவர்களைச் சுற்றி சூழ்ந்திருக்கும் போலீஸ் படையிலிருந்து பாயமுயற்சிக்கிறார்கள்.

வரும் வாரங்களில் ஆபத்தான சம்பவங்கள் நேரிடக்கூடும். ஸ்வதந்திரப்படையினால் உண்டாக்கப்பட்ட மதிலானது, எதாவது ஒரு இடத்தில் அழிக்கப்பட்டதாகக் காணக்கூடும். ஹிட்லரும், அவர் தேடிக்கொண்டிருக்கும் பலஹீனமான இடத்தைக் கண்டு பிடிக்கலாம். அப்படிக் கண்டுபிடித்தால் முதலெடுப்பிலேயே அழிக்க முடியாதபடி உதவிப் படையை அனுப்பி அந்த இடம் பலப்படுத்தப்படும். கொள்ளைக் கூட்டத்தினரின் மூர்க்கமான தலைவனுக்கு இனிச்செல்லும் ஒவ்வொரு மாதத்திலும் கேடுகள் ஏற்பட்டு அவன் அழிவும் வரவர சமீபத்து வருகிறது.

---

## பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியில் விளைவித்த சேதம்.
## அமெரிக்க நிருபர் கொடுக்கும் விவரம்.
## புது வெடிகுண்டுகளால் ஏற்பட்ட நஷ்டம்.
## நாஸித் தலைவர்களைப்பற்றி ஜெர்மானியரின் மனப்பான்மை.

பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியில் விளைவிக்கும் சேதத்தைப் பற்றி ரேடியோ போஸ்டன் என்ற பத்திரிகைக்கு லிஸ்பனிலுள்ள அமெரிக்க நிருபர் W. E. லூகஸ் சில முக்கிய ருஜுக்கள் கொடுத்திருக்கிறார்.

ஜெர்மனி, ருஷ்யாவில் வெற்றி பெறுவதற்கு ஏராள நஷ்டங்கள் அடைவதுடன் தங்கள் நாட்டில் ஏற்படும் சேதம் நாஸித் தலைவர்களுக்கு அதிகக் கவலையைச் செய்கிறது.

இவ்விதமாக சேதம் விளைவிப்பதற்கு பிரிடிஷ், விமானப்படை கையாளும் புது குண்டுகள்தான் காரணம்.

பாக்வுல்ப் என்ற பெரிய ஜெர்மன் விமானத் தொழிற்சாலை தகர்க்கப்பட்டது. வீஸர் நதிக்கரையில் இதற்கு உதவும் யந்திரசாலை இன்னும் தாக்கப்படவில்லை. ஹாம்பர்க்கில் ஐந்து நீர்மூழ்கிகளைக் கட்டிக்கொண்டிருக்கும் பொழுதே இரண்டு கப்பல் தளங்கள் பூரா நாசமாகிவிட்டன. இதற்கு அருகிலுள்ள வீடுகளும் கடைகளும் பொடியாகிவிட்டன. அடால்ப் ஹிட்லர் பிளாட்ஜ் என்ற இடத்தில் இருக்கும் டவுன்ஹாலில் முதலாவது வில்லியத்தின் சிலைதான் மிஞ்சி இருக்கிறது. இதிலிருந்து ஹிட்லர் அமுல் அழியுமென்று வைத்துக்கொள்ளலாம்.



பிர்டரிக்ஸ்பர்கர் என்ற ஸ்டேஷனைச் சுற்றியுள்ள ஜில்லா பாழாக இருக்கிறது. விமானப்போரின் ஆரம்ப காலத்தில் பெர்லினின் வடமேற்கு பாகத்திலுள்ள ஸ்மென்ஸ் தொழிற்சாலை பலத்த சேதமடைந்தது. பெல்லிவியூவிலுள்ள சைனிய சாமான்களும், கோரினர்ஸ்டிராஸிக்கு சுற்றியிருக்கும் 60 வீடுகளும் பாழாகின. ஓரிடத்தில் காஸ் (gas), ஜலம், செல்லும் குழாய்கள் உடைந்து 80 பேர் மூழ்கிவிட்டனர்.

ஜனங்கள் ஜெர்மன் அரசாங்கத்துக்கு விரோதமாக இருக்கிறதாக பிரசார மந்திரி கோயபல்ஸ் கண்டுபிடித்திருக்கிறாராம். ஆனால் ராணுவ இலாகாவுக்குத் தெரியாதபடி மறைக்கிறார். அப்படியானால் அது மிகவும் விசேஷம்தான். தற்காப்பு ஸ்தலங்களுக்குப் பக்கத்தில் பொறுமையுள்ள ஜனங்கள் இரவில் 4, 5 மணி நேரங்கள் உட்கார்ந்துகொண்டு தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவதைப் பற்றிய கதைகள் கிடைத்திருக்கின்றன. ஆஸ்திரியா, பவேரியா முதலிய இடங்களில் முன்னைவிட அதிகமாக கோடைகால வாஸஸ்தலங்களுக்கு ஜனங்கள் செல்லுகிறார்கள். பணக்காரர் ரைன்லாந்தை விட்டு தெற்கு நோக்கிச் சென்றுவிட்டார்கள். கொலோன், ஹாம்பர்க் முதலிய இடங்களிலிருந்து உத்தியோகங்களை விட்டுவிட்டு பல பெரிய நாஸி உத்தியோகஸ்தர்கள் கார்மிஷ் போன்ற பல இடங்களுக்கு கூட்டமாக சென்றிருக்கிறார்கள். மற்றும் சில பிரயாணிகளும் யுத்தம் முடியும்வரை இந்த இடங்களில் தங்க வந்திருக்கிறதாகவும் சொல்கிறார்கள்.

ஜெர்மனியின் வடக்குப்பக்கத்தில் உள்ள துறைமுகப்பட்டணங்கள் குண்டுகளால் தாக்கப்படுகின்றன. அங்குள்ள ஜனங்களை நாஸி அதிகாரிகள், நார்வேயை போய்ப் பார்க்க ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் நடுத்தரமான ஜனங்கள் போகிறார்களே ஒழிய வேலையாட்கள் அனுப்பப்படுவதில்லை. ஏனெனில் அங்கு சென்றால் தப்பி ஓடிவிடுவார்கள் என்றும், திரும்பி தொழிற்சாலைகளுக்கு வரமாட்டார்கள் என்றும் அதிகாரிகள் பயப்படுகிறார்கள்.

இதற்குள் தற்காப்ப ஸ்தலங்களிலிருக்கும் ஜனங்கள் இவ்வாறெல்லாம் பேசிக்கொள்ளுகிறார்கள். "நம் தலைவனான ஹிட்லர் இல்லாவிட்டால் என்னகதி வந்திருக்குமோ? வீட்டில் சுகமாக படுக்கையில் தூங்குவோம்." "நாளை ஹெர்மான என்ன செய்வானோ? பயந்தால் தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்." பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியின் விமானத் தற்காப்பு ஸ்தலங்களுக்குள் பிரவேசித்துவிட்டால் தற்கொலை செய்துகொள்ளப்போவதாக முன் ஒரு சமயம் கோயரிங் சொன்னாராம். இதைத்தான் அவர்கள் பரிகாசம் செய்தார்கள்.

பிரிடிஷ் வெடிகுண்டுகளால் ஜெர்மனியில் எதிர்த்த இடங்களில் கடுமையான சேதம் விளைந்திருக்கிறது. தற்கொலைகள் ஏற்படும் ஆகாரம், நித்திரையில்லாமல் அவஸ்தைப்படுவதும், போக்குவரவு சாதனங்கள் நின்றதால் பொதுஜனங்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டிருப்பதும் தெரியவருகின்றன. எங்கு சென்றாலும் வைத்திய சாலைகள் நிரம்பி இருக்கின்றன. பீல்பெல்ட் என்ற இடத்தில் காயலாக்காரர்கள் சிகித்சை செய்துகொள்ள பல வாரங்கள் பிடிக்கின்றன.

சரீரத்திலும் மனதிலும் இவ்விதமான தொந்தரவுகள் ஏற்பட்டு வேலையின் அதிகத்தாலும் ஜனங்கள் அவஸ்தைப் படுவது சகஜமாக இருக்கிறது.

கக்ஷித்தலைவர்கள் சொல்லும் மொழிகளில் இப்பொழுதுதான் ஜனங்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். நாஸிக்கு விரோதமானவர்களால் இந்த எண்ணம் பலப்படுத்தப்படுகிறது. பூமிக்குள் இருக்கும் இடங்களில் 1941-ம் வருஷம் மாரிகாலத்திற்குள் வெற்றியடைவதாக நாஸி உத்தியோகஸ்தர்கள் சொன்னபடி ஏோவில்லையே என்று பரிகாசம் செய்கிறார்களாம்.

---

# வருஷாந்திரப் பகுதி—1941-ம் வருஷம்.

## லாப நஷ்ட ஜாபிதா—இரண்டாவது வாரம்.

## உலகத்தாரின் திகில்.

### I—அச்சு நாடுகள்.

**1940.**

ஸர்வாதிகாரரின் மனக் கோட்டைகள்.

(a) உலகத்தை அடிமைப் படுத்த ஏற்பாடு.

1. தயாரிப்பின்மை, பிரியம், பயம், பொய்பிரசாரம், இவைகள் ஜெர்மானியர்களின் கூட்டத்திற்கு சுலபமான வழிகள்; டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் இவை போலந்தின் கதியை அடைந்தன.

ஹிட்லருக்கு தொழில் சாலைகளும் உணவுப் பொருள்கள் கிடைக்குமிடங்களும் அகப்பட்டு அவனுடைய போர் பலத்தை அதிகரிக்கச் செய்தது.

**1941.**

அவை எப்படி அழிந்தன.

(a) உலகத்தை விடுவிக்க ஏற்பாடு.

1. சாமான்கள் கிடைக்கின்றன; ஆனால் ஜனங்களின் அன்பு ஏற்படவில்லை.

ஜயத்திற்காக 'வி' என்ற இயக்கம் ஐரோப்பா பூராவும் வியாபித்திருக்கிறது. "ஜெர்மன் படைகளும் நாஸி போலீஸாரும் புகுந்திருக்கும் ஒவ்வொரு தேசத்திலும் ஜெர்மன் பேருக்கே ஒரு வெருப்பும், நாஸி இயக்கத்திற்கு ஒரு இகழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. அவை நூற்றுக்கணக்கான வருஷங்கள் சென்றபோதிலும் மனிதர்களின் மனதைவிட்டு அகலாது" என்று சர்ச்சில் கூறுகிறார்.



**1940—தொடர்ச்சி.**

2. ரிப்பன்டிராப் யுனைடெட் ஸ்டேட்ஸை எச்சரிக்கை செய்து விரட்ட நம்பிக்கைகொண்டு, (ஜெர்மனி இதாலி, ஜப்பான்) ஆக மூன்று அச்சுநாட்டு அரசாங்கத்தார்களுக்கும் கூட்டு ஒப்பந்தம் செய்துவைக்கிறார்.

பயத்தை பரவச் செய்வதினாலும் மிரட்டல்களினாலும், வாக்களிப்பதினாலும், பொருளாதார நெருக்கடியினாலும் "தேச சஞ்சாரிகளினாலும்," ஆட்டங்கொண்டிருக்கும் நடுநிலை நாடுகளான (ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா) இவர்களிடமும் அவ்வொப்பந்தத்தின் மூலப் பிரதியில் கையெழுத்து வாங்கியிருக்கிறார்.

3. பிரிடனால் மட்டும் பயமுறுத்தப்பட்டும், தயவுள்ள ஜெர்மன் ஆதிக்கத்தின் கீழ் ஒற்றுமையுள்ளதும், திருப்தியுள்ளதுமான ஐரோப்பாவாக மாறவேண்டுமென்ற "புதிய திட்டத்"தை ஹிட்லர் ஆரம்பித்தான்.

**1941—தொடர்ச்சி.**

2. குத்தகைக் கடன் மசோதாவின் கீழ் பிரிட்டனுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் அளித்து வந்த உதவி அதிகரிக்கிறது. ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் சந்தித்தது அமெரிக்காவில் தீர்மானத்தை சந்தேகமறக் காட்டியிருக்கிறது.

யூகோஸ்லாவியாவும் கிரீஸும் ஒப்பந்தத்திற்கு மறுதளித்தன; தங்கள் ஸ்வதந்திரத்திற்காக அவைகள் பாதுகாத்தன. அவைகள் நொறுக்கப்பட்ட போதிலும் ஜயிக்கப்படவில்லை. இன்னும் சிறுசிறு சண்டைகள் நடந்துவருகின்றன; பாக்கிப் பேர்கள் நேசதேசத்தினருடன் சேர்ந்து விட்டனர்.

3. ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து, போர்ச்சுகல், துருக்கி இவைகள் முற்றிலும் நடுநிலை நாடுகள். ஸ்பெயின் அச்சு நாடுகள் தரப்பில் இருந்ததாகத் தோன்றினாலும், ஜெர்மனியும், இதாலியும் வாக்களித்து வரும் நிஷ்பிரயோஜனமான உதவிகளைக் காட்டிலும் பிரிட்டிஷார் கொடுத்து வரும் பொருளாதார உதவியை அது மேலாகக் கருதுகிறது. பொய் பிரசாரமும், ஒத்துழையாமையும் அச்சு நாடுகளின் கனவை அழித்துவிட்டன. வெளி உலகத்தாரின் பிரமேயையும் மாற்றிவிட்டன.

இங்கிலீஷ்காரரும், அமெரிக்கர்களும் ஒன்று சேர்ந்து சொல்வதும், செய்வதும் நாஸிகள் சொல்வதற்கு ஆதாரமில்லை என்று ரூபிக்கின்றனர்.

### 1940—தொடர்ச்சி.

**(b) கோத்தளங்களைத் தாக்குதல்.**

1. (கிழக்குத்திசையில் தாக்குதல்) என்ற பிஸ்மார்க்கின் டிரான்க் நாச் ஆஸ்டின் கனவானது ஹிட்லராலும் அவனுடைய குள்ளநரித் தோழனான முஸோலினியினாலும் மறுபடியும் காணப்பட்டது.

2. விஷி ஸர்க்காரை தன் சிநேகிதராகச் சேர்த்துக் கொண்டு சண்டையிடும்படி செய்யவும், பிரெஞ்சுப்படைகளையும் பிரெஞ்சு சாம்ராஜ்ஜிய யுத்த தளங்களையும் பிரிட்டனுக்கு எதிராக உபயோகிக்க ஹிட்லர் பார்த்தான்.

3. தென் அமெரிக்கா குடியரசு நாடுகளில் நாஸிக் குழப்பம் உண்டாக்க திட்டங்கள்.

### 1941—தொடர்ச்சி.

**(b) கோட்டை எதிர்ப்பைச் சமாளித்தது.**

1. அச்சு நாடுகளின் சைனியங்களால் அல்பேனியாவிலும், கிரீஸிலும், யூகோஸ்லாவியாவிலும் பெருத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. பால்கன் தேசத்து தானியக் களஞ்சியங்கள் கசாயிக்கடைகளாகின்றன.

இதாலியர்கள் ஆபிரிக்காவிலிருந்து துரத்தப்பட்டார்கள்.

ஜெர்மன் ஆபிரிக்கப்படை எகிப்தின் எல்லைப் புறத்தில் நின்றுவிட்டன.

இராக்கில் அச்சுநாடுகள் தூண்டிவிட்ட கலவரம் ஒடுக்கப்பட்டது. ஸிரியாவிற்குள் புகும் பிரயத்தனம் நேசதேசத்தார்களின் ஆக்கிரமிப்பினால் ஆரம்பித்திலேயே கிள்ளியெறியப்பட்டது, அதாவது முடியாமல் போய்விட்டது.

துருக்கி, ஜெர்மனியுடன் சிநேகம் பாராட்டச் செய்துகொண்ட பிரதிக்ஞையை ஒத்துக்கொண்டாலும் முற்றிலும் அது நடுநிலைமைத் தன்மையையும், தன் தேசகௌரவத்தையும் நிலைநிறுத்தி வருகிறது.

2. சிறிது காலம் ஸிரியாவில் ஏற்பட்ட படையெடுப்பில் (2,000 பிரிடிஷ் மக்கள் உயிர்ச்சேதம்; ஸிரியாவிலுள்ள யுத்த தளங்கள் நேசதேசத்தார்கள் வசமாயின.) தாத்காலியமாக டார்லான், லவால் இவர்கள் சேர்க்கையும் ஏற்பட்டதைவிட இதுவரை யாதொரு ஜயமும் உண்டாகவில்லை.

நியூகாலிடோனியா, ஆபிரிக்காவில் மத்தியரேகைப் பிரதேசம் பூராவும் ஸ்வதந்திரப் பிரெஞ்சுக்காரர் வசம் சேர்ந்திருக்கிறது. ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரரின் எண்ணிக்கையும், போர் பலமும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

3. நாஸிகளின் சூழ்ச்சி ஆர்ஜென்டைனா, பொலிவியா, சிலி, மெக்ஸிகோ, பெரு, யுருகுவே இந்த இடங்களில் வெளியானவுடன் அவைகளை அடக்கத் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.



### 1940—தொடர்ச்சி.

**(c) ஒரு சமயத்தில் ஒரு பலி.**

1. ருஷ்யா போருக்கு ஆயுத்தமாயில்லாததால் சமாதானத்தை முயற்சிக்கிறது. "ருஷ்யாவுடன் செய்து கொண்ட சாதுர்யமான ஒப்பந்தம்" (கோயரிங் சொன்னபடி) இரு முனைகளிலும் போர் நடக்கும் அபாயத்தைத் தடுக்கிறது, என்ற அபிப்பிராயம் இருந்தது.

2. ஹிட்லர் பிரிடனை படையெடுக்கப் போட்ட திட்டம் பிசகினால், ஜப்பானும், ஸ்பெயினும், விஷி ஸர்க்காரும், தான் ருஷ்யாவுடன் போர் செய்யும்பொழுது அவர்களும் பிரிடனுடன் போர் புரிவார்கள் என்று நம்புகிறான்.

3. ருஷ்யாவை படையெடுக்க தருணம் வாய்ந்தவுடன் உலகத்தார் பூராவும் "பொது உடைமை பயம்" நீங்கினதாக எண்ணி தன்னுடன் சேருவதாக ஹிட்லர் நம்புகிறான்.

### 1941—தொடர்ச்சி.

**(c) இரு பக்கங்களிலும் போர் பயம்.**

1. ருஷ்யாவுக்கு தன் பாதுகாப்பை ஒழுங்குப்படுத்தி வைக்க அவகாசம் ஏற்பட்டுவிட்டது. ஹிட்லர் தாக்கும்பொழுது ருஷ்யா திரும்ப பலமாக அடிக்கிறது.

பிரிடிஷ் வெடிகுண்டுகளும் ருஷ்ய வெடிகுண்டுகளும் ஒவ்வொரு ஜெர்மன் தலைநகரிலும் இரண்டு பக்கங்களிலும் பொழிகின்றன.

2. அவை மூன்றும் போர் புரியாமலிருக்கின்றன. விஷி ஸர்க்கார் யோஜனை செய்துகொண்டு கவலையுடன் இங்குமங்கும் திண்டாடுகிறது. ஸ்பெயின் பிரிடனின் பொருளாதார உதவியைப் பொருட்படுத்தி ஓரத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஜப்பானோ சொல்வது மிகப்பெரிது, செய்வது மிகச் சிறிது.

3. பிரிடன் ருஷ்யாவை சிநேகம் செய்து கொள்ளுகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸ் விளாடிவாஸ்டாக் மூலம் உதவியனுப்புகிறது.

ஸ்பெயின் உள்நாட்டுச் சண்டையில் ஏற்பட்ட கடனைத் தீர்க்க கிழக்குப் போர்முனைக்கு ஒரு அடையாளமானப் பகுதிப்படையை அனுப்புகிறது.

இதாலி அரசாங்க கௌரவத்திற்காகவும், உள்நாட்டு பிரசாரத்திற்காகவும் ஒரு பகுதிப் படையை அனுப்புகிறது. அல்பேனியாவிலுள்ள (10,00,000 ஜனத்தொகைக்கும்), ஸோவியத் ஐக்கிய பத்தியத்திற்கும் போர் நடப்பதாக உலகத்தாருக்குத் தெரியக்கொடுக்கிறது.

ஹங்கேரி அதன் புதிய தலை நகரமான பெர்லின் இடும் கட்டளைகளுக்குக் கீழ்படிகிறது.

## 1940—தொடர்ச்சி.

4. ஜெர்மனிக்கும் ருஷ்யாவிற்கும் நடந்த வர்த்தக உடன்படிக்கைகள் ஜெர்மனியிலும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலும், பொருள்கள் ஸப்ளையில் ஏற்பட்ட கஷ்டங்களை நிவர்த்தித்தன. நாஸியின் யுத்தப் பிரயத்தனத்துக்கு உதவி செய்தன.

பிரிடிஷ் பொருளாதார முற்றுகையை ஸைபீரியா வழியாக உள்ள ரயில் மார்க்கமாக பொருள்கள் தன் தேசத்துக்குக் கொண்டுவந்து பிரிடிஷ் பொருளாதார முற்றுகையைத் தவிர்த்துவிடலாமென்று ஹிட்லர் நம்புகிறான்.

**(d) மேலான ஜாதியார்.**

1. "ஜெர்மானியர்களின் ஜாதி உணர்ச்சிக்கு பங்கம் வராமல் ஜெர்மானியர்களுக்குள்ள சாதனங்களை போலாந்து தேசத்தார்களுக்குக் கொடுக்க முடியாது. ஆகையால் அபாயத்தினால் உண்டான நஷ்ட ஈடு,

## 1941—தொடர்ச்சி.

ருமேனியாவும், பின்லாந்தும் சென்ற வருஷத்தில் இழந்ததைத் திரும்பப் பெறலாமென்ற ஒரு காரணத்திற்காக, ருஷ்யாவிற்கு எதிரே சண்டையில் சேர்ந்திருக்கின்றன.

ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களிலிருந்து வந்திருக்கும் போர் வீரர்கள் ரொம்பக் கொஞ்சம்.

போலாந்து ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அதன்படி 100,000 போலிஷ் சண்டைக் கைதிகள் நாஸி மிரட்டலுக்கு எதிராக ருஷ்யா பக்கம் நின்று போர்புரிகிறார்கள்.

4. ருஷ்யாவைத் தாக்கினதினால் ஜெர்மனியின் வருஷாந்திர நஷ்டங்கள் :—(1) 10,00,000 டன் நிறையுள்ள ருஷ்ய தானியம்; (2) 7,00,000 டன் நிறையுள்ள எண்ணெய்; (3) 1,00,000 டன் நிறையுள்ள ருஷ்யப் பருத்தி, (4) ஏராளமான ருஷ்யாவிலிருந்து மாங்கனீஸ், கல்நார், க்ரோம், பாஸ்வேட்ஸ் ஏராளமான இறக்குமதிகள்; (5) 4,00,000 டன்கள் நிறையுள்ள ஸைபீரியா ரயில்வே மார்க்கம் வரும் கள்ளத்தனமான இறக்குமதிகள் (எண்ணெய் விதைகள், திமிங்கல எண்ணெய், பட்டு, ரப்பர், டங்ஸ்டான் (Tungstan) பதனிட்ட தோல்கள் உள்பட.

ஸ்டாலின் உத்தரவுப்படி "பூத கண முறைப்படி" சர்வமும் அழிக்கப்பட்டுவிட்டதால் யூக்ரேனைப் பிடித்தும் அதன் விளைவுபொருள்களையும், தொழிற்சாலைகளையும் ஜெர்மனி கைப்பற்ற முடியாமல் போய்விட்டது.

**(d) உயர்வான வீரியம்.**

1. போலிஷ் பைடர் விமானிகள் பிரிடனின் ஆகாய விமான நிலயங்களிலிருந்து பிரிடிஷ் விமானப்படையுடன் சென்று 250 ஜெர்மன் விமானங்களை அழித்திருக்கிறார்கள்.

பிரெஞ்சுக்காரர்களும், டச்சுக்காரர்களும் பிரிடிஷ் விமானப்படைக்கு உத்ஸாக மூட்டி, "வந்து எங்கள்பேரில் வெடிகுண்டுகளைப் போடுங்கள்" என்று கூச்சலிடுகிறார்கள். ஆக்கிரமித்த



## 1940—தொடர்ச்சி.

வியாதிக் காலத்திலுள்ள சம்பளம், இவைகளைப் போன்ற மற்றுமுள்ளவைகள் ஜெர்மனியைப்போல அதே வேலையைப் பார்க்கும் போலாந்துக்காரர்களுக்குக் கிடையாது. ஜாதி வித்தியாசத்தைக் காட்டிலும், ராஜரீகத்துக்காகவும் இந்த சாதனங்கள் ஜெர்மானியர்களுக்கு மாத்திரம்தான் உண்டு."—ஆஸ்டன்டுஷர் பியோபாக்டர்.

2. ஹிட்லருக்கு 30,00,000 அந்நிய நாட்டு தொழிலாளிகளின் "உதவி" யிருக்கிறது.

14,00,000 யுத்தக் கைதிகள் அவர்களுக்காக வேலை செய்கிறார்கள்.

10,00,000 போலிஷ்காரர்கள், அடிமைத் தொழிலாளர்கள் கூட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

6,00,000 செக்கியர்கள், டச்சுக்காரர்கள், பெல்ஜியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள் நார்வீஜியர்கள், கிரேக்கர்கள், யூகோஸ்லாவியர்கள், ஜெர்மனிக்காக பட்டினிக்குப் பயந்து வேலை பார்க்கும்படி நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

## 1941—தொடர்ச்சி.

பிரதேசங்களிலுள்ள நாஸி ராணுவ லக்ஷியங்களை பிரிடிஷ் விமானிகளுக்குக் காட்டி அங்கு வரும்படி செய்ய, வெளிச்சம்காட்டி சைகை செய்கிறார்கள்.

அடிமையாக்கப்பட்ட ஐரோப்பா அந்தக் கண்டத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஸ்வதந்திரம் ஏற்படுமாறு பிரிடனையும், லண்டனிலுள்ள அவர்களின் ஸ்வதந்திர அரசாக்ஷியையும் எதிர்பார்க்கிறது.

கண்டுபிடிக்கப்பட்டால் கிடைக்கும் தண்டனை அதிக பலமாக இருந்தபோதிலும் கோடிக்கணக்கான ஜனங்கள் பிரிடிஷ்காரர்கள் ஒலிபரப்புவதைக் கேட்டும், ஜயமடைய 'வி' பிரசாரத் தலைவரான கர்னல் பிரிடன் என்பவரின் கட்டளைகளுக்குக் கீழ்படிகிறார்கள்.

2. பிரிடிஷார்கள், விமானத் தாக்குதல்களிலும், ருஷ்யர்கள் விமானத் தாக்குதல்களிலும் அடிமைகள் ஆயுதங்களை கீழேபோட்டுவிட்டு வேலை நிறுத்திவிடுகிறார்கள்.

ஜெர்மன் விமானங்களால் ஸூயஸ் கால்வாயில் விதைக்கப்பட்ட வெடி கண்ணிகளில் அவைகளைச் செய்த டச்சு வெடிமருந்து செய்யும் தொழிலாளிகள் மணலை நிரப்பி வைத்திருப்பதால் அவைகள் சரியானபடி வெடிக்கவில்லை.

ஜெர்மானியர்களிடத்தில் துரோகம் அதிகரித்து வருகிறது.

### 1940—தொடர்ச்சி.

(e) பெருக்கல்.

ஐரோப்பாவில் 30 கோடி ஜனங்கள் அடிமையானவுடன் ஆசியாவும் ஆபிரிக்காவும், இரண்டு அமெரிக்காக்களும் சீக்கிரமாக தனக்குக் கீழ்படிந்துவிடுமென்று ஹிட்லர் எதிர்பார்த்தான்.

நிகரற்ற ஜயங்கள் தொடர்ந்து ஏற்பட்டதினால் அவனுக்கு நம்பிக்கை உண்டாகக் காரணமிருக்கிறது.

அவன் சக்தி பெருகிற்று. அவனுடைய கனவுகள் உண்மையானவைப்போல் தோன்றின.

### 1941—தொடர்ச்சி.

(e) வருந்தல்.

ஐரோப்பாவிலுள்ள தேசங்களை ஹிட்லர் பிடித்தாரே ஒழிய சமாதானத்தை அமைக்க முடியவில்லை. வளைதடி எதிரி வசம்போய் திரும்பி வருவதுபோல் ஹிட்லரின் வெற்றிகள் திரும்பி வந்து இப்பொழுது அவரையே நாசம் செய்கின்றன. இவைகளால் அவருக்கு ஒருவிதப் பிரயோஜனமுமில்லை.

ஜெர்மனி தோற்கடிக்கமுடியாதென்ற அபிப்பிராயம், ருஷ்யாவில் நடந்த சம்பவங்களிலிருந்து பொய்யென்று காட்டப்பட்டிருக்கிறது. இராக், ஸிரியா, லிபியா, இந்த தேசங்களின் கிழக்குப் பக்கம் பிரவேசித்ததும் தடுக்கப்பட்டுவிட்டன.

இத்தகைய தோல்விகள் நம்பிக்கையை இழக்கச் செய்தும் பலத்தைக் குறைத்தும் கனவை நிகிலாகவும் செய்துவிட்டன.

## II.—பிரிடன்.

### இங்கிலாந்தில் தீ.

(a) கப்பல்கள் தயார்.

1. டங்கர்க் சம்பவத்திற்குப் பிறகு பிரிடனில் ஒரு பகுதிப்படைதான் பூரா முஸ்தீப்புடன் இருந்தது.

2. பிரிடிஷ் கப்பற்படைக்கு மத்தியதரைக்கடலிலுள்ள பிரெஞ்சு உதவியும் போய்விட்டது. இதாலிய கப்பற்படையான மற்றொரு எதிரியையும் சந்திக்க நேரிட்டது.

### ஜெர்மனியில் தீ.

(a) கப்பல்கள் தயாராகச் செல்லுகின்றன.

1. இப்பொழுது பிரிடனில் 40 லக்ஷம் பேர்களுக்கு மேல் பூரா பயிற்சி பெற்றதும் நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்ட வீரர்கள் ராணுவ முஸ்தீப்புடன் இருக்கிறார்கள்.

2. பிரிடிஷ் கப்பற்படை பலம் ரொம்பவும் அதிகரித்திருக்கிறது.

இதாலிய கப்பற்படை டாரெண்டோவிலும், மடபானிலும் திக்கு முக்காடச் செய்யப்பட்டு இப்பொழுது துறைமுகத்தில் ஒடுங்கிப்போய் பாசி, (நத்தைகள்) பிடித்து நிற்கின்றன.

முக்கியமான துணைக் கப்பல்கள் மத்தியதரைக் கடலில் பத்திரமாகப் போகின்றன.



### 1940—தொடர்ச்சி.

3. பிரிடிஷ் விமானப் படை சாமர்த்தியத்திலும் வேலையிலும் மேன்மையான போதிலும் ஜெர்மன் விமானப் படைக்கு எண்ணிக்கை ரொம்ப அதிகம்.

இதாலிய விமானப்படையும், பிரெஞ்சு விமானப்படை பிரிடனுக்கு இல்லாமல் போனதும் எண்ணிக்கை வித்தியாஸத்தை அதிகரிக்கச் செய்கிறது.

4. இதாலிய சைனியங்கள் எகிப்து, ஸூடான், கெனியா இவைகளை பயமுறுத்துகின்றன.

5. பிரிடன் பேரில் படையெடுப்பு உடனே நேரிடப் போகிறதென்று ஜெர்மனி சொல்லிவந்தது.

(b) பிரிடன்பேரில் வெடிகுண்டுகள்.

1. ஹிட்லர் விமானப்படை கட்டவிழ்க்கப்பட்டுவிட்டது. பிரிடிஷ் ஜனங்களின் கட்டுப்பாட்டை தகர்க்க குருட்டுத்தனமாக வெடி குண்டுகளைப் போட்டு ஹிட்லர் பிரயத்தனப் படுகிறான்.........லண்டனில் இரண்டாவது பெரிய தீ; கவெண்டிரி,

### 1941—தொடர்ச்சி.

3. பிரிடிஷ் விமானப்படை பிரிடனின்பேரில் நடந்த சண்டையை ஜயித்திருக்கிறது. எண்ணிக்கையிலும் வரவர அதிகரித்துவருகிறது.

கிழக்குப் போர்முனையில் ருஷ்யாவுக்கு ஆயிரக்கணக்கான விமானங்கள் சேதம் ஏற்பட்டிருக்கும் பொழுது பிரிடிஷ் விமானப்படைக்கு அமெரிக்காவில் கட்டப்பட்ட 3,500 யுத்த விமானங்கள் வந்துசேர்ந்து இருக்கின்றன. இன்னும் ஆயிரக்கணக்காக வந்துகொண்டிருக்கின்றன.

இதாலிய விமானப்படையிலுள்ள 2,000 விமானங்கள் அல்பேனியாவிலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலும், லிபியாவிலும், மத்தியதரைக் கடலிலும் சுட்டு வீழ்த்தப்பட்டபடியால் அது ஜெர்மன் உதவியை நாடி இருக்கிறது.

4. இதாலிய சைனியங்கள் பிரிடிஷ் பாதுகாப்பவர்களால் கொண்டுவரப்பட்டு பிரிடிஷ் பிரதேசங்களுக்குள் நுழைகிறார்கள். கைதி கூடாரங்களில் இதாலியக் கைதிகள் லக்ஷக்கணக்காக நிரம்பியிருக்கிறார்கள்.

5. "அவர்கள் வரட்டும்!" என்று லண்டன் கூறுகிறது. பிரிடன் பாதுகாப்புப்படை இந்த மகத்தான தினத்தைக் குறித்து இன்னும் காத்துக்கொண்டிருக்கிறது.

இப்பொழுது பிரிடிஷார் ஐரோப்பா கண்டத்தின் பேரில் படையெடுத்தாலும் எடுக்குமென்று பேசிவருகிறது.

(b) ஜெர்மனி பேரில் வெடிகுண்டுகள்.

1. "லண்டனில் ஹிட்லரால் மூட்டப்பட்ட தீயின் சின்னங்கள் பூராவும் அப்புறப்படுத்தப்பட்டு அழிந்துபோனவைகளை லண்டன் புனருத்தாரணம் செய்தும்கூட ஜெர்மனியின் அக்கிரமச் செயல்கள் பிரிடிஷ் மக்களின் மனதைவிட்டகலவில்லை."—சர்ச்சில், ஸெப்டம்பர் 11, 1940.

பிரிடிஷ் மக்களுக்கு ரத்தம் தோய்ந்திருந்தாலும் கொஞ்சமும் கீழ்படியாமல் உறுதியாக இருக்கிறார்கள்.

### 1940—தொடர்ச்சி.

...லிவர்பூல், பிரிஸ்டல், பிளிமவுத் இன்னும் இதர பிரிடிஷ் நகரங்கள் இடிந்திருக்கின்றன. ஒரு வருஷத்தில் 42,274 ஜனங்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

2. கோயரிங், அப்ட்வாபி, பிரிடிஷ் விமானப்படையைக் காட்டிலும் எண்ணிக்கையிலும், குணத்திலும் மேன்மையானது என்று பெருமை பாராட்டுகிறார். விமானப் போர் போலாந்திலும், பன்

### 1941—தொடர்ச்சி.

முந்தியைக்காட்டிலும் அவர்களுடைய வீரியம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ஜெர்மனியிலும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலும் உள்ள ராணுவ லக்ஷியங்கள் பிரிடிஷ் விமானப்படையின் பகல் இரவு தாக்குதலின் அதிக்கிரமிப்பினால் ஆட்டங்கொண்டு நடுநடுங்கிக் கொண்டிருக்கின்றன.

"யுத்தத்தின் பூராவும் நமது நகரங்களின் மேல் ஜெர்மனி போட்ட வெடிகுண்டுகளின் இடையில் சுமாராகப் பாதி எடையுள்ள வெடிகுண்டுகளை ஜெர்மனிபேரில் சென்ற சிலவாரங்களில் மட்டும் நாம் போட்டிருக்கிறோம். இது தான் ஆரம்பம் இனி இன்னும் வலுக்கும்."—சர்ச்சில், ஜுலை 14, 1941.

ருஷ்யாவில் அகப்பட்டுக்கொண்ட கோயரிங், பிரிடன் பேரில் தாக்க சில விமானங்களைமட்டும் எப்பொழுதாவது அனுப்பக்கூடியதாக யிருக்கிறது.

சென்ற (ஜுலை, ஆகஸ்டு மாதங்களில்) நாலு வாரங்களிலும் பிரிடன் பேரில் வந்த ஜெர்மன் பாம்பர்களின் மொத்த எண்ணிக்கை 300-க்கு மேல் இல்லை.

ஒவ்வொரு இரவிலும், ஜெர்மனிமேல் எதிர்க்கும் பிரிடிஷ் பாம்பர்களின் மொத்த எண்ணிக்கை 300-க்கு அதிகம்.

ருஷ்ய விமானப்படை ருமேனியாவிலுள்ள ஜெர்மனியின் எண்ணெய்க் கிடங்குகளைத் தாக்கி பிரசித்திபெற்ற ஜயம் அடைந்தபிறகு பெர்லின் பேரில் வெடிகுண்டுபோட ஆரம்பித்துவருகிறது. (ஆகஸ்டு 7, 1941.)

2. பிரிடன் பேரிலும், ருஷ்யா பேரிலும் லுப்ட்வாபி பொடியாக்கப்பட்டு சிதரடிக்கப்பட்டது. 1941-ம் வரு மே, ஜுன், ஜுலை.

இந்த மூன்று மாதங்களில் விமானங்களின் நஷ்டம் :—

கிழக்குப் போர்முனை—ஜெர்மனி 6,000;
ருஷ்யா 4,000;



### 1940—தொடர்ச்சி.

...ப் பிரதேசங்களிலும், ...ரான்ஸிலும் நடந்ததைக் ...வனிக்க அவர் வாதத்தை ...ப்புக்கொள்ள வேண்டிய ...ரகத் தோனிற்று.

...) கடலில் சண்டை.

1. ஜெர்மன் படையெடுப்பு ...ட்டங்கள் தவறினவுடன் ...ட்லாண்டிக்கில் யுத்தம் ...டந்தது. 'யூ' படகுகளும், ...வடிகுண்டு கப்பல்களும், ...ரங்கிப்படகுகளும், பிரிடிஷ் ...ப்பல் போக்குவரத்து ...ாதனத்தைக் குறைத்து, ...ிடனைப் பொருளாதார ...ற்றுகைபோட்டு, கீழ்ப்படி ...ம்படி செய்துவிட்டன.

2. பிரிடிஷ் பொருளாதார ...முற்றுகையை ஹிட்லர் இகழ் ...ிறார். தனக்குத் தேவை ...யானதை ஐரோப்பா கொடுக் ...குமென்று எண்ணினார்.

### 1941—தொடர்ச்சி.

மற்ற போர்முனைகள்—ஜெர்மனி 938;
இதாலி 119;
பிரிடிஷ் 661.

31—7—41-வரை யுத்த ஆரம்பத்திலிருந்து பிரிடிஷ் விமானப்படை அச்சநாடுகளின் 8,252 விமானங்களை அழித்துவிட்டன.

(c) கடலில் சண்டை.

1. பிரிடிஷ் கப்பல்கள், நேசதேசத்தார்களின் கப்பல்கள், நடுநிலை தேசத்தார்களின் கப்பல்கள் இவைகள் எல்லாம் சேர்ந்து இழந்தது. 1941-ம் வரு ஜுன்மீ முடிய மாதம் ஒன்றுக்கு 3,24,000 டன்கள் கூடுதலாகின்றன.

ஆனால் பிரிடிஷ் துறைமுகங்களுக்கு ஆயிரக்கணக்கான கப்பல்கள் உணவுப் பொருள்களும், யுத்த தளவாடங்களும் இன்னும் பத்திரமாய் கொண்டுவந்து சேர்க்கின்றன.

யுனைடெட் ஸ்டேட்ஸிலும், கனடாவிலும், பிரிடிஷ் கப்பல்கட்டுமிடங்களிலும் கப்பல்கட்ட போடப்பட்டிருக்கிற பெரிய திட்டம், நஷ்டமடைந்த டன்களுக்கு ஈடுசெய்ய உதவியாகிறது. அவசியமில்லாத இறக்குமதிகளைக் குறைத்ததில் கப்பல்களில் இடவசதி ஏற்பட்டிருக்கிறது.

'யூ'படகுகள் மூழ்கடிக்கப்பட்டது திருப்தியளிப்பதாகக் கப்பற்படைத் தலைவர் கூறுகிறார். பிரிடிஷ் விமானப்படையால் நெடுந்தூரம் வெடிகுண்டு போடக்கூடிய படகுகள் தகர்க்கப்பட்டன. பிஸ்மார்க் மூழ்கடிக்கப்பட்டது. ஷான்ஹார்ஸ்டு, நீஸ்னௌ, பிரின்ஸ் யுஜென் இவைகள் பிரிடிஷ் விமானப்படையின் பாதுகாப்பினாலும், குறிபார்த்து வெடிகுண்டு போடும் தன்மையாலும், அசையவொட்டாமல் ப்ரைஸ்டு கப்பல் துறையில் இருக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றன.

2. ஐரோப்பாவில் தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தாலும், வெடிகுண்டு போடுவதினாலும், ஜெர்மன் படையெடுப்புக்கு ரயில் வண்டிகள் உபயோகப்படுத்தப்பட்டு வருவதினாலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால்

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம். ஆகஸ்டு 25—31, 1941.

### இரான் வாரம்.

"நடுநிலை வகிக்கும் முஸ்லீம் நாட்டை ஆங்கில-ஸோவியத் படையெடுத்தது உலக சரித்திரத்திலேயே ஒரு பெரும் குற்றம் ஆகும். இது ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் சந்தித்ததின் பயனாகும்........ஸிரியா, லெபனன், இராக் போன்ற முஸ்லீம் நாடுகளின் ஸ்வதந்திரத்தை பிரிடிஷார் பிடுங்கி விட்டனர்.

மனித வர்க்கத்தின் விரோதிகளான இவர்களை ஜெர்மனி சீக்கிரம் தோற்கடித்து சரியான தண்டனை விதிக்கும்".

(பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 2(.)

1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் ஜெனரல் டிகால் டாக்கரில் செய்த, செய்கைகளைப்பற்றி பெர்லினில் சொல்லும்போது "சர்ச்சில் உலக சரித்திரத்திலேயே பெரும் குற்றத்தைச் செய்திருக்கிறான்" என்று சொல்லப்பட்டது. இதற்குமுன் செய்த "அதிகக் கடுமையான குற்றங்களை"யும் சர்ச்சில் செய்ததாகவே ஜெர்மனி சொல்லிற்று. அவை அதீனியா ஸிடி ஆப்பெனிஸ் போன்ற பிரிடிஷ் கப்பல்களை மூழ்கடித்ததும், மூயுனிச்சிலுள்ள சாராயக் கிடங்கை உடைத்ததும் பக்கிங்ஹாம் அரண்மனையை குண்டுகளால் தாக்கியதும்தான். ஜெர்மனியின் கருத்துப்படி இவை தன்னுடைய குற்றங்கள் ஆகாது போல் இருக்கிறது.

இராக்கில் எதிரிக்கு உதவும் கலகக்காரர்களை அடக்கிவிட்டு அதன் ஸ்வதந்திரமும் அரசாங்கமும் முன்போல ஸ்தாபிக்கப்பட்டது. இது பிரிடிஷ்காரர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாகும். ஸிரியாவிலும் லெபனிலும் பிரிடன் ஒருவிதமான அதிகாரத்தையும் செலுத்தவில்லை. அதனால் ஸிரியாவின் ஸ்வதந்திரத்தைக் காப்பற்றுவதாகச் சொன்ன பிரீ பிரெஞ்சுக்காரரின் வாக்குறுதிகளைத்தான் அதிகம் அங்கீகரித்ததாகும்.



### தோல்விக்குப் பிறகு உளருதல்.

"முஸ்லீம் நாடான இரானை பிரிடிஷ் பார்லிமெண்டார் பொருளாதார நிறுகையினால் கட்டுப்படுத்திய காலச் சால்லிவிட்டார்கள்".

பர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 27.)

இம்மாதிரி முற்றுகை போடப்படவில்லை. ஆனால் இரானுடன் லைஸென்ஸ் பேரில் வியாபாரம் தொடங்கி, இரானுக்குப்போகும் சாமான்கள் நாஸி வசம் ஆகாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

இரானில் முக்கியமான "தொழிற்சாலைகளில் வேலைபார்த்ததிற்கு" கூலியாக கோதுமை முதலிய ஆகாரப் பொருள்களை ஜெர்மனிக்கு எடுத்துச் சென்றதால்தான் இரானியருக்குக் கஷ்டமும், பட்டினியும் வந்திருக்கின்றன. பிரிடிஷ்காரர்கள் சென்றதும் வண்டிகளில் ஆகாரங்களை அனுப்பினார்களே தவிர அங்கிருந்து ஏற்றிச்செல்லவில்லை. இது அங்கிருந்து எடுத்துச் சென்ற ஜெர்மானிய சைனியங்களின் வழக்கத்துக்கு விரோதமாகும்.

"இரானில் ஆங்கில-ஸோவியத் ஏற்பாட்டைப்பற்றி பாலஸ்தீனத்தில் உள்ள யூதர்கள் அதிக திருப்தியடைந்தார்களாம். இஸ்லாம் மதத்தைக் குறித்து யூதர்களுக்குள்ள அபிப்பிராயம் யாருக்குத்தான் தெரியாது? அவர்கள் வேறுவிதமாக எப்படி நினைக்கக் கூடும்?"

(அராபிக் பாஷையில், இதாலியச் செய்தி, ஆகஸ்டு 27.)

"இஸ்லாம் மதத்தைக் காப்பாற்று"வதாகச் சொல்லும் இதாலியர் பாலஸ்தீனத்திலுள்ள பாலஸ்டைன் என்ற அராபிக் பத்திரிகை செய்த பெரும் பிரசாரத்தைத் தடுக்கச் செய்த தந்திரமாகும்.

அப்பத்திரிகையில் "நேச நேசங்கள் இரானில் சென்றது அவர்கள் நிர்மானமான தீவிர நடவடிக்கையைக் காண்பிக்கிறது. ஆங்கில-ஸோவியத் முஸ்திப்பு இரானின் அரசாங்கத்தைப் பாதிக்கவில்லை" என்று இருந்தது.

V V V V V V V V V V V V V

### விமான யுத்தத்தின் விதங்கள்.

"பிரிடிஷ் சைனியம் இரானைத் தாக்கியது. பிரிடிஷ் விமானங்கள் இரானியப் பட்டிணங்களில் குண்டுகள் எறிந்தன. கிட்டத்தட்ட 3,000 சிப்பாய்

நாஸிகள்தான் பாதுகாப்பில்லாத பெல்கிரேட் பட்டிணத்தில் முதலில் யூகோஸ்லாவிய ஜனங்களை குண்டுகளால் தாக்கினார்கள். இப்படிச் செய்யாமல்

### 1940—தொடர்ச்சி.

### 1941—தொடர்ச்சி.

கடல் மார்க்கம் ஸப்ளைகள் அனுப்ப வேண்டிய நிர்பந்தம் ஜெர்மனிக்கு உண்டாயிருக்கிறது.

பிரிடிஷ் விமானப் படையின் கரை பாது காப்புப் பகுதியின் தொடர்ந்து சராசரியாக நான் ஒன்றுக்கு ஒரு கப்பலை மூழ்கடித்தும், ஒரு கப்பலைச் சேதப்படுத்தியும் வருகிறது.

ராட்டர்டாம்பேரில் ஒரு பகல் தாக்குதலில் (ஜுலை 16, 1941) பாம்பர்விமானப் படைப்பகுதி, ஜெர்மன் 'யூ' படகுகள் பீரங்கிப்படைகள், பாம்பர்கள் எல்லாம் சேர்ந்து 10 நாட்களில் இரவிலும், பகலிலும் மூழ்கடித்ததைப் போல அவ்வளவு கப்பல்களை அழித்து விட்டது.

பிரிடிஷ் தாக்குதல்களினால் ஐரோப்பா நாடுகளின் துறைமுகங்களில் 212 அச்சு நாடுகளின் வியாபாரக் கப்பல்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

### (D) இறுதியில்.

பிரான்ஸ் வீழ்ப்படிந்தவுடன் சீக்கிரம் தனக்கு ஜயம் கிடைக்குமென்று நம்பி 1940-ம் வருஷ கிறிஸ்துமஸ் டயத்துக்குள் சமாதானம் ஏற்பட்டுவிடும் என்று ஹிட்லர் ஜெர்மானியர்களுக்கு வாக்களித்தான்.

அவனுடைய படையெடுப்பு திட்டம் தடைப்பட்டவுடன் 1941-ல் சமாதானம் ஏற்படுமென்று ஒத்திப்போட்டான்.

1941-ம் வருஷம் வஸந்த காலத்தில்தான் "அடுத்த வருஷத்தில்" ஜயம் என்று பேச ஆரம்பித்தான்.

அதன் பிறகு ருஷ்யப் படையெடுப்பிலிருந்து ஜயம்

### (D) இறுதியில்.

சர்ச்சில் இம்மாதிரி ஜோஸ்யம் சொல்லுகிறதில்லை. ஆனால் (11—6—41)ல் நேசதேச அரசாங்கங்களுக்குச் சொல்வதாவது:—

"நமக்கு எப்படி விடுதலை வரும், எப்போது வரும், என்று நம்மால் சொல்லக்கூடவில்லை. ஆனால் ஹிட்லர் கைபட்ட இடமும், கால்பட்ட இடமும் சுவடுகள் இல்லாதபடி ஒவ்வொன்றும் நன்றாகக் கழுவப்பட்டும், அவசியமானால் தகர்க்கப்பட்டும், அவ்வடையாளங்களை அழித்து விட்டு உலகம் சுத்தப்படுத்தப்படும் என்பதற்குச் சந்தேகமேயில்லை."

ஹிட்லரின் மனக்கோட்டைகள் முடிவதற்குமாறாக மனோபலம், ராணுவபலம் கொண்ட பிரிடன், நிலையான இருளைப்போக்கடித்து பொழுது விடியும் நேரத்லைத நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.



ந காலத்தில் வரலாம், ஒருக்ல் வராமல் இருந்துடுமோ என்று தோன்றிட்டது.

### வித்தியாஸம்.

"ஜெர்மானியர்கள் தாங்கள்தான் ஜயிக்கப்போவதாக நம்பிக்கையுடன் ருக்கிறார்கள். அவர்கள் அவ்விதம் பலத்த குரலில் வெளியிடுகிறார்கள். இவ்தம் அவர்கள் பெருமைப்படுத்தி பேசுவதை எவ்விதம் நீங்கள் அனுபவக்கிறீர்ள் என்பதை ஆழ்ந்து மாறுமல் கவனிக்கிறார்கள். வெளியிலுள்ள உலகத்தார்ள் அவர்களுக்கு வரப்போகும் சந்தர்பத்தைப் பற்றி எப்படி மதிக்கிறார்கள் ன்று கேட்க ஆவலாக இருக்கிறார்கள்."

"பிரிடிஷ் மக்கள் முடிவில் தாங்கள்தாம் ஜயிப்போம் என்று எண்ணி நடந்து கொள்ளுகிறார்கள். அயல் நாட்டு மந்திரி முதல் ஒரு சாப்பாட்டுக் கிளப்பிலுள்ள மை தூக்கிவரை எல்லா மனிதர்களும் ஜெர்மனியிலிருந்து நேராக வரும் தேச ஞ்சாரியிடமிருந்து ஜெர்மானியர்களைப் பற்றிய சமாசாரத்தைக்கேட்க ஆவலுள்ள ர்களாக இருக்கிறார்கள். ஆனால் பிரிடிஷாருக்குள்ள சந்தர்பங்களைக் குறித்து றிதும் லக்ஷியம் செய்யவில்லை."

"நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகையில் அனி-ஓஹாரா மக்கார்மிக் எழுதியது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 61—(4-வது பிரிவு).

1941—

| | | | மணி. |
|---|---|---|---|
| 13, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 14, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | கீரப்பழனி ... | ,, | 6.00 |
| | ஆலூர் ... | ,, | 6.30 |
| 15, திங்கட்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 16, செவ்வாய்க்கிழமை | காரையூர் ... | ,, | 6.00 |
| | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| 17, புதன்கிழமை ... | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | மழையூர் ... | ,, | 6.30 |
| 18, வியாழக்கிழமை. | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 19, வெள்ளிக்கிழமை... | (பொன்னமராவதி) புதுப்பட்டி | மாலை | 6.00 |
| | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |

———

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—13-9-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ செப்டம்பர் ௴ 20௳ [ந. 62.

பிரஸங்கம் LXII.

## டாக்டர் கோயபல்ஸின் உண்மை வாக்கியம்.

———

### பி. பி. ஸி. ஒலிபரப்புகள் எவ்வாறு ஜெர்மானியர்களை பாதிக்கின்றன.

### ஹிட்லரின்பேரிலுள்ள நம்பிக்கைகள் வேரறுக்கப் படுகின்றன.

### பிரிட்டிஷார் கொடுக்கும் விஷம் வேலைசெய்கிறது.

(பி. பி. ஸி.-யில் விக்ஹாம் ஸ்டீட் சமீபத்தில் பேசியது.)

சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய பேர்போன கட்டுக்கதைகளின் ஒன்றில் பேர் போன போக்கிரி ஒருவன் தோன்றுகிறான். அவன் ஒரு முழுப் பொய்யைச் சாதிக்க வாக்குமூலம் கொடுக்கும்பொழுது "ஆணைப்படிக்கு நிஜம்தான்" என்று அழுத்தம் திருத்தமாகக் கொஞ்சமும் தடங்காமல் சொன்னான்.

பேர்போன நாஸி பிரசார மந்திரி டாக்டர் கோயபல்ஸைப் பார்த்தால் எனக்கு அவன் ஞாபகம் வருகிறது. சமீபத்தில் வெளிவந்த 'சமாசாரப் பத்திரி கையில், அவன் கையெழுத்துப் போட்ட பத்திரிகையின் கட்டுரையில் வந்த சங்கதியில் சண்டை ஆரம்பமுதல் ஜெர்மன் பத்திரிகாலயத்திலும், ரேடியோ விலும் உண்மையையே சொல்லி, உண்மையைத் தவிர வேறொன்றும் சொல்லக் கூடாதென்றும் கண்டிப்பான உத்தரவுகள் போட்டிருப்பதாக அவன் துணிந்து எழுதியிருக்கிறான்.

களும் பொதுஜனங்களும் இறந்தாக இரானிய அரசாங்கத்தார் அறிந்தனர்."
(ஹிந்துஸ்தானியில், ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 30).

இரானில் பிரிடிஷார் வெறும் துண்டுக் கடுதாசிகளைப் போட்டனர். விமான நிலயங்களைக் காபந்து செய்தனர். ஒரு பட்டினமாவது தாக்கப்படவில்லை! ஒரு இடத்திலாவது சைனியம் சேதப் பட்டதாகச் சொல்லப்படவில்லை. பொதுஜனங்களும் சிப்பாய்களும் பொதுவாக இறந்ததாக புளுகுவது தான் நாஸிகள் விமான யுத்தத்தைப் பற்றிக்கொண்ட அபிப்பிராயம்.

## வியாக்கியானம் இல்லாமல்.

"(செக்கோஸ்லோவியாவிலுள்ள) பொஹிமியா, மொரேவியா என்ற பட்டினங்களில் அமைதியாக ஜீவனம் செய்கின்றனர். எப்போதையும்போல் எல்லாம் ஒழுங்காக நடக்கிறது. பொதுமக்களின் சௌகரியத்தை உத்தேசித்து எல்லா கட்டுப்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன."



# கதம்பம்.

1. "இந்தியா ஜாக்கிரதையாக இருக்கிறது; பலமான தற்காப்புகள் இருக்கிறது; வேண்டுமானால் இன்னும் அதிகமாக பலம்பெறும்."

(ஸிம்லாவிலிருந்து யுத்தத்தின் இரண்டாவது வருஷம் முடிந்த சமயத்தில் மேன்மை தங்கிய வைஸிராய் ஒலிபரப்பியது, ஸெப்டம்பர் 3).

2. "இதற்குமுன் எதிரிகளுக்கு நஷ்டம் இரண்டுமடங்கு மூன்று மடங்கு அதிகமாகச் சொன்னதில் இப்பொழுது எதிரி பத்துப் பன்னிரண்டு மடங்கு அதிகமாகச் சொல்லுகிறான். இது நமக்குச் சாதகம்தான்."

(ஜெனரல் ஸர். ஆர்ச்பால்டு வேவல் ஸிம்லாவிலிருந்து ஒலிபரப்பியது, ஸெப்டம்பர் 3).

3. "பிரிடன், ருஷ்யா இவைகளின் முடிவான நன்மைக்கு இரான் ஸ்வதந்திரத்துடன் இருக்கவேண்டும்."

(லண்டனிலுள்ள "எகனமிஸ்ட்" பத்திரிகை, ஆகஸ்டு 29).

4. "துருக்கிக்கு, தனக்கு வசப்பட்ட நாடுகள் வழியாக தரைமார்க்கமாக சாமான்களை ஜெர்மனி அனுப்பமுடியாமல் இருக்கிறது. 12,000 மைல் தூரத்தில் பயங்கரமான கடலுக்கு அப்பால் இருந்தாலும் பிரிடன் அதிகச் சாமான்களை அனுப்பமுடிகிறது. இது ஒரு பெரும் விஷயம்."

(மிஸ்டர் ரிச்சர்டுடிம்பிள், பி. பி. பி. ஸி-யில் பேசியதை அங்காராவில் ரிகார்டு செய்யப்பட்டது, ஆகஸ்டு 28).

5. "ஆயுதம் குறைவானாலும் ஜனங்கள் தைரியமாக இருந்தால் வெற்றி பெறலாம்."

(மிஸ்டர் ஆர். ஜி. மென்ஸீஸ், ஆஸ்திரேலியா முந்திய பிரதம மந்திரி 'டெயிலி மெயிலில்' எழுதியது, ஸெப்டம்பர் 1).

6. "இவ்வருஷத்தோடு உலக சரித்திரத்திலேயே கடுமையான வருஷம் முடிந்துவிட்டது."

(மிஸ்டர் மெக்கன்ஸி கிங், கனடா, பிரதம மந்திரி ஒலிபரப்பியது, ஸெப்டம்பர் 1, 1940).

பிறகு தவறுதலாக ஏற்பட்ட அற்புதத்தால் அவர் உண்மையையே நேரே சொல்லத் தொடங்கினான். லண்டனிலிருந்து பி. பி. ஸி. ஒலிபரப்புகளைக் கேட்ட குற்றத்திற்கு மரண தண்டனை பிறப்பிவித்திருப்பதாக பிரசுரம் செய்துவிட்டு பின்வருமாறு சொன்னான்:—

இந்த ஒலிபரப்புகளிலுள்ள விஷம் அவைகளைக் கேட்டவுடன் ஜெர்மானியர்களின் மனப்பான்மையை பாதிக்கநேரிடும். ஆனால் சில ஜெர்மானியர்கள் ஒலிபரப்புகளைக் கேட்டாலும் பிரிடிஷாரின் விஷம் தங்கள் மனதில் பரவாதபடி தங்களுக்கு மனோபலம் உண்டென்றும் நினைக்கலாம். அது தவறு. விஷம் உள்ளே பரவி ஹிட்லரின் மேலுள்ள நம்பிக்கையை வேரறுத்துவிடும்.

## பிறகு அடியில்கண்டவிதம் உண்மை வெளிப்பட்டது.

"ஜெர்மானியர்கள் ஹிட்லரின்பேரிலுள்ள நம்பிக்கையை இழந்தால் அவர்கள் சண்டையில் தோல்வி யடைவார்கள்" என்று டாக்டர் கோயபல்ஸ் எழுதியிருக்கிறார்.

அவர் சொன்னது உண்மையில் எனக்கு மிகவும் விந்தையாகவே யிருக்கிறது. லண்டனிலிருந்து இங்கிலீஷிலோ, ஜெர்மன் பாஷையிலோ வெளிவரும் பி. பி. ஸி. ஒலிபரப்புகளை, ஜெர்மானியர்கள் கேட்டதில் ஏற்கனவே அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவைச் சேர்ந்த கொலம்பியா ஒலிபரப்புச் சங்கத்தின் சார்பாக சென்ற டிஸம்பர் மாதமுடிய ஜெர்மனியிலிருந்த பிரதிநிதி மிஸ்டர் ஷைரர் சமீபத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸில் வெளிவந்திருக்கும் பேர்போன "பெர்லின் டைரி" யில் இரண்டு உதாரணங்கள் கொடுத்திருக்கிறார்.

ஒன்று இங்கிலாந்தின் பேரில் விமானத் தாக்குதல்களில் காணாமற்போனதாகக் கருதப்பட்ட ஜெர்மன் விமானியின் தாயாரைப் பொருத்த விஷயம். அவன் இறந்துபோனதாக அவளுக்கு ஸர்க்காரால் அறிவிக்கப்பட்டது. ஆனால் லண்டனிலிருந்து ஜெர்மன் பாஷையில் பி. பி. ஸி. ஒலிபரப்பில் ஒவ்வொரு வாரமும் கைப்பற்றப்பட்ட ஜெர்மன் கைதிகளின் ஜாபிதா பிரசுரிக்கப்பட்டுவருகிறது. ஏதோ ஒரு வாரம் பிரசுரம் செய்யப்பட்ட ஜாபிதாவில் ஜெர்மன் விமானியின் பெயரும் கண்டிருந்தது.

அவன் தாயாரின் சிநேகிதர்களில் எட்டுப்பேர் இந்த சந்தோஷ சமாசாரத்தைக் கேட்டு அவளுக்கு எழுதினார்கள். அவள் உடனே நாக்கில் நரம்பில்லாமல் தன் சிநேகிதர்களை ஜெர்மன் அரசாங்கத்தினிடமும் ரகசிய போலீஸாரிடமும் பி. பி. ஸி. ஒலிபரப்பில் கேட்ட குற்றத்திற்காகக் காட்டிக் கொடுத்துவிட்டாள். அவர்கள் எல்லோரும் கைதி செய்யப்பட்டனர்.

மிஸ்டர் ஷைரர் என்பவர் தன்னுடைய ஒலிபரப்பில் இந்த விஷயத்தை பெர்லினிலிருந்து யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு ஒலிபரப்பப் பிரயத்தனப்பட்டார். ஆனால் ஜெர்மனியின் குணதோஷ விவேசிய அதிகாரி அந்த ஜெர்மன் தாயாரின் வீரச் செயலை யுனைடெட் ஸ்டேட்ஸில் மெச்சமாட்டார்கள் என்று சொல்லி அதைத் தடுத்துவிட்டார்.



இரண்டாவது சந்தர்ப்பம் ஒரு ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பலிலுள்ளவன் அந்தக் கப்பல் முழுகினவுடன் ஜெர்மன் அதிகாரிகளுக்குத் தெரியாமல் பிரிடிஷ் மாலுமிகளால் காப்பாற்றப்பட்டான்.

அவன் பெற்றோர்களுக்கு அவன் இறந்துவிட்டதாக ஜெர்மன் அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள். அதற்காக அவர்கள் மாதா கோவிலில் சவச் சடங்குக்கு ஏற்பாடுசெய்தார்கள். சடங்கு நடப்பதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன் அநேக வர்த்தகர்களும், சிநேகிதர்களும் பி. பி. ஸி-யில் வெளிவந்த கைதிகளின் ஜாபிதாவில் அவர்கள் மகனின் பெயரும் அடங்கியிருப்பதாக அவர்களுக்குச் சொன்னார்கள்.

குடும்பத்தார்கள் எல்லோரும் கலந்து யோசித்துக்கொண்டு சவச் சடங்கு நடத்தாமல் போனால் அந்த வர்த்தகர்கள் பேரிலும் சிநேகிதர்கள் பேரிலும் சந்தேகம் ஏற்படுமென்று சவச் சடங்கை நடத்துவதாகவே தீர்மானித்துவிட்டார்கள். சவச் சடங்குக்குப் பிறகு அவன் பிழைத்திருப்பதைக் குறித்து ரகசியமாக கொண்டாட்டத்தையும் கொண்டாடினார்கள்.

நிஜமே சொல்லமுடியாத அதிமோசக்காரனாக இருந்தபோதிலும் டாக்டர் கோயபல்ஸ் பேரில் என்னை அறியாமலே ஒரு மதிப்பு ஏற்படுகிறது. அது எப்படி யென்றால் சாமர்த்தியமாகக் கொலை செய்தவனுடைய புத்திசாலித்தனத்தை நாம் மெச்சுவது போலிருக்கிறது. சில சமயம் அவன் பிசகு செய்துவிட்டால் கையும் களவுமாய் பிடிபட்டுவிடுவதினால் அவன் முன் ஜாக்கிரதையுடன் இருக்க முடியாமல் போய்விடுகிறது.

உதாரணமாக ருடால்ப் ஹெஸ் ஸ்காத்லாந்துக்கு பறந்துவந்த சமாசாரத்தை முற்றிலும் உளறிவிட்டான். முன்பின் விரோதமாக ஒரு சிறுகாலத்திற்குள் அதே விஷயத்தை ஐந்து அல்லது ஆறுவிதமாகப் பிரசுரித்தான்.

இதைப்பற்றி முதலில் வந்த செய்தி ஹிட்லர் கட்டிவிட்ட அபாண்டப் புளுகு. இந்த முடிச்சை டாக்டர் கோயபல்ஸ் அவிழ்த்துவிட நேரிட்டது. இதிலிருந்து ஜெர்மன் பொதுஜனங்கள் வியப்படைய நேரிட்டுவிட்டது.

இப்பொழுது பிரிடிஷ் ஒலிபரப்புகளை கேட்கக்கூடிய அபாயகரமான வழக்கம் ஜெர்மனியில் பரவி விட்டதாகத் தெரிகிறது. ருஷ்யப் படைகளைத் தகர்த்து 6 வாரங்களில் மாஸ்கோவைக் கைப்பற்றாமல் ஹிட்லர் தவறிப்போனதினால் உண்மையில் என்ன நடந்திருக்கிறதென்று தெரிந்துகொள்ள ஜெர்மானியர்கள் முந்தியைக்காட்டிலும் அதிக ஆவல் கொண்டிருக்கிறார்கள். கோயபல்ஸிடம் அவர்கள் நம்பிக்கையை இழக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஹிட்லரிடமுள்ள நம்பிக்கையை அவர்கள் இழந்துவருவதற்கு இது ஒரு மாத்திரைதான் குறைவு.

மேலும் கூடிய சீக்கிரத்தில் சமாதானம் ஏற்படப் போவதாக ஜெர்மானியர்களுக்குச் சொல்லிவரப்பட்டது. ருஷ்யா தோற்கடிக்கப்பட்டவுடன் சமாதானப் பிரசாரம் செய்ய கோயபல்ஸ் தயாராக இருந்துவந்தார்.

ஆனால் ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலும் முதலில் முந்திக்கொண்டு சமாதானக் கொள்கையைத் தாக்கி வருகிறார்கள். ஆகவே

ஹிட்லர் திட்டங்கள் மறைக்கப்பட்டுவிட்டன. அமெரிக்க பிரிடிஷ் தலைவர்களும் "நாஸிக் கொடுமை முற்றிலும் அழிந்த பிறகு" சமாதான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பேசிவருகிறார்கள்.

இப்பொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்டு அமெரிக்கச் சபையில் இனியும் ஜெர்மனியுடன் ராஜி செய்துகொண்டால் நாஸியர்களுக்கு இளைப்பாற அவகாசம் கொடுத்து மீண்டும் இரண்டாம் தடவை ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா குடகோளத்தை ஜயிப்பதற்குப் பலப்படுத்திக் கொள்ளுமென்றும், அதனால் அசுரனுடன் சமாதானமே கிடையாதென்றும் கூறுகிறார்.

இதை ஹிட்லரும் கோயபல்ஸும் கேட்க அவர்களுக்குத் திருப்தியளிக்காததுதான். அவர்கள் தங்கள் உயிருக்குப் பயப்பட ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். ஆனால் ஜெர்மானியர்கள் பிரிடிஷ் ஒலிபரப்புகளைக்கேட்டு ஹிட்லரும், நாஸி கொடுமையும்தான் சமாதானமேற்பட தடையாக இருக்கிறதென்று எண்ணிக்கொண்டால், நாஸிக் கொடுமை இல்லாமல்போனால் தங்களுக்கு நன்மை ஏற்படாதா என்று சந்தேகமும் ஜனிக்கக்கூடும்.

இம்மாதிரி சந்தேகம் பரவ ஆரம்பித்திருப்பதாக கோயபல்ஸ் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். இதனால்தான் பி. பி. ஸி-யின் விஷத்தன்மையான ஒலிபரப்புகளைக் கேட்கும் ஜெர்மானியர்களின் தலைகளைச் சேதம் செய்து விடப்படும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. இதனால்தான் ஹிட்லரின்பேரிலுள்ள நம்பிக்கையை இழந்தால் சண்டையில் தோற்றுவிடுவார்கள் என்ற வியாக்கியானமும் கோயபல்ஸ் சொல்லியிருக்கிறான்.

டாக்டர் கோயபல்ஸின் கட்டுரையை நான் வாசித்தபொழுது ஏற்கனவே நடந்த சம்பவம் ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. இப்பொழுது அதை ஞாபகமூட்டிக்கொண்டதில் சரித்திரத்தில் இவனுக்கிணையாக ஒருவன் இருப்பதாகத் தெரிந்தது.

1918-ம் வருஷம் கோடைகாலத்தில் ஜெர்மன் போர்முனையில் தினந்தோறும் கோடிக் கணக்காக பிரசாரப் பத்திரிகைகளைப் போட்டோம். ஒருநாள் ஒரு பக்கத்தில் போர்முனையையும், ஜயிக்கப்பட்டதும், தோற்கப்பட்டதுமான இடங்களைக் கண்டு படமும், விவரமும் இந்தப் பிரசாரப் பத்திரிகைகளில் கண்டிருந்தன. சைனியங்கள் படிக்கக்கூடாதபடி தடுக்கப்பட்ட பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகளும் அதில் அச்சடிக்கப்பட்டிருந்தன.

கொஞ்சம் கொஞ்சமாக ஜெர்மன் போர்வீரர்கள் இந்த பிரசாரப் பத்திரங்களை தினசரி பத்திரிகைகள்போல படிக்க ஆரம்பித்தார்கள். தங்கள் போர்முனையில் நடக்கும் சம்பவங்களின் உண்மை அவைகளில் இருப்பதாகக் கண்டுகொண்டார்கள். இந்த உண்மை என்ற விஷம் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மனதில் பட்டது. 1918-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் வான்ஹின்டன்பர்க்கும் 6-வது ஜெர்மன் படைத் தலைவனும் செய்த பிரகடனங்கள் கோயபல்ஸின் பிரகடனப்போலவே இருக்கிறது.



கோயபல்ஸைப் போலவே ஹின்டன்பர்க்கும் கீழ்கண்டபடி பிரசுரம் செய்திருக்கிறார். "எதிரி ஜெர்மானியரின் உத்ஸாகத்திற்கு எதிரே சண்டை துவக்கியிருக்கிறார். அந்த உத்ஸாகத்தில் விஷ மூட்டிவிட்டால் ஜெர்மன் யுத்தம் மழுங்கிப் போகும். உயிர்களை மாய்க்க வெடிகுண்டு போடுவதோடுகூட தைரியத்தையும் அழிக்க எதிரி பிரசாரப் பத்திரிகைகளைப் போடுகிறான். இந்த விஷம் போர்முனையிலிருப்பவர்களுக்கும், விடுமுறையிலிருப்பவர்களுக்கும் பரவி வேலை செய்கிறது. எதிரி மேலும் ஜெர்மானியர்களுக்கு "உங்கள் அரசாங்கம் முறை பிசகு; நல்ல விதமான அரசாங்கத்தை உங்களுக்கு ஏற்படுத்துவதற்கு எங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்றும் சொல்லுகிறான். ஜெர்மன் பத்திரிகைகளில் எதிரியின் பிரசங்கங்களை எழுத அனுமதிப்பது நம்முடைய பலத்துக்கு ஒரு அறிகுறியாக இருந்த போதிலும், எதிரி கொடுக்கும் விஷம் நமக்குள் பரவச் செய்வது நம்முடைய தளர்ச்சிக்குக் காரணமென்றும் சொல்லியிருக்கிறார்.

ஆறுவது ஜெர்மன் படையின் தலைவன் "பொருளாதார முற்றுகையினாலும் எண்ணிக்கைப் பலத்தினாலும், ஆயுத பலத்தினாலும் நம்மைத் தோற்கடிக்க முடியாதென்று எதிரி தெரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறான். அவர்கள் கடைசி முறையாக ஜெர்மானியர்கள் மனதில் எதிரியின் தோற்கடிக்கப்படாத தன்மையை சந்தேக முண்டாக்க இம்முறையைக் கையாண்டிருக்கிறான். எதிரியினுடைய எண்ணமும், நோக்கமும் தங்களைக்கூட பொருட்படுத்தாமல், தங்கள் தலைவர்களின்பேரிலும், பலத்தின்பேரிலும், குறைவுபடாத பொருள் ஆதார நிலைகளிலும் உள்ள நம்பிக்கைகளில் சிறிது காலத்திற்காகவாவது சந்தேகம் உண்டாக்க இந்தப் பிரசாரப் பத்திரிகைகள் போடப்படுகிறது" என்று சொல்லியிருக்கிறார்.

இது 1918-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் நடந்தது. 23 வருஷத்திற்குப் பிற்பட்டும், அதாவது நடப்பிலும் (1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்திலும்) கோயபல்ஸ் இவ்விதமாக ஜெர்மானியர்களுக்குத் தெரிவித்து அவர்களைப் போலவே பயந்து அவர்கள் தலைவரின்பேரிலுள்ள நம்பிக்கையை இழக்கக்கூடாதென்றும், அப்படியிழந்தால் யுத்தத்தில் தோற்றுவிடுவார்களென்றும், இதற்காக பிரிடிஷார் விளைவிக்கும் பொய் பிரசாரமென்ற விஷம் பரவாமலிருக்கும்படி முன் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டுமென்றும் ஜெர்மானியர்களை உறுதியாகச் சொல்லுகிறார்.

1918-ம் வருஷம் அக்டோபர் மாதக் கடைசியில் ஜெர்மன் தலைவர்கள் தாங்கள் யுத்தத்தில் தோற்றுவிட்டதால், சமாதானத்திற்கு ஏற்பாடுசெய்தார்கள். அதே மாதிரியாகவே 1941-ம் வருஷம் அக்டோபர் மாத முடிவில் ஹிட்லரும் அவனுடைய தோழர்களான போக்கிரிகளும், யுத்தத்தில் தோற்றுப்போய்விடுவதாகவும், அதனால் சமாதானத்திற்கு வந்துவிடுவார்களென்றுவது நான் சொல்ல வரவில்லை.

அப்பேற்பட்ட முடிவை எதிர்பார்த்து நாம் சும்மா இருக்கக்கூடாது. ஜெர்மன் சைனியங்கள் ருஷ்யாவின் பலமான பாதுகாப்பை எவ்விதத்திலும் பங்கப் படுத்த மும்முரமாக யுத்தம் புரிகின்றன. கருங்கடலில், ஒடெஸ்ஸாவிற்கு

வடகிழக்கிலுள்ள ஒரு இடத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாரி காலத்திலும் யுத்தம் தொடர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். இன்னும் ஒரு மாதத்திலோ அல்லது ஆறு வாரங்களிலோ ருஷ்யாவில் வரப்போகும் மாரி காலத்தின் கடுமையைத் தாங்குவதற்காக ஜெர்மன் சைனியங்களுக்கு வேண்டிய சாதனங்களைக் கொடுக்க துரிதமாக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இவ்விதமான ஏற்பாடுகள் நடந்துவந்தாலும் ஜெர்மானியர்களின் உத்ஸாகம் ஏமாற்றத்தினாலும், மனத் தளர்ச்சியினாலும் அழிந்துபோகமல் பாதுகாக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்படுமென்று ஹிட்லரும், கோயபல்ஸும் நிச்சயமாக அறிந்திருக்கிறார்கள். இப்படியில்லாமல் போனால் பிரிடிஷ் ஒலிபரப்புகளைக் கேட்கும் குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்படுமென்றும், ஜெர்மானியர்கள் தங்கள் தலைவரான ஹிட்லரின் பேரிலுள்ள நம்பிக்கையைத் தளரவிடக்கூடாதென்றும், அவர்களை டாக்டர் கோயபல்ஸ் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்.

---

# வார யுத்தச் செய்திகள்.

13—9—41-லிருந்து 18—9—41-வரை.

**போருக்கு அழைப்பு.**—கடாசியாக ஹிட்லரை ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போருக்கு அழைத்துவிட்டார். ஆஸ்திரேலிய தொழில் இலாகா மந்திரி மிஸ்டர் கர்டின் பெரிய தேசத்துக்காக பெரியமனிதன் அரும்பேச்சு என்று சொன்னபடி, 11-ம் தேதி ஒலிபரப்பில் ஜனாதிபதி தெளிவாக நாஸிக்கடல் கொள்ளையை அழித்துவிட தீர்மானித்திருப்பதாகச்சொல்லி பிரிடனுக்குச் சாதகமாக உதவிசெய்ய முன்வந்திருக்கிறார். எல்லா அமெரிக்காவிலும் அமெரிக்கர்களுக்குச் சாதகமாக அவ்வாறு செய்யவேண்டியிருக்கிறதென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

**கிருத்திரமும், கடல் கொள்ளையும்.**—தற்சமயம் புதுஉலக விஷயமாக நாஸி யுத்தத்தின் கொள்கை இருவிதம். அவையாவன:—(1) உருகுவே, ஆர்ஜென்டைனா, பொகிரா, கொலம்பியா இந்த இடங்களில் நடந்ததுபோல் ஐந்தாம்படையின் கிருத்திரமும், பொய்பிரசாரமும்; (2) கடல்கொள்ளை. உதாரணமாக கிரீர் சம்பவம்; அது தனி சம்பவமாகவாவது, தற்செயலாகவாவது நேரவில்லை. ராபின்மூர், ஸெஸ்ஸா, ஸ்டீல்-ஸீபேரர் இவைகளைச்சேர்ந்தது. அது நீதிக்குப்புறம்பாகவும், ராஜ்ஜியங்களின் பரஸ்பர சட்டத்திற்கு புறம்பாகவும். அமெரிக்கா தன் வியாபார நிமித்தம் ஏற்படுத்திய கப்பல்களின் பலத்தை அழிக்கவேண்டுமென்றே செய்யப்பட்ட நடவடிக்கை. பிரிடன் அழிந்தபிறகு தங்கள் கப்பற்படை மிஞ்சி இருக்குமென்றும் எண்ணிக்கொண்டிருந்த அமெரிக்கர்களுக்கு கணக்குத் தெரிவது நலம். ஐரோப்பா பூராவும் தூரக்கிழக்கும் நாஸிகள் வசமிருந்தால் யுனைடெட் ஸ்டேட்ஸ் வைத்துக்கொள்ளக்கூடிய கப்பற்படைக்குமேல் அதிகம் நாஸிகள்



சேகரிக்கக்கூடும். அமெரிக்கா சண்டைக்குப்போகவில்லை. ஆனால் அதன் அயல்நாட்டு வியாபாரத்தை ஜெர்மனிக்கு இணங்கிச் செய்ய இஷ்டப்படாது. எச்செலவிலும் கடல்மார்க்கம் மூடப்படாமல் இருக்கவேண்டும். அமெரிக்கா இனிமேல் தன்னைத் தாக்கும்வரை பொருத்திராது. ஆனால் எதிரியைப் பார்த்தமாத்திரத்தில் சுட்டுவிடும். "பாம்பு தலைத்தூக்கினால் அது கடிக்கும்வரை நீ பொருத்திராதே" என்று அமெரிக்க ஜனாதிபதி சொன்னார். 16-ம் தேதிமுதல் அமெரிக்கக் கப்பல் மாத்திரமல்ல; எந்தக் கொடிபறக்கும் கப்பலாய் இருந்தாலும் யுனைடெட் ஸ்டேட்ஸ் பாதுகாக்கப்படும் இடங்களில் வியாபாரத்திற்காக வந்தால், அதற்குப் பாதுகாப்பு அளிக்கப்படும். அமெரிக்காவுக்கு இந்தப் பொறுப்பு புராதனமானது. ஏற்கனவே கரீபியன்கடலிலும், பார்பரிக்கடலிலும், கடல் கொள்ளையில்லாமல் செய்திருக்கிறது.

**பாதுகாப்புள்ள கடல்கள்?**-"யுனைடெட் ஸ்டேட்ஸின் பாதுகாப்புள்ள கடல்கள்" என்பதற்கு நிரூபணம்வேண்டுமென்றே எல்லாவிதத்திற்கும் பொருந்தும்படியாக விட்டிருக்கிறது. முந்தி முன்னூறு மைலாக இருந்தது, இப்பொழுது ஐஸ்லாந்து வரையிலும் வியாபித்திருக்கிறது. நாஸிகள் இன்னும் கடல் கொள்ளையடித்துக் கொண்டிருந்தால் அது உலகத்திலுள்ள கப்பல்போகும் எல்லா சமுத்திரத்திற்கும் அன்வயிக்கும். ஜனாதிபதி ரூஸ்வெல்டும், பஸிபிக் சமுத்திரத்தையும் குறிப்பிடுகிறார்.

**தயார்.**—யுனைடெட் ஸ்டேட்ஸ் சண்டைக் கப்பல்கள் யுத்தத்திற்குத் தயாராயிருக்கின்றன. நடுநிலைமையாக இருப்பதை மாற்றவேண்டுமென்பது யோஜித்து வரப்படுகிறது. மேலும் சமுத்திரத்தில் ஸ்வதந்தரத்தைப் பாதுகாக்க அமெரிக்கா குத்தகைக்கடன் சாமான்களை அனுப்பியிருக்கிறது. இன்னும் அதால் முடிந்த உதவியைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

**பிரிடிஷ் கப்பற்படைக்கு விமோசனம்.**—பிரிடனுக்குத் தனியாக அட்லாண்டிக் சமுத்திரத்தில் மும்முரமாகயிருந்த முக்கியமான கப்பற்படைக்கு இப்பொழுது பலமுள்ள கூட்டாளியும் சேர்ந்திருப்பதால் அது பாராட்டத்தக்கது. இப்பொழுது அவசியமான யுத்த அரங்கங்களுக்கு அதன் யுத்தக் கப்பல்களை அனுப்பக் கூடும்.

**குத்தகைக்கடன் உதவி.**—15-ம் தேதி காங்கிரஸில் ஜனாதிபதி ரூஸ்வெல்டு சமர்ப்பிவித்த யாதாஸ்த்தில் ஆகஸ்டு மாதம் 31-ம் தேதிவரை, யுனைடெட் ஸ்டேட்ஸ் நேசதேசங்களுக்கு அனுப்பிய யுத்த தளவாடங்கள் 19,04,47,670 டாலர்கள் விலையுள்ளவை என்று கண்டிருக்கிறது. பெரும்பான்மை பிரிடனுக்குச் சென்றது; இன்னும் பனிரெண்டு தேசங்களுக்கு உதவியளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பங்கு விமானங்களும், அதன் தளவாடங்களுமேயாகும். மேலும் இந்தக் குத்தகைக்கடன் திட்டத்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் பழுதுபார்க்கவும் ஆயுதங்கள் சேர்க்கவும், விமானிகளைப் பயிற்சிசெய்யவும், கப்பற்படைதளமும், ராணுவ தளங்களும் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது.

**ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.**—லெனின்கிராடைக் கைப்பற்றப் போடும் சண்டை மிகவும் கொடியதாகயிருக்கிறது. எதிரியும் நகரத்திற்கு கிட்டத்தட்ட வரும் ஒவ்வொரு அங்குலத்திலும் ஏராளமாகச் சேதமடைந்துவருகிறான். பின்லார்துக்காரர் உதவியால் வடக்கே அந்தப் பாதைவழியாக லெனின்கிராட்டுக்குப் பொருள்கள் வாராமல்செய்ய மெர்மான்ஸ்க்கில் புதிய விதமாகத் தாக்கி வருகிறான். ஆனால் ருஷ்யர்களும் திரும்பத் தாக்கிவருகிறார்கள். சேர்னிகாய் என்ற இடத்தை எதிரி கைப்பற்றியதனால் வடக்கேயிருந்து கீவைத் தாக்கக்கூடியதாக இருக்கிறது. நீபர் நதிக்குக் கிழக்கே எதிரிக்கு இடங்கிடைத்துவிட்டதால் கிரிமியாவைச் சேர்க்கும் பெரக்கோப் பூசந்திப் பக்கம் நெருங்கிவருகிறான். புடனீலின் இடது பக்கத்தில் பயமுண்டாகியிருக்கிறது; நடுமத்தியில் யார்ட்ஸெவோவையும், எல்னியாவையும் பிடித்ததினால் டிமியோஷிங்கோ, யுத்த வரிசையில் முக்கியமான இடம் கைப்பற்றப்பட்டது. ஸ்மாலென்ஸ்க் இதுசமயம் ருஷ்யர்களால் தாக்கப்படுகிறது. அவர்கள் ஹாங்கோவை ஆக்கிரமித்து வருவதால் லெனின்கிராடுக்கு கடல்மார்க்கம் வர ஹேதுவாயிருக்கும். பின்லாந்து குடாக்கடலில் எதிரிகள் நுழைய முடியாமல்போய்விட்டது. ஒயஸல் எஸ்தோனியா கடற்கரைக்கப்பாலுள்ள தீவைக் கடாகியாக எதிரி கைப்பற்ற எத்தனித்தது முடியாமல்போய்விட்டது. அதில் எதிரிகளுக்கு வீண் நஷ்டம்தான். ஒடெஸாவில் இன்னும் ருமேனிய, ஜெர்மன் ஜனங்கள் மாண்டுவருகிறார்கள். ஸெப்டம்பர் 12-ம் தேதி புகாரெஸ்டில் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

பிரிடிஷ் விமானப்படையின் பகுதி மற்ற ருஷ்ய விமானிகள் செலுத்தும் பிரிடிஷ் விமானங்களுடன் சேர்ந்து ருஷ்யச் சண்டையில் கலந்துகொண்டிருக்கிறது. கப்பற்படை தலைவர் முதலாவது பிரபு, மிஸ்ட்டர் ஏ. வி. அலெக்ஸாண்டர் பிரிடிஷ் கப்பற்படையையும், குத்தகைக்கடன் ஒப்பந்தப்படி பிரிடனுக்கு அனுப்பியிருக்கும் பொருள்களில் பெரும்பாகத்தையும், ருஷ்யா பாதுகாப்புக்கு அனுப்பியிருப்பதாக வெளியிட்டிருக்கிறார்.

ஜெர்மன் படையில் இருப்பு குறைந்துவருகிறது. சமீபத்தில் கீழ் பிரதேசங்களிலுள்ள 5,00,000 பேர்கள் ருஷ்யப் போர்முனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

**பின்லிஷ்காரர்களின் சால்ஜாப்பு.**—வாஷிங்டனிலுள்ள பின்லாந்து மந்திரி எம். புரோகோப் அரைகுறையான சமாதானப்பேச்சை வெளியிட்டிருக்கிறார். வர்த்தகக் கைத்தொழில் இலாகா மந்திரி எம். வெய்நோடானர் பழய எல்லையைப் பிடித்தபிறகுகூட, பின்லாந்து ருஷ்ய-ஜெர்மன் யுத்தத்தில் கலந்திருக்கும் என்பதற்குக் காரணங்கள் சொல்லுவதுபோல் செய்தி கொடுத்திருக்கிறார். பின்லாந்து மூலம் ஜெர்மனியைத் தாக்க பிரயத்தனப்பட்டதாகச்சொல்லி அதே தேசமூலம் ருஷ்யாவைத்தாக்க ஜெர்மனியை அனுமதித்திருக்கிறது. மேலும் ஜனாதிபதி தேருதலில் ருஷ்யர்கள் பிரவேசித்ததாகச் சொல்லுவது போர்தொடங்குவதற்குச் சரியான காரணமாகமாட்டாது. தற்செயலாய் ஜெர்மனியும், பின்லாந்தும் ஒன்று சேர்ந்ததாகச் சொல்லுவது உபயோகமில்லாத காரணம். ஆனால் உண்மையில்



ஜெர்மனியுடன் சேர்ந்தபிறகு பின்லாந்து அதிலிருந்து கழட்டிக்கொள்ள முடியவில்லை. யுனைடெட் ஸ்டேட்ஸ் ருஷ்யாவிற்கும் பின்லாந்துக்கும் சமாதானம்செய்ய முயற்சிப்பது நடைபெறுமல்போனால் அது போர் நடத்திக்கொண்டேயிருக்கும். கரிலியன் பூசந்தியிலிருந்து தளகர்த்தர் மானர்ஹீம் தன் படைகளை எங்கனவே வாபஸ் வாங்கிக்கொண்டதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

**பல்கேரியாவின் துரோகம்.**—ருஷ்ய அயல் நாட்டு மந்திரி எம். மாலடோவ் எழுதியதிலிருந்து பல்கேரியா நடுநிலைமையாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டு, ஒடெஸா, கிரிமியா, காகேஸஸ் இந்த இடங்களைத்தாக்க ஜெர்மன் தளமாக மாறிவிட்டதென்று தெரிகிறது. அது ஜெர்மன் துருப்புகள், கப்பற்படை, விமான நிலயங்கள், துறைமுகங்கள், இருப்புப்பாதைகள், ருஸ்ட்சக் என்ற இடத்தில் டான்யூப் நதிக்குக் குறுக்கேயுள்ள பாலம் இவைகளெல்லாம் எதிரிவசம் ஒப்படைக்கப்பட்டன. ருஷ்யாவிற்கு ராஜபக்தியுடன் இருப்பதாகச் சொல்லுவதும், அதன்பேரில் உள்ள குற்றஞ்சாட்டுதலை மறுதளிப்பதும் திருப்தியளிக்கக்கூடியதாயில்லை. மிஸ்ட்டர் எம் மாலடோவும் அவ்விதமே கருதுகிறார். பல்கேரியாவை ருஷ்யாவுடன் யுத்தம் புரிய ஜெர்மனி தூண்டுகிறது. மேலும் இதாலியர்களும் பல்கேரியர்களை யுத்தத்திற்கு தூண்டிவருகிறது. அச்சு நாடுகளின் சூழ்ச்சியை தெரிந்துகொண்டு அதன்பேரில் ருஷ்யா யுத்தம் ஆரம்பித்துவிடலாம். இவ்விதம் நடந்தால் அச்சு நாடுகளின் கப்பல்கள், பல்கேரியா நடுநிலைநாடு என்று சொல்லிக்கொண்டு டார்டினல்ஸ் மார்க்கமாய் கருங்கடலுக்கு இனிச்செல்ல முடியாது.

**இரான்** விஷயம் மறுபடியும் வெளிவந்திருக்கிறது. டெஹ்ரானிலுள்ள பிரிடிஷ் மந்திரிசொல்படி ரிஸாகான்-பாக்லெவை ராஜ்ஜியத்தைத் துறந்துவிட்டார். பிரிடிஷ் ருஷ்யப்படை டெஹ்ரானில் புகுந்துவிட்டன. அவருக்குப் பிறகு அவருடைய 21-வயதுள்ள இளவரசன் ஷாபூர் மகமட்ரீஸா பட்டத்திற்கு வந்துவிட்டார். இரானிலிருந்து பூராவாக இல்லாமல்போனாலும் ஜெர்மானியர்களை வெளிப்படுத்தி வருவதைப்பார்க்க இரானைப்பற்றிய சந்தேகம் ஏற்படுகிறது. அவனுக்கு அச்சுநாடுகளில் இருந்த வாத்ஸல்யம் எல்லோருக்கும் தெரியும். பொதுநலத்தைவிட்டு சுயநலத்தைக்கருதி அவனுடைய ஏகாதிபத்திய ஆக்ஷி ஜனங்களின் அனுதாபத்தைப் போக்கிவிட்டது. அவன் வெகுவருஷங்களாகவே உபயோகமற்றவனாகிவிட்டான். அவன் தொலைய வேண்டியதுதான்.

புதுஷாவும் சிறிய வயதுள்ளவர். அவர் எப்படிப்பட்டவரென்று இனித் தெரியவேண்டும். முன் அவருக்கிருந்த வாத்ஸல்யங்கள் நமக்குத் திருப்தியளிக்கவில்லை. இப்பொழுது பர்ஸியாவிற்கு, நேசதேசத்தார்களுடைய சார்பில் திடசித்தத்துடனும், யோக்கியமாகவும் நடந்துகொள்ளக் கூடியவனும் புதிய சீர்திருத்தங்கள் செய்யத் தயாராயிருக்கும் அரசன் வேண்டும். புதிதாக வந்திருக்கும் ஷாவும் ஒழுங்காக அரசியல்முறையை நடத்தவும், தன் தகப்பனார் செய்த தவறுதலுக்கு ஈடுசெய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது எல்லாருக்கும் திருப்திகரமாகயிருக்கிறது. அங்குள்ள ஜெர்மானியர்களை ஒன்றுகச்சேர்த்து வெளியில்

அனுப்பாமல் இருந்ததற்காக போலீஸ் தலைமை அதிகாரியை உத்தியோகத்திலிருந்து விலக்கியது புது அரசியல் மாறுதலுக்கு ஆரம்பம். நல்ல அரசாட்சிக்கேற்ற இன்னும் அநேக விஷயங்கள் நடைபெறும். பிரிடிஷ்-ருஷ்யப் படைகள் டெஹ்ரானில் அதிதுரிதமாகப்புகுவதால், அங்குள்ள அச்சுநாட்டினர் சீக்கிரம் வெளியேற வேண்டியதுதான்.

**விமானச் சண்டை.**—சென்ற ஸெப்டம்பர் மாதம் 15-ம் தேதி பிரிடன்பேரில் படையெடுக்கக் குறிப்பிட்ட நாள். இவ்வருஷம் அந்நாளில் அங்கு தாக்குதலே இல்லாமல் இருந்தது வியக்கத்தக்கது. ஆனால் இந்த வாரத்தில் முக்கிய லக்ஷியங்களாக கீல், ரோஸ்டாக், ப்ரெமன், கக்ஸ்ஹேவன், வில்ஹெம்ஷாவன், ப்ரெஸ்டு இந்த இடங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கிவருகிறது.

**புதியதிட்டம் வேலைசெய்கிறது.**—நார்வேயிலுள்ள ஒஸ்லோவில் இருப்புப் பாதை தவிர மற்ற போக்குவரத்துகள் இராக் காலங்களில் இருக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அங்கு கலவரம் மும்முரமாக இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அங்குள்ள படக்காக்ஷி சாலைகளும் நாடகக் கொட்டகைகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் தெருக்களிலும், சவுக்கங்களிலும், வீடுகளிலும், வெளிப்புறங்களிலும் கூட்டம் போடக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது ஜெர்மானியர்கள் புகுந்திருக்கும் ஸார்டீனியாவில் இதாலியர்கள், அனுமதி சீட்டில்லாமல் உள்ளே வரவிடப்பட மாட்டார்கள். ஸெர்பியாவில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும்போலிருக்கிறது. அங்கு அமைதி ஏற்படாமல்போனால் நாஸிகள் கொலைகுப்படை அனுப்புவதாக மிரட்டுகிறார்கள். க்ரோஷியாவில் கலகம் உண்டாகும்போலிருக்கிறது.

**ஜப்பான்.**—தூரக்கிழக்கின் நிலை ஒரேமாதிரியாகவேயிருக்கிறது. சமாதானப் பேச்சுகள் இன்னும் வெகு நாஜூக்கான முறையில்தான் இருக்கிறதென்று, மிஸ்டர் போகர்பிரேஸர் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் பஸிபிக் சமுத்திரத்தில் தனிமையாக இருக்கும் ஜப்பான் அரசாங்கம் குடியரசுநாடுகளின் கோபத்திற்குள்ளாகாதென்று மிஸ்டர் டப்கூப்பர் நினைக்கிறார். "சைனாவின் உரிமைகளுக்கு பங்கமேற்படும்படி மூனிச் உடன்படிக்கையைப்போல அமெரிக்கா உடன்படிக்கை" செய்துகொள்ளாது என்று சைனா நிச்சயமாக நம்பிவருகிறது.

---

## யுத்தக் குறிப்புகள்.

---

**மூன்றாம் வருஷத்திய முக்கியமான சம்பவம்.** சமீபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் இப்பொழுது நடக்கும் கோரமான யுத்தத்தில் தெய்வபலத்தைக் குறித்து எடுத்துக் காட்ட எனக்குத் துணிவு ஏற்பட்டது. அப்பொழுது என்னைப்போல் மற்றொருவர் பேசியது எனக்குத்தெரியாது. "யுத்தத்தின் மூன்றாவது வருஷத்தில் இப்பொழுது வெற்றிக்கு அடிப்படையான காரணம் தந்திரத்தாலல்ல, ராஜீய விஷயத்தாலல்ல,



பொருளாதார முற்றுகையாலல்ல, ஆத்ம பலத்தினால் தான் ஆகவேண்டும்" என்று அவர் எழுதியிருக்கிறார்.

ஜெர்மானியர்கள் கொடுமை செய்தும், அதிகார ஆசைகொண்டும், போரிடுபவர்களுடன் சமாதானத்திற்குப் போகிறதில்லை என்று இறுமாப்புடன் இருக்கிறார்கள். அவர்கள் தலைவர்களுக்கு மற்ற தேசத்தார்கள் சமாதானத்தை விரும்புவார்களென்றும், சமாதானம் பெற முன்வருவார்களென்றும் தெரியும். ராணுவ பலமும், மிருக பலமும் யார் முதலில் அடைகிறார்களோ அவர்களின் கீழ் மற்ற எல்லா ஜனங்களும் இருக்கவேண்டுமென்று அபாயகரமானதும், கெடுதலான அபிப்பிராயமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஜெர்மானியர்கள் தாங்கள் தான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜாதியாரென்று தங்களைத்தானே தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பது, அவர்களின் இறுமாப்பைக் காட்டுகிறது. ஜனநாயகங்கள் அழிந்து வருவதாக அவர்கள் எண்ணுவது மூடத்தனம். ஆனால் சேதம் ஏற்பட்டுவிட்டது. அதன் சரித்திரத்தில் பலஹீனமாக இருந்த சமயத்தில் ஜனநாயகங்கள் அகப்பட்டுக்கொண்டன. தனிநபரை அரசாங்கத்திலிருந்தும், ஆயுதங்களிலிருந்தும் காப்பாற்ற எல்லா தேசத்தார்களும் சேர்ந்து பாதுகாப்பு தயாரிப்பதற்குள் ஐரோப்பா ஜெர்மன் மயமாகிவிட்டது.

பிரிடிஷ் ஜாதியாருக்கு அதிர்ஷ்ட வசமாகவும், ஜெர்மானியர்களுக்கு துர்அதிர்ஷ்டவசமாகவும் தங்கள் வீட்டைப்பற்றும், ஸ்வதந்த்ர ஆசையும் பிறர் நாடுகளைப் பிடிக்கும் ஆசையைக் காட்டிலும் பலமாகவும், வலிவாகவும் இருக்கிறது. இது தான் ஆபத்திலிருந்து பிரிடனைக் காப்பாற்றிற்று. இதுவே ருஷ்யாவைக் காப்பாற்றி வருகிறது. இதுவே அமெரிக்காவிற்கும், எகிப்திற்கும், இந்தியாவிற்கும், சைனாவிற்கும் உத்ஸாகத்தை அளித்துவருகிறது. இதுவரை இந்த வேகம் பாதுகாப்போடு நிற்கிறது; இனி ஹிட்லரை அழிக்கப்போகிறது.

ஆகையால் இரண்டுவருஷ காலம் தற்காப்பிலிருந்து வந்திருப்பதில், மூன்றாவது வருஷமாவது பயனளிக்கக்கூடிய தாக்குதலாக இருக்கும்படி பார்க்க வேண்டும். ஆகவே இனி எதிர்க்கவேண்டும். அதற்கு வேண்டிய பொருள்கள் இருக்கிறது, மனிதர்கள் இருக்கிறார்கள், உத்ஸாகம் இருக்கிறது, உலகத்தார்களுக்கு தலைமைவகிக்க பிரிடன் இருக்கிறது. இம்மாதிரியாக முயற்சி, ஐக்கிய பத்தியம், சுயநலமின்மை ஆகிய இவைகள் சேர்ந்த தேசத்தார்கள் இதுவரை தற்காப்பில் இருந்துவந்ததை விட்டு தடுக்கமுடியாத தாக்குதல்களை ஆரம்பித்து, பிசாசுகளைப்போல் வசிக்கும் ஜெர்மன் பாதுகாப்புள்ள எல்லா ஸ்தானங்களையும் தகர்க்கவேண்டும்.

வி வி வி வி வி

**பிரிடிஷ் விமானப்படை.** விமானங்கள், விமானிகள் நஷ்டம் ஏற்படுவதைக் குறித்து நாம் விசாரப்படக்கூடாது. ஜனங்களின் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் நமக்கு வெற்றி சுலபமாய்க் கிடைக்காது. விமானப்போரிலும், மற்ற இடங்களில் நடக்கும்

யுத்தங்களில் சேதம் ஏற்படும்தான். ஆனால் நாளுக்கு நாள் வெற்றி நிச்சயமாகக் சமீபித்து வருகிறது.

ஆகாயச் சண்டையில் பாதுகாத்துக் கொள்பவர்களுக்குத்தான் சுலபம். எதிரிகளைத் தடுக்க பலவித பாதுகாப்புகள் உண்டு. சில நிமிஷங்கள் பறந்தால் போதும்; எதிரி விமானங்களைப் பிடித்துவிடலாம். சொந்த தேசத்தில் யுத்தம் நடப்பதால் விமானிகள் தப்ப இடமுண்டு. இக்காரணத்தினால்தான் சென்ற வருஷத்தில் விமானச்சண்டை பிரிடன் பேரில் நடந்தபொழுது நமக்கு நஷ்டம் குறைவு.

இப்பொழுது நாம் ஜெர்மனியை எதிர்க்கும் காலம் வந்துவிட்டது. ஆகையால் ஜெர்மனிக்கு நஷ்டம் குறைந்துவிட்டது. நமக்கு நஷ்டம் அதிகம். உதாரணமாக 1940-ம் வருஷத்தில் நமக்கு ஏற்பட்ட விமான நஷ்டம் 349. இந்த வருஷம் எட்டு மாதங்களில் 959 விமானங்கள் நஷ்டமடைந்திருக்கிறோம். ஸெப்டம்பர் மாதம் 2-ம் தேதியுடன் முடிவாகிற வாரத்தில் நமக்கு 61 விமானங்களும் ஜுப்ட்வாபிக்கு 25 விமானங்களும் நஷ்டம். ஆனால் சென்ற வருஷத்தில் ஸெப்டம்பர் மாதத்தில் ஒரு வாரத்தில் நடந்ததை ஒப்பிட்டுப் பார்த்தால் நமக்கு 52 விமானங்கள் சேதம். அப்பொழுது 365 ஜெர்மன் விமானங்களை நாம் சுட்டு வீழ்த்தினோம்.

ஆனால் எண்ணிக்கையின் பின்னத்தை பரிசோதித்துப் பார்த்தால், பிரிடன் படையெடுக்கப்பட்டபொழுது நம்மைவிட எதிரிகளுக்கு 7 மடங்கு அதிக நஷ்டம் அவர்கள் 200 மைல்தான் பறந்து வந்தார்கள். இப்பொழுது ஜெர்மனியை 1,200 மைல் போய் எதிர்க்கிறோம். இருந்தாலும் அவர்களைவிட நமக்கு $2\frac{1}{2}$ பங்குதான் நஷ்டம். இரண்டு வாரத்தில் நடந்ததைக் குறித்து கணக்கிடக் கூடாது என்று நீங்கள் நினைக்கலாம். வருஷம் பூராவும் நடந்ததைப் பார்த்தால் சென்ற வருஷத்தில் ஜெர்மானியர்கள் தாக்கும்பொழுது அவர்களின் நஷ்ட விகிதம் $3\frac{1}{2}$ : 1. சென்ற 8 மாதங்களில் நாம் தாக்கும்பொழுது நம்முடைய நஷ்ட விகிதம் $1\frac{1}{2}$ : 1.

பிரிடிஷ் விமானப் படையின் சாமர்த்தியம், ஆட்களின் வலிமை, ஆகாய விமானத்தின் பலம், இவற்றின் மேன்பாட்டுக்கு வேறென்ன அத்தாக்ஷி வேண்டும்.

வி வி வி வி வி

**பெரிய வெடிகுண்டுகள்.** குண்டுகள் பிரயோகிப்பதில் உள்ள தத்துவம் என்னவென்றால், லேசான அநேக குண்டுகளைப் போடுவதைக் காட்டிலும், கனமான சில குண்டுகளைப் போடுவதே நலம். இந்த தத்துவம் ஆகஸ்டு மாதம் 28-ம் தேதியில் அங்காராவிலிருந்து பிரிடிஷ் ஸ்தானிகர் சில விபரங்கள் கூறியதிலிருந்து வெளியாகிறது. இவ்வருஷம் ஜனவரி மாதத்தில் பிரிடிஷ் விமானப்படை 1,100 தடவை தாக்கினதில் 800 டன் நிறையுள்ள வெடி குண்டுகள் போட்டன. ஜூலை மாதத்தில் 3,900 தாக்குதலில் 4,400 டன் வெடி குண்டுகள் போடப்பட்டிருக்கிறது. இந்த 6 மாதங்களுக்குள் வெடிகளின் கனம் 100 பங்கு அதிகப்பட்டிருக்கிறது.



**ன்லாந்துக்காரர்கள்.** ஜெர்மன் சிநேகிதர்களிடம் அலுத்துப் போய் ருஷ்யாவுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்புகிறார்கள், என்று சுற்று வட்டாரத்திலிருந்து வரும் செய்திகளிலிருந்து வெளியாகிறது. அந்தச் செய்திகளில் ஜெர்மானியர்கள் இதற்கு இணங்குவார்களென்று கூறப்படுகிறது. ஏனெனில் மாரி காலத்தில் அந்தப் பக்கம் ஜெர்மானியர்கள் படையெடுக்கப் போவதில்லை. அதற்காக ஏற்கனவே பின்லாந்தின் எல்லைவரை பின்லாந்துக்குக் கிடைத்துவிட்டால் போதும் என்றும், அதற்குமேல் ஜெர்மானியர்கள் அக்கரைப்படவில்லை என்பதற்கு சாக்ஷியாக பிரசாரம் செய்யப்பட்டுவருகிறது. டாக்டர் கோயபல்ஸ் பின்லாந்துக்காரர்களைப்பற்றி புகழ்ந்ததும், தளகர்த்தர் மானர்ஹீமுக்கு இரும்புச் சிலுவை பதக்கம் ஹிட்லர் அளித்ததும், சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு இதற்கு ருஜுவாகக் காட்டப்படுகிறது. ஆனால் இந்த சம்பவங்களைக் குறித்து பின்லாந்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் காணும்.

ஜெர்மானியர்கள் கொடுஞ்செயலில் அகப்பட்டுக்கொண்டு பின்லாந்து தவிக்கிறது. அதிலிருந்து கழட்டிக்கொள்ளப் பார்க்கிறது. அவர்களுக்குச் சண்டையும் போதும், ஜெர்மன் ஆதிக்கமும் போதும். ஆர்க்டிக் சமுத்திரத்தில் ஜெர்மன் பட்டாளம் திறமையற்றதாகக் காணப்படுகிறது. அதற்காக பலவந்தமாய் இந்த அநியாயச் சண்டையில் அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இனி பின்லாந்துக்காரர்களை பயமுறுத்தி ஜெர்மன் தளகர்த்தர்கள் ஸ்வீடன் வழியாகத்தான் சைனியத்தைகொண்டு வரவேண்டும். ஏற்கனவே ஒரு தடவை ஜெர்மன் பட்டாளம் ஸ்வீடன் வழியாக வந்ததிலிருந்து, ஸ்வீடனுக்கு பொருள் நஷ்டமும், அநேக ஹானியும் ஏற்பட்டது.

போல்ஷிவிஸ்ட் சக்தியை எதிர்ப்பது பொய்யாகிவிட்டது. ஜெர்மனி, ருஷ்யாவை எதிர்ப்பதின் உண்மையான காரணம் பிரிடனைப் பிடிப்பதற்குத்தான். ருஷ்யாவின் தத்துவத்தை எதிர்ப்பதற்கு, என்று ஆகஸ்டு மாதம் 20-ம் தேதியில் கோயபல்ஸ் சொல்லியிருப்பதெல்லாம் பொய்பேச்சே.

வி வி வி வி வி

**உண்மையாக இருப்பதின் பயன்.** இரானில் ருஷ்யர்களும், பிரிடிஷ்காரர்களும் நடத்திய நடவடிக்கையைக் குறித்து மௌனம் சாதித்ததைப் பற்றி நாம் ஏற்கனவே எழுதியிருக்கிறோம். ருஷ்யா, பிரிடன் இரானுடன் செய்த ஒப்பந்தப்படி இரானுடைய ஸ்வதந்திரம் பாதுகாக்கப்பட்டு எல்லைகளும் கொடுக்கப்படும். இதைக்குறித்து துருக்கி வெகுயுக்தியாகவும் நடுநிலைமையாகும் இருந்துகொண்டு அதிகாரிகள் சொல்லிவருவது நமக்குத் திருப்தியை அளிக்கிறது. சமீபத்தில் துருக்கி எந்தப்பக்கத்திலிருக்கிறதென்பதை கூடியசீக்கிரம் தெரிவிக்கும்படி நிர்ப்பந்தம் ஏற்படும் என்று ஒரு நடுநிலை தேசம் சொன்னபொழுது எந்த அரசாங்கம் அப்படி கேட்கிறதோ அதற்கு எதிர்கக்ஷியில் சேருமென்று துருக்கி உடனே பதிலளித்துவிட்டது.

ஆகவே துருக்கியின் எதிர்காலமே ஜெர்மனியைப் பொருத்திருக்கிறது. ஜெர்மனித் தெற்கு ருஷ்யாவில் முன்னேறுவதுபோல் தோன்றும்பொழுது துருக்கியின் ஒரு ஜெர்மன் சிப்பாய்கூட காலடிவைக்கிறதில்லையென்றும் அதற்காக துருக்கி இருப்புப்பாதைகள் பூராவும் அச்சுநாடுகளின் உபயோகத்துக்கு விட்டுவிடுகிறதென்றும் வான்பேபன் தந்திரமாக முயற்சித்தது விணாயிற்று. ஏனென்றால் இரானிலிருந்த அரோகிகள் விரட்டப்பட்டுவிட்டதால், இனி ஜெர்மானியர்கள் துருக்கிவழியாகச்செல்லமுடியாது. ஜெர்மன் திட்டங்களும் இனிமாறவேண்டும். துருக்கியை அச்சு நாடுகளுடன் சேர நிர்ப்பந்திப்பது அல்லது ஸ்டெரியிட்ஸை விட்டுக்கொடுப்பது, இம்மாதிரி இருக்கலாம். ஜெர்மன் இதாலிய பல்கேரியப் படைகள் எல்லைப்புறங்களில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தபோதிலும், அவை படையெடுக்கப் போதுமானதல்ல என்று கருதப்படுவதால், இவைகளுக்கு துருக்கி மறுத்துவிடும்.

வி வி வி வி வி

**புதுக்கோட்டை மகா ஜனங்களே, விழித்துக் கொள்ளுங்கள்.** யுத்தத்திற்குச் சேர நமக்கு நிர்ப்பந்தமும் தேவையா? சென்ற வாரம் 7-ம் தேதியன்று நடந்த பொதுக்கூட்டத்தில் சண்டையைப்பற்றியும், சண்டையில் சேருவதில் ஏற்படும் உத்ஸாகத்தைப்பற்றியும், புகழையும் பற்றி வெகு ஸ்தோத்திரத்துடன் சொல்லப்பட்டது. உதவி சைனியம் சேகரிக்கும் உத்தியோகஸ்தர் இங்கு பார்வையிட்டு போனவுடன் வெளியிட்டதில் ஒரு பகுதி நமக்கு திருப்தியளிக்கவில்லை. ஏனென்றால் "யுத்தத்தில் சேர பரிசோதனை செய்துகொள்ள ஒருவரும் வரவில்லையே! இந்த ஊரில் என்னமோ விஷயம் தெரியவில்லையே" என்று அவர் கேட்டார். மேலும் "சென்ற மாதத்தில் யுத்தத்திற்கு வெவ்வேறு இலாகாவுக்கு தேர்ந்தெடுத்து ஆயிரம் வாலிபர்களை அனுப்பினேன் அதில் புதுக்கோட்டையிலிருந்து வந்தவர்கள் இரண்டே பேர்கள்தான்," என்று வெளியிட்டார். திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாங்கூர் இந்த ஜில்லாக்களில் வாலிபர்கள் யுத்தத்தில் சேர் முன் வருகிறார்களே, ஆனால் நாம் அதில் சேருவதற்கு ஏன் தயங்க வேண்டும்?

எல்லாப் பத்திரிக்கைகளிலும் தோன்றும் விளம்பரங்களில் யுத்தத்திற்கு காலாட்படைக்கும், அகழ் வெட்டவும், சுரங்கம் தோண்டவும், சைகைகள் காட்டவும், யந்திரங்கள் ஓட்டவும் ஆட்கள் தேவையென்றும், அவர்கள் வயதில் 18-லிருந்து 20-க்குள்ளும், உயரத்தில் 5 அடி 2 அங்குலத்திற்குக் குறையாமலும் கனத்தில் 110 பவுண்டுக்குக் குறையாமல் இருந்தால் போதுமென்றும், போக வரச் செலவு, துணிமணிகள், சாப்பாடு நீங்கலாக குறைந்த பக்ஷம் 16 ரூபாய் முதல் தரம் வாரியாக சம்பளம் கொடுக்கப்படுமென்றும் சமீபத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

புதுக்கோட்டை சரித்திரத்தைப் பார்க்க முன்னொரு காலத்தில் சமஸ்தானத்தில் அநேக யுத்த வீரர்கள் இருந்திருக்கிறார்கள். இந்த கௌரவத்தைக் கைவிடாமல் நாமும் யுத்தத்தில் சேர்ந்து சேவையையும், தியாகத்தையும் செய்து



புகழ்பெற இதுவே சமயமாகும். தமிழ் நாட்டிலிருந்தும், திருவாங்கூரிலிருந்தும் ஒரு தடவையில் மட்டும் சுமார் ஆயிரம் புது ஆட்கள் சேர்ந்திருக்கிறபொழுது நமது சமஸ்தானத்தில் இரண்டே வாலிபர்கள் மட்டில் யுத்த சேவை செய்ய சமீபத்தில் சென்றிருப்பது மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறது.

இதை நமது மாட்சி தங்கிய மன்னர்பிரான் கேட்டவுடன் "இது போரவே போராது" என்று சொன்னார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ்; நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—9—41. (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—கடற்கரைப் பிரதேசம்-நார்வே (Norway). | …… | …… |
| | இரவில்.—தொழிற்சாலைகளுள்ள இடங்கள்—ஹென்ஷெல் (Henschel). | …… | …… |
| | ரயில் சம்பந்தமான தொழிற்சாலை—காஸெல் (Kassel). | …… | …… |
| | தொழிற்சாலைகள்-மன்ஸ்டர் (Munster). மேற்கு ஜெர்மனியில் இதர இடங்கள். | …… | …… |
| | கப்பல் துறைகள்-செர்பர்க் (Cherbourg). | நஷ்டமில்லை. | …… |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | காரின்த் (Corinth) கால்வாய்—கிரீஸ் (Greece). | …… | பலத்த சேதம். |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயம்-ஹெராக்லியான் (Hera-Klion). | …… | …… |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானமிறங்கும் இடங்கள்-டிமிமி (Tmimi), மார்டுபா (Martuba), டெர்னா (Derna), எல்கஸாலா (El Gazala). | …… | சேதமாயின. |
| | போக்குவரவு மோட்டார்கள்—டெர்னா (Derna) விலிருந்து, டோப்ருக் (Tobruk)குக்குப் போகும்பாதை. | …… | பெருந்திக்கள் மூட்டப்பட்டன. |
| | விமானச் சண்டை—ஸிரெனைகா (Cyrenaica) கடற்கரைக்கப்பால். | 2 விமானங்கள். | விரோதி பாம்பர் விமானங்கள் விரட்டப்பட்டன. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—9—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| | எதிரித்துருப்புகள், விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்—யுத்தரங்கத்தில். | 27 விமானங்கள். | 59 விமானங்கள். |

பிரிடிஷ் விமானங்களால்.

இங்கிலீஷ் கால்வாய் (English Channel).

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.— கப்பல்கள்-பெல்ஜியன் (Belgian) கடற்கரைக்கப்பால் | ...... | முக்கியமான கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. 2 சிறிய கப்பல்கள் தாக்கப்பட்டன. |
| | கப்பல்கள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 பகல் பாம்பர் விமானங்கள். | ...... |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| | துறைமுகம், கப்பல்கள்—பாலெர்மோ (Palermo). | ...... | 3 கப்பல்கள் சேதமாயின. |
| | விமான நிலயங்கள்-கடேனியா (Catania), ஜெர்பினி (Gerbini). | ...... | ...... |

9—9—41. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலிலும், இரவிலும் விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| | விமான உற்பத்திசாலை, தோணித்துறைகள் இறங்குமிடங்கள்.—மெஸினு (Messina) | ...... ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| | விமான நிலயம்.-காஸ்டி விட்ராேனு (Castevetrano). | ...... | 1 விமானம் தீப்பற்றி சேதமாயிற்று. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள்.—காம்பூத் (Gambut) மொனஸ்டீர் (Monastir). | நஷ்டமில்லை. | 2 விமானங்கள் நொறுக்கப்பட்டன. மற்றவை சேதமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| —9—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| | காலாட்படை, பீரங்கிப்படை, விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.-யுத்த அரங்கம் முழுவதிலும். | 41 விமானங்கள். | 81 விமானங்கள். |

10—9—41. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—விரோதித் துணைக்கப்பல்.—நார்வே (Norway) தெற்குக் கடற்கரைக்கப்பால் | ... | 1 சாமான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | பீரங்கிகள் வைத்துமிடங்கள்.—வட பிரான்ஸ் (France). | ... | ...... |
| | விரோதிக் கப்பல்கள்.—வட கடலில். | ... | கப்பல்கள் தாக்கப்பட்டன. |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France), இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 1 பைடர் விமானம். | ...... |

இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| | பிரிடிஷ் யுத்தசாமான் செய்யும் தொழிற்சாலைகள், இருப்புப்பாதைகள்.—டூரின் (Turin). | ...... | ...... |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| | படகுகள், நிற்குமிடங்கள், மின்சார உற்பத்திசாலை, ரயில்வண்டித்தொடர்.—மெஸினு (Messina). | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | துறைமுகம் கப்பல்கள்.-பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமான நிலயத்திலிருக்கும் விரோதி விமானங்கள்.—மார்டூபா (Martuba). | ...... | அநேக விமானங்கள் சேதமாயின. |
| | விமானமிறங்கும் இடங்கள்.—காம்பூத் (Gambut) டெர்னு (Derna). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 10—9—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதித் துருப்புகள், விமானச் சண்டை விமானங்கள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | 32 விமானங்கள். | 53 விமானங்கள். |
| 11—9—41. (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விரோதி ஸ்தானங்கள் தோய்தும் விமான நிலயங்கள்—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | இரவில்.—சப்பந்தளம்—கீல் (Kiel) ... | ...... | பலத்த சேதம். |
| | பால்டிக் (Baltic) துறைமுகம்—ரோஸ்டாக் (Rostock). | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| | கப்பல் துறைகள்—லஹாவர் (Lehavre) பொலாயின் (Boulogne), ஹாகிஸன்டு (Haugesund). | ...... | ...... |
| | விமான நிலயம்—ஸ்டவான்ஜர் (Stavanger). | ...... | ...... |
| | விரோதிக் கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | ...... | 2 கப்பல்கள் தாக்கப்பட்டன. |
| | விரோதிக் கப்பல்கள்—நார்வே (Norway)க் கடற்கரைக்கப்பால். | ...... | 1 கப்பல் தாக்கப்பட்டது. |
| | ராணுவ லக்ஷியங்கள்—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | விரோதி பீரங்கி வைக்குமிடங்கள்—காப் கிரிஸ்னெஸ் (Cap Grisnez). | ...... | ...... |
| | துறைமுகம்—பொலாயின் (Boulogne) ... | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | விரோதித் துணைக்கப்பல்—மத்தியதரைக் கடலு (Mediterranean)க்கு மத்திய பாகத்தில் | ...... | 3 வியாபாரக் கப்பல்கள் நாசமாயின. இன்னும் சிலவை சேதமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 11—9—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | கப்பல்கள், கப்பல்துறைகள்—பாலர்மோ (Palarmo). | ...... | 1 கப்பல் தீப்பிடிக்கப்பட்டது. |
| | யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை—லிக்கடா (Licata). | ...... | ...... |
| | ரயில்வே ஸ்டேஷன்—ராகுஸா (Ragusa). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், எண்ணெய்க் கப்பல்—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | போக்குவரவு மோட்டார்கள் கிடங்குகள்—பெங்காஸி (Benghazi)யிலிருந்து டோக்ரா (Tokra)வுக்குப் போகும் ரஸ்தாவில். | ...... | ...... |
| | போக்குவரவு மோட்டார்கள்—பார்ஸி (Barce)யிலிருந்து ஸ்லோண்டா (Slonta)வுக்குப் போகும் ரஸ்தாவில். | நஷ்டமில்லை. | 1 பாம்பர் விமானம். |
| | விமான நிலயம்—ஆஸொஸா (Azozo). | ...... | சேதமாயிற்று. |
| | **ஐயோனிய (Ionian)க்கடல்.** | | |
| | இரண்டு கப்பல்களும் ஒரு நாசகாரியும்—ஐயோனிய (Ionian)க்கடல். | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்த அரங்கம் பூராவும். | 34 விமானங்கள். | 50 விமானங்கள். |
| 12—9—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—ஜெர்மன் துணைக் கப்பல்கள்—டெர்ஷெலிங் (Terschelling) தீவு. | ...... | 1 கப்பல் தாக்கப்பட்டது. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 12—9—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.** | | |
| | பிற்பகலில்.—விரோதித் துணைக் கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரைக் கப்பால். | ...... | 1 கப்பல் சேதமாயின. |
| | விமான எதிர்ப்புகள்.—வடகடலிலும், ஹாலந்து (Holland)க் கடற்கரையில். | ...... | ...... |
| | இரவில்.– தொழிற்சாலைகள்-பிராங்க்பர்ட் (Frankfurt) ரைன்லாந்தி (Rhineland)ல் ஏதோ ஒரு இடத்தில். | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.-செர்பர்க் (Cherbourg). | ...... | ...... |
| | துறைமுகம்.—ஸெயின்ட் நஸேர் (St. Nazaire). | ...... | ...... |
| | விரோதிக் கப்பல்கள்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால். | 2 பாம்பர் விமானங்கள். | 1 சாமான் கப்பல் தாக்கப்பட்டது. |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமானமிறங்கும் இடங்கள்.—ஹெராக்லியான் (Heraklion), மாலீமி (Maleme). | ...... | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள், விமான நிலயங்கள்.— ஜெர்பினி (Gerbini), கடேனியா (Catania). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானமிறங்கும் இடங்கள்.—காம்பூத் (Gambut), எல் கஸாலா (El Gazala). | ...... | 1 விமானம் நேராகத் தாக்கப்பட்டது. |
| | விமான நிலயங்கள்.—பார்டியா (Bardia). | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| | விரோதி ஸ்தானங்கள்.—கோண்டாரு (Gondar)க்குத் தென்புறம். | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 2—9—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ...... | ...... |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | புகாரெஸ்ட் (Bucharest). | நஷ்டமில்லை. | ...... |
| 13—9—41. (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள் இங்கிலீஷ் கால்வாய் (English Channel) விரோதி ஆக்கிரமித்த பிரதேசம். | நஷ்டமில்லை. | ...... |
| | இரவில்.—கப்பல் துறைகள் ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.—"ஷார்ன் ஹார்ஸ்ட் (Scharnhorst) நீஸ்நோ" (Gneisenau), ப்ரெஸ்ட் (Brest). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—லஹாவர் (Lehavre). எதிரி விமான நிலயங்களில் காவல் புரியும் விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | ...... நஷ்டமில்லை. | ...... 1 விமானம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | சேதமாயின. |
| | எண்ணெய்க் கிட்டங்கி—பார்ஸ் (Barce). | ...... | தீப்பற்றியது. |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | ஒரு பெரிய கப்பல்.—ஸுயாரா (Zuara). | ...... | கப்பல் தகர்க்கப்பட்டது. |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமான நிலயம்.—ஜெர்பினி (Gerbini). | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **14—9—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | *ஒரு சமாசாரமும் கிடைக்கவில்லை.* | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி போக்குவரவு மோட்டார்கள், கவசம்பூண்ட எதிர்ப்புக்குச் சாதகமான வண்டிகள்.-*எல்லைப்புற பிரதேசத்தில்.* | ...... | ...... |
| | விரோதி விமானங்களின் கூட்டம்.—*காம்பூத் (Gambut)தில் விமானமிறங்கும் இடங்களில்.* | *7 விமானங்கள்; 2 விமானிகள் தப்பித்தனர்.* | *14 விமானங்கள்; அநேக விமானங்களுக்குச் சேதம்; 8 விமானங்கள் தீப்பிடித்தன.* |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சண்டைகள், விமான நிலயத்திலிருந்தும் *விமானங்கள்.* | 18 | 29 *விமானங்கள்.* |
| | விமானங்கள்.—*யுத்த அரங்கம் பூராவும்.* | | |
| | விரோதி டாங்கிப் படைகள்.—*லெனின்கிராட்டு (Leningrad)க்கு அருகாமையில்.* | ...... | ...... |

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **9—9—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | *விமான நடமாட்டமேயில்லை* | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ.—(Moscow), *லெனின்கிராட்* (Leningrad). | 1 *விமானம்.* | *சேதமில்லை.* |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **9—9—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ்.—(Suez) *கால்வாய்ப் பிரதேசம்* | 1 *விமானம்; மற்றொன்று சேதமாயிற்று.* | *சொற்பச் சேதம்* ...... |
| **10—9—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | *விமான நடமாட்டமேயில்லை.* | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | ...... | *விரட்டப்பட்டன.* |
| | **பாலெஸ்டன் (Palestine).** | | |
| | ஒரு இடம்.—*எகரு (Acre)க் கருகாமையில்.* | | *ஒருவருக்கும் காயமில்லை.* |
| **11—9—41.** (வியாழக்கிழமை) | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு இடம்—*வடகிழக்கு ஸ்காத்லாந்து* (Scotland). | ...... | *சேதமில்லை.* |
| | இரவில்.—கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்கள்.—*இங்கிலாந்து* (England). | ...... | *சிலர் காயமடைந்தனர்.* |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | 11 *விமானங்கள்.* | ...... |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) *கால்வாய்ப் பிரதேசம்.* | 1 *விமானம்; அநேகம் சேதமாயின.* | *சேதமில்லை.* |
| | **வட கடல் (North Sea).** | | |
| | காவல் புரியும் பிரிடிஷ் (British) கப்பல் *வட கடலில்* (North Sea). | 1 *விமானம்.* | *ஒரு சிறிய கப்பலுக்கு சொற்பச் சேதம்.* |

| தேதி. லக்ஷியங்கள். | | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **12—9—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—இங்கிலாந்தி (England)ன் வட கிழக்குக் கடற்கரைப் பிரதேசம். | | ...... | சொற்ப சேத மட்டில். |
| ஒரு இடம்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | | 2 விமானங்கள். | சில வீடுகள் சேதமாயின. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| லெனின்கிராட் (Leningrad). | | ...... | ...... |
| **13—9—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரை. | | ...... | சொற்பச்சேதம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| லெனின்கிராட் (Leningrad). | | ...... | ...... |
| **14—9—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | |
| | **எகிப்து (Egypt).** | | |
| ஸூயஸ் (Suez) கால்வாய்ப் பிரதேசம். | | ...... | ஒருவருக்கும் காயமில்லை; சொற்பச் சேதம். |
| **15—9—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| பிரிடன் (Britain) பூராவும் விமான நடமாட்டமேயில்லை. | | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| லெனின்கிராட் (Leningrad) | | ...... | சேதமில்லை. |
| ருஷ்ய ஸ்தானங்கள்.—லெனின்கிராட் (Leningrad)டைச்சுற்றி. | | ...... | ...... |



# சில முக்கிய சம்பவங்கள்.

## அபாயமும் அதைத் தடுக்கத் தருணமும்.

சென்ற வாரப்பதிப்பில் 32-ம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் வியாசம் இங்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

*"ஹிட்லர் இந்தியாவின் எல்லைப்புற வாசல்களில் வந்து நிற்கலாம்—ஆனால் அது அவனுக்கு ஒருவித பிரயோஜனத்தையும் அளிக்காது"—வின்ஸ்டன் சர்ச்சில்.*

அச்சு நாடுகள் இந்தியாவில் ஆக்கிரமிக்க வெளிப்படையாகவே பயமுறுத்துகின்றன. இவ்விதம் அவைகள் செய்வது முதல் தடவை அல்ல. "இந்திய எல்லைப் புறங்களுக்கு நாஸிகள் வருவதை எதிர்பாருங்கள்" என்று ஸெப்டம்பர் 4-ல் ரோமிலிருந்து ஹிந்துஸ்தானி பாஷையில் ஒலிபரப்பப்பட்டது. அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிற்பட்டு தன்னுடைய கூட்டாளி யோஜனையின்றியில் ஒலிபரப்பிய விஷயத்தை மாற்றிவிட "ஜெர்மனிக்கு இந்தியாவை எதிர்க்க உத்தேசமே கிடையாது" என்று பெர்லினிலிருந்து ஹிந்துஸ்தானியில் ஒலிபரப்பப்பட்டது.

வி வி வி வி வி

"ஜெர்மனிக்கு ஆஸ்திரியா, ஸெகோஸ்லோவாகியா, போலாந்து, நார்வே, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ், யூகோஸ்லாவியா, கிரீஸ், அல்லது ருஷ்யா இவைகளை எதிர்ப்பதற்குக் கொஞ்சம்கூட இஷ்டமே கிடையாது" என்று ஜெர்மன் வாக்காளர்கள் எதிர் மறுத்து பேசினார்கள். "எல்லைப்புறங்களில் நாஸிகள் வரும்வரை சும்மாயிருந்தால்", அந்நாடுகளின் அனர்த்தத்திற்குக் காரணமாகும்.

வி வி வி வி வி

ஆனால் மற்றொரு விதத்தில் இந்தியாவும் அச்சு நாடுகளின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அச்சு நாடுகள் எதிர்பார்க்கக்கூடியபடி இந்தியத் துருப்புகள் நிராயுதபாணிகளாகவும், அஜாக்கிரதையோடும் இருக்கவில்லை. இதனால் அச்சு நாடுகள் கோபங்கொள்ளுகின்றனர். மேலும் இந்தியா எல்லைப் புறங்களில் பாதுகாப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவே அச்சு நாடுகளின் பேராசை தடைப்பட்டதற்கு அத்தாக்ஷியாகும்.

சென்ற ஒரு வருஷத்திற்கு கொஞ்சமுன்பு பிரிடனின் நம்பிக்கையுள்ள சிநேகிதனான பிரான்ஸ் விழுந்ததும், இதுவரை பரீக்ஷை செய்யாத விரோதியான இதாலியுடன் சண்டை போடவேண்டிய தருவாயில், இந்தியாவின் மர்மஸ்தானமாகிய மேற்கு எல்லைப்புற வாசலாகிய எகிப்து, ஸூயஸ் கால்வாய் இவைகளைப் பாதுகாக்கவேண்டிய பெரிய பிரச்னை பிரிடனை வாதித்துவந்தது. பிரிடனைப்

படையெடுக்க ஹிட்லர் குறிப்பிட்ட தேதியான 1940, செப்டம்பர் 15-ல் கிரேஸியானி எகிப்தின் எல்லைப்புறத்தைத் தாண்டி, அலெக்ஸாண்டிரியாவை வெகு விரைவில் பிடிப்பதாக வீராப்புப் பேசினான்.

இதாலியர்களின் எதிர்ப்புகள் சிதறத்தப்பட்டன. டிஸம்பர் மாதத்தில் ஸிடிபரானியில் பிரஸித்திபெற்ற யுத்தம் நடந்தது. இதில் இதாலியர்கள் லிபியாவிலிருந்து விரட்டப்பட்டு எங்கு பார்த்தாலும் நல்ல அபிப்பிராயத்தை இந்தியப் பட்டாளங்கள் பெற்றன. இதிலிருந்து முஸோலினி ஜெர்மானியர்களால் காப்பாற்றப்பட்டார். இந்த ஜெர்மானியர்களை இப்பொழுது பிரிடிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் அதே தீர்மானத்துடன் எதிர்க்கின்றனர்.

இதற்குப் பிரதியாக இச்சமயத்தில் இதாலியர்கள் செங்கடலில், பிரிடிஷ் ஆதிக்கம் முடிந்துபோயிற்றென்றும் சொல்லிக்கொண்டார்கள். கிழக்கு ஆபிரிக்காவில் இதாலிய சாம்ராஜ்யம் பூராவும் பழிக்குப் பழியாக அழிந்துவிட்டது. மேலும் கெரேன் என்ற இடத்தில் பலமான முற்றுகை போட்டு அங்கு பிரிட்டனுக்கு மகத்தான வெற்றி கிடைத்தது. இந்த யுத்தத்தில இந்தியத் துருப்புகள் நல்ல கீர்த்தி பெற்றார்கள்.

வெளிப்படையாக யுத்தம் புரிய தடையேற்பட்டவுடன் அச்சு நாடுகள் வஞ்சகமாய் போர்செய்யப் பார்த்தார்கள். இராக், ஸிரியா, இரான் இவைகளைச் சுற்றி வளைத்துக்கொண்டு, ஒவ்வொன்றையும் முறையே அழிப்பதற்கு உள்ளூர சூழ்ச்சிகள் செய்தார்கள். இவ்விதமாக இந்தியாவைப் பிடிக்க எத்தனிக்கப்பட்டது. பிரிடிஷாரும், நேசதேசப் படைகளுடன் சேர்ந்து சரியான சமயத்தில் அபாயங்களைத் தடுத்தார்கள். ஒவ்வொரு யுத்தத்திலும் இந்திய வீரர்கள் மிகவும் ஆண்மையுடன் போர்புரிந்து தீரச் செயல்களைக் காட்டியிருக்கின்றனர்.

மூன்றுவது வருஷ யுத்த ஆரம்பத்தில் இந்தியாவின் இருபுறங்களிலும் தாக்கப்படுமென்ற அபாயம் அதிகப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது இந்தியாவினுடைய பாதுகாப்பு நன்றாய் பலப்பட்டு இருக்கிறது.

### பிரிடிஷ் விமான எதிர்ப்புகளில் நேர்ந்த நஷ்டம்.

| | | | |
|---|---|---|---|
| செப்டம்பர்—டிஸம்பர் | 1939 | ... | ... 26 |
| ஜனவரி—டிஸம்பர் | 1940 | ... | ... 349 |
| ஜனவரி—ஆகஸ்டு | 1941 | ... | ... 959 |

இந்த எண்ணிக்கைகளைக் கவனிக்க விமானத் தாக்குதலின் நடவடிக்கைகள் ரொம்ப அதிகரித்துவருகிறது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. விமானக் கைத்தொழிலையும் விமானநிலயங்களை அழிக்க நாஸிகளின் முயற்சிக்குத் தப்பி பிரிடிஷ் விமான உற்பத்தி குறைவுபடாமல் வளர்ந்து வருகிறதும், அதிலிருந்து தெரிகிறது.

# திருப்தியளிக்கும் முன்அறிவிப்பு.

## 8 விஷய அறிக்கையிலிருந்து அனுமானிக்கப்பட்ட 6 அம்சங்கள்.

## ஜெர்மனியைத் தோற்கடிக்க ஆங்கில-அமெரிக்கத் தந்திரம்.

## பிரசுரமான 6 அம்ச திட்டம்.

இனிவரும் இரண்டு வருஷங்களுக்குள் ஜெர்மனியைத் தோற்கடிக்க லாயக்காக ஆங்கில-அமெரிக்க திட்டத்தின் தந்திரப்படி ஒரு ஆறு விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இது அதிகார வர்க்கங்களில் ஒப்புக்கொள்ளப்படுவதாக டெயிலி எக்ஸ்பிரஸின் நியூ யார்க் நிருபர் ஆகஸ்டு 20-ம் தேதி கேபிள் மூலம் அனுப்பினர். இந்த திட்டம் கடலில் சர்ச்சில்-ரூஸ்வெல்டு பேசியதின் ஸாராம்சம் தான். அந்த ஆறு விஷயங்கள் பிரதானமாக அடியில் குறிப்பிட்டிருக்கிறது.

1. இந்த மாரிகாலம் நாஸிகளை எதிர்த்துப் போர்புரிய லாயக்காக எல்லா உதவிகளையும் ருஷ்யர்களுக்கு அனுப்புவதும், வஸந்தகாலச் சண்டைக்குத் தேவையானதை சேமித்துவைப்பதும்.

2. சைனுவுக்கு உதவியை முன்போல அனுப்பி தூரக்கிழக்கில் ஜப்பானை சூழ்ந்துகொள்ளுவதும், நேசதேசங்களுக்கு எவ்வித தீங்கை விளைவித்தாலும் யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிடன், ருஷ்யா உடனே யுத்தத்தை தொடங்குமென்ற பயத்தை ஜப்பானுக்கு உண்டுபண்ணுவதும்.

3. மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் பிரிடிஷாருக்கு அமெரிக்க நிலயங்களிலிருந்து அதிகமான விமானங்களும், டாங்கிகளும் அனுப்புவதால் மாரிகாலத்தில் ஜெர்மன் போக்கைத் தடைசெய்வதும்.

4. பிரிடனுக்கு முடிந்தவரை சீக்கிரத்தில் அமெரிக்க பாம்பர் விமானங்களை அனுப்பி பிரிடிஷ் விமானங்கள் மாரிகாலத்தில் ஜெர்மனியைத் தாக்குவதை விருத்தி செய்வதும், 1942-க்குள் ஜெர்மன் லுப்ட்வாபிப் படையைக் காட்டிலும் மேலான தன்மையை அடைவதும்.

5. நாஸிகள் பயமுறுத்தும் முக்கிய நாடுகளான இரான், டகர், ஆஜோர்ஸ், கேப்வர்டித் தீவுகளை ஆக்கிரமித்தோ, தாக்கியோ, நாஸிகளை வசப்படுத்துவதும்.

6. அடுத்த வருஷம் ஜெர்மன் படையெடுப்பை எதிர்க்கப் போதுமான தற்காப்பு தந்திரங்களைக் கையாளுவதும், சில விமான படையெடுப்புகளை விரோதி நாட்டில் செய்வதும், 1943-ல் வஸந்த காலத்தில் ஜெர்மன் சைனியத்தை நிலத்தில் எதிர்க்க பெரிய சைனியத்தைத் திரட்டுவதும், ஆகிய இவைகள்தான்.



## ஒரு ஆச்சரியமான விமானம்.

## டக்ளஸ் பி. 19, 83 டன் பாம்பர் விமானத்தின் தோற்றங்கள்.

## அது பிரிடனிலிருந்து பெர்லினுக்கு ஓரேதடவையில் போட்ட என்ணெயுடன் 8 தடவைகள் போய் வரக் கூடியது.

கலிபோர்னியாவிலுள்ள மார்ச்பீல்டிலிருந்து நோயல் மன்க்ஸ் "டெய்லி மெயில்" பத்திரிகைக்கு, ஆகஸ்டு மாதம் 21-ல் கேபிள் மூலம் பின்வருமாறு செய்தியனுப்பினர்.

தற்போது விமானங்கள் உலகத்தில் ஆச்சரியமாக சஞ்சரிக்கும் மாதிரியை கொஞ்சநேரம் ஆராய்ச்சி செய்ததில், டக்ளஸ் பி. 19 என்பதுதான் உலகத்திலேயே அபூர்வமான விமானம் என்று தெரிகிறது. அதன் நிறை 83 டன். பிரிடனிலிருந்து பெர்லினுக்கு 20 டன் நிறையுள்ள வெடிகுண்டுகளைச் சுமந்து கொண்டு ஒரு தடவைபோட்ட என்ணெயின் உதவியால் 8 மடங்கு விடாமல் போய்வரவும், அல்லது நியூ யார்க்கிலிருந்து லண்டன்வரை 180 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு நடுவில் ஒரு இடத்திலும் தங்காமல் செல்வதற்கும் சக்தி வாய்ந்தவை. அந்த விமானத்தைச் சேர்ந்த ஒரு எஞ்ஜினியரான மிஸ்டர் ஜான் கிராண்ட் என்பவர் என்னையும் அவருடைய ஆச்சரியமான விமானத்தில் ஏற்றிச் செல்ல ஒருதடவை அழைத்துச் சென்ருர்.

அந்த விமானத்திற்குள்ளே போவதென்ருல் 14 படிகளடங்கிய ஒரு ஏணி வழியே ஏறிச் செல்லவேண்டும். அங்கிருந்து முன்னலையைப் பார்த்தால் அந்த இடம் ஒரு சிறிய மின்சார உற்பத்திசாலைபோல் தோன்றுகிறது. விமானத்தை ஒரு தடவை சுற்றிப் பார்த்தால் அதில் 300 டயல்கள் இருக்கின்றன. விமானத்தைச் சுற்றி பூராவும் என்னிடம் காண்பித்து வருகிறபொழுதே, தான் அதை நிர்மாணித்ததாகவும், அதன் உற்பத்தி முதற்கொண்டு கட்டி முடிக்கிறவரையிலும் அதைப்பற்றிய சில விஷயங்களை என்னிடம் கூறினர்.

சுமார் 500 எஞ்ஜினியர்கள் 7 லக்ஷம் மணிகள் நேரம் வேலைசெய்து அந்த விமானத்தைக் கட்டி, அதிலுள்ள எஞ்ஜின் வகையராக்களை அமைத்தனர். அதன் மற்ற பாகங்களை சில்லரைத் தொழிலாளிகளைக்கொண்டு கட்டிமுடிக்க 15 லக்ஷ மணிகள் பிடித்தன. மேலும் பாம்பர் விமானத்தைக் கட்டத் துவக்கி பிளான் எடுத்தது முதற்கொண்டு, கட்டிமுடிந்து அதை ஆகாயத்தில் வெள்ளோட்டம் விடும் வரை நாலு வருஷங்கள் பூராவாக ஆயின. அதில் எங்கும் சடையப்பட்ட திருகாணிகளின் எண்ணிக்கை 30 லக்ஷம்; அதில் வைத்திருக்கும் மின்சாரக் கம்பிகள் மொத்தத்தில் 12 மைல் நீளமுள்ளவை.

அதன் அச்சு ஆணி 17 அடி நீளம்; அதன் இறக்கைகள் ஒவ்வொன்றும் 212 அடி அகலம். அது தரையிலிறங்குவதற்காக அமைக்கப்பட்ட கீழ் சக்கரம் 8 அடி உயரமுள்ளது. மேலும் அது மணிக்கு 200 மைலுக்கு இன்றும் அதிக

மாகவே செல்லக்கூடியது; அதன் செல்லும் தூரம் 8,000 மைல். அதைச் செலுத்த 10 விமானிகள் உண்டு. அது ஒரே சமயத்தில் 11,000 காலன் எண்ணெயும் அத்துடன் 20 டன் நிறையுள்ள குண்டுகளையும் சுமந்து செல்லும் சக்தி வாய்ந்தவை. அதில் 12 இடங்களில் பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதன் பீரங்கிக்காரர்கள் உள்பட அதில் மொத்தம் 23 விமானிகள் இருக்கிருர்கள்.

விமானத்தின் பின்பக்கத்தில் சினிமா இருட்டறைப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகாயத்தில் செல்லும்பொழுது ஏற்கனவே சொன்ன டயல்கள் மாதிரி மற்ெருரு செட்டு இங்கே வைக்கப்பட்டு அவைகளின் குறிப்புகளை இந்த சினிமா படம் பிடித்துக்கொண்டேபோகிறது. எஞ்ஜினியர் மேஜையின்பேரில் வைக்கப்பட்டிருக்கும் உறக்கப் பேசும் கருவி விமானம் பூராவிலும் ஒலிபரப்புகிறது.

இதில் வைக்கப்பட்டிருக்கும் நாலு பெரிய முக்கியமான எஞ்ஜின்கள் தவிர இதில் இரண்டு உதவி எஞ்ஜின்களும் இருக்கின்றன. அவை பம்பு அடிக்கவும், ரேடியோவுக்கும், விளக்குகளுக்கும் மின்சார சக்தி கொடுக்கின்றன; இன்னும் மின்சார சக்தியினால் ஓட்டப்படும் யந்திரங்களையும் நடத்துகிறது. பாம்பர் விமானமும் இடைவிடாது இரண்டுநாள் ஆகாயத்தில் பறந்து செல்லவேண்டியிருப்பதால் அதில் படுக்கை வசதியும், சாப்பாட்டு அறையும், தாழ்வாரமும் இருக்கின்றன. குளிர்ந்த சீதோஷ்ணத்தில் மணிக் கணக்காக பீரங்கிக்காரர்கள், பீரங்கிகளின் பக்கத்தில் இருக்கவேண்டியிருப்பதால், அவ்விடத்தை உஷ்ணப்படுத்த யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை பீரங்கிக்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் விசைகளை அமிழ்த்தவும், நிறுத்தவும் முடியும்.

---

## ஜனநாயகத்தின் ஆயுதசாலை.

## சாமான்கள் உற்பத்தியின் அபாரமான கணக்கு.

## தொழிலாளிகளின் அரசியல் கொள்கைகளை மாற்றுவது.

ஜார்ஜ் ஹேரால்மன் எழுதியது.

யுத்தத்தைப் பற்றி அமெரிக்க காங்கிரஸ் சபை பூரா சர்ச்சை நடத்தப்போகிறது. சைனியத்தில் சேர்ந்திருப்பவர்களை மற்றும் ஆறு மாதங்களுக்கு நீடித்து வைத்துக்கொள்வதையும், இப்பொழுது இருக்கும் 9,00,000 பேர்களை இன்னும் அதிகப்படுத்துவதையும், நிஸ்ஸந்தேகமாக மிஸ்டர் ரூஸ்வெல்டு சபை முன்னுல் சர்ச்சை செய்வார். ஐஸோலேஷன் கக்ஷியினர் சொல்லும் விதமாக இம் மசோதாவுக்கு எதிர்ப்பு மிகவும் கடுமையாகத் தானிருக்கும். இருந்தாலும் பிரஸிடென்டு இவ்விஷயத்தை நிறைவேற்ற தீர்மானத்திருப்பதால் சபையும் மசோதாவை அங்கீகரிக்கும். மேலும் அமெரிக்காவின் தற்காப்பு முயற்சியை



தடுப்பதும், அதற்கு விரோதமாக மொழி கொடுப்பதும் வரவர குறைந்து விட்டது. சரத் காலத்திற்குள் அரசாங்கத்தார் அழைக்கும் 25,00,000 பேர்கள் சைனியத்தில் சேர்ந்துவிடுவார்கள். அதனுல் யுனைடெட் ஸ்டேட்ஸ் சண்டைக்குத் தயாரான பலம்கொண்ட நாடாகும்.

ஜானுவ பிரதம உத்தியோகஸ்தனும், மும்மரமாக வெளிநாட்டு அரசியலில் ஈடுபடும்படி சொல்லுவதால் பொதுஜன கக்ஷியைச் சேர்ந்தவருமான ஜெனரல் மார்ஷல் ரகசியமான ஒரு செய்தி வெளியிட்டார். அதாவது பிலிப்பைன்ஸ், தெற்கு சைனு, தூரக்கிழக்கு நாடுகள் முதலில் கவனிக்கப்படவேண்டுமாம். உலகத்தின் எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்த அமெரிக்க உள்நாட்டு இலாகா, தூரக்கிழக்கின் சம்பவங்களை அதிகக் கவலையுடன் கவனிக்கிறது. அரசியல் வர்க்கத்திலும், ஜப்பானின் ஆக்கிரமத்தைப் பற்றிக் கொஞ்சமில்லை. இரண்டு கடல்களிலும் யுத்தம் வந்தால் அமெரிக்கா எதிர்க்கும்படி இருக்குமாதலால் பிரஸிடென்டு தளவாட உற்பத்தியை விருத்திசெய்யச் சொல்லுகிருர்.

தளவாட உற்பத்தியின் நிலை இவ்விதமாக இருக்கிறது. அமெரிக்காவில் செய்யப்படும் சாமான்களில் எழிலொன்று யுத்த தளவாடங்கள். நாட்டைத் திட்டப்படி அடுத்துவரும் கோடை காலத்தில் மூன்றிலொன்ருக ஆகிவிடும். சென்ற வருஷத்தைவிட எழு மடங்கு அதிகமாக, அதாவது 27 லக்ஷம் வேலையாட்கள் இச்சாமான்களைச் செய்வதில் ஈடுபட்டிருக்கின்றனர். அடுத்த கோடைக்குள் இது 58 லக்ஷமாக அதிகப்படும். ஆனல் யந்திரங்களுக்குவேண்டிய ஆயுதங்களின் குறைவால் கொஞ்சம் தாமதமாகச் செய்யப்படுகின்றன. இருந்தாலும் சென்ற 12 மாதங்களுக்குள் ஆயுதங்கள் மூன்று மடங்கு அதிகமாகி இருக்கின்றன. ஆயிரம் யந்திர சாமான்கள் தினம் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதைவிட 250 குறைவாகத்தான் மற்ற இடங்களில் கொடுக்கப்பட்டன. போன வருஷத்தில் மாதம் 20 டாங்கிகள் செய்யப்பட்டதில் இப்பொழுது 390 விதம் இருக்கின்றன. இவ்வருஷம் முடிவடைவதற்குள் மாதம் 2,500 விமானங்கள் செய்ய முடியுமென்று சொல்லப்படுகிறது. இவைகள் எல்லாவற்றிலும் கப்பல் கட்டுவதில் தான் அதிக துரிதப்படுத்தப்படுகிறது. அடுத்த வருஷத்திற்குள் 54,00,000 டன் கப்பல்கள் கட்ட கப்பல் இலாகா ஏற்பாடு செய்திருக்கிறது. இதனுல் ஒரு வருஷத்தில் பிரிட்டனுக்கு நேர்ந்த நஷ்டத்தை ஈடு செய்யமுடியும். இவ்வளவு இருந்தும் பூராவாக யுத்தத்தில் ஈடுபட இன்னும் அதிகம் தேவையாக இருக்கிறது என்று பிரஸிடென்டு நினைக்கிருர்.

ஹிட்லரை எதிர்க்க அமெரிக்காவில் செய்யப்படும் சாமான்கள் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று ரூஸ்வெல்டு நம்புகிருர். அதற்கு வேண்டிய கடும் சட்டங்களைச் செய்வதில் பின்வாங்கவில்லை. பொதுஜனங்கள் உபயோகிக்கும் அலுமினியத்தில் ஐந்தில் நாலு பங்கு குறைத்தும், ஏற்கனவேயுள்ள குத்தகைகளை முறித்தும் யுத்த சாமான்கள் செய்வதற்குக் குறைந்ததை ஈடுசெய்து விட்டார். ரேனல்ட்ஸ் என்றவரின் கீழ் மூன்று கம்பெனிகளுக்கு அலுமினியம்

தொழிற்சாலை நடத்த அமெரிக்க அரசாங்கத்தால் நடத்தப்படும், தளவாட உற்பத்திக்குக் கடன் கொடுக்கும் சங்கத்தால் 25,00,00,000 டாலர்கள் கடன் கொடுத்து வருஷம் ஒன்றுக்கு 7,00,000 டன் சாமான்கள் செய்யப்படுகிறது. இரண்டு ஜெர்மன் கம்பெனிகளுக்கு விட்டிருந்த குத்தகை நியாய சபையால் ரத்துசெய்யப்பட்டது.

இதைவிட புதிதாக வருமான வரியும் அதிகம் போடப்பட்டிருக்கிறது. இதனால் 3½ லக்ஷம் கோடி டாலர்கள் கிடைக்கிறதாயும், இதைப் பற்றி சர்ச்சை செய்யும்போது, வரி விகிதத்திலேயே 5 லக்ஷம் கோடிக்கு உயர்த்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. இவ்வளவு அதிகமாக ஒருவரும் எதிர்பார்த்ததில்லை. ஆனால் இவையாவும் யுத்த தளவாடங்களைச் செய்யத்தான் உபயோகப்படுத்தப்படும்.

இதற்குச் சாதகமாக, ருஷ்ய-ஜெர்மன் யுத்தம் ஆரம்பித்த முதல், தொழிலாளிகளின் மனப்பான்மையும் மாறிவிட்டது. எல்லா வர்த்தகச் சங்கங்களும் ஒன்று சேர்க்கப்பட்டதால் ருஸ்வெல்டுக்கு விரோதமானவர்களெல்லாம் ருஷ்ய யுத்தத்தைக் கேட்டு ருஸ்வெல்டுக்குச் சாதகமாக இருக்கிறார்கள். யுத்தத்தில் ஈடுபடுவதைப்பற்றி சந்தேகப்பட்டாலும், ருஷ்யாவுக்கு உதவுவதை வேலைக்காரர்களும் ஒப்பக்கொள்ளுகின்றனர். காலப் சீட்டுக் குலுக்குவதின் முடிவு சில தினங்களுக்கு முன் வெளிவந்தது. இதுதான் அமெரிக்கப் பொதுமக்களின் அபிப்பிராயத்தைச் சரியாக வெளிப்படுத்தும் அங்கமாகும். இதன்படி யுனைடெட் ஸ்டேட்ஸில் ருஷ்யர்களுக்கு விரோதமான எண்ணம் இல்லை என்பது வெளியாயிற்று. 100-க்கு 4 பேர்தான் ஜெர்மன் வெற்றியையும் ருஷ்யத்தோல்வியையும் எதிர்பார்த்தார்கள். 100-க்கு 72 பேர் ருஷ்ய வெற்றியை விரும்பினார்கள்.

இந்த மொத்தக் கணக்கைக் காட்டிலும் வருமானத்தைப் பொருத்த தனிப்பட்ட நபர்களின் பிரிவுகளின் அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது. உயர்தர வருமானமுள்ளவர்களில் 100-க்கு 5 பேர் ஜெர்மனியின் வெற்றிக்கும், நடுத்தரத்தில் நால்வரும், கீழ்பட்டவர்களில் 5 பேரும் இருப்பதால் இவ்வித்தியாசங்களைச் சொல்லவேண்டிய தேவையே இல்லை. ஏனென்றால் பணக்காரர்களும் ஏழைகளும் ஒரே நோக்கம் கொண்டிருப்பது வெளியாயிற்று. பிராடெஸ்டெண்டு மதத்தினரில் 100-க்கு மூவரும் காதலிக் கக்ஷியில் ஆறுபேரும் தான் ஜெர்மன் வெற்றியை விரும்புகிறார்கள்.

---



# இந்தியா கவனிக்கவேண்டிய விஷயம்.

## யுத்தச் செலவை பிரிடன் எவ்விதம் செய்கிறது.
## சாமான்களை உற்பத்தி செய்வது முக்கிய பிரச்னை.
## பொக்கிஷ மந்திரி செய்யவேண்டியவை.
## அதிகமாக மிச்சம் பிடித்து யுத்தத்திற்கு உதவவேண்டியதின் அவசியம்.

பார்லிமெண்டு மெம்பர் கனம் F. W. பெதிக் லாரன்ஸ் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது.

வாரம் ஒன்றுக்கு 70,00,000 பவுனுக்கு அதிகமாகவே யுத்தச் செலவு நடக்கிறது. இப்பணம் எங்கிருந்து கிடைக்கிறதென்றும் எப்படி செலவாகிறதென்றும் கேட்கிறார்கள். இதற்கு என்னுடைய பதில் என்னவென்றால் பணம் வருவதுமில்லை, போவதுமில்லை, ஆனால் எல்லாப் பணமும் கைமாறிச் சுற்றிவருகிறது என்பதுதான்.

ஒவ்வொரு வாரமும் நாம் வரிகளைச் செலுத்துகிறோம். சிக்கனப் பத்திரங்கள் வாங்குகிறோம். யுத்தக் கடன் கொடுக்கிறோம். பொக்கிஷ மந்திரி இப்பணங்களை வசூல் செய்கிறார். இன்னும் தேவையானால் பாங்கிகளிலிருந்தும் கடன் வாங்கிக்கொள்ளுகிறார். வாங்கிய இப்பணத்தையெல்லாம் திரும்ப சிப்பாய்களுக்கும், மாலுமிகளுக்கும், விமானிகளுக்கும், இவர்களைச் சார்ந்தவர்களுக்கும் சம்பளமாகப் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதைத் தவிர குத்தகைக்காரர்களுக்குக் கொடுப்பதுடன் மற்றும் எல்லாவிதமான வகையிலும் செலவு செய்யப்படுகிறது.

இவ்விதமாக பொதுமக்கள் பணம் எப்படியாவது ஒரு விதத்தில் மறுபடி பொதுஜனங்களிடம் வந்து, வரி செலுத்தவும், ஸர்க்காருக்கு கொடுக்கவும், பாங்கிகளில் போடவும் உபயோகமாகிறது. ஆனால் இத்துடன் யுத்தத்திற்கு பணம் கொடுக்கும் பிரச்னை சல்லிசாக தீர்ந்துவிட்டால் நன்மைதான். வாரம் ஒன்றுக்கு இன்னும் அதிகச் செலவு பிடித்தாலும் செலவு செய்யலாம்.

### முக்கிய பிரச்னை.

ஆனால் உண்மையில் நடக்கும் விஷயங்களுக்கு இது கொஞ்சம் மாறுபட்டிருப்பதால் முன் சொல்லியபடி அவ்வளவு சுலபமான விஷயமாகாது. ஏனென்றால் பெரியதொரு யுத்த முயற்சியை அதிகப்படுத்த ஒரு தடையுண்டு. அது பணக்குறைவல்ல; தேவையான சாமான்கள் கிடைக்காததுதான். உதாரணமாக எவ்வளவு பணம் வைத்துக்கொண்டிருந்தாலும் தொழிலாளிகள் கிடைத்து, தொழிற்சாலைகள் கட்டி, எஃகு உருக்கி சரியான விமான பீரங்கிகள் செய்ய முடியாது.

ஆகையால் யுத்த சமயத்தில் தளவாட சாமான்களைச் சேகரிப்பதும், தொழிற்சாலைகளைக் கட்டுவதும், அவைகளுக்குத் தேவையான தொழிலாளிகளைப் பிடிப்பதும்தான் முக்கிய பிரச்னை. ஒரே சமயத்தில் நம்முடைய சொந்தத்

தேழ்வைகளுக்கு சாமான்கள் வாங்குவதற்கும், முடிந்தவரை யுத்தத்திற்கு இப்பொழுது நாம் செய்து வருவது போல் உதவுவதற்கும் வெகு வித்யாசம் இருக்கிறது. இவை இரண்டும் இல்லாமல் ஒரே சமயத்தில் தேசத்தின் க்ஷேமத்தை முன்னிட்டு சொந்த சௌகரியங்களைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும்.

## மற்றும் சில தியாகங்கள்.

பின் சொல்லப்போகும் மூன்றில் ஒன்று நிச்சயமாக ஏற்படவேண்டும். ஜனங்கள், தேவையானவைகளைத் தவிர இதர கௌரவமான சௌகரியங்களையும் அடைந்து அதிகமான சுக ஜீவனம் செய்ய கட்டாயமாக விரும்பினால், யுத்தம் நடத்துவதற்கு வேண்டிய உதவியைநாட, முன் சொன்ன சௌகரியங்களைக் குறைக்கும்படி ஜனங்களை பொக்கிஷ மந்திரி வற்புறுத்தப் பயப்படுவார். அப்பொழுது யுத்தத்தை ஜயிக்கப் போதுமானபடி உதவாததால் வெற்றியை நாம் அடையமுடியாது.

நிச்சயமாக இந்த நிலை ஏற்படாது. ஏனென்றால் பொதுஜனங்களுக்காக காமன்ஸ் சபையில் பேசுகிறவர்கள், புதிதான வரி விதிதங்களைப் போடும்படி சொல்லுகிறதுடன் இன்னும் இந்த யுத்தம் நடக்கும்வரை எல்லாவிதமான தியாகங்களும் செய்ய ஜனங்கள் தயாராக இருப்பதாக பொக்கிஷ மந்திரிக்கு சொல்லிவிட்டார்கள்.

இரண்டாவதாக, அதிக மீதம் பிடிக்கமுடியாத ஏழையான சிலரைத் தவிர பல ஜனங்கள் முடிந்தவரை உழைத்து சாதாரண ஜீவனம் செய்யத் தயாராக இருந்தும் மற்றும் சிலர் தங்கள் சௌகரியங்களைக் குறைத்துக்கொள்ள விரும்பாமலும் இருக்கலாம். அப்படியானால் யுத்தச் செலவுக்காக பொக்கிஷ மந்திரி பாங்கிகளிலிருந்து அதிகப்பணம் கடன் வாங்கவேண்டியிருக்கும்.

## சரியான வழி.

அப்பொழுது சென்ற யுத்த சமயத்தில் ஏற்பட்ட விதம்தான் நடக்க நேரிடும். அதாவது சாமான்களின் விலை அதிகப்பட்டு, அதிகப் பேர்களின் ஜீவன திட்டம் குறைந்து சிரமப்படுவார்கள். அதனால் சுகாதாரத்தையும், தைரியத்தையும் இழக்க நேரிடும். அப்படி யுத்தத்திற்கு உதவுவது சரியானதல்ல. ஏனென்றால் சிரமத்தைப் பொருக்க முடியாத ஏழைகளின் மேல் பாரம் தாங்கி தொந்தரவுக்குள்ளாவார்கள்.

மூன்றாவதாக, வீணாகிறதும், உபயோகமில்லாததுமான அம்சங்களின் செலவைக் குறைப்பதுதான். இவ்விதம் செய்வதால் பொக்கிஷ மந்திரிக்கு முடிந்தவரை நாம் உதவமுடியும். ஆனால் சென்ற வருஷத்தை விட அதிகமாக 30,00,00,000 பவுன் கொடுக்கலாம். இதைத்தான் நம்மிடமிருந்து எதிர் பார்த்தார்கள். வேண்டுமானால் அடுத்துவரும் ஒவ்வொரு வருஷமும் இன்னும் அதிகமாகக் கொடுக்கலாம்.

யுத்தத்திற்கு உதவ இதுதான் சரியான வழி. பிரிடிஷ் ஸ்திரீ புருஷர்களின் தைரியத்திற்கும் தீவிரத்திற்கும் இதுதான் சரியாகும்.



**விஷி அரசாங்கத்திற்கும் பிரெஞ்சு மக்களுக்கும் ஏற்பட்ட பிளவு விசாலப்படுகிறது.**

**பிடேனுக்கு மரியாதையும் இரக்கமும் காட்டப்படுகிறது.**

**டார்லான் பேரில் வெறுப்பு.**

**அரசாங்கத்திற்குள் சந்தேகமும் அவநம்பிக்கையும்.**

**பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக நேச தேசத்தார்களை சண்டைபோட டார்லானுக்குத் துணிவு உண்டாகுமா?**

ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி பிரெஞ்சுப் படையுடன் இருந்துவந்த பத்திரிகை நிருபர் "டைம்ஸ்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அநேக பிரெஞ்சு அதிகார சபையிலுள்ளவர்களும் உதவி அதிகாரிகளும் அவர்களுக்குச் சபையிலுள்ள உரிமைகள் பிரிக்கப்பட்ட பிறகு பிடேயின் அரசாக்ஷியைக் குறித்து வெளிப்படையாகக் கண்டனம் செய்ததற்காக கைதி செய்யப்பட்டார்கள் என்று பத்திரிகையில் கண்டிருந்தது. பிரெஞ்சு ஜனங்களுக்கும், விஷி அரசாங்கத்துக்கும் பிளவு அதிகரிப்பதற்கு மற்றுமுள்ள அறிகுறிகள் தோன்றுகின்றன. இந்த தேசத்தில் டி காலி படைகளில் சமீபத்தில் சேர்ந்த முதிர்ந்த பிரெஞ்சு உத்தியோகஸ்தர் அரசாங்கத்திற்கும் ஜனங்களுக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்து எனக்குச் சொன்ன அபிப்பிராயங்களை இந்த வளர்ச்சியை ஊர்ஜிதப்படுத்துகிறது.

## டார்லானின் போலீஸ் ஆக்ஷி.

டார்லான் ஜெர்மனியாலும் ஜெர்மனி அரசாங்கத்தாலும் உதவி செய்யப்பட்டு போலீஸ் அதிகாரத்தைக்கொண்டு ஆக்ஷி செய்கிறார். அதனால் அவர் பேரில் அவநம்பிக்கையும், வெறுப்பும் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்களால் லவாலுக்குப்பின் அவரை அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதென்று பிரெஞ்சு மக்கள் அறிவார்கள். அவர்களின் வெறுப்பு அதிகரித்துவருகிறது. சம்பாஷணையில் எங்கும் "தேசத்துரோகி டார்லான்" என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். பிரான்ஸ் பூராவும் சுவர்களில் எல்லாம் "அந்தோ டார்லான்!" ("டார்லான் அழிய") என்று எழுதப்பட்டிருக்கிறது. லவால் சமீபத்தில் "இந்த டார்லான் என்னை நல்லவனாக்கிவிட்டான் என்னைக் காட்டிலும் அவனுக்கு ஊர்பழி அதிகம்" என்று சொல்லியிருக்கிறார்.

இந்த வெறுப்புக்குக் காரணம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஜெர்மானியர்களோடு சேர்ந்து பிரெஞ்சுக்காரர்கள் கூடி வேலைசெய்வது என்ற அபிப்பிராயத்தைப் பிரெஞ்சுக்காரர்கள் வெறுக்கிறார்கள். வரவர எதிர்ப்பு வலுக்கிறது; அதிலிருந்து விபரீதமான காரியங்கள் நடக்கின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸுக்கும் ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸுக்கும் இந்தத் துறையில் யாதொரு வித்தியாசமுமில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸில் இன்னும் சில அதிகமான

ஜனங்கள் ஜெர்மானியரின் தோல்வியைக் கோருவார்கள் என்றே சொல்லலாம். ஆனால் இரண்டு இடங்களிலும் பெரும்பான்மையான ஜனங்களுக்கு ஒரே கோரிக்கைதான்.

## அடக்கிவைக்கப்பட்ட விரோதம்.

பிரெஞ்சு பார்லிமெண்டு அங்கத்தினர் பூராவும் விஷி அரசாட்சிக்கு பலமாக எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களைவிட பொது உடமைக்காரர்களிடமிருந்து பெருத்த கலவரம் ஏற்பட்டிருக்கிறது. சாதகமான சந்தர்ப்பம் ஏற்பட்டவுடன் இந்த உணர்ச்சி உள்நாட்டுக் கலகத்தை உண்டாக்கலாம். ஆனால் கலகத்திற்கு வேண்டிய ஸ்தாபனமும், தலைவர்களும், ஆயுதங்களும், இல்லாததினாலும் ராஜ்ஜியத்தில் கலகம் சாத்தியமாயில்லை. அதற்காக தங்கள் அபிப்பிராயத்தை அடக்கி வைத்துக்கொள்ளமுடியாமல் வெளிப்படுத்த எத்தனித்ததற்காக ஏற்கனவே அநேகர்கள் தங்கள் உயிரைத் தியாகஞ்செய்திருக்கிறார்கள்.

பொதுமக்களின் அபிப்பிராயம் பிடேயினிடத்தில் மரியாதையும், பரிதாபமும் கலந்து ஏற்படுகிறது. பொதுவாக பிரெஞ்சுக்காரர் நினைப்பது பின்வருமாறு:- "ஐயோ பாவம்! பெரிய கிழவர்; அவரை ஆட்டிவைக்கிறார்கள்" இதற்குத் தகுந்தபடி அவரிடத்தில் பயம் கிடையாது. அவருக்கு ஜெர்மானியரால் வைக்கப்பட்ட இதர தேசத்துரோகிகள் ஆட்டிவைத்தபடி ஆடுகிறார். பொதுவாக உள்ள அடிமைத்தனத்தில் முந்திய ஜயத்தின் ஞாபகச் சின்னமாக அவர் விளங்குகிறார். ஆனால் அவர் பேரிலுள்ள மதிப்புக்காக பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மனி ஜயித்தால்தான் தங்களுக்கு நன்மையும் கௌரவமும் ஏற்படும் என்று எண்ணவில்லை. இந்தப் பிரெஞ்சு உத்தியோகஸ்தரின் அபிப்பிராயப்படி பிடேனுக்கு செல்வாக்கினால் நன்மையில்லை. ஆனால் விபரீதத்தைமட்டும் தடுக்கிறது. பொதுவாகக் குழப்பம் ஏற்படாமல் தடுத்தோ, அதைக் காலஹரணம் செய்தோ அவர்வருகிறார்; ஆனால் பொதுஜன ஐக்கியத்தை உண்டாக்க அவரால் முடியவில்லை.

## அரசியல் சபை மெம்பர்கள் டார்லானுக்கு விரோதம்.

விஷி அரசாங்கத்திற்குள்ளேயே மந்திரிகள் ஒவ்வொருவருக்குள்ளும் வெறுப்பும், அவநம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் க்ஷீணித்து வருகிறது நன்றாகத் தெரிகிறது. அவர்களை எதிரிகளுடன் சமரஸப் படுத்தியதற்கு டார்லானை உள்ளூர வெறுக்கிறார்கள். தளகர்த்தர் ஹன்ட்ஸிஜருக்கு, டார்லான் பெயரைக் கேட்டாலேயே அருவருப்பு ஏற்படுகிறது. அவர் பெயரையே அவர் முன்னாலேயே சொல்லப்படாது. ஆகாய இலாகா மந்திரியான தளகர்த்தர் பர்ஜிராட் கெட்டிக்காரர், ஹன்ட்ஸிஜரைக் காட்டிலும் சமயோஜித புத்தியுள்ளவர். ஆனால் அவர் எம். கை-லா-சேம்பருக்கு சாதகமாகப் பொய் தஸ்தவேஜுகளைக் கொடுத்ததாக ரியாம் கோர்ட்டில் அவர் பேரில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதால் அவருக்கு உத்தியோகத்திற்கு ஆபத்து உண்டு. நியாய இலாகா மந்திரியான எம். பார்த்திலேமி மிகவும் யோக்கியமானவர். ஆனால் அவருக்குத் தைரியமில்லை; பயத்



தினாலோ, அதிகார ஆசையினாலோ அவர் நிர்ப்பந்தத்துக்கு உள்பட்டுவிடுவார். உள்நாட்டு புதிய மந்திரியான எம். புச்சன் என்பவரைப் பற்றி ஒன்றும் புரியவில்லை. மொராக்கோவில் உள்ள தளகர்த்தர் நோகுஸ் எந்த கக்ஷி வலுக்கிறதோ அதில் சேரக் காத்துக்கொண்டிருக்கிறார்.

## தளகர்த்தர் வேகாண்டைப் பற்றிய கதை.

விஷி அரசாங்கத்தில் வேகாண்டு என்பவரின் நிலை புரியவில்லை. அவரைப் பற்றி ஜாஸ்தி சொல்லாமலிருப்பதே நல்லது. வட ஆபிரிக்காவில் அவருக்குக் கீழ் 90,000 சிபாய்களுக்குமேல் இல்லை. அவர்களுக்குச் சாதகமாக டாங்கிகளும் இல்லை, பெரிய பீரங்கிகளும் இல்லை; கொஞ்சம் விமானங்கள் தான் இருக்கின்றன; ஆனால் பீரங்கிப் படையே கிடையாது. டி காலி பேரில் பயமிருந்தபோதிலும் கூட, வட ஆபிரிக்காவில் உள்ள படைகளுக்கு உதவி பலம் ஜெர்மானியர்கள் அனுப்பத் துணியவில்லை. சமீபத்தில் தான ஜெர்மன் ஜெயில் விடுதிகளிலிருந்து, விடுதலை செய்யப்பட்ட ஆபிரிக்கா துருப்புகளின் ஆயிரக்கணக்கான உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். பிரெஞ்சு ஜனங்களின் ஏகமனதான இஷ்டத்துக்கு விரோதமாக டார்லான் நேசதேசத்தார்களுடன் போர்தொடுப்பார் என்று நம்பப்படவில்லை. ஸிரியாவில் விஷி கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் ஜனங்கள் அங்கீகரிக்காமல் ஏற்கனவேயே உளர்படியாகிவிட்டது; பிரான்ஸிலும், வட ஆபிரிக்காவிலும் அநேக உத்தியோகஸ்தர்கள் ராஜினாமா கொடுக்கும்படி நேரிட்டது. காஸாபிளாங்காவையும், டாக்கரையும் ஜெர்மானியர்களுக்குத் தளங்களாக விட்டுக்கொடுத்தால், பிரெஞ்சு தேசத்தாரையும், அதன் சைனியத்தையும் அவமதித்ததாக ஆகும். ஆனால் டார்லான், ஜெர்மனி ஜயித்தால் தனக்கு லாபம் கிடைக்குமென்று பூரா நம்பிக்கையும் வைத்திருப்பதால் எதையும் செய்யக்கூடும். ஆனால் கப்பற்படையின் ஒரு பகுதியும், விமானப்படையில் கொஞ்ச பாகமும், சம்பளம் பெற்றுவரும் போர் வீரர்கள் மட்டும் தான் அவனைப் பின்பற்றுவார்கள்.

---

## 1940—தொடர்ச்சி.

பிறகு பிரிடிஷ் ஸோமாலிலாந்தைக் காலி செய்ததில் இதாலிக்கு, இந்து மஹா சமுத்திரத்தின் கடற்கரையில் 460 மைல் நீளமுள்ள பிரதேசம் ஒன்று சேர்ந்தது. "இந்தியாவிலிருந்துபிரிடிஷாருக்குள்ள பாதை பிரிடன் கையைவிட்டுப் போய்விட்டதாக" (ஆகஸ்டு 21உ) ஜெர்மானியர்கள் தற்புகழ்ச்சி செய்துகொள்ள நேரிட்டிருக்கிறது.

"நம்மால் முடிந்ததைச் செய்ய எண்ணுகிறோம்" என்று (ஆகஸ்டு 20-ம் தேதி) யில் சர்ச்சில் சொல்லுகிறார்.

4. இதாலி யுத்தத்தில் சேர்ந்ததில் பிரிடனின் நேசதேசமான பிரெஞ்சுக் கப்பற்படைக்குப் பதிலாக ஜெர்மனி பக்கம் பெரியதும், இதுவரையில் சண்டையில் சேராதிருந்த எதிரிக் கப்பற்படையைச் சேர்ந்தது. இந்தியாவுக்கு வரக்கூடிய கப்பல்களில் பெரும்பான்மையை நன்னம்பிக்கை முனைவழியாகத் திருப்ப நேரிட்டது.

"செங்கடலிலும், மத்திய தரைக்கடலிலும், பிரிடிஷ்

## 1941—தொடர்ச்சி.

அடைந்திருக்கிறார்கள்" என்று சர்ச்சில் (மேமீ 20-ல்) சொல்லுகிறார்.

மாட்சிமை தங்கிய மன்னர் இந்தியக் கப்பல் "பார்வதி", "நேத்திராவதி" இவைகளில் ஸோமாலிலாந்தைத் திரும்பக் கைப்பற்ற முதல் படைகள் பிரயாணஞ்செய்து பெர்பராவில் இறங்கின.

பிரிடிஷ் படைகளும் நேசதேசப்படைகளும் காலி செய்யப்பட்ட அபிஸீனியா, ஹெய்லி-ஸிலாஸியைத் திரும்ப வரவேற்கிறது. அவர் தான் முதன் முதலில் அச்சுநாட்டுக்கு பலியானார். அவர்தான் முதன் முதலில் தன் ராஜ்ஜியத்தைத் திரும்பப்பெற்றார்.

மேற்குப் பாலைவனப்போரிலும், ஸூடானிலும் எரிட்ரியாவிலும் மட்டில் அச்சு நாடுகளின் இழந்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது 2,13,000. இந்தியர்கள் இழந்தது 6,427. அவர்களில் ஒரு பங்கு கொல்லப்பட்டும், 5·7 பங்கு காயமடைந்தும் இருக்கிறார்கள். சென்ற மஹா யுத்தத்தில் மெஸபடோமியாவில் நடந்த போரில் இந்தியர்கள் சைனியம் இழந்தது 13,812; அவர்களில் இறந்தவர்கள் ஒரு பங்கு, காயமடைந்தவர்கள் 3·2 பங்கு.

4. டாரண்டோவிலும், மடாபனிலும் தினசரி கப்பற்படையும், பிரிடிஷ் விமானப்படையும் செய்யும் வேலையால் இதாலியக் கப்பல்கள், நாசகாரிகள், நீர்மூழ்கிகள் இவைகளில் கிட்டத்தட்ட பாதியை அழித்துவிட்டன. ஒரு பெரிய கப்பலும் மூழ்கடிக்கப்பட்டும், இன்னும் சில வகை சேதமடைந்தும் இருக்கின்றன.

செங்கடலில் எதிரி பூராவும் காலி செய்யப்பட்டு, மத்தியக்கிழக்குப் பிரதேசத்திற்கு யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து பொருள்கள்வர பாதையாக இருக்கிறது. பிரிடிஷ் கப்பலால் இதாலிய நீர்மூழ்கிக் கப்பல் பிடிபட்டு அதிலுள்ள எதிரிகளை முதல் முதலில் ஏடனுக்குக்கொண்டு செல்லப்பட்டார்கள். பிடிபட்ட நீர்மூழ்கிக் கப்பலும்



## 1940—தொடர்ச்சி.

ஆதிக்கம் முற்றுப்பெற்றது" என்று அக்டோபர் 23-ல் பெர்லின் பர்ஸியாவுக்கு ஒலிபரப்பிற்று. பால்கன் நாடுகளில் பரவச் செய்வதற்கு ஏடன் நகரில் இதாலியக் கொடி பறப்பதாக பொய்யாகப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. அச்சு நாடுகளின் வெடிகுண்டு விமானங்கள் இந்து மஹா சமுத்திரத்தில் கப்பல்களைத் தாக்குகின்றன. அச்சு நாடுகளில் ஒலிபரப்புக் கருவி பயமுண்டாக்குகிறது. பிரிடிஷ் இந்தியக் கப்பல் படையில் ஒற்றைப்பாய் மரக் கப்பல் "பெதான்" ஜூன் 24-ல் மூழ்கடிக்கப்பட்டது, அபாயம் சமீபத்திருப்பதைக் காட்டுகிறது.

5. இதாலிக்கு 2,000-க்கு மேல் முதல்தர விமானங்களும், சமீபத்தில் உள்ள தளங்கள் அச்சு நாடுகளும் இருக்கின்றன. அக்டோபர் மாதத்தில் பக்ரீயில் பிரசார எதிர்ப்பு இதாலி வெகுதூரம் தாக்கி மிரட்டக்கூடுமென்று பாராட்டப்பட்டது.

6. இதற்கிடையில் இந்தியாவின் மத்தியக் கிழக்குப் பாதுகாப்பின் உள்ளூர இருந்து பலத்தைக் குறைத்தும், "பொய்ப் பிரசாரகர்களால் உதவிசெய்யப்பட்டும், விஷி பலஹீனத்தால் ஆதரிக்கப்பட்டும் அச்சு நாடுகளின்

## 1941—தொடர்ச்சி.

இழுத்துச் செல்லப்பட்டது.

இந்து மஹா சமுத்திரத்தில் எச். எம். எஸ். "கார்ன்வால்" என்னும் கப்பலால் ஜெர்மன் வெடிகுண்டு கப்பல் மே மாதம் 9-ல் மூழ்கடிக்கப்பட்டது. இந்தியாவுக்குச் செல்லும் கப்பல் மார்க்கங்கள், பிரிடிஷ் கப்பற்படை, பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை இவைகளின் ஆதிசத்தில் இருப்பதை ரூபிக்கிறது.

5. இதாலி 3,565 விமானிகளை இழந்ததாக ஒப்புக்கொள்ளுகிறது. அதன் கைப்பற்றின தளங்கள் புகைந்துபோய்விட்டன.

6. அராபி நாடுகளில் விஞ்ஞான சாஸ்திரப்படி குறிப்பிட்ட அச்சு நாடுகளின் திட்டங்கள் சரியான சமயத்தில் பிரிடிஷாரும் நேசதேசத்தாரும் சேர்ந்து தட்டிவிடப்பட்டன.

இராக்கில் ரஷீத் ஆலி அச்சுநாடுகளில் லஞ்சம்பெற்று, அதிகாரம்பெற்று பிரிடிஷ் துருப்புகளைத் தாக்கி, இந்தியாப் பாதுகாப்புகளையும், போக்குவரத்துகளையும் பயமுறுத்தினான். பிரி

# வருஷாந்திரப் பகுதி—1941-ம் வருஷம்

## லாப நஷ்ட ஜாபிதா—மூன்றுவது வாரம்.

### இந்தியாவின் அபாயமும், அதைத் தற்காப்பு செய்துகொள்ளும் தருணமும்.

### I—அச்சு நாடுகள்.

#### 1940

#### சர்வாதிகாரிகளின் எண்ணங்கள்.

1. வடமேற்கு ஐரோப்பா கைப்பற்றப்பட்டும், பிரிடன் அபாயகரமான நிலைமையில் பயமுறுத்தப்பட்டும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு மிகவும் கஷ்டமான நிலை ஏற்பட்டிருந்தது. அது சமயம் இதாலி கோழைத்தனமாக பின்புறமாகத் தாக்கிற்று.

2. இந்தியாவுக்கு உயிர் நிலைபோலுள்ள மேற்கு எல்லைப்புற வாயிலான எகிப்து, ஸூயஸ் கால்வாய் பாதுகாப்பு, பிரஞ்சுக்காரர்கள் தோல்வியினாலும், இதாலியர்களின் விரோதத்தினாலும் மிகக் கஷ்டமான பிரச்னையாகத் தெரிகிறது.

கெய்ரோ வாரப்பத்திரிகை ஹால்மோ ஸாவர் தேசீயப் பத்திராதிபர் ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி முஸோலினிக்குப் பகிரங்கமாக எழுதியிருக்கும் கடிதாசியில் சொல்லியிருக்கிறார். "மீண்டும் கிரேட் பிரிடனுடனாவது, மேலதிகாரத்துடனேயாவது நேசம் பாராட்டு

#### 1941.

#### சர்வாதிகாரிகளின் எண்ணங்கள் வீணானது

1. அச்சு நாடுகளின் தாக்குதலை எதிர்க்கப்பட்டது. இதாலியை பிரிடனுக்கோ, ஜெர்மனிக்கோ, இரண்டில் ஒன்றுக்கோ அடிமையாகும்படியுள்ள நிலை ஏற்பட்டது. முஸோலினி, ஜெர்மனிக்கு அடிமையாவது மேல் என்று தேர்ந்தெடுத்து "இதாலி ஜெர்மனிக்கு முற்றிலும் அடங்கிய மாகாணம்போல் ஆய்விட்டது." இப்பொழுது பிரிடிஷ் துருப்புகளும் முஸோலினியைக் காப்பாற்றியவரை அதாவது ஹிட்லரை, அதே தீர்மானத்துடன் எதிர்க்கின்றன.

2. ஆபிரிக்கா போர் முனையில் 1941-ம் வருஷம் ஜனவரியிலும், பிப்ரவரியிலும் எதிர்பாராத சம்பவங்கள் நடந்தன. ஜனவரி 4-ம் தேதி புகழ்பெற்ற இதாலிய கோட்டையான பார்டியா வேவல் வசம் வந்துவிட்டது. டொப்ருக் ஜனவரி 23-லும் டெர்னா ஜனவரி 30-லும், ஸிரீன் பிப்ரவரி 3-லும், பெங்காஸி பிப்ரவரி 6-லும் அவர் கைவசமாயின. அப்பொழுது ரோம் அரசாங்க சபை "அந்தோ!" என்று அலறிற்று. கிரேஸியானிக்கு அவர் படையில் மூன்றில் இரண்டு பங்கும் மலை மலையான யுத்த தளவாடங்களும் நஷ்டம்,

ஸிடிபாரானியில் பிரசித்திபெற்ற யுத்தம் நடத்தி இதாலியர்களை அழித்து எங்கு பார்த்தாலும் நல்ல அபிப்பிராயத்தை இந்தியப் பட்டாளங்கள் பெற்றன" என்று பிப்ரவரி மாதம் 9-ம் தேதி பிரதமப்படைத் தலைவர் ஆச்சின்லெக் கூறுகிறார். இந்தியாவில் பொது ரஜாநாட்கள்



#### 1940—தொடர்ச்சி.

வதாக எகிப்துக்கு எண்ணமேயில்லை. இதாலிய சாம்ராஜ்ஜியம் மீண்டும் உண்டாக்கி, அதில் எகிப்தையும் ஸூடானையும் சேர்ப்பதாக எண்ணம் கொண்டிருப்பதுடன் கொஞ்சம்கூட நேசம் பாராட்டப் போவதில்லை. லிபியாவில் இதாலிய சாம்ராஜ்ஜியத்தின் நிலைமை எகிப்தார்களுக்குத் தெரியும்".

எகிப்தின் எல்லைப்புறத்தில் பூரண முஸ்தீப்புடனிருக்கிற படைகளை கிரேஸியானி இடைநடுவில் திரட்டுகிறார். ஆகஸ்டு மாதம் 21-ம் தேதியில் வேவல் சீக்கிரத்தில் "நாம் செய்யவேண்டிய வேலை" அநேகம் இருக்கிறதென்று சொல்லுகிறார். ஜெர்மானியர் பிரிடன் பேரில் படையெடுக்கக் குறித்திருந்த தினமான ஸெப்டம்பர் 15-ம் தேதியில் இதாலியர்கள் எல்லையைக் கடக்கிறார்கள். ஸிடிபாரானியையடைந்து அலெக்ஸாண்டிரியா கைவசமாகுமென்றும், கிரேஸியானி ஜோஸியம் சொல்லுகிறார்.

3. இதாலிய சாம்ராஜ்ஜியத்திலுள்ள கிழக்கு ஆபிரிக்கா பெரிய படைகள் பிரிடிஷ் ஸோமாலிலாந்து, கெனியா, ஸூடான் இவைகளுக்குள் பிரவேசிக்க சித்தமாகயிருந்தன. யுத்த நடவடிக்கையை காலம் கடத்தி

#### 1941—தொடர்ச்சி.

இல்லை. மகத்தான சம்பவத்தைக் குறித்தன. பிரபலஸ்தர்கள் வாழ்த்துக் கூறினார்கள்.

3. இதாலிய கிழக்கு ஆபிரிக்கா ஈடெழும்ப முடியாதபடி, மார்ச்சு, ஏப்ரல் இம்மாதங்களில் தாக்கப்பட்டது. கெரென் நடவடிக்கையால் எரிட்ரியா பிரிடிஷார் கைவசமாகி இந்தியத் துருப்புகளுக்கு புகழை உண்டாக்கிவிட்டது.

"கஸாலா முதல் கெரென் வரையில் எல்லாப் பாதையிலும் முடிவுவரை நடந்த சண்டையில், பிரிடிஷ் இந்தியத் துருப்புகள் புதிய வெற்றியை

1940—தொடர்ச்சி.

புது ஆட்கள் ஜனங்கள் சைனியத்தில் சேர்க்கப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு யந்திர சாதனங்களும், பழக்க உபாத்தியாயர்களும் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது.

பிராணிகள் இழுத்துச் செல்லும் பாரவண்டிப்படை பிரான்ஸில் யுத்தத்தில் வேலை செய்துவந்தன; அது டங்கர்க்கில் யுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் அடைந்தன. அதே சமயத்தில் எகிப்தின் எல்லையில் இந்தியப்படை ஒன்று காவல்புரிந்துவந்தது. ஸோமாலிலாந்தைப் பாதுகாக்க அநேக இந்தியப்படை உதவிபுரிந்தன

அச்சு நாடுகளுடைய ஆக்கிரமத்தைத் தடுக்க யுத்த ஆரம்பமாகி ஒரு வருஷத்தில் இந்தியா லக்ஷம் சிப்பாய்கள் சேகரிக்கவேண்டும். என்று போட்டத் திட்டம் பூர்த்தியாகவில்லை.

2. பணவருமானமும், வியாபாரமும்.

இந்தியப் பாதுகாப்பு நிதி சேர்ப்பதற்குள்ள இயக்கம், பாதுகாக்கவேண்டிய பண உதவி வேண்டுமென்று ஜூன் மாதத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

சென்ற ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்தியாவின் இறக்குமதிகள் சுமார் 45 கோடி ரூபாய் மதிப்புள்ளவை,

1941—தொடர்ச்சி.

பகுதியும், 23 காலாட்படைப் பகுதிகளும், ஒரு ஒட்டகைப்படைப் பகுதியும், பிராணிகள் இழுத்துச் செல்லும் பாரவண்டிப் படைகள் மூன்றும், இவைகள் யாவும் தயாராய் இருந்தன. இதைவிட பிரிடிஷ் அரசாங்கத்திற்கு இந்திய சுதேசி நாடுகளின் உதவியிருக்கிறது.

“இந்த தேச சரித்திரத்தில் இதுவரைக் கேட்டிராதபடி சென்ற வருஷத்திற்குள் பிரிடிஷ் இந்தியக் கப்பற்படை நல்ல பலம்வாய்ந்ததாக இருக்கிறதென்று தளகர்த்தர் வேவல், ஸெப்டம்பர் 3-ல் கூறியிருக்கிறார். அது பிரிடிஷ் கப்பற்படைக்கு உதவியாக நல்ல கப்பற்படையாகக் கூடிய சீக்கிரம் விளங்கும்போலிருக்கிறது.”

9 இடங்களில் ஏராளமாக விமானிகளைத் தயார் செய்யவேண்டிய ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துவருகின்றன.

2. பணவருமானமும், வியாபாரமும்.

“இந்தியாவின் பாதுகாப்புக் கடனுக்கு” பல நபர்களிடமிருந்து மொத்த வருமானம் ஆகஸ்டு மாதம் 23-ம் தேதிவரை 81,36,12,000 ரூபாய்.

1935-ம் வருஷமுதல் பவுன் கணக்கில் நின்ற கடன் பிப்ரவரியில் இந்நாட்டிலிருந்து தாய்நாடு செல்லும் உத்தியோகஸ்தர்களுக்கு ரூபாயாக மாற்றித் திருப்பிக் கொடுக்கப்பட்டதிலிருந்து இந்திய ஸர்க்காரின் பொறுப்பில் 210 கோடி ரூபாய் குறைந்துவிட்டது.

ரிஸர்வ் பாங்குகளில் இவ்வருஷத்திய லாபம் 1940-ம் வருஷப் பிற்பகுதியில், ஏற்பட்ட 29



1940—தொடர்ச்சி.

3 கைத்தொழில் அபிவிருத்தி.

சாம்ராஜ்ஜியக் கிழக்கு தேசங்களின் சபை அக்டோபர் மாதம் 25-ம் தேதியில் கூடிற்று. ஸூயஸ் கால்வாயின் கிழக்குக் குடியரசு நாடுகளின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்தும், உற்பத்தி அதிகப்படுத்தி யுத்தத்தை ஜயிக்கவேண்டிய பொருளாதாரக் கொள்கையை சரியான முறையில் வைக்கவும் கூடி ஆலோசனை செய்யப்பட்டது.

“எல்லாருக்கும் அத்தியாவசியமான சுயேச்சையைக் காப்பாற்றுவதற்காக ஐரோப்பாவில் செய்யப்பட்டிருக்கும் சாமான்களுக்கு ஈடுசெய்ய நீங்கள் உலகம் பூராவும் நல்ல பயிற்சிபெற்ற மனிதர்களைத் தயார் செய்திருக்கிறீர்கள்”—என்று சர்ச்சில் சொன்னார்.

இந்தியாவிலிருந்து முழுவதும் அல்லது முக்கியமாக உற்பத்தி செய்த சாமான்கள் 1938–1939-ல் ஏற்றுமதிகள் 47,61,00,000 ரூபாய் பொறுமதியுள்ளது.

1941—தொடர்ச்சி.

லக்ஷ ரூபாயிலிருந்து, 279 லக்ஷ ரூபாய்க்கு வந்திருக்கிறது என்று ஸர். ஜெ. டெயலர் ஆகஸ்டு 11-ல் வெளியிட்டிருக்கிறார். அதன் பயனாக மத்திய கவர்ன்மெண்டாருக்கு 262 லக்ஷ ரூபாய் கொடுத்து உதவமுடியும்.

வைஸிராய் ஏற்படுத்திய யுத்தநிதி ஜூலை 15-ம் தேதியோடு 4,65,38,000 ரூபாய் சேருகிறது.

இந்திய கடல் மார்க்கங்கள் திறந்துவைத்ததிலிருந்து ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்திய இறக்குமதிகள் 52 கோடி ரூபாய்.

3. கைத்தொழில் அபிவிருத்தி.

யுத்தத்திற்காகவேண்டிய தளவாடங்களை உற்பத்திசெய்ய இந்தியக் கிழக்கு ஆயுதசாலையாக விளங்குகிறது.

இந்திய ஆயுத தொழிற்சாலைகள், 250 கைத்தொழிற்சாலைகளாலும், 23 ரயில்வே ஒர்க்ஷாப்புகளாலும் உதவி செய்யப்பட்டு, சுமார் இரண்டு கோடி தனிப்பட்ட யுத்த சாமான்கள் அடங்கிய 700 குண்டு வகைகளும், உற்பத்தி செய்தனுப்புகின்றன. ஐம்பத்து நான்கு இந்தியக் கம்பெனிகளில் யந்திர ஆயுதங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மருந்து நிரப்பப்பட்ட குண்டுகள் சண்டைக்கு முன்னுள்ள எண்ணிக்கையைவிட ஏற்கனவே 24 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டன. இன்னும் இரண்டொரு தருதிகளில் 96 மடங்கு அதிகம் உற்பத்தியை எதிர்பார்க்கலாம்.

1940-1941-ல் முழுவதும் அல்லது முக்கியமாக இந்தியாவில் உற்பத்தி செய்த சாமான்களின் ஏற்றுமதியின் பொறுமதி 81,24,00,000 ரூபாய். இதனால் இந்தியாவின் வியாபாரம் அதிகம் அபிவிருத்தியடைந்திருக்கிறதாகத் தெரிகிறது.

1940—தொடர்ச்சி.

ஏஜெண்டுகள் தயாரித்து வருகிறார்கள்.

ஹிட்லர் ஆட்சி உண்மையில் எவ்விதம் என்று உணர்ந்து அச்சு நாடுகளின் சின்ன பங்குக் கூட்டாளி தோற்றால், வேறு பக்கத்தில் அபாயம் உண்டாகும் என்று இந்தியாவுக்குத் தெரியும். (ஜூன் மாதம் 22உ) மஹாத்மா காந்தி அதை வர்ணிக்கிறார். "முடிவில் ஹிட்லர் ஆட்சி எத்தன்மையதானாலும் அதன் போக்கு எவ்விதமென்று நமக்குத் தெரியும். அது கொடிய மிருக பலம். விஞ்ஞான சாஸ்திர உதவியினால் குறி தவறாமல் உபயோகப் படுத்தப்படுகிறது".

7. ஹிட்லரின் திட்டங்கள் ஒரே சமயத்தில் இந்தியாவின் கிழக்கு வாசப்படியான சிங்கப்பூரை மிரட்டுதல், ஸூயஸ் கால்வாயில் எதிர்த்தல், பிரிடன்மீது படையெடுத்தல் ஆகிய இவைகள்தான். இந்த வேலைக்குத் தயார் செய்யப்பட்டு ஜப்பான், ஜெர்மனியுடனும், இதாலியுடனும் ஸெப்டம்பர் மாதத்தில் முக்

1941—தொடர்ச்சி.

டிஷ் சிப்பாய்களும், இந்தியச் சிப்பாய்களும், பிரிடிஷ் விமானப்படையும், இந்திய விமானிகளும் அபாயத்தைத் தவிர்த்து, ராஷீத் அலியை சண்டையிடும்படி நிர்ப்பந்தித்து, இராக்கில் அரசாட்சியை மீட்டிக்கொடுத்து, சமாதான உடன்படிக்கைப் பாத்தியம் மட்டும் இருக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

"மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் ஸ்தானம் திரும்பப்பெறவேண்டி ஸிரியாவில் சகோதரர்களுக்குள் சண்டை மூட்டியும் பிரயோசனமற்றதும், காலபிற்பாடான உதவியும், ராஷீத் அலிக்கு ஸிரியாவிலிருக்கும் விமான நிலயங்களிலிருந்து ஜெர்மனி விமானங்களை அனுப்பியது. கடினமானதும், திறமையான சண்டையில் பிரிடிஷ், இந்திய, ஆஸ்திரேலிய நேசதேசத் துருப்புகள் ஸிரியாவில் உள்ள அபாயத்தை நீக்கிவிட்டன.

ஹிட்லரின் ஏஜெண்டுகளுக்கு இரான் இடம் அடுத்தபடியாகக் கிடைத்துவிட்டது. மறுபடியும் இந்தியர்கள் பிரிடிஷார் சொல்ப காலத்தில் பரிசுத்தப்படுத்திய நடவடிக்கையில் கலந்துகொண்டு பிரக்கியாதி பெற்றார்கள். டெஹ்ரானுக்கு எச்சரிக்கை செய்தது பயனடையாமல் போனவுடன் ருஷ்யாவுடன் ஒத்து பிரிடிஷார் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். இம்மாதிரி இந்தியாவுக்குச் சமீபத்தில் வெடிகுண்டு போடப்படும் பயம் நீக்கப்பட்டது.

7. அபாயமும், நெருக்கடியும் இன்னும் இருக்கின்றன. கிழக்கு வால் குறைவில்லாமல் பலப்படுத்தப்பட்டது. பிரிடிஷ், இந்திய, ஆஸ்திரேலியத் துருப்புகள் மலேயாவிலும், பர்மாவிலும் பாதுகாப்புக்காக பரவியிருக்கிறார்கள். பிரதம தளகர்த்தர் ஸர். ஆர். புருக் பாப்ஹாம் தலைமையின் கீழ் 18 அங்குல கரை பீரங்கிகளும், ஆகாய விமானங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும், ரகசிய பாதுகாப்புப் படையுங்கொண்டு, சிங்கப்பூர் உலகத்தில் மிகுந்த பலமுள்ள தளமாக விளங்குகிறது.



1940—தொடர்ச்சி.

கூட்டு ஒப்பந்தத்தில் சேர்ந்தது. தாய்லாந்துக்கும் இந்தோ-சைனாவுக்கும் உள்ள போர் இந்தியாவின் கிழக்குக் கொத்தளமானதும், அதன் பலம் இதுவரை பரிசோதிக்கப்படாமலிருக்கும் மலேயா பக்கத்தில் ஜப்பானின் அதிகாரம் பரவ சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

சைனாவுக்குப் பொருள்கள் கொண்டு செல்லப்பட்ட பர்மா ரோடு பெருத்த அபாயத்திலிருந்த சமயம், ஜூலை மாதத்தில் தாத்காலியமாய் மூடப்பட்டது. அது பிரிடனால் அக்டோபர் 17-ம் தேதியில் திறக்கப்பட்டுவிட்டது.

1941—தொடர்ச்சி.

ஜாக்கிரதையான ஜப்பானின் சண்டை தொடுத்ததின் பயனாக இந்தோ-சைனாவில் ஜப்பானுக்குத் தளங்கள் கிடைத்தன. ஆனால் ஆசியாடிக்—பிரிடிஷ் சமுத்திரக்கரை பாதுகாப்புப் படை, பொருளாதார முற்றுகை செய்தும், அவசியமான ராணுவ நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகப் பதிலளிக்கிறது. "ஜப்பான் போர் தொடருவதை நிறுத்தவேண்டும்" என்று ஜப்பான் ஆக்கிரமிப்பைக் குறித்து சர்ச்சில் ஆகஸ்டு, 24-ல் சொல்லுகிறார்.

## II—இந்தியா.

### 1940.

### ஆயுதபாணிகள்.

1. இந்தியப் படையில் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் 57,000 பிரிடிஷார், 1,57,000 இந்திய சிப்பாய்கள், 24,000 இந்திய விமானப்படை, 19,000 இந்தியப் பயிற்சி பெற்றபடை, 35,400 பீரங்கிப்பட்டாளம், 47,000 இந்திய சுதேசங்களின் சைனியம் ஆகிய இவைகள் அடங்கியுள்ளவை.

இவைகளில் முதலில் சொல்லப்பட்ட பிரிடிஷ் படையைக் குறைக்கவேண்டுமென்ற அபேக்ஷயிருக்கிறது.

### 1941.

### ஆயுதபாணிகள்.

1. "இப்பொழுது ஒரு லக்ஷத்துக்கு மேலுள்ள இந்தியத் துருப்புகள் சமுத்திரத்திற்கப்பால் வந்து யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறார்கள். இன்னும் பத்து லக்ஷம் இந்தியத் துருப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன" என்று—1941-ம் வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதியில் தளகர்த்தர் வேவல் சொல்லுகிறார்.

"1939-ம் வருஷத்திலிருந்த நல்ல பயிற்சி பெற்ற விமானிகள் முன்னிலும் நாற்பது மடங்கு இன்னும் அதிகமாகவே தோன்றுகின்றனர்" என்று ஸர். ஜெ. ரெஸ்மான் பிப்ரவரி மாதம் 29-ம் தேதியில் கூறினார்

1941 ஏப்ரலோடு முடிந்த இந்த வருஷ யுத்தத்தில் 4 குதிரைப் பட்டாளங்களும், பீரங்கிகள் வைத்த 15 கோட்டைகளும், பீரங்கிப் படைப் பகுதியும், சுரங்கம் வெட்டுபவர்களும், அதில் வேலை செய்கிறவர்களும் உள்பட ஒரு

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

## ஸெப்டம்பர் 1—7, 1941.

### நாஸிகள் தற்காப்புச் செய்துகொள்வது.

"ஸெப்டம்பர் 4-ம் தேதி பகல் 12-30 மணிக்கு ஒரு ஜெர்மன் நீர்மூழ்கி, வடக்கே 62.31 டிகிரியிலும், மேற்கே 27.6 டிகிரியிலும் உள்ள ஜெர்மானியர் யுத்தப் பிரதேசம் என்று சொல்லும் இடத்தில் தாக்கப்பட்டது. எந்த தேசத்து நீர்மூழ்கி தன்னைத் தாக்கியது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் விடாமல் ஜெர்மன் நீர்மூழ்கி துரத்தப்பட்டது. 12.39 மணிக்கு எதிரியின் இரண்டு டார்ப்பிடோக்களைப் பார்த்து சுட்டது. ஆனால் குறிதவறி விட்டது".

(இங்கிலீஷ், பர்ஸியன், அராபிக், பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர் 7).

கிரீர் என்ற கப்பலைத் தாக்கியதைப் பற்றி நாஸிகள் கொடுக்கும் செய்தியைப் போல ஸெப்டம்பர் 3-ம் தேதி ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் ஒலிபரப்பு சரியாக ஒத்திருக்கிறது. அது பின் வருமாறு "ஜெர்மனியை போலாந்து எதிர்த்தவுடன் எல்லா தேசங்களும் சண்டையில் ஈடுபட்டன".

வி வி வி

"மிஸ்ட்டர் சர்ச்சிலையும் அவர் தோழன் ஸ்டாலினையும் ஜெர்மனி பேரில் வேவுபார்க்கும் விமானங்களைப் பறக்கவிட ஜெர்மனி அனுமதிக்கவில்லை. ஆகஸ்டு மாதத்தில் பிரிடிஷாருக்கு 431 விமானங்கள் நஷ்டம்; ஜெர்மனிக்கு 37 விமானங்கள் தான் நஷ்டம்".

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர் 5).

ஒருக்கால் அதற்கு ஐந்து நாளைக்கு முன்பு பெர்லின் பேரில் பிரிடிஷ்-ருஷ்ய வெடி விமானங்கள் 3 தடவை பறந்த சமயத்தில் நாஸி ஒலிபரப்புச் செய்கிறவன் எங்கேயாவது பயந்து மறைந்திருக்கலாம்.

விமான எதிர்ப்புகளில் பிரிடிஷ்காரருக்கு 259 விமானங்கள் நஷ்டம். ஜெர்மன் லுப்ட்வாபிக்கு 125 நஷ்டம். 2-க்கு 1 வீதம் இருக்கும் விகிதத்தை பெர்லின் ரேடியோ உத்சாகமாக



12-க்கு 1 என்று அதிகப்படுத்திச் சொல்லுகிறது. தற்காப்பு செய்து கொள்ளும் ஜெர்மனியைவிட தானாகச் சென்று ஜெர்மனியில் எதிர்க்கும் பிரிடிஷாருக்கு அதிக விமானங்கள் நஷ்டம் ஏற்படுவது சகஜம்தான். அத்துடன் பிரிடிஷ் அரசாங்கத்தார் நஷ்டங்களை உள்ளபடி சொல்லுவதுதான் விசேஷம். தங்கள் எதிரிக்கு ஏற்படும் விமான நஷ்டத்தைவிட அதிகமாகத் தனக்கு ஏற்படுவதை நாஸிகள் ஒப்புக்கொள்வதில்லை. சென்ற வருஷம் பிரிடன்மீது நாஸி விமான எதிர்ப்பு ஏற்பட்ட பொழுது பிரிடனைவிட 4 மடங்கு அதிகமாக நஷ்டப்பட்டபொழுதே அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

### கேள்விகளும் மறுமொழிகளும்.

"எந்த முஸ்லீம் நாட்டையாவது ஆக்கிரமித்துக்கொள்ள ஜெர்மனி நினைத்ததா? எந்த பூஜிக்கத் தகுந்த முஸ்லீம் ஸ்தாபனங்களையாவது ஜெர்மனி கெடுத்தது உண்டா?"

(பர்ஸியன் அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர் 4).

"கிழக்கே காகேஸஸ், இரான் வரையிலுமுள்ள பிரதேசத்தை கைப்பற்ற வேண்டும்"—1933-ல் ஹிட்லர் சொல்லியது.

"டான்யூப் முதல் பாஸ்ராகுடா வரையிலுள்ள கிழக்கு நாடுகளை பூரா வாக ஜயிக்கவேண்டுமென்றால் இது வரை நம்மைக் கட்டுப்படுத்திய ஐரோப்பாவை முதலில் ஜயிக்கவேண்டும்"—சமீபக் கிழக்கு நாடுகளுக்கு ஜெர்மன் அறிக்கை 1931.

"அராபியர்களே! முஸ்லீம்களே! இந்தக் கொடுங்கோல் அரசர்களின் முறை முகமதிய சமயத்தார்களான டின், ஷேக், மற்றும் பெரியோர்கள் இவர்களுடைய கௌரவத்தை அங்கீகரிக்காது அல்பேனியாவிலும், யூகோஸ்லாவியாவிலும் இருந்த பல முகமதிய கோவில்களை சில ருஷ்யர்களும், நாஸிகளும் அழித்துவிட்டனர்"—அல் ஆரப் என்ற பத்திரிகை ஜூலை 17, 1941-ல் சொல்லியது.

"1781-ல் பல அடிமைகளை ஆபிரிக்காவின் மேற்கிலிருந்து பல கப்பல்களில் ஏற்றி ஜெமைகாவுக்குக் கொண்டுபோய் பிரிடிஷ்காரர்கள் விற்ருர்கள்". (ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி ஸெப்டம்பர் 2).

1834-பிரிடிஷ் ஸாம்ராஜ்ஜியம் பூராவாக 20,000,000 பவுன் நஷ்டமடைந்தாலும் உலகத்தில் அடிமைகளே இருக்கக்கூடாதென்று பிரிடிஷ் பார்லிமெண்டு சட்டம் ஏற்படுத்தியது.

1941-ல் ஜெர்மனி அடிமைகளைப் பற்றிய அபிப்பிராயம் பின்வருமாறு:—"அடிமைகள் என்ற பதத்தை முன் நடந்த கதைகளை ஞாபகப்படுத்துவதாகவும், அலங்காரம் வாய்ந்த பதம் என்றும் நினைக்கக்கூடாது. நாங்கள் அவசியமாக உண்டாக்கப் போகும் அடிமைகளைப் புதியவிதமாகச் செய்ய தீர்மானித்திருக்கிறோம்" என்று நாஸி விவசாய மந்திரி டாரே 1940-ல் சொன்னார்.

## வாக்குறுதிகளும் பயமுறுத்தல்களும்.

நாஸிகள் உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்தால் நாட்டைப் பிடித்துக் கொள்ளச் செய்யும் பயமுறுத்தல்தான் என்று நாஸிவசமான பலதேசங்கள் தெரிந்துகொண்டுவிட்டன. உலக ஆக்கிரமணத்தைப்பற்றி நாஸிகள் திட்டத்தின்படி தன்னைத் தற்காப்புச் செய்துகொள்ள முயற்சி செய்யாமலிருந்தால் இந்தியா அதற்குள்ளாகாதென்று அச்சுநாட்டு ஒலிபரப்புச் செய்கிறவர்கள் ஒரே போடாகச் சொல்லிவருகிறார்கள்.

ஆனால் சிற்சில சமயங்களில் இம்மாதிரியான சமாதான ஒலிபரப்புகள் செய்யும்போதே ஆக்கிரமணம் செய்யவேண்டுமென்ற அபிப்பிராயத்தை எப்படியோ அசட்டுத்தனமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஸெப்டம்பர்மீ 2-ம்தேதி ஹிந்துஸ்தானி பாஷையில் இதாலியரின் எச்சரிக்கையில் "இந்தியாவின் எல்லைப் புறங்களில் நாஸிகள் வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருங்கள்" என்பது நாஸிகள் ஆக்கிரண எண்ணத்தைப் பற்றிய முதல் சொல் அல்ல.

1940-ம் வருஷம் நவம்பர் 11-ம் தேதி இந்தியா ஒரு சமயம் எதிர்க்கப்படலாமென்று இதாலியர்கள் சொன்னார்கள். அதற்குமுன் இதாலியப் பத்திரிகைகளில் இந்த யுத்தத்தின் மூன்றுவிதமான போக்கைப்பற்றி சொல்லப்பட்டதை அங்காராவில் உள்ள உலூஸ் என்ற பத்திரிக்கையில் சொல்லப்பட்டது. அவைகளாவன:—

1. பிரான்ஸை பூராவாகத் தோற்கடிப்பது.

2. மத்தியதரைக்கடல் பிரதேசத்திலிருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் பிரிடிஷ்காரர்களை விரட்டுவது.



3. இந்தியாமேல் படையெடுப்பு.

## விசேஷ பரிசுகளுக்கு லாயக்கான பொய்கள்.

ஜெர்மானியர்களும் நாஸிகளும் ரேடியோவில் நேர்த்தியாகப் புளுகுவதில் இருந்து யாருக்கு ஸம்மானம் கொடுப்பதென்று தெரியாமல் அவ்வளவு சரியாக இருவரும் சொல்லிவருகிறார்கள்.

"அஹிம்ஸையால் அரசியல் கொள்கைகளைச்சாதிக்க விரும்புகிறார்கள்"—ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் ஒலிபரப்ப ஆகஸ்டு 6, 1940.

"இந்தியா, பாலஸ்தீனம், எகிப்து, ஸூடான் முதலிய நாடுகளைப் பிடித்து பலவருஷங்களாகியும் கைதிகள்போலவேதான் பிரிடிஷ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் இடங்களைச் சுற்றி இரும்புக் கம்பிகளால் அடைத்து இரவு நேரங்களில் ஒருவரும் உள்ளே போகவோ வெளியே வரவோ அனுமதிக்கப்படுவது இல்லை. விசேஷமாக இந்தியாவில் ஒரு ஐரோப்பியனும் இருட்டில் போகக் கூடாது"—மால்டாவுக்கு இதாலிய ஒலிபரப்பு 1941 பிப்பிரவரி.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 63—(5-வது பிரிவு).

1941—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மணி |
| அக்டோபர் | 1, புதன்கிழமை ... | குளவாய்ப்பட்டி | ... | மாலை | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| | 2, வியாழக்கிழமை. | புலியூர் | ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி | ... | ,, | 6.30 |
| | 3, வெள்ளிக்கிழமை... | மேலூர் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |

மாட்சிமை தங்கிய ராஜ சக்கிரவர்த்தி அவர்கள்

## இச்சமயம்

ராணுவத்திற்கும், ஸாப்பர்ஸ் மைனர்ஸ்களுக்கும், சமாசாரம் அறிவிப்பு அணிக்கும், யந்திர வண்டிகளை ஒட்டுவதற்கும் மனிதர்கள் தேவைப்படுகிறார்கள் என்று

## புதுக்கோட்டை ஸமஸ்தானவாஸிகள்

அறிந்துவருகிறார்களா ?

இவைகளுக்குத் தேவையான யோக்கியதாம்சங்கள் :—

குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம்.

குறைந்த இடைமானம் 110 பவுண்டு.

குறைந்த சம்பளம் மாதம் ஒன்றுக்கு 16 ரூபாயும் இனமாக உணவும் உடுப்புகளும் அளிக்கப்படும்.

பின்னும் மற்ற விபரங்கள் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய படை சேமிப்பு உத்தியோகஸ்தரான ராவ் பஹதூர் R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களிடம் தெரிந்துகொள்ளலாம்.

உற்சாகமுள்ள புதுக்கோட்டை மக்களுக்கு மகத்தான ஒரு சேவையில் ஈடுபட

## இதுவேதான் நல்ல தருணம்.

பொருள் ஈட்ட வேலைகளிலும் அமரலாம்.


Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—20-9-41.

69403


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு ஸெப்டம்பர்மீ 27வ [ந. 63.


பிரஸங்கம் LXIII.

## ஜாக்கிரதை!

ஜெர்மானியர்கள் தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று கொண்டிருக்கும் மயக்கத்தில் தோல்வியாவது, கஷ்டமாவது இருப்பதாகத் தெரியாததுபோல பாசாங்கு செய்கிறார்கள். ரொம்பப் பின் வாங்கும்போதாவது மறைக்க முடியாத சேதம் ஏற்பட்டபொழுதாவது, கோயபல்ஸ் இன்னும் அவர் இலாகாவிலுள்ளவர்கள் சேர்ந்து, பொய் சத்தியம், கபடமுள்ள வார்த்தைகள், முழுப் பொய்கள் வகையராக்களைப் பிரசாரம் செய்துவருகிறார்கள். உலகத்தில் பெரும்பாலரும் அவன் இலாகாவில் உள்ள ஒரு பகுதியார்களும் மட்டில் ருஷ்யாவைத் தாக்கினதில் ஹிட்லருக்கு மானமும் கீர்த்தியும் போய்விட்டது என்று நினைக்கிறார்கள். அவன் வெற்றிகளில் பெருத்த நஷ்டமும், அவன் ஏமாற்றிவரும் ஜனங்களுக்குச் சொல்ல முடியாத சேதமும் ஏற்படுவதை மறைக்க பெர்லினிலிருந்து விவரிக்க முடியாத சம்பவங்கள் கலந்து பலவகைப்பட்ட பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் நாம் பின்கண்ட விஷயங்களில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

**எச்சரிக்கை 1.**—ருஷ்யப் போர் மாரிகாலத்திலும் தொடரும் என்று இப்பொழுது தோன்றுவதில் ஹிட்லரின் திட்டம் தவறிவிட்டதாக நாம் எண்ணக்கூடாது. இதைப்பற்றி பெர்லின் அறிக்கைகள் சம்மதித்ததுபோல் பாசாங்கு செய்கின்றன. ஹிட்லரும் பாசாங்கு செய்கிறான். "கிழக்குப் போர்முனையில் கஷ்டங்கள்" இருக்கிறதாகச் சொல்லுகிறதை எல்லாம் நாம் நம்பி மோசம் போவதற்காக இருக்கலாம். ஆனால் உள்ளபடி தான் ருஷ்யாவில் போட்ட திட்டம் தவறிவிட்டதாக ஹிட்லர் எண்ணவில்லை. அருகில் வசிப்பவரும், வெற்றி கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்கும் தன் ஜனங்களுக்கு ஏதாவது காட்டவேண்டி, நன்றாய் பாதுகாக்கப்பட்ட லெனின்கிராட், கீவ், நீபர் இந்த இடங்களில் கோடிக்கணக்கான சிப்பாய்களை நேரே தாக்கச் செய்திருக்கிறான். இது தவறினாலும் முதலில் ருஷ்யாவை முறியடித்துவிட்டு, மிஸ்டர் சர்ச்சில் சொன்ன "ஒன்றன் பின் ஒன்றான கொள்கை"ப்படி அடுத்தபடியாக

மத்தியக்கிழக்குப் பிரதேசத்தை துரிதமாகவும், கோரமாகவும் தாக்க எத்தனிக்கிறான். ஆனால் இங்கிலீஷ், அமெரிக்கர், ருஷ்யர் ஆகிய மூவர்களும் சேர்ந்து உண்மையில் திறமையான போர்ப்படைத் திட்டம் ஏற்படுத்துவதை ஜெர்மானியர்கள் தடுத்தால்தான் வசந்த காலத்திற்குள் பூரண வெற்றி கிடைக்குமென்று நம்புகிறார்கள்.

**எச்சரிக்கை 2.**—இவர்கள் செய்யும் பாசாங்குப் பிரசாரத்தை நேச கக்ஷியார் நம்பி திருப்தியடைந்து யுத்த முயற்சிகளைத் தளர்த்தி விடுவார்களென்று ஹிட்லர் இந்த சூழ்ச்சியைச் செய்யலாம். இதிலிருந்து உண்மையில் ஹிட்லரும், ஜெர்மானியர்களும் பலமழிந்து தோற்றதோடு, ருஷ்ய சைனியங்களும் புத்திலிருந்து ஈசல் புறப்படுவதுபோல கிளம்பிக்கொண்டே யிருந்தால், ஜெர்மானியர்கள் சொல்லுகிறபடி நேசதேசத்தில் தொழிற்சாலைகளில் புதிதாகப் பீரங்கிகள் செய்யவும், ராணுவ கோஷ்டிகள் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமுமில்லை.

**எச்சரிக்கை 3.**—"அமெரிக்காவில் சண்டையில் சேரவேண்டாம் என்ற அபிப்பிராயம் கொண்ட கக்ஷியினரின் பலம் அதிகம். ஆதலால் சண்டைக்குத் தயாராக இருக்கும் ரூஸ்வெல்டுக்குக்கூட பகிரங்கமாக யுத்தம் ஆரம்பிக்கச் சொல்ல தைரியமில்லை. இதுதான் சரி. அவன் தயாராவதற்குள் சில அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கி அவன் அரசாட்சியில் கஷ்டத்தை உண்டாக்குங்கள்" என்று கோயபெல்ஸ் சமீபத்தில் பேசியிருக்கிறார். இதனால்தான் கிரீர், ஸெஸ்ஸா, மாண்டேனா, ஸ்டீல் ஸீபோர் ஆகிய கப்பல்களை ஜெர்மானியர்கள் அமிழ்த்திவிட்டதாகத் தோன்றுகிறது. இதேமாதிரி வ்ளாடிவாஸ்டாக்குக்குச் செல்லும் எண்ணெய் கப்பல்களில் இரண்டு அல்லது ஒன்றை, ஜப்பானியர்கள் தாக்கினால் இன்னும் விசேஷம். இவ்வாறு ஜெர்மானியர்கள் செய்வார்கள் என்று அமெரிக்கர்கள் நம்பினால், அங்குள்ள தனித்திருக்கும் கக்ஷியினரின் பலம் அதிகப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**எச்சரிக்கை 4.**—வெளிநாட்டிலிருக்கும் ஜெர்மானியர்களுக்குள் முக்கியமாக ஸ்டாக்ஹோமிலிருப்பவர்கள் சீக்கிரம் ருஷ்யர்களுடன் சமாதானம் செய்துகொள்ளுவது விரும்பத்தக்கதென்றும், சமாதானப் பேச்சு நடைபெறுவதாகவும் ரகசியமாகப் பேசி பிரசாரம் செய்துவருவதை ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும். யூக்ரேன் மேற்குப் பிரதேசத்தில் ஜெர்மானியர் கைப்பற்றிய தேசத்தை வைத்துக்கொண்டு பால்டிக் சமஸ்தானங்களில் ஜெர்மன் ஆதிபத்தியத்தை ஏற்படுத்த ரிப்பன்டிராப் சமாதானம் பேசுவதாகக் கூறப்படுகிறது. ஸோவியத் கக்ஷிக்காரர்கள் தங்கள் ஆட்சி அழிந்து போய்விடுமோ என்று பயந்து இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு பிரிட்டனைத்தாக்க தாங்களும் ஜெர்மானியுடன் சேர இணங்குவதாகவும் சொல்லப்படுகிறது.

**எச்சரிக்கை 5.**—மாரிகாலம் வருவதற்குள்ளாவது அல்லது பிரிடிஷ், அமெரிக்கப் பொருள்கள் வந்துசேருவதற்குள்ளாவது வெற்றியை அடையவேண்டுமென்று ஹிட்லர் பாசாங்கு செய்கிறான். ஹிட்லர் விஷப் புகையை உபயோகிக்கத் தயாராக இருப்பதாக டாக்டர் கோயபல்ஸ் சொல்லுகிறான். இது ருஷ்யர்களை பயமுறுத்த இருக்கலாம். அல்லது அமெரிக்கர்கள் வரத் தேவையில்லை என்று காட்ட இவ்விதம் பிரசாரம் செய்யலாம்.

இப்பேத்தல்கள் நிற்க உண்மை சங்கதிகளைச் சற்று கவனிப்போம்.

(a) மாரிகாலத்திற்குள் ருஷ்யர்களை ஹிட்லர் முறியடிக்கக்கூடுமென்று நம்புவதற்கில்லை. வசந்தகாலத்தில் தோற்கடிக்கலாம் என்று எத்தனிக்கிறான். பிறகு கோடையில் கிழக்கேயும், தெற்கேயும் பெரியதாக்குதலை ஆரம்பிக்க எத்தனிக்கிறான்.



(b) ஆனால் ருஷ்யாவை ஹிட்லர் அபகரிப்பதற்கு முன் அதற்கு வேண்டிய உதவியைச் செய்ய ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் பிரயத்தனப்படுகிறார்கள். அவர்களுக்கு ஹிட்லர் செய்யும் பிரசாரம் பொய்யென்று தெரியும்.

(c) நாஜிகளின் வெற்றி ருஷ்ய யுத்தத்தின் முடிவைப் பொருத்து இருக்கிறது. ஆனால் அந்த யுத்தம் மாரிகாலத்திற்குள் அவசியம் முடிந்து விடுமென்று சொல்வதற்கில்லை. ஆகவே ஜெர்மனி கஷ்டங்களில் அகப்பட்டுக்கொண்டுவிட்டதென்று நினைத்து நாம் சும்மா இருக்கக் கூடாது.

(d) நாஜிகளை நொறுக்காமல் அவர்களுடன் சமாதானம் பேசினால் உலகத்தை அவர்களிடம் காட்டிக் கொடுத்ததாகும் என்று நமக்குத் தெரியும்.

(e) காட்டுமிராண்டித்தனம் உலகத்தில் அழிந்தபடி நாஜிகள் அழியும் வரை உறுதிகொண்ட முகக் குறிப்புடனும், செப்படிவித்தைக்காரன் சொல்வதைக் கேட்காமல் காதுகளைச் செவிடாக வைத்துக்கொண்டு வேர்வை, ரத்தம், கண்ணீர் சிந்தி, விடாத முயற்சி யெடுத்துக் கொள்வதுதான் டாக்டர் கோயபல்ஸுக்குத் தக்க பதிலாகும். நாஜி யுத்த முறைகள் நரமாமிசம் உண்பவர்களின் முறைகளை ஒத்திருக்கின்றன.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 19—9—41-லிருந்து 24—9—41-வரை.

**கீவ் எதிரிவசப்பட்டது.**—பல நாள் கடும்போர் நடந்த பின்னர் யூக்ரேனின் தலைநகரமான கீவ் எதிரி வசமாயிற்று. அங்கிருந்த பெரும் ருஷ்யச் சேனைகள் மற்ற பந்தோபஸ்துள்ள நிலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அப்பட்டணம் பாழடைந்து ஏராள ஜெர்மன் பிரேதங்கள் நிரம்பியிருக்கிறது.

கீவ் பட்டணம் எதிரி வசப்பட்டதால் அதிகமான வியவசாய சாமான்களும் தொழிற்சாலை உதவியும் குறைந்ததால் ருஷ்யர்களுக்கு நஷ்டம்தான். இருந்தாலும் லெனின்கிராட் மாஸ்கோ போல் இது அவ்வளவு பிரதேச முக்யத்துவம் வாய்ந்தது அல்ல, மேலும் இங்கே செய்த மாதிரி எதிரி மற்ற இடங்களிலும் செய்யமுடியாது. இங்கே அவனுக்கு ஏராள நஷ்டம். உதவியும் வரவர குறைந்து வருகிறது. ஒரு தொந்தரவு தீருவதற்குள் அடுத்து அடுத்து எதிரிக்கு தொந்தரவு வந்துகொண்டேயிருக்கிறது. கீவுக்கு அடுத்தாற்போல் ரோஸ்டவ், கார்கவ் இருக்கின்றன. ருஷ்யா விஸ்தாரமாயிருப்பதாலும், ருஷ்யச்சேனை கலைபடாமல் இருப்பதாலும், மேலும் சேனை புதிக்கப்படுவதாலும் எதிரிக்குச் சுலபமாக ஒன்றும் முடியாது. 92 நாட்கள் தொடர்ந்து சண்டைசெய்தும் கீவ் ஒன்றுதான் எதிரி வசப்பட்டிருக்கிறது என்றால் உள்ள சிரமத்தைப் பாருங்கள்.

எதிரி கிரிமியாவை துண்டித்துவிட்டதாகவும், அஸோவ் கடலைக் கடந்ததாகவும், பின்னர்கள் வலோமாமைப் பிடித்து ஒனிகா ஏரி வரை முன்னேறி வருவதாகவும் சொல்வதெல்லாம் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. உண்மையில் லெனின்கிராட்டுக்குச் சுற்றிலும் 10 மைல் தூரத்தில் சதுப்பு நிலங்களில் மும்மரமாக கைகலந்த சண்டை நடக்கிறது. நடுபாகத்தில் டிமோஷன்கோ 30 மைல்கள் முன்னேறி எதிரியைத் துரத்தியிருக்கிறான். ஒடெஸ்ஸாவில் ஸ்டாலின்

பெயர் பெற்ற 'ஸ்டாலோட்', என்ற மூன்று விதமான கோட்டைகளால் தற்காப்புச் செய்யப்பட்டு நிலைமை கொஞ்சம் சாதகமாகி வருகிறது.

**சாமான்கள் உற்பத்திச் சண்டை.**—2,000 மைல் நீளத்தில் டாங்கிகளும் விமானங்களும் கலந்து நடக்கும் இந்த ருஷ்யப்போர் சாமான்களின் உற்பத்திக்காக ஏற்பட்ட சண்டை யென்று சொல்லலாம். அதாவது ஜெர்மனியிலும் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் செய்யப்படும் சாமான்களுக்கும், பிரிடன் சாம்ராஜ்ஜிய நாடுகள், அமெரிக்கா இவைகளில் செய்யப்படும் சாமான்களுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுதான். ருஷ்யப் பிரதிநிதி மெய்ஸ்கி பிரிடனிலிருந்துகொண்டு ருஷ்யாவுக்கு இப்பொழுது அதிக டாங்கிகள் வேண்டுமென்றும், முன் காலத்தில் தான் மாரி காலம், சதுப்பு நிலம் முதலியன பெரும் தடையாக இருந்தன. இப்பொழுது யந்திர உதவி பலமாகி விட்டதால் மாரிகாலத்தில் பெரும் தடை ஏற்படுமென்று நினைப்பது தவறு, ஆகையால் சரியான சமயத்தில் செய்யும் யந்திர உதவி இரண்டு மடங்காக செய்ததாக ஆகுமென்றும் சொன்னார்.

தைரியமாக ருஷ்யருக்கு உதவவேண்டுமென்று டைம்ஸ் பத்திரிகை சொல்லி 'நம்மால் முடிந்தவரை ருஷ்யாவுக்கு உதவவேண்டும். அதற்குத் தேவையான படி தற்சமயம் சாமான்கள் செய்ய முடியும். வேறு எந்த நாடும் இப்படி நேச தேசங்கள் பக்கம் இருந்ததில்லை. வேறே எந்த சைனியமும் ஜெர்மனியின் பூரா வலுவை எதிர்க்க முடியாது' என்று முடித்தது.

**டாங்கிகள் செய்யும் வாரம்.**—பத்திரிகைகளில் வெளி வருவதைக்காட்டிலும் அதிகமாக ஒவ்வொரு நாளும் பிரிடிஷ் உதவி செய்யப்படுகிறது. 22-ம் தேதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி இவ்வாரத்தில் செய்யப்படும் டாங்கிகளைச் சீக்கிரம் முடித்து ருஷ்யாவுக்கு அனுப்பப்படும். இங்கிலாந்தின் தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட 'ஸ்டாலின்', 'லெனின்,' 'வராஷிலவ்' 'டிமொஷன்கோ', 'புடென்னி' என்ற பெயர் உள்ளவைகள் ஏற்கனவேயே அனுப்பப்பட்டன.

**ஸப்ளை மார்க்கம்**—சாமான்கள் செய்யப்பட்டு சமயத்தில் உதவிக்குப் போக முடியாவிட்டால் செய்தும் பிரயோசனமில்லையாதலால் இரான் வழி கிட்டினவுடன் எல்லாம் சாதகம்தான். இம்மார்க்கத்தை அதிக விரைவாக சரிபார்த்து வருகின்றனர்.

**பல்கேரியா.**—மாலடோவ் அனுப்பிய கடிதத்திற்குப் பிறகு இங்கே நிலை திருப்திகரமாக இல்லை. அதன் அரசரான போரிஸ்ஸுடன் ஜெர்மனி கலந்து பேசி, பல்கேரியாவை யுத்தத்தில் கலந்துகொள்ள தூபம் போட்டிருப்பதாகக் கேள்வி. கிரீஸ், யூகோஸ்லாவியா இடங்களிலிருந்து பிடித்த சில பாகங்களுடன், திரேஸ், இஸ்தான்புல் முதலியதைக் கொடுப்பதாக ஆசை காட்டப்படுகிறது. அதற்குப் பிரதியாக துருக்கியையோ, ருஷ்யாவையோ எதிர்க்கவேண்டும். துருக்கியினால் ஒரு தொந்தரவும் பல்கேரியாவுக்கு இல்லை. த்ஸார் காலத்தில் தான் பல்கேரியா ஸ்வதந்திரம் அடைந்தது. ஆனால் காரணமாக, ருஷ்யக் குடை சஞ்சாரிகள் டொப்ருக்கில் இறங்கியதும், பல்கேரியக் கப்பல் கருங்கடலில் ருஷ்யச் சுரங்க வெடியால் தாக்குண்டதும் பல்கேரியாவுக்குக் கெடுதல் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் பல்கேரியாவின் தற்காப்புக்காக அது யுத்தத்தில் ஈடுபட வேண்டுமாம்.

துருக்கியின் அபிப்பிராயம் டார்டனல்ஸ்ஸைக் குறித்து எப்படி, இருக்கிறதென்று அறிய பல்கேரியாவை விட்டுத் தெரிந்துகொள்ள ஜெர்மனி நினைக்கிறது. நடுநிலை நாடான பல்கேரியாவிடமிருந்து விலைக்கு வாங்கியது என்று சொல்லிக் கொண்டு இதாலியக் கப்பல்கள் கருங்கடலில் அனுப்பப்படுகின்றன. என்ன இருந்தாலும், கிரீஸ், யூகோஸ்லாவியா பேரில் சண்டை துவக்கியதால் பல்கேரியா நடுநிலை நாடாகாது. விவசாய, உலோக, சம்பந்தமாக துருக்கியுடன் டாக்டர் கிளாடிங்க்ஸ் செய்த உடன்படிக்கையிலிருந்து துருக்கி நாஜி வசம் ஆகிவிட்டதாக நினைக்க ஹேதுஉண்டு.



ஆனால் நாஜிகளுக்கு கொஞ்சம் பல்கேரிய அரசாங்கத்தாரும் இடம் கொடுத்துவருகிறார்கள். சேனையிலிருந்து ஜெர்மன் விரோதத் தன்மை அகற்றப் பட்டு, சூழ்ச்சிகள் தண்டிக்கப்பட்டு, நாஜிகள் முறையில் ரகசியப் போலீஸும் ஏற்படுத்தப்பட்டுவருகிறது. வர்னா என்ற கருங்கடல் துறைமுகம் மூடப்பட்டு நாடு முழுதும் அவசரச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுவருகிறது. இவைகளுக்குத் தடையாக பொதுமக்கள் கலகம் தினம் காணப்படுகிறது. அதை அடக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகிறது. எங்கும் தீக்கள் மூட்டப்பட்டு ரயில் வண்டிகள் உடைக்கப்படுகின்றன. இப்படியிருந்தும் இதற்கு நேர் விரோதமாக பெர்லினிலிருந்து பின்வரும் செய்தி வந்திருக்கிறது. பல்கேரிய மந்திரி யுத்தத்தில் ஈடுபட விரும்பவில்லையாம். எல்லாம் அங்கே அமைதியாக இருக்கிறதாம். பல்கேரியா யுத்தத்தில் சேராது என்று அம்மந்திரி சொல்லி விட்டாராம்.

**நடுநிலைச் சட்டம்.**—குத்தகைக்கடன் மசோதாப்படி சாமான்களை அதிகப் படுத்தி நேசதேசங்களுக்கு உதவ, 59,850 லக்ஷம் டாலர்கள் ரூஸ்வெல்டு கேட்கும்போது 19-ம் தேதி வெள்ளிக்கிழமை, பிங்க்ஸ்டர் என்ற 6,859 டன் உள்ள அமெரிக்கக் கப்பல் மூழ்க்கடிக்கப்பட்டது. (இது டேனிஷ்காரர்களுக்கு முதலில் சொந்தமாக இருந்து பனமாக் கொடியுடன்சென்றது). ஆகையால் நடுநிலைச் சட்டத்தைமாற்றி வியாபாரக் கப்பல்களுக்கு ஆயுத பந்தோபஸ்துச் செய்ய வேண்டிய அவசியம் வந்துவிட்டது. அந்நிய நாட்டுக் கப்பல்களைத் துலைபுரியும் சக்தி அமெரிக்காவுக்கு இருக்கும்போது நம்முடைய கப்பல்களை நடுநிலைச் சட்டத்தினால் காபந்து செய்யாமல் இருப்பதென்பது பரிஹாச நிலையாகும். அதற்காக வேறு கொடியுடன் செல்லுவதும் பயங்குள்ளித்தனமாகும். கர்னல் நாக்ஸ், கார்டல் ஹல் யாவரும் இந்த நடுநிலைச் சட்டத்தை மாற்ற உத்தேசிக்கின்றனர். கப்பல் தொழிற்சாலை கூட்டத்தலைவரான மிஸ்டர் ஜான் கிரீனும் 'சட்ட புஸ்தகத்திலிருந்து இதை எடுக்க வேண்டு'மென்றான். 1798, 1812 முதலிய வருஷங்களில் செய்தபடி வியாபாரக் கப்பல்களில் யுத்த தளவாடங்களை வைப்பதற்கான விதமாக நடுநிலைச் சட்டம் மாற்றப்படுமென்று 23-ம் தேதி செவ்வாய்கிழமை ரூஸ்வெல்டு சொன்னார்.

**நாஸி ஆக்கிரமித்த நாடுகள்.**—நாஸிகளின் கொடுமை தாங்காமல் ஏற்படும் அமைதிக் குறைவைப்பற்றி, நாஸிக்குட்பட்ட பத்திரிகைகள் மூலம் வெளி வருகின்றன. அந்தக் கலகங்களை அடக்க முடியவில்லையாம். டெய்லி டெலிகிராப் பத்திரிகை நிருபர் இந்தப் பத்திரிகைகளில் "ராணுவ சபையால் தண்டிக்கப் பட்டார்", "மரண தண்டனை விதிக்கப்பட்டது", "புதிய பொய் பிரசாரங்கள்", "எங்கு பார்த்தாலும் கைதி செய்யப்பட்டார்கள்", "புதிய மரண தண்டனை சட்டம்", "சம்மதிக்காத பிணைச்சிகள்", முதலிய சம்பவங்களின் துக்ககரமான முடிவைக் குறிக்கும் தலையங்கங்கள் நிரப்பியிருப்பதைக் குறிப்பிடுகிறார்.

**ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸில்** ஜெர்மன் சிப்பாய்களின் மீது தாக்குவதற்குப் பதிலாக பாரிஸ் நகரில் சயனமணி அடிக்கும் உத்தரவு போட்ட பிறகு 200 பேர்கள் கைதி செய்யப்பட்டனர். தினசரி பிணையாளிகள் சுடப்படுகிறார்கள்.

**ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸில்** ஜெர்மன்டு பெர்ராண்டிலிருக்கும் சபையைப் போல் அநேக சேனாதிபதி சபைகள் எப்பொழுதும் வேலை செய்கின்றன. சந்தேகப்பட்டவர்கள் கூட்டம் கூட்டமாக கைதி செய்யப்படுகிறார்கள். **ஹங்கேரியில்** உணவுத் திட்டசட்டத்தை மீறியதற்காக நகரவாஸிகள் கைதிகள் கூடாரத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். **ருமேனியாவில்** சண்டையின் போக்கில் மிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. எதிரி பக்கம் சேருகிறவர்களை நேரில் கண்டால் சுட்டு வீழ்த்தும்படி உத்தரவு பிறந்திருக்கிறது.

**யூகோஸ்லாவியாவில்** உள் நாட்டு கலகம் நேரிடும் நிலைமை வந்திருக்கிறது. கிரோஷியாவிலும், ஸெர்பியாவிலும் சில பிராந்தியங்களில் ராணுவச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. கிசைத போலீஸ்படை ஏற்படுத்தப்படும் என்று

அந்நாட்டு ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஹொர்ஸிகோவினு மலைப் பிரதேசங்களில் சிறு சண்டைகள் நடந்துவருகின்றன.

ஆஸ்லோ (நார்வே)வில் ஜயில் கூடங்கள் வரம்புவரை நிரம்பிவிட்டன. கைத்தொழிற் சாலைகளை போர்படைக்காத்து வருகிறது. பிராண பயத்தை முன்னிட்டு நிர்பந்தமாக வேலை செய்யச் செய்திருக்கிறார்கள். தெருக்களில் பாதுகாப்பும் தெருக்கோடியில் பீரங்கிகளும் இருக்கின்றன.

ஹாலந்தில் ரகசிய சங்கங்கள் வலைபின்னலாக இருக்கின்றன.

பெல்ஜியத்தில் தொழிலைக் குறைக்கும்படிக்குள்ள கிளர்ச்சி உற்பத்திப் பொருள்களை மிகவும் குறைத்துவிட்டது. நிலக்கரி எடுப்பில் 100-க்கு 36 விகிதம் குறைந்துவிட்டது. மின்சார உற்பத்தி சாலைகளும், உலோக உற்பத்தி சாலைகளும் வேலை நிறுத்தம் செய்து 80 நாட்களுக்கு மேலாகி 1,25,000 தொழிலாளிகளுக்குக் கஷ்டத்தை உண்டாகிவிட்டது.

இரான்.—டெஹ்ரான் நகரத்துக்குவெளியே பிரிடிஷ்-ருஷ்யத் துருப்புகள் முகாம் செய்திருக்கின்றன. மாஜி ஷா இஸப்ஹானைவிட்டுப் போய்விட்டான். அவன் சொத்துக்களை அவன் மகனிடம் ஒப்படைத்துவிட்டான். புதிதாகவந்த ஷா யாவருக்கும் பொதுமன்னிப்பு அளித்துவிட்டான். புதிதாக அமைக்கப்பட்ட மந்திரி சபையும், ஆலோசனை சபையும், நியாய இலாகா, போலீஸ், சேனை, பண வருமானம், பொருளாதாரம், ஆரோக்கியம், கல்வி, போக்குவரத்து சாதனம் இவைகளில் சீர்திருத்தங்கள் செய்ய பரபரப்பாய் வேலைசெய்கின்றன. ஸர்க்கார் ஸ்வதந்திர வியாபார உரிமைகள் ரத்துசெய்யப்பட்டுவிட்டன.

ஜெர்மனிமேல் நடக்கும் போர்.—இந்தவார முக்கிய லக்ஷியங்களாவன, பெர்லின் ஸ்டெடின் (பால்டிக் துறைமுகம்) போலிட்ஸ், வடக்கு பிரான்ஸ். ஆகாயவிமானப் படை உதவி தளகர்த்தர் ஜெ. ஒ. ஆண்ட்ரூஸ் 21-ம் தேதி பேசியதில் முந்தின வாரங்களில் நேர்ந்த நஷ்டத்தை பிரிடனுக்குச் சாதகமாக சென்ற வாரத்தில் பிரிடனுக்கு 62 விமானங்களுடன் அச்சு நாடுகளுக்கு 71 விமானங்கள் நஷ்டம் உண்டாக்கி ஈடுசெய்ததைக் குறிப்பிட்டிருக்கிறார்.

நாஸிப்பொய்கள்.—ஜெர்மனியில் பிரிடிஷ் விமானப்படை தாக்குதலின் சேதத்தை மறைக்க ஜெர்மன் ரேடியோ பிரிடன்பேரில் பிரமாத தாக்குதல்களை நடத்தினதுபோல் கதை கட்டுகிறது. ருஷ்யப் படையெடுப்பு நடக்கும் 12 வாரங்களில் நூறுதடவை ரேடியோவில் சொல்லியிருப்பதை 61 அறிக்கைகள் முற்றிலும் பொய்யென்று வெளிப்படுத்தின. ஒரே விஷயத்தை பலதினங்களில் “நேற்றிரவு” சென்ற வாரத்தில் என்ற வார்த்தைகளை உபயோகித்துச் சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு வெடிகுண்டு கூட விழாத லக்ஷியம் தாக்கப்பட்டதாகக் கூறப்படும். உள்நாட்டு லக்ஷியங்களை துறைமுகம் ஸ்தாபனங்கள் என்று கூறப்படும். சிறு நெருப்பை பெரிய தீயென்றும், கிராமாந்திரக் குடிசைகளை ராணுவ முக்கிய ஸ்தாபனங்களென்றும் புகழப்படும்.

மத்தியக்கிழக்கு—மத்தியக் கிழக்கில் மாரி காலத்தில் போர் தொடங்கும் என்று அறிகுறியிருக்கிறது. இரு கக்ஷிக்காரர்களும் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். பிரிடிஷ் டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள், உதவிப்படை, மேற்குப் பாலைவனத்தில் திரள்திரளாக வந்து சேருகின்றன. மத்தியதரைக் கடலில் எதிரியின் கப்பல்கள் அதிகமாக மூழ்கடிக்கப்படுவதைக்கேட்கும்பொழுது எதிரி மத்தியதரைக்கடலைத் தாண்டி ஸப்ளை பெற முயற்சிப்பது தெரிகிறது.

தூரக்கிழக்கு.—தூரக்கிழக்கிலுள்ள நிலைமை இன்னவிதம் என்று சொல்லக் கூடவில்லை. ஜப்பான் கடலில் ருஷ்ய வெடிகண்ணிகள் மிதந்து வருவதை



ஆக்ஷேபித்து ருஷ்யாவுக்கு ஜப்பான் செய்தி விடுத்திருக்கிறது. எல்லைப் பக்கத்தில் ஜப்பான் படைக்கும், ருஷ்யப்படைக்கும் சம்பவங்கள் பத்திரிகையில் வெளிவருகின்றன. தாய்லாந்து சஞ்சலமடைந்திருக்கிறது. போர் சப்தம் ஜப்பானுக்கு விளையாட்டென்றும், தூரக்கிழக்கில் ஜப்பான் சண்டைக்கிழுக்கிறதென்றும், முன்யோசனை, ஒற்றுமைப்பு, புதிய திட்டம், சமான சுபிக்ஷப் பிரதேசம் இவை ஜப்பானின் எல்லையற்ற அதிக ஆசையையும், அடிமைப்படுத்தும் எண்ணத்தையும் குறிப்பதாக டாக்டர் வெல்லிங்டன்கூட எச்சரிக்கை செய்கிறார்.

நேசநேச பரஸ்பர ஒற்றுமைக் கூட்டம்.—இதன் இரண்டாவது கூட்டம் 24-ம்தேதி புதன்கிழமை லண்டனில் வெளிநாட்டு மந்திரி மிஸ்டர் அந்தோனி ஈடன் தலைமையில் நடந்தது. கனடா, ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, தென் ஆபிரிக்கா, பெல்ஜியம், ஸெக்கோஸ்லோவாகியா, பிரி பிரான்ஸ், கிரீஸ், யூகோஸ்லாவியா, போலந்து, நார்வே, நெதர்லாந்து, லக்ஸம்பர்க் முதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். மெய்ஸ்கி ருஷ்யாவுக்காக வந்திருந்தார். ரூஸ்வெல்டு-சர்ச்சில் தயாரித்த அட்லாண்டிக் சாஸனம் யுத்தத்தின் பிறகு செய்யவேண்டியவைகளுக்கு ஆதாரமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஐரோப்பாவில் யுத்தத்திற்குப் பின்னர் உணவுப் பொருள்கள் ஸப்ளை செய்வதைப்பற்றியும் திட்டங்கள் செய்யப்பட்டன.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ரூஸ்வெல்டின் பிரசங்கம்.** ரூஸ்வெல்ட் வெறும் பேச்சு பேசுவதை விட நடத்தையில் காண்பிப்பது மேல் என்று சிலர் வீண் புகார் செய்த போதிலும், உலகத்திலுள்ள பெரிய யதார்த்த உணர்ச்சி உடையவர்களில் அவர் ஒருவர். அவர் வேலையில் அவருக்கு இருக்கும் சிரமத்தையும், அமெரிக்காவை யுத்த முயற்சிக்குக் கொண்டுவந்திருப்பதற்கும் நேசதேசத்தார்கள் மிகவும் பாராட்டவேண்டியிருப்பதைக் குறித்து அநேகம் தடவை இந்தப் பத்திரிகையில் விவரித்திருக்கிறோம். இதற்கு முன் அவர் செய்த பிரகடனம், யுத்த முயற்சியை அதிகமாக விஸ்தரிக்கும்படி செய்தும், ஜெர்மானியர்களுக்குத் திகிலையே உண்டாக்கியிருக்கவேண்டும். ஜெர்மானியர் செய்யும் கடல் யுத்த முறையானது, கடற் கொள்ளையாக இருக்கிறதே தவிர, சரியான யுத்த முறைகளை அனுசரித்தாகவேயில்லை என்று வற்புறுத்தியிருக்கிறார். தான் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தாலும் இல்லாவிடினும் சக்தியிருந்தால் கொள்ளையடிக்கும் தேசத்தைத் தாக்கி, அழிப்பதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் ஸ்வதந்திரம் உண்டு என்பதை ஸ்தாபித்தார்.

“அமெரிக்கக் கடல்கள்”, “அமெரிக்காவுக்குச் சொந்தமான நாடு” என்று குறிப்பிட்டுச் சொல்ல ரூஸ்வெல்டுக்கு அவசியமில்லை. புராதனமான “கடல்களின் ஸ்வதந்திரத்தில் பிரவர்த்தித்து யாருடைய கப்பலைத் தாக்கினாலும், அச்சு நாடுகளின் கப்பல்களை எந்த இடத்திலும் பார்த்த மாத்திரத்திலேயே அமெரிக்கக் கப்பல்கள் மூழ்கடித்து விடுமென்று அவர் தெளிவாய்ச் சொல்லிவிட்டார்.

தென் அமெரிக்காவில் உள்ள அநேக ஜனநாயக நாடுகளில் சதியோசனை இருப்பதைக் கண்டுபிடித்துப் பேசுகையில் பிரிடன் தன்னைத் தப்புவிக்கச்செய்ய அமெரிக்காவை உபயோகப்படுத்துகிறது என்று ஏளனமாகச் சொன்னதை

மறுதலித்தார். நாஸிகளால் அமெரிக்காவுக்கு ஆபத்து உண்டென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. மேலும் பிரிடிஷ் கப்பற்படை அழியாமல் இருக்கும் வரைதான் யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படை நிலைக்கும்.

வி வி வி வி வி

**மஹாயுத்தம்.** நூற்றுக்கணக்கான மைல் தூரத்தில் தினசரியும், மணிக்கணக்காகவும், வாரம், வாரமாக வாலிபர்கள் உயிர் துறக்கிறார்கள் என்று ருஷ்யப் போர்முனையிலிருந்து வரக்கூடிய தினசரிச் செய்திகள் உண்மையில் சகிக்கமுடியாமல் இருக்கின்றன. தென் ஆபிரிக்காவில் சென்ற யுத்தத்திலும் அவர்களின் கீழ் உள்ள படைகளில் உள்ளவர்களின் உயிரை மதியாமலிருந்த தளகர்த்தர்களைக் குறித்து நம்மளில் வயது முதிர்ந்தவர்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்நாட்களையே நினைத்து, இந்நாட்களில் லெனின்கிராட் அல்லது கீவிலிருந்து வரும் சங்கதிகளிலிருந்து ஒவ்வொரு தரப்பிலும் 20,000 உயிர் சேதம் ஏற்பட்டிருப்பதைப் பார்த்தாலேயே சாத்தானுக்குக்கூட அருவெறுப்பான சிறிப்பு ஏற்படும்.

இந்த கோர சம்பவத்தைப் பற்றி உண்மை சமாசாரம் கிடைக்கவில்லை. டிஸம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் அதிகக் குளிர் நாட்கள்தான். அப்பொழுது ஜெர்மானியர்கள் தோற்கடிக்கப்படுவார்களென்று வேவல் போன்றவர்கள் சொல்வது சற்று மிகையாகும். ருஷ்யாவில் மாரிகாலத்தில் ஜெர்மானியர்கள் போர் நடத்த இஷ்டமில்லாமலிருந்தாலும், அவர்கள் எதற்கும் தயாராகயிருப்பது போல் இதற்கும் தயாராக இருப்பார்கள். ருஷ்யாவில் மாரி காலம் ஆரம்பித்தவுடன் ஹிட்லர் அதோகதியடைவார் என்றும் அவருடைய கொலையாளிப் பட்டாளங்கள் அழிந்து விடும் என்றும் நினைப்பது பிசகு. அலாஸ்காவிலிருந்து நன்நம்பிக்கை முனை வரையிலும், மர்மான்ஸ்க்கிலிருந்து கன்னியாகுமாரி வரையிலுள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் பிரயத்தனப்பட்டு, பூரா உதவியளித்தும், ஸ்வதந்திர ஆசை கொண்டவர்கள் தங்கள் சார்பில் நியாயம் இருக்கிறதென்று எண்ணி உதவினால் தான் பித்துக்கொண்ட ஹிட்லரையும் அவன் யந்திரப்படைகளையும் நிறுத்தக்கூடும்.

வி வி வி வி வி

**மாரிகாலம்.** மாரிகாலம் வந்தவுடன் யுத்தம் நின்றுவிடுமென்று நினைக்கக்கூடாது. ஆனால் சில தடைகள் ஏற்படலாம், மழை விடாது பெய்தால் ஆறு, ஏரிகள், சதுப்பு நிலங்கள் நிரம்பி டாங்கிகளைப் போகவிடாமல் தடுக்கலாம். போக்குவரவு சாதனம் குறையும். யந்திரப்படை செல்வதும் கஷ்டம். தாத்காலியமாக ஏற்பட்ட விமான தளங்களைச் சுற்றி தண்ணீர் நிரம்பிவிடும்.

பனி இன்னும் அதிகமாகப்பாதிக்கும். நாட்டுப்புறங்களில் போக்குவரத்து நின்றுவிடும். உறைபனி காலம் வந்தால் சொல்லவேண்டியதில்லை. அப்பொழுது விமானங்களும், டாங்கிகளும் ஓடமாட்டா.

இந்த நிலை இருபக்கத்தையும் பாதிக்கும். ருஷ்யாவில் சரத்காலம் ஆரம்பித்துவிட்டது. பின்லாந்தில் பனிவிழுவதாகச் சொல்லப்படுகிறது. லெனிக்கிராட், ஸ்மாலென்ஸ்க் இந்தப் பிரதேசங்களில் ஏராளமான மழை. வடக்குப் பக்கம் தவிர மற்ற பாகத்தில் அடுத்த மாதம் முடிவதற்குள் அதிகப்பனி விழாது. மாரிகாலத்தில் யுத்தத்தின் தன்மை மாறுவதில் எந்தத் திறப்பிற்கு ஸப்ளைகளும், போக்குவரத்து சாதனங்களும் சமீபத்திலிருக்கிறதோ, அவர்களுக்குத்தான் சாதகம் ஏற்படும். அதாவது ருஷ்யர்களுக்குத்தான். ஜூன் மாதத்தில் தயார் அன்னியிலிருந்ததை சாதமாகக்கொண்டு ஹிட்லர் தாக்கினாலும், இப்பொழுது



இயற்கையாகவே அவர்களுக்கு ஏற்படும் சாதகத்தைப் பயன்படுத்திக்கொண்டு ருஷ்யர்கள் முக்கிய நகரங்களையும், ஜில்லாக்களையும் இழந்துபோனாலும், உத்ஸாகமும், ஒற்றுமையும் இருக்கும்படி நாம் மனப்பூர்வமாய் பிரார்த்திக்கிறோம்.

வி வி வி வி வி

**ஒருவன் நடத்தையிலிருந்து அவன் குணம் தெரியும்.** ஜூன் மாதம் 5-ம் தேதி வைஸிராயிக்கு அனுப்பிய செய்தியில், இராக் மாத்திரமல்ல, உலகத்திலுள்ள முஸ்லீம்கள் பூராவும் இந்த பெருந்தன்மையை ஞாபகத்தில் வைப்பார்களென்று கிலாத் அரசன் சொன்னார். ரஷீத் அலியின் துரோகத்தில், இராக்கில் அமைதி குறைவு ஏற்பட்ட பிறகு இராக்கில் பிரிடிஷார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைக் குறித்து அவர் சொன்னார். இப்பொழுது இரானில் பிரிடிஷார். கையாண்ட முறையைக் குறித்தும் எல்லா முஸ்லீம்களும் அதேமாதிரி சொல்லலாம்.

நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் இவைகளில் ஜெர்மனி வியாபித்துக் கொண்டதையும், இந்த இரண்டு தேசங்களில் நேசதேசத்தார் வியாபித்துக் கொண்டதையும் சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இராக்கில் உரிமையுள்ள அரசரை பிரிடன் புனருத்தாரணம் செய்தது அரசியல் நடவடிக்கையையும் தேசத்துரோகம் செய்தவர்களை நீதிவழிக்குக் கொண்டுவர உள்ளூர் நியாய சபைகள் வசமே விட்டுவைக்கப்பட்டது. இரானிலும் அதேமாதிரி சுயநலம் பாராட்டிய அரசனை விலக்கிவிட்டு பழைய அரசாங்கமே நடத்தப்பட்டுவருகிறது. பிரிடிஷார் பிரதேசங்களை அபேக்ஷிக்கவில்லை. எண்ணெய் கிணறுகளும் இந்தியாவின் தற்காப்புக்கு அவசியமான பாதைகளை மட்டுமே நேசதேசப் படைகளின் வசத்தில் இருக்கவேண்டியதை விர, இரான் அரசாங்கிக்கு வேண்டிய உதவிகள் அளிக்கப்பட்டுவருகின்றன. மற்றபடி இரானியப்படைகள் ஆயுதங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மன் ஐந்தாம்படையில்லாமலும், ஜெர்மனி, இதாலி, ஹங்கேரி, ருமேனியா இவைகளில் மந்திரி ஸ்தானங்கள் இல்லாமலிருக்க வேண்டியது மட்டும்தான் கோரப்படுகிறது.

இந்த முறைகளையும் நோக்கங்களையும் ஏற்கனவே ஜெர்மானியர்கள் காட்டியிருப்பதையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். கிராமாந்திரங்களில் பொதுஜனங்களை பலவந்தமாக நிர்பந்தித்து, சூறை, கொள்ளை முதலிய அக்கிரமச் செயல்களைச் செய்ய சிப்பாய்களை விட்டுவைக்கிறார்கள். அந்த தேச அரசாட்சிக்கு மதிப்புக் கொடுக்காமல் அரசர்களின் உயிர்களைப் போக்குவதும், ஜெர்மன் ஆட்சியை ஜெர்மனி திறப்பில் அனுதாபம் கொண்டவர்களைக் கொண்டு ஸ்தாபித்தும், துரத்தப்பட்ட அரசர்களையும், ஜனப்பிரீதியுள்ள பிரதம மந்திரிகளையும் சிறையில் போடுவதும், ஆகிய இவ்வித அட்டூழியங்களைச் செய்துவருகிறார்கள். பிரிடன் தன் வர்த்தகப் பொறுப்புகளைப் பாதுகாத்து அதே சமயம் (இரான், இராக் இவைகளிலிருப்பதுபோல) உணவுப் பொருள்கள் குறையாமல் செய்ய பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்க, வெட்கமில்லாமல் ஜெர்மானியர்கள் புகுந்த ஒவ்வொரு தேசத்தையும் கொள்ளையடித்துவிட்டார்கள். பிரிடன் பிடிபட்ட எதிரிகளைக் கைதிகளாக மட்டில் செய்கிறது. ஆனால் ஜெர்மனி அப்பேற்பட்டவர்களை கலகம் வராமல் தடுக்க பொறுப்பாளிகளாகயிருக்க நிர்ப்பந்திக்கிறார்கள். மேலும் அவர்களைக் கொண்டு இழிவான உபாயங்களால் தங்கள் யுத்த யந்திரத்துக்கு உழைக்கும்படி ஆயிரக்கணக்கான பேர்களை நிர்ப்பந்தித்தும் வருகிறார்கள். இந்த விதமாக நேசதேசத்தார்கள் எங்கும் செய்யவில்லை. இதாலிக்கு யுத்தம் போதும், போதுமென்று ஆய் விட்டது என்றும், ஜெர்மனியுடன் சேர்ந்த தின் பலன் கிடைத்துவிட்டதாகவும் அமெரிக்காவில் சொல்லப்படுகிறது.

**உணவுப் பிரச்னே.** மாரிகாலத்தில் ஐரோப்பியப் பொது மக்களுக்கு உணவுக் கஷ்டம் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. உணவைப்பற்றி கவலையில்லைபோல் ஜெர்மானியர்கள் பாசாங்கு செய்கிறார்கள். அவர்கள் ரேடியோவில் அடுத்த தேசங்களிலும், சுற்றுப் பக்கங்களிலும், விளைவு பொருள்களையும், இருப்பையும் அதிகப்படுத்தித் திருப்தியளிக்கும்படி பொய் சொல்லுகிறார்கள். உண்மையில் டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், இதர தேசங்களில் குறைவில்லாமல் விளைந்திருக்கிறது. ஆனால் ஜெர்மானியர்கள் அவைகளை வழக்கமாகக் கொள்ளையடிக்கிறார்கள். அதன்படி கோடிக்கணக்கான டன்கள் நிறையுள்ளதும், மாரிகாலத்தில் ஸ்திரீகளும், குழந்தைகளும், ஜீவித்திருக்கத் தேவையான தின்பண்டங்களைச் சுரண்டி யுத்தப் பொருளாக மாற்றுகிறார்கள்.

விருப்பு வெறுப்பில்லாத அநேக அமெரிக்கர்கள், ஜெர்மனி ஆதிக்கத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் சீதோஷ்ண ஸ்திதிக் கெடுதலினாலும், தொழில் குறைவினாலும் மெலிந்து, கந்தைகட்டி, பஞ்சத்திலடிபட்டுத் தட்டுத்தடுமாறுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் பிரிடன் அருக்கி மூலமாக கிரீஸுக்கு முதலில் 50,000 டன் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் திருடாமலிருக்கும் பக்ஷத்தில் பிரிடன் இன்னும் இதர தேசங்களுக்கும் உதவியளிக்கும். பொருளாதார முற்றுகையை நிவர்த்திக்க பிரிடன், எப்பொழுது சாத்தியப்படுமோ அப்பொழுது தயாராயிருக்கும். யார் எப்படிப் போனாலும் ஜெர்மானியர்களுக்கு உணவு குறையக் கூடாதென்பதே ஹிட்லரின் நோக்கம். இப்போர்க்கொத்த எதிரிக்குச் சேர்ந்து விடும்படி செய்ய பிரிடன் ஒருபொழுதும் சம்மதிக்காது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **15—9—41.** (திங்கட்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| பகலில்.—விரோதி துணைக்கப்பல்-பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால் | ...... | ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது; மற்றொன்று பழுதுபட்டது. |
| துறைமுகத்திலுள்ள விரோதிக் கப்பல்கள், தொழிற்சாலை.—நார்வே (Norway)யிலுள்ள, ஹாகிஸண்டு (Haugesund). | ...... | தொழிற்சாலையில் தீ மூட்டப்பட்டது. |
| வேவுபார்க்கும் விமானங்களின் எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாயிலும் விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்திலும். | 1 பாம்பர், 1 பைடர் விமானங்கள். | 1 பைடர் விமானம். |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **15—9—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி. | | |
| இரவில்.—கப்பல் கட்டுமிடங்கள், தொழிற்சாலைகள், இருப்புப் பாதைகள்—ஹாம்பர்க் (Hamburg). | ...... | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. |
| ஜெர்மன் துறைமுகங்கள்.—ப்ரெமன் (Bremen), கக்ஸ்ஹாவென் (Cuxhaven), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven.) | ...... | சேதமாயின. |
| கப்பல் துறைகள்.—லஹாவர் (Lehavre). | ...... | ...... |
| விரோதி விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | 9 விமானங்கள். | 6 விமானங்கள். |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீக்கள் கிளம்பின. |
| துறைமுகம்.—பார்டியா (Bardia). | ...... | சேதமாயிற்று. |
| கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| விமான சந்திப்புகள்.—விரோதி பிரதேசம். | ...... | ...... |
| ருஷ்ய விமானங்களால். | | |
| கிழக்குப் போர்முனை. | | |
| காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சன்டைகள், விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | 25 விமானங்கள். | 78 விமானங்கள். |
| **16—9—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| ராணுவ லக்ஷியங்கள்.—கார்ல்ஸ் ருஹி (Karls Ruhe), மேற்கு ஜெர்மனி (Germany)யில் சில இடங்கள். கப்பல் துறைகள்.—லஹாவர் (Lehavre) | ...... நஷ்டமில்லை. | ...... தீக்கள் கிளம்பின. |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| துறைமுகங்கள் கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi), ட்ரிபோலி (Tripoli). | ...... | 1 எண்ணெய்க் கப்பல் தீப்பற்றியது. |
| சாமான் கிட்டங்கிகள்.—பார்டியா (Bardia). | ...... | தீ மூட்டப்பட்டது. |
| விரோதி ஸ்தானங்கள், பள்ளங்கள், கட்டடங்கள்.—ஆஸோஸா (Azozo). | நஷ்டமில்லை. | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **16—9—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்தஅரங்கம் பூராவும். | …… | …… |
| **17—9—41.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—மின்சார உற்பத்திசாலை.-பெதூனு (Bethune)க் கருகாமையில், மாஸின் கார்ப் (Mazin Garbe). | 1 பாம்பர் 7 பைடர் விமானங்கள். | சேதமாயிற்று. 6 பைடர் விமானங்கள். |
| | தப்புவிக்கச் செய்யும் கப்பல்கள்.-கடலில். | …… | 1 பைடர் விமானம். |
| | விமான எதிர்ப்புகள்.--பிரெஞ்சு (French)க் கடற்கரையில். | 6 பைடர் விமானங்கள். | 4 பைடர் விமானங்கள். |
| | 4 விரோதி கண்ணி அரித்தெடுக்கும் கப்பல்கள்.—பெல்ஜியன் கடற்கரைக்கப்பால் | … | 2 கண்ணி அரிக்கும் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; மற்றும் இரண்டு சேதமாயின. |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்.—கார்ல்ஸ் ருஹி (Karls Ruhe). | 1 பாம்பர் விமானம். | …… |
| | கப்பல் துறைகள்.—லஹாவர் (Lehavre). | …… | …… |
| | சாமான் கப்பல்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக்கப்பால். | …… | …… |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | தளவாட உற்பத்தி சாலைகள்.—லிக்கடா (Licata). | …… | கட்டடங்கள் தகர்க்கப்பட்டன; தீக்கள் கிளம்பின. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.-யுத்த அரங்கம் பூராவும். | 23 விமானங்கள். | 45 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **18—9—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—சத்துருவின் பெரிய சாமான் கப்பல்.—பெல்ஜியன் (Belgian) கடற்கரைக்கப்பால். | …… | சேதமாயின. |
| | பிற்பகலில்.-இரண்டு யந்திரப் படகுகள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | …… | ஒரு யந்திரப்படகு சேதமாயிற்று. |
| | மின்சார உற்பத்திசாலை.—ருவன் (Rouen). | 2 பாம்பர் விமானங்கள். | …… |
| | விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | 9 பைடர் விமானங்கள்; 2 விமானிகள் தப்பினர். | 16 பைடர் விமானங்கள். |
| | இரவில்.—கப்பல் துறைகள்—லஹாவர் (Lehavre). | …… | …… |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli), பெங்காஸி (Benghazi). | …… | கப்பல்கள் தாக்கப்பட்டன. |
| | விமானமிறங்குமிடம் வெடிமருந்து சாலைகள்.—காம்பூத் (Gambut). | …… | …… |
| | துறைமுகம், எண்ணெய், நிலக்கரி கிட்டங்கிகள்.—பார்டியா (Bardia). | …… | …… |
| | போக்குவரவு மோட்டார்கள் விரோதி முகாம்கள்.—மெர்ஸாலக் (Mersa Lukk). | …… | …… |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஐந்து துணைக் கப்பலுடன் சேர்ந்த 2-வியாபாரக் கப்பல்கள்.—மத்தியதரைக்கடலின் (Mediterranean) நடுவில். | …… | 1 கப்பல் தாக்கப்பட்டது. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச்சண்டை, விரோதி ஸ்தானங்கள் தரையிலிருந்தும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | 14 விமானங்கள். | 16 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**19—9—41.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில் ஒரு சிறிய சாமான் கப்பல்.—பிஸ்கே (Biscay) குடாக் கடலில். | ...... | கப்பல் தாக்கப்பட்டது. |
| சாமான் ஏற்றிச்செல்லும் ரயில்வண்டிகள் விரோதிக் துருப்புகள் வேவு பார்க்கும் கப்பல்கள்.—ஆக்கிரமித்த பிரதேசத்திலும், இங்கிலீஷ் கால்வாயி (English Channel) லும். | 1 பைடர் விமானம். | 2 பைடர் விமானங்கள். |
| இரவில்.—கப்பல் துறைகள் பண்டக சாலைகள் ரயில்வண்டி தங்குமிடங்கள்.—ஸ்டேடின் (Stettin). | ...... | சேதமாயின. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விரோதி பான்ஸர்ப்படை, காலாட்படை பீரங்கிப்படை விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | 24 விமானங்கள். | 60 விமானங்கள். |

ஜெர்மனி (Germany).

| | | |
|---|---|---|
| பேர்லின் (Berlin). | ...... | ...... |

**20—9—41.** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில் கப்பல்படைத்தளம்.—எம்டன் (Emden). | ...... | ...... |
| ராணுவ லக்ஷியங்கள் வடபிரான்ஸ் (France). | ...... | ...... |
| மீன் எண்ணெய்த் தொழிற்சாலை.—நார்வே (Norway)க் கடற்கரை. | ...... | ...... |
| இருப்புப் பாதைகள்.—ஹேஸ்புருக் (Hazebrouck), அபிவில்லி (Abbeville). | ...... | ...... |
| கப்பல் கட்டுமிடங்கள்.—ரூவன் (Rouen) கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg). | 3 பாம்பர் விமானங்கள், 7 பைடர் விமானங்கள். | 15 பைடர் விமானங்கள். |
| 2 விரோதி துணைக் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | ...... | 4 கப்பல்கள் தீ மூட்டப்பட்டன. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**20—9—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—பெர்லின் (Berlin), பிராங்க்பர்ட் (Frankfurt.) | ...... | ...... |
| விமான நிலயங்கள்.—வட பிரான்ஸ் (France) | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்டு (Ostend). | 4 விமானங்கள். | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதிக் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli) பிரதேசத்தில். | 1 விமானம். | 1 கப்பல் தகர்க்கப்பட்டது, மற்றொன்று தீ மூட்டப்பட்டது. |
| ஒரு வியாபாரக் கப்பல்.—கெர்கென்னு (Kerkenna)வுக்கப்பால். | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| ஒரு விரோதி நாசகாரி.—ட்ரிபோலி (Tripoli)க்கப்பால். | ...... | தாக்கப்பட்டது. |
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | 2 விமானங்கள். | ...... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| காலாட்படை, பான்ஸர் படைப் பகுதிகள், விமானச் சண்டை, விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்.—போர்முனை பூராவும். | 21 விமானங்கள். | 100 விமானங்கள். |

**21—9—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—மின்சார உற்பத்தி சாலை—காஸ்னே (Gosnay). | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| இருப்புப்பாதை லக்ஷியங்கள்.—லிலி (Lille). | ...... | ...... |
| விமானப் படையெடுப்புகள்.—வட பிரான்ஸ் (France). | 13 பைடர் விமானங்கள். | 24 விமானங்கள். |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | 16 விமானங்கள். | 53 விமானங்கள். |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **16—9—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | |
| | **எகிப்து (Egypt).** | | |
| | கெய்ரோ (Cairo). | …… | 39 ஜனங்கள் கொல்லப்பட்டனர். 93 பேருக்குக்காயம்; |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad), கீவ் (Kiev). | …… | …… |
| **17—9—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்.—தென் கிழக்குக் கடற்கரை, ஒரு ஸ்தலம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | …… | சேதமுமில்லை; உயிர்ச் சேதமுமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | …… | …… |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | …… | 3 பேர் கொல்லப் பட்டனர்; 6 பேருக் குக் காயம். |
| **18—9—41.** (வியாழக்கிழமை) | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | …… | …… |
| **19—9—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய்ப் பிரதேசம். | …… | 3 பேருக்குக் காயம்; சொற்பச்சேதம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19—9—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | …… | ஒன்றைத்தவிர மற்ற எல்லாம் விரட்டப் பட்டன; சேத மில்லை. |
| **20—9—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இடங்கள்.—தெற்கு, கிழக்கு இங்கிலாந்து (England). | 1 விமானம். | சொற்பச்சேதம்; சொற்ப உயிர்சேதம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | …… | …… |
| **21—9—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன கிழக்கு, தென் கிழக்குக் கடற்கரை. | …… | சொற்ப உயிர்சேதம். சேதமில்லை. |
| **22—9—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஒரு இடம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | …… | சேதமுமில்லை, உயிர்ச் சேதமுமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | …… | …… |

---

## இந்த இரண்டு வருஷ யுத்தத்தில் அமெரிக்காவின் தன்மை.

### நடுநிலைமை சட்டத்திலிருந்து அட்லாண்டிக் சாஸனப் பிரசுரம் வரையில் பொதுஜன அபிப்பிராயம் எப்படி அபிவிருத்தியடைந்தது.

### ஜனாதிபதி ரூஸ்வெல்டின் கொள்கை.

(எட்வெர்ட் மாண்டாமெரி எழுதியது.)

நடுநிலை சட்டத்திலிருந்து அட்லாண்டிக் பாதுகாப்பளிப்புக்கு வந்தது இராஜரீக மாறுதலில் பெரிதானது. யுனைடெட் ஸ்டேட்ஸின் ஜனங்கள் இரண்டு வருஷத்திற்குள்ளாக இத்தகைய மாறுதலுக்கு உடன்பட்டிருக்கிறார்கள்.

சென்ற யுத்தத்தில் நடந்த சம்பவங்களையும் இந்த யுத்தத்தில் நடக்கும் சம்பவங்களையும் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. அது சரியல்ல. முக்கியமாக அமெரிக்கர்களின் மனோநிலைமை மாறுதலடைந்த விஷயம் ஒப்பிட முடியாது.

"ரொக்கம் கொடுத்து எடுத்துச்செல்லுதல்" திட்டம் போதாது என்று அமெரிக்கர்களுக்குத் தெரியவந்தது. காங்கிரஸின் இரண்டு சபைகளிலும் பலத்த வாதத்துக்கு பிறகு ஜனாதிபதி ரூஸ்வெல்டின் "குத்தகைக்கடன்" தந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

பால்கன் நாடுகளிலும், சமீபக் கிழக்குப் பிரதேசங்களிலும், யூகோஸ்லாவியாவிலும் தாக்கியதும், வீரத்தன்மையுடன் சமாளித்து வந்த கிரேக்கர்களை முடிவாக அழித்தும், கிரீட்டைக் கைபற்றியதும், இதாலியர்கள் தோற்ற லிபியாவை மீண்டும் கைப்பற்றியதும் தான், மறுபடியும் அமெரிக்கர்களைத் தூண்டியது.

பிரான்ஸ், ஸ்பெயின் வடஆபிரிக்கா இவைகளில் அச்சு நாடுகளின் செல்வாக்கு வியாபித்ததிலிருந்தும் தூரக்கிழக்கில் ஜப்பான் ஆக்கிரமிப்புக் கொள்கையை ஆரம்பித்ததிலிருந்தும், அமெரிக்கர்களுக்கு மறுபடியும் சந்தேகம் உண்டாயிற்று.

"சண்டையைத் தவிர மற்றெல்லா உதவி" என்ற கொள்கையே இன்னும் அமெரிக்கா கைக்கொண்டிருந்தாலும், வரையில்லாததும், தோற்கடிக்க முடியாததாகக் காணப்படும் ஜெர்மன் ஆக்கிரமிப்பை, பிரிடனும், நேசதேசத்தார்களும் நிறுத்த இதுமட்டும் போதுமா, என்ற சந்தேகம் எல்லா வகுப்பு அமெரிக்கர்களுக்கு உண்டாகியிருக்கிறது.

"அமெரிக்கா முதலா அல்லது ஜனநாயகம் முதலா?" என்ற பழைய வாதம் மறுபடியும் கிளம்பியது. 1941-ம் வருஷம் மேமீ 27-ம் தேதி ஜனாதிபதி ரூஸ்வெல்டு செய்த ஒலிபரப்பில் இதற்குச் சுருக்கமான பதிலளித்திருக்கிறார்.

"நாஸிகள் கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம் அது நம்மை அணுக அனுமதிக்கவும் மாட்டோம்" என்றார்.

அமெரிக்க அரசாங்கம் அமெரிக்கப் பொது அபிப்பிராயத்தில் சற்று முன்னோ சற்று பின்னோ அனுசரித்தே போகிறது. அமெரிக்கப் பாதுகாப்புக்குச் சாமான்களும், பிரிடனுக்கு உதவி சாமான்களும் கலந்து செய்யப்படுகின்றன. பிரிடனை உதவி செய்ய ஐஸ்லாந்து அமெரிக்கப் பாதுகாப்பை மேல்கொண்டிருக்கிறது.

அமெரிக்க நட்பின் முடிவாக ஜனாதிபதி ரூஸ்வெல்டும் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஏதோ ஒரு இடத்தில் சந்தித்தார்கள். அதன் ராஜீய பயன்களில் இரண்டு ஏற்கனவே தெரிந்தது தான்.

"நாஸிக் கொடுமை அழிந்த பிறகு முடிவில்" உலகப் புதிய அமைப்பில் பொருளாதாரத்தைக் குறித்தும் ராஜீய விஷயத்தைக் குறித்தும் 8 கொள்கைகளை பிரிடனும் யுனைடெட் ஸ்டேட்ஸூம் கைக்கொள்ளுமாறு எட்டுகுறிப்புகள் கொண்ட செய்திகள் விடுத்திருக்கிறது.

ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் சேர்ந்து ஸ்டாலினுக்கு விடுத்த செய்தியில் ஹிட்லர் தோற்கடிக்கவே பிரிடிஷ் அமெரிக்க பொருள்கள் பூராவையும் கொடுத்து உதவுகிறதாகக் கண்டிருக்கிறது.

இந்த சந்திப்பினால் இன்னும் இதர பயன்கள் ஏற்படும். அமெரிக்காவின் நோக்கம் திடமற்றதாக இருந்தது இத்துடன் முடிவாயிற்று. இன்னும் 100 வருஷத்திற்கு உலக சரித்திரத்தின் போக்கை மாற்றக்கூடிய இங்கிலீஷ், அமெரிக்க ஐக்கிய பத்தியம் இதிலிருந்து ஆரம்பமாகிறது. 1939-ம் வருஷத்தில் நடுநிலைமை சட்டத்திலிருந்து 1941-ம் வருஷத்தில் அட்லாண்டிக் பாதுகாப்பு சட்டம்வரை பொதுஜன அபிப்பிராயத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன, ரொம்ப மெதுவாக இருந்தாலும், அவை இனி அழியமாட்டா.



# இரானைப்பற்றி ஒரு ஹிந்து முஸ்லிமின் அபிப்பிராயம்.

*ஸர் ஹஸன் ஸுஹ்ராவர்டி எழுதிய அடியில்கண்ட கடிதம் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஆகஸ்டு 29-ம் தேதி பிரசுரமானது.*

"இந்தியாவிலுள்ள முஸ்லீம்களும் மத்தியக்கிழக்கு தேசங்களிலுள்ள முஸ்லீம்களும் ஒரே மனப்பான்மையுடன் இருக்கிறார்கள். உலகத்தில் ஸ்வதந்திர விருப்பமுள்ள ஜனங்கள் மதிக்கும் பொருள்களை அழித்தும், தேசங்களைக் கைப்பற்ற ஆர்வங்கொண்டிருக்கும் நாஸிகளால் செய்யப்படும் கொடுமைகளுக்கு அந்த தேசங்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றன."

"இரானில் பிரிடிஷ் துருப்புகள் புகுந்ததை ஆக்கிரமிப்பு என்று ஜெர்மானியர்கள் பொய் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் இது பொய். பிரிடனும் நேசதேசங்களும் ஸ்வதந்திரம், நியாயம், மனிதத்தன்மையாக உயிர்வாழும் உரிமை, இவைகளுக்காகப் போர்புரிகிறார்களே தவிர, தேசங்களைக் கைப்பற்றவோ தேசத்தினரை அடிமையாக்கவோ அல்ல."

"இந்த கோர யுத்தத்தின் மத்தியில் இராக், ஸிரியா, அபிஸீனியா, எகிப்து இவைகளின் ஸ்வதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக பிரிடன் யுத்தம் புரிகிறது."

"மேலும் அந்த தேசங்களோடு சுயநலத்தை உத்தேசித்து பிரிடன் இவைகளால் பாதுகாக்கப்படுவதும் உண்மையே. ஏற்பட்ட பிணைப்பு, ஆத்மீய பலத்தாலும், பொருளாதாரத்திற்கும் ஏற்பட்டிருக்கிறதே தவிர, பிரதேசங்களைச் சேர்க்கவோ தேசங்களை அடிமையாக்கவோ ஏற்படவில்லை."

"இரானிலும், மற்ற முஸ்லீம் தேசங்களிலும் கலவரம் உண்டாக்காமலிருக்கும்படிக்கும், அவர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும்படிக்கும், என்னுடைய பிரிடிஷ் சிநேகிதர்களையும், அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் இரான், ஆப்கனிஸ்தான், துருக்கி இவைகளில் வசிப்பவர்களை இப்பொழுது நேசதேசத் துருப்புகள் வியாபித்திருப்பது, இஸ்லாத்தில் வியாபித்தது போலதான் என்று கருதும்படி மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன்."

இரானிலுள்ள விலை மதிப்புள்ள எண்ணெய் கிணறுகளும், மற்ற பொருள்களும், எதிரி கையில் கிடைக்காமல் தடுக்கப்பட்டது. ஒருவித சட்டத்தையும் மதிக்காத நாஸிகள் இரானை அழிக்காமல் பாதுகாக்கவும் பட்டது. வியாதியால் பீடிக்கப்பட்ட ஒரு அங்கத்தை காலதாமதமில்லாமலும், சாமர்த்தியத்துடனும் எடுத்துவிட்டால், எப்படி தேகத்திற்கு வியாதி பரவாமலும் மரணம், சம்பவிக்காமலும் இருக்குமோ, அதைப்போலவே தான் இதுவும் ஆகும்.

"துருக்கி தூதர், டாக்டர் ரஷ்டி ஹாராஸ் லண்டனிலிருப்பது ஸாதாபாத் உடன்படிக்கையில் சேர்ந்த மூன்று தேசத்தார்களுக்கும் ரொம்ப சாதகம். அவர்களுக்குள்ள சிநேகபாவம் மிகவும் ஜாஸ்தி."

"இந்தியாவிலுள்ள முஸ்லீம் லீகையும், மற்றுமுள்ள முஸ்லீம் சகோதரர்களையும், நேசதேசத்தார்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை முஸ்லீம் பொறுப்புகளுக்கும், முஸ்லீம் தேசங்களுக்கும் விரோதமாகக் கருதாமல் உண்மையான தன்மையை கவனிக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

சென்ற யுத்த ஆரம்பத்தில் அமெரிக்கர்கள் அது சமயம் உள்ள ஏகாதிபத்திய நாடுகளைப்போல ஜெர்மனியையும் ஒரு ஏகாதிபத்திய நாடாகக் கருதினார்கள். ஆனால் ஜெர்மனியின் வித்தியாபிவிருத்தி, விஞ்ஞான அபிவிருத்தி இவற்றை பாராட்டி ஜெர்மானியர்களுடன் அமெரிக்கர்களின் பெரும்பாலர் நேசபாவம் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இந்த யுத்த ஆரம்பத்தில் ஜெர்மனியின் கொடுங்கோல் ஆட்சி, கொடுமை, சுயேச்சை யின்மை, ராஜீய எதிர்ப்பை அழிப்பது, குறைந்த ஜனத் தொகையுள்ள ஜாதியாரை ஒழிப்பது இவற்றைக்கண்டு அமெரிக்கர்கள் வெறுப்படைந்திருந்தார்கள்.

ஆகவே 1939-ம் ௵ ஸெப்டம்பர் ௴ 3-ம் தேதியில் ஜெர்மனி பேரிலும் அதைச் சேர்ந்த இதாலி பேரிலும் விரோதமாகவும், அவைகளுக்கு எதிரியாயுள்ள ஜனநாயக ஆட்சிகளின் பேரில் அனுதாபமும் அமெரிக்க பொதுமக்களின் பெரும்பாலருக்கு ஏற்பட்டிருந்தது.

இது விவரம் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் நடுநிலைமையைப்பற்றி பிரசுரித்த பொழுது அதிகாரவர்க்கத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. செய்கையில் மட்டும் நடுநிலைமையில் இருக்க வேண்டுமே தவிர அபிப்பிராயத்திலும் நடுநிலைமையாக இருக்க வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறார்.

இதற்கு அத்தாக்ஷியாக சில வாரங்களில் நடுநிலைமை சட்டத்தில் யுத்த தளவாடங்களும், ஆயுதங்களும், போரில் இறங்கியிருக்கும் தேசங்களுக்கு விற்கக்கூடாதென்றுள்ள விதிகளை எடுத்து விட்டு "ரொக்கம் கொடுத்து அவர்களே எடுத்துச் செல்லவேண்டும்" என்ற விதிகள் சேர்க்கப்பட்டன.

வெளிப்பார்வைக்கு எந்த தேசமும் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து யுத்த சாமான்களை வாங்கலாமென்று இருந்தாலும் ரொக்கம் கொடுத்து, கைமாறி சொந்தக் கப்பல்களில் கொண்டுபோகும் நிபந்தனைகள் இருந்ததால் கடலாதிக்கம் உள்ள பிரிடனும், பிரான்ஸூம் மட்டுமே இவைகளை வாங்க முடிந்தது. இந்தக் காரணத்தினால் இப் புதுசட்டத்தை அமெரிக்கர்கள் ஆதரித்தனர். அநேகம்பேர் ஆதரித்ததால் இந்தச்சட்டத்தின் மாறுதல் ஏற்பட்டது.

போலந்து விழுந்தபிறகு விரோத பாவமும் ஒடுங்கிவிட்டது. ஆனால் அமெரிக்கப்பொதுமக்கள் அபிப்பிராயம் ஜனநாயக ஆட்சிசிறப்பில் மாறியது. அமெரிக்கக்கொள்கையில் இது ஒரு சந்தர்ப்பம்.

ஜெர்மன் தாக்குதலை ஜனநாயகம் சமாளித்து விடும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் நேசதேசத்தார்கள் ஜெர்மனியைத்தாக்கப்போவதில்லை யென்றும் மியூனிச்சில் நடந்தபடி மற்றொரு பெரிய சமாதானம் ஏற்படுமென்றும் உள்ளூர சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

ஜெர்மன் பிரசாரத்தினால் இச் சந்தேகங்கள் வளர்க்கப்பட்டன. அவை ஜெர்மனிபேரில் அனுதாபம் காட்ட அவ்வாறு செய்யப்படவில்லை. நேசதேசங்கள் பேரில் முக்கியமாக பிரிடன் பேரில் வெறுப்பு உண்டாக்க வேண்டி அம்மாதிரி செய்யப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் நேச தேசத்தார் தோற்றால் அமெரிக்காவுக்கு அபாயம் ஏற்படுமென்ற உணர்ச்சி தோன்றவில்லை.

பதினோறு வாரங்களில் வடக்கிலும், மேற்கிலும் ஏப்ரல் ௴ 9-ம் தேதி நார்வேயில் படையெடுத்தது முதல் ஜூன் ௴ 17-ம் தேதி பிரான்ஸ் அடியோடு தோற்றுப்போனதுவரை ஜெர்மனியின் நடவடிக்கைகளைப் பார்க்க அமெரிக்கர்களின் மனப்பான்மை முற்றிலும் மாறிவிட்டது.



பிரான்ஸ் தோற்றபிறகு வடக்கு முனையிலிருந்து ஸ்பெயின் எல்லைப்புறம் வரை ஐரோப்பாவின் கடற்கரை பூராவும் ஜெர்மனியின் நிராக்ஷேபணையான ஸ்வாதீனத்திலிருப்பதைப் பார்த்ததிலிருந்து அமெரிக்கர்களின் ஆபத்து தெரிய வந்தது. மேற்கு பாதி உலகத்தை ஜெர்மானியர் தாக்காமல் பாதுகாக்க பிரிடன் தான் நடுவே நின்றது.

125 வருஷங்களாக யுனைடெட் ஸ்டேட்ஸுக்காக பிரிடிஷ் கப்பற்படை அட்லாண்டிக் சமுத்திரத்தில் பாதுகாத்து வந்தது. சென்ற வருஷம்தான் இது வெளியாயிற்று. பிரிடன் தோற்றால் பிரிடிஷ் கப்பற்படை அழிந்துவிடும். அதன் பயனாக ஜெர்மனிக்கும் இதாலிக்கும் கடலாதிக்கம் ஏற்பட்டுவிடும். அமெரிக்கர்களில் பலர், நார்வே, ஹாலந்து, பிரான்ஸ், பெல்ஜியம் இவற்றை ஜெர்மனி அழித்த திறமையில் பீதிகொண்டு பிரிடன் தப்புவது அரிது என்று நினைத்தார்கள்.

ஒரு கடற்படையைக்கொண்டு இருபக்கங்களிலும் தாக்கக்கூடுமோ என்று எண்ணினார்கள். பாதுகாப்பைக் குறித்து திடீரென்று தங்கள் பாதுகாப்பிலுள்ள குறைவு அவர்கள் மனத்தில் பட்டது.

உடனே இரண்டு கப்பற்படை திட்டம் போடப்பட்டது. அநேக கோடி டாலர்கள் பாதுகாப்பிற்காக செலவு செய்ய காங்கிரஸில் அனுமதி வாங்கப்பட்டது. மேலும் ஜனங்களைப்படையில் சேர்ப்பதற்கு புதிய சட்டங்கள் போடப்பட்டன. இதற்கு மத்தியில் ஜனாதிபதி தேர்தலைப்பற்றியும் நினைக்க வேண்டியதாயிற்று.

அப்பொழுது இரண்டு வித அபிப்பிராயங்கள் ஏற்பட்டு இன்னும் இருந்து வருகின்றன. ஒன்று பிரிடனுக்கு உதவி செய்து அமெரிக்காவைப் பாதுகாப்பது. மற்றொன்று பிரிடன் தன்னால் முடிந்தால் பிழைக்கட்டும் என்று விட்டுவிட்டு, அமெரிக்காவின் பாதுகாப்பை முதலில் கவனிப்பது.

அமெரிக்கர்கள் அபேக்ஷகர்களின் பிரசங்கங்களை ஒரு காதில் கேட்டும், பிரிடன் பேரில் ஜெர்மனி மும்முரமாக வெடிகுண்டு போடும் சமாசாரத்தை ஒரு கண்ணால் பார்த்தும், இந்த இரண்டு கொள்கைகளிலும் எது சிலாக்கியம் என்பதைத் தீர்மானிக்க முயன்றார்கள்.

ஸெப்டம்பரும், அக்டோபரும் கடந்த பிறகு ஜெர்மன் தாக்குதலை சமாளிக்கக்கூடிய பிரிடனின் தன்மையில் நம்பிக்கை ஏற்பட்டு, பிரிடனைச் சண்டையிடும்படி உதவி செய்து, அமெரிக்காவைப் பாதுகாக்கும் கொள்கைதான் மேல் என்ற பெரும்பாலருக்கு அபிப்பிராயம் தோன்றிற்று. இதற்கு முக்கிய காரணம் இரண்டு அபேக்ஷகர்களும் இதை ஆதரித்ததுதான்.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஆரம்பமுதல் இந்தக் கொள்கையைப் பாராட்டினார். செய்கைகளிலும் காட்டினார். உதாரணமாக பிரிடிஷ் தளங்களை வாங்கிக்கொண்டு அவர் அமெரிக்க நாசகாரிகளை பிரிடனுக்கு விற்றதினாலும், அயல் நாட்டு காரியங்களில் அவருக்குள்ள பயிற்சியில் ஜனங்கள் நம்பிக்கொண்டிருந்ததினாலும் ஆகிய இக்காரணங்களினால் 1940-ம் வருஷம் நவம்பர் மாதம் 5-ம் தேதியில் மூன்றாம் முறையாக அவர் தேருதலில் வெற்றியடைந்தார்.

தேருதலுக்குப் பிறகும் விமானத் தாக்குதலில் பிரிடன் தப்பினதும் லிபியா இதாலிவசம் இருந்ததை பிரிடன் ஜயித்ததும் இவற்றினால் அமெரிக்கர்களுக்கு ஏற்பட்டிருந்த உற்சாகம் சற்று குறைந்தது போல் காணப்பட்டது. அகால மரணத்திற்கு சற்றுமுன் லோதியன் பிரபு லண்டனிலிருந்து வாஷிங்டனுக்கு புறப்பட்டு வந்ததும், பிரிடன் பொருளாதாரநிலை வரவர குறைந்துகொண்டு வருவதாக வெளிப்படுத்தியதிலிருந்து அமெரிக்கர்களின் உத்ஸாகம் புத்துயிர்பெற்றது.

இப்பொழுது ஜெர்மானியர்கள் வெகு மும்முரமாக யுத்தம்செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒத்தாசைக்கு மேற்கு ஐரோப்பாவிலிருந்தும், ஸிஸிலியிலிருந்தும் ஏராளமான விமானங்களைத் தருவிக்க வேண்டியிருக்கிறது.

ருஷ்ய விமானப்படைகள் ஜெர்மானியர்கள் எண்ணியதைவிட மிகவும் பலமாக இருப்பதால் ஜெர்மன் விமானப்படையை ருஷ்யாவுக்குக் கொண்டுபோக வேண்டியதாயிற்று. ஸிஸிலியில் விட்டுவைக்கப் போதுமான விமானங்கள் ஜெர்மனிக்கு இல்லை.

ஜெர்மானியர்கள் ஒரு போர்முனையில் வெகு தீவிரமாக முனைந்திருந்தாலும் அவர்கள் மற்றொரு பாகத்தில் அடுத்தபடியாக யுத்தத்திற்கு ஆயத்தம் செய்கிறதாகக் காணப்படுகிறார்கள். இதாலிய சொற்ப விமானப்படையின் உதவியைக் கொண்டு ஸிஸிலி மூலம் போதுமான யுத்த சாமான்களை வட ஆபிரிக்காவுக்கு எடுத்துச்சென்று மாரிகால எதிர்ப்புகளுக்கு ஆயத்தமாயிருக்க ஜெர்மானியர்கள் தீர்மானித்துவிட்டார்கள். இப்பொழுது ஸிஸிலியின் நிலை இதுதான்.

ஜெர்மன் விமானப்படை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வெகு சீக்கிரம் செல்லும் ருஷ்ய சிகலையிலிருந்து வெளிப்படும் அடுத்த நிமிஷமே அதை ஸிஸிலி பக்கமோ, வடஆபிரிக்காவுக்கோ அல்லது திரும்பவும் மேற்கு ஐரோப்பாவுக்கோ வெகு எளிதில் எடுத்துப்போகலாம்.

பொதுவாகச் சொல்லுவது விமானப்படை ஒரு போர்முனைக்கு முதலில் எதிர்க்க வேண்டிய தளங்களை ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவைத்து, தற்சமயத்திற்கு மட்டில் வந்தால் போதும்.

## நாஸி திட்டம்.

ஸிஸிலியிலும் வட ஆபிரிக்காவிலும் உள்ள இதாலியர்களை பாதுகாப்பாளர்களாக ஜெர்மானியர் கருதுகிறார்கள். வேறு இடங்களில் தங்கள் காரியத்தை முடித்து, அவர்கள் வரும்வரை இதாலியர்கள் அங்கு இருக்கவேண்டும்.

ஆனால் ஜெர்மானியர்கள் அவர்களை முழுவதும் நம்பி விடுவதில்லை. வட ஆபிரிக்காவில் கொஞ்சம் படையையும் நவீன முறையிலுள்ள நல்ல விமானங்களையும் விட்டுவைத்திருக்கிறார்கள்.

சமீபத்தில் பிரிடிஷ் விமானப்படைப்பகுதி டோமாஹாக், ஒரு விமானி ஏறிச்செல்லும் பைடர் விமானங்கள் மெஷர்ஸ்மிட்ஸ் 110-ஐப் போல் எதிரி விமானங்களைச் சந்தித்தன. ஸ்டூயஸ் தாக்குதல்களில் ஜெர்மானியர்கள் நவீன பாம்பர்களை உபயோகிக்கின்றனர். இதைக் கவனிக்க வட ஆபிரிக்காவில் மாரிகால படையெடுப்பு இருக்கும் என்று தோன்றுகிறது.

நம்முடைய நிலைமை சிலவற்றில் அதிகரித்தும், சிலவற்றில் குறைந்தும் இருக்கின்றன. ஜப்பான் பயமுறுத்தல்களினால் லிபியாவில் சண்டை செய்யக்கூடிய ஆஸ்திரேலியப்படையில் ஒரு பாகம் வரமுடியவில்லை. ஆஸ்திரேலிய விமானிகளும் போகமுடியவில்லை.

## ஆகாய மார்க்கமாக பொருள் ஸப்ளை.

ஆகாய மார்க்கம் பலமடைந்திருக்கிறது. ஆபிரிக்காவின் மேற்குக்கரை வழியாக யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து மத்தியக்கிழக்குக்கு அமெரிக்க விமானங்களில் சாமான் ஏற்றிச்செல்ல ஏற்பாடாகியிருக்கிறது என்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு ஏற்கனவே சொல்லியிருக்கிறார்.

நீண்டகாலமாக மத்தியக்கிழக்கில் அமெரிக்க விமானங்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. யுத்தத்திற்கு முன் லாக்ஹீட் ஹட்ஸன் விமானங்கள்



உபயோகப்பட்டுவந்தன. சென்ற நவம்பரில் டாரெண்டோவில் இதாலிய யுத்தக் கப்பல்கள் சேதமடைந்தபொழுது, மார்ட்டின் மேரிலாந்து என்ற விமானத்திலிருந்து புகைப்படம் பிடிக்கப்பட்டது. அப்பொழுது பிரிடிஷ் விமானப்படை அமெரிக்க விமானங்களை உபயோகப்படுத்தியது அதிகாரமுறையில் முதலில் வெளிவந்தது. இப்பொழுது பிரிடிஷ் விமானப்படை மேரிலாந்து டோமாஹாக் என்ற அமெரிக்க விமானங்களை உபயோகப்படுத்துகிறது. சாமான்கள் கொண்டு வர விமான உதவி அவசியம்.

மத்தியக்கிழக்குக்கு கடல்மூலம் சாமான் அனுப்புவது இந்நிலைமையில் முடியாது, ஆகாயமூலம் அதிகமாக அனுப்புவதுதான் நலம். எங்கும் அப்படித்தான். அதன்மூலம் பொருள்கள் சீக்கிரம் கொண்டு செல்ல முடியும். மேலும் எதிரிகள் தாக்கும் அபாயமும் குறைவாகும். கப்பல்களை மீதப்படுத்தலாம். விமானங்களைப் பிரித்து, பத்திரப்படுத்தி கப்பல்களில் ஏற்றிவருவது நின்று அவைகளை நேரே ஓட்டி வந்துவிடலாம். இவ்விதம் சமீபத்தில் நேரும்.

அப்படி ஏற்படுவதினால் நமக்கு சாதகங்கள் அதிகம். நாம் தொழிற்சாலைகளிலிருந்து பாம்பர் விமானங்களைக் கப்பல்களில் போட்டு அடிக்காமலும், எதிரி தாக்காமலும் அனுப்பக்கூடும். மத்தியக்கிழக்கு சீக்கிரமாகவும், பத்திரமாகவும், விமான இரும்புகளை அனுப்ப இனி ஹேதுவாயிருக்கும்.

## தோல்விக் குறைவு.

வரப்போகும் வட ஆபிரிக்கா படையெடுப்பில் இது முக்கியமாக இருக்கும். ஜெர்மானியர்களின் கற்பனையைவிட இன்னும் அதிகமாகவே ஆகாய மார்க்கமாய் சாமான்கள் கொண்டுபோவது நல்ல யோசனைதான். இம்மாதிரியாகவே கிரீட்டில் தங்கள் சாமான்களை ஆகாய மார்க்கமாய் எடுத்து வந்தார்கள். இதைவிட பலமான காரியங்களுக்கும் முக்கிய சாமான்களை ஆகாயமார்க்கமாக அனுப்ப யுனைடெட் ஸ்டேட்ஸும், பிரிடனும் முயன்றுவருகின்றன. நவீன படைகளுக்கு தரைவழியாக சாமான்களைக் கொண்டுவருவதில் அபாயம் இருக்கிறது. அதைப்பாதுகாக்க அநேக மனிதர்கள் வேண்டியிருக்கிறது. ஆகாய மார்க்கமாய் சென்றால் அவைகளைத் தாக்கமுடியாது, வெடிகுண்டுகளினால் அவைகள் தடுக்கப்படமாட்டா. மலைமேலும், காடுகள்மேலும் விமானங்கள் பறந்து செல்லக்கூடும். ஆகாய மார்க்கமாக சாமான்கள் கொண்டுசெல்வது அதிகரிக்கப்பட்டுவருவதால் விமானப்படையின் பிரயோஜனம் அதிகரித்துவருகிறது.

பெருஞ்சண்டையில் சாமான்களைக் கடல் மார்க்கமாய்க் கொண்டுசெல்ல ஆதிக்கம்வேண்டும். அது ஆக்கவோ அழிக்கவோ கூடும். அதுபோல ஆகாய விமான மார்க்கமாய் சாமான்கள் கொண்டுபோவதென்றால் விமானப்படை வேண்டும். மத்தியக்கிழக்கில் இனி நடக்கப்போகும் சண்டையில் இதன் அவசியம் தெரியும். அப்பொழுது நம் ஆகாயப்படைக்கு உதவி விமானங்கள் அனுப்ப தயாராக இருக்கவேண்டும். கப்பல் இடத்தை அடைக்காமல் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து விமானங்கள் தனியே வந்துகொண்டே இருக்கவேண்டும்.

## ஜெர்மன் ரேடியோவில் அசரீரிவாக்கில்லாமல் ஒலிபரப்ப முடியவில்லை.

ஜெர்மன் ஒலிபரப்பில் சப்தம் உண்டாகவும் நிறுத்தாமல் பாடவும், கீச் என்று ஊதவும் ஏற்பாடுகள் செய்திருந்தபோதிலும், அசரீரி வாக்கை அடக்க முடியவில்லை. டீட்ஸ்சலான் ஸெண்டர் ரேடியோ நிலயத்தில் சமாசார அறிக்கை 5 நிமிஷம் தவக்கப்படும்படி செய்யவேண்டியதாயிற்று. கேலியாகத் தடங்கல் ஏற்பட்டதைப் பிறர் கேட்காமல் மறைக்க தம்பட்டம் கொட்டி வாத்தியம் முழங்கச் செய்யவேண்டியதாயிருந்தது. நாஸி சமாசாரத்தை ஒலிபரப்புவர் "ஜெர்மானியர்களின் புதிய வெற்றி" என்று ஆரம்பித்தார்.

"கல்லறையில்தான் வெற்றி" என்றது அசரீரி. "பதினைந்து ருஷ்ய விமானங்கள் அழிக்கப்பட்டன" என்றான் ரேடியோக்காரன்.

"ஜெர்மன் விமானங்களின் நஷ்டம் எவ்வளவு?" என்று கேட்டது அசரீரி.

ஒலிபரப்புவர்க்கும் உண்மை கூறுகிறவருக்கும் இதன் தொடர்பாக கீழே கண்ட தர்க்கம் நடந்தது.

ரேடியோ.—"ஐப்ட்வாபி மறுபடியும் பிரிடிஷ் விமான தளங்களைத் தாக்கின."

அசரீரி.—"உண்மையா?"

ரேடியோ.—"நேற்றிரவு ஜெர்மன் பாம்பர் விமானங்கள் தாக்கின."

அசரீரி.—"போனவைகள் திரும்பி வந்தனவா?"

ரேடியோ.—"பிரிடிஷ் பாம்பர்கள் தாக்க முயன்றன."

அசரீரி.—"முயற்சி மட்டுமா, சத்தியம் பண்ணுவாயா?"

ரேடியோ.—"பிரிடிஷ் விமானங்கள் இதாலிய விமானங்களைத் தாக்கின."

அசரீரி.—"தாக்கியதோடு எல்லாவற்றையும் ஒழித்துவிட்டன."

ரேடியோ.—"இதாலிய விமானங்கள் மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கப்பல்கள்மேல் வெடிகுண்டுகளைக் குறிதவறாமல் போட்டன."

அசரீரி.—"என்ன பொய், எனக்கு சிரிப்பு வருகிறதே! ஹா!! ஹா!!!"

ரேடியோ.—"ஹிட்லரின் முகாமில் வெளியான செய்தி என்னவென்றால்."

அசரீரி.—"பொய்யைத் தவிர வேறு என்ன?"

ரேடியோ.—"இதுதான் சமாசாரத்தின் முடிவு."

அசரீரி.—"பொய்கள் நாளை மறுபடியும் ஒலிபரப்பப்படும்."

ரேடியோ.—"விளையாட்டுப் பந்தய சமாசாரத்திற்கு ப்ரெஸ்லோ ரேடியோவில் கேளுங்கள்."

அசரீரி.—"நல்லது! நானும் அங்கு செல்லுகிறேன்."

இந்த அசரீரி ஒவ்வொரு வார்த்தை முடிவிலும், அல்லது விஷய திட்டம் நிறுத்தும் சமயத்திலும் ஒன்று இரண்டு வார்த்தைகளைச் சொல்லி தடங்கல் செய்கிறது. அந்தத் தடங்கல் வார்த்தைகளைக் கேட்காமல் செய்ய ஜெர்மானியர்கள் உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகையால் விஷயம் கேட்கிறவர்கள் கூர்மையாக கவனித்தால் முழு சங்கதியையும் தெரிந்துகொள்ளக் கூடும். ஜெர்மானியர்களுக்கு மேற்சொல்லிய சமாசாரத்தை ஒலிபரப்ப ஒரு மணி பிடித்தது.



"ஹிட்லரே! உன் காலம் குறுகிவிட்டது. ஹிட்லரே! உன் குற்றத்திற்கு நீ தண்டனை அடைவாய். ஹிட்லரே! உன் கழுத்துக்குத் தயாராயிருக்கும் சுருக்கிலிருந்து நீ தப்ப முடியாது. ஹிட்லரே! உன் ச்ண்டை தோற்றுவிட்டது." ஜெர்மனி மறுபடியும் ஸ்வதந்திரம் அடையும்.

லண்டனிலுள்ள ருஷ்யர்கள் இந்த அசரீரியானது ருஷ்ய விஷய இலாகா உதவித் தலைவர், எம். லோஸோவிஸ்க் என்பவரும், முந்தி வியன்னா பத்திராதிபர் எர்னஸ்ட் பிஷர் என்பவரும்தான் என்று நினைக்கிறார்கள்.

---

## மத்தியக் கிழக்கில் நாஸியின் சூழ்ச்சிகள்.
## வடஆபிரிக்காவில் மாரிகாலத்தில் யுத்த முயற்சிகள்.
## பிரிடிஷ் கையிருப்பு விமானங்கள்.
## ஆகாய மார்க்கமாய் சாமான்களை எடுத்துச்செல்லும் சௌகரியம்.

(ஆலிவர் ஸ்டுவர்ட், சமீபத்தில் பி. பி. ஸி-யில் ஒலிபரப்பியது).

வட ஆபிரிக்காவில் உள்ள தங்கள் சைனியத்திற்குப், பலத்த உதவிப்படை அனுப்புவதற்கு ஜெர்மானியர்களும், இதாலியர்களும் சமீபகாலமாக முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார்கள். துணைக்கப்பல்கள் ஸிஸிலித் தீவுகளுக்கும் ஆபிரிக்காவுக்கும் இடையிலுள்ள 80-மைல் சமுத்திரத்தைத்தாண்ட அடிக்கடி முயலுகின்றன. ஆனால் பிரிடிஷ் விமானப்படையின் எதிர்ப்புகளினால் ஒரு துணைக் கப்பலையாவது சேதமில்லாமலோ அல்லது பலமாகத் தாக்கப்படாமலோ அந்த சமுத்திரத்தைத் தாண்டமுடியவில்லை.

அச்சுநாடுகள் ஏராளமான சாமான்களையும், யுத்த தளவாடங்களையும் அவ்விடத்திற்கு அனுப்பிவருகிறார்கள். இந்த மாரிகாலத்தில் லிபியாவில் ஏதாவது யுத்தம் ஆரம்பமாகும்போல் தோன்றுகிறது. ருஷ்யப் போர்முனையில் யுத்தத்தின் நிலை எவ்விதமிருந்தாலும் நிச்சயமாக வட ஆபிரிக்காவில் ஸூயஸ் கால்வாயை நோக்கிச் செல்ல அச்சு நாடுகள் எத்தனிக்கிறார்கள்.

ஆகாய எதிர்ப்பு எப்பொழுதும் நிலச்சண்டைக்கு அறிகுறியாக இருக்கிறது. ஸூயஸ் கால்வாய்ப் பிரதேசத்தில் சமீபத்தில் ஏராளமான விமான எதிர்ப்புகள் ஏற்பட்டதிலிருந்து இனி அங்கே நிலச்சண்டையும் எதிர்பார்க்கலாம்.

ஸிஸிலிக் கால்வாயில் எதிரி விமான சஞ்சாரம் குறைவு. துணைக் கப்பல்களுக்கு பலத்த விமான உதவியளிக்காமல் எப்படியாவது தங்கள் கப்பல்கள் தப்பி ஓடிவிடுமென்று விட்டுவிடுகிறார்கள். மேலும் ஸிஸிலியிலிருந்து ஜெர்மானியர் தங்கள் விமானங்கள் பூராவையும் கொண்டுபோய் விட்டதாகத் தெரிகிறது.

### ஸிஸிலியின் நிலை.

ஜனவரி மாதத்தில் மத்தியதரைக்கடலில் செல்லும் நம்முடைய கான்வாய்க் கப்பலை தாக்கியபொழுதும், 'ஸௌத் ஆம்ப்டன்', 'இல்லஸ்டிரியஸ்' என்ற கப்பல்கள் ஜெர்மன் விமானப்படையினால் பழுதுபட்டபொழுது ஜெர்மானியர்கள் ஸிஸிலியில் ஏராளமான விமானங்கள் வைத்திருந்தனர். இப்பொழுது அவர்கள் பேய் கடேனியாவில் இதாலிய விமானங்கள்தான் இருக்கின்றன. இந்த இடத்தில் யுத்தம்செய்ய அச்சுநாடுகள் எத்தனிப்பதாக முதலெடுப்பில் தோன்றவில்லை. ஆனால் அப்படியே நம்பியும் இருக்கக்கூடாது.

## நாஸிகள் ஆக்கிரமித்த ஐரோப்பாவில் கலகம் அதிகரிக்கிறது.

## நார்வேயில் ஏற்படுத்திய புதிய சட்டங்களின் பயன்.

## ஸெக்கர் துரோகிகளால் நேர்ந்த கெடுதிகள்.

## ஜெர்மானியர்களை பெல்ஜியத் தொழிலாளர்கள் ஏமாற்றுகிறார்கள்.

(ஸிரில் லாகின் சமீபத்தில் பி. பி. ஸி-யில் பேசியது.)

சில மாதங்களுக்கு முன்புதான், ஐரோப்பாவில் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் ஏற்பட்டிருந்த அமைதிக் குறைவு கொஞ்சம் தெரியவந்தது. தேசீய உணர்ச்சியும், ஸ்வதந்திரத்தில் ஆசையும் எப்போதையும்போல் அதிகமாக இருந்தன. ஆனால் நாஸிகள் ஆக்கிரமித்துக்கொண்டதால் உண்டான கலவரத்தால் தேசீய உணர்ச்சி புலப்படவில்லை.

முதலில், சரியாக கண்டுபிடிக்க முடியாமல் கலகங்களின் சில ஆர்பாட்டங்கள் ஏற்பட்டு, வரவர அதிகமாகிக்கொண்டே வருகின்றன. தற்செயலாக 'வி' இயக்கம், நாஸியின் கால் கீழ் நசுங்கிக்கிடக்கும் ஒவ்வொரு தேசத்திற்கும் நல்ல காலம் பிறக்கும் என்ற புதிய நம்பிக்கைக்குப் பொதுவான அறிகுறியாகவே இருந்துவருகிறது.

சமீபத்தில் நார்வேயில் நேர்ந்ததென்னவென்பதை கவனிப்போம். இங்கே நடப்பவைகளைப் பார்த்தால் நாஸி ஆக்கிரமித்த மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்படக்கூடியவைகள் என்னவென்பதைச் சரியாகத் தெரிந்துகொள்ளலாம். ஒரு இரவில் ஆஸ்லோ கம்பியில்லாத் தந்தியில் ஹிட்லரின் உத்தரவுப்படி ஒரு அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. அச்சட்டம் மறுநாளே அமுலுக்கு வந்து நார்வே பூராவும் உண்மையான கட்டுப்பாட்டுக்குட்படுத்தப் பட்டது.

### புதிய சட்டம்.

இதன்படி, ஏற்கனவேயுள்ள சட்டங்களைக் கவனிக்காமல் தங்களுக்குத் தோன்றியபடி எவ்விதமான சட்டங்களைச் செய்யவோ, நடவடிக்கை எடுத்துக் கொள்ளவோ ஜெர்மன் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் உண்டு. உத்தரவுகளை அமுல் படுத்த நார்வே போலீஸாரை இவர்கள் அழைத்துக்கொள்ளலாம். மேற்கு, தெற்கு நார்வேயை பாதிக்கக்கூடிய கம்பியில்லாத் தந்திக் கருவிகளை சில ஜில்லாக்களில் இவர்கள் வசம் ஒப்புவிக்கவேண்டும்.

யுத்தத்தின் போக்கை அனுசரித்து நார்வேயில் ஒரு நிச்சயமான சட்ட திட்டம் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தால் இவ்விதமெல்லாம் செய்வதாக அந்த உத்தரவில் காணப்பட்டிருக்கிறது. பொதுஜன அமைப்பிற்கோ, பொருளாதார விஷயங்களிலோ, நடந்துகொண்டிருக்கும் நிலைகளின் ஒற்றுமைக்கோ விரோதமாக இருப்பவர்களை ராணுவச்சட்டத்தின் தண்டனைக்கு உட்படுத்தப்படும் என்றும் அதில் இருக்கிறது. இதேமாதிரிதான் ஜெர்மன் அதிகாரிகள், உள்நாட்டு அதிகாரிகள், போலீஸ் தலைவர்கள் போடும் விசேஷ சட்டங்களை மீறினாலும் தண்டனை. ராணுவச் சட்டப்படி தண்டனையென்றால் மரண தண்டனையோ, ஜன்மத் தீர்ப்போ, 10 வருஷங்கள் வரை சிறை வாசமோ விதித்து தண்டிக்கப்பட்டவர்களின் சொத்தை பறிமுதல் செய்வதும்தான்.



இவ்வாறெல்லாம் கடுமையான நடவடிக்கைகளை ஜெர்மானியர் ஏன் எடுத்துக் கொள்ள நேரிட்டது? ஒருக்கால் பிரிட்டிஷார் நார்வேயில் படையெடுப்பார்கள் என்று பயந்திருக்கலாம். அல்லது விரும்பப்படாத நாஸி ஆக்கிரமணத்தை வெறுக்கும் நார்வீஜியர்களுடைய மும்மரமான சூழ்ச்சிகளையும், வெளிப்படையான கலவரங்களையும் அடக்குவதற்காக செய்யப்பட்டிருக்கும்.

### பொதுமக்கள் மேல் கட்டுப்பாடு.

எல்ஸண்டில் 5,000 நார்வீஜியர் ஈடுபட்டு சமீபத்தில் ஒரு கலகம் ஏற்பட்டது. இதற்கு ஜெர்மன் ரகசியப் போலீஸாரும், அவர்களுக்குட்பட்ட போலீஸாரும், இங்கிலாந்துக்கு நார்வீஜியச் சிறுவர்கள் சென்ற பிறகு, அவர்கள் குடும்பங்களில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைதான் காரணம். ஓடிப்போன 70 பேர்களின் தகப்பன்மார்கள் தோட்டங்களிலிருந்து கைதி செய்யப்பட்டு எல்ஸண்டிற்குக் கொண்டுவரப்பட்டு ஆஸ்லோவுக்கு அருகிலுள்ள ஜெயிலில் போட முயற்சித்தார்கள். இவ்விதம் அவர்களைக்கொண்டு போகும் தினத்தை ரகசியமாக வைத்துக் கொண்டாலும், ஜெர்மானியர்கள் எல்ஸண்டு கப்பல் துறையில் கப்பலில் ஏற்றப் போகும் சமயத்தில் 5,000 ஜனங்கள் அதைத் தெரிந்துகொண்டு தெருக்களில் கூடிவிட்டார்கள். இவர்களைக் கலைக்க ஜெர்மன் கப்பற்படை கொண்டுவரப் பட்டு எல்ஸண்டு பூரா முற்றுகைக்கான சட்டம் அமுல் நடத்தப்பட்டது.

இதன் பயனாக ஆஸ்லோவிலிருந்து ஜெர்மனிக்கு உதவும் குவிஸ்லிங் கக்ஷித் தலைவர் ஒலிபரப்பு மூலம் ஒரு எச்சரிக்கை செய்தார். கலகம் விருத்தியானால் கடும் சட்டங்கள் ஏற்படுத்தவேண்டியிருக்குமாதலால் குவிஸ்லிங் கக்ஷியார் சொற்படி நடந்தால் எல்லாம் சமாதானமாகிவிடும் என்று சொன்னார்.

"எங்களுக்கு விரோதமாக" "கலகம் செய்து, 'புது திட்டத்தை' தடை செய்தால் முன்னைவிட அதிகக் கடுமையான தண்டனை ஏற்படுமென்றும், எங்கள் கக்ஷியிலோ, விரோதமாகவோ இருக்கலாமே ஒழிய நடுநிலை சாத்தியமில்லை" என்றும் சொன்னார்.

இதுதான் அவர் வார்த்தை. ஆனால் நார்வே ஜனங்கள் முன் தீர்மானித்தபடி குவிஸ்லிங் கக்ஷிக்கு விரோதமாகத்தானிருக்கிறார்கள். ஆகவே எல்ஸண்டு மாத்திரமன்னியில் நார்வே முழுதும் கடும் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது.

### ரகசியத்தை வெளிப்படுத்தும் யாதாஸ்து.

நார்வேயில் தேசாபிமானிகளுக்கு இவ்விதமான எச்சரிக்கை இருப்பது போல ஸெக்கோஸ்லாவியாவில் ஜெர்மனிக்கு உதவும் துரோகிகளுக்கு ஒரு எச்சரிக்கை அனுப்பப்படுகிறது. அதில் "நாஸிகளுக்கு எவனும் ஸ்வதந்திர ஸெக்கர்களுக்கு விரோதமாக ரகசியமாக உதவுவதில் பிரயோஜனமில்லை. ஏனெனில் அப்படி உதவுபவர்களைப்பற்றிய நடவடிக்கைகள் எங்கள் வசம் இருப்பதால் ஜெர்மனி தோற்ற பிறகு அவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்" என்று கண்டிருக்கிறது.

இதிலிருந்து ஒரு ரகசியம் வெளியாகிறது. ஆங்காங்கு எதிரிக்கு உதவ புதிதாக ஆட்களைச் சேர்ப்பதில் பல இடையூறுகள் இருந்ததில் ஸெக்கோஸ்லாவியாவில் ஏற்கனவே இருப்பவர்களுக்குள்ளேயே கலகம் ஏற்பட்டிருப்பது வெளியாகிறது.

இதற்கிடையில் ஸெக் ஒலிபரப்புகளில், இதற்கு முன்வாரங்களில் போல்ஷிவிஸத்தை (ருஷ்யர்களை) எதிர்க்க சிரமப்பட்டு உதவும்படி செய்த பிரசாரத்தை நிறுத்தியதும் கவனிக்கத்தக்கது.

## டென்மார்க் ஒலிபரப்புகள்.

நாஸிகளுக்குட்பட்டிருந்த டேனிஷ் ஒலிபரப்புகளும் மற்றும் சில ரகசிய விஷயங்களை வெளிப்படுத்துகின்றன. இந்நிலயங்களில் வேலை செய்கிறவர்கள் மூலம் தங்கள் பிரசாரங்களை செய்வதில் நாஸிகளுக்கு கொஞ்சம் சிரமம் வந்திருக்கிறது. ஏனென்றால் ரேடியோ உத்தியோகஸ்தர்கள் உத்ஸாகத்தோடு பிரசாரம் செய்யவில்லை. ஆகவே டென்மார்க் பிரசாரம் எல்லாம் ஜெர்மன் நிலயமான ப்ரெமன் மூலமாகச் செய்யப்படுகிறது. அதில் முக்கியமாக "இங்கிலீஷ் உபதேசத்தின் பேரில் டேனிஷ்காரர்கள் தங்கள் சட்டைகளில் பிரிடிஷ் கொடிகளை வைத்துக்கொண்டு திரிகிறதாக" வும் சொல்லுகிறது.

"இங்கிலீஷ் பயித்தியம்கொண்ட இவர்கள் வதந்திகளைப் பரவியும் எழுதியும், ஜெர்மனிக்கும் தங்கள் நாட்டிற்கும் விரோதமான ரகசிய சூழ்ச்சிகளை தூண்டி வதாலும் தைரியத்தை வெளிக்காட்டுகின்றார். ஜெர்மன் சிப்பாய்களை இகழ்ந்து, ஒலிபரப்புகளில் ரகசிய ஏற்பாடுகளை பிரசாரம் செய்து, ஜெர்மனியை விரோதிக்கும் படி சிறுவர்களைத் தயாரித்து, ஜெர்மனியில் வேலைபார்க்கும் கௌரவம் வாய்ந்த டேனிஷ் குடும்பங்களை அவதூறாகப் பேசி தங்களுக்குள்ள தைரியத்தையும் தேசிய உணர்ச்சியையும் காண்பிக்கின்றனர்" என்றும் ப்ரெமன் ரேடியோவில் சொல்லப்படுகிறது.

இப்படி டேனிஷ்காரரின் தைரியத்தையும், உணர்ச்சியையும் பற்றி இவ் விதம் ப்ரெமனில் சொன்னால் அது நிச்சயமாக பரிஹாஸம்தான். ஆனால் இந்த நிந்தாஸ்துதி இரண்டுவிதமாகவும் அர்த்தம் த்வனிக்குமாதலால் நாஸிகளின் ஒலிபரப்ப உண்மையைச் சொன்னதாகத்தான் ஆகிறது. அதாவது ஜெர்மானியர் விஷயத்தில் டேனிஷ் மக்களுக்கு வெறுப்புதான்.

## நாஸிகளின் கூக்குரல்.

ஆக்கிரமித்த நாடுகளில், தங்கள் சொற்படி நடக்காதவர்களைத் தாக்கிப் பேசுவதென்பது ஒவ்வொரு நாஸி ரேடியோவிலும் வழக்கமாக இருக்கிறது. அதற்கு உதாரணமாக, ஹாலந்து தேசாபிமானிகளைப்பற்றி ஹில்வர்ஸன் ரேடியோவிலிருந்து பின்வருமாறு நிந்தனை ஏற்பட்டது.

"பல டச்சுக்காரர்கள், பிரிடனிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் உதவி வந்து ஜெர்மனியைத் தோற்கடிக்கும்வரைதான் இந்த ஜெர்மன் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார்கள். யுத்தத்தில் தோல்வியை விளையாட்டாகக் கருதவேண்டும். அவர்கள் சரியாகச் சண்டைசெய்து தோற்றார்கள். இவ்விதமாக அதை ஒப்புக்கொண்டு மனதைத் தேருதல் செய்துகொள்ள வேண்டும்!!!

இப்படியெல்லாம் டச்சுக்காரர்களுக்குச் சொல்லப்பார்க்கிறார்கள். இது மாதிரியான பிரசாரங்கள் நாஸிகள் செய்வது நமக்கு ஒரு விதத்தில் சாதகம்தான். ஏனென்றால் இவை பெரிய முட்டாள்தனமாதலால் அவர்களுக்கு விரோதமாகவே முடிகின்றன. ஹாலந்தில் ஜெர்மானியரின் அட்டூழியங்களும், ஐந்தாம் படையாளரின் செய்கைகளும், ராட்டர்டாமில் 30,000 பொதுமக்களை இறக்க மன்னியில் குண்டுகளால் தாக்கியதும் டச்சுக்காரர்களுக்கு மறந்திருக்குமா? இது தர்ம யுத்தமாகுமா? தோல்வி அடைந்தது சரியானதென்று எவ்விதம் விளையாட்டுப்போல் சகித்துக்கொள்ளக்கூடும். ஆகவே அவர்கள் சொல்லு வதெல்லாம் பரிகாசமான குறும்பு வார்த்தைகள்.



## உத்தரவு மீறப்படுகிறது.

இனி நாஸிகள் ஒழிந்து நம்நாட்டை அடைவோம் என்ற நம்பிக்கையை ஹாலந்திலிருந்து பெல்ஜியத்திற்கும் பரவிவிட்டது. இங்கே ஜெர்மன் ரகசியப் போலீஸூம் ராணுவமும் எவ்வளவு அடக்கியும் மீறிக்கொண்டு தேசிய விருந்துகள் நடந்தன. அப்பொழுது தேசம் பூராவும் நாஸி அடக்குமுறைக் கண்டனம் செய்யப்பட்டது.

பிரஸ்ஸல்ஸில்தான் இம்மாதிரியான நாஸி விரோதம் அதிகம் இருந்தது. ஏனெனில் அங்கிருக்கும் நகரத் தலைவரான எப். ஜே. வாண்டிமியூலன் பிரோயக் என்பவர் கைதி செய்யப்பட்டதால் தலைநகரவாசிகளுக்கு நாஸிகளைப் பிடிக்க வில்லை. அச்சமயத்தில் எவ்வளவு தடுத்தும் மீறி ஊர்வலங்கள் நடந்தன. ஏராள ஜனங்கள் ராஜவீதிகளில் நடமாடிக்கொண்டும், தோட்டங்களில், துரோகி பெல்ஜியரையும் ஜெர்மானியரையும் பரிஹாஸம் செய்துகொண்டும் இருந்தார்கள். எதிரிக்கு உதவும் சில முரடர்கள் தெருக்களில் தாக்கப்பட்டனர்.

இப்படியேதான ஆண்ட்வெர்ப்பு முதலிய இடங்களில் சம்பவித்தன. இப் பொழுது ஜெர்மானியர்கள் பூராவாகப் பயந்து, பஹிரங்க கலகங்களை அடக்கா விட்டால் வேலைவிட்டு நிறுத்துவது முதலிய தண்டனை விதிக்கப்படும் என்று பெல்ஜியப் போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

## பொய்யான விமான எதிர்ப்பு எச்சரிக்கை.

பிரஸ்ஸல்ஸுக்கு அருகே ஹீரான் விமான நிலயத்தில் தைரியமாகச் செய்த ஒரு சூழ்ச்சியைப்பற்றி பெல்ஜியத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. அங்கே வேலை செய்துகொண்டிருந்த பெல்ஜியர்கள் சங்குகளை சாதாரண காலத்திலேயே ஊதிவிட்டு எதிரி விமான எதிர்ப்பு எச்சரிக்கை செய்தனர். உடனே ஜெர்மானியர் கதவுகளை மூடிக்கொண்டு தற்காப்பு ஸ்தலங்களுக்குள் ஓடிப் புகுந்துகொண்டார்கள். அவ்விதம் அவர்கள் போனபிறகு டெலிபோன் கம்பி முதலியவைகளை அறுத்து அவர்கள் போட்டுவிட்டுப்போன ஆயுதங்களை எடுத்துக்கொண்டு இவர்கள் ஓடிவிட்டார்கள்.

தைரியமும் சாமர்த்தியமும் வாய்ந்த இந்த பெல்ஜியர்களை நாளதுவரை பிடிக்க முடியவில்லை. ஆனால் இதற்குப் பதிலாக ஆத்திரமாக ஜெர்மானியர், வெளியேவந்த யுத்தக் கைதிகளைக் கைதிசெய்து ஜெர்மனிக்கு அனுப்பி விட்டார்கள்.

இக்கதைகளில் ஒன்று கவனிக்கத்தக்கது. ஜெர்மானியரை வெளியே விரட்ட வேண்டுமென்று நினைத்தபொழுது பிரிடிஷ்படை வருகிறதாக பயமுறுத்தினார்கள்.

**அதுதான் விசேஷம்.** ஐரோப்பாவின் சிலபாகங்களில் தேசாபிமானிகள் வெற்றியடையாளமான 'வி' அடையாளத்தை குறிக்கும்போது 'ஆர். ஏ. எப்.' என்ற எழுத்துக்களையும் சேர்த்துக் கொள்ளுவதும் விசேஷம்தான்.

## கலகம் பரவுகிறது.

பாரிஸ் ரேடியோவிலிருந்து நாஸிகள் ஒலிபரப்பு மூலம் செய்யும் எச்சரிக்கை முக்கியமாக கவனிக்கத்தக்கது. பிரிடிஷ் விமானங்கள் தப்புவதற்கு ரகசியமாக உதவினாலும் பிரிடிஷ் விமானிகளுக்கு உதவிசெய்தாலும் பிரெஞ்சுக்காரர்களை ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு முன்னால் விசாரணை செய்து மரண தண்டனை விதிக்கப்படுவார்கள் என்றும் இருந்தது.

இவ்வெண்ணங்கள் ஐரோப்பாவின் பலபக்கங்களில் பரவுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. நாஸிகள் முதல் முதலாக ஆக்கிரமித்ததால் ஏற்பட்ட அமைதிக் குறைவினால் அங்குள்ள ஜனங்கள் அவர்களை எதிர்க்க முடியாதென்று இருந்தார்கள். அப்படி இருந்தும் ஜெர்மானியர் மீதுள்ள துவேஷம் குறையவில்லை. இப்பொழுது அறிகுறியாக ஜெர்மனியைப் போல மற்ற இடங்களிலும் பலம் இருக்கிறதென்று தெரியவந்தது.

அதற்கு பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியின் தொழிற்சாலைகளை விடாமல் தாக்கி வருவதையும், வடபிரான்ஸில் பிரிடிஷ் பைடர் விமானங்களும் பகல் விமானங்களும் எதிர்த்து வருவதையும் ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். இது ஒரு காரணம். ஜெர்மானியரை எதிர்த்து ருஷ்யர்கள் பலமாக எதிர்த்துவருவது மற்றொரு காரணமாகும்.

---

## சமரஸ உரிமையைத்தான் நானும் சொல்லுகிறேன்.

ஹொரால்டு ஜெ. லஸ்கி எழுதியது.

சமரஸ உரிமையைத்தான் நானும் சொல்லுகிறேன். ஏனென்றால் வருங்காலத்திலுள்ள நம்முடைய நடவடிக்கை பூராவும், அச்சு நாடுகளைத் தோற்கடிப்பதினால்தான் சரியாகவேண்டும். இச் சண்டைக்கு மூலகாரணத்தைக் கவனித்தால் ஜனங்கள் ஒன்றுகூடி வாழ்வதிலும், பொருளாதார திட்டங்களிலும் உள்ள தீங்குகள்தான். இவைகளில் உள்ள கெடுதல்களை நிவர்த்தி செய்யவே சமரஸ உரிமை நிற்கிறது. விபத்தான இச்சமயங்களில் இவ்வுரிமையைப் பேசுகிறவன் அலக்ஷியமாக இருக்காமல் தொழிலாளிகளுக்குப் பூரா க்ஷேமம் ஏற்படும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். மேலும் தன் கொள்கைகள் நிலைக்கவேண்டுமானால் ஹிட்லர், முஸோலினியைப் போன்ற தர்ம விரோதிகள் வரம்பு மீறி தங்கள் மனம் போன போக்கெல்லாம் செல்லுகின்றதால் அவர்களைத் தொலைக்கவேண்டும். அவர்கள் செய்யும் சில அட்டூழியங்கள்:—ஜயித்த இடங்களிலெல்லாம் தொழிலாளர்கள் உரிமையைக் காப்பாற்றக்கூடிய புராதன ஸ்தாபனங்களை அழிக்கிறார்கள். இப்படிச் செய்து, நாம் இதுவரை கேள்விப்படாத விதமாக, புதுவிதமானதும் பயங்கரமானதுமான சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கப் பார்க்கின்றனர். முக்கியமாக தொழிலியக்கம் ஏற்பட்டதுமுதல் சமரஸ உரிமையாளர் விரும்பும் விஷயங்களைத் தொலைக்கவோ கவனிக்காமலோ இவர்கள் இருக்கிறார்கள். சுயேச்சையாக விஷயங்களை சர்ச்சை செய்யவிடாமல் பொது மக்களைப் பிரித்துக் கட்டுப்படுத்துகின்றனர். ஆகையால் இவர்களைத் தொலைத்தால்தான் சரியான சமரஸம் வாய்ந்தபடி ஜனங்களை அமைக்கலாம்.

## சமரஸம் ஏற்படாது.

இப்படிச் சொல்லுவதினால் அவ்விருவர்களையும் தொலைத்துவிட்டால் நம் எண்ணங்கள் கைகூடுமென்று உறுதிகூற முடியாதபோனாலும், அவர்கள் ஒழிந்தால்தான் நம்முடைய நிலைமையைச் சாதிக்கமுடியும். அவர்கள் இருக்கும் வரை நமக்கும் அவர்களுக்கும் ஒப்பந்தமேற்பட முடியாது. ஏனெனில் நாம் ஜனநாயக ஆட்சிக்கும், ஜனங்களின் பொது உரிமைகளுக்கும், சமமான தன்மைக்கும் பாடுபடுகிறோம். அவர்கள் இதை மறுக்கப்பார்க்கிறார்கள். எங்கே காலடி வைத்தாலும், ஸ்வயபுத்தியை இழந்து வீண் பௌருஷத்திற்கு யாவரையும் உட்படும்படி செய்கின்றனர். ஹிட்லரும் முஸோலினியும் தொழிலாளர்களுக்குச் செய்யும் கெடுதியை 1939-ம் வருஷம் ஆகஸ்டு-மீ 23-ம் தேதி



ஏற்பட்ட உடன்படிக்கைக்கு முன்னால் ஸோவியத் தலைவர்களே நன்கு வெளிப்படுத்தியிருக்கின்றனர். அப்போது அவர்கள் சொன்னது பின்பு பல தடவைகளில் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் சமரஸ உரிமைவாதிகளான நாம் ஒன்று மிஞ்சவேண்டும், அல்லது அவர்கள் இருக்கவேண்டும். நாஸிகள் காப்பாற்றுவதாகச் சொல்லும் லக்ஷியங்களோடும், முறைகளோடும் நாம் ஒத்திருக்க முடியாது.

சென்ற டிஸம்பர் மாதத்தில் காமன்ஸ் சபையில் ஸ்வதந்திர லேபர் கக்ஷிக்காரர்கள் சண்டையை உடனே முடிக்க விரோதிகளுடன் ஒரு கூட்டம் கூடவேண்டுமென்று வற்புறுத்தியது யாவருக்கும் தெரியும். ஆனால் மிஸ்டர் அட்லி அவர்களின் விருப்பத்தை மறுத்துவிட்டார். அப்படி அவர் செய்ததுதான் பொது மக்கள் அபிப்பிராயமென்று எனக்குத் தெரியும். ஏனென்றால் ஒரு கூட்டம் கூடுவதானால் அங்கு ஒன்று சேருபவர்களுக்குள் முக்கியமான விஷயங்களைப்பற்றியுள்ள அபிப்பிராயத்தை ஒத்துக்கொள்ளக்கூடியவர்கள் இருக்கவேண்டும். ஆனால் நமக்கும் விரோதிகளுக்கும் பொதுவான அபிப்பிராயம் ஒன்றுமேயில்லை. சமாதானப் பேச்சு துடங்குவதற்கு முன்னாடியே தான் பிடித்த நாடுகளை விடுவிக்க ஹிட்லர் மறுத்துவிடுவான். அந்நாடுகள் விடுவிக்கப்பட்டாலொழிய நாம் சமாதானப் பேச்சைத் துடங்கமாட்டோம். அப்படி நம் வார்த்தைக் கிணங்கினாலும், கொடுங்கோலரசர்களின் வார்த்தைகளை நம்புவது முட்டாள்தனமென்று அநுபவத்திலிருந்தே தெரியவரும். கடுமையாக ஆறு வருஷங்களாக சிரமப்பட்டும் சமாதானம் ஏற்படுத்தமுடியவில்லை. அதன் முடிவாக மேலும், மேலும் புது நாடுகளை ஆக்கிரமிக்க பேராசை கொண்டிருக்கின்றனர். யூகோஸ்லாவியா விஷயத்தில் சமாதான முயற்சி முடிவுகளெல்லாம் வீணானது பிரசித்தம். போலந்தும், பிரான்ஸும் தோல்வியினாலும், சத்துரு வசப்படுவதாலும் அநுபவித்த கஷ்டங்களை காண்பித்தன. ஆகையால் கம்யூனிஸ்டிக் கக்ஷியிலிருந்து கொண்டு ஹிட்லருடன் சமாதானத்தைப் பேசவிரும்பும் சிலருக்கு, மியூனிச்சில் சமாதானம் ஏற்படுத்த முயன்றதை அவர்கள் ஆத்திரமாகத் தடுத்துப் பேசியதை ஞாபகப்படுத்துகிறேன். அதுமுதல் இரண்டு வருஷங்களாக நடந்த சம்பவங்கள் கொடுங்கோல் அரசர்களை ஒழித்தாலொழிய சமாதான ஏற்பாடு செய்ய முடியாதென்று வியக்தமாகத் தெரிவிக்கின்றன.

## கொடுங்கோல் மன்னர்களுடன் சமாதானம் ஏற்படாது.

இப்படியெல்லாம் செய்வதினால் நம்முடைய கக்ஷிக்கு ஆபத்து இல்லை என்று நான் நினைப்பதாக நீங்கள் தப்பபிப்பிராயம் கொள்ளக்கூடாது. இரண்டு விதமான சத்துருக்களை நாம் வெல்லவேண்டும். (1) அயல் நாட்டு சத்துருவான ஜெர்மானியர்களும், (2) சமரஸ உரிமையை அடைவதற்குவேண்டிய நிலைமைகளை உள்நாட்டில் தடுக்கும் விரோதிகளும்தான். இந்த நிலைகளையும் பொதுமக்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அதுவும் சர்ச்சில் தலைவராக வந்ததுமுதல்தான் அவருடைய தைரியசாலித்தனத்தையும், பொறுமையையும், பின் அடையாத தீர்மானத்தையும் வர்ணிக்கமுடியாது. நாடெங்கும் பொதுக்கூட்டங்களிலும் பாதுகாப்பு ஸ்தலங்களிலும் உள்ள வாலிபர்களுக்கு தைரியம்கூற நான் சென்றிருக்கிறேன். போர்வீரர்கள் மத்தியிலும் போயிருக்கிறேன். அங்கெல்லாம் உணர்ச்சி ஒரேவிதமாகத்தான் இருக்கிறது. தைரியம் குறையவில்லை. பூதக்கண்ணாடி வைத்துப்பார்த்தாலும் பயமென்பதே கிடையாது. ஜெர்மன் ஆட்சிக்கு உட்பட்டால் நமது வாழ்க்கை சகிக்க முடியாதென்று ஸ்திரீ, புருஷர்கள் யாவருக்கும் நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. பிரிடிஷ் சுயமரியாதை அபிப்பிராயத்திற்கு ஜெர்மன் ஆட்சிமுறை விரோதமானதால் ஜெர்மன் ஆட்சியை நாம் அங்கீகரிக்க முடியாது.

## சீர்திருத்தம்தான் முக்கியமான கருவி.

பொதுஜன அமைப்பில் எவ்வளவோ கெடுதல்கள் இருக்கின்றன. கவர்ன்மெண்டும் பெரிய பிழைகளை செய்திருக்கின்றன. இனிமேலும செய்யலாம். பிரிடனிலும் காரணம் கூறமுடியாத வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆனால் பிரான்ஸ், போலந்து தேசங்களுக்கு வந்த ஆபத்தைப் பார்க்கும்பொழுது அங்கு வந்திருக்கும் வித்தியாசங்களைப்போல் அவ்வளவு கடுமையான மாறுதல் ஏற்படவில்லை. பொதுஜனங்களுக்கும் வெற்றியினால் நன்மை ஏற்படுமென்று தெரிந்து ஜனங்கள் திருப்தி அடைந்தாலொழிய சண்டையை ஜயிக்கமுடியாதென்று நம் அதிகாரிகளுக்கும் தெரிந்ததுதான். ஆகையால் உயிருக்கே ஆபத்தேற்படக்கூடிய கஷ்ட நிலைமைகளில்கூட முக்கியமான சீர்திருத்தங்கள பொதுஜன சௌகரியத்தை அபிவிருத்திசெய்ய ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த யுத்தம் முடிவதற்குள் இதனுடைய பயனாக இன்னும் பலமாக மாறுதல்கள் செய்ய அவசியமேற்படும். ஜனஙகளுக்கு ஆச்வாஸத்தையும், உத்ஸாகத்தையும் கொடுத்து அவர்களின் நம்பிக்கையை சம்பாதித்தால் தான், இப்பொழுது நடக்கும் யுத்தத்தைப்போலுள்ள பெரிய சர்வேதேச சண்டையை ஜயிக்க முடியுமென்ற ரகசியப் பாடத்தை கவர்ன்மெண்டார் அறிந்திருக்கிறார். அதற்கு ஜனங்களுக்குப் பிடித்தமான பல சீர்திருத்தங்கள் செய்தால்தான் இவ்விதம் செய்யமுடியும். ஆகையால் வெற்றிக்கு முக்கிய கருவியாக ஜனங்களுக்குத் தேவையான சீர்திருத்தங்கள் இனி வரும் மாதங்களில் செய்யப்படும்.

ஆனால் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தாங்களாகவே தங்கள் சௌகரியங்களை விட்டுவிடுவார்களா என்றும் பணக்காரர்களின் சார்பை பின்பற்றும் சர்ச்சிலைப் போன்றவர்கள் ஸோஷலிஸ்ட் கக்ஷியாளர் வாதிக்கும் பிரச்னைகளை ஒத்துக்கொள்ளுவார்களா என்றும் கேட்கலாம். ஆனால் இப்படிக் கேட்பதே பிசகுதான். ஏனென்றால் முன்னைவிட தற்சமயம் ஜனங்களுக்கு சில முக்கிய சீர்திருத்தம் செய்துகொள்ள வேண்டுமென்ற நோக்கம் இருக்கிறதென்று அறியப்படுகிறது. கன்ஸர்வேடிவ் கக்ஷியைச் சார்ந்தவரானபோதிலும் மிஸ்டர் சர்ச்சில் சில சீர்திருத்தங்களை ஏற்படுத்துவார். அவைகள் ஸோஷலிஸ்டு கக்ஷிக்கு சாதகமா பாதகமா என்பதை அதிகம் பொருட்படுத்தாமல், தான் விரும்பும் வெற்றியை அடைவதற்கு லாயக்காக இருப்பவைகளை செய்தே தீருவார்.

மேலும் மார்க்ஸ் என்பவர் சொன்னவிதமாக, ஒருவித விபரீத பரட்சியுமில்லாமல் சீர்திருத்தங்களாகவே பிரிடனில் ஸோஷலிஸத்தை சமீபத்தில் அடைவதற்கான ஹேஷ்யங்கள் இருக்கின்றன. நிச்சயமாகச் சொல்லமுடியாதபோனாலும் சரியான தலைவர்கள் வேறுவிதமாக, ஜனசமூகத்தை சமாதானமுறையினாலேயே அமைக்கக்கூடும். இதைப்பற்றி உறுதி கூறமுடியாது. ஆனால் முன்னைவிட அதிகமாக, சொந்தத் தகராறுகளை மறந்து தேசத்தின் நல்ல அமைப்புக்கு லாயக்கான பரீக்ஷைகளை ஜனங்கள் செய்யவேண்டுமென்று ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இவ்விதமாக ஏற்படுமென்று 10 வருஷங்களுக்குமுன் சொல்லமுடியாது. இவ்விதமான எண்ணம் உண்டாகியிருக்கிறதற்குக் காரணம், தரை, கடல், ஆகாயங்களில் சண்டை செய்கிறவர்களும் பொதுமக்கள்; போதுமானபடி தொழிற்சாலைகளில் ஆகாரம், ஆயுதம் முதலியதை ஏகோபித்து பொதுஜனங்கள் தான் செய்கிறார்கள். ஆகவே பொதுஜன க்ஷேமத்தை மறக்க முடியாது.

நிச்சயமாக பிரிடிஷாருக்கு வெற்றியை நம்பி ஸோஷலிஸ்டு கக்ஷியார் உழைக்கின்றனர். மற்றுமொன்று கவனிக்கத்தக்கது. யுத்த பயம் இருந்தபொழுதும் நமது ராஜ்ஜிய விஷயத்தில் ஜனநாயக ஆட்சிக்கு குறைவு இல்லை. விளையாட்டாக ஏற்பட்ட மாறுதல் குறிப்பிடத்தக்கது. யுத்தத்தினால் பொதுமக்களின் உரிமைகள் மாறவில்லை. கவர்ன்மெண்டார் எத்தனையோ பிழைகள் செய்தாலும் ஜனங்கள்



தங்கள் இஷ்டம்போல் கூட்டம் கூடுவதையும் அபிப்பிராயங்கள் வெளியிடுவதையும் தடுக்கவில்லை. அன்னியர்களை கவர்ன்மெண்டார் சிறைப்படுத்தியது ஒரு தவறாக இருக்கலாம் ஆனால் பலமான பொதுமக்களின் அபிப்பிராயம் விரோதமானதால் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இவ்விதமான அபிப்பிராயம் அபிவிருத்தியடைந்ததற்கு அறிகுறியாக எல்லா சாமான்ய ஜனங்களும், ஏ. ஆர். பி. (பாதுகாப்பு) வேலைக்கு தாங்களாகவே ஒத்துழைக்கிறார்கள். ஆகையால் ஜனநாயகத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஜயம் பெறவேண்டும். ஆனால் ஜயம் கொஞ்ச காலம் கிரமித்துக் கிடைத்தாலும் கஷ்டமான பாகத்தைக் கடந்துவிட்டோம். இனிமேல் எல்லாம் அனுகூலம்தான்.

சமரஸ உரிமை பேசுகிறவனாகவே இருந்துகொண்டு பிரிடிஷ் ஜயத்தை சீக்கிரத்தில் எதிர்பார்க்கிறேன். ஆனால் இடையில் இருக்கும் பிரச்னைகள் பெரியவையென்றும் சிரமப்பட்டுத்தான் ஜயம் பெறவேண்டுமென்றும் சொல்லுகிறேன். யுத்தம் எவ்வளவு தர்ம யுத்தமானாலும் பெரிய ஆபத்துதான். மத சீர்திருத்தம், பிரெஞ்சுப் புரட்சி, ருஷ்யப் புரட்சிகள் போலவேதான் இப்பொழுதும் சரித்திரத்திலேயே முக்கியமான தருவாயில் இருக்கிறோம். சமரஸ உரிமை பேசுவோன் சரியான நோக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். யுத்த மூலம் தங்கள் அபிப்பிராயங்களை முடிக்க விரும்புகிறவர்கள் தொழிலாளர்களுக்கு விரோதிகளாகத்தான் ஆகிறார்கள். இது ஹிட்லர் முஸோலினி செய்யும் காரியம். ஆதலால் அவர்களைத் தோற்கடிக்க நாம் சைனியத்தில் சேர்ந்து மனிதவர்க்கத்தையே காப்பாற்ற யுத்தம் செய்ய வேண்டும்.

---

நெபோலியன் துருப்புகள்போலவே, ஹிட்லரின் சிப்பாய்களும் விரோதி நாட்டில் கொரில்லாப் படையால் சூழப்படுவதையும், யுத்தத்தை விரும்பாதவர்களைப் பலாத்காரமாக ஈடுபடும்படி செய்வதையும் அறிகிறார்கள்.

சாமான்களின் ஸப்ளைக் குறைவினால் நெபோலியன் திரும்ப நேரிட்டது. 6,00,000 பேர் கொண்ட அந்தப் பிரெஞ்சு சைனியத்தில் 30-ல் ஒருவர் வீதம்தான் நீமன் நதியைக் கடந்து மெலிந்து, கந்தைகட்டி பஞ்சத்திலடிபட்டு, தட்டுத் தடுமாறி வந்து சேர்ந்தான்.

தன்னால் முடிந்தவரை நெபோலியனுக்கு விளைந்த கஷ்டம் நேராமல் இருக்க ஹிட்லர் பெரும்பாடுபடுகிறான். யந்திரச் சண்டையில் மாத்திரம் கைதேர்ந்து விட்டான். ஆனால் டாங்கிகளும், விமான யந்திரங்களும் குளிமையால் பழுதாகி விடும். பனியில் நடமாட முடியாது. மாரிகாலத்திய இருட்டு சிப்பாய்களின் உத்ஸாகத்தைக் குறைத்துவிடும்.

மேலும், பின்னால் பிரிடிஷ் விமானங்கள் ஹிட்லரின் போக்குவரவைக் குலைத்துவருகின்றன. பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவுக்கு முடிந்த உதவியை துரிதப்படுத்துகின்றன இதற்காகத் தனி இலாகாக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு வாரத்தில் பிரிடிஷ் தொழிற்சாலைகளில் செய்யப்படும் பூரா டாங்கிகளும் லெனின்கிராடுக்குத் தற்காப்புக்கு உடனே அனுப்பப்படும்; பிரிடிஷ் விமானப் படையின் ஒரு பகுதி ஏற்கனவேயே கிழக்குப்போர் முனையில் சண்டை செய்கிறது. போர்டல் குண்டுகளும், பீவர் புருக், ஹாரிமான் இவர்களின் யோசனைகளும் இந்த யுத்தத்தை ஜயிக்க ஸ்டாலினுக்கு உதவி வருகின்றன.



# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

## ஸெப்டம்பர் 8—14, 1941.

### எஜமானனான ஜெர்மனியினுடையவும் தன்னுடையதுமான இரு மொழிகள்.

"ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பீடர்பரோவை நமது சைனியங்கள் பிடித்துவிட்டன" (ஹிந்துஸ்தானியில் இதாலிய செய்தி ஸெப்டம்பர் 12.)

"லெனின்கிராடையும், லடோகா ஏரியையும் நாம் சூழ்ந்துகொண்டதால் மர்மான்ஸ்க் பிரதேசத்தில் ஸோவியத் அரசாங்கத்தாருக்கு உள்ள இரண்டு முக்கிய சம்பந்தம் தடைப்பட்டது."
(இங்கிலீஷில் ஜெர்மன்செய்தி ஸெப்டம்பர் 14.)

### பிரிடிஷ் விமானப்படையும் டாக்டர் கோயபல்ஸும்.

"பெர்லின் மேல் விமானப்படையெடுப்பால் விளைந்த சேதம் மிகவும் குறைவு இதனால் ஜெர்மனியின் யுத்த முயற்சிக்கு ஒருவித இடைஞ்சலுமில்லை. பொதுமக்கள் அதிக தைரியமாக இருக்கிறார்கள்."
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி ஸெப்டம்பர் 9.)

ஜெர்மன் விமான இலாகா தலைவரான காப்டன் உல்ப்பிளி சமீபத்தில் "ஜெர்மனிபேரில் பிரிடிஷ் விமானப்படையெடுப்புகளால் பலருக்கு அதிகத் தீங்கு விளைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.................இங்கிலீஷ்காரர்கள் அதிக முரடர்கள். அதனால் எதிரி விமானப் படையெடுப்புகளைக் கண்டு பயப்படுவதில்லை. நீங்களும் அம்மாதிரி தைரியமாக இருங்கள்" என்று சமீபத்தில் சொன்னார்.

வி வி வி

"ஜூன் 22 முதல் ஸெப்டம்பர் 9 வரை பிரிடனுக்கு 1,200 விமானங்கள்தான் நஷ்டம். அந்த சமயத்தில் ஜெர்மன் லுப்ட்வாபிக்குச் சேதம் மிகவும் ஸ்வல்பம்,"
(பர்ஸியன், அராபிக், ஹிந்துஸ்தானி பாஷைகளில் ஜெர்மன் செய்தி ஸெப்டம்பர் 11.)

பிரிடிஷ் நஷ்டங்களில் 3-ல் 2-பங்கு ஜெர்மனிக்கு நஷ்டம். இது விமானம் சுடும் பீரங்கிகள் வேலை செய்துகொண்டிருக்கும் பொழுதே ஏற்பட்டது. பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனி பேரில் ஜூலையில் 57 தடவையும், ஆகஸ்டு மாதத்தில் 46 தடவையும் படையெடுத்தன. ஜூலையில், ஜனவரி மாதத்தில் போட்டதைவிட 5½ மடங்கு அதிகக் கனமாகக் குண்டுகள் வீசின.

வி வி வி

"ஆஸ்திரேலியாவும், நியூஸீலாந்தும் அதிக ஜனங்கள் நஷ்டப்படுவதாகச் செய்யும் புகாராவுக்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டு சில கன்றுடைக்கும் சாத

கிரீஸ் சண்டையில் 75,658 பிரிடிஷாரும், 2,968 ஆஸ்திரேலியரும், 2,266 நியூஸீலாந்தரும்தான் சேதம். கிரீட்டில் 6,870 பிரிடிஷாரும் 3,560

# அமெரிக்க கப்பற்படையும், சிங்கப்பூரும்.

---

மாஸ்கோவுக்கு தூதுசெல்லும் அமெரிக்கர்களின் பெயர்கள் குறிப்பிட்ட பொழுது டோக்கியோவில் 47 ருஷ்யர்கள் மாஸ்கோவிலிருந்து யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு தூது சென்றிருப்பதாகவும், அமெரிக்கர்களும் ருஷ்யர்களும் சேர்ந்து வடக்கு தளங்களில் "ஜப்பான் சூழ்ந்து கொள்வதை" த்தடுப்பார்கள் என்றும் பிரஸ்தாபப்படுகிறது என்று டைம்ஸ் பத்திரிகை நிருபர் வாஷிங்டனிலிருந்து ஸெப்டம்பர் மீ 3-ம் தேதி எழுதினார்.

உப தளகர்த்தர் என்ற ஹோதாவில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான பஸிபிக் தீவுகளின் தளங்களைப் பார்வையிட்டு வந்த காங்கிரஸ் நபர் மின்னே ஸோடாவிலிருக்கும் மிஸ்டர் மாஸ், பத்திரிகைக்காரர்களைச் சந்தித்து இதே சமயத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறார். அமெரிக்காவிலும், ஜீவ நாடியான பனாமா கால்வாயிலும் தாக்குவதைத் தடுக்க பலத்த அமெரிக்கப்படை ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்றும் அதே சமயத்தில் முக்கியமாக ரப்பரும், ஈயமும் வர பனாமா கால்வாய் ஸ்வாதீனத்திலிருக்க வேண்டும் என்றும் சொன்னார்.

ஜப்பான் டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகளில் பிரவேசித்தால் அதை எதிர்க்க சிங்கப்பூரின் உபயோகம் அத்தியாவசியம். மேலும் யுனைடெட் ஸ்டேட்ஸ் தூரப் பஸிபிக்கில் கப்பல்களை அவசியமாகக் கொண்டுபோக வேண்டியிருந்தாலும், அமெரிக்கக் கப்பற்படை சிங்கப்பூரை கப்பல் தளமாக வைத்துக்கொள்ள வேண்டியது அடுத்த முக்கியமான பிரச்னை. ஏனென்றால் சிங்கப்பூரை ஜப்பான் பிடித்துக்கொண்டால் பஸிபிக் சமுத்திரத்திலிருந்து யுனைடெட் ஸ்டேட்ஸ் துரத்தப்பட்ட மாதிரிதான்.

அமெரிக்க யுத்தக் கப்பல்களை ஜப்பானுடைய கடலில் கொண்டுவந்து பொருளாதார முற்றுகை வெற்றிகரமாகப் போடக்கூடுமென்பதைப்பற்றி பிரச்னை வரும் போதெல்லாம் நிபுணர்கள் கொடுக்கும் அபிப்பிராயம் ஒன்றே தான். அதாவது பிரிடிஷாருக்கு இப்பொழுது கப்பல்கள் குறைவாக இருக்கின்றன. அதே மாதிரியாக அமெரிக்காவுக்கும் தளங்கள் குறைவு. ஆனால் பலமான அமெரிக்க கப்பற்படை சிங்கப்பூர் தளத்தில் இருந்தால் ஜப்பானைப் பொருளாதார முற்றுகை போடவும், ஜப்பானுக்குப் பிரதிகூலமான நிபந்தனைகளின் பேரில் சண்டையிடும்படி அதைக் கட்டாயப்படுத்தவும்கூடும்.

---



# ஹிட்லரின் "புது ஐரோப்பிய திட்டம்."

---

"கேலிக்கிடமான வேறெந்த வினையொன்றும் மனித புத்தியை இம்மாதிரி கவரவில்லை."

........வின்ஸ்டன் சர்ச்சில்.

## மூன்று கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படுகிறது.

ஹிட்லரின் "புது திட்டத்தின்" நோக்கமென்ன?

நாஸிப் பொருளாதார மந்திரி டாக்டர் வால்தர்புங்கு சொல்வதைக் கொஞ்சம் கவனித்துக்கேளுங்கள்.

"ஜெர்மனியின் வெளி நாடுகளுக்குப் பூராவான பொருளாதார சாதகம் ஏற்படுத்துவதும், ஜெர்மானியருக்குத் தேவையான சாமான்களைக் கொடுப்பதும் தான் 'புது திட்டத்தின்' நோக்கம்."

வி வி வி வி

எவ்விதம் இப்"புதிய திட்டம்" சாதிக்கப்படும்? நாஸி விவசாய மந்திரி ஹெர் எர்ன்ஸ்ட் டாரே சொல்லுவதைக் கொஞ்சம் கவனித்துக்கேளுங்கள்.

"வித்தியாசம் பாராட்டாமல் மற்ற நாடுகளுக்குச் சொந்தமான, பூமி, தொழிற்சாலை முதலியன கைப்பற்றப்பட்டு நாஸிக் கக்ஷியினருக்கு முதலில் பிரித்துக்கொடுக்கப்படும்."

வி வி வி வி

"பழைய திட்டம் நிவர்த்திக்காத எந்தக் கெடுதல்களை இப் "புதிய திட்டம்" நிவர்த்திக்கப்போகிறது"?

ஹெர் எர்ன்ஸ்ட் டாரே சொல்லுவதை மறுபடியும் கேளுங்கள்.

"அடிமை என்ற பதத்தை ஏதோ உபமானம் வாய்ந்ததாகவும், வாக்கலங்காரம் வாய்ந்ததாகவும் நினைக்கவேண்டாம். அதற்கு நவீனமான அர்த்தத்தை நாங்கள் கொண்டிருக்கிறோம்."

## ஹிட்லர், நெபோலியன், மாஸ்கோ.

1812 ஜூன் 23-ல் ருஷ்யா பேரில் நெபோலியன் சண்டை துவக்கினான்.

1941 ஜூன் 22-ல் ஹிட்லர் ருஷ்யா பேரில் சண்டை துவக்கினான்.

1812 ஸெப்டம்பர் 14-ல் நெபோலியன் மாஸ்கோவினுள் புகுந்தான்.

(மாஸ்கோவிலிருந்து 400 மைல் தூரத்துக்கப்பால்) லெனின்கிராடுக்கு முன்னாடியே 1941 ஸெப்டம்பர் 14-ல் ஹிட்லர், தன் சைனியம் தடைப்பட்டதை அறிகிறான். இதேமாதிரி (மாஸ்கோவிலிருந்து 450 மைல் தூரத்திலுள்ள) கீவிலும், (700 மைல் தூரத்திலுள்ள) ஒடெஸ்ஸாவிலும் தடைப்பட்டன. இது வரை அதிக தூரம் சென்றது ருஷ்யப் பிரதானப் பட்டிணத்திலிருந்து 200 மைல் ஸ்மாலென்ஸ்க் பாகத்தில்) வரைதான்.

மாட்சிமை தங்கிய ராஜ சக்கிரவர்த்தி அவர்கள்

## இச்சமயம்

ராணுவத்திற்கும், ஸாப்பர்ஸ் மைனர்ஸ்களுக்கும், சமாசாரம் அறிவிப்பு அளிக்கும், யந்திர வண்டிகளை ஓட்டுவதற்கும் மனிதர்கள் தேவைப்படுகிறார்கள் என்று

## புதுக்கோட்டை ஸமஸ்தானவாஸிகள்

அறிந்துவருகிறார்களா ?

இவைகளுக்குத் தேவையான யோக்கியதாம்சங்கள் :—

குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம்.

குறைந்த இடைமானம் 110 பவுண்டு.

குறைந்த சம்பளம் மாதம் ஒன்றுக்கு 16 ரூபாயும் இனாமாக உணவும் உடுப்புகளும் அளிக்கப்படும்.

பின்னும் மற்ற விபரங்கள் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய படை சேமிப்பு உத்தியோகஸ்தரான ராவ் பஹதூர் R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களிடம் தெரிந்துகொள்ளலாம்.

**உற்சாகமுள்ள புதுக்கோட்டை மக்களுக்கு மகத்தான ஒரு சேவையில் ஈடுபட**

## இதுவேதான் நல்ல தருணம்.

பொருள் ஈட்ட வேலைகளிலும் அமரலாம்.

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—27-9-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு அக்டோபர்மீ 4௳ [ந. 64.

பிரஸங்கம் LXIV.

## ரேடியோவும் யுத்தமும்.

போக்குவரத்து சாதனங்கள் அபிவிருத்தி அடைய, அடைய ஆபத்தும் அதிகரிக்கிறது. வியாதிகளை ஒழிக்கவும், விளைபொருள்களின் உற்பத்தியை அழிக்கவும் உபயோகப்படும் விஞ்ஞான சாஸ்திரம் விஷப்புகையையும், வெடிகுண்டுகளையும் உற்பத்தி செய்ய இடங்கொடுக்கிறது. மோட்டார்கள் ஏற்பட்டதிலிருந்து துரிதமாக பிரயாணம் செய்யவும், வியாபாரம் நடத்தவும் வசதிகள் ஏற்பட்டதோடு அலைகளின் உதவியால் மனிதர்களைக் கொல்ல டாங்கிகளும், நீர்மூழ்கிகளும் கட்டப்படுகின்றன. தம்பட்டம் கொட்டியும், சொக்கப்பான் கொளுத்தி புகை எழுப்பியும் சமிக்கை செய்தது போக, இப்பொழுது ஆகாயத்தில் அலைகளை திட்டம் பண்ணுவதின் மூலம் சமிக்கை செய்யப்படுகிறது. சிநேகிதத்துக்கும், அமைதிக்கும் சாதகமென்று சிறிது காலத்திற்கு முன் எதிர் பார்த்திருந்ததுபோக இப்பொழுது ரேடியோ யுத்தக் கருவியாக உபயோகப்படுகிறது. பரஸ்பரமாக அபிவிருத்திக்குள்ள சங்கதிகளை ரேடியோ மூலம் கேட்கச் செய்யாமல், அவதூரான வார்த்தைகளையும், பொய் பிரசாரங்களையும் இப்பொழுது கேட்கிறோம்.

இருந்தபோதிலும் ரேடியோ சமாதான காலத்தில் எவ்விதம் உபயோகப்படுமோ அவ்விதமே யுத்த காலத்திலும் ஒருவாறு உபயோகமாக இருக்கிறது. பெரியவர்களும், குழந்தைகளும் கேட்டு ஆனந்திக்கும்படிக்குள்ள திட்டங்களை மாற்றி, உள்ளூரிலும், வெளிநாட்டிலும் உள்ள படைகளை சந்தோஷிக்க ஒலிபரப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. தனி இடத்தில் அகப்பட்டுக்கொண்ட படையும், எல்லைப்புறத்திற்கப்பாலுள்ள சைனியமும், வெகுதூரத்திலிருக்கும் கப்பலிலுள்ளவர்களும், உற்பத்திக் கணக்கை அதிகரிக்க வேண்டி வாரக்கணக்காக இராக் காலங்களிலும், யுத்தக் கருவிகளும், வெடிமருந்து செய்யும் தொழிலாளிகளும் வீடுகளிலிருந்து கேட்டு வந்தது போலவே, இப்பொழுது நவீன சங்கீதத்தையும், சாமர்த்தியமான பேச்சுகளையும் கேட்க ஹேதுவாயிருக்கிறது. வேலையில்லாமல் சோம்பலடைந்திருப்பவர்களையும் யுத்தத்தினால் பீதியடைந்திருப்பவர்

கங்கள் செய்ய உத்தேசித்திருக்கிறது". (இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி ஸெப்டம்பர் 10.)

## கட்டுக்கதை.

"நாடுகளுக்குள் சமமான ஒற்றுமையில்லாவிட்டால் ஐரோப்பாவில் நீண்டகாலம் சரியான ஜீவனம் செய்வது முடியாது"—ஹிட்லர், பெர்லினில் சொன்னது 24—10—33.

"ஐரோப்பா, ஹிட்லரின் பிரியம், நம்பிக்கை இவைகளால் புதிதாக அமைக்கப்படுகிறது"-பர்லினர் ஜ்வல்ப் உர்பிளாட் 19—6—40.

"ஆக்கிரமித்த நாடுகள் எல்லாவற்றையும் ஜெர்மனியின் பொருளாதாரங்களோடு ஒழுங்காகப் பிணைக்கப்படுகின்றன. அதாவது ஒவ்வொருவனுக்கும் போதுமானபடி ஆகாரம் கிடைக்க வேண்டும்"—யூகோஸ்லாவியாவுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு 9—11—40.

"சில மாதங்களுக்குள் உண்மையாகவே இப்பிராந்தியத்திற்கு ஜெர்மனி ஸ்வதந்திரம் கொடுத்துவிட்டது" மியூனிச்சில் ஹிட்லர் சொன்னது 8—11—40.

ஆஸ்திரேலியரும் 2,540 நியூஸீலாந்தரும் சேதம். இந்த இரண்டிடங்களிலும் ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து இரண்டுக்கும் சேர்ந்து, பிரிடன் அடைந்த நஷ்டம் ஏற்படவில்லை. ஒவ்வொரு குடியரசு நாட்டு மந்திரியும் ஜெர்மனிக்கு விரோதமாக இந்தச் சண்டையில் அதிகமாகக் கலந்துகொள்ளத் தங்கள் அரசாங்கங்களின் அபிப்பிராயங்களை அவ்வப்போது வெளியிட்டிருக்கிறார்கள்.

## சரியான உண்மை.

"மேலதிகாரங்களில் போலீஷ்காரர்களை அமர்த்துவதில்லை. கீழ் வேலைகளில்தான் நியமிக்கப்படுகிறார்கள்"—டியூட்சி ஆல்ஜிமெயின் ஜீடங் 6-10-40

பிரான்ஸிலுள்ள ஜெர்மானியருக்கு ஜெர்மன் அதிகாரிகள் சர்க்கரை, கொழுப்பு, மாமிசம் இவைகளுக்குத் தனிச்சாப்பாடுச் சீட்டுக்கொடுக்கிறார்கள்—ரேடியோ பாரிஸ் 20—12—40.

"போலீஷ்காரர்கள் யூதர்கள் இவர்களைவிட வசிப்பதற்கு அதிக இடமும் நல்ல நிலைமையும் ஜெர்மானியருக்குத் தான்தேவை. இவைகளை 'எந்த அதிகாரத்தால் பெறும்' என்ற கேள்விக்கு 'தன் இஷ்டப்படி என்ற முறையால் தான்' என்பது பதில்"—லேகிராகோ நவம்பர் 8—11—40.

" ரகசிய சூழ்ச்சி, சத்தியாக்கிரகம் சிறிய விரோத கலகம் இவைகளால் பெல்ஜியன் பொருளாதாரத்தைச் சரிப்படுத்த முடிவில்லை"—லீரோவீ ஜெர்னல், பிரஸ்ஸல்ஸ் 1—1—41.

"பிரிடிஷ் விமானிகளை உத்சாகப்படுத்தியதற்காகத் தாழ்ந்த டச்சுக்காரர்கள் கைதிசெய்யப் படுகிறார்கள்"—எஸ்ஸன் நாஷனல் ஜீடங்.

பி. பி. ஸியைக் கேட்டதற்காக காலோனில் சிலர் கைதி செய்யப் பட்டனர்—கோல் நிஷீ ஜீட்ங்.

ஆகாரப்பஞ்சம் ரகசிய சூழ்ச்சி ரயில் விபத்து "பூதகன" முறைகளும் தான் ஹிட்லர் காலடிவைக்கும் இடங்களில் வரவேற்கின்றன.



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 63—(5-வது பிரிவு).

1941—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| அக்டோபர் | 1, புதன்கிழமை ... | குளவாய்ப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| | 2, வியாழக்கிழமை. | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |
| | 3, வெள்ளிக்கிழமை... | மேலூர் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 64—(1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 4, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 5, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | மாலை | 6.00 |
| | வேங்கடக்குளம் .. | ,, | 6.30 |
| 6, திங்கட்கிழமை .. | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| 7, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | பெரம்பூர் ... | ,, | 6.30 |
| 8, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | அரிமளம் ... | மாலை | 6.00 |
| | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| 9, வியாழக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| 10, வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |

திக்கு திசை கண்டுபிடிக்கத் தெரிந்தும் இருக்கும்படி பயிற்சி பெற்றிருக்கிறான். அவனுக்குப் படைவீரனின் ஸ்தானத்தில் சேர்ந்துகொண்டு போரிடத் தெரிந்திருக்கவேண்டும். தலைமை அதிகாரி இருக்கும் முகாமில் யுத்த அரங்கத்தின் விவரங்கண்ட பெரிய தேசப்படம் இருக்கிறது. அந்த இடத்தில் விமானங்கள், டாங்கிகள் இருக்கும் ஸ்தானங்களைக் குறித்துக் கொள்ளப்படுகிறது. யுத்த அரங்கத்திலிருக்கும் போர்வீரன் அங்கு நடக்கும் செய்திகளை ரேடியோ மூலம் அனுப்புகிறான். அந்தச் செய்தியை அறிந்துகொண்டு யுத்த அரங்கத்தில் நேரேயிருந்து உத்தியோகஸ்தர் எவ்வாறு சண்டை செய்ய முகாமிலிருந்தே உத்தரவு கொடுக்கக்கூடுமோ அவ்வாறு யுத்தத்தை நடத்துகிறேன்.

**ரேடியோவும், ராணுவப் பயிற்சியும்.** ரேடியோ ராணுவப் பயிற்சிக்கும், விசேஷமாக துப்பாக்கி பீரங்கிகளைக் கொண்டு பழக்குவதற்கு உபயோகப்படுகிறது. லக்ஷியத்தை நிறுத்திவைத்து சுடுவதற்கு எவ்வளவு பாடம் கற்பித்துக் கொடுத்தாலும்கூட, பீரங்கிப்படை வீரர்களும், காலாட்படை வீரர்களும், நவீன யுத்தமுறையில் வேகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் லக்ஷியங்களைச் சுடுவது முடியாத காரியம். கண்ணால் பார்த்து எண்ணங்கொண்டு, பார்த்ததையும் எண்ணினதையும் சேர்த்து கணக்கிட்டு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரக்கூடிய விதமாக பீரங்கிப்படைக்காரர்களுக்கு சமாதான காலத்தில் பயிற்சி கொடுப்பது மிகவும் கஷ்டம். யுத்த நிலைமையை உண்டாக்கி அதில் மனிதர்களைப் பயிற்சி கொடுப்பது தான் திறமையாக இருக்கும்.

இப்பொழுது நம்முடைய டாங்கிகளும் விமானங்களிலும் நம் மனிதர்களை ஏற்றிவைத்து அவர்களைப் பார்த்து சுடும்படி பழக்க முடியாது. அதற்காகத்தான் இச்சமயத்தில் ரேடியோ மிகவும் உபயோகமாக யிருக்கிறது. தரையிலிருந்து கம்பியில்லா மின்சார சக்தியினால் விமானங்களும், கப்பல்களும், ஓட்டக்கூடியதாக இருக்கிறது. கப்பல்களிலும், விமானங்களிலும் டாங்கிகளும் மின்சார சக்தியினால் ஓட்டவும் திருப்பவும் வேண்டிய கருவிகளிருக்கின்றன. தரையிலிருந்து ரேடியோவினால் மாலுமிகளைக் காட்டிலும் ஓட்டவும் திருப்பவும் கூடும். இதில் உயிருக்கு அபாயமில்லை. உதாரணமாக ஒரு வேட்டுப் போட்டவுடன் குண்டு தெய்ப்பதற்குக்குள்ளாக இவைகள் அதிவேகமாய் விலகிக்கொள்ளும். இவ்வித விமானங்கள் முதலியவைகளைக் குறிபார்த்து சுட ராணுவ சைனியங்கள் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன.

**ரேடியோவும், எதிரி விமானங்கள் இருக்குமிடங்களைக் கண்டு அறிவதும்.** ரேடியோவினால் எதிரி விமானங்களிருக்கும் இடங்களைக் கண்டுபிடித்துவிடலாம். ஒலி பேதமறியும் கருவிகளைக்கண்டு பிடிப்பதற்கு முன்முதலே விரோதி விமானங்கள் வரும் சப்தம் கண்டுகொள்வதற்கு முடிந்தது. இப்பொழுது ரேடியோவால் அவைகள் எவ்வளவு உயரத்தில், எந்த மார்க்கத்தில், எவ்வளவு வேகத்தில், எந்த இடத்தில் வருகின்றனவென்றும், வெகு எளிதில் கண்டுவிடலாம். இதனால் போரிடும் சைனியங்களுக்கும், நிலபீரங்கிக்காரர்களுக்கும், விமானப்பாதுகாப்புப் படைக்கும், அப்போதைக்கப்போது சரியான காலத்தில் எச்சரிக்கை செய்யக் கூடும்.

ரேடியோவினால் வேறுசில நல்லபலன்களும் உண்டு. ஆனால் அவைகளை யுத்த சமயத்தில் சிக்கனமாக உபயோகிக்கவேண்டும். விமானங்களை விமான நிலயங்களுக்குப் பத்திரமாகப் போகும் வழியைக் காண்பிக்க ரேடியோவினால் மூட்டப்பட்ட வெளிச்சம் உபயோகப்படுவதுமுண்டு. ஆனால் இப்பொழுது யுத்த சமயத்தில் இந்த தீபங்களை ஏற்றினால் அவைகளின் உதவியால் எதிரிகளும் வந்துவிடுவார்கள். ரேடியோ நிலயங்கள் இராக்காலத்தில் செல்லும்



விமானிக்கு தூரதிருஷ்டி வெளிச்சம்போல் இருக்கும். இது காரணத்தினால்தான் பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனிமேல் படையெடுக்கும்பொழுது, ஜெர்மன் ரேடியோ நிலயங்கள் மூடப்பட்டுவிடுகின்றன. திசையறியவும், ஆனால் தான் போனபோக்கில் இறங்கச் செய்யவுமுள்ள கருவிகள் இந்த யுத்த காலத்திலும் உபயோகப்படுகின்றன. உதாரணமாக முழுகிப்போகும் கப்பல்களில் இருப்பவர்களைக் காப்பாற்ற ரேடியோ மூலம் செய்திகள் அனுப்பலாம். ஆனால் இவைகள் எதிரியின் காதில் விழக்கூடாது.

**வாயடைப்பது.** போர் நடக்கும் சமயத்தில் முக்கியமாக ரேடியோ பேசுவதை பிறர் கேட்காமல் தடுத்துவிடலாம். வேறு ஊர்களிலிருந்து வரும் ஒலிபரப்புகளைக் கேட்காமலும் தடுத்துவிடுவதும் உண்டு. அயல் நாட்டுச் சங்கதிகள் ஆகாயம் மூலம் அனுப்பப்படும் பொழுது வெகுசிரமமாய் இருந்தாலும்கூட இப்பொழுது ருஷ்யா, ஜெர்மனி அறிக்கைகளைக் கேட்க விடாமல் தடுத்துவிடுகிறது. நிலயம் டேட்ஸ் காலன் ஸென்டர் ரேடியோவில் சமீபத்தில் தடங்கல்கள் ஏற்படுவதிலிருந்து தெரிகிறது. இம்மாதிரி ஜெர்மன் ரேடியோ இதைப்போலவே ஜெர்மனியும் ருஷ்ய அறிக்கைகளைக் கேட்கவிடாமல் தடுத்துவிடக்கூடும். ஆகவே இது பதிலுக்குப்பதில் செய்துவிடும் ஆதலால் இருதிறப்பார்களும் அதைப்பொதுவாக கையாண்டுவருகிறார்கள்.

**யுத்தத்தினால் ரேடியோவிற்கு ஏற்படக்கூடிய பயன்கள்.** ரேடியோவினால் யுத்தத்தினுடைய பயன்கள் என்னவென்று கவனித்த பிறகு யுத்தத்தினால் ரேடியோவுக்கு என்ன பயன்கள் என்று பார்ப்போம். பொதுவாக யுத்தத்தினால் ஒலிபரப்பு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். தூரதிருஷ்டி ரேடியோவின் அபிவிருத்தி தடைபட்டிருக்கிறது. ஆராய்ச்சிமட்டும் குறையவில்லை. ஆனால் ஒலிபரப்புக்கு வேண்டிய நிலைமை இல்லாததினால் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கிறது. சண்டையில் ஈடுபடாத பொதுமக்கள் ரேடியோவைக் கேட்க தவிக்கப்படுகிறார்கள். ஏனெனில் யுத்தகால குறிப்புகளுக்கே அவகாசம் அதிகம் பிடிக்கிறது. இருந்தாலும் இப்பொழுது போர்களத்திலிருக்கும் சிப்பாய்கள் குடும்பத்தோடு பேசவும், இதர நாடுகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருக்கும் குழந்தைகளோடு பெற்றோர்கள் பேசவும் உபயோகப்படுகிறது. வியாபாரத்தை கவனித்தால், ரேடியோக்களினால் வியாபாரம் அதிகரித்து தேவைக்குத்தக்கபடி உற்பத்திசெய்யக் கூடவில்லை.

யுத்தத்தினால் ரேடியோவுக்கு முக்கியமாக இரண்டு சாதகங்கள் உண்டு. ஒன்று ரேடியோ யந்திரங்கள் அபிவிருத்தியடையச் செய்கின்றன. மற்றொன்று தேசத்தார்களின் பரஸ்பர நோக்கத்தை ஒத்தது. யுத்த காலத்தில் ரேடியோவில் ஏற்பட்ட அபிவிருத்தியில் பிற்பட்டு சமாதான காலத்திலும் உபயோகமாகும். சென்ற யுத்தத்தில் இது ரொம்ப அபிவிருத்தியாகி அநேகர்கள் இந்த சாஸ்திரத்தில் பயிற்சி பெற்றார்கள். நிபுணர்கள் என்று சொல்லப்பட்டது போக யாவருக்கும் தெரிந்த வித்தையாகிவிட்டது.

மற்றொரு பயன் வெளிப்படை யானதல்ல. சென்ற யுத்தத்திற்குப் பிறகு ரேடியோ மூலம் நிலைத்த சமாதானம் இருக்க வேண்டிய கொள்கையை பிரசாரம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. சர்வதேச மகாநாடு உலகத்தில் அமைதி உண்டாக்கத்தன் ரேடியோ மூலம் பிரசாரம் செய்யலாமென்று நம்பிற்று. துர் அதிர்ஷ்ட வசமாக சில கெட்டவர்கள் குறிப்பிட்டு ஆக்கிரமிப்பும், ஜாதிவித்தியாசக் கொள்கைகளும் ரேடியோ மூலம் பரவச்செய்யப்பட்டு, அதன் பயனாக இந்த யுத்தம் சம்பவித்தது. நான் குறிப்பிடுவது என்னவென்றால் சர்வ தேசக்கக்ஷியாவது வேறுயாராவது சமாதானத்திற்காக உண்மையில் பிரசாரம் செய்ய முடியவில்லை. துரிதமாக போக்குவரத்து ஏற்பட்ட இந்த சமயத்தில் முன்னுக்குப்பின்

களையும், சந்தோஷிக்கச் செய்யவோ அல்லது அவர்களுடைய வேலைத்தொந்தரவுகளை மறக்கவோ, திட்டம் போடப்பட்டு கேட்பவர்களின் மனதிற்குச் சந்தோஷத்தையும், அமைதியையும் கொடுக்கிறது.

**அறிக்கைகள்.** ஆனால் ரேடியோவின் முக்கிய உபயோகம் யுத்தச் செய்திகளை அல்லது இதர செய்திகளை அறிவிப்பதும், பிரசாரமும், இவைகள்தான். பொதுமக்களுக்கு உடனுக்குடனேயே முக்கியமான விஷயங்களைத் தெரியக் கொடுப்பதும் முக்கியமான சம்பவங்களை வெளியிடுவதும் அவசியம். ஆனால் ஜெர்மானியர் பொய்செய்தியை உடனே அனுப்பவேண்டுமென்று நினைக்கிறார்கள்.

ரேடியோதான் சீக்கிரமான முறையில் விஷயங்களை வெளியிடக்கூடியது. இதற்காக பல இடங்களிலிருந்து மத்திய ரேடியோ நிலயங்களுக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இவைகளை அநேக பாஷா நிபுணர்கள் இடைவிடாது கேட்டு, விஷயங்களை வகுத்து, பதிப்பிட்டு, சரிபார்த்துக் கேட்பதற்குச் சரியாக இருக்கும்படி செய்து பொதுமக்களுக்கு ஒலிபரப்புகிறார்கள். மேலும் "சில நிமிஷங்களுக்கு முன்வந்த செய்திகளும்" சேர்க்கப்படுவதால், சமாசார அறிக்கைகளைப் படிக்க வெகுஜனங்கள் காத்திருக்கின்றனர்.

**பிரசாரம்.** இந்த யுத்தமே பிரசாரத்தால் கிளப்பி விடப்பட்டதென்று ஒருவாறு சொல்லலாம். அதற்காக மிஸ்ட்டர் நெவில் சேம்பர்லின் ரேடியோவினால் யுத்தத்தைத் தொடங்கினார் என்ற அர்த்தமில்லை. உலகத்தில் ரேடியோ மூலம் இவ்வளவு தூரம் பிரசாரம் இல்லாதிருந்தால் யுத்தம் நேரிட்டிருக்காது என்று சொல்லலாம். யுத்தம் ஆரம்பிக்கும் முன்னமேயே தான் செய்யப்போவதைச் சரியென்று ஸ்தாபிக்க ஜெர்மனி பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டது. இது, ஈசாப் கதைகளில் ஒன்றில் ஆட்டுக்குட்டியை விழுங்கவந்த ஓநாய், அதற்குச் சொன்ன சால்ஜாப்பு மாதிரியிருந்தது. ஆகையால் எல்லா தேசங்களுக்கும் எல்லா பாஷையிலும், முன்யோசனை செய்து ஜெர்மனி பிரசாரம் செய்யத் தலைப்பட்டது. விஷயங்களைச் சந்தர்ப்பங்களை விட்டுப் பொருக்கியும், வெகுவருஷங்களுக்கு முன் ஏற்பட்ட உபன்யாசங்களிலிருந்து சில வாக்கியங்களை சந்தர்ப்பத்திற்குப்பொருந்தாமல் பொருக்கியும், அவைகளுக்குக் காதுகள், மூக்குவைத்து வெளியாக்கினார்கள். பொய்சொல்ல விசேஷ நிபுணர்களைத் தேர்ந்தெடுத்து இவைகளை பல வருஷங்களாக பிரசாரம் செய்ததின் பயனாக இந்த யுத்தம் ஆரம்பித்தது. பெரிய தேசங்களும், சிறிய தேசங்களும் இந்தப் பிரசாரத்தினால் மூழ்கியும், பலஹீனப்பட்டுப்போய் ஒன்றன்பின் ஒன்றாக, ஸினிமாப் படங்களில் ஆட்கள் ஒருவர்பின் ஒருவராக வீழ்த்தப்படுவதைப் போல் ஜெர்மனி வசமாயின. ஜெர்மானியர்களை வெல்ல முடியாதென்றும், அரட்டிப் பிரட்டி அவர்களின் சாமர்த்தியத்தை உறுதிப்படுத்தியும், அதை எதிர்க்க முடியாதென்று நேற்றுவரையில் நம்பி வந்தார்கள். இப்பொழுதுதான் இதன் பொய் ருஷ்ய யுத்தத்திலிருந்து வெளியாகிறது.

ஆனால் பொய்பிரசாரம் கேவலம் என்று இங்கிலாந்து கருதிவந்தது. ஜெர்மானியர் செய்த இந்த பொய்பிரசாரம் ஒருவராலும் மறுக்கப்படாததால், அதிலிருந்து ஏற்பட்ட கெடுதல்களை உணர்ந்து அவைகளை எதிர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பி. பி. ஸி. ஸ்தாபிக்கப்பட்டு அராபி முதலிய பாஷைகளிலும், அச்சு நாடுகளின் பிரசாரத்தை எதிர்க்க உண்மை சமாசாரத்தை வெளியிட ஆரம்பித்தது. ஆனால் ஜெர்மன் ரேடியோவைப்போல இதற்கு ஸர்க்கார் உதவி கிடையாது. மேலும் எதிரியைப்போல கண்டபடி புளுகவும் மாட்டாது. பொது மக்களின் தைரியத்தினாலும், பிரிடிஷ் விமானப்படையும், கப்பற்படையும்,



வார்த்தையால் இல்லாமல் நடத்தையால் ஜெர்மன் பிரசாரத்தை பொய்யென்று ரூபித்தது. உண்மையை மட்டும் கண்ணியமான முறையில் பி. பி. ஸி. பிரசுரிப்பதினால், ஜெர்மானியருடைய பொய்பிரசாரத்தைக் கேட்டதிலிருந்து ஏற்பட்ட மயக்கம், இப்பொழுது தான் தெளிந்துவருகிறது.

ஆனால் பிரிடனைப்போல் இதர தேசங்கள் இல்லை. பிரான்ஸ் தோற்றது ஜெர்மன் பிரசாரமேயாகும். "டாங்கிப் படையை ஜெர்மன்படை கைப்பற்றி விட்டது. கோட்டையை தவிடு பொடியாக்கிவிட்டது, முக்கிய நகரத்தை கைப்பற்றி விட்டது" என்று இம்மாதிரி பொய் வதந்திகளினால்தான் பிரான்ஸ் ஜனங்கள் பீதியடைந்து தோற்றுவிட்டார்கள். ஹாலந்து, ருமேனியா, ஜெர்மனிக்கு சிநேகமான இதாலிகூட பிரசாரத்தால் ஏமாந்தன.

ஆனால் இது ருஷ்யாவில் பலிக்கவில்லை. சமீபத்தில் ஏற்படக்கூடாத ஜயத்தைக் குறித்து ஜெர்மனி தயாரித்த விளம்பரங்கள் எதிர் பிரசாரத்தால் தடுக்கப்பட்டன. இதனால் ருஷ்யர்கள் பயமில்லாமல் தங்கள் வேலையை நடத்தினர். வார்த்தையில்லாது காரியங்களில் சாதிப்பவர்களுக்குப் பொய்பிரசாரம் பாதிக்காது. 1915, 1918-ம் வருஷத்தில், பண்டைகாலத்தில் ராம்சே மாக்டோனல்டு செய்த பிரசாரத்தை ருசிகரமாக ஹா ஹா பிரபு வாசிப்பதாலும், பீ. ஜீ. வுட் ஹவுஸ் விகடனைப்போல ரேடியோவில் பேசுவதாலும், ஜெர்மனியைத் தவிர மற்ற எவரும் ஏமாறமாட்டார்கள். ஆனால் வார்த்தையோடு நிற்காது பிரிடிஷ் விமானங்கள் சண்டை செய்து அடைந்த வெற்றியை உள்ளபடி பிரசாரம் செய்வதால் பிரிடிஷ் பிரசாரம் பலிக்கிறது.

**சமாசாரம் அனுப்பிவைத்தல்.** யுத்தத்திற்கு சமாசாரம் அனுப்பிப்பது தான் முக்கியம். பெரியகப்பல் இலாகாவிலிருந்து கப்பற்படைகளுக்கும், தளகர்த்தர்களிடமிருந்து படைவீரர்களுக்கும், விமான நிலய அதிகாரிகளிடமிருந்து பாம்பர் படைகளுக்கும், விமானப்படைத் தலைவரிடமிருந்து விமான ஓட்டிகளுக்கும், தளகர்த்தரிடமிருந்து டாங்கிப்படை, பீரங்கிப்படை, மோட்டார்படை, இவைகளுக்கும் அடிக்கடி செய்திகள் போய்க் கொண்டேயிருக்கவேண்டும். இதற்காக முன்போல் போர்களத்தின் வழியாக தபால் கொண்டுபோவது அபாயகரமானது. மைல்கணக்காக டெலிபோன் கம்பிகள் போடமுடியாது. யுத்தம் நடந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி கண்மூடித்திறப்பதற்குள் ககனமார்க்கமாக ரேடியோ மூலம் சமாசாரங்கள் அனுப்பப்படுகின்றன. பிரிடிஷ் ஸிக்னல் படைப்பயிற்சி பள்ளிக்கூடங்களில் ரேடியோக்காரர்கள் பழகி தேர்ச்சியடைகிறார்கள். இப்பொழுது சமாசாரங்கள் ரகசியமாய் பேச்சிலேயே அனுப்பப்படுகின்றன. இருந்தாலும் இப்பொழுது முன் மாதிரி இதற்காக ரகசிய பரி பாஷை கிடையாது. ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி இங்கு விவரிக்கப் போதுமான அவகாசமில்லை.

ஆகையால் யுத்த காலத்தில் ரேடியோவின் அவசியம் எவ்வளவென்று யூகிக்கக்கூடியது. காடரிக்கிலும், இன்னும் அநேக ஆங்கில டிப்போக்களிலும், பிரிடிஷ் ஸிக்னல் இலாகா ஆயிரக்கணக்கான பேர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. பிரிடிஷ் தரைப்படையிலும் கம்பியில்லாத் தந்தி உபயோகிக்கத் தெரிந்துகொள்ளுவதற்கு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தில் உள்ள மற்ற தேசங்களைப்போல் இந்தியாவிலும் இந்தப் பயிற்சி அபிவிருத்தியடைந்து வருகிறது. ஸிக்னல் படையிலுள்ளவர்களுக்கு முன்னணியில் நின்று பீரங்கிப்படை, காலாட்படையைப் பழக்கமும் கொடுக்கப்படுகிறது. வேலையில் சேருமுன் ஒவ்வொருவனும் வைத்தியப் பரிசோதனை செய்யப்படுகிறான். ஒவ்வொருவனுக்கும் துரிதமாக செய்தியனுப்பவும், ரேடியோ உபயோகிக்கவும் எவ்வித ரேடியோவையும் பழுது பார்க்கவும், கொடிகாட்டி, சைகை செய்யவும்,

விரோதமன்னியிலும், காலவரையன்னியிலும் பிரசாரம் இல்லாமல்போனால் சமாதானம் ஏற்படாது. யுத்தம் முடிந்தபிறகு ரேடியோவை சமாதானத்திற்குப் பலத்த கருவியாக உபயோகப்படுத்த வழிகள் என்கண்டுபிடிக்கக் கூடாதென்பதற்குக் காரணமில்லை. யுத்தத்திற்கு எவ்வளவு உபயோகமாயிருந்ததோ, அதேமாதிரி சமாதான காலத்திற்கும் ரேடியோ உடயோகமாகயிருக்கும். இந்த கோரயுத்தம் முடிந்தபிறகு, இப்பொழுது "சாங்க்ஷன்" மூலமாக ஆக்கிரமிக்கும் நாடுகளைத் தண்டிப்பதுபோல இனி ரேடியோ மூலம் செய்யப்படும் அக்கிரமப் பிரசாரத்தை ('ஜாம்' செய்தோ) தடுக்கப்பட்டோ அல்லது இதரவழிகளில் தண்டிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை ஆராய்ச்சி செய்யப்படுமென்று நம்பப்படுகிறது.

---

# நாம் ஏன் யுத்தம் செய்யவேண்டும்.

---

வாழ்க்கை நீடிக்கக் கூடியதற்கும் நல்ல வாழ்க்கை ஏற்படுவதற்கும் ஜனசமூகத்தின் நோக்கமாகும், என்பது யாவரும் அறிந்த விஷயம். உலகத்தை அபிவிருத்தி செய்வது எவ்விதம் ஜனநாயகத்தின் முடிவான நோக்கமோ, அதற்கு விரோதமாக க்ஷேமத்தை அழிக்க ஏகாதிபத்தியம், புத்து என்னும் நோய் போலாகும்.

ஐரோப்பாவின் மத்தியில் அதிகார ஆசைகொண்டும், கட்டுப்பாட்டுக்குட்பட்டும், ஜெர்மானியர்கள் மிருகத் தன்மையாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு ராஜீய விஷயங்களில் குழந்தைகளைப் போல் முன்னேற்றமடைய சக்தியில்லாத போனாலும், மனிதர்களுடைய கஷ்டங்களைக் கொஞ்சமும் பாராட்டாமல் இருக்கிறபடியால் அவர்களால் இந்த உலகத்திற்கு ஒருபயம் ஏற்படுகிறது. இதுவரை கண்டறியாதபடி பெரிய யுத்த யந்திரத்தை உண்டாக்கிக்கொண்டு பெரிய அந்தஸ்துக்கு அவதாரம் செய்தார்போல் மூடப்பிரமை கொண்டு, வெறிபிடித்து ஜெர்மானியர்கள் மற்ற இதர ஐரோப்பிய நாடுகளுடன் 1939-ம் வருஷத்தில் யுத்தத்தில் இறங்கியிருக்கிறார்கள். அதன் நம்பிக்கை மிகவும் இழிவானது. ஆனால் இதிலிருந்து அதற்கு யுத்த ஆவேசம் ஏற்பட்டது. அந்த மிருகத்தன்மையான நம்பிக்கைக்கு நேர் விரோதமாக தன் சொத்து சுகத்தைப் பாதுகாக்க வேண்டிய உணர்ச்சியும், தேசங்களின் பரஸ்பர ஒற்றுமைக் கொள்கைகளுக்கு விரோதமான எண்ணமும் இருக்கின்றன. "பணம் பெற்ற ஜனநாயகங்களுக்கு மங்கும் காலம்" வந்துவிட்டதென்று ஜெர்மானியர்கள் சொல்வதின் தாத்பரியம், ஐரோப்பாவில் இதர அச்சுநாடுகள் வசப்படாமல் இருந்த விதமும், இனி இந்தக் கொள்ளைக்காரர்களால் பிடிபடவேண்டும் என்பது தான்.

ஆனால் வாஸ்தத்தில் ஜனநாயகங்கள் க்ஷீணிக்கவில்லை. அவ்விதம் எண்ணியதில் ஹிட்லர் ஒரு அபாண்டமான பிசகு செய்துவிட்டான். ஜனநாயகங்கள் பூராவும் எதிர்பாராத சந்தர்ப்பத்திலிருக்கும் பொழுது அவைகள் தாக்கப்பட்டன. அவைகள் ராஜ்ஜிய தந்திரத்தைக் கொண்டு ஒருங்குசேர்ந்து யுத்தத்திற்குத் தயாராவதற்கு முன்பே இந்த ஆபத்து ஏற்பட்டுவிட்டது. ஒரு தேசம் மற்றொரு தேசத்தை ஆக்கிரமிக்கும் கொள்கையை தள்ளுபடி செய்யக்கூடிய முதிர்ச்சி ஏற்பட்டிருந்தாலும் பரஸ்பர பொறுப்பை கவனிப்பது தன்னுடைய நன்மைக்கே என்று எண்ணக்கூடிய பரஸ்பர தேசிய இயக்கம் உண்டாகவில்லை. அவைகள் பழைய காலஅமைப்புக்கும், நூதன அமைப்புக்கும் நடுவில் அவைகளுக்குள் சர்வ தேசக் கட்டுப்பாடு ஏற்படுவதற்குள் தக்க பலமில்லாதவைகளாக இருந்த சமயம் பார்த்து கொள்ளைகாரனை ஹிட்லர் வந்துவிட்டான்.



திடகாத்திரமுள்ள ஜனங்களுக்கு சொத்து, சுகத்திற்காக சண்டையிட நேரிட்டால் மூர்க்கமான உத்ஸாகம் ஏற்பட்டுவிடும். உதாரணமாக பிரிடிஷாரையும், ருஷ்யாவையும் சொல்லலாம். ருஷ்யா தன் தேசத்தைக் காப்பாற்றவும், ஐரோப்பாவிலுள்ள மற்ற அடிமை ஜனங்களையும் வீரத்துடன் எதிர்க்கும்படி உத்ஸாகமும், தைரியமும் ஊட்டிவருகிறது. ஆனால் இந்த உணர்ச்சி பாதுகாப்பிற்கே உபயோகப்பட்டுவருகிறது. ஆக்கிரமிக்க இன்னும் நாஸி உணர்ச்சியைப் போல அது பலப்பட வேண்டும்.

நாஸியின் கொடுமையை அடக்கி பிரிடிஷ் அரசாங்கமும், யுனைடெட் ஸ்டேட்ஸும், ஸோவியத் ருஷ்யாவும் ஒன்றுசேர்ந்து உலகத்திலுள்ள இதர நாடுகளைப் பாதுகாக்கவும் வெற்றியடைவதற்கு வேண்டிய மனுஷ்ய பலமும், யந்திர பலமும், அடைந்திருக்கின்றன. இந்த கோர யுத்தம் துவங்கி இப்பொழுது மூன்றாவது வருஷம் நடந்துவருகிறது. மேற்சொல்லிய மூன்று நாடுகளிலுள்ள ஒவ்வொருவரும் மனம் வைத்துப் போராடினால் இதர நாடுகளும் அவ்விதவே பின் தொடரும். இந்த விதமாக எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து தங்களுக்குப் பொதுவான விரோதியின் கொடுமையை அடக்க பூரா பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுவார்களேயானால் யுனைடெட் ஸ்டேட்ஸும் பிரிடிஷ் அரசாங்கம் பூராவும் ஒன்றுசேர்ந்து தங்கள் தொழிற்சாலைகளில் ஏராளமான யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும். அவர்களுக்குள் சகோதரத்துவம் ஏற்பட்டு பொதுப்படையான பொறுப்பு உணர்ச்சி உண்டாகி, மாஸ்கோ, லண்டன், கெய்ரோ, சுங்கிங், சிங்கப்பூர், அட்லாண்டிக் சமுத்திரம் இந்தியாவின் எல்லைப்புறம் இவைகளில் எந்த இடத்திலும் அபாயம் ஏற்பட்டால் அதை ஒன்றாகவே பாதிக்கக்கூடும்.

மேற்சொல்லியவைகளில் கொஞ்சமேனும் குறைவுபட்டால் பூரண வெற்றியடைவது அசாத்தியம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

25—9—41-லிருந்து 1—10—41-வரை.

**கிரிமியா யுத்தம்.**—பெரிகோப் பூசந்தியில் ஜெர்மானியர் ஆகாய மார்க்கமாக ஏராளமான படைகளை இறக்கி ரஸ்தா, இருப்புப்பாதை இவைகளைத்தாக்கியும் கிரிமியாவில் புதிய மின்னல் போர் ஆரம்பித்திருக்கிறார்கள். 7 மைல் முன்னேறியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

**யூக்ரேன்.**—யூக்ரேன் பிரதேசத்தில் கார்க்கோவுக்கு 85 மைல் தென்மேற்கேயுள்ள முக்கிய தொழில் அபிவிருத்தியுள்ள போல்டாவா நகரத்தை எதிரி கைப்பற்றிக்கொண்டார்கள் அங்கே புடன்னி தன் பாதுகாப்புப்படையை சீர்திருத்தி அமைத்துக்கொண்டிருக்கிறார். போல்டாவா என்பது டானெட்ஸ் நடலின் ஆரம்ப பாகத்திலிருக்கிறது.

**ஒடெஸ்ஸா.**—ஒடெஸ்ஸா அழிக்கமுடியாமலிருக்கிறது. ஆகஸ்டு 23-ம் தேதியிலும் ஸெப்டம்பர் 14-ம் தேதியிலும், இருமுறையிலும் விமானங்களால் தாக்கிவிட்டு ஜயத்துடன் பிரவேசிக்க தளகர்த்தர் அன்டோனிஸன் இந்தப் போர்முனைக்கு வந்து எத்தனித்தது நடைபெறவில்லை. இரண்டு தடவைகளிலும் ஏராளமான

நஷ்டத்துடன் எதிரிகள் திரும்ப விரட்டப்பட்டார்கள். கூட்டமாகச்சேர்ந்து தாக்குதல்களும் பயனடையாமல் போகவே எதிரிகள் பீரங்கி எதிர்ப்புகளையும், ஆகாய விமானத் தாக்குதல்களையும் கையாண்டு வருகின்றனர்.

**ருஷ்யாவின் மத்தியப் போர் அரங்கத்தில்** டிமோஷிங்கோ எதிர்ப்பு செய்து கொண்டுதானிருக்கிறார். கோமலைச் சுற்றி யுத்தம் நடப்பதாக மறுபடி பிரஸ்தாபம் வருகிறது. அதற்கருகிலுள்ள "டி" திரும்பக் கைப்பற்றப்பட்டது.

**லெனின்கிராட்** சண்டை பலமடைந்தே வருகிறது. ஆனால் 'சதுப்பு நிலத்தினால்' பெருந்தடை ஏற்பட்டிருக்கிறது. இங்கே பிரிடிஷ் 'விமானப்படை லுப்ட்வாபியைத் தாக்கி முதலில் வெற்றியடைந்திருக்கிறது. லுப்ட்வாபிக்கு 12 விமானங்களும் பிரிடிஷ் விமானப்படைக்கு 1 விமானம் விகிதம் நஷ்டம் ஏற்பட்டது. இரண்டாவது பிரிடிஷ் விமானப்படை இப்பொழுது ருஷ்யப் படையுடன் சேர்ந்துகொண்டு இரண்டு நாட்களில் 26 எதிரி விமானங்களை அழித்துவிட்டன. இதில் ஒரு பிரிடிஷ் படையும், ஒரு ருஷ்யப் படையும் மட்டில் சேதம். ருஷ்ய யுத்தக் கப்பல்கள் மார்ட், ஆக்டோப்ரே, ரிவலூஷன் இவை இரண்டும் இந்த நகர சமுத்திரக்கரைப் போர்முனையைப் பாதுகாக்கின்றன. இந்த நகரத்திற்கு பக்கத்திலுள்ள அநேக கிராமங்களிலிருந்து எதிரிகள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். பெர்லினர் பார்ஸன்-ஜீடங் என்ற யுத்த நிருபர், லெனின்கிராடுக்கு முன்னால் எதிரிகள் பட்ட கஷ்டம் சொல்லமுடியாதென்றும் நதிகளிலும் வீடுகளிலும், பள்ளிக்கூடங்களிலும், தரைவிரிப்புக்கு அடியிலும், பண்டகசாலைகளிலும், தின்பண்ட மேஜைகளுக்குப் பின்புறமும் வெடி கண்ணிகள் வியாபித்திருந்ததென்றும் சொல்லியிருக்கிறார்.

**மெர்மான்ஸ்க்.**—பின்லாந்தினர் கண்டாலக்ஷாவைப் பிடித்துக்கொண்டதாகவும் கரேலியாத் தலைநகரான பெட்ரோஜவாட்ஸ்கை பிடித்ததாகவும், சொன்னபோதிலும், மெர்மான்ஸ்க்கிற்கு அபாயமில்லை. நாஸி அறிக்கைகள் அதைப்பற்றி மௌனமாய் இருப்பதைப் பார்த்தால் அங்கு நாஸிகளுக்குத் தோல்வி என்றே சொல்லலாம்.

**ருஷ்யாவுக்கு உதவி.**—சென்ற வருஷத்தைக் காட்டிலும் ஜூலை, ஆகஸ்டு, ஸெப்டம்பர் இந்த மாதங்களில் அதிகமான டாங்கிகள் செய்யப்பட்டன. இந்த மூன்று மாதங்களுக்குள் முந்தின வாரத்தில் உற்பத்தி செய்ததுதான் ரொம்ப அதிகம். அதைக் காட்டிலும் இந்த வாரத்தில் 100-க்கு 20 வீதம் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டது நமது வெற்றியைக் குறிக்கிறது. இந்த வாரத்தை ருஷ்யாவில் "டாங்கிகள் வாரம்" என்று சொல்லப்படுகிறது. இந்த டாங்கி வாரம் மின்னல் மாதிரி தோன்றி மறைகிறதல்ல. "ருஷ்யாவுக்குதவி செய், பின் பற்றச் செய்" என்ற பிரசாரமும் தொடருகிறது. பிரிடிஷ் தொழிலாளி சபையும் உதவியளிக்கும்படி வேண்டிக்கொண்டிருக்கிறது. நிநேகித முறையில் உதாரணமாக வியாபாரக் கூட்டுறவு சங்கமும், தொழிலாளிகள் கக்ஷியும் சேர்ந்து உதவிக்காக நிதி ஏற்படுத்தியிருக்கிறது. குறைவில்லாமல் யுத்தப் பொருள்களும், வெடிமருந்தும் அனுப்பப்படும் என்பதில் சந்தேகமில்லை. தேசங்கள் தூரத்தில் இருப்பதும், கப்பல் போக்குவரத்து, மார்க்கங்களில் தடையேற்படுவதும் ஆகிய இவ்வித இடையூறுகள் ஏற்படலாம். ஸெப்டம்பர் மாதம் 27-ம் தேதி 'டாங்கி' வாரத்தில் பிரிடன் செய்த பேருதவியைப் பாராட்டி லண்டனிலுள்ள ருஷ்ய தூதர் எம். மேயிஸ்கி ரேடியோவில் பேசியபொழுது 2,000 மைல் தூரத்திலும் போர்நடந்து வருவதால் ருஷ்யாவிற்கு டாங்கிகள் குறைவானதைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். இந்த கோர யுத்தத்தில் இருதிறப்பார்களுக்கும் நஷ்டம் நேர்ந்திருந்தாலும், ஜெர்மனியைப்போல ருஷ்யாவிற்கு அவ்வளவு அதிக நஷ்டம் நேரிடாது. இருந்தாலும், அதனால் தாங்க முடியாமலிருக்கிறது.



'பாழான ஊர்களாக ஆக்கி விடு' என்ற உத்தரவுப்படி தொழிற்சாலைகளையும், யந்திரங்களையும், வேறு இடங்களிலும் கொண்டுபோய் ஸ்தாபிப்பதில் கால, தாமதம் ஏற்பட்டது. சாதாரண காலத்தில் செய்யக்கூடிய போதுமானதாக இருந்தாலும் இப்பொழுது போரவில்லை.

**மூன்று அரசாங்கங்களின் ஆலோசனை சபை.**—ருஷ்யாவிற்கு உதவி செய்ய வேண்டிய பிரச்னைகளைக் குறித்து பரிசோதனை செய்ய நியமிக்கப்பட்ட பிரிடிஷ் அமெரிக்க தூது கோஷ்டிகள் பீவர் புருக் பிரபு, மிஸ்டர் அவெரெக் ஹாரிமன் இவர்கள் தலைமையின் கீழ் ஸெப்டம்பர் 23-ம் தேதி மாஸ்கோவிற்கு வந்து சேர்ந்திருந்தார்கள். சென்ற மாதம் 29-ம் தேதியில் அந்த ஆலோசனை சபைக்கு அக்கிராஸனாதிபதியான எம். மாலடோவ் இன்னும் மற்ற ருஷ்யப் பிரதிநிதிகளையும் சந்தித்தார்கள்.

தரைப்படை, கப்பற்படை, விமானப்படை, போக்குவரத்து மருந்து ஸப்ளைகள், விலைபொருள்கள், இவைகள் விஷயமாய் ஆராய்ச்சி செய்ய 6 சபைகள் ஏற்படுத்தப்பட்டன. போரில் ஈடுபடாத அமெரிக்காவும் இந்த ஆலோசனை சபையில் இருந்து போனது பெரிய சம்பவம். இது போலவேதான் உணவுப் பொருள்கள் ஸப்ளை விஷயமாக ஒரு சிறு கமிட்டி ஒன்றும் நியமிக்கப்படாதது குறிப்பிடத்தக்கது. ஒரு வாரத்திற்கு போட்டிருந்த சபை இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே (ஸெப்டம்பர் 29, அக்டோபர் 1) அதன் வேலைகளை செய்து விட்டது. இப்பொழுது காலத்தை வீணாக்காமலிருப்பது மிகவும் முக்கியம். அதன்படி ருஷ்யாவுக்குத் தேவையானதை அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தடை.**—பெருமையாக சொல்லிக்கொள்ளும் ஐயங்கள் இருந்தபோதிலும், எதிரி களைத்துப் பலஹீனப்படுவதின் அறிகுறிகள் தெரிகின்றன. இதாலி, ருமேனியா, ஹங்கேரி, ஸெக்கோஸ்லோவாக்கியா, பல்கேரியா இவைகளிலிருந்து உதவிப்படை அனுப்பும்படி வேண்டிக்கொள்வதாக வதந்தி இருக்கிறது. லிபியாவிலும் வேறு இடத்திலும் தனக்கு வேலை இருக்கிறதாகச் சொல்லி இதாலி பின்வாங்குகிறது. இஷ்டமில்லாமலிருக்கும் சைனியமும் கோபம் கொண்டிருக்கும் குடியானவர்களும் தங்கள் எதிர்ப்பார்கள் என்று பாரிஸ் மன்னர் பயப்படுகிறார். அமெரிக்கன் R. M. பத்திராதிபர் மிஸ்டர் ரால்ப் இங்கர்ஸால் ருஷ்யா பீதியடைய வேண்டியதுமில்லை. ருஷ்யா அழிந்துபோகாது என்று சொல்லுகிறார். ஜெர்மனியின் பொய்பிரசார அறிக்கைகளிலிருந்து ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் நடுக்கல் தெரியவருகிறது. முன்னால் சொன்ன பொய்கள் அதாவது மெர்மான்ஸ்க் தன் வசமாய்விட்டது. (ஜூலை 2.) மாஸ்கோவிற்குப் போகும் ரஸ்தாவில் தடையில்லை (ஜூலை 12). கீழ் பக்கம் படையெடுப்பு ஆகஸ்டு 15-க்குள் முடிந்துவிடும். ஜூலை 15 தேதிக்குள் இவைகள் ஓர் பக்கத்தில் இருக்கவேண்டும். சமீபத்தில் சொன்ன பொய்கள் உதாரணமாக லெனின்கிராட் இரண்டு நாட்களில் கைப்பற்றப்படும், சிவில் ருஷ்யர்களின் சேதம் 3,50,000 பிறகு அந்த எண்ணிக்கை மூன்று பங்கு அதிகரித்து பத்து லக்ஷமாகச் சொல்லப்படுகிறது.

**ஒரு எச்சரிக்கை.**—ருஷ்யப் பிரதேசத்தில் பின்லாந்து சண்டையைச் செய்தால் இனிமேல் பிரிடிஷ்காரரின் அனுதாபத்தை இழந்து விரோதி நாடாகவும் கருதப்படும் என்று பிரிடன் பின்லாந்துக்கு எச்சரிக்கை செய்துவிட்டது. பிரிடனின் விரோதத்தை சம்பாதிக்க விரும்பாமல் இருந்தாலும் ஜெர்மனியின் விலங்கிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியவில்லை. மேலும் பின்லாந்துக்கு அதிக நாடுகள் விட்டுக்கொடுப்பதாக ஆசைவார்த்தை கூறுவதோடு, பின்லாந்தின் ஏற்றுமதிகளை வாங்கிவந்த ஜெர்மனி, பொருளாதார வழிகளில் நிர்பந்தத்தையும் செய்து வருகிறது.

**வேவல் செய்த சீக்கிரமான சுற்றுப் பிரயாணம்.**—லண்டன், எகிப்து, பாக்தாத் டெஹ்ரான், முதலிய இடங்களுக்கு மின்னல் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இந்தியாவுக்கு சமீபத்தில் வந்துசேர்ந்தார். சென்ற இடங்களிலிருக்கும், ராணுவத் தலைவர்களுடனும், அதிகாரிகளுடனும் மத்தியக்கிழக்கின் தற்காப்பு, பெர்ஸியாவில் போக்குவரவை விருத்திசெய்வது, இரானிய எண்ணெய்க் கிணறுகளைக் காபந்து செய்வது முதலிய பிரச்னைகளைப்பற்றி கலந்து பேசியிருக்கிறார்.

**ஜெக்கோஸ்லோவாகியா.**—ஸாமோபாயத்தால் நயப்படுத்தி பிறகு பயமுறுத்தப்பட்டாலும், இந்நாடு ஜெர்மனிக்கு விரோதமாக எதிர்த்து சூழ்ச்சிசெய்து, ஹிட்லரின் புதுதிட்டத்தைத் தாக்கி கலகமும்செய்ய ஆரம்பித்துவிட்டது. ஆமையின் வழக்கத்தைக் கையாண்டு 'வி' இயக்கத்தால் ஏற்பட்ட 'மெதுவான கதி' என்ற பழக்கத்தை சாமான் உற்பத்தியில் கையாண்டு தற்சமயம் 100-க்கு 60-லிருந்து 40-க்கு குறைந்துவிட்டது. விளாஸினியிலிருக்கும் யுத்த மருந்து தொழிற்சாலையும், ஸ்கோடாவிலிருக்கும் தளவாட தொழிற்சாலையும் சூழ்ச்சிகளால் குறைந்து வேலைசெய்ய ஆரம்பித்தது. இதோடு பல எண்ணெய்க் கிடங்குகளும், தளவாடக் கிடங்குகளும், ராணுவம் ஏற்றிச்செல்லும் ரயில் வண்டிகளும், ரயில்வே முக்கிய ஸ்தலங்களும் சேதமாயின. தேசநிலையை உத்தேசித்து தலைவனை வான் நியூராத் என்பவர் திரும்ப அழைக்கப்பட்டாலும் மாஸ்கோ செய்தியிலிருந்து அவர் கைதிசெய்யப்பட்டிருக்கலாம். அவனுக்குப்பதிலாக 'மாமிச வியாபாரி' 'ஐரோப்பாவின் கொலையாளி' 'கொலைத்தலைவன்' என்று பெயர்வாங்கிய ஜெர்மன் ரகசிய போலீஸ் அதிகாரியான கொடிய ரீன்ஹார்டு ஹெடிரிச் அனுப்பப்பட்டிருக்கிறான். இவன் வந்தது 9 ஜில்லாக்களில் அவசரச் சட்டம் அமுல்படுத்தி 59 பேர் ராணுவச் சட்டப்படி தண்டிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். இதில் முன்னிருந்த சைனியத் தலைவர்கள் இருவர் அடங்கி இருக்கின்றனர். 256 பேர்களை ஜெர்மன் ரகசிய போலீஸ் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. பிரதம மந்திரியான ஜெனரல் இலைஸ் பெர்லினுக்கு ராஜதுரோக குற்ற விசாரணைக்கு அனுப்பப்படுவதாயும், பிரஸிடெண்டு ஹாஷா விலக்கப்பட்டும் தற்காப்புசபை கலைக்கப்பட்டும் ஜெர்மனியின் ஒரு மாகாணமாகச் செய்யப்படும். 'புதிய திட்டத்திற்கு' இது ஒரு உதாரணமாகும். மற்ற உதாரணங்கள் :—

1. சிறு நாடான குரோஷியாவில் அரசு புரிந்துவந்த பொம்மைபோன்ற அரசன் (ஜாக்ரப்) என்ற தலைநகரத்தில் வசிக்க முடியவில்லை. எவ்விதம் அவர் அரசுபுரிய முடியும்.

2. **கிரீஸில்** ஜெர்மன், இதாலிய பலவந்தங்களை எதிர்த்து ஏற்படும் உள்நாட்டுக் கலகங்களை அடக்க 14 விரோதி சைனியப் பகுதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

3. ஒரு இயக்கம் ஹங்கேரியைத் திரும்பப் பிடிக்க, முன் மந்திரியான கவுண்டு மைகேல் கரோலியின் தலைமையில் சில தேசபக்தர்களால் ஆரம்பமாகி இருக்கிறது.

4. மத குருவை கைதிசெய்ததிலிருந்து லக்ஸம்பர்க்கில் அதிக அமைதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது.

5. **யூகோஸ்லாவியாவில்** கொரில்லாப் படைகள் 200 பாலங்களை உடைத்தும், 400 தளவாடக் கிட்டங்கிகளையும், சாமான் சேமிக்கும் இடங்களையும் எரித்தும், 17 ரயில் வண்டிகளை கவிழ்த்தும், 10,000 பாஸிஸ்டுகளைக் கொன்று விட்டனர்.

6. **பல்கேரியாவில்** 100-க்கு 40 வீதம் அதிகமாக விலைவாசிகள் உயர்ந்து விட்டன. யுத்தத்தில் ஜெர்மனி ஈடுபடும்படி சொல்லுவதை எதிர்த்து பல ஜில்லாக்களில் கலகங்கள் உண்டாகியிருக்கின்றன. அரசியல் தலைவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். ஜெயில்கள் ஏற்படுத்தி சைனிய ஆக்கிரமணம் செய்து ஜெர்மனி தன் அதிகாரத்தைப் பலப்படுத்துகிறது.



**நடுநிலை சட்டம்.**—இதைப்பற்றி அமெரிக்க அபிப்பிராயம் மாறுபாடடைந்து, ஏற்கனவேயுள்ள கப்பல் போக்குவரவு சட்டம் பிரயோஜனமில்லாததை அறிந்து வருகிறது. 'பார்த்த மாத்திரத்தில் அச்சுநாட்டுக் கப்பல்களைச் சுடும்படி' பிரஸிடெண்டு உத்தரவிட்டதிலிருந்து இச் சட்டம் தன்மையிலும் வார்த்தையிலும் மீறப்பட்டுதான் இருக்கிறது. அமெரிக்கச் சபையின் அங்கத்தினரான மிஸ்டர் ராய் உட்ராப் சொன்னவிதமாக பூராவக இச் சட்டம், சக்தி இழந்துவிட்டது. மிஸ்டர் கென்னத் மெக்கல்லர் மந்திரி சபையில் ஒரு பிரேரணையும் கொண்டு வந்திருக்கிறார். சட்டத்தை மாற்றி, 'தற்காப்பு உள்ள கடலில்' சஞ்சாரம் செய்தபோதிலும் அமெரிக்க வியாபாரக் கப்பல்களுக்கு ஆயுதங்கள் ஏற்ற அனுமதியைச் சபையில் பிரஸிடெண்டு கோருவார்.

இதிலிருந்து அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது தெரியவருகிறது. இவ்விஷயத்தில் கர்னல் நாக்ஸ் அதிகம் பொறுப்பெடுத்துக் கொண்டிருக்கிறார். 'சமாதானத்தை எவ்வளவு சிரமப்பட்டாவது அடையவேண்டியதுதான். ஆனால் இரண்டாவது உலக யுத்தத்தில் இன்று அமெரிக்கா ஈடுபடும்படி இருக்கிறது' என்றும் அவர் சொன்னார்.

'அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடும்படியான சமயம் நெருங்கிவிட்டது' என்று ஜெனரல் ஸ்மட்ஸ் ஆபிரிக்காவிலிருந்து சொன்னார். அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டு, அதனால் ஆயுதம் தேவையான இச்சமயம் பிரயோஜனம் இருக்குமோ இருக்காதோ அது எப்படி ஆனாலும் சமீபத்தில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னபடி 'நாம் தனியாக யுத்தம் செய்யவில்லை.' 'கிழக்குப் பக்கத்திலும், மேற்கிலும் நமக்கு உதவி இருக்கிறது. தீவிரமாக சண்டை செய்யும் ருஷ்யச் சைனியத்தைப் பார்த்தும், கம்பீரமான அமெரிக்கத் தீர்மானம், செய்கை இவைகளிலிருந்தும் நாம் ஆச்வாஸத்தையும் உத்ஸாகத்தையும் அடையலா' மென்றும் அவர் சொன்னார்.

**விமான எதிர்ப்புகள்.**—ஏற்கனவே எதிர்த்த லக்ஷியங்களைத் தவிர்த்து பிரிடிஷ் விமானப்படை, ஜெர்மனியில் பிராங்பர்ட், ஸ்டெடின், ஹாம்பர்க் முதலிய இடங்களிலும், ஆக்கிரமித்த நாடுகளில் கலே, டங்கர்கையும், இதாலியில் ஜினோவா, டூரினையும், வட ஆபிரிக்காவில் பெங்காஸி, ட்ரிபோலியையும் தாக்கியது. அக்டோபர் 1-ம் தேதி யுத்த இலாகா மந்திரி ஸர் ஆர்ச்பால்டு ஸிங்கிளேர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதன்படி பிப்ரவரி 1-ம் தேதிமுதல் ஜெர்மனிக்கு 658 விமானங்கள் நஷ்டம், பிரிடிஷ்காரர்களுக்கு 428 விமானங்கள் நஷ்டம். மேலும் எதிர்ப்புச் சண்டைகளால் ஜெர்மனியின் மேற்கே ஜெர்மன் விமானங்கள் வீழ்த்தப்பட்டன. இவைகளை கிழக்குப் போர்முனைக்குத் தேவையான போதிலும் ஜெர்மனி அனுப்பமுடியாது. பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் 'வெற்றி பெறக்கூடிய மார்க்கத்தை' கண்டுபிடித்துவிட்டன. ஏற்கனவே ஸெப்டம்பர் 30-ம் தேதி பிரிடனின் பொதுஜனங்கள் வாழும் பட்டினங்களைத் தாக்கியதிலிருந்து வரும் மாரிகாலத்தில் ஜெர்மன் விமான எதிர்ப்பு அதிகம் ஏற்படுமென்றும் அவர் சொன்னார்.

**கடலில்.**—ஸெப்டம்பர் 27-ம் தேதி மத்தியதரைக்கடலின் நடுபாகத்தில் பிரிடிஷ் துணைக்கப்பல்களின் பாதையைத் தடுக்கமுயன்ற 13 இதாலிய நாசகாரிகள் நாசமாக்கப்பட்டன. அதற்கு உதவவந்த இதாலிய கப்பற்படை பிரிடிஷ் படையைப் பார்த்தவுடனே திரும்பிப்போய்விட்டது. ஏப்ரல், மே, ஜூன் மாதங்களிலிருந்து பிரிடிஷ் கப்பல்கள் நஷ்டங்களில் மூன்றிலொன்றுதான் ஜூலை, ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதங்களில் இருந்ததாகக் காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் உத்ஸாகத்தினூடேயே தெரிவித்தார். விரோதிக் கப்பல்களுக்குத் தீங்கு $1\frac{1}{2}$ மடங்கு அதிகப்பட்டிருப்பதாகவும்சொன்னார்.

## பலவகைப்பட்டவை.

1. துருக்கி ஜெர்மனியில் பேச்சுவார்த்தை நடத்துவதில் பெயர்வாய்ந்த டாக்டர் கிளாடியஸ் நடத்திவந்த துருக்கி வியாபாரம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளில் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது. அவருக்கு உதவ வான் பேபன் அழைக்கப்பட்டிருக்கிறார். ஜெர்மனியின் யுத்தத்திற்கு அதிகம் தேவையான க்ரோமியத்தைத் துருக்கியர் அனுப்ப மறுத்துவிட்டதாகப் பிரஸ்தாபம். பிரிடிஷ் அமெரிக்க விமானங்கள் துருக்கிக்கு ஸப்ளை செய்யப்படுகிறது..

2. ஸ்விட்ஸர்லாந்து ஜெர்மனியுடன் வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டதால் பிரிடிஷ் பொருளாதார முற்றுகைக்கு உள்ளாகிவிட்டது. ஆனால் உள்நாட்டுக்கு அவசியம் தேவையான ஆகாரம், வைக்கோல் அனுப்பப்படும்.

3. கிரீஸ்.—50,000 டன் ஆகாரம், மருந்து, துணிகள் பிரிடன் கிரீஸுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

4. தூரக்கிழக்கு.—சைனாவின் சைனியம் பிரமாதமாகச் சண்டைசெய்கிறது. சனிக்கிழமை சாங்ஷாவைப் பிடித்ததாகச்சொன்ன ஜப்பானியர் புதன்கிழமை பின் வாங்கினார்கள். அவர்கள் எண்ணம் பூர்த்தியடைந்ததால் திரும்பிப்போவதாகக் காரணம் கூறுகிறார்கள். உண்மையில் 50,000 ஜப்பானியர்கள் சாங்ஷாவுக்கு வடக்கே சூழப்பட்டதால் திரும்ப ஓடும்படிநேர்ந்தது.

5. மூவரசு ஒப்பந்தம்.—இவ்வொப்பந்தத்தின் முதல் வருஷ முடிவில் அச்சு நாடுகள் ஒருவருக்கொருவர் சந்தோஷ மொழிகளை அனுப்பினார்கள்.

6. ஸெப்டம்பர் 30-ல் காமன்ஸ் சபையில் பொக்கிஷ மந்திரி ஸர் கிங்ஸ்லி உட் என்பவர் சொன்ன அறிக்கையிலிருந்து பிரிடனின் யுத்தச் செலவு தினம் 130 லக்ஷம் பவுன் என்று தெரிகிறது.

---

## யுத்தக் குறிப்புகள்.

---

**பாராட்டக்கூடிய ஒரு திருஷ்டாந்தம்.** பல இடங்களில் நிகழும் யுத்தத்தால் ஏற்படும் மாறுதல்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உத்ஸாகமாகத்தானிருக்கும். பிரகிருத யுத்தத்தின் முக்கியாம்சம் பம்பாயிலும், ஸிம்லாவிலும்தான் உணரப்படுகிறதாக என் சிநேகிதர் ஒருவர் சமீபத்தில் சொன்னார். ஆனால் அவர் மதராஸுக்கு வரவில்லை போலும். ஏனென்றால், நான் அங்கே சென்றபொழுது ஒருநாள் இரவில் நகரம் இருட்டாக்கப்பட்டது. அச்சமயத்தில் விமான எதிர்ப்பு சம்ரக்ஷணைக் கூட்டங்கள் பழக்கப்பட்டன. இவைகளில் ஸ்திரீகள் விசேஷமாக கைங்கரியம் செய்ததைக் காண எனக்கு அதிக ஆச்சரியமாக இருந்தது. இம்மாதிரி வேலையிலும், சாமான்களைப் பார்ஸல் செய்வதும், வைத்திய சிகிச்சை வகுப்புகளை நடத்துவதும், வைத்திய உதவி மோட்டார்களை ஓட்டிச் செல்லுவதும், குமாஸ்தா வேலையைச் செய்வதுமாக இருந்த மதராஸ் ஸ்திரீகளுக்கு மனமார்ந்த வந்தனத்தைச் செய்கிறேன். ஸெப்டம்பர் வெய்யிலில் மதராஸில் தன் வீட்டுவேலைகளையும் கவனித்து, உபரியாக தினம் ஆறு, ஏழு மணி நேரம் வேலை செய்வதென்பது விளையாட்டான காரியமல்ல. இந்தியாவில் பிற்பகல் ஓய்வு என்பதை விடமுடியாது என்று நான் நினைத்ததற்கு மாறுபாடாக, இவர்கள் ஓய்வே இல்லாமல் இருப்பது அவர்கள்



விஷயத்தில் மதிப்பை விருத்திபண்ணுகிறது. அதுபோலவே புறக்கோட்டையிலிருக்கும் ஸ்திரீகளும், எல்லாவிதமான நூல் தையல் வேலைகளைச் செய்து, சைனியங்களின் சௌகரியங்களுக்கும், ஆஸ்பத்திரி வேலைகளுக்கும் தேவையிருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு தடவை மதராஸ் சென்று பார்த்தால், தேனீக்களைப்போல் உழைக்கும்படியான புதிய முயற்சி உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. மும்முரமாக நடக்கும் அவ்வேலைகளைப் பார்த்தால், தன் கடமை, தியாகம் முதலிய உணர்ச்சிகள் நிச்சயமாக இவர்களுக்கும் எழும்.

வி வி வி வி வி

**தர்ம சங்கடம்.** மிஸ்டர் மெய்ஸ்கி பல தடவைகளில் ருஷ்யாவுக்கு உதவி அனுப்பவேண்டுமென்று சொன்னதால், பிரிடிஷ் கவர்ன்மெண்டிற்குத் தர்ம சங்கடம் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி விவாதம் ஏற்படக்கூடும். ஆனால், இதற்கு வேண்டியவைகளைச் செய்துவருகிறோம். ஸெப்டம்பர் மாதத்தின் மத்திக்குள் நேச தேசங்களின் விருப்பங்களை பின்கண்ட விதமாகப் பூர்த்தி செய்துவிட்டோம்.

(1) ஏற்கனவே பூருவாகக் கேட்டதில் மூன்றிலொன்று கொடுக்கப்பட்டது.

(2) இதில் ரப்பர், பூட்ஸ், கம்பளி ரோமம்; கம்பளி, தோல், ஈயம், சாக்கு இவை ஏராளமாயும், அரக்கு, கோபால்ட், தொழிற்சாலை வைரங்களும் அடங்கியிருக்கின்றன.

(3) யுத்தத்தின் ஆரம்பத்தில் ருஷ்யாவுக்கு ஒரு கோடி பவுன் கடன் கொடுத்திருக்கிறோம். ஸெப்டம்பர் முதல் தேதியில் கொடுத்த சாமான்களின் மதிப்பு ஒரு கோடி, ஐம்பது லக்ஷமாகும். பீவர் புரூக், டாங்கி வார (ஸெப்டம்பர் 21—28)த்தில் அனுப்பியதின் சாமான்களின் மதிப்பால் இவ்வெண்ணிக்கை அதிகப்பட்டிருக்கும்.

(4) "ருஷ்யாவுக்குக் கப்பல் உதவி பல வழிகளில் அனுப்பவும், அனுப்புவதாகவும்" ஸெப்டம்பர் 14-ல் மிஸ்டர் ஏ. வி. அலெக்ஸாண்டர் அறிவித்தார்.

ருஷ்யச் சைனியத்திற்கு ஜெர்மானியர் பெரும் நஷ்டத்தை விளைவிப்பதற்கு முன்னும், மாரிகாலம் வருவதற்குள்ளும், இந்தத் திட்டத்திற்குக் குறைவு இல்லாமலும், நமது க்ஷேமத்திற்கு மாறுபாடில்லாமலும், மேலும் உதவி அனுப்பினால் அப்பொழுது, இவ்வருஷம் ஜூன் மாதத்திலிருந்ததைவிட குறைவான உத்ஸாகத்துடன்தான் ஹிட்லர் வரும் வஸந்த காலத்தில் யுத்தம் செய்ய நேரிடும்.

மேலும், உலகப் போக்குவரத்துப் பாதைகளை பிரிடன் வசப்படுத்திவைத்திருப்பதால், நெடும் தூரம், நஷ்டப்படாமல் எல்லா உதவியையும் ருஷ்யாவுக்கு அனுப்பமுடிகிறது என்பதும் திருப்திகரமான விஷயம்தான். ஆனால், ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டால் (?) ஜெர்மனி அவர்களுக்கு என்ன சாமான் உதவி அனுப்பமுடியும்? ஒன்றும் முடியாதென்பதுதான் பதில்.

வி வி வி வி வி

**மாண்டிரீக்ஸ் ஒப்பந்தம்.** இதாலிய யுத்தக் கப்பல்களை பல்கேரியக் கொடிகளுடன் டார்டனல்ஸ் வழியாக ஜெர்மானியர் ரகசியமாக அனுப்ப உபாயம் தேடுவதைப்பற்றி யாவரும் பலமாக பிரஸ்தாபித்து வருகிறார்கள். இது அவ்வொப்பந்தத்திற்கு விரோதமானது.

லீக் சட்டப்படி, பரஸ்பரமிருக்கும் உதவிகளைச் செய்யவும், "துருக ... யும் கட்டுப்படுத்தி", லீக்கிலும் சேர்ந்திருந்த தேசத்தை வலியார் அடிப்பதைத் தடுக்க உதவியனுப்புவதையும் தவிர, வேறு காரணத்தை முன்னிட்டு யுத்தக் கப்பல்கள் யுத்த காலத்தில் டார்டனல்ஸ் வழியாகச் செல்லக்கூடாதென்று இக்கட்டுப்பாட்டின் ஒரு நிபந்தனை வியக்தமாகக் கூறுகிறது.

இச்சமயம் பல்கேரியா ருஷ்யாவுடன் போர் தொடங்கவில்லை. (ஒருக்கால் இது அச்சாவதற்குள் நடக்குமோ என்னமோ தெரியவில்லை?!) இருந்தாலும் அது யுத்தத்தில் ஈடுபட்ட நாடுதான். பிரிடிஷ் நேயர்களான கிரீஸும், யூகோஸ்லாவியாவும் இதை ஒப்புக்கொள்ளுவார்கள்! ஹிட்லர் சொல்படி நடப்பதால், தன் நாட்டில் ஜனங்கள் கலகம் செய்வார்களென்று போரிஸ் அரசர் பயப்பட்டாலும், ஜெர்மன் உபாயத்தை சட்டம் அங்கீகரிக்காது என்று ஜெர்மனிக்கு துருக்கி இடம் கொடுக்காது. ஏற்கனவே தோற்ற இதாலியக் கடற்படையை, கருங்கடலில் அயோக்கியத்தனமாக ஜெர்மானியர் போகவிட்ட காரியத்திலிருந்து ருஷ்யக் கப்பற்படையின் பலமும், ஸெபாஸ்டபூலின் தற்காப்பு பலமும் வெளியாகின்றன.

வி வி வி வி வி

**அவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்தவனல்ல.** கிளாடியஸ் என்ற ஒரு ஜெர்மன் பிரபு, தொழில்முறை, அரசியல் வழிகளில் அனுபவம்பெற்று, ஸர்வதேச பொருளாதாரத்தில் கெட்டிக்காரனென்று பெயர் பெற்றான். அவனுக்கு இப்பொழுது ஆபத்து நெருங்கிவிட்டது. மழுங்கிய கத்தியை எறிந்துவிடுவதுபோல் இஷ்டப்படி செய்யாதவர்களை ஹிட்லர் தள்ளிவிடுவான்.

பழைய துருக்கி-ஜெர்மன் வியாபார ஒப்பந்தம் ஆகஸ்டு மாதத்துடன் காலாவதி அடைந்தது. ஆனால் அதைப் புதிப்பிக்க துருக்கி ஆபாசப்படவில்லை. அதற்காக டாக்டர் கிளாடியஸ் அங்காராவுக்கு ஸெப்டம்பர் 9-ம் தேதி சென்றபொழுது துருக்கித் துறைமுகமான மெர்ஸினுவில்,

9,000 டன் ஆஸ்திரேலிய மாவும்;

6,000 மீடர் எஃகு கம்பிகளும்;

250 லக்ஷம் லிரா பொருமானமுள்ள இங்கிலாந்தில் தயாரித்த துருக்கி நாணயமும்;

45,000 டன் பலவகைப்பட்ட பிரிடிஷ் சாமான்களும்

வந்திறங்கி இருப்பதாக முதலில் கண்டு மயங்கினார். இது சம்பந்தமாக ஜெர்மன் ஸர்க்கார் செய்த புகார்களுக்கெல்லாம் துருக்கியர்கள் சரியாக பதிலளித்தனர். அதாவது வியாபார ஒப்பந்தத்தைப் புதிப்பிக்க டாக்டர் கிளாடியஸ் வந்திருப்பது தங்களுக்குத் தெரியுமென்றும், எங்கெங்கே இருந்து லாபகரமாக சாமான் பெறமுடியுமோ அந்த நாடுகளுடன் துருக்கி வியாபாரம் செய்யுமென்றும், 12,000 மைல் தூரத்தில் சமுத்திரப் பாதையால் வரக்கூடிய பிரிடனுடன் வியாபாரம் செய்யக்கூடாது, ஜெர்மனியுடன்தான் வியாபாரம் செய்யவேண்டும் என்ற ஜெர்மன் பிரசாரம் பிசகானதென்றும் துருக்கியர் மேல் ஒருவித தப்பும் இல்லையென்றும் சொல்லிவிட்டனர்.

இவ்விதம் அவர்கள் சொன்னதற்கு இருவித காரணம் உண்டு. அதில் ஒன்று பிரிடிஷ் வியாபாரச் சங்கம் ஏற்றுமதி செய்யக்கூடிய அத்திப்பழங்களுடையவும் பேரீச்சம்பழங்களுடையவும் வியாபாரக் குத்தகையை துருக்கிக்கு விட்டது முதல்



பிரிடன் தொடர்ந்து அதிகமாக வியாபாரம் செய்துவருகிறது. இரண்டாவதாக ஏற்கனவே துருக்கிக்கு கொடுக்கவேண்டிய 50 லக்ஷம் பவுன்களை ஜெர்மனி இன்னும் கொடுத்தபாடில்லை. அதற்குப் பதிலாக புகையிலையும், ஆலிவ் எண்ணெயும்தான் கொடுக்கப்படுகிறது. கிரீக் புகையிலையும் ஆலிவ் எண்ணெயும் வெளிநாட்டு வியாபாரத்திற்கு மாற்றக்கூடியவையல்ல. பணம்தான் தேவை. இதுதான் துருக்கிக்கும் தேவை. இந்த ரொக்கப் பணத்தை பிரிடன் தான் ஸப்ளை செய்ய முடியும்.

இதனால்தான் டாக்டர் கிளாடியஸுக்கு அதிகக் கவலையுண்டாகியிருக்கிறது. அமெரிக்க வியாக்கியான கர்த்தா அக்ரோன்ஸ்கி சொன்ன விதமாக பண்டமாற்றுவதுதான ஹிட்லரின் கெட்டிக்கார தூதருக்கு சாத்தியமாக இருக்கிறது.

வி வி வி வி வி

**ஆப்கனிஸ்தானம்.** எல்லைப்புறத்திலும், பஞ்சாபிலும் வசிப்பவர்கள் சமயத்திற்கேற்ற வதந்திகளால் பாதிக்கப்படுவதுபோல் தென் இந்தியாவிலிருக்கும் நாம் அவ்வளவு சிரமப்படுவதில்லை. ஆச்சரியமான கதைகள் ஆப்கனிஸ்தானத்தில் நடக்கும் விஷயங்களைப் பற்றியும் நடக்கப்போகும் விஷயங்களைப் பற்றியும் நான் வடக்கே வேலைபார்த்த சந்தர்பங்களில் யாவரும் பேசுவதுண்டு. முக்கியமாக இந்த வம்புகளை முகமதிய வியாபாரிகளும், குதிரை வியாபாரிகளும், கம்பளி வியாபாரிகளும், மோட்டார் டிரைவர்களும்தான் இம்மாதிரி பரவச் செய்கிறது. ஆப்கனிஸ்தான் விஷயத்தில் பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கு விரோத எண்ணங்கள் இருப்பதாகக் கட்டிய கதைகளை சில பத்திரிகைகள் கவனித்து வருகின்றன. ராணுவங்களை அனுப்ப மார்க்க வசதிவிரும்பி பலமாகக் கட்டாயப்படுத்துவதாக நம்பேரில் பழை சாற்றப்படுகிறது. இவ்விதமான பொய்களில் கொஞ்சமும் உண்மையில்லை என்பது சொல்லவேண்டியதில்லை. ஏனென்றால் ஆப்கனிஸ்தானத்துடன் இருந்த சிநேக பாவம் குறையவே இல்லை. இந்தியாவிலுள்ள நிலையால் ஆப்கனிஸ்தானத்திற்குப் பாதகம் ஏற்படவேண்டி இருந்தாலும், அந்நாட்டுடன் வியாபாரம் வளர்ந்து வருவதுடன் உலக நிலையால் அந்த தேசம் அதிகம் பாதிக்கப்படாமலிருக்க கவலையெடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஜெர்மனியுடனும் ஜப்பானுடனும் அதிகம் வியாபார சம்பந்தம் பெற்றதால் தான் ஆப்கனிஸ்தானத்தின் உள்நாட்டு வியாபாரத்தில் சில தீங்கு விளைந்தது. இரானில் நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையால் அச்சுநாடுகளுக்கு தரைமார்க்கமெல்லாம் மூடப்பட்டது. ஜப்பானின் ஐவேஜிகளை சமீபத்தில் கட்டுப்படுத்தியதால் இந்தியாவுடன் ஜப்பான் வியாபாரம் குறைந்ததுபோல் ஆப்கனிஸ்தானத்துடனும் குறைந்தது. சமாதான காலங்களில் வந்துகொண்டிருந்த மாதிரி ஆப்கனிஸ்தானத்திற்கு சாமான்கள் கிடைக்க, இந்தியா, தேக்குமரம், வாஸனை திரவியங்கள், பழங்கள், தோல், விரிப்புகள், கம்பளி முதலியவைகளை வாங்கிக்கொண்டு, பஞ்சு நூல் துணிகள், பட்டு, பாடம் செய்ததோல், இரும்பு செப்புப்பாத்திரங்கள், கத்தி சாமான்களை அனுப்பிவருகிறது.

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **22—9—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விரோதி ஸப்ளை சப்பல்—நார்வே கடற்கரைக்கப்பால். | கப்பல் தாக்கப்பட்டது. | நஷ்டமில்லை. | நஷ்டமில்லை. |
| | இரவில்.—கப்பல் துறைகள்—பொலாயின் (Boulogne). | சேதமாயின. | நஷ்டமில்லை. | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... | ...... |
| | ராணுவ வாஸஸ்தலங்கள், கட்டிடங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... | ...... |
| | விரோதி சாமான் சப்பல்கள்.—மத்தியதரைக்கடலில் (Mediterranean). | 2 சப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன ; இன்னும் 2 கப்பல்கள் சேதமாயின. | ...... | ...... |
| | விரோதி ஸ்தானங்கள்.—கோண்டார் (Gondar). | ...... | 1 விமானம். | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானப் போர்கள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்.–யுத்த அரங்கம் பூராவும். | ...... | 25 விமானங்கள். | 75 விமானங்கள். |
| **23—9—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

அன்று இரவிலும், பகலிலும் நடந்த சமாசாரத்திற்குத் தகவல் கிடைக்கவில்லை.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—9—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi), ட்ரிபோலி (Tripoli). | கப்பல்கள் தாக்கப்பட்டு சேதமாயின. | ...... | ...... |
| | கட்டடங்கள்.—பார்டியா (Bardia)க் கருகாமையில். | தீக்கள் கிளம்பின. | ...... | ...... |
| | ஒரு பெரிய பெட்ரோல் கிடங்கு—பார்டியா (Bardia). | தீப்பற்றியது. | ...... | ...... |
| | சந்திப்புகள்.—எல்லைப்புற பிரதேசத்திலும், வட ஆபிரிக்கா கடற்கரையிலும், மத்தியதரைக்கடலிலும். | ...... | 5 விமானங்களும், 2 விமானிகள் தப்பினர். | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானப் போர்கள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள், விரோதி ஸ்தானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ...... | 36 விமானங்கள். | 138 விமானங்கள். |
| **24—9—41.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | பெட்ரோல் வண்டியும் இன்னும் இதர போக்குவரத்து வண்டிகளும்.—மிஸுராடா (Misurata)விலிருந்து, ஸர்டி (Sirte) வரையிலுள்ள பெங்காஸி (Benghazi)க்குச் செல்லும் ரஸ்தா. | பெட்ரோல் வண்டி தீப்பற்றியது; இன்னும் இதர வண்டிகள் சேதமாயின. | ...... | ...... |
| | துறைமுகங்கள்.—ட்ரிபோலி (Tripoli), பெங்காஸி (Benghazi). | ...... | ...... | ...... |
| | விமான எதிர்ப்புகள்.—ஐயோனியன் (Ionian) கடலில் | ...... | ...... | 1 விமானம் |

**தேதி.**

**24—9—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி.

### ருஷ்ய விமானங்களால்.
### கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமான படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| ஜெர்மன் டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள், விமான எதிர்ப்புகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள். | ...... | 29 விமானங்கள். | 118 விமானங்கள். |

**25—9—41.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | விமான படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| துறைமுகம், சைனியமிருப்பிடங்கள் மின்சார உற்பத்திசாலை.—ட்ரிபோலி (Tripoli). | சேதமாயின. | ...... | ...... |
| துறைமுகம். கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | கப்பல்கள் தாக்கப்பட்டு | ...... | ...... |
| மோட்டார் போக்குவரத்து, தரையிலுள்ள ஆகாய விமானங்கள்—ட்ரிபோலி (Tripoli), டுனீஸியன் (Tunisian) எல்லைப்புறத்தில். | சேதமாயின. | ...... | ...... |
| வியாபாரக் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli)க்கப்பால். | கப்பல்கள் தாக்கப்பட்டன. | நஷ்டமில்லை. | ...... |
| யுத்த தளவாடம் சேமித்துமிடம் விமான மிறங்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு முகாம்—காம்பூத் (Gambut). | தாக்கப்பட்டன. | ...... | ...... |
| விரோதி சைனியங்கள்.—டெபரெச் (Desbarech) பிரதேசம். | ...... | நஷ்டமில்லை. | ...... |

### ஸிஸிலி (Sicily).

| லக்ஷியங்கள். | விமான படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| துறைமுகம்.—பாலர்மோ (Palermo). | தீக்கள் மூட்டப்பட்டன. | ...... | ...... |

### ருஷ்ய விமானங்களால்.
### கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமான படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| ஜெர்மனி சைனிய ஸ்தானங்கள், விமான எதிர்ப்புகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ...... | 19 விமானங்கள். | 44 விமானங்கள், |



**தேதி.**

**26—9—41.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| இரவில்.—ராணுவ லக்ஷியங்களும், தொழிற்சாலைகளும்—கொலோன் (Cologne), மேற்கு ஜெர்மனியில் ஏதோ ஒரு இடம். | சேதமாயின. | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—கலே (Calais), டங்கர்க் (Dunkirk). | பிளக்கப்பட்டது. | 1 பாம்பர் விமானம். | ...... |

### ஸார்டீனியா (Sardinia).

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| தளங்கள், விமான நிலயங்கள்.—எல்மாஸ் (Elmas). | அநேக கடல் விமானங்கள் சேதமாயின. | ...... | ...... |
| ஹாங்கரும், கம்பியில்லாத் தந்தி ஸ்தாபனமும்.—மார்ஸாலா (Marsala) விமான நிலயம். | ...... | ...... | ...... |
| மின்சார உற்பத்தி சாலை.—போர்டோ எம்பெடொஸில் (Porto Empedocle). | சேதமாயின. | ...... | ...... |

### ஸிஸிலி (Sicily).

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| துறைமுகம்.—பாலர்மோ (Palermo), அகிரிஜெண்டோ (Agrigento). | தீப்பற்றியது. | ...... | ...... |

### டாரண்டோ குடாக்கடல் (Gulf of Taranto).

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| வியாபாரக் கப்பல்.—விரிகுடாவில். | தீ மூட்டப்பட்டது. | ...... | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| வெடிமருந்துசேமித்துமிடம், துறைமுகம்-பார்டியா (Bardia). போக்குவரத்துகள்.—மெர்ஸாலக் (Mersa Lukk.) | ...... | 5 விமானங்கள். | ...... |

### ருஷ்ய விமானங்களால்.
### கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமான எதிர்ப்புகள் விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ...... | 31 விமானங்கள். | 98 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—9—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | சேதமில்லை. | ...... | ...... |
| | லெனின்கிராட் (Leningrad). | ...... | ...... | ...... |
| **24—9—41.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை | ...... | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ...... | ...... | ...... |
| **25—9—41.** (வியாழக்கிழமை) | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—ஒரு ஸ்தலம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia)க் கடற்கரைக் கருகாமையில். | ...... | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ...... | ...... | ...... |
| **26—9—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஒரு இடம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | சொற்பச் சேதம். | ...... | ...... |
| | **ஆபிரிக்கா (Africa).** | | | |
| | டொப்ருக் (Tobruck). | சேதமில்லை. | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | லெனின்கிராட் (Leningrad). | ...... | ...... | ...... |
| **27—9—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | சில இடங்கள்.—கிழக்கு இங்கிலாந்து (England). | சேதமில்லை. | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | லெனின்கிராட் (Leningrad), மாஸ்கோ (Moscow). | ...... | 2 விமானங்கள். | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | யுத்தக் கப்பல்கள் உதவின துணைக் கப்பல்.—மத்தியதரைக்கடலில். (Mediterranean). | 1 கப்பல் சேதமாயின. | 13 விமானங்கள். | நஷ்டம் இல்லை. |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **28—9—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—இங்கிலாந்து (England) தெற்குவேல்ஸைக் கடற்கரை. | ...... | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ...... | 2 பாம்பர் விமானங்கள். | ...... |
| **29—9—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்து (England)ன் கிழக்குக் கடற்கரை பிரதேசங்களில். | சொற்பச் சேதம். | ...... | ...... |
| | ஒரு பட்டணம்,—வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland)ல். | சிலர் கொல்லப்பட்டனர். | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | | ...... | ...... |

---

# சரித்திரம் முன்போலவே திரும்ப நடக்கும்.

---

## சென்ற யுத்தத்தில் ஜெர்மனியின் ஆரம்ப வெற்றிகளும் முடிவுத் தோல்வியும்.

## நீண்ட யுத்தத்தை ஜெர்மனி நடத்தமுடியாது.

## கெய்ஸர் போலவே ஹிட்லரும் தனக்கு உபதேசம் கூறுகிறவர்களை அலக்ஷியம் செய்கிறான்.

"ஸ்டாரடஜிகஸ்" எழுதுவது :—

தன் பழைய வியவகாரங்களை மறுபடி காண்பிப்பதில் சரித்திரம் ஈடுபட்டிருப்பதுபோல் காணப்படுகிறது. சென்ற யுத்தத்தில் ஜெர்மனி நீண்டதொரு நஷ்டமடைந்து, சரியான கட்டுப்பாடு சாமர்த்தியம் முதலியவைகளால் வெற்றிமேல் வெற்றியடைந்து, கடைசியில் தோல்வியுற்றது. பிரகிருத யுத்தமும், அவ்விதமே தான், மறந்துபோன ஸினிமாப் படம் ஞாபகத்துக்கு வருவதுபோல் நடந்து வருகிறது.

மூத்த மால்ட்கேயும், ஷிலிபனும் நீண்ட யுத்தம் வெற்றியைக் கொடுக்காது என்று மும்மரமாக எழுதினார்கள். இது ஜெர்மனியைப்பற்றி எழுதினாலும் எல்லா தேசங்களுக்கும் உவக்

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**27—9—41.** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| காலையில்.—வேவுபார்க்கும் விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய். | ...... | 1 விமானம். | ...... |
| பிற்பகலில்.—ரயில்வே முக்கிய ஸ்தலம் ஏமெயின்ஸ் (Amiens). | ...... | 13 பைடர் விமானங்கள்; | 21 பைடர் விமானங்கள். |
| ரயில்வே ஜங்கிஷன் லாபெஸ்ட்டு (Labasset)க் கருகாமையில். | ...... | 3 விமானிகள் தப்பினர். | |

ரோட்ஸ் (Rhodes) தீவுகள்.

| | | | |
|---|---|---|---|
| துறைமுகம், கப்பல்களைப் பழுதுபார்க்குமிடங்களும்—ரோட்ஸ் (Rhodes). | ...... | ...... | 1 விமானம். |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| விமான எதிர்ப்புகள்.—விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள். | ...... | 28 விமானங்கள். | 150 விமானங்கள். |

**28—9—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| பகலில்.—சாமான் ஏற்றிச் செல்லும் ரயில்வண்டி, இரண்டு பெட்ரோல் ஏற்றிச்செல்லும் வண்டிகள், தரையிலுள்ள விமானங்கள், துருப்புகள், யந்திர பீரங்கியும், விமான எதிர்ப்பு பீரங்கியும்-ஆக்கிரமித்த பிரான்ஸில் (France). | ... | நஷ்டமில்லை. | ... |
| இரவில்.—லக்ஷியங்கள் பிராங்பர்ட் (Frankfurt) உள்பட மேற்கு ஜெர்மனியில். | ... | 5 விமானங்கள். | ... |
| என்ஜெய் கிணறும், என்ஜெய் சுத்தம் செய்யுமிடங்களும் — ஸெயின்ட் நாஸேர் (Nazaire). | தீ மூட்டப்பட்டன. | 2 விமானங்கள். | ... |

இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| லக்ஷியங்கள் —ஜெனோவா (Genoa), ட்யூரின் (Turin) இன்னும் சில இடங்கள். | தீக்கள் மூட்டப்பட்டன. | ... | ... |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**28—9—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகத்திலுள்ள வியாபாரக் கப்பல்கள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—பார்டியா (Bardia). | அநேக விமானங்கள் சேதமாயின. | 3 விமானங்கள். | ... |
| பெட்ரோல் கிட்டங்கிகள்—பார்டியா (Bardia). | தீ மூட்டப்பட்டன. | ..... | ...... |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| பகலில்.—விமான நிலயம், கடல் விமான தளம்—பாலர்மோ (Palermo). | 9 விமானங்கள் சேதம். | ... | ... |
| இரவில்.—துறைமுகத்திலுள்ள வியாபாரக் கப்பல்கள், மின்சார உற்பத்திசாலை—பாலர்மோ (Palermo). | கப்பல்கள் தாக்கப்பட்டன. | ... | ... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| விமான எதிர்ப்புகள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்—போர்முனை பூராவும். | ... | 27 விமானங்கள். | 65 விமானங்கள். |

---

விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|

**23—9—41.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

| | | | |
|---|---|---|---|
| அநேக ஸ்தலங்கள்.—தென்மேற்கு இங்கிலாந்துக் கடற்கரைப் பிரதேசங்கள், வேல்ஸ் தென்பாகம். | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். | ...... | ...... |

கும். இருந்தாலும் ஜெர்மன் எழுத்தாளர்கள் ஜெர்மனியைப்பற்றி எழுதினதாகவே வைத்துக்கொள்வோம், "எதிரியைத் தளரடிப்பது" என்ற முறையில் யுத்தம்செய்வது தன் நாட்டிற்கு சாதகமாகாது என்று ஷிலிபன் வற்புறுத்தியும் 1914-ல் ஜெர்மானியர் ஆறு அல்லது ஒன்பது மாதங்களுக்குள் யுத்தம் முடியுமென்ற தீர்மானத்துடன் ஆரம்பித்தனர்.

இதற்கெல்லாம் மூலகாரணம் என்னவென்றால் ஜெர்மனியின் ராணுவம் சீக்கிரமான வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத்தது என்பதுதான். "சத்துருவை நிர்மூலமாக்குவதற்கான யுத்தம்" என்பதைக் கையாண்டு சரிப்படுத்தி வந்து யுத்த களத்திலும் எவ்விதமான விரோதிக்கும் முன்பாக சரியாகத் தயாரிக்கப்பட்ட பெரும் சேனையை நிறுத்தி வெற்றிபெறக்கூடிய வல்லமை இருப்பதாக ஜெர்மானியர் நினைத்தும் வந்தனர்.

அதுபோலவேதான் இந்த யுத்தத்திலும் இருக்கிறது. நீண்டகாலம் புரியக்கூடிய யுத்தத்தின் கெடுதிகளைக் குறித்து ஹிட்லர் பல நம்பிக்கையான உபதேசகர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டான். இருந்தாலும் ஜெர்மன் பான்ஸர் படைகள் லுப்ட்வாபியுடன் சேர்ந்து தந்திரமாக யுக்திகளால் மின்னல் படையெடுப்பில் தோல்விபெறாது என்ற கர்வத்துடன் இருந்து வருகிறான். இதைப்பற்றி சந்தேகம் கொண்ட பிரிட்ஸ்கி என்பவர் ஜெர்மனியில் அப்பிரியம் அடைந்தார்.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னாடியே டியூட்சேர் இம்டஸ்டிரி என்ற பாதி அரசாங்க சம்பந்தமுள்ள பத்திரிகை இதைக்குறித்து பரிசீலனைசெய்து ஒரேமுகமாக மின்னல் படைக்கு விரோதமாகமுடித்தது.

பயித்தியம் பிடித்துத் திரியும் ஜெர்மானியர் இதுபோன்ற வியாக்கியானத்தை சந்தர்ப்ப விரோதமாகவும், மறுபடி தீவிர யுத்தம் செய்வதற்குக் காரணமாகவும் நினைக்கிறார்கள். அதனால் யுத்த முறைகளைவிட கபடச் செய்கைகளால் முடிந்த இடங்களிலெல்லாம் வெற்றிபெற யுத்தம் என்பதை ஆரம்பித்திருக்கின்றனர்.

யுத்தத்திற்குத் தயாரில்லாத நாடுகள்பேரில் ஏற்பாடாக இருந்து தாக்கினால் ஆரம்ப காலத்தில் வெற்றி வரத்தான் வரும் என்று மத்தியஸ்தமாக இருப்பவனுக்குத் தெரிந்ததுதான்.

அதோடு முதலில் எதிர்ப்புச் செய்கிறதால் வெற்றிகிடைப்பதற்கு மின்னல் படை உதவும் என்றும் தெரியும்.

எவ்வளவு தைரியமாக சரீரத்தைக் கொடுத்து வீரர்கள் சண்டை செய்தாலும் டாங்கிகளுக்கும், விமானங்களுக்கும் எதிரில் ஒன்றும் சாயாது என்று போலாந்து கண்டுகொண்டது.

திடீரென்று எதிர்த்ததால் தான் டென்மார்க்கும், நார்வேயும் தோல்வியடைந்தன. யந்திர தந்திரத்தினால் தான் ஹாலந்து, பெல்ஜியம், ஆறு வாரத்தில் பிரான்ஸும் வீழ்ந்தன. இவ்விதமேதான் எல்லா ஸ்வதந்திர நாடுகளும் போய்விடுமென்று தோன்றக்கூடும்.

ஏற்கனவே வெற்றியடைந்து விட்டதாகவும், மின்னல்படை முன்னேறி வருகிறதாகவும் ஜெர்மனி நினைத்துவிட்டது.

ஆனால் பிரிடன் தோற்கப்படவில்லை. இதை முடிக்க மார்ஷல் கோயரிங் லுப்ட்வாபியை அனுப்பித்தும் பார்த்தான்.

இது ஒரு வருஷத்திற்கு முன் நடந்தாலும் லுப்ட்வாபி சரியாக முறிக்கப்பட்ட விஷயம் பெரிதுதான்.

சைனிய எண்ணிக்கை அதிகத்தைத்தான் ஜெர்மனி கவனித்துவருகிறது. பிரிடன் யுத்தத்திலும் எதிரிக்கு எண்ணிக்கை அதிகமாகத்தானிருந்தது. பிரிடன் சேமிக்கக்கூடியதைக் காட்டிலும் அதிகமாகவே ஜெர்மனி அனுப்ப முடியும்.

ஆனால் ஆரம்பம் முதல் பலன் வேறுவிதமாக இருந்தது. முதலில் இதை ஜெர்மானியர் நம்பவில்லை. பிறகு பயந்துவந்தார்கள், கடைசியில் வேறு வழியில்லாமல் இறங்கினார்கள்.

முடிவில் மின்னல்படை தரை யுத்தத்தில் தான் பலமுள்ளது என்று நினைத்து சும்மாயிருந்துவிட்டனர். பிரிடன் மேலும் வெற்றியடைந்ததால் சில மாறுதல்களைச் செய்துகொண்டு



மறுபடியும் ஜெர்மானியர் படையெடுக்க ஆரம்பித்தனர்.

ருஷ்யாபேரில் இதைப் பரீக்ஷிக்க ஜெர்மனி ஆரம்பித்தது.

ஜெர்மனியை பயங்கொள்ளி நாடென்று ஒருவரும் சொல்ல முடியாதுதான். ஆனால் வரவர அதற்கு ஆபத்துத்தான் அதிகரித்துவருகிறது. ருஷ்யாவை எதிர்த்ததால் தன் கர்வத்திற்கு மறுபடி வசப்பட்டது.

உண்மையில் பல வெற்றிகளையும் அடைந்தது. நினைக்கமுடியாத தூரம் நடந்துபெரும் இடையூறுகளை முறித்து எதிரி சென்றிருக்கிறான். ஆனால் கொஞ்சம் ஏமாந்து போய்விட்டது. ருஷ்யாவுக்கு அதிக நஷ்டம் விளைவித்தாலும், அவசியமாகத் தேவையான கோதுமை, எண்ணெய், உலோகங்கள் இவைகளை அடையவில்லை. தானியங்கள் குறைந்து வருவதைத் தந்திரமாக மறைத்து வருகிறது. ஐரோப்பாவைக் கொள்ளையடித்தும், இரானிடமிருந்து கோதுமை விலைக்கு வாங்குவதென்றால் அதன் நிலை வெளிச்சமாகிவிட்டது.

நீண்ட யுத்தத்தை நடத்துவதால் ஏற்படும் அசௌகரியங்களை வீரர்கள் சொல்லியும் ஜெர்மனி கொஞ்சமும் கேட்கவில்லை. ரத்தம் சிந்தாமல் சண்டை நடத்தலாமென்று நினைப்பது தவறு என்றும், சாமர்த்தியமாக யுத்த களத்தில் சண்டைசெய்யும் முறையைப்பற்றி நெபோலியனிடமிருந்து அறிந்ததையும் கிளாஸ்விட்ஸ் சொன்னார்.

ஏனென்றால் நீண்ட யுத்தம் புரிய ஜெர்மனியால் முடியாது. அதன் பொருளாதார நிலை அவ்விதம் சிரமத்தைத் தாங்காது என்று தலைவர்களுக்கு உபதேசகர்களும் சொல்லியிருக்கின்றனர்.

ஜெர்மானியருக்குப் பிடிக்காத மற்றொரு காரணமும் இருக்கிறது. நீண்ட யுத்தம் செய்யமுடியாது என்று அதிலிருந்தும் தெரியும். 1919-ல் மிலிடரி ஒவேஷன் பிளாட் என்ற பத்திரிகையில் சென்ற யுத்தத்தைப்பற்றி பின்வருமாறு ஒரு கல்வெட்டு ஒரு ஜெர்மன் எழுத்தாளர் எழுதியிருக்கிறார். "நம் சைனியங்களை அதிகம் வேலை வாங்கியதாலும், அடையமுடியாத ராணுவ அரசியல் லக்ஷியங்களை அடைய விரும்பியதாலும் தான் பூரா தோல்வியடைந்தோம்."

அடைய முடியாதது என்பதையே ஜெர்மானியர் ஒப்புக்கொள்வதில்லை. 1918-ல் அடைந்த ராணுவத் தோல்வியையும் அங்கீகரிக்க மறுக்கிறார்கள்.

ஆரம்ப வெற்றிகளை ஜெர்மனி அடைய வேண்டுமென்றே நம்மால் நினைக்கப்பட்டது. இல்லாவிட்டால் பிரிடனின் வெற்றிக்கான நோக்கங்கள் மறைந்து போகும்.

யுத்தத்தில் ஜயமென்பது மாறி மாறித்தானிருக்கும். பூராவாகத் தயாரித்த ஜெர்மனி வெற்றிபெற்று முதலில் பூராபலத்தையடையும் போலிருந்தது. பிறகு பிரிடனும் நேசதேசங்களும் சாமான்களைச்சேகரம் செய்யும்போது ஜெர்மனி தோற்று நேசதேசங்கள் மேல்தூக்கி இருக்கும்.

மனித வாழ்க்கையில் வித்தியாசங்கள் காணப்படுவதால் நாம் போடும் திட்டங்கள் எல்லாம் மாறிப்போகும். யுத்தமும் ஒரு உத்தேசமான லக்ஷியத்தைத்தானே கொண்டிருக்கும்.

டங்கர்கில் லுப்ட்வாபி தோற்றவுடன் பிரிடன் யுத்த தளவாடங்களை விருத்தி செய்ய ஆரம்பித்துவிட்டது. 10-வாரங்களுக்கு மேலாகவே கிழக்கே ஜெர்மனி அடிவாங்கிவருகிறது. பிரிடன் தடங்கலில்லாமல் பலப்படுத்த ஆரம்பித்தது முதல் ஜெர்மனியின் பலம் குறைந்து வருகிறது.

நிகழ்ந்ததை திரும்பக் காண்பிப்பது தான் சரித்திரத்தின் லக்ஷணம்.

சென்ற யுத்தத்தின் மூன்றாவது வருஷம்போலவே இந்த யுத்தத்தின் மூன்றாவது வருஷத்தில் நேசதேசங்கள் வலுப்பெற்று ஜெர்மனி தளர்ந்து வருகிறது. கெய்ஸர் போலவே ஹிட்லரும் ஜெர்மனிக்கு நண்பர்களானவர்களின் உபதேசங்களை கவனியாமல் ஆபத்துக்குள்ளாகி தோல்வியடையப் போகிறான்.

### "உண்மை விஷயம்தான்" அவர்களுக்குத் தேவை!

நியூ யார்க் டைம்ஸ், ஆகஸ்ட் 26:—ஜெர்மன் ராணுவப்படையிலும், போலீஸ் படையிலும் உண்மைச் செய்திகளைத் தெரிந்துகொள்ள, ஜெர்மன் அதிகாரிகள் பிரிடிஷ் ஒலிபரப்புகளையும், வெளியிலிருந்தவரும் உண்மை சமாசாரத்தையும் கேட்க சந்தர்ப்பம் தேடிக்கொண்டிருப்பதாகவும் எக்ஸ்காலிபர் கப்பலில் வந்திறங்கிய ஐரோப்பாவிலிருந்து வந்த பிரயாணிகளும், சரண்புகுந்த அமெரிக்கர்களும் அறிவித்தார்கள். ஜெர்மனியிலிருக்கும் தன் சொந்தக்காரரைத் தண்டிப்பாரோ என்று பயந்து ஒரு பிரயாணி தன் பெயரைச் சொல்ல மறுதளித்துவிட்டார். தனக்கும், ரேடியோ சொந்தக்காரருக்கும் ஆபத்துவருவதைக்கூட கவனியாமல், ஜெஸ்டோபோ அதிகாரிகள் அவரை இங்கிலீஷ் ஒலிபரப்பு ரேடியோ நிலயத்திற்குக் கூட்டிக்கொண்டு போனார்கள் என்றும், உண்மை விஷயம் கேட்கத் தங்களுக்குச் சந்தர்ப்பம் வாய்ந்ததற்கு நன்றி பாராட்டினார்கள் என்றும் அவர் கூறினார்.

### "ஆசியா புறக் கதவுக்குப் பொருச் சாவி."

நியூ யார்க் டைம்ஸ், ஆகஸ்டு 27:—மத்தியக் கிழக்கையும், இந்தியாவையும் தாக்க நாஜிகள் இரானில் பிரவேசித்து, அதை யுத்ததளமாக வைத்துக்கொள்ளுவார்களென்று தெரிந்து, பிரிடிஷ்காரர்கள் முந்திக்கொண்டார்கள். அது ஒரு கல்லால் ஒரு கூட்டம் பறவைகளைக்கொன்ற மாதிரிபோலாயிற்று. இந்தியா மார்க்கத்தின் உயிர்நிலை பிரிடிஷார் ஆதிக்கத்திலிருக்கிறது. இரான், இராக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகள் இவர்கள் வசம் இருக்கின்றன. இதிலிருந்து ஐரோப்பா முற்றுகையில் உள்ள கடாசித்துவாரம் அடைபட்டதுபோலாகும். காகேஸஸ் எண்ணெய்க் கிணறுகளை பாதுகாக்க ருஷ்யர்களுக்கு ஆகாயப்படையும், நிலப்படையும் இப்பொழுது இதன்மூலம் அனுப்பக்கூடும். அச்சு நாடுகளின் நிர்ப்பந்தத்திலிருந்து துருக்கியை விடுவிக்கவும் கூடும். முக்கியமாக ருஷ்யாவுக்கு சாமான்கள் அனுப்பப்பாதை திறக்கப்பட்டது. காகேஸஸையும், பாரசீகக் குடாகடலையும் சேர்க்க ஜெர்மானியர்கள் போட்டிருந்த இருப்புப்பாதை பிரிடிஷாருக்குப் பரிசாகக் கிடைத்துவிட்டது. அதன்மூலம் ருஷ்யாவிற்குப் பொருள் அனுப்ப வெகு சௌகரியமாய் விட்டது. யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் அது அத்தியாவசியமானதுதான். முக்கியமாக ஆசியாவின் புறக்கடைக் கதவைப் பூட்டிவிட இரான் என்ற சாவி கைப்பற்றப்பட்டது.

### போலிக்கலகமும், உண்மைக் கிளர்ச்சியும்.

நியூ யார்க் டைம்ஸ், ஆகஸ்டு 28:—பிரான்ஸைக் காட்டிக்கொடுத்தும், அதை ஜெர்மனி வசப்படுத்தியதற்காகப் பிரெஞ்சுக்காரர்களுக்கு லவால் முதல் பலி. அவனுக்கும், டீட்டுக்கும், தாங்கள் ஜனங்களால் வெறுக்கப்பட்டவர்களென்றும் தங்களுக்கு அபாயம் கட்டாயம் சம்பவிக்கும் என்றும் தெரியும். லவால் உயிரோடு இருந்தாலும், அவனைச்சுட்டது இனி வரப்போகும் கஷ்டங்களுக்கு அறிகுறியாயிருக்கும். பீடேன் ஏற்படுத்தியிருக்கும் அரசியல் மாறுதல் போலியாகும். இனி வரப்போகும் மாறுதல் உண்மையாகும். ஆனால் உண்மைக் கிளர்ச்சியை நாஜிகள் அடக்கப் பார்க்கிறார்கள். எப்படியிருந்தாலும் லவாலைச் சுட்டது அக்கிளர்ச்சியின் பலத்தைக் காண்பிக்கிறது.

## II

## ருஷ்யாவில் ஜெர்மன் சைனியத்தின் நிலை.

## "இதை அங்கீகரிக்கிறவர்கள் எல்லா ஆசைகளையும் விட்டு விட வேண்டும்" என்ற நாஜி புது திட்டம்.

## அமெரிக்கா எவ்வளவு தூரம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது.

## இரானில் ஆங்கில-ருஷ்யப் பிரவேசம்.

டென்வர் போஸ்டு, ஆகஸ்டு 26.—இரானில் ஆங்கில-ருஷ்ய படையெடுப்பைப் பெரிய புரட்சியென்று நாஜிப் பிரசாரகர்கள் சொல்லுவதை ஜெர்மன் மக்கள் கேட்டு



மௌனமாகத்தானிருப்பார்கள். ஏனென்றால் ஹிட்லரின் கொள்கைகளைச் சரியென்று நினைப்பவர்கள் எதையும்தான் நம்பியிருப்பார்கள். ஆனால் மற்ற நாடுகளில் அவ்விதம் இருக்கமாட்டார்கள். இரான் படையெடுப்பை ஜெர்மானியர் வீரமாக நிந்திப்பதிலிருந்தே அவர்களுக்கு இது ஒரு பெரும் அவமானகரமான செய்கை என்று தெரியவரும். பிரிடனும், ருஷ்யாவும் எதிர்த்து அடிக்கின்றன என்பதை மறைத்து ஜெர்மனி சொல்லிவருகிறது.

### "மாறுபாடான நிலை."

நியூ ரிபப்ளிக் என்ற பத்திரிகையில் ஜான் ஸ்காட் எழுதியது செப்டம்பர் 1.—ருஷ்யாவில் நிகழும் ராணுவ ஏற்பாடுகள் எவ்விதம் இருந்தாலும், ஜெர்மனி யுத்தத்தில் தோற்றுதான் வருகிறது. ருஷ்யாவை ஜெர்மனி எதிர்த்ததினால்தான் நிலை மாறுபாடு அடைந்தது. ஏராளமான நஷ்டங்கள் அடைந்ததற்குக் காரணமாக இருபக்கங்களிலும் சண்டையிட நேர்ந்ததாகச் சொல்லிவரலாம். ஜெர்மனி இருபக்கங்களிலும் குழப்பட்டதற்கும் அதுவே காரணமாக ஹிட்லர் சொல்லிவருகிறான். பெரிய நாட்டை எதிர்க்கவேண்டியிருக்கிறது. 2 வருஷங்களுக்காகச் சேமிக்கப்பட்ட பொருளாதாரங்களில் இவன் வசம் கொஞ்சம் வந்திருக்கிறது. இருந்தாலும் ருஷ்யா பூராவும் நாஜிக்கு விரோதமாக மும்மரமாக ஒன்றுசேர்ந்து இருக்கிறது. ருஷ்யச் சேனை ஜெர்மனியை எதிர்க்கிறது என்று சொல்லுவதைக் காட்டிலும் ருஷ்ய ஜனங்களே ஒன்றுசேர்ந்து எதிர்க்கிறார்கள் என்று சொல்லலாம். ஹிட்லர், ருஷ்யச் சண்டையை ஆகஸ்டுக்குள் முடித்து சுலபமாக அதிக எதிர்ப்புகள் இல்லாமல் ருஷ்யாவினுள் பிரவேசிக்கலாமென்று நினைத்தான். ஆனால் ஜெர்மன் சைனியம் இப்பொழுது அதிக சிரமப்படுகிறது.

### ஹிட்லரின்கீழ் ஸ்வதந்திரம் கிடையாது.

நியூ யார்க் டைம்ஸில் ஆன் மெக்கார்மிக் எழுதியது, செப்டம்பர் 1.—இரண்டு வருஷங்கள் நடந்த சண்டையிலிருந்து முக்கியமாகத் தெரிந்துகொண்டது என்னவென்றால் ஹிட்லரின் "புது திட்டத்தின்படி" ஸ்வதந்திரத்தின் நிழல்கூட ஏற்படாது என்பதுதான். யூக்ரேனை அவன் பிடித்தால் அது ஒரு போலாந்து மாதிரிதானாகும். ஆனால் அவனுக்கே அது கெடுதியாக முடியும். தன் எண்ணங்களைப் பலருக்குத் தெரியப்படுத்தியுமிருக்கிறான். அதாவது அவன் செய்கைகளிலிருந்து இச்சண்டை அவசியம் செய்யப்பட்டிருப்பதும் ஜயித்த இடங்களில் இஷ்டமில்லாத சமாதானத்தை வற்புறுத்தியதும் இந்த இரண்டு வருஷங்களாகத் தெரியவந்திருக்கின்றன. "புது திட்டத்தை" ஸ்தாபிக்க ஆரம்பிக்கும்போது நரகத்தின் வாயிலில் டாண்டி என்பவர் எழுதிய பழமொழியை வற்புறுத்தி வருகிறான். அதாவது:—"இங்கே வருகிறவர்கள் எல்லாவித உத்தேசங்களையும் இழக்கவேண்டியதுதான்."

### புதிய நெபோலியனும் எல்பாவும்.

லாஸ் ஏன்ஜலாஸ் டைம்ஸ், ஆகஸ்டு 31.—சன்னிவேசத்தை நிதானித்துப் பார்க்கையில் ஐரோப்பிய புது நெபோலியனான ஹிட்லர் சென்ற வருஷத்தைவிட இப்பொழுது தோல்வியை நெருங்கி வருகிறதாகத் தெரிகிறது. 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில், பயந்த இங்கிலாந்தை முழுபலத்தோடு அடிக்கத் தவறியது மட்டுமில்லாமல் ருஷ்யாவை ஜயித்துவிடலாமென்ற பெரும் நம்பிக்கை பிசகும் செய்திருக்கிறான். இதற்கு முன் தன்னுடன் சேர்ந்திருந்த ருஷ்யாவுடன் சண்டையைத் தொடர்ந்து நடத்தி ஜெர்மனி வெற்றிபெற்றால் அது ஏராள நஷ்டத்தின் பேரில்தான் இருக்கும். அதிகமான மனிதர்கள், யுத்த சாமான்கள், விமானபலம், காலம் இவைகளைக் கிழக்குப் போர்முனையில் இழந்து வருவதோடு, பெரிய சத்ருவான பிரிடனை ஜயிக்கும் சந்தர்ப்பம் குறைந்துவருகிறது. ருஷ்யாவில் ஜெர்மன் யுத்த சாமான்கள் ஈடுபடும் ஒவ்வொரு வாரத்திலும், இங்கிலாந்தின் பலம் அதிக

## விமான இலாகா அறிக்கைகளைப் பற்றிய கதைகள்.

## மே மாதம் 9-ம் தேதி மான்ஹீமில் செய்த படையெடுப்பைப் பற்றிய விவரங்கள்.

## போக்குவரவுகளைத் தடைசெய்ததால் நேர்ந்தது.

## கோலோனில் ஏராளசேதம்.

விமானத் தலைவர் L. V. பிரேஸர் எழுதியது :—

[யுத்த திட்டத்தின்படி தொழிற்சாலை ஸ்தலங்களையும் போக்குவரத்துகளையும் குண்டுகளால் சரியாக தாக்கும் பிரிடிஷ் "முறை"யினால் வெற்றி அடைவதைப்பற்றி எவருக்கும் சந்தேகம் ஏற்படலாம். தகவல் சரியாகக் கிடைக்கவில்லை யென்பதுதான் அதற்குக் காரணமாகும். அதற்காக ஊர்ஜிதமான சில விவரங்களைக் குறிக்கும் வியாசம் ஒன்று இங்கே எழுதப்பட்டிருக்கிறது. பத்திராதிபர்.]

பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியின் உள்நாட்டில் விளைத்த சேதத்தைப் பற்றியும் அமைதிக் குறைவைப் பற்றியும் கிடைத்த தகவல்களைப் பரிசீலனை செய்தேன். மே-மீ 9உ மான்ஹீமில் பெரிய விமானப் படையெடுப்பின் விவரம் கிடைத்தது. இத்தகவல் கொஞ்சம் தாமதமாகக் கிடைத்தாலும் விமான இலாகா பிரசுரித்த சுருக்கமான விஷயங்களுக்குச் சரியானதுதான். அதற்கு அடுத்த நாள் பிரிடிஷ் விமான இலாகா பின்வருமாறு அறிவித்தது. "நேற்று பாம்பர் விமானங்கள் பெரும் தொழிற்சாலை லக்ஷியங்களான மான்ஹீம், லுட்விக்ஷேவன் என்ற இடங்களைத்தாக்கின. சீதோஷ்ண நிலை சரியாக இருந்தது, எதிர்ப்பும் லக்ஷியங்களை நோக்கியே இருந்ததால் சேதம் அதிகமாகவே இருந்தது".

பல இடங்களிலிருந்து கிடைத்த தகவல்களை ஒன்று சேர்த்துப்பார்க்கும்கால் அன்று இரவு டெயிம்லர் பென்ஸ் என்ற யந்திர மோட்டார் தொழிற்சாலைதான் அதிக நஷ்டமடைந்ததாகத் தெரிகிறது. கிழக்குப் போர்முனையில் நிகழும் யுத்தத்திற்காக இரவிலும் அது வேலை செய்து கொண்டிருந்தது. யந்திரசாமான் தொழிற்சாலையான ஹீன்ரிச் லான்ஸ் என்ற இடமும் சேதப்பட்டது. டெயிம்லர் பென்ஸ் தொழிற்சாலையில் பாதிவேலையாட்கள்தான் விமான எதிர்ப்பிற்குப் பிறகு வேலை செய்யமுடிந்தது, அவர்களும் பழுதுபார்க்கும் வேலையில்தான் ஈடுபட்டிருந்தனர். மறுபடி இது சரியாவதற்கு இன்னும் மூன்று முதல் நான்கு மாதங்கள் வரை செல்லுமாம்.

ஹீன்ரிச் லான்ஸ் தொழிற்சாலையும் அவ்விதமேதான் சேதமடைந்ததாகச் சொல்லப்படுகிறது. குண்டுகளினால் பல தண்ணீர் குழாய்கள் முறிந்தன. அணைக்க முடியாமல் பெரும் தீக்களும் பரவின. கவர்ன்மெண்டார் வியாபார சாலைகளில் 1,200 டன் தானியமும் 1,500 டன் பட்டாணியும் அழிந்துவிட்டது.

மான்ஹீம் என்பது ஒரு பெரிய ரயில் பிரதானஸ்தலம் கொண்டது. அங்கே பெரும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. போக்குவரவுகளைக் கெடுத்ததும், யுத்த தொழிற்சாலைகளை அழித்ததும் அதிக விசேஷம். மே மாத ஆரம்பத்தில் மான்ஹீமிலுள்ள இருப்புப் பாதைகள் 70 தடவைகளுக்கு மேலே நேராடித் தாக்கப்பட்டன. இந்த சேதத்தால் மிகாரெனக்குச் செல்லும் இருப்புப்பாதை பழுதடைந்தது. மான்ஹீமிலிருந்து லுட்விக்ஷேவனுக்குப்போகும் பாதையில் ரைன் நதியிலுள்ள பாலம் உடைபட்டு பல நாள் போக்குவரவே நின்றது. மான்ஹீமுக்குத் தெற்கிலுள்ள இருப்புப்பாதைகளில் ரயில் நடமாட்டமில்லை என்று மே மாதத்திய கடைசியில் வேவுபார்க்கும் விமானங்கள் மூலம் தெரிய வந்தது. இம்மாதிரியான போக்குவரவுத்தடையினால் சுற்றுப்பக்கத்திலுள்ள இடங்களில் மாத்திரம் ஏற்படும் கெடுதலோடு நிற்காமல் நூற்றுக்கணக்கான மைல்கள் கிழக்கேயும் பாதிக்கப்பட்டிருக்கிறது.



ரைன் நதியின் கீழ்கரையில் கோலோனின் தெற்கிலுள்ள முக்கியபோக்குவரத்து ரஸ்தாக்கள் பழுதுபட்ட விபரங்கள் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றன. கோலோனில் ஜெர்ம்பரி என்ற ராணுவ மைதானம் தாக்கப்பட்டதால் தான் போக்குவரவு ரஸ்தா கெடுதலடைந்தது. அம் மைதானம் மறுபடி உபயோகிக்கமுடியாது. அங்கிருந்த பெரும் சாமான் ஏற்றும் வண்டிகளும், ஜனங்கள் ஏறும் வண்டிகளும் காலையில் எரிந்து கொண்டிருந்தன. கோலோன் ரயில்வே ஸ்டேஷன் தாக்கப்பட்டதால் 100 சாமான் ஏற்றும் வண்டிகள் சேதமாயின. மற்றொருஎதிர்ப்பில் 15 நாள் கிரமித்து மறுபடியும் அந்த ஸ்டேஷன் சேதமடைந்தது. மியூல்ஹீம் பாலமும், ரைன் கப்பல் கம்பெனியும் எரிந்து போயின. ஜூன் மாதத்தில் ரைன் நதியின் கிழக்கிலுள்ள டென்ஸ் ரயில் வண்டிப் பேட்டை தாக்கப்பட்டது. தொழிற்சாலைகளும் ரயில் வண்டி நிற்குமிடங்களும் சேதமாயின. ஜூன் மாதத்திய ஓர் இரவில் வேஸ்பார்க்கிலுள்ள தீஸன் என்கு வேலைச்சாலையும் கரிப்புகை தயார் செய்யும் யந்திரச்சாலையிலுள்ள எண்ணெய்க் கிடங்கும் தீப்பற்றி எரிந்தது. 3,000 வேலையாட்கள் இதனால் அங்கு வேலைக்குப் போகமுடியவில்லையாம்.

பிரான்ஸில் ஜெர்மனி உபயோகித்துக்கொள்ளும் தொழிற்சாலைகளில் பகல் வேளைகளிலேயே பிரிடிஷ் பகல் விமானங்கள் விளைவிக்கும் சேதத்தைப்பற்றித் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. லிலி என்ற ஜில்லாவில் ஜெர்மனி சுவாதீனப்படுத்திய தொழிற்சாலைகளைத் தாக்கியதால் மின்சார நிலயஙகள் கெடுதி யடைந்து அங்கே ஸப்ளை செய்யமுடியவில்லை. எங்கு தொழிற்சாலைகளும் முக்கியமான இடங்களில் தாக்கப்பட்டன. நிலக்கரி எடுப்பது குறைந்துவிட்டது. இதிலிருந்து பிரிடிஷ் விமான இலாகா நம்பக்கூடிய உண்மையான விஷயங்களைத்தான் பிரசுரிக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். "பல மான பிரிடிஷ் பாம்பர் விமானங்களின் ஒரு பகுதி ஜெர்மனியின் மேற்கேயுள்ள தொழிற்சாலைகளையும் போக்குவரத்துகளையும் நேற்று இரவு தாக்கின........" என்ற அறிக்கைகளிலிருந்து மறைவான பல விஷயங்கள் தெரியவருகின்றன. பாம்பர் விமானிகளுக்குத்தான் தாக்கப்படும் லக்ஷியங்கள் நன்கு தெரியும். மேலும் யுத்தம் முடிவதற்குள் சேதத்தின் பூராக் கணக்கு சொல்லுவது அசாத்தியம். ஆனால் அதிக சேதம் விருத்தியாகி வருவதும், போக்குவரவு தடை ஏற்பட்டிருப்பதும் ஜெர்மனியிலிருந்தே கிடைத்த தகவல்களை நான் சொல்லியிருப்பதைப் பார்த்தால் பிரிடிஷ் வெடிவிமானங்களுக்கு வெற்றி கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பது தெரிய வரும்.

---

# அமெரிக்கர்களின் அபிப்பிராயம்.

## I

## பிரிடிஷ் ஒலிபரப்புகளை ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் கேட்கிறார்கள்.

## இரான்:—"ஒரே கல்லெறியில் ஒரு கூட்டம் பறவைகள் கொல்லப்பட்டன."

## 'பிரான்ஸில் கஷ்டகாலம் ஆரம்பம்.'

ஒரு நாளில் இரண்டு கப்பல்கள்.

யுனைடெட் பிரஸ் பத்திரிகை நிருபர் வாஷிங்டனிலிருந்து, ஆகஸ்டு 25:—அவசர வேலைத் திட்டப்படி டிஸம்பர் மாதத்தில் தினம் ஒரு கப்பல் கட்டப்படும் என்று கப்பல் கோஷ்டி அதிகாரி வெளியிட்டிருக்கிறார். 1942-ம் வருஷ மத்தியில் ஒரு நாளைக்கு இரண்டு கப்பலாகத் தயாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அபிவிருத்தி யடைந்துவருகிறது. அடுத்துவரும் வசந்த காலத்திற்குள் அமெரிக்க உதவி இங்கிலாந்திற்குப் போய்ச் சேர்ந்து பலமான தற்காப்பு செய்துகொள்ளவும், விமான பலமடைந்து தானாக எதிர்ப்புகள் செய்யக் கூடியதாயும் செய்ய வேண்டும்.

## அமெரிக்காவும் யுத்தமும்.

**நியூ யார்க் டைம்ஸ், ஸெப்டம்பர் 3.**—அமெரிக்கத் தொழில் தினத்தன்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு பேசியதை யுத்தத்தில் ஈடுபட்ட நாட்டின் தலைவர் பேசியதுபோலிருந்ததாக அச்சுநாட்டுத் தலைவன் ஒருவன் சொன்னான். ஒரு பக்கம் சேர்ந்து யுத்தத்தில் ஓர் அம்சம் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லுவது சரிதான். அமெரிக்கா நடுநிலை நாடாக இருக்கமுடியாது. பயந்துகொண்டும் திரியாமல் ஈடுபடுவதென்று தீர்மானித்துவிட்டது. தன் நாட்டில் தொழிற்சாலைகளில் செய்யப்படும் சாமான்களை யுத்தரங்கத்திற்கு உதவ அனுப்பிவரும் முறையில் அது யுத்தத்தில் ஈடுபட்டதாகத் தானாகும். இப்படிச் செய்தது பிரஸிடெண்டென்ற ஒரு மனிதனின் தீர்மானமாகாது. அமெரிக்கக் காங்கிரஸ் சபைதான் இவ்விதம் தீர்மானித்திருக்கிறது. குத்தகைக் கடன் சட்டமூலம் ஒருவிதமான செய்கை செய்ய முடிந்திருக்கிறது. அதன் பிரகாரமேதான் நடுநிலை என்ற பாசாங்கைத் தள்ளிவிட்டோம். ஆகையால் அச்சுநாட்டுத் தலைவன் சொன்னது மிகையாகாது. பெரிய நாட்டிற்கு விரோதமாகச் சண்டை செய்யும் மற்றொரு நாட்டிற்குச் சாமான்கள் செய்துகொடுத்து உதவினால் சமாதான நிலை என்று சொல்ல முடியாதுதான். தன் நாடு நிலைத்திருக்க எந்த எந்த நாடுகளுக்கு முன்னாடியே உதவ வேண்டுமோ அவ்விதமெல்லாம் அமெரிக்கா செய்கிறது. இதற்குத்தான் அமெரிக்கா யுத்தத்தில் கலந்து கொள்ளுகிறது.

---

# அட்லாண்டிக் சாஸனம்.

---

### உலகத்தார்களுக்கு யார் தேவை?

| சர்ச்சிலும்-ரூஸ்வெல்டும். | ஹிட்லர். |
|---|---|
| 1. "பிரதேசங்களையாவது, வேறு எதையாவது கைப்பற்ற அவர்களின் தேசத்தார்கள் முயற்சி எடுக்கவில்லை." | 1. "நமக்கு ஐரோப்பாவும், அதன் குடியேற்ற நாடுகளும் வேண்டும். கிழக்கிலும், தென்கிழக்கிலும் அதன் எல்லையைக் காட்டிலும் ஜெர்மனி அதன் பலத்தை வியாபிக்கச் செய்யும். நமக்குத் தென் அமெரிக்காவையும் சேர்த்துக்கொள்ள அதிகாரம் உண்டு. உயிர் பிராணிகள் எதிரிகளை ஜயிப்பதோடு மட்டில் நில்லாமல் அழித்துவிடுவது இயற்கை குணமாக இருக்கிறது." (ஹிட்லர் பேசியது). |
| 2. "அந்தந்த தேசங்களின் இஷ்டத்துக்கு மாறாக தேச விஸ்தீர்ணத்தின் மாறுதலை அவர்கள் விரும்பவில்லை." | 2. "இந்த யுத்தத்தினால் நமக்கு ஸ்திரமான உலக அதிகாரத்வம் கிடைக்கும். அடிமை, அந்நிய ஜாதி வகுப்பு இன்னுமிருக்கும். நாம் அவர்களை நவீன அடிமை வகுப்பைச் சேர்ந்தவர்களென்று சொல்லத் தயங்கமாட்டோம்." (ஹிட்லர் பேசியது.) |



| | |
|---|---|
| 3. "எல்லாவித ஜனங்களும், அவரவர்களின் அரசாட்சியின் வகையைத் தேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளும் உரிமைகளை அவர்கள் பொருட்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆதிபத்திய உரிமைகளும், சுயஆட்சியும் இழக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் கிடைக்கும்படி செய்ய அவர்கள் விரும்புகிறார்கள்." | 3. "சிற்றரசு நாடுகளின் காலம் குறுகிவிட்டது. நாம் சமத்துவத்தைப் பார்க்கவில்லை, எஜமானத்துவத்தைத் தேடுகிறோம். சிறு கக்ஷியினரின் உரிமை ஜனநாயகத்தின் பயனற்ற கருத்துக்களைக் குறித்து சிந்தனைசெய்து வீண்காலம் போக்கக் கூடாது." (ஹிட்லர் பேசியது). |
| 4. "பொருளாதார சுபிக்ஷத்துக்குத் தேவையான உலகத்திலுள்ள விளைபொருள்களும், சமத்துவமான திட்டப்படி வியாபாரமும், எல்லா நாடுகளுக்கும் பெரிதாயிருந்தாலும், சிறியதாயிருந்தாலும், ஜயித்து இருந்தாலும் சரி, தோற்றிருந்தாலும் சரி, அவைகளுக்குக் கிடைக்கும்படி செய்வதில் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்கள்." | 4. "யுத்தம் முடிந்தபிறகு ஜெர்மனியுடன் சேர்க்கப்பட்ட தேசங்களை அது அழித்துவிடவேண்டும். பொருளாதாரத்தில் ஜெர்மனி சிக்கனமாக இருக்கவேண்டியதென்பதற்கு இந்தக் கொள்கை அனுஷ்டிக்கப்படும்." (வாயல்கிஷர் பியோபாக்டர் 20-8-40). நமது மேன்மையான கைத்தொழிலில் செய்யப்பட்ட பொருள்கள், உலகம் பூராவிலும் மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படும். அதனால் யுனைடெட் ஸ்டேட்ஸில் வேலை இல்லாதவர்கள் 70,00,000-த்திலிருந்து 30–4,00,00,000 பேர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். பிறகு மிஸ்டர் ரூஸ்வெல்ட் முழங்காலிட்டு, ஹிட்லரை கைத்தொழிலில் செய்யப்பட்ட பொருள்களில்லாமல் யுனைடெட் ஸ்டேட்ஸின் விலை பொருள்களை நாம் சொன்ன விலைக்கு வாங்கிக்கொள்ளும்படி கெஞ்சிக் கேட்பார்." (நாஜி விவசாய இலாகா மந்திரி டார்ரி தன் கக்ஷி உத்தியோகஸ்தர்களுக்குச் சொன்னது, மே மீ 1940). |
| 5. "எல்லா தேசத்தாருடனும், பொருளாதாரத்தில் தேர்ச்சி பெற்ற தொழிலும், பொருளாதார அபிவிருத்தியும், சமூக முன்னேற்றமும் ஏற்படவேண்டிய நோக்கத்துடன் ஒற்றுமைப்படுத்துகிறார்." | 5. "ஜெர்மனியைச் சேர்ந்திராத எல்லா பூமியும் கைத்தொழிலில் செய்யப்பட்ட சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, கக்ஷி மெம்பர்களுக்கும் இந்த யுத்தத்தில் வீரத்துடன் போர்புரிந்து சௌரவம்பெற்ற படை வீரர்களுக்கும் பங்கிட்டுக்கொடுக்கப்படும்.........இந்த ஜெர்மன் பிரபுகளுக்கு அடிமைகள் உண்டு. அவர்களுக்கு நிலம் கிடையாது. அவர்கள் ஜெர்மன் தேசத்தினரல்ல. இந்த அடிமைகளும், அந்த பிரபுக்களின் சொத்தாகக் கருதப்படுகிறார்கள். பழைய காலத்து அடிமைத்தனம் நமக்கு ஞாபகம் இருக்கிறது. அதை நாம் நவீன முறையில் ஸ்தாபித்து அமுலுக்குக் கொண்டுவருவோம். வேலைக்குக் குறைந்த கூலி ஏற்பட்டால்தான் நம்முடைய பொருளாதார வெற்றி எங்கும் விரைவில் பரவும்." (டார்ரி). |

6. "நாஸிக் கொடுமை முடிவாக அழிந்த பிறகு எல்லா தேசத்தினரும் தங்கள் தங்கள் எல்லைக்குள் அமைதியாக இருக்கவேண்டிய வழிகளை ஏற்படுத்த அவர்கள் நினைக்கிறார்கள். பயமும், 'வறுமையும் இல்லாமல் ஸ்வதந்திரத்துடன் எல்லா நாட்டிலுள்ளோரும் உயிர்வாழ நம்பிக்கை உண்டுபண்ண முயற்சிக்கிறார்கள்."

7. "பெரிய கடல்களிலும், சமுத்திரங்களிலும் தடையன்னியில் கடந்துசெல்ல எல்லா மனிதர்களுக்கும் சாத்தியமாக இருக்கக் கூடிய சமாதானத்தை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்."

8. "உலகத்திலுள்ள எல்லா தேசத்தார்களும், மிருகபல உபயோகத்தை விட்டுவிடவேண்டியதென்பது உண்மையானதும், ஆத்மதத்துவமான காரணங்களுக்கு ஒத்திருக்கிறதென்றும் அவர்கள் நம்புகிறார்கள். நிலப்படை, கடற்படை, விமானப்படை இவைகளைக்கொண்டு ஒரு தேசத்தார் மற்ற தேசத்தார்களை நிர்ப்பந்தித்து, ஆக்கிரமிக்கும்வரை வரும் காலத்தில் அமைதி இருக்காது. ஆதலால், அந்த தேசத்தினர் படைகளை வைத்துக்கொள்ளாமல் செய்வது முக்கியமானது. ஆகையால் சமாதானத்தை உத்தேசித்து யுத்த தளவாடங்கள் இல்லாமல் செய்வதற்கு எவ்வளவு உதவியும், தைரியமும் வேண்டுமோ, அவ்வளவு அவர்கள் செய்கிறார்கள்."

6. "உலகத்தை பயமுண்டாக்கித்தான் ஆளக்கூடும். பீதியடையச் செய்வதுதான் ராஜ தந்திரத்தின் திறமை. ராஜ தந்திரத்தில் நீதி சாஸ்திரம் இருக்கக்கூடாது. தனக்குத்தானே ஸ்வதந்திரமாவது; இடமாவது, சுயேச்சையாவது ஒருவருக்கும் இருக்கக்கூடாது."

(ஹிட்லர் பேசியது).

7. "உலக ஆதிக்கத்திற்குத் தகுந்தபடி ஜெர்மன் கப்பற்படை அதிகரித்து பலப்பட்டுவிடும். உலகம் பூராவும் ஜெர்மனியின் பெயர் விளங்கும்; ஜெர்மன் கொடி பறக்கும்." (கப்பற்படை தளகர்த்தர் ரெய்டர் ஜனவரி 28, 1941).

8. "யுத்தம் ஸாஸ்வதமானது. யுத்தம் உலகம் பூராவையும் வியாபிக்கும் சக்தியுள்ளது. யுத்தம்தான் ஜீவன்."

(ஹிட்லர் பேசியது).

"யுத்தத்திற்குப் பிறகு இதே முறையில் ஆயுத முஸ்தீப்பு நடந்துவரும். ஜெர்மனிக்கு புதிய உலக ஆதிக்கம் நடக்கும்."

(டேட்ஷி-ஆல்ஜிமெயின் ஜீடங், 2—9—40).

---



# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

## *செப்டம்பர் 15—21, 1941.*

இரான்—

"இரானிலிருக்கும் பிரிடிஷ் துருப்புகள் தானியங்களை மாத்திரமின்றி மற்ற ஆகாரப் பொருள்களையும் கைவசப்படுத்துவதாக அராபியப் பத்திரிகைகள் மூலம் தெரியவருகிறது. அதனால் அங்கே பஞ்சம் வருமென்ற பயம் உண்டாகி இருக்கிறது. இருந்தாலும் ஜெர்மனிபேரில்தான் குற்றம் சாட்டப்படுகிறது".

(இங்கிலீஷில் ஜெர்மன்பேச்சு செப்டம்பர் 17).

"செப்டம்பர் 17-ல் அரசியல் சபையின் விசேஷக் கூட்டம் ஒன்றைக் கூட்டி இரானிய பிரதம மந்திரி, இரானில் பிரிடிஷ், ஸோவியத் ஆக்கிரமணத்தால் கஷ்டம் அதிகமாகிவிட்டது என்று சொன்னதாக டாஹ்ரன் ரேடியோ அறிவித்தது".

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி செப்டம்பர் 18).

"பிரிடிஷ், ஸோவியத் படைகள் டாஹ்ரானிலிருப்பவர்களைக் கொடுமையாக நடத்துகின்றன. அமைதிக் குறைவும் குழப்பமும் நாடெங்கும் பரவுகின்றன".

ருஷ்ய, பிரிடிஷ், அரசாங்கத்தார் இரானுக்கு கோதுமையும் சர்க்கரையும் அனுப்புகிறார்கள். ருஷ்யக் கப்பல்கள் காஸ்பியன் கடலிலுள்ள இரானியத் துறைமுகங்களுக்கு மாவு, சர்க்கரை துணிகள் ஏற்றிச் செல்லுகின்றன. எண்ணெய்ப் பிரதேசங்களுக்கு மாத்திரம் செப்டம்பர் 12-ல் 700 டன் மாவு பிரிடிஷ்காரர்கள் ஸப்ளை செய்தனர்.

பிரிடிஷ், டச்சு மாருபத்தில் 43,000 டன் சர்க்கரை டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து இரானுக்கு புறப்பட்டுவிட்டது.

செப்டம்பர் 17-ல் இரான் பிரதம மந்திரி சபைக்கு, நேசதேசப் படைகள் இரானுக்கு வந்திருப்பதைத் தெரிவித்து, "சபை அங்கத்தினர்கள் மனதில் கவலை கொள்ளக்கூடாது. ஏனென்றால் நேசநாடுகளுக்கும் நமக்கும் விரோதம் கிடையாது. அவர்கள் இனியும் விரோத பாவம் கொள்ளமாட்டார்கள். அவர்கள் மொழிகளையும் நம்பலாம்" என்றும் சொன்னார்.

"பிரிடிஷ்காரர்களை நாங்கள் வரவேற்பதால் தான் சண்டையேற்படவில்லை.......ருஷ்யர்கள் படையெடுத்ததால் வடக்கேயும் டாஹ்ரானிலும் கொஞ்சம் கலகம் ஏற்பட்டது. ஆனால்

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி செப்டம்பர் 19).

உடனே அடக்கப்பட்டது. ஜெர்மன் ஏஜெண்டுகள், ருஷ்யச் சேனை இரானில் சுட்டு லூட்டி அடித்ததாகச் சொல்லி வருகின்றனர்....முடிந்தவரை பிரிடிஷ் இந்தியச் சைனியம் சண்டையில்லாமல் காரியங்களைச் செய்தது", என்று அங்காராவிலுள்ள நியூ யார்க் டைம்ஸ் நிருபரான ரோராக் என்பவர் மேல்கோளாக டாஹ்ரனிலுள்ள ஓர் வியாபாரி சொன்னதைச் சொன்னார். செப்டம்பர் 15.

"இரானிய அரசாங்க நகைகளை விலை மதிக்கவும் பரீக்ஷை செய்யவும் ஒரு ஆங்கிலேய கமிட்டி ஏற்பாடாகி வருகிறது........பிறகு அவைகளைக் கைப்பற்றலாம்.........இதுபோலவே பிரிடனின் யுத்தத்திற்கு உதவும் ஒவ்வொரு நாடும் தன் தங்கங்களையும் நகைகளையும் இழந்தன".
(ஜெர்மன் பாஷையில் ஜெர்மன் செய்தி செப்டம்பர் 19).

இரானியர்களால் அமைக்கப்பட்ட இரானிய பார்லிமெண்டு கமிட்டிதான் பரிசீலனை செய்துவருகிறது. இராக்கில் ரஷீத் ஆலி செய்த முயற்சியிலிருந்து இங்கும் அம்மாதிரி ஏற்படாமலிருக்க முன் ஜாக்கிருதையாக இரானியர் இருக்கின்றனர்.

"பிரிடனின் யுத்தத்திற்கு உதவும்" நாடுகளை ஜெர்மனிதான் படையெடுக்கிறது. அந்த நாடுகளிலுள்ள சொத்தை ஜெர்மனிதான் கொள்ளையடிக்கிறது. சில இடங்களில் ஜெர்மானியத் திருடர்கள் வசப்படாமல் தேசத்தின் சொத்து பத்திரமாக இருக்கின்றன. உதாரணமாக ஹாலந்து நார்வேயிலுள்ள சொத்துக்களை அந்நாட்டு பிரதிநிதிகளும், அரசர்களும், மந்திரிகளும் வெளிதேசங்களில் காபந்து செய்திருக்கின்றனர்.

**ஸிரியா—**

"இஸ்லாம் மதத்திற்கும் அராபிய மதத்திற்கும் பிரிடிஷ்காரர்கள்தான் விரோதிகள் என்று ஸிரியர்களும் அராபியர்களும் அறிந்துகொண்டனர். பிரிடிஷ்காரர்கள்தான் ஸிரியர்களுக்கும் அராபியர்களுக்கு நேர்ந்த விபத்

"நம் முறைகளுக்கு பிரீ பிரெஞ்சுக்காரர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதன்படி ஸிரியர்களுக்கே ஸிரியாவைத் திருப்பிக்கொடுத்து, ஸ்வதந்திர அரசியல் கொள்கைகளைச் சீக்கிரம் அவர்கள் அடையச் செய்கிறோம்'



துக்களுக்குக்கெல்லாம் காரணம்".
(பர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, செப்டம்பர் 10).

"வாக்களித்ததைப் பிரிடிஷ்காரர்கள் நிறைவேற்றுவதேயில்லை. இனிமேல் உலகத்தையும் அராபியர்களையும் அவர்கள் ஏமாற்றமுடியாது".
(பர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, செப்டம்பர் 11).

"ஸிரியா மந்திரி சபையில் மனப்பான்மை மாறக்கூடியவிதமெல்லாம் செய்யப்படுகிறது...... ...இதிலிருந்து, பிரிடிஷ்காரர்கள் தங்களைக் கீழ்படிந்த நாடாகச் செய்யப் பார்க்கிறதாக ஸிரியர்கள் கண்டுகொண்டனர்".

(அராபிக் பாஷையில் இதாலி செய்தி, செப்டம்பர் 19).

என்று செப்டம்பர் 9-ல் பார்லிமெண்டில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னார்.

நேச தேசங்களுக்காக லெவாண்டில் இருந்த பிரீ பிரெஞ்சு சேனைத் தலைவரான ஜெனரல் கார்டேக்ஸ் செப்டம்பர் 16-ல் பூரா அதிகாரத்துடன் ஸிரியாவின் ஜன ஆட்சியை மறுபடி ஸ்தாபித்தான். புதிய பிரஸிடெண்டான ஷெயிக்டெஜ் எட்டின் ஆல் ஹஸ்ஸானி "இன்று ஜனநாயக ஆட்சிகளில் ஒன்றாகச் சேர்ந்துகொண்டோம்" என்று சொன்னார்.

மிஸ்டர் சர்ச்சில் சொன்னவைகளையெல்லாம் அராபியப் பத்திரிகைகள் பிரசுரப்படுத்துகின்றன. பாலஸ்தீன் என்ற பத்திரிகை தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது:

"ஸிரியாவின் வருங்காலத்தைக் குறித்து பிரிடன் தனியே விலகிக்கொண்டதை அராபிய ஜனங்கள் புகழ்கின்றனர்". ஆல்டீபா என்ற பத்திரிகை "ஸிரியா-லெபனன் சாஸனத்தை மிஸ்டர் சர்ச்சில் வெளியிட்டது அதிக நன்மையைச் செய்யும்........ அது நல்ல அபிப்பிராயங்களை வெளிப்படுத்துகின்றன" என்று சொல்லிற்று

## இனி நேரக்கூடாத சம்பவங்கள்.

### ஸாமோபாயம்.

"ஹிட்லரின் புது திட்டம், ஜனங்களுக்குத் தங்கள் வேலைகளின் பயன்களை அடையக்கூடிய ஸ்வதந்திரத்தைக் கொடுப்பதாக உறுதிகூறுகிறது".
(ஸ்பெயினுக்கு நாஸி ஒலிபரப்பு, ஜூலை 25, 1941).

### தண்டோபாயம்.

"உலகம் பூரா யுத்தரங்கமாக வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார் என்று ஹிட்லர் சொல்லியிருக்கிறார். யுத்தத்தினால்தான் தர்மத்தை அடையாலாமென்று ஹிட்லர் நம்பியிருக்கிறார்".
(ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 1940).

“ நாஸிக் கொள்கை எல்லா நாடுகளுக்கும் ஸ்வதந்திரத்தைக் கொடுப்பதுதான் ”.
(ஹாலந்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு,
ஆகஸ்டு 5).

“ ஐரோப்பாவில்தான் பயிற்சி மேலானதாக இருக்கும் ”.
(ஜெர்மனிக்கு ஜெர்மன் ஒலிபரப்பு,
ஆகஸ்டு 18, 1941).

ஐரோப்பா பூராவையும் பற்றி ஹிட்லர் பேசும்போது, “ ஐரோப்பா ஐரோப்பியர்களுக்குத்தான். அமெரிக்கா அமெரிக்கர்களுக்குத்தான். ஆகையால் மன்ரோ சொன்னதை நாம் ஒப்புக்கொண்டதாகும் ” என்றான்.
(பெர்லின், ரோம், டோகியோ
ரேடியோ ஜூலை 3, 1940).

“ அனுபவத்திலிருந்து, ஐரோப்பாவிற்குச் சமாதானம் ஏற்படுத்த பலமான தலைவனும், அரசாக்ஷி செய்யக்கூடிய நாட்டின் அதிகாரமும் தேவையென்று தெரிகிறது. அவ்விதம் ஜெர்மனிதான் செய்யமுடியும் ”.
(நாஸிகளுக்குட்பட்ட பின்லாந்து
ரேடியோ, ஆகஸ்டு 17, 1941).

“ புது திட்டப்படி, சரியாக புத்தி வாய்ந்த ஜெர்மன் மக்களிடம்தான் தலைமைஸ்தானம் நிற்கும் ”.
(ஹில்வர்ஸன் ரேடியோ நவம்பர் 9,
1940).

“ 80,000,000 ஜெர்மானியர்களை அமெரிக்காவுக்கு அனுப்பினால் அதை ஒரு ஸ்வர்க்கலோகம்போல் செய்துவிடுவார்கள் ”.
(ஹாம்பர்க் பிரெண்டன்பிளாட்
மார்ச்சு 20, 1941).

**திருத்தம்** :—கிரீஸில் பிரிடிஷ் நஷ்டங்கள் 7,658 தான். பிரசுரம் 63-ல் அச்சு நாட்டு ஒலிபரப்பில் 37-ம் பக்கத்தின் இரண்டாம் பகுதியின் கடைசி பாராவில் உள்ளபடி 75,658 அல்ல.

---



## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 64—(1-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 1941— | | | | மணி. |
| அக்டோபர் | 4, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 5, ஞாயிற்றுக்கிழமை. | பூவாசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் .. | ,, | 6.30 |
| | 6, திங்கட்கிழமை .. | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 7, செவ்வாய்க்கிழமை. | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பொரம்பூர் ... | ,, | 6.30 |
| | 8. புதன்கிழமை ... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 9. வியாழக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | காஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 10, வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 65—(2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 11, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | ,, | 6 30 |
| 12, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் ... | ,, | 6.00 |
| | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| 13, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | விராச்சிலை ... | ,, | 6.30 |
| 14, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | பெருமாநாடு ... | மாலை | '6.00 |
| | புல்வயல் ... | ,, | 6.30 |
| 15, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | திருமயம் ... | மாலை | 6.00 |
| | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| 16, வியாழக்கிழமை .. | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | ராங்கியம் ... | ,, | 6.30 |
| 17, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | விராலிமலை ... | ,, | 6.30 |

மாட்சிமை தங்கிய ராஜ சக்கிரவர்த்தி அவர்கள்

# இச்சமயம்

ராணுவத்திற்கும், ஸாப்பர்ஸ் மைனர்ஸ்களுக்கும், சமாசாரம் அறிவிப்பு அளிக்கும், யந்திர வண்டிகளை ஓட்டுவதற்கும் மனிதர்கள் தேவைப்படுகிறார்கள் என்று

## புதுக்கோட்டை ஸமஸ்தானவாஸிகள்

அறிந்துவருகிறார்களா ?

இவைகளுக்குத் தேவையான யோக்கியதாம்சங்கள் :—

குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம்.

குறைந்த இடைமானம் 110 பவுண்டு.

குறைந்த சம்பளம் மாதம் ஒன்றுக்கு 16 ரூபாயும் இனமாக உணவும் உடுப்புகளும் அளிக்கப்படும்.

பின்னும் மற்ற விபரங்கள் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய படை சேரிப்பு உத்தியோகஸ்தரான ராவ் பஹதூர் R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களிடம் நேரிந்துகொள்ளலாம்.

**உற்சாகமுள்ள புதுக்கோட்டை மக்களுக்கு மகத்தான ஒரு சேவையில் ஈடுபட**

## இதுவேதான் நல்ல தருணம்.

பொருள் சட்ட வேலைகளிலும் அமரலாம்.

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—5-10-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் அக்டோபர் மீ 11 உ [ந. 65.

பிரஸங்கம் LXV.

## ருஷ்ய—ஜெர்மன் மஹா யுத்தம்.

1. இதுவரை கேட்டறியாத பெரும் சைனியங்கள் ஈடுபட்டு அதிகமான சேதங்கள் ஏற்பட்டுவருகிற ஓர் பெரும் யுத்தம் நான்கு மாதங்களாக நடந்து வருகிறது. இதைப்பற்றி அரசாங்க அறிக்கைகள் மிகவும் சுருக்கமான விவரத்தைக் கொடுப்பதோடு, உலகத்தின் பத்திரிகைகளின் நுட்பமான நிருபர்களாலும் ஒரு நிலைமையைப்பற்றியும், முடிவைப்பற்றியும் அபிப்பிராயங்களைச் சொல்ல முடியாமல் இருக்கிறது. (ஆனால் சிற்சில சமயங்களில் எதிரிகள் செய்யும் பெரும் மாறுபட்ட பிரசாரங்களினால் ஒன்றும் அறியாத சிலர் மாத்திரம் கொஞ்சம் ஏமாற்ற மடைந்திருக்கலாம்). ஆகையினால்தான் நமது பத்திரிகையைப் படிப்பவர்களுக்கு உண்டாகும் ஆசைகளையும், அபிப்பிராயங்களையும் மாற்றக்கூடிய அபிப்பிராயங்களை நாங்கள் கொடுக்கவில்லை. இருந்தாலும் தேசப்படத்தைப் பார்ப்பதாலும், ருஷ்யாவில் பிரதேச முக்கியத்துவம், தொழிற்சாலை பிராதானியம் பெற்ற இடங்களைத் தெரிந்துகொள்ளுவதாலும் மாத்திரம் ஏற்படக்கூடிய அபிப்பிராயம் மட்டும் கொடுக்கப்படுகிறது.

மேலும், சமீபத்தில் ருஷ்யாவுக்கு வெளிப் பிரதேசங்களில் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து ஹிட்லருக்கும், ருஷ்யர்களுக்கும், இந்தியாவிலிருக்கும் நமக்கும் எவ்விதமான ஆபத்து நெருங்கி வருகிறதென்று கூறமுடியும். இரானில் ருஷ்ய—பிரிடிஷ் படைகள் வியாபித்தது அந்த சம்பவங்களில் ஒன்று. மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலும், லார்டு பீவர்புரூக்கும், நேயர்களான ருஷ்யர்களுக்குச் சீக்கிரத்தில் உதவி அனுப்புவதற்காக சாமான்கள் உற்பத்தியைத் துரிதப்படுத்தச் சொன்னது மற்றொன்று. மூன்றாவதாக மாரிகாலமும் நெருங்கி வருவதால் ருஷ்ய யுத்தத்தின் தன்மையும் பூராவாக மாறுபாடடையும் என்ற மனப்பான்மை கொள்ளலாம். இவை எப்படியானாலும் உலக சரித்திரத்திலேயே முக்கியத்துவம் பெறக்கூடிய சில நிகழ்ச்சிகள் நிர்மாண நிலையிலிருக்கின்றன என்பது உண்மை.

பிரதேசத்திலும் ருஷ்யர்கள் தோல்வியடைந்தது உண்மைதான். ஆனால் ஒற்றுமை, தைரியம் இவைகளை இழக்காமலும், யுத்தத்திலிருந்து ஓய்வு அடையாமலும் சீறுகிறார்கள். அதனால் தான் மனோதைரியம், ஒற்றுமை, அளவு இவைகளில் அதிகப்பட்டு, யுத்த தந்திரத்தால் ஸ்தலங்களைப் பிடித்து ஜயம் பெற்றுவருகிற ஜெர்மானியரை எதிர்த்துப் போராடுகின்றனர். உதாரணமாக கீவ் எதிரி வசமானாலும் அங்கிருந்த ருஷ்யச் சேனை சிதறவில்லை. எதிரி வசப்பட்டதாகச் சொல்லப்பட்ட லெனின்கிராட் பூராவாக எதிரிவசப்படாததோடு விசித்திரமான தற்காப்பு முறையினால் எதிரிக்கு ஏராள நஷ்டம் விளைவித்திருக்கிறது. மாஸ்கோவில் எல்லாம் அமைதியாகத்தானிருக்கிறது. ஸ்மாலென்ஸ்கிலிருந்து ஜயத்துடன் ஜெர்மானியர் மாஸ்கோவை நோக்கி வரவேண்டியிருக்க, 100 மைல்களுக்கு அப்பால் பலவாரங்களாக தடைபட்டிருக்கின்றனர். மேலும் மார்ஷல் டிமோஷென்கோ எதிர்ப்புகளும் செய்துவருகிறார்.* நாம் மேலே சொன்னவிதமாக, ஹிட்லர் ருஷ்ய யுத்தத்தை மாரிகாலத்திற்குள் முடிக்க எண்ணங்கொண்டதற்கு மாறுபாடாக மாரிகாலம் சமீபித்துவிட்டது. யுத்தத்தை இன்னும் முடிக்க முடியவில்லை.

ருஷ்யச் சேனைகளின் தற்போதைய நிலை.

5. இதுவரை நாம், காலநிலை நமக்கு சாதகமாக இருக்கிறதென்று சொன்னோம். ஆனால் வேறு சில விஷயங்களையும் கவனிக்க வேண்டும். எவ்வளவு அவசரப்பட்டாலும் ருஷ்யாவுக்கு பிரிடிஷ்-அமெரிக்க உதவியினால் அடுத்த வருஷத்தில்தான் பிரயோஜனம் ஏற்படும். (இதைப்பற்றி மறுபடி பின்னால் கவனிப்போம்). பிரகிருத சமயத்தில் ருஷ்யச் சேனைகள் அதிக ஆபத்தான நிலையில் இருப்பதை மறக்கக்கூடாது. ஹிட்லரும் அவர் மந்திரிகளும் கண்மூடித்தனமாக இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. மாரிகாலம் வந்தால் தங்கள் யுக்திகளெல்லாம் தடைபடுமென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் இவ்வருஷம் ருஷ்யர்களின் எதிர்ப்பு மட்டுப்பட்டால் யுத்தத்தை நிறுத்துவதாயும் உத்தேசிக்கவில்லை. இருந்தாலும் தங்கள் சேனையின் பெரும் பாகத்தை ஒன்றுசேர்த்து மாரிகாலத்திற்குள் ருஷ்யர்களும் வெற்றியடைய வழிதேடுகிறார்கள். காலத்தை எதிர்த்தும், மனிதர்கள், வண்டிகள், எண்ணெய், இதர ஸப்ளைகளின் நஷ்டத்தை லக்ஷியம் செய்யாமலும் பழக்கப்படுத்தப்படும் புதிய ருஷ்யச் சேனைக்கு உதவியும் யுத்த சாமான்களும் வருவதற்கு முன்னாடியே ருஷ்யர்கள் யுத்தத்தை முடிக்கப் பார்க்கின்றனர். யுத்த சாமான்களும் (மற்றவைகளும்) பிரிடன், அமெரிக்காவிலிருந்து வரவேண்டும். தங்களுக்கு ஏற்படும் இவ்விதத் தடைகளை நாஜிகள் நன்குணர்ந்து சீக்கிரத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியைச் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். அவ்வித முயற்சியை அவர்கள்தான் செய்யக்கூடும், நேசதேசத்தார்களில் எவரும் இம்மாதிரியான 'பெரும் முயற்சிக்கு' இன்னும் தயாராகவில்லை

மூன்றுவது பெரும் தாக்குதலான மார்ஷல் டிமோஷென்கோ நடுப்பாகத்தில் வெகு சீக்கிரத்தில் அடையும் வெற்றியைப் பொருத்து புடன்னியின் வெற்றி இருக்கிறது என்று கொஞ்சம் பதில் சொல்லலாம்! ஸ்மாலென்ஸ்கிலிருந்து ரொப்ருயிஸ்க் வரையிலும், பிரிபெட் சதுப்பு நிலங்களிலும் இந்த மகத்தான யுத்தம் மத்திய பாகத்தில் நடக்கிறது. விவரங்கள் சரியாகக் கிடைக்காததால், ஏற்படக்கூடிய விஷயங்களைப்பற்றி அபிப்பிராயம் ஒன்றும் கூறமுடியவில்லை. டிமோஷென்கோவின் எதிர்ப்பு, சிலர் அபிப்பிராயத்தில், தாமதமாக இருப்பதாகத் தோன்றுகிறது. சில சமயம் வெற்றி பெறுவதாயும், சிலசமயம் பின் வாங்குவதாயும் தோன்றுகிறது. ஆனால் வடக்கிலும் தெற்கிலுமுள்ள ஜெர்மன் சைனியங்களை வெகுதூரம் முன்னேற விட்டு அவைகளுக்குப் போக்குவரவு உதவி தடைபடும்வரை தாமதித்தால் இரு ஜெர்மன் பிரிவுகளும் தத்தளிக்கவேண்டியதுதான். இப்படி ஆவதற்குள் எதிரி ருஷ்யநடு சைனியத்தைத் தொலைத்துப் போக்குவரவுகளால் உதவிபெறமுடியாமல் செய்யவேண்டும். அது முடியாது. ஆனால் இதற்குப் பதிலாக தன் சைனியத்தைப் புதுப்பித்துத் தேவையான மனித, சாமான் உதவியைச் சேகரம் செய்து பலவந்தமாக டிமோஷென்கோ எதிரியைத் தாக்கினால் முடிவான வெற்றிபெற்று நிலைமை நமக்குச் சாதகமாகிவிடும். லெனின்கிராட்டைத் தாக்கும், வலதுபுறமுள்ள வான்லீப் என்ற ஜெர்மன் சைனியத் தலைவரின் சைனியமும், இடது புறம் தெற்கிலுள்ள ருஷ்யச் சேனையின் பின்புறம் தாக்கும் வான்பாக்கின் சேனையும் ஆபத்துக்குள்ளாகி, மாரிகாலம் வந்தவுடன் முன்னேற முடியாமல் போவதுடன், தற்காப்பு ஸ்தலங்கள் (ஏதாவது இருந்தால்!) அவைகளை நோக்கிப் பின்வாங்கவேண்டியும் வரும். எவ்விதம் டிமோஷென்கோ, முடிவு செய்யப்போகிறார் என்று ஒருவருக்கும் தெரியாது. அவன் நிலைமை பெரிதானதால் தனக்கு வந்துசேரும் சாமான் உதவியைப் பொருத்திருக்கிறது. அதிகமாக உதவிப்படை வந்ததும், பிரிடிஷ் டாங்கிகளும், விமானங்களும் ருஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் யுத்த தொழிற்சாலை நஷ்டங்களை ஈடுசெய்து அவர் வெற்றி பெறுவார். இந்த உதவி அவருக்கு வராவிட்டால் முன்னேறவும் முடியாது, வடக்கு, தெற்கிலுள்ள விரோதி சைனியங்களும் கெடுதியடையா*.

8. ஆவலையும் கவலையையும் உண்டுபண்ணக்கூடிய அம்சங்கள் நிறைந்த இந்நிலையைப்பற்றி இதுவே எனது பொது அபிப்பிராயம். ஆனால் அது நிபுணரின் அபிப்பிராயமாகாது. ருஷ்யச் சைனியமோ அரசாங்கமோ தளர்ந்து போகவில்லை. இயற்கை வீரர்களாக இருந்து நவீன யுத்த முறைகளுக்குத் தக்கவாறு, பயிற்சி, ஆயுதங்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதும் உண்மை. ஆனால் ஜெர்மானியரின் முயற்சி பலமாயும், வந்து வரட்டுமென்றும் இருந்து சண்டை செய்கின்றனர். இவ்விதம் நாஜிகள் நிலை முற்றிவிட்டதையும் ஆபத்துக்குள்ளாகியதையும் உணர்ந்து யுத்தம் செய்வதால் நாமும் ருஷ்மத்தை அறிந்து, தைரியம் பெற்று, ஊக்கத்துடன் சண்டை செய்ய வேண்டியதுதான்.

9. முன் சொன்னவைகளிலிருந்து நமது நிலை கவலைக்கிடமாகி விட்டதாக நினைக்கக்கூடாது. நிலைமை அதிகமாக முற்றி வருகிறதென்றும் வரும் காலத்தைக் குறித்து திருப்தி அடைந்து சும்மாயிருப்பது தவறு என்று உரைப்பதாகக் கருத வேண்டும். நீண்டதொரு யுத்தத்தில் ருஷ்யர் வெற்றிபெறுவார்கள் என்ற நம்பிக்கைகொள்ள ஹேது இருக்கிறது. இதற்குள்ள காரணங்களைக் கூறுவோம்.

(1) இப்பொழுதிருக்கும் ஹிட்லரின் மின்னல்படை ருஷ்யாவில் பலிக்கவில்லை. அவன் போட்ட காலதிட்டம் தவறி, ஜெர்மன் யந்திரப் படையை எதிர்க்க முடியாது என்ற எண்ணங்கள் முறிபட்டுவிட்டன.

(2) ஹிட்லர் அடைந்ததாகச் சொல்லும் லாபத்தைக் காட்டிலும், ஆள், சாமான் சேதம் மிக அதிகம்.

---

* 7-வது பக்கத்திலுள்ள குறிப்பைப் பார்க்கவும்.

## அநுபந்தம்.

லெனின்கிராட் முற்றுகை போடப்பட்டிருக்கிறது.
ஒருவராலும் பிடிக்கப்படாதகோட்டை.
நகரத்தைச் சுற்றிலும் பாதுகாப்புகள்.
எப்படி பிரிட்டன் அதன் நேசதேசத்தை உதவி செய்யக்கூடும்.

(ஸிரில் லாக்கின் சமீபத்தில் பி. பி. ஸி-யில் பேசியது).

தெற்கிலும் ஏராளமான பிரதேசத்தை ஜயித்திருப்பதில் ஐடமில்லை. இன்னும் தெற்கே அவர் இரண்டாவது முறை எதிரிகளைத் திருப்பித் தாக்குதலிலும் கொஞ்சம் ஜயம் கிடைத்திருக்கிறது. இதைப்பார்க்க ருஷ்யப் படைகள் நீண்ட காலம் பின்வாங்கினாலும், அவர்கள் கட்டுப்பாடு குறையாமலும் தாக்கும் உணர்ச்சி அதிகமாகவும் இருக்கிறது.

## நகரத்தைப்பற்றிய செய்திகள்.

லெனின்கிராட்டின் முக்கியத்துவத்தைப்பற்றி அதிகம் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. அது ருஷ்யாவில் பெரிய நகரம். ஆயுதங்கள் உற்பத்தி செய்வதற்கும் பெரிய முக்கியஸ்தானம். பால்டிக் கப்பற்படைக்கு லெனின்கிராட்டும் கிரான்ஸ்டாட்டும் தலைமை ஸ்தானங்கள். மேலும் அது இதுவரையில் ஒரு வீரனாலும் பிடிக்க முடியாதபடி அவ்வளவு வலுவுள்ள கோட்டை. இங்கு இந்நகரத்தைப் பற்றியும் அதன் கோட்டைப்படையைப் பற்றியும் சுருக்கமாய் சொல்லுகிறேன். ஜெர்மானியர்கள் அங்குள்ள ருஷ்யப்படை பூராவும் 6,00,000 வீரர்கள் அடங்கிய 30 பகுதிகள் இருக்கிறதென்றும், மற்றவர்கள் அதில் 10 லக்ஷம் வீரர்களுக்கு குறையாதென்றும் மதிப்பிடுகிறார்கள். நமக்கு நிதர்சனமாய்த் தெரிந்த விஷயம் என்னவென்றால், சமாதான காலத்தில் 8 லக்ஷம் பேர்கள் அதில் அடங்கிய கோட்டைகள் மிக பலமுள்ளதாயிருந்தன. நகரத்துக்கு மேற்கே சமுத்திரக் கரையிலிருந்து வரும் பாதையைத் தடுத்து குன்றுகளின் தொடர் இருக்கிறது. அதில் தளகர்த்தர் வொரோஷிலவின் துருப்புகள் வியாபித்திருக்கின்றன. குன்றுகள் அதிக உயரமில்லை. ஆனால் ராணுவ முக்கிய ஸ்தலமாய் இருப்பதற்கு அதிக உயரம் வேண்டியதில்லை. சென்ற யுத்தத்தில் முதிர்ச்சி பெற்றவர்கள் மெஸயன்ஸ் ரிட்ஜ், செமின் டிஸ்டேம்ஸ் என்ற குன்றுகளிலிருந்து என்ன பயன் கிடைத்தது என்று அறிவார்கள். பார்வைக்கு அவை தாழ்வாக இருந்தாலும் அவைகளுக்குக் கீழ் உள்ள சமவெளிகளில் பீரங்கி வெடிகுண்டுகள்போட பீரங்கிப் படைக்குச் சாதகமாய் இருக்கின்றன. லெனின்கிராட் குன்றுகள் பழைய ருஷ்யா ஸார்களின் பெருமை பொருந்திய பழைய ஸார்ஸ்-கூயிஸிலோ அரண்மனையாயிருந்து அதாவது இப்பொழுது டெயிட்ஸ்கோயிஸிலோ என்று சொல்லுமிடத்திலிருந்து பின்லாந்து குடாக்கடலில் 45 மைலுக்கப்பால் உள்ள கோபர்ஜே வரையிலும்



கிழக்கே இந்த நகரத்திலிருந்து 15-மைலுக்கப்பால் ஹோல்பினின் கோட்டையிருக்கிறது. ஜெர்மானியர்கள் அடைந்ததாகச் சொல்லும் லடோகா ஏரியில் தென்கரையிலுள்ள ஷ்லூஸ்ஸெல்பர்க் இடம் வரையில் சதுப்பு நிலம் பரவி இருக்கிறது. அதிக மழை பெய்தபிறகு பான்ஸர் படைப்பகுதி இந்தத் தேசத்தின் வழியாகச் செல்லமுடியாது. சரத் காலத்தில் அதிக மழைவர இன்னும் அநேக வாரங்கள் இருக்கின்றன.

## ஜெர்மானியர்களின் நம்பிக்கையற்ற முயற்சி.

இந்த நகரத்தைத்தான் ஜெர்மானியர்கள் முற்றுகை போடுகிறார்கள். ஒரு சமயத்தில் இதைக் கைப்பற்ற அவசரமில்லையென்று அவர்கள் சொன்னார்கள். ருஷ்யர்களுக்குச் சமீபத்தில் அபாயமில்லையென்று பிரிட்டனும், யுனைடெட் ஸ்டேட்ஸும் ஏமாறச் செய்யவே இந்த ஜெர்மன் பிரசாரம். வடக்கே பனி அதிக அடி ஆழமிருப்பதால், மாரிகால படையெடுப்பு எதிரிகளுக்குத் துக்ககரமாக இருக்கும். எச்செலவிலும் கூடிய சீக்கிரத்தில் லெனின்கிராட்டைக் கைப்பற்ற பெருத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே ஜெர்மனிக்குப் பெருத்த நஷ்டம். இறந்தவர்களும், காயம்பட்டவர்களும் சேர்ந்து நாலு லக்ஷம் பேர்கள் என்று மதிக்கிறார்கள்.

முற்றுகை இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது. அதனால் சந்தோஷமடைய காரணமில்லை. பீரங்கிப் படையினாலும், பாம்பர் விமானங்களாலும், வார்ஸாவையும், ராட்டர்டாமையும் அழித்ததுபோல் இந்த நகரத்தையும் இடித்து சேதத்தைக் குறைப்பதாகப் பெர்லினில் பேசப்படுகிறது. தாக்குகிறவர்கள் ஏற்கனவே காலாட்படைகளும், ஆயிரக்கணக்கான பீரங்கிகளும், யந்திர பீரங்கி ஸ்தானங்களையும் வெடிகண்ணி எறிகிறவர்களையும், பாய்ச்சல் பாம்பர்களையும், தகர்க்க யந்திரங்களுடன் சேகரித்திருக்கிறார்கள். ஜெர்மன் அரசாங்கம் பீரங்கிக்கு ஆட்களைப் பலிகொடுப்பதில் தயங்குவதில்லை, அப்படி பலி கொடுத்தாலாவது வெளிப் பாதுகாப்புகளை அழித்து அவர்கள் உள்ளே நுழையக்கூடும்.

## ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு போர் அணி.

அப்பொழுதும்கூட போர் முடிந்துவிடாது. அந்த நகரம் அரைமைல் நீளமுள்ள நீவா கால்வாயினாலும், வெளிகளில் இருப்பதைக் காட்டிலும் அதிகக் கால்வாய்களினாலும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ருஷ்யர்கள் ஒவ்வொரு தெருவையும் போர் வரிசையாகவும், ஒவ்வொரு வீட்டையும் ஒரு பலத்த ஸ்தானமாகவும் செய்திருக்கிறார்கள். அவர்கள் காட்டியிருக்கும் வீரத்தையும் பார்க்க அவர்கள் வார்த்தைகள்படி நடப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்களிடம் யுத்த ஆயுதங்களும், ஆகாரம்தான் குறைவு. கோட்டையில் 30, 40 லக்ஷம் பொதுமக்கள் சாப்பிடவேண்டியிருக்கிறது. அவர்கள் ஆகாரப்பொருள்கள் எவ்வளவு வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாது. ஆனால் பனிவந்து மூடும் வரையில் பொறுத்திருந்தால் முற்றுகை போடுபவர்களின் உத்ஸாகமும் குறைந்துவிடும். நகரத்துக்குள் சூழப்பட்டிருக்கும் லக்ஷக்கணக்கான ஆண், பெண் குழந்தைகள் படக்கூடிய கஷ்டங்களும் தொந்தரவுகளும் இவ்வளவென்று எண்ணமுடியாது.

ஆனால் அனுதாபம் மட்டில் இருப்பது போதாது. ஜனநாயகமாக இருக்கும் நாம் அவர்களுக்கு உதவியாக என்ன செய்யவேண்டும். நாம் உற்பத்தியைத் துரிதப்படுத்தி ஒவ்வொரு பீரங்கி, டாங்கி, விமானமும் ருஷ்யர்களுக்குப் போய் சேர்ந்தோ அல்லது நமது துருப்புகளாலோ நமது பொதுவான எதிரியைத் தாக்க உபயோகப்படுத்துகிறோம். பிரிட்டனிலும், யுனைடெட் ஸ்டேட்ஸிலும் அனுப்பப்படும் ஒவ்வொரு டாங்கி, விமானம், பீரங்கியும் நம்முடைய பாதுகாப்புக்குக்

குறைவதில் சாவு வாழ்வு நிலைமையில் நாம் உண்மையான தியாகம் செய்கிறோம். வீரத்துடன் முதுகுகாட்டாமல் போரிடும் நேசதேசத்துக்குத் தியாகம் செய்ய நாம் சந்தோஷமாக இருக்கிறோம்.

## ஆர்டிக் சமுத்திரத்தில் பிரிடிஷ் கப்பற்படை உதவி.

ஆர்டிக் சமுத்திரத்தில், மெர்மன்ஸ்க் போர்முனையிலுள்ள ருஷ்யத் துருப்புகளுக்குச் சாதகமாக ஜெர்மன் அணைக்கப்பலைத் தாக்கி பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் உதவியளித்தன. இரண்டு ஜெர்மன் நாசகாரிகளும் மற்றும் இரண்டு கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. பர்ஷியன் குடாக்கடலிலிருந்து காஸ்பியன் கடல் வரையிலும் உள்ள பாதை சரியாக வரும் வரையில் தரைமார்க்கமாக நமது நேசதேசத்தார்களுக்கு உதவியளிக்க முடியாது. முதல் திறமையாக வருவதற்கு அவகாசம் பிடிக்கும். இருமுறைகளிலும் உள்ள துறைமுகங்கள் ஏராளமான பொருள்கள் கொள்ளும்படி விஸ்தரிக்கவேண்டும். இரானில் இருப்புப்பாதை ரஸ்தா, போக்குவரத்துகள் நன்முய் இல்லை. காலதாமதம் ஏற்படுவதில் அமைதி இருக்காது. ஒரு வீட்டிலிருந்து குடிமாற்றுவதில் ஏற்படும் சிரமம் தெரிந்தவர்கள் லக்ஷக்கணக்கான டன்கள் நிறையுள்ள யந்திரங்கள், வெடிமருந்துகள், ஆகாரப் பொருள்கள் இவற்றை உலகத்தில் பாதி தூரத்திற்கு 24-மணி நேரத்தில் கொண்டு செல்லமுடியாதென்பதை அறியவேண்டும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 2—10—41-லிருந்து 8—10—41-வரை.

**ஹிட்லரின் பேச்சு.**—மாரிகாலத்தில் யுத்தம் நடத்த ஜெர்மன் மக்களின் அநுமதியைக் கோரி அக்டோபர் மாதம் 3-ம் தேதி ஹிட்லர் பேசினதிலிருந்து ஜெர்மன் பொதுமக்களுக்கு யுத்தத்தில் உண்டாகியிருக்கும் உணர்ச்சிக் குறைவு நன்கு தெரியவருகிறது. முதலில் கோயபல்ஸ் சொன்னது அவனுக்குள்ள மனத்தளர்ச்சியை வெளிச்சமாக்கியது. "ஜெர்மன் மக்களினுள் பிளவை உண்டாக்குவது வீண் பிரயாசைதான். யுத்தம் செய்வதிலிருந்து அவர்களைத் திருப்புவதோ, அவர்களுக்கும் ஹிட்லருக்கும் மனஸ்தாபத்தை உண்டாக்குவதோ கூடாது" என்றான். ஹிட்லரும் இத்தடவை தன்தேசத் தற்காப்பைப்பற்றிய கவலை கொண்டவனாயும் செய்த பிசகுகளுக்கு முதல் தடவையாக மன்னிப்பு கேட்பவனாயும் காணப்பட்டான். உலகங்களை பயமுறுத்த எண்ணங்கொண்டிருந்தாலும், மிஸ்டர் கார்டல் ஹல் கூறும்விதமாகத் தான் சொன்னதெல்லாம் நடபுடலென்று ஹிட்லர் நினைத்தானே ஒழிய உலகத்தார் இவன் சொன்னதை லக்ஷியம் செய்யவில்லை. மற்றபடி எப்பொழுதும் பேசுவதுபோல் வார்த்தை ஆடம்பரங்களும், கோபாவேசமும் இருந்தன. தான் ஒன்றும் அறியாத அப்பாவியென்றும், பின்லாந்து, ருமேனியா, பல்கேரியா, டார்டனல்ஸ் இவைகளை ருஷ்யர் பிடிக்க ஆசைப்பட்டால்தான் இவனுடைய 'சமாதான எண்ணங்கள்' பலிக்கவில்லையென்றும் சொன்னான். மேலும் ருஷ்யச் சண்டையை இவனுக்கு 'உதவி செய்கிறவர்களைக்' காப்பாற்றவே செய்கிறோம். ருஷ்யா பின்லாந்தை எதிர்க்கும்போது இதாலிய விமானங்கள் 'நேச நாடான' பின்லாந்திற்கு ஜெர்மனி வழி பறக்கக்கூடாதென்று தடை செய்ததை மறந்துவிட்டான்போலும். இதற்குமுன் ஒருதரம் அட்லான்டிக்கில் பிரிடிஷ் கப்பல் நஷ்டத்தைச் சொன்னவிதமாகவே இப்பொழுதும் ருஷ்யரின் நஷ்டத்தை நம்பமுடியாதவிதமாகச் சொன்னான். ஆனால் ருஷ்யர்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள் என்று மாத்திரம் ஒரு பூரா உண்மையைச் சொல்லிவிட்டான்.



**ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.**—மாரிகாலத்தில் யுத்தம் நின்றுவிடுமென்று செய்த பிரசங்கத்தில் ருஷ்யாவின் தோல்வியை முடிக்கப் புதிதாகப் பலமான எதிர்ப்பு செய்வதாக ஹிட்லர் சொன்னது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நெபோலியன் சென்ற வழியாக மாஸ்கோவை நோக்கி எதிரி பெரும் பிரயத்தனம் செய்கிறான். இக்கோதான் ஜூலை மாதத்தில் எதிரி செய்த முயற்சி எல்லாம் வீணாயின. இரண்டு மாதகாலமாக டிமோஷன்கோ, எதிர்ப்பினால் எல்நியாவைப் பிடித்து ஸ்மாலென்ஸ்க்கையும் தாக்கிவருகிறான். இப்பொழுது டாங்கிகளின் அதிக எண்ணிக்கையைக்கொண்டு எதிரி டிமோஷன்கியின் இருபுறங்களிலும் வியாஸ்மா, ப்ரயான்ஸ்க் பக்கமாக மின்னல் எதிர்ப்பு செய்கிறான். இங்கே கடும் சண்டை நடக்கிறது. ஆனால் டிமோஷன்கோவை இன்னும் சூழ்ந்துகொள்ளவில்லை. எதிரிக்குக் கொஞ்சம் பிரதேசத்தை விட்டாவது இவன் நஷ்டப்படாமல் பின் வாங்கலாம். இல்லாவிட்டால் நிலை ஆபத்துக்குள்ளாகிவிடும். வியாஸ்மா என்பது மாஸ்கோவிலிருந்து 140 மைல்களில் ஸ்மாலென்ஸ்க் ரஸ்தாவில் இருக்கிறது. இதைத் தவிர இரண்டு எதிரிப் பகுதிகள் மாஸ்கோவை நோக்கி வருகின்றன. ஒன்று வெலிகிபாலுகிலிருந்து ரெஷெவ்விற்கும் மற்றொன்று (வால்டாய் மலைத்தொடருக்கு வடக்கிலுள்ள) நோவாக்ரோட்டிலிருந்து கலினினுக்கும் வருகின்றன.

தெற்கே, அஸாவ் கடலில் மரியுபோல், பெர்டியன்ஸ்க் என்ற இடங்களைப் பிடித்து கரைவழியே வரும் சைனியங்களுடன் சேர்ந்துவிட்டதாக எதிரி சொல்லிவருகிறான். ஆனால் மெலிடோபோலிலிருந்து புடன்னி இவைகளை எதிர்த்துவருகிறான். இவ்விதமாக நடுபாகத்திலுள்ள ருஷ்யப்படைக்கு உதவி வரமுடியாமல் செய்ய எதிரி பிரயத்தனம் செய்தபோதிலும் லெனின்கிராட் நிலை பலமாகத்தானிருக்கிறது. ஆனால் வரும் அறிக்கைகள் மிகவும் மாறுபாடாக இருக்கின்றன. ஒரு அறிக்கை விரோதி லெனின்கிராட்டில் ஒன்று சேர்ந்திருப்பதை ருஷ்யர் கலைத்துவிடுவதாயும், மற்றொன்று இப்பொழுதுதான் பட்டணத்தை நோக்கிவருவதாயும் அவன் விரட்டியடிக்கப்படுவதாயும் கூறுகின்றன.

மற்ற பாகங்களிலும் நிலை அதிகமாகக் குழம்பியிருக்கிறது. தெற்கே அஸாவ் கடல்வரையில் ஜெர்மானியர் முன்னேறியிருந்தாலும், யேனிஸியிஸ்க்கை ருஷ்யர் பிடித்துக்கொண்டனர். லெனின்கிராட்டில் ஜெர்மானியர் அதிகச் சிரமம் எடுத்துக் கொண்டிருப்பதாயும், ருஷ்யர் எதிர் சண்டைகள் செய்வதாயும் ஒரு செய்தி தெரிவிக்கிறது. மற்றொரு அறிக்கை, பட்டணத்தின் தற்காப்பைக் குறைக்க மும்மரமாகச் செய்த ஜெர்மானியர் திருப்பி அடிக்கப்பட்டதாகச் சொல்லுகிறது. அங்கிருந்து ஜெர்மன் சைனியத்தின் ஒரு பகுதி நடுபாகத்தை நோக்கிச் சென்றதால் லெனின்கிராட்டில் ஜெர்மன் எதிர்ப்பு தளர்ந்துவிட்டதாக மூன்றுவது அறிக்கை மூலம் தெரிகிறது. இவை எப்படி ஆனாலும் ருஷ்யர் நிலை பலமடைந்து வருகிறது. மற்ற பாகங்களிலும் ருஷ்யர் எதிரியை எதிர்த்து சண்டை செய்கின்றனர். ஒடெஸ்ஸா சமாளித்துவருகிறது. பெரிகாப்பில் எதிரி பிரவேசிக்கவில்லை. கார்கவ் வரையில் இன்னும் முன்னேறவில்லை. மர்மான்ஸ்க்கோடு திகைத்து நின்றுவிட்டான். ருஷ்யர்களும் கலையாமல் முன்போலத் தைரியமாக இருக்கின்றனர்.

**மூவரசுக் கூட்டம்.**—மாஸ்கோவில் சமீபத்தில் வெற்றிகரமாகக் கூடிய கூட்டத்திலிருந்து எதிரி கிலிபிடித்து நடுபாகத்தில் துரிதப்படுத்தப் பார்க்கிறான். அட்லான்டிக் சந்திப்பில் இக்கூட்டத்தை நடத்த தீர்மானித்தபொழுது இது நடைபெறாது என்றும், கூடினபிறகு பயன்படாது என்றும் எதிரி சொன்னான். இப்பொழுது அக்கூட்டமும் கூடி இனி செய்யவேண்டியதைத் திட்டம் செய்ததால், கடல், தொழிற்சாலை, நிலப்படை இவைகளில் பலம் பெற்ற நாடுகள் ஒன்று சேர்ந்திருப்பதைப் பார்த்து எதிரிக்கு அச்சம் உண்டாகியிருக்கிறது.

பின்லாந்தின் பதில் மழுப்பலாயும், பெர்லினின் அதிகாரிகளுக்கு உட்பட்டிருக்கும் தோரணையிலும் இருக்கிறது. ஸெப்டம்பர் 28-ல் ருஷ்யாவின் நாடுகளை ஆக்கிரமிக்கக்கூடாது என்று பிரிடன் அனுப்பிய குறிப்புக்கு இம்மாதிரி பதில் வந்திருக்கிறது. 'ஒருவித தொந்தரவும்' செய்யாத காலத்தில் 1939-லும், இவ்வருஷம் ஜூன் மாதத்தில் மறுபடி தங்களை ருஷ்யர்கள் எதிர்த்ததையும் காரணமாக வைத்து இவர்கள் தற்சமயம் ருஷ்யரை எதிர்க்கிறார்களாம், இருந்தாலும் எப்போதும்போல் தன் தேசத் தற்காப்பிலேயேதான் இருக்கிறதாம். ஆனால் ருஷ்ய நாட்டினுள் சென்று தன் எல்லைப்புறத்தைக் காபந்து செய்ய எத்தனிப்பதால் பின்லாந்து சொல்லுவதைத் தள்ளிவிடலாம். மேலும் இது படையெடுக்கும் நாட்டில் பின்னிஷ்காரர்கள்தானிருக்கிறார்கள் என்பதை அது கவனிக்கவில்லை.

**மதமும் யுத்தமும்.**—கிழக்குமுனையில் போர்செய்த்து நாஸ்திக ருஷ்யாவை ஒழிப்பதற்கென்று ஜெர்மனி போதிப்பது எல்லோருக்கும் ஞாபகத்திலிருக்கும். சில வாரங்களுக்குமுன் லண்டனில் ருஷ்ய தூதர் பேசியதில் தற்சமயம் ருஷ்யாவில் உள்ள மதப்பற்று, பூஜை. அன்னிய மதத்துவேஷமில்லாதிருப்பது இவைகள் எவ்வளவு இருக்கிறதென்பதைப்பற்றிசொல்லி ஜெர்மனி சொன்னதைப் பொய்யாக்கினார். மாகாண மதச் சங்கத்தில் காண்டர்பரி குரு பேசுகையில் ருஷ்யக் கலகத்தில் அக்கிரமம், கொலை, நிர்பந்தம், இவைகளால் அபகீர்த்தி ஏற்பட்டிருந்தாலும், ருஷ்யர்களின் புதிய சிநேகிதம் தனக்குப் பெருமை உண்டாக்கியது என்று சொல்லி ஜெர்மன் பாசாங்கை கண்டித்தார். மத ஸ்வதந்திரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று ருஷ்யா சில வருஷங்களாக நினைத்துவருகிறது. பழைய காலத்து, தவறுதல்களை மாற்றிக்கொண்டு, இப்பொழுது ருஷ்யா முக்திநெறியைக் கடைபிடித்திருக்கிறது. 'பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து தேசத்தார்கள் சௌகரியம் அடைய ருஷ்யா தைரியமாகவும் ஆழ்ந்த யோசனையின் பேரிலும் போட்ட திட்டத்தை நாம் ருஷ்யாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். சுயேச்சையாகவும், பூரா பொறுப்புடனும் மனிதன் வாழ என்ன செய்யவேண்டுமென்பதை அவர்கள் நம்மிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டுமென்றும்' அவர் சொன்னார்.

**டாக்டர் க்ளாடியஸ்.**—1942-ம் வருஷம் ஜனவரியோடு காலாவதியடையும். இங்கிலாந்துக்கும், துருக்கிக்குமுள்ள க்ரோம் தோல் ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும்படி போதித்து பயனடையாமல் போனபொழுது, 1943, 1944 இந்த வருஷங்களில் அனுப்பும் யுத்த தளவாடங்களுக்குப் பதிலாக துருக்கி க்ரோம் ஸப்ளை செய்யவேண்டுமென்று இவர் மறுபடியும் கேட்டிருக்கிறார். பிரிடனுடன் கலந்து கொண்டு துருக்கி, ஜெர்மன் பொருள்கள் கைக்குக் கிடைத்தமேல்தான் க்ரோம் ஸப்ளை செய்யப்படுமென்றும், அதாவது ஜெர்மனி யுத்தப் பொருள்கள் கொடுக்காமல் போனால் தான் க்ரோம் ஸப்ளை செய்யமுடியாதென்றும் சொல்லி விட்டதாகத் தெரிகிறது.

**யுத்தக் கைதிகளைத் தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்புதல்.**—ஜெர்மனிக்கும், பிரிடனுக்கும் மற்றொரு அரசாங்கத்தின் மூலம் அநேக மாதங்களாக யுத்தக் கைதிகளில் நோயுள்ளவர்களையும், காயமடைந்தவர்களையும் அவரவர்கள் ஊருக்குத் திருப்பியனுப்புவதற்கு ஆலோசனை செய்யப்பட்டுவந்தது. ஸெப்டம்பர் மாதம் 1-ம் தேதியில் ஸ்விட்ஸர்லாந்து தூதன் மூலமாக அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் பிரிடிஷ் ஆஸ்பத்திரிக் கப்பல்களில் இங்கிலீஷ் கால்வாய் துறைமுகங்களிலிருந்து பரிவர்த்தனை செய்துகொள்வதாக ஒப்பந்தம் ஏற்பட்டது. அமெரிக்க தூதுமூலமாக பிரிடிஷ் கைதிகள் 1,200 இருப்பதாக ஜெர்மனி சொல்லிக் கொண்டது. பிரிடிஷ் அரசாங்கமும் ஜெர்மன் ஸ்திரீகள், குழந்தைகள் வயது முதிர்ந்த கைதிகள் எல்லாம் சேர்ந்து கூடுதலாகும் 150-பேர்களையும், ஆஸ்பத்திரி கப்பல்களில் இடமுள்ளவரை ஏற்றியனுப்புவதாக ஒப்புக்கொண்டது. அதுபோல்



ஜெர்மன் கைதிகளை நியூஹேவனிலிருந்து ஏற்றியனுப்ப ஆயத்தம்செய்தபொழுது கடைசி சமயத்தில் கம்பியில்லாத் தந்திமூலம் அந்தஸ்து, எண்ணிக்கை இவைகளை பொருட்படுத்தாது, அவரவர்கள் தேசத்துக்கு அனுப்பவேண்டுமென்ற 1939-ம் வருஷ ஜெனிவா ஒப்பந்தத்திற்கு விரோதமாக பிரிடன் எவ்வளவு எண்ணிக்கை அனுப்புகிறதோ அதாவது 100-க்கு 100-தான் ஜெர்மனியும் அனுப்பும் என்று நேர்முகமாகச் செய்தி அனுப்பிவிட்டது. ஆகையால் தயவாக புறப்படத் தயாராயிருந்த ஆஸ்பத்திரிக் கப்பல்களில் ஏற்றியிருந்த கைதிகளை இறக்கிவிடவேண்டியதாயிற்று.

**மனிலாவில் ஆலோசனை.**—பிரிடன், 'யுனைடெட் ஸ்டேட்ஸ் இருதேசத்தின் படைத்தலைவர்கள் மனிலாவில் சந்தித்தது வெற்றிகரமாக முடிந்தது. பஸிபிக் சமுத்திரத்தில் சண்டை நேர்ந்தால் பரஸ்பர சகாயத்தைப் பற்றி பேசப்பட்டது. அச்சு நாடுகளின் ஒன்றன்பின் ஒன்றான திட்டம் தூரக்கிழக்கில் பலிக்காதென்று ஜப்பானுக்கு இதனால் எச்சரிக்கை செய்தமாதிரி ஆகிவிட்டது.

**ஆசியாவின் ஜீவநாடிகள்.**—டப்கூபர் செய்யவேண்டிய அநேக காரியங்களில் சைனாவுக்கு புதிய போக்குவரத்துகள் ஏற்படுத்தும் பிரச்னையுமிருக்கிறது. தூரக்கிழக்குப் பிரச்னை மூவகைப்பட்டது. ஒன்று ஜப்பானை முன்டவிடாமல் சைனா எதிர்த்து நிற்கவேண்டும். இரண்டாவதாக சைனாவுக்கு அமெரிக்கா பொருளுதவி கொடுக்கவேண்டும். மூன்றாவதாக சைனாவுக்குப் போய்ச்சேர பிரிடிஷ் பிரதேசமார்க்கமாக போக்குவரத்து சாதகங்களை பிரிடன் கண்டுபிடித்துக்கொடுக்கவேண்டும். இந்தோ-சைனாவில் ஜப்பான் வியாபித்த பிறகு சைனாவுக்கு பர்மா ரோடுதான் ஒரே மார்க்கம். அநேக சந்தர்ப்பங்களில் அந்த ரஸ்தா இடங்கொள்ளவில்லை; இப்பொழுது ஜப்பானியர்களால் தாக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஏற்கனவே அமெரிக்கப் பொருள்கள் ரெங்கூன் துறைகளில் வந்து குமிழ்ந்திருக்கின்றன. இந்தியா பக்கம் சைனாவின் எல்லை விசாலமானது. இந்தப்பக்கத்தில் ஒரு வழி உடனே கண்டுபிடிக்கவேண்டும்; காலம் போக்கக் கூடாது.

**ஜெர்மன் ஆக்கிரமித்த தேசங்களில் குழப்பம்.**—ஆக்கிரமித்த பிரதேசங்களில் விதிப்பயன் என்று சும்மா இருந்ததுபோக குழப்பமும் அதிகாரத்தை மீறுவதுமாக உணர்ச்சி ஏற்பட்டிருப்பது வியக்தமாகத் தெரிகிறது. ஜெர்மானியர்கள் ஜயிக்கப்படக்கூடியவர்கள் என்றும் அவர்களைத் தோற்கடிக்கக் கூடுமென்றும் ஏற்படுகிற நம்பிக்கையுடன் இந்த மாறுதல் உண்டாகிறது. அடக்குமுறையும், நிர்ப்பந்தமும் வெளிப்படையாக இருந்தாலும் எல்லா தேசத்தினரும் எதிரியாகயிருப்பதால் ஜெர்மன் அரசாங்கம் பாதுகாப்புமுறையில் இருக்கிறது. வெவ்வெறு தேசங்கள் வெவ்வேறு விதமாக எதிர்க்கின்றன. யூகோஸ்லாவியா வெளிப்படையாகச் சண்டையிடுகிறது. ஸெக்கோஸ்லோவாகியா வாய்ப்பேச்சில்லாமல் எதிர்க்கிறது. நார்வே ஒத்துழையாமலும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸ் தனி நபர்களை அடித்தும் எதிர்க்கின்றன.

**கடற்சண்டை.**—அட்லாண்டிக் நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. பிரிடிஷ் எண்ணெய்க் கப்பல்கள் இப்பொழுது அமெரிக்காவின் உபயோகத்திற்கு மீதப்படும். சண்டையிடும் எல்லா தேசங்களைக் காட்டிலும், மூன்றுவது வருஷ யுத்தம் ஆரம்பித்தபோதிலும் பிரிடன் அதன் உணவு திட்டத்தை அதிகரிக்கக் கூடியதாக இருக்கிறது. குத்தகைக் கடனில் அடங்கிய பிரிடிஷ் பொருளை ஏற்றிவந்ததும், பனமா கொடி கொண்டிருந்ததும், அமெரிக்கர்கள் ஓட்டிவந்ததுமான நீராவிக் கப்பல் ஐ. ஸி. ஒயிட் குராகாஸிலிருந்து கேப் டவுனுக்கு வரும் வழியில் டார்பிடோவினால் உடைக்கப்பட்டது.

**இந்திய தேசியப் பாதுகாப்புச் சபை.**—யுத்தப் பிரச்னைகளைக் குறித்து முதன் முதலில் இந்திய ஸமஸ்தான பிரதிநிதிகளும், பிரிடிஷ் இந்தியப் பிரதிநிதிகளும்

ஒன்று சேர்ந்து ஆலோசிக்க கூடிய முதல் சபையை அக்டோபர் 6-ம் தேதி மாக்ஷிமை தங்கிய ராஜப்பிரதிநிதி திறந்து வைத்தார். அந்தக் கூட்டத்திற்கு மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய செய்தியில் "இந்திய மக்கள் ராணுவ வீரர்களில் அதிக கௌரவத்துக்கும், மரியாதைக்கும் பாத்திரமுள்ளவர்கள்" என்று காட்டியிருக்கிறார். '1942-ல் காஸ்பியன் கடலிலிருந்து நைல் வரையிலும் வியாபிக்கும் நீண்ட போர்முனையில் யுத்தம் செய்து இந்தியாவுக்கு யுத்தம் பரவாமல் தடுப்பார்கள்' என்று அவர் சொல்லியிருந்தார். சபை ஆரம்பத்தில், இந்தியா இப்பொழுது பெரிய படையெடுப்புகளையும் தந்திரமான பெரிய யுத்தநடவடிக்கைகளையும் எதிர்க்கக்கூடியதாக ஆகிவிட்டதென்று மாக்ஷிமை தங்கிய ராஜப்பிரதிநிதி சொன்னார்.

**நடுநிலைச் சட்டம்.**—அமெரிக்க வியாபாரக் கப்பல்கள் ஆயுதம் ஏற்றிச்செல்ல ஒரு மசோதா அமெரிக்கச் சபையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவைகள், யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகளின் துறைமுகங்களுக்குச் சென்று யுத்தப் பிரதேசங்களுக்குச் செல்லும் பிரச்னையும் கவனிக்கப்படும்.

---

## யுத்தக் குறிப்புகள்.

**ஒருமனத்தோற்றம்.** ஒருவிதத்தில் பார்த்தால் 1917-ல் சண்டைசெய்த நாடுகளுக்குப்பதிலாக வேறு நாடுகள் 1941-ல் ஈடுபடுவதைத்தவிர உலக அமைப்பில் யாதொரு வித்தியாசமும் இல்லை. அப்பொழுது பிரான்ஸ் எதிர்த்ததற்குப் பதிலாக ருஷ்யா ஜெர்மன் சைனியங்களை எதிர்த்துப் போராடுவதுதான் வித்தியாசம். மற்றபடி கக்ஷிப் பிரதிகக்ஷிகளின் சேர்க்கையிலும், அபிப்பிராயங்களிலும் ஒற்றுமை இருக்கிறது. சென்ற யுத்தத்தில் மிட்டல் ஐரோப்பா என்ற கல்பனை, ராக்ஷஸத்தனமானதும், பயங்கரமானதுமான ஹிட்லரின் புது திட்டமாக மாறி இருக்கிறது. இதைத் தடுக்க ஸர்வதேசக் கட்டுப்பாட்டை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் நேசதேசங்கள் முயற்சிக்கின்றன. (உண்மையில் ஸோவியத் அரசாங்கத்தால் இந்த அபிப்பிராயம் பரீக்ஷை செய்யப்பட்டிருப்பதோடு ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளில் உள்ள பல கூட்டங்கள், ஒருவித சம்பந்தமுமில்லாத ருஷ்யாவின் ஆதிக் கொள்கையுடன் சேர்ந்து உதவிபுரிகின்றன). நேசதேசங்களான பிரிடன், ருஷ்யா, அமெரிக்கா மூன்றும் மறுபடி சேர்ந்து ஸ்வதந்திர நாடுகளைத் திரும்ப ஸ்தாபிக்க அரசாங்க முறையில் தீர்மானித்திருக்கின்றன. சென்ற யுத்தத்தின் முடிவில் ஸர்வதேச சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு நாடுகளில் உள்ள கலகங்களை அடக்கி ஆளவேண்டும் என்ற அபிப்பிராயம் இப்பொழுதும் இங்குமங்கும் புஸ்தகங்களிலும், உபந்யாச மேடைகளிலும், சட்டசபைகளிலும் சர்ச்சை செய்யப்படுகிறது.

வி வி வி வி வி

**துருக்கி தயாராக இருக்கிறது.** இவ்வாரத்தில் பிரதான வியாசத்தில் ஜெர்மனி கருங்கடல் மார்க்கமாக காகஸஸைப் பிடிக்கக்கூடிய ஹேஷ்யங்களைச் சொல்லியிருக்கிறோம். ஆனால் துருக்கிக்கு இப்மாதிரியான ஆபத்து சமீபத்தில் இல்லை. ஒருக்கால் ஹிட்லரும் அவ்விதம் துருக்கியை எதிர்ப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படாதென்று நினைக்கிறார்போலும். ஆனால் ஸாமோபாயத்தினாலேயே துருக்கியர்களை வசப்படுத்தி நேசதேச சம்பந்தத்தை இழக்கச்செய்து டார்டனல்ஸ் வழியே அச்சுநாட்டுக்குக் கப்பற்படையை அனுப்பிவிடலாமென்றும் நினைக்கலாம். ஆனால் துருக்கியை வசப்படுத்தாமலோ, அதன் அனுமதி பெறாமலோ கப்பற்போரைத் துடங்குவது



முடியாது. சமயம் பக்குவமாகும்வரை ஹிட்லர் அதிக பலாத்காரம் செய்வான் என்பதில் சந்தேகமில்லை. அவ்வித நெருக்கடி துருக்கிக்கு வந்தால், முன் தனியே இருந்ததுபோலல்லாமல் இப்பொழுது உதவி அளிக்கப்படும். உதாரணமாக வேண்டும்போது உதவி செய்வதற்கு லாயக்காக துருக்கியின் மூன்று எல்லைப் புறங்களில், பிரிடிஷ் சைனியங்கள் தயாராக இருக்கின்றன. மேலும் கவர்ச்சியுள்ள மிஸ்டர் கிளாடியஸ்ஸின் செல்வாக்கு அங்காராவில் குறைந்துவிட்டது. தேசீய வியாபார உடன்படிக்கையை ஜெர்மனிக்குச் சாதகமாகச்செய்து துருக்கியின் மென்னியைப் பிடிக்கமுடியாது. பிரிடிஷ்காரர்களால் அளிக்கப்பட்ட பணம் மாற்றல்களால் வியாபாரம் செய்வதையும் போக்குவரவு ரஸ்தாக்களையும் விரைவாக துருக்கி விருத்திசெய்து வருகிறது. உதாரணமாக இங்கிலாந்தின் வியாபாரச் சங்கம், துருக்கி மந்திரிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அன்டோலியாவின் தென்பாகத்தில் போக்குவரவை விருத்திசெய்கிறது. இதனால் அலெக்ஸாண்டிரெட்டா என்ற சிறு துறைமுகத்திலிருந்து சாமான்களின் போக்குவரவு அதிகமாக ஏற்படுத்தமுடியும். இதன் வழியே மோட்டார் ரயில் வண்டிகளும் மற்ற சாமான்களும் பிரிடனிலிருந்து வந்துசேரும்.

வி வி வி வி வி

**போலி ஸீஸர்.** முஸோலினியின் புகழ் பூரா மங்கிவிட்டது என்றே சொல்லலாம். ஒருகாலத்தில் இவன் சிஷ்யனாயிருந்த ஹிட்லர் இப்பொழுது இவனை கழிவுகெட்டவன் என்று நினைக்கிறான். இதாலியரும் சகஜமாக இவனைப்பற்றி கேவலமான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். மேலும் இவன் தன்னைப்பற்றிய நம்பிக்கையையே இழந்துவருகிறான். லிபியாவில் ஆசின்லக் செய்த பெரும் எதிர்ப்பைத் தடுக்க ஸெப்டம்பர் 16-ல் ஜெர்மானியரைத்தூண்டவே ஹிட்லருடன்கலந்து பேசப் போனதாகவும், முஸோலினியின் சிறுராஜ்ஜியத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன் சைனியங்களை அனுப்பமுடியாது என்றும் அந்தச் சைனியங்கள் ருஷ்யப் போர் முனைக்குத் தேவையாக இருக்கிறதென்றும் ஹிட்லர் சொல்லிவிட்டானும். ஆனால் கிரீஸ், கிரீட்டிலிருந்து லுப்ட்வாபியின் சிறிது பாகத்தை மாத்திரம் அனுப்புவதோ அல்லது நைல் நதிக்கரையிலிருந்து பிரிடிஷ் படையின் கவனத்தை கருங்கடல் பக்கம் (பல்கேரியத் துருப்புகளின் ஆடம்பரத்தால்) திருப்பி விடுவதோ தான் செய்யமுடியுமென்றும் ஹிட்லர் சொல்லிவிட்டதால் ஹிட்லர் தரிசனத்திலிருந்து ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை.

ஆகையால் முஸோலினியின் பயம் தீர்ந்தபாடில்லை. மேலும் வடஆபிரிக்காவில் பிரிடிஷ் சைனியம் நாளுக்குநாள் பலமடைந்தும் பழக்கப்பட்டும் வருகிறது. ஆனால் வீண் பெருமைகொண்ட ஜெர்மன் ஆபிரிக்கப்படை பலமடைந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் இவைகளுக்கு ஸிஸிலியின் தென்பக்கத்திலுள்ள குறுகிய கடல்மார்க்கமாக வந்துகொண்டிருந்த உதவி தடுக்கப்படுகிறது! ஸெப்டம்பர் முதல் பதினைந்து நாட்களில் பிரிடிஷ், டச்சு நீர்மூழ்கிகள் 1,00,000 டன் அச்சுநாட்டுக் கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றன. ஸெப்டம்பர் 18-ல் ட்ரிபோலிக்குத் துருப்பு ஏற்றிச்சென்ற 25,000 டன் உள்ள இரண்டு அச்சுநாட்டுக் கப்பல்கள் அமிழ்த்தப்பட்டன. அதன்பிறகு துறைமுகம் சென்றவுடன் ஒரு பெரும் அச்சுநாட்டுக் கப்பல் விமானத்தாக்குதலால் அடிக்கப்பட்டது.

ஆகையால் இங்கே பிரயாணிகளுக்கு ஆபத்து வந்ததால், ஸெப்டம்பர் 18-ல் சென்றபடி இரண்டு வியாபாரக் கப்பல்களுக்கு ஐந்து சண்டைக் கப்பல் வீதம் துணைபுரியவேண்டி வந்தது. அதுவும் போதவில்லை! துணைக் கப்பல்கள் மனிதர்களையோ, யுத்தச் சாமான்களையோ, உணவையோ ஏத்திச் செல்லாததால் ஜெர்மன் சைனியத்திற்கு கஷ்டம் வந்திருக்கிறது. எண்ணெய்ச் செலவுதான். இது ஹிட்லருக்கு அவசியம் தேவையாக இருக்கிறது. இதோடு பின்புறம்

# சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—9—41. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விரோதி காவல்புரியும் படதகளும், ஒரு சிறு படதும்—பெல்ஜியன் (Belgian) கடற்கரைக்கப்பால். | 1 காவல் புரியும் படகு தீப்பற்றியது. சிறு படகு மூழ்கடிக்கப் பட்டது. | ... | ... |
| | பீரங்கி நிலை.—பெல்ஜியன் (Belgian) கடற்கரையில். | அடக்கப் பட்டது. | ... | ... |
| | துணையுடன்கூடிய லாரிகள்—வட பிரான்ஸில் (France). | 5 லாரிகளுக்கு தீ வைக்கப் பட்டன. | ... | ... |
| | இரவில்.—பால்டிக் கடலிலுள்ள ஸ்டெடின் (Stettin) என்னும் முக்கிய துறைமுகம். | பெருந்தீக்கள் மூட்டப் பட்டன. | | |
| | கப்பல் துறை.—பிரதேசம் ஹாம்பர்க் (Hamburg). | .. | 8 இரவு பாம்பர் விமானங் கள். | 1 பைடர் விமானம்; மற்ருென்று சேதமாயிற்று. |
| | கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg), லஹாவர் (Lehavre). | ... | | |
| | விரோதி விமான நிலயங்களை எதிர்க்கும் காவல் விமானங்கள்.—ஆக்கிரமித்த தேசங்களில். | ... | | |
| | பீரங்கி நிலை.—லானியான் (Lannion). | 1 விரோதி பாம்பர் விமானம் தீப்பற்றியது. | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | விமான நிலயங்கள்.—ஜெர்பினி (Gerbini), காமிஸோ (Comiso). | ... | ... | 1 பைடர் விமானம்; இன்னும் அநேகம் சேதமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|
| 29—9—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | விமான நிலயங்கள், ரயில்வே ஸ்டேஷன்கள், கட்டடங்கள், மோட்டார் வண்டிகள் நிற்குமிடங்கள்.—மோட்டார் வண்டிகளின் கூட்டம்.—ட்ரிபோலி (Tripoli). | அநேக வண்டிகள் தீப்பற்றி சேதமாயின. | | |
| | கப்பல்கள் துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ... | 1 பைடர் விமானம். | |
| | துருப்புகள் போக்குவரத்து.—ட்ரிபோலி (Tripoli)-யிலிருந்து வரும் சமுத்திர கரை ரோட்டில். | ... | | |
| | மோட்டார் வண்டிகள்.—ஸர்டி (Sirte). | ... | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 9 விமானங்கள். | 26 விமானங்கள். |
| 30—9—41. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—பலமான காபந்து செய்யப் பட்ட துணைக்கப்பல்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக்கப்பால். | 1 பெரிய கப்பல் தாக்கப் பட்டது. | | |
| | விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாயி (English Channel)லும், பிரான்ஸ் (France) வடகரையிலும். | ... | 1 பைடர் விமானம். | |
| | ஆயுதமேற்றிய இரண்டு வியாபாரக் கப்பல்கள்.—செர்பர்க் (Cherbourg)குக்கு அப்பால், | 1 கப்பல் தாக்கப் பட்டு தீ மூட்டப் பட்டது. | | |
| | இரவில்.—கப்பல் துறைகள், தொழிற் சாலைகள்.—ஹாம்பர்க் (Hamburg), ஸ்டெடின் (Stettin). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | கப்பல் துறைகளும், அங்குள்ள கட்டடங்களும்.—செர்பர்க் (Cherbourg), ஸெயிண்டு நாஸேர் (St. Nazaire). | ... | | |
| | தொழிற்சாலை, கப்பல் நிறுத்துமிடங்கள், எண்ணெய்க் கிட்டங்கிகள்.—நாண்டிஸ் (Nantes). | ... | 1 பாம்பர் விமானம். | |
| | விரோதி விமான நிலயம்.—லோரியாண்ட் (Lorient)க்கருகாமையில். | சேதமாயிற்று. | | |
| | விரோதித் துணைக்கப்பல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 1 பெரிய கப்பல் தாக்கப் பட்டு தீப்பற்றியது. | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஆக்கிரமித்த பிரதேசத்திலுள்ள விமான நிலயங்கள். | ... | | |

பிரிடிஷ் விமானப்படை சென்று பேரினிலுள்ள தளவாட சாலையையும், ஸிஸிலியில் விகடா என்ற இடத்திலுள்ள தளவாடத்தொழிற்சாலையையும், மெஸ்ஸிஞவில் உள்ள தோணிகளுக்கு உதவும் மின்சார ஸ்தலத்தையும், ரயில் போக்குவரவுள்ள பிரதேசத்தையும் குண்டுகளால் தாக்கின; ஆகவே முஸோலினி மத்தியதரைக் கடலில் போட்டதாகச்சொன்ன கப்பற்பாலம் பெருமூச்சு விடுகிற பாலமாகி விட்டது.

வி வி வி வி வி

**ருஷ்யர்களுக்கு ஏற்பட்டுள்ள சாமான் உதவி.** இந்த மஹா யுத்தத்தில் இனி வரும் பதினைந்து நாட்களில் முக்கிய சம்பவங்கள் நேரக்கூடுமென்று இவ்வாரத்திய முதல் வியாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. லெனின்கிராட் போர்முனையில் இருதரத்தாரும் சமமாகவே எதிர்த்து நிற்கின்றனர். ஆனால் ஜெர்மானியரின் கை கொஞ்சம் தூக்கி இருக்கிறதாகச் சொல்லலாம். தெற்கில் புடென்னியின் படைக்குத் கொஞ்சம் ஆபத்து இருப்பதாகவும் கருதப்படுகிறது. ஆனால் தற்போதைய விவரப்படி கிரிமியாவில் தன் சைனியங்களுக்கு உதவுவதற்காக புடென்னி எதிரியை பலமாக எதிர்க்கிறார். இப்படி அவர் செய்யாவிட்டால் தென்பாகத்தில் ருஷ்யர்களுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டுவிடும். (அவ்விதமே ஜெர்மானியருக்குத் தோல்வி ஏற்பட்டாலும் இதோடு மடிந்துவிடுவார்கள்!)

இதைப்பற்றி சில சரியான கணக்குகளைக் குறிப்பிடுகிறோம்.

டான் நதிவரையில் ருஷ்யப்படைகள் போகநேர்ந்தாலும் முக்கிய சாமான்கள் பின்கண்ட சதவிகிதத்தில் ருஷ்யர்களின் வசத்தில் தானிருக்கும். பெட்ரோல் 100, (பூராபாகம்) க்ரோம் 100, தாமிரம் 100, ஈயம் 100, துத்தநாகம் 100, மாங்கனீஸ் (100-க்கு) 65, எஃகு 55, சாமான்கள் செய்ய மின்சார உற்பத்தி 50, நிலக்கரி 39, இரும்புமண் 37, இரும்புப்பாளம் 35, மருந்துத் தொழிற்சாலை 35, அலுமினியம் 8.

வால்கா நதிவரையிலும் ருஷ்யர்கள்போக நேர்ந்தால் இச்சாமான்களில் கொஞ்சம் குறைவு ஏற்படலாம். பெட்ரோல் 85-க்கு குறையலாம். ஆகையால் டான் நதிவரையிலோ, வால்கா நதி வரையிலோ ஜெர்மானியர் போனால் ருஷ்ய லைனை கொஞ்சம் மட்டுப்படுமே தவிர விபரீதமாக ஏற்படாது. முன்சொன்ன ஆறு அம்சங்களில் குறைவு அதிகமாயும் அலுமினியத்தில் மிகவும் அதிகக் குறைவும் ஏற்படும். விமானங்களுக்கு அலுமினியம் அதிகத் தேவையானதால் நேச தேசங்கள் ருஷ்யாவிற்கு ஏராளமாக ஏற்கனவேயே அனுப்பிக் கொண்டிருக்கின்றன. யுத்தத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு நாட்டிற்கும் அவசியம் தேவையான எண்ணெயில் 100-க்கு 90 ருஷ்யர்கள் வசத்தில் காகஸஸ் பிரதேசங்களுக்கு அப்பால் இருக்கிறது. ஆகையால் இந்த யுத்தத்தின் கடைசிபாகம் இந்தப் பிரதேசத்தில்தான் நடக்கும். புடென்னி முயற்சி எடுத்துக்கொண்டு கீவ், கார்க்கவ், கிரிமியாவிலிருந்து வரும் ஜெர்மன் சைனியத்தை எதிர்ப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் தரைமார்க்கத்தினுல் மாத்திரம் இப்பிரதேசத்தை ஜெர்மானியர் பிடிக்க முடியாதென்று தெரிந்ததுதான். ருஷ்யர்களிடமிருந்து பிடுங்க நேரிட்டாலும் எண்ணெய்ப் பிரதேசங்களைப் பிடிப்பதென்றால் கருங்கடலில் ஆதிக்கம் பெறவேண்டும். இதனுல் ருஷியின் ஜீவாதாரமானநிலை பாதிக்கப்படும்!

வி வி வி வி வி

**கிரிமியா.** ஒடெஸ்ஸாவின் தற்காப்பு பலமாக இருக்கிறது. அது கப்பல் தளமில்லாததால் இதைப் பற்றி இருதிறத்தார்களும் அவசியமில்லாததால் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. ஜெர்மானியரின் பூரா நோக்கமெல்லாம் கிரிமியாவில் ஆதிக்கம் பெற்று



ருஷ்யக் கப்பற்படை தளமான ஸெபாஸ்டபூலைப் பிடித்துக்கொள்வதில்தான். அப்பொழுது நோவரோஸிஸ்க், பாட்டூம் என்ற இரண்டு இடங்களை மாத்திரம்தான் ருஷ்யர்கள் உபயோகிக்க முடியும். கிரிமியாவைப் பிடித்தால் பிறகு விமான மூலம் இவைகளைப் பிடித்துவிடலாமென்று எதிரி நினைக்கிறன்.

பெரிகாப் பூசந்தியில் ஒரு பெரும் சண்டை நிகழ்கிறது. ஜெர்மானியர் இதை பிடித்ததாகச் சொல்லுவதை ருஷ்யர்கள் மறுக்கின்றனர். இவ்விடத்தில் பலமாக ருஷ்யர்கள் காபந்து செய்தால் வேறு இரண்டு பாதைகள் ஜெர்மானியருக்கு இருக்கின்றன. அதாவது ரயில்பாதை ஒன்று, பூசந்தியைப் பிரிக்கும் குறுகிய கால்வாய் மற்றொன்று. இதில் பாலம் மூலம் கடக்கலாம். ஜெர்மானியர் பெரிகாப்புக்குக் கிழக்கிலுள்ள ஜெனிஸ்செக் வரையிலும், அஜொவ் கடலிலும் முன்னேறி இருக்கிறார்கள். அங்கிருந்து வேறு சில இடங்களுக்குப் போகப்பார்க்கலாம்.

ஆனால் கெர்ஸனில் புடென்னிப் படைகளினுல் குறுக்கு எதிர்ப்புகள் செய்கிறர். அதனுல் ஜெர்மானியரின் எண்ணம் மாறிவிடும். (இது நீபர் நதிக்கரையில் பூசந்தியின் மேற்கே 75 மைல் தூரத்தில் இருக்கிறது). ஆகையால் கிரிமியாவினுள் எதிரி முன்னேறுவது அவனுக்குச் சாதகமாகாது. பின்வாங்குவதும் சிரமமாகிவிடும். ஏனென்றல் அவன் பின்பாகம் புடென்னியால் கத்திரிக்கப்படும். இதைப்பற்றி ஜெர்மானியர் கவலைகொள்ளவேண்டியதுதான்.

வி வி வி வி வி

**ஜெர்மன் உள்நாட்டுச் செய்தி.** ஜெர்மன் மக்களுக்கு யுத்தத்தில் ஏற்பட்டிருக்கும் அலுப்பைப்பற்றி ஜெர்மனிக்குச் சாதகமான பத்திரிகைகள் கூட பிரஸ்தாபிக்கின்றன. ஸ்டாக்ஹோமில் உள்ள "ஆப்டன் பிளாடட்" என்ற பத்திரிகை "பெர்லினிலுள்ளோரின் அசிரத்தையையும், யுத்தத்திலுள்ள அலுப்பையும் பற்றி" சமீபத்தில் பிரஸ்தாபித்தது. சமாதானத்தில் ஓர் ஆசையும், பிரிடிஷ் விமானத் தாக்குதலில் பயமும் அங்கே உண்டாகியிருக்கிறது. ஹாம்பர்க்கிலுள்ள ஸ்திரீகள் கக்ஷியின் தலைவி இந்த யுத்தத்தைப்பற்றி குறைவாகக் கூறுகிற மாதர்களைத் தெரிந்துகொள்ள ஒரு பந்தயம் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது!

இருந்தாலும் ஜெர்மனியில் சீக்கிரம் கலகம் உண்டாகுமென்று நினைக்க வேண்டாம். ஏனென்றல் நாஸிகள் நினைக்கிறபடி ஜெர்மானியர் தைரியம் வாய்ந்த தெய்வப் பிறப்பில்லை. உலகத்தில் ஜெர்மானியர் சாதுவான அடங்கிய தன்மை உள்ளவர்கள். இவர்கள் ஜெர்மன் சைனியத்திற்கும், பிடிபட்ட தேசத்தார் பழிவாங்குவார்களோ என்றும் பயந்து தங்கள் தலைவர்கள் சொல்படி நடக்கின்றனர்.

ஆனால் ஜெர்மன் சைனியங்கள் முன்னேறுவதாக நம்பியிருக்கும் வரைதான் ஹிட்லருக்கு அடங்கி இருப்பார்கள். ஆனல் இந்த முன்னேற்றம் தடைபட்டு 'ஜயிக்க முடியாதது' என்று நினைக்கப்படும் சைனியங்கள் தோற்றுப் பின்வாங்கும் போதும் பிரிடிஷ் விமானகுண்டுகள் தாக்கும் போதும் தன் மனதில் படும். அப்போது யுத்த அலுப்போடு கலகமும் ஏற்படும்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—9—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| சைனிய வாசஸ்தலங்கள், ரயில்வே ஸ்டேஷன், வண்டிகள், முகாம்கள், ஆராய்ச்சி விளக்குகள், பீரங்கி நிலைகள்.—ட்ரிபோலி (Tripoli). | பெருந்தீக்கள் மூட்டப் பட்டன; வண்டிகள் சேதமாயின; பீரங்கிகள் அடக்கப் பட்டன. | | |
| கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi) துறைமுகத்தில். | ... | 4 விமானங்கள். | |
| கட்டடங்கள்.—பார்ஸி (Barce) ... | ... | | |
| போக்குவரத்து மோட்டார்கள்.—பெங்காஸி (Benghazi)யிலிருந்து டோக்ரா (Tocra) விற்கும் அங்கிருந்து பார்ஸி (Barce)க்கும் செல்லும் ரஸ்தாவில், | யந்திர பீரங்கிகளால் தாக்கப் பட்டன. | | |
| விமான நிலயம்.—காம்பூத் (Gambut). | ... | | |

**ஸிஸிலி (Sicily).**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| விமான நிலயம்—காமிஸோ (Comiso) | ... | ... | ... |

**ருஷ்ய விமானங்களால்.**
**கிழக்குப் போர்முனை.**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், ஜேர்மன் ஸ்தானங்கள்—யுத்த அரங்கம் பூராவும். | ... | 9 விமானங்கள். | 20 விமானங்கள். |

**1—10—41.** (புதன்கிழமை).

**ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| பகலில்.—விமான எதிர்ப்பும், காவல் புரிவதும்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ... | 2 பகல் பைடர் விமானங்கள். | 2 பைடர் விமானங்கள். |
| இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—ஸ்டட்கார்ட் (Stuttgart)டிலும் இன்னும் மேற்கு ஜெர்மனி (Germany)யில் ஏதோ ஒரு இடம். கப்பல் துறைகள்—கலே (Calais), புலாயின் (Boulogne), ஆஸ்டெண்டு (Ostend). | ... | 1 பாம்பர் விமானம். | 1 பைடர் விமானம்; ஆனால் அநேகம் சேதமாயின. |
| இரண்டு கப்பல்கள்:—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால். | இரண்டும் தாக்கப்பட்டன | ... | ... |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

*தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.*



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—10—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், காலாட் படை—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 8 விமானங்கள். | 16 விமானங்கள். |

**2—10—41.** (வியாழக்கிழமை).

**ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel)லும், வட பிரான்ஸி (France)லும். | ... | 3 பைடர் விமானங்கள். | 6 பைடர் விமானங்கள். |
| விரோதியின் படகு—டங்கர்க் (Dunkirk)குக்கப்பால். | ... | | |
| இரண்டு யந்திரப் படகுகள்—நார்வே (Norway) கடற்கரைக்கப்பால். | ... | | |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| துறைமுகம் கப்பல்கள்—பெங்காஸி (Benghazi). | ... | | |
| மோட்டார் போக்குவரத்துகள்—டோக்ரா (Tocra)விலிருந்து, பார்ஸி (Barce) வரையில், எல் கஸாலா (El Gazala) விலும். | ... | | |
| போக்குவரத்து மோட்டார்கள், கிட்டங்கிகள்—பார்டியா (Bardia). | யந்திரப் பீரங்கிகளால் தாக்கப்பட்டன. | 4 விமானங்கள். | அநேக விமானங்கள் சேதமாயின. |
| ஒரு சிறு துறைமுகம்—டொப்ருக் (Tobruck), பார்டியா (Bardia) ரஸ்தாவில். | ... | | |
| விமானச் சண்டைகள்—ஸிடிபராணி (Sidi Barrani) பிரதேசத்தில். | அநேக விமானங்கள் சேதமாயின. | | |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| லக்ஷியங்கள் | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம் | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம் | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 19 விமானங்கள். | 51 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோத விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**3—10—41.** (வெள்ளிக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோத விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| இரவில்.—கப்பல் துறைகள்—டங்கர்க் (Dunkirk), ராட்டர்டாம் (Rotter-dam), ஆண்ட்வர்ப் (Antwerp), ப்ரெஸ்ட் (Brest). | தீக்கள் கிளம்பின. | ... | 1 விமானம். |
| விரோதி விமான நிலயங்கள்—டென் மார்க் (Denmark) கிலுள்ள ஆல் போர்க் (Aalborg). | சேத மாயின. | | |
| விமான நிலயம்-வடபிரான்ஸ்(France). | ... | | |

இதாலி (Italy).

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோத விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| முக்கிய ரயில்வே ஜங்ஷனும், போர் சாமான்கள் செய்யும் தொழிற்சாலை யும்-மரினடி காடன்ஸாரோ (Marinadi Catanzaro). | ஜங்ஷனில் இருந்த ரயில் வண்டித் தொடரும் பீரங்கி குண்டுகளால் தாக்கப்பட்டது; தீக்கள் கிளம்பின. | ... | ... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோத விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| கப்பல், துறைமுகம்.— பெங்காஸி (Benghazi). | ... | ... | 1 விமானம். |
| ராணுவ லக்ஷியங்கள்— பார்டியா (Bardia) துறைமுகத்தில். | ... | | |
| விரோதியின் முகாம்-ஸொலும் (Sollum)க்கருகில். | ... | | |
| வேவு பார்க்கும் விமானங்கள்—விரோதி பிரதேசத்தில். | ... | | |

ருஷ்ய விமானங்களால்.
கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோத விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| காலாட்படை, பான்ஸர் துருப்புகள், விமானச் சண்டைகள்—யுத்த அரங் கம் முழுவதிலும். | ... | 18 விமானங் கள். | 41 விமா னங்கள். |

**4—10—41.** (சனிக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.
தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஸிஸிலி (Sicily).

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோத விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விரோதி விமான நிலயங்கள், கடல் விமான தளங்கள்-மார்ஸாலா (Mar-sala), கடேனியா (Catania), ஜெர் பினி (Gerbini). | ... | ... | ... |
| வியாபார ஸ்தலம்.—லிகடா (Licata). | ... | ... | ... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோத விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| துறைமுகம், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**4—10—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்ய விமானங்களால்.
கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயத்தி லிருக்கும் விமானம், விரோதி சைனிய மும், அதன் ஸ்தானங்களும்—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 25 விமானங் கள் | 63 விமா னங்கள். |

**5—10—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.
அன்று பகலிலும், இரவிலும் நடந்த யுத்த சமாசாரத்திற்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஸிஸிலி (Sicily).

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமான நிலயங்கள்.-மார்ஸாலா (Mar-sala) கடேனியா (Catania), ஜெர் பினி (Gerbini). | விரோதி விமானங்கள் சேதமாயின. | ... | ... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| கப்பல்கள், துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | கப்பல்கள் தாக்கப்பட்டன. | ... | ... |
| விமான நிலயம், விமானமிறங்குமிடம்.— பார்ஸி (Barce). | சேதமாயின. | ... | ... |
| பழுதுபார்க்கும் கடைகள், மின்சார உற் பத்தி சாலைகள்.—பார்ஸி (Barce). | தீ மூட்டப் பட்டது. | ... | ... |
| போக்குவரத்து மோட்டார் வண்டிகள் பழுதுபார்க்குமிடங்கள், யுத்த தள வாடங்கள் சேமிக்குமிடங்கள்.—பார் டியா (Bardia). | ... | ... | ... |
| | | ... | ... |
| விமானச் சண்டை.—ஸிடிபரானி (Sidi Barrani) பிரதேசத்தில். | ... | ... | 1 விமானம்; இன்னும் அநேகம் சேதம். |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| பலமாக காவல் புரியப்பட்ட விரோதி துணைக்கப்பல்.— மத்தியதரைக்கடலில் (Mediterranean). | 2 கப்பல் மூழ் கடிக்கப்பட் டன; 1 கப்பல் சேதமாயிற்று. | ... | ... |

ருஷ்ய விமானங்களால்.
கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங் களிலுள்ள விமானங்கள், விரோதி ஸாதனங்கள்.—யுத்த அரங்கம் முழு வதிலும். | ... | 27 விமானங்கள். | 42 விமானங் கள். |

பாரேண்ட்ஸ் (Barents) கடல்.

| லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விரோதிக் கப்பல்.—பாரெண்ட்ஸ் (Barents) கடலில். | மூழ்கடிக்கப் பட்டது. | ... | ... |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—9—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | சமுத்திரக்கரைப் பிரதேசம்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | சொற்ப உயிர் சேதம்; கொஞ்ச சேதம். | 1 விமானம். | நஷ்டம் இல்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ... | ... | ... |
| **1—10—41.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்குமங்கும் சில இடங்கள்—கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு இங்கிலாந்து (England). | கொஞ்சம் சேதம்; சொற்ப உயிர் சேதம். | நஷ்டமில்லை. | நஷ்டம் இல்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ... | ... | ... |
| **2—10—41.** (வியாழக்கிழமை) | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.-சமுத்திரக்கரைப் பிரதேசங்கள்—வடகிழக்கு, இங்கிலாந்து (England), தென்கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | கொஞ்சம் சேதம்; சொற்ப உயிர்ச் சேதம். | 3 பாம்பர் விமானங்கள். | நஷ்டம் இல்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ... | 1 விமானம். | ... |
| **3—10—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்து (England), ஸ்காத்லாந்து (Scotland), இவைகளின் கிழக்கு ஜில்லாக்கள். | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—10—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ... | 3 விமானங்கள் | ... |
| **4—10—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—பிரதேசம்—இங்கிலாந்தின் (England) கிழக்குக்கரையில். | சொற்பச் சேதம்; ஒருவருக்கு காயம். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ... | 2 விமானங்கள். | ... |
| **5—10—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் (England) கிழக்கு, தெற்கு, மேற்கு பாகங்கள். | சேதமில்லை. | 1 விமானம். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ... | 2 விமானங்கள். | ... |
| **6—10—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—ஹம்பர் (Humber) பிரதேசத்தில். | ... | 1 விமானம். | ... |
| | **எகிப்து (Egypt)** | | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம் | சொற்பச்சேதம். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow), லெனின்கிராட் (Leningrad). | ... | ... | ... |

## ஜெர்மனி பேரில் சென்ற மூன்று மாதங்களாக பிரிடிஷ் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகளுக்கு விவரம்.

1941-ம் வருஷம் ஜூலைமீ 14-ம்உ முதல் செப்டம்பர்மீ 15உ வரை.
மூன்றாவது ஸ்தானத்திற்கு பேர்லின், கீல்.

| பட்டணங்கள். | மொத்த எதிர்ப்புகள். | மிகவும் பலமானவை. | பலமானவை. |
|---|---|---|---|
| கொலோன் (Cologne) | 24 | 5 | 16 |
| ப்ரெமன் (Bremen) | 16 | 3 | 10 |
| பெர்லின் (Berlin) | 14 | 4 | 9 |
| கீல் (Kiel) | 14 | 2 | 11 |
| பிராங்க்பர்ட் (Frankfurt) | 11 | 5 | 6 |
| மான்ஹீம் (Mannheim) | 11 | 5 | 5 |
| டஸ்ஸல்டார்ப் (Dusseldorf) | 13 | 0 | 11 |
| டூஸ்பர்க் (Duisberg) | 10 | 3 | 6 |
| மன்ஸ்டர் (Munster) | 7 | 3 | 3 |
| ஹனோவர் (Hanover) | 9 | 0 | 8 |
| ஹாம்பர்க் (Hamburg) | 6 | 3 | 2 |
| எம்டன் (Emden) | 8 | 1 | 1 |
| ஆகென் (Aachen) | 5 | 1 | 3 |
| எஸ்ஸன் (Essen) | 4 | 4 | 0 |
| வில்ஹெல்ம்ஸ்ஹேவன் (Wilhelmshaven) | 7 | 0 | 2 |
| ஆஸ்னபுருக் (Osnabruck) | 4 | 1 | 2 |
| ஓல்டன்பர்க் (Oldenburg) | 3 | 0 | 2 |
| கார்ல்ஸ்ருஹி (Karlsruhe) | 3 | 1 | 2 |
| மாக்டிபர்க் (Magdeburg) | 3 | 0 | 3 |
| பீல்பெல்ட் (Bielfeld) | 3 | 0 | 2 |
| டார்ட்மண்டு (Dortmund) | 2 | 1 | 1 |
| ஸ்டெடின் (Stettin) | 2 | 0 | 2 |
| ப்ரெமர்ஹாவன் (Bremerhaven) | 3 | 0 | 1 |
| ஹாம் (Hamm) | 2 | 0 | 2 |
| க்ரிபெல்டு (Krefeld) | 2 | 0 | 2 |
| முன்சென் கிளாட்பாக் (Munchen Gladbach) | 2 | 0 | 2 |
| ரெயிடிட் (Rheydt) | 2 | 0 | 1 |
| ஹுல்ஸ் (Huls) | 1 | 1 | 0 |
| காஸெல் (Kassel) | 1 | 1 | 0 |
| விகிஸாக் (Veigesack) | 1 | 0 | 1 |
| ப்ரன்ஸ்விக் (Brunswick) | 1 | 0 | 1 |
| லூனு (Luuna) | 1 | 0 | 1 |
| ஸில்ட் (Sylt) | 1 | 0 | 1 |
| ரைன் (Rheine) | 1 | 0 | 1 |
| கக்ஸ்ஹேவன் (Cuxhaven) | 1 | 0 | 0 |
| ஹாலி (Halle) | 1 | 0 | 0 |
| ரோஸ்டக் (Rostock) | 1 | 0 | 0 |
| ... | 200 | 44 | 120 |



## ருஷ்ய சீதோஷ்ண நிலையின் குறிப்புகள்.

**மோர்மான்ஸ்க்.**—ஆகஸ்டு மாதக் கடாசியிலிருந்து செப்டம்பர் மாதக் கடாசி வரை மழை. அக்டோபர் ஆரம்பத்திலிருந்து மே'மாதம் நடுப்பாதி வரை, உறை பனி காலம். இச்சமயத்தில் சீதோஷ்ண நிலை ஸெண்டிகிரேடு உஷ்ணமானியில் பூஜ்யத்திற்குக் கீழ் 15 முதல் 40 டிகிரி வரை மாறுபாடு அடையும்.

**லெனின்கிராட்.**—அக்டோபர் மாதம் பூராவும் நல்ல மழை. நவம்பர் ஆரம்ப முதல் உரைபனி காலம். பகலில் சீதோஷ்ணப் பரிமாணம் 17 (ஸெண்டிகிரேடு) டிகிரிக்கு மேலில்லை.

**மாஸ்கோ.**—அங்கு அக்டோபர் மாதத்தில் மழை. நவம்பர் மாத ஆரம்ப முதல் உரைபனி காலம். சீதோஷ்ணப் பரிமாணம் பூஜ்யத்திற்கு கீழ் 35 (ஸெண்டிகிரேடு) டிகிரி வரை. இருக்கும். மாஸ்கோவிலிருந்து கார்க்கோ வரையிலுள்ள பிரதேசத்திலும் இதே நிலைமை தான்.

**ரோஸ்டோவ்-ஆன்-டான்.**—அங்கு ஜனவரிக்கு முந்தி உண்மையில் மாரிகாலம் ஆரம்பிக்கிறதில்லை. அதற்குப் பிறகு மூன்று மாதங்கள் இருக்கும். முக்கிய ரஸ்தாக்களில் யந்திரப் போக்குவரத்து செல்லக்கூடும்.

## முஸோலினியின் துக்ககரமான நிலைமை.

இப்பொழுது முஸோலினிக்கு இருக்கும் முகவாட்டமும் கீழ் பார்வையும் எப்போதும் இருந்ததில்லை. ஆறு வருஷங்களில், 1935 முதல் 1941-வரை இதாலியின் செலவு திட்டத்தை இருபதினாயிரம் லக்ஷம் லியரிலிருந்து 280 ஆயிரம் லக்ஷத்திற்கு அதிகரிக்கும்படி அவன் துணிகரச் செய்கையால் ஏற்படுத்தி விட்டான். அதற்காக 1940-ம் வருஷத்தில் இந்தியாவைப்போல் அவ்வளவு பெரிய விஸ்தீர்ணமுள்ள கிழக்கு ஆபிரிக்கா சாம்ராஜ்ஜியம் கிடைத்ததாகக் காட்டவேண்டியிருந்தது. 1941-ம் வருஷத்தில் எரிட்ரியா, ஸோமாலிலாந்து, அபிஸீனியா ஆகிய தேசங்கள் அவனிடமிருந்து கைப்பற்றப்பட்டன. லிபியாவும் பிடுங்கப்படும் என்று பயப்படுகிறான். மேற்குப் பாலைவனத்தில் தனக்கு ஜெர்மன் உதவி வேண்டுமென்று ஹிட்லரைக் கேட்டதாயும், கிழக்குப் போர்முனைக்கு அதைக் காட்டிலும் அவசரத் தேவைக்கு 5 லக்ஷம் இதாலிய வீரர்களை அனுப்பும்படி ஹிட்லர் பதிலளித்திருப்பதாயும் சில பிரஸ்தாபங்களிலிருந்து வெளியாகிறது.

வட ஆபிரிக்காவில் மாரிகால படையெடுப்பு சமீபித்திருக்கிறது. இருந்த போதிலும் தளகர்த்தர் ரோமெல் என்பவரால் பூரா திட்டத்துடன் எதிப்பைத் தாக்க முடியவில்லை. அதற்குக் காரணம் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடியது தான். அல்லும், பகலும் பிரிடிஷ் நீர்மூழ்கிகள், கப்பற்படை பாதுகாப்பு விமானங்கள், பிரிடிஷ் விமானப்படை, பாம்பர்கள், பைடர்கள் இவைகள் ரோமெலுக்கு வரும் ஸப்ளைகளை சுக்குத் தூளாக்கி வருகின்றன. ட்ரிப்போலிக்கு வந்து கொண்டிருந்த இரண்டு காலாட்படை கொண்ட பூராப் பகுதிகளையும் ஏற்றிக்கொண்டு வந்த இதாலியக் கப்பல்களில் மூன்றில் இரண்டு பங்கை சமீபத்தில் நடந்த ஒரே தாக்குதலில் பிரிடிஷ் நீர்மூழ்கிகள் அழித்துவிட்டன. சமீபத்தில் இரண்டு வார காலத்தில் நீர்மூழ்கிக் கப்பல்கள் சாமான்கள் ஏற்றிச்சென்ற லக்ஷம் டன் நிறையுள்ள எதிரிக் கப்பல்களையும், தளகர்த்தர் ரோமெலின் ஜெர்மானிய, ஆபிரிக்க வீரர்களும், இதாலிய வீரர்களும், அடங்கிய படைக்கு உதவியாகக் கொண்டுவரப்பட்ட படைகளையும் மூழ்கடித்தன.

இத்தகைய பிரிடிஷ் விமானத் தாக்குதல்களுடன் வெடிமருந்து உற்பத்தி சாலைகளிலும், இதாலி, ஸிஸிலி இவைகளிலுள்ள துறைமுகங்களையும், இதாலிக்கும், ஸிஸிலிக்கும் வந்து போய்க்கொண்டிருக்கும் கப்பல், இருப்புப்பாதை

போக்குவரத்தையும், இதாலிய சமுத்திரத்தில் வேவுபார்க்கவும், சாமான் கப்பல்களுக்குத் துணைபுரியவும் விமானங்கள் தங்கியிருக்கும் விமான தளங்களையும், ஆகாய விமான நிலயங்களையும் திட்டம்போட்டுத் தாக்கிவருவதினால் முஸோலினியின் கப்பல்கள் அழிந்து பெருமூச்சு விடும்படியாய்விட்டது. 16-மாதங்களுக்கு முன் முஸோலினி செய்துகொண்ட முடிவிற்கு அவன் துக்கப்படவேண்டியது தான்.

---

## "அட்லாண்டிக் வாராவதியை" ஹிட்லர் உடைத்துவிடுவதாக பயமுறுத்துகிறார்.

## மூன்றாம் தடவை யூ-படகுச் சண்டை ஆரம்பிக்குமா?

(H. C. பெர்ராபி சமீபத்தில் பி. பி. ஸி-யில் பேசியது).

கனடா பிரதம மந்திரி மிஸ்டர் மெக்கென்ஸி கிங் கப்பல் சம்பந்தமான ஓர் ரகசியத்தை சமீபத்தில் வெளியிட்டார். இது ஜெர்மன் கப்பல் இலாகா அதிகாரிகளுக்கு வெகுநாட்களுக்கு முன் தெரிந்ததுதான். பழைய உலகமான ஐரோப்பிய நாடுகளிலிருந்து புது உலகமான அமெரிக்காவுக்கு அட்லாண்டிக் கடலில் கடந்து செல்ல ஓர் பாலம் அமைக்கப்பட்டிருப்பதைத்தான் அவர் சொன்னார். இது ஸ்காட்லாந்திலிருந்து ஐஸ்லாந்திற்கும், அங்கிருந்து கிரீன்லாந்திற்கும், நியூபவுண்டுலாந்து சென்று பிறகு ஹாலிபாக்ஸ், போஸ்டன், நியூ யார்க் வரை செல்லுகிறது.

இதன் வழியாகத்தான் வட அட்லாண்டிக்கில் பிரகிருதம் துணைபுரியும் கப்பல்கள் செல்லுகின்றன. மற்ற வழிகள் இருந்தாலும், சமயத்திற்கேற்றவாறு யூ-படகுகள் எதிர்க்கும் முறைகளுக்குத் தக்கபடி இதர மார்க்கங்களும் பின்பற்றப்படும்.

இப்பாலமாகிற தற்காப்பு வழி ஏற்பட்டிருப்பதால் தெற்கேயுள்ளதும், முன்னுள்ளதுமான மார்க்கங்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆக்கிரமித்த பிரான்ஸிலிருந்து வெகுதூரம் கடக்கூடிய பாம்பர்களின் தளங்களுக்கு எட்டி இருக்கிறது. ஆகையால் இங்கே எதிர்த்தொந்தரவு இல்லை. இப்பாலத்திற்கு நான்கு கண்கள். ஒவ்வொன்றும் 600, 700 மைல்கள் நீளமுள்ளது.

12-நாட் துணைக்கப்பல் ஒரு கண் இடைவழியை 2½ தினங்களில் கடந்து செல்லும். ஒவ்வொரு கண் வழியிலும் விமானத் தற்காப்பும், கப்பல் உதவியும் இருக்கின்றன. ஆனால் மாரிகாலத்தில் புயல் ஏற்படும் சமயத்தில் மாத்திரம் இருக்காது. ஐந்து வருஷத்திற்குமுன் கீழே விழக்கூடிய விமானங்களெல்லாம் இப்பொழுது எவ்விதமான புயல்காற்றுகளிலும் செல்லும் தன்மை கொண்டு இருக்கின்றன.

இதன் வழியாக பத்திரமாக சாமான்கள் கொண்டுபோக முடிகிறது. வட அமெரிக்காவில் சில தினங்களுக்குமுன் பகிரங்கமாக இவ்விதம் சொல்லப்பட்டது. அதாவது அமெரிக்கக் காவல் ஏற்பட்டதுமுதல் அட்லாண்டிக்கின் மேற்குபாகத்தில் வியாபாரக் கப்பல்கள் எதுவும் ஹாலிபாக்ஸுக்கும் ஐஸ்லாந்துக்கும் இறுதியில் சேதமாகவில்லையாம்.

மிஸ்டர் சர்ச்சில் வரும்போது 80, 90 கப்பல்கள், கீழ்பாகத்தில் ஐஸ்லாந்திலிருந்து இங்கிலாந்து துறைமுகங்களுக்கு கெடுதியடையாமல் வந்தது நமக்குத் தெரியும். ஆகையால் இம்மார்க்கம் பூரா ஆபத்தில்லை என்பது தெரிகிறது. இதற்கெல்லாம் காரணமென்னவென்றால் நாம் சரியாக முயற்சி எடுத்து காவல்புரிவதுதான்; "அமெரிக்கர் காவல் புரியும் பிரதேசத்தில் ஹிட்லர் யூ-படகுகளை நேரே யுத்தம் செய்யாமல் மறைத்து எவ்வளவு காலம் வைத்துக்கொள்வார்?" என்று அடிக்கடி கேட்கப்படுகிறது.



முதலில் சில எதிரி எதிர்ப்புகள் ஏற்பட்டன. இப்பொழுது அட்லாண்டிக் யுத்தத்தில் மூன்றாம் தடவை எதிரியின் பலமான எதிர்ப்பு ஏற்படுமென்று எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே இரண்டு தடவையும் யூ-படகுச் சண்டைகளில் ஸ்வதந்திர நாடுகளுடைய கப்பற்படைகள் வெற்றியடைந்திருக்கின்றன. இந்தத் தடவை முன் சொன்ன பாலத்தின் மேற்குப்பாகத்தில் இச்சண்டை ஏற்பட்டால் அமெரிக்காவிற்குச் சமீபத்தில் சில தொந்தரவுகள் ஏற்படலாம்.

அப்பொழுது அமெரிக்கக் காவல் கப்பல்கள் தவறாமல் யுத்தம் செய்யும். ஆகையால் இந்தத் தடவை வட அமெரிக்காவில் வசிப்பவர்கள் யுத்தத்தில் ஈடுபடுவதோடு, பலவந்தமாக ஆக்கிரமிக்கும் நாடுகளை எதிர்த்துப் போராட கப்பற்படை அவசியமென்றும் அறிந்துகொள்வார்கள்.

---

# அமெரிக்கா தேசத்தின் உத்தேசங்களைப்பற்றி பிரக்கியாதிபெற்ற பத்திராதிபரின் அபிப்பிராயங்கள்.

---

## யுனைடெட் ஸ்டேட்ஸ் இந்த "யுத்தத்தில்" கலந்து கொள்ளுமா?

## தரைப்போரை நடத்த அமெரிக்கரின் ஆக்ஷேபனை.

## எவ்வளவு தூரம் யுத்தத்திற்கு உதவிசெய்ய அமெரிக்கர் சம்மதித்திருக்கிறார்.

சமுத்திரத்திற்கப்பாலும், அமெரிக்காவிலும், மூன்றுமாத காலம்வரை இருந்துவிட்டு "ரெயினால்ட்ஸ் பத்திரிகையில்" மிஸ்டர் எச். என். ப்ரெயில்ஸ் போர்டு, ஸெப்டம்பர், 7-ம் தேதியில் அடியில் கண்டவிதமாய் எழுதுகிறார்.

இப்பொழுது யுனைடெட் ஸ்டேட்ஸ் "யுத்தத்தில் கலந்து கொள்ளுமா?" என்றும், எப்பொழுது "கலந்துகொள்ளும்" என்றும் என்னைப் பலவாறான கேள்விகளைக் கேட்கிறார்கள்.

நான் நியூயார்க்கில் இறங்கினபொழுது இந்த இரண்டு வருஷ யுத்தகாலத்தில் நமது வாழ்க்கை எவ்வளவு அசாதாரணமாகி விட்டதென்று எனக்கு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதுபோல எப்பொழுதும் எனக்குத் தோன்றவில்லை. யுத்தத்தைப் பற்றியே சிந்தனையன்னியில் கோடைகாலத்திற்கேற்ற அழகிய ஆடைகள் கட்டுவதும், விடுமுறை நாட்களைக் கழிக்க உல்லாசப் பிரயாணங்களும், உன்னத நாகரிகமுள்ள மோட்டார் வண்டிகளில் ஏறிச்செல்வதும் ஆகிய இதைப்போலொத்த நோக்கங்களைக் கொண்டிருந்தனர். ஒரு பாகத்தில் வேலைநிறுத்தத்தின் மும்முரமும், மற்றொருபுறத்தில் சட்டசபை உபதேர்தல்களின் ஆரவாரமும் ஒன்று சேர்ந்ததின் பயனாக அமெரிக்கா ஏன் சண்டையில் இறங்கவேண்டும்?

காலப் செய்த கணக்குப்படி 100 அமெரிக்கர்களில் ஜனாதிபதி தன் வரம்பைக் கடந்துவிட்டார் என்று அபிப்பிராயப்படும் தனிப்பட்ட கக்ஷியில் 23 பேரும், இன்னும் ஜாஸ்தி நடந்துகொள்ளவில்லையே என்ற எண்ணத்துடன் யுத்தத்தில் சேரவேண்டுமென்ற கொள்கைகொண்ட கக்ஷியினர் 22 பேரும், தலைவர் செய்தது தான்சரி என்று எண்ணுகிற பொதுமக்களில் 55 பேருமாக கக்ஷிப்பிளவு ஏற்பட்டிருப்பதும், உண்மையிலேயே ஒவ்வொரு அமெரிக்கனும் இம்மாதிரி மூன்றுவித

அபிப்பிராயம் கொண்டிருப்பதாயும் நான் எளிதில் கண்டுகொண்டேன். சாதாரண அமெரிக்கன் நாஸிகளை வெறுக்கிறான்; ஆனால் நம்முடைய விடாமுயற்சியைக் கண்டு அவன் மெச்சுகிறான். எவ்வளவு தாராளமான பொருள் உதவியையும் அவன் ஆதரிப்பான். ஜனாதிபதி உத்தரவு கொடுக்கும் ஆகாயத்திலும், கடலிலும் எத்தகைய நடவடிக்கைக்கும் அவன் சம்மதிப்பான்.

சாதாரணமாக ஒரு அமெரிக்கனை பெட்ரோலைச் சிக்கனமாக உபயோகப் படுத்தவோ, புதிய மோட்டார்களை உற்பத்திசெய்வதைக் குறைக்கவோ, சமானியத்தில் சம்மதிக்கச் செய்வது துர்லபம். எல்லாவற்றையும்விட அதாவது தரைச் சண்டையில கலந்துகொள்ளச்செய்வது மிகவும் துர்லபம். அதிழ் சண்டையை நினைத்தால் அவன் உடம்பிலுள்ள ஒவ்வொரு தசையும் துடிக்கும். ஐரோப்பாவுக்கு படையெடுத்துச் செல்வதென்றால் அவன் கல்லாய்ச் சமைந்துவிடுவான். ஜெர்மன் நகரங்களின்மேல் வெடிகுண்டுபோட்டும், ஜெர்மனிக்குப் பொருள்கள் அனுப்பாமல் பொருளாதார முற்றுகை மூலம் ஜெர்மனியின் மென்னியை எளிதில் பிடித்துவிடலாம் என்று விவாதித்து சால்ஜாப்பு சொல்லுகிறான். அந்த நோக்கம் (என் அபிப்பிராயத்தில் முற்றிலும் தவறானது) நமது சாமர்த்திய முள்ள நெருங்கிய சிநேகிதர்களிடமும் இருக்கிறது. இவர்களில் பெரும்பான்மையோர் சண்டையை ஆரம்பித்ததாகச் சொல்வதைக்கூட மறுதளிக்கிறார்கள்.

ஹிட்லர் ருஷ்யாவில் படையெடுத்த ஜூன் மாதத்தில் திடுக்கிடச் செய்யும் நாள்வரை இந்த நிலைமை இருந்து வந்தது. சாதாரண மனிதனிடம் அதன் பெயரானது அவனுக்குத் தளர்ச்சி உண்டாக்கியும், பயத்தைக் குறைத்தும் மன நிம்மதியையும உண்டாக்கியது. போர்ச்சுகலைத் தாக்கி டாக்கரை வியாபிக்க முயற்சிக்காமல் எதிரி கிழக்குப்பக்கத்தில் திரும்பிவிட்டான். புதிய உலகத்திற்கு அபாயம் முற்றிலும் மறையாமல் போனால் சமீபத்தில் நேராமலும் நம்ப முடியாமலும் இருக்கிறது. அமெரிக்க நிபுணர்கள் ருஷ்யப்படையை ரொம்பவும் குறைவாக மதித்தார்கள். ஆனால் இந்த பைத்தியக்கார முயற்சியிலிருந்து ஜெர்மானியர்கள் பலவீனப்பட்டும், களைத்தும் போவார்கள், என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஜூன்மாதம் 22-ம் தேதி ராத்திரி அகாலத்திற்குமேல் அமெரிக்கா யுத்தத்தில் சேருவதைக் காலவரையன்றியில் ஒத்திவைக்கப்பட்டது; அதிலிருந்து பெரிய தியாகத்தின் அவசியம் நீங்கிவிட்டது.

ஒதுங்கி நிற்கும் கக்ஷியார் வேறு விஷயங்களைப்பற்றி யோஜித்தார்கள். நமது நிலைக்காட்டிலும் அமெரிக்காவுக்கு ருஷ்ய ஐக்கியத்தின் பேரில் விரோதம் கொடியதாகவும் பொதுப்படையாகவும் இருந்தது. இப்படி விரோதம் இருந்த போதிலும் ரொக்கத்திற்கு முழு முழுக்காமல் ருஷ்யாவிற்கு ஸப்ளை செய்ய பொதுஜன அபிப்பிராயம் இணங்கிற்று. அதற்கு நாம் அமெரிக்காவின் மனத்தைக் கவரும்படி ஒலிபரப்பில் பேசின மிஸ்டர் சர்ச்சிலுக்கு வந்தனம் செய்யவேண்டும்.

எப்பொழுது அமெரிக்கா போர் துவக்கும்? அமெரிக்கக் காங்கிரஸ்தான் அதைச்செய்யக்கூடும், அம்மாதிரி காங்கிரஸ் செய்வது எவ்வளவு அரிதென்பதை இதை வாசிப்பவர்கள் கண்டுகொள்ளலாம்.

முடிவாக மனமில்லாத இந்த ஜனநாயகத்தைச் சண்டையில் சேரும்படி செய்ய சம்பவங்கள் நடக்குமா? ஹிட்லர் அதைச்செய்யமாட்டான். எவ்வளவு கோபம் உண்டானாலும் அவன் ஜாக்கிரதையாய் இருப்பது நமக்குத் தெரிந்தது தான். அமெரிக்கா போரில் இறங்குவது நமக்கு நலத்தைக் கொடுக்காதென்ற யுக்தி வாதங்களுக்கு இது நல்ல பதில். ஒருநாள் ஸ்பெயினிலும், போர்ச்சுகலிலும், அவன் பிரவேசித்த அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள அவைகளின் தீவுகளைக் கைப்பற்ற முயன்று அமெரிக்காவைப் போருக்கிழுக்கலாம், ஆனால் ருஷ்யப் படையெடுப்பில் அகப்பட்டுக் கொண்டிருக்கும்வரை ஹிட்லர் ரூஸ்வெல்ட்டை போருக்கிழுப்பாரென்பது அசம்பாவிதம்.



ஜப்பானிலிருந்து இந்த மாதிரி நடக்கும்படியான சம்பவம் உண்டாகலாம். வீண் ஆர்ப்பாட்டம் செய்தபோதிலும் ஜப்பான், அமெரிக்கச் சப்பற்படையை போருக்கிழுக்காது என்பது என்னுடைய தோற்றம்.

இறுதியில் அமெரிக்கா "சண்டையில் இறங்காது", ஜனாதிபதியும் அதைச் சண்டையில் இறங்கும்படி செய்யமாட்டார். சம்பவங்கள் உண்டாகி அதைச் சண்டையில் இறங்கும்படி செய்யலாம். ஆனால் மிகுந்த கோபம் வரும்வரை ஐரோப்பா கண்டத்திலுள்ள தரைச்சண்டையில் அது சேராது என்பது திண்ணம்.

---

## பெல்ஜியத்தின் எதிர்ப்பு.

## பெல்ஜிய ஜனங்களுக்கு லியோபால்டு அரசனின் தலைமை.

## நாஸித் தலைவனைக் குறித்து சிறைபட்ட அரசனின் அபிப்பிராயம்.

[சென்ற வருஷம் வஸந்தகாலத்தில் லியோபால்டு அரசன் எதிரிவசமான சமயத்தில் அவர் செய்கைகளைக் குறித்து அவசரமான அபிப்பிராயம் கொள்ளவேண்டாமென்று மிஸ்டர் சர்ச்சிலும், ஸர் ரோஜர் கீஸ்ஸும் தெரிவித்தனர். தகவல் பூரா கிடைக்கவில்லை என்பதுதான் காரணம். அச்சமயம் அவ்வரசன் செய்ததுதான சரி என்று எமிலிகாம்மர்ட்ஸ் என்பவர் காரிய காரணங்களுடன் எடுத்துக்கூறியிருக்கிறார். அதுமுதல் லியோபால்டு அரசனின் செய்கைகளை விவரிக்கும் இவ்வியாஸமும் சில விவரங்களைக் கொடுக்கிறது.—பத்திராதிபர்.]

(டைம்ஸ் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

பெல்ஜியத்தில் சமீபத்தில் நடந்த சம்பவங்களிலிருந்து, லியோபால்டு அரசன் எதிரி சொல்படி நடக்காமல் யுத்தக் கைதியாக ஆனது சரிதான் என்று தெரியவருகிறது. பெல்ஜியத்திலும் ஐரோப்பாவிலும் "புது திட்டத்தை" ஸ்தாபிக்க ஹிட்லர் முயற்சித்ததை ஒப்புக்கொள்ளாமல் தீவிரமாக அவர் நின்றது, ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் உள்பட யாவருக்கும் தெரியும். தாத்காலிக சில நன்மைகளையும், மேன்மைகளையும் செய்வதாக விரோதி ஆசைகாட்டிச் சமாதானம் செய்யப் பார்ப்பதை எதிர்த்துப் பிரதிதினம் போராடும் ஜனங்களுக்கு அவர் ஒரு திருஷ்டாந்தமாக இருக்கிறார்.

ஜெர்மானியர் அவ்வரசனை முதலில் இவ்விதம் ஏமாற்றப் பார்த்தனர். அதாவது தன் நாட்டைப் "பூரா பெல்ஜியர்களடங்கிய" மந்திரி சபையை வைத்துக்கொண்டு அரசு புரியலாமென்றனர். ஆனால் அச் சபையில் நாஸிகளுக்கு இணங்கும் ரெக்ஸிஸ்டு, பிளமிங்கண்டு என்ற கக்ஷியினர் தான் இருப்பார்களாம்.

பிரசித்தியடைந்த ரெக்ஸிஸ்டு தலைவனான டிக்ரேல் என்பவன் ஜெயிலில் லியோபால்டு அரசனை சந்தித்ததாகப் பிரஸ்ஸல்ஸில் வதந்தி இருக்கிறது. அங்கே டிக்ரேல் அரசாங்க முறையைப்பற்றிச் சொல்லும்போது அரசன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாராம். இணங்க முடியாத சில நிபந்தனைகளை இவன் சொன்னதால் நடுவில் அரசன் எழுதுவதை நிறுத்திவிட்டு "நீர் சொல்லு வதை இனி நான் கேட்கமாட்டேன்" என்று சொல்லி எழுந்து விட்டாராம். அரசியல் முறையை உணர்ந்த டிக்ரேல் அரசருக்கு கோபம் வந்துவிட்டதென்று தெரிந்து சென்றுவிட்டான். இக்கதையின் நடப்பு சந்தேகமானாலும் இது எங்கும் பரவி நம்பப்படுகிறது.

ஆகையால் டிக்ரேலின் செல்வாக்கு குறைந்துவிட்டது. பிரமாத ஆடம்பரத்துடன் ரெக்ஸிஸ்டு கக்ஷிக் கூட்டம் நடைபெறும் சமயத்தில் லாயலிஸ்டிக் கக்ஷிக்காரர்களும் கூட்டம் கூடினார்கள். அச்சமயத்தில் டிக்ரேல் வீடு திரும்பும்போது பலமாகத் தாக்கப்பட்டார். லே பேய் ரீல் (நம்முடைய உண்மை தேசம்) என்ற பத்திரிகையின் பிரசுரம் குறைந்துவிட்டது. பிளமிஷ் தீவிர வாதிகள் தங்கள் கூட்டங்களில் ஜெர்மானியரை அனுமதித்ததால் மதிப்பை இழந்தனர். பொதுவாக பெல்ஜியரின் மனப்பான்மை விரோதிகளுக்குக் கொஞ்சமும் தயவு காட்டாமல் மரியாதைக் குறைவாகவும் இருந்துவருகிறது.

---

## மத்தியக் கிழக்கில் நேசதேசத்தார்களின் 1,500-மைல் நீள முள்ள போர்முனை.

## 5 தரைப்படையும், 4 கப்பற்படையும் அடங்கியிருக்கின்றன.

## பிரிடிஷ், இந்தியா, ஆஸ்திரேலியா, ருஷ்யா சைனியங்கள்.

## ரஸ்தா, இருப்புப்பாதை போக்குவரத்துக்கள்.

ஆலன் மூர்ஹெட் என்பவரால் (கெய்ரோவிலிருந்து டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு தந்தி மூலம் செய்தி:—)

ஐந்து நாட்களாக மத்தியக்கிழக்கில் உள்ள புதிய பிரிடிஷ் போர்முனையில் நெடுகிலும் சிரமத்துடன் பிரயாணம் செய்துவந்தேன். இரானில் டெஹ்ரான், இராக்கில் பாக்தாத், ஸிரியாவில் டெமாஸ்கஸ், பாலெஸ்டைனில் ஜெருஸலம், எகிப்தில் கெய்ரோ இவைகள் மூலமாய்த்தான் சென்றேன்.

லண்டனிலிருந்து இஸ்தான்புல் வரையிலும் சுமார் 1,500-மைல் தூரமுள்ளது. ஆனால் இந்த ஐந்து தேசங்களின் விஸ்தீர்ணம் மட்டில் பெரிய ஜெர்மனியைக் காட்டிலும் அதிக விஸ்தீர்ணமுள்ளது.

ஒவ்வொரு ரஸ்தாவிலும் பிரிடிஷ் நேசதேசத் துருப்புகள் சென்றுகொண்டிருந்தன. ஒவ்வொரு நகரத்திலும் பாதுகாப்புக்குக் துருப்புகள் கோட்டைக்குள் வைக்கப்பட்டிருந்தன. பிரிடிஷ் விமானங்கள் ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தன.

நாலு கடல்களைப் பார்த்தேன். மூன்று பக்கங்களில் மத்தியதரைக்கடல். செங்கடல், இந்து மஹா சமுத்திரம். இவைகளில் பிரிடிஷ் கப்பற்படை, இந்தியக் கப்பற்படை, ஆஸ்திரேலியக் கப்பற்படை இவைகளைச் சேர்ந்த நாசகாரிகளும், மற்ற கப்பல்களும் சேர்ந்து அமுல் செலுத்திக்கொண்டும், நேசதேச வியாபாரக் கப்பல்களுக்கும், அமெரிக்க வியாபாரக் கப்பல்களுக்கும் பாதுகாப்பு அளித்து, அந்தந்தத் துறைமுகங்களுக்கு அவைகளைக் கொண்டுபோய்ச் சேர்த்துக்கொண்டிருந்தன. காஸ்பியன் கடலில் பழமையான, நம்முடையதைக் காட்டிலும் பெரிய தான ருஷ்யக் கப்பற்படை நாசகாரிகள் ஆஸ்திராபாளிலிருந்து பந்தர்ஷா வரையிலும் அமுல் செலுத்திவந்தன.

கால்வாய்ப் பிரதேசத்திலும், ஹைபாவிலும், தவிர வேறு எந்த இடத்திலும் அச்சுநாடுகள் வெடிகுண்டு போட்டோ அல்லது நம்முடைய பெருந்த முஸ்திப்பைத் தடுக்கவோ இல்லை. இவ்வளவு தூரத்திலும் பிரிடிஷ் யுத்த ஆயுதங்கள் அமெரிக்க டாங்கிகளும், மோட்டார் வண்டிகளும், இந்தியத் துணிகளும், ஆஸ்திரேலிய உணவுப்பொருள்களும் ரஸ்தாக்கள் வழியாக சாரிசாரியாகச் சென்று கொண்டிருந்தன. ஒன்று, இரண்டு மாதங்களுக்கு முன் இந்த ரஸ்தாக்களில் போக்குவரத்தில்லாமலோ, எதிர்பக்கத்திலிருந்து எதிரிகளின் பொருள்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றன.



ஒவ்வொரு தேசத்திலும் அமெரிக்க விமானங்கள் இருந்தன. இரான், இராக ஸிரியா மூலம் சென்றபோது இன்னும் அநேகம் வந்துகொண்டிருந்தன. காஸ்பியன் கடலைச் சுற்றித் தங்கியிருந்த ருஷ்யப்படைகளுக்கு அமெரிக்க பிரிடிஷ் ஸப்ளைகள் முதல்முதலில் அனுப்பியவை வழியில் வந்துகொண்டிருந்தன.

ஸிரியாவில் ஆயிரக்கணக்கான ரோடுவேலை செய்கிறவர்களைக் கடந்து சென்றேன். ஒரு ஆயிர மைல் நீளமுள்ள பாலைவனப்பிரதேசத்தில் புதிய இருப்புப் பாதைகள் போடப்பட்டு, நாளுக்கு நாள் அதிகரித்திருக்கிறது.

வடக்கு முகமாக ருஷ்யாவிற்கு ஸப்ளைப் பாதைகள் போய்ச்சேருகின்றன. பர்ஸியா குடாக்கடலிலிருந்து பர்ஸியா தேசத்துத் தரிசுகள் வழியாக காஸ்பியன் கடலுக்கு நாலு ரஸ்தாக்களும், ஒரு இருப்புப்பாதையும் ஏற்பட்டிருக்கிறது. பண்டர்-ஷாபூர் தெற்குத் துறைமுகமாகவும், ரயில் ஆரம்ப இடமாகவும் இருக்கிறது.

சிக்கிரத்தில் பர்ஸியாக் குடாக்கடலிலிருந்து மாஸ்கோவுக்கு ரயில் மார்க்கம் போகக்கூடும். பாஸ்ராவிலிருந்து பாக்தாத் வழியாக மோஸுலில் எண்ணெய்க் கிணறுகளுக்கும், துருக்கிக்கும் இருப்புப் பாதையும், ரஸ்தாவும் ஏற்பட்டிருக்கிறது. பிறகு ஸிரியாவுக்குப் போகும் அலப்போ வழியாக துருக்கிக்கு கடலிலிருந்தும் தரையிலிருந்தும், கால்வாயிலிருந்தும் வரும் பொருள்களைக் கொண்டு செல்ல ஒரு இருப்புப்பாதையும், இரண்டு ரஸ்தாக்களும் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள பாதைகள் இரண்டு தேசங்களையும் ஒன்றாய்ப் பிணைக்கின்றன.

இப்பொழுது மூன்று இருப்புப்பாதைகளும் ஒரு டஜன் ரஸ்தாக்களும் வடக்கே போகின்றன. மாரிகாலத்தில் மூன்று அல்லது நாலு ரஸ்தாக்கள் தான் கடந்து செல்ல முடியாமல் போய்விடும். அடிக்கடி ஸப்ளைத் துணைவண்டிகள் பாலைவனத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன.

பாக்தாத்திலிருந்து டெமாஸ்காஸுக்கு இராக்காலத்தில் காற்றுவர சாதகம் ஏற்படுத்தியிருக்கும் மோட்டாரில் நான் பிரயாணம் செய்தபொழுது விழித்துப் பார்க்கையில் நாற்பது பெரிய இந்திய லாரிகள் இருட்டிலிருந்து திடீரென்று வெளிவந்து துருக்கி எல்லைப்புற திசையை நோக்கி பாலைவனத்தில் குறுக்கே பாய்ந்து மறைந்தன. திசைக்கருவியை வைத்துக்கொண்டு அவை இராக்காலங்களில் பூராவும் பிரயாணம் செய்கின்றன.

இருட்டில் ஆகாய மார்க்கம் போக்குவரத்து இருந்ததையும் கேட்டோம். ஐந்து படைகளைச் சந்தித்தேன். இரானில் பாலைவனத்திலுள்ள அருவிகள் பக்கம் சீக்கியர்கள், கூர்க்கர்கள், மராட்டியர்கள் முகாம் செய்திருப்பதைப் பார்த்துச் சென்றேன். பார்வைக்கு இந்தியச் சைனியம் அங்குள்ளவைகளைவிட அதிக சுறுசுறுப்பாகவும் ஆயிரக்கணக்கான அமெரிக்க மோட்டார்களால் எளிதில் ஏற்றிச் செல்லப்பட்டவையாயும் தோன்றிற்று. ருஷ்யர்கள் நல்ல பலசாலிகளாகவும நன்றாய் உடுப்பு அணியாமலும், ஆனால் நல்ல முஸ்தீப்புடனும் இருந்தார்கள். ஆனால் பிரிடிஷ் சைனியத்தைக் காட்டிலும் அவர்களின் யுத்தக் கோட்பாடு மிகவும் கடினமாயிருந்தது.

நம்மைக் காட்டிலும் அவர்களிடம் நிபுணர்கள் அதிகம். அவர்களில் அநேகருக்கு யுத்தம் ஆரம்பிக்குமுன் பத்து வருஷப் பயிற்சி இருந்தது. ஆனால் அதில் இரண்டு வருஷத்திற்குக் குறைவான பயிற்சியுள்ளவர்கள் இல்லை.

“ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டும் கிறிஸ்துவர்கள் போல ஜெர்மானியர்கள் ஜனாதிபதியிடம் நடந்துகொள்ளுகிறார்கள்.

(யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, செப்டம்பர் 14).

“உதவி என்று சொல்லி பிரிடன் கழுத்தை நெறிக்க இது ஒரு நல்லவழி. ரூஸ்வெல்டு கழுத்தை முறிக்கக் கொஞ்சம் கொஞ்சமாக உதவி செய்வதாக பாவனை செய்கிறான்.......அவன் கொள்ளையடித்ததை இழக்கவில்லை.”

(தென் அமெரிக்காவில் ஜெர்மன் ஒலிபரப்பு, செப்டம்பர் 13).

ரோமம்—

“யுனைடெட் ஸ்டேட்ஸில் மிகுந்த அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு ஒரு சந்தர்ப்பத்தில் கோபமுண்டாகி பெரிய முடிவிற்கு வரும்படி தூண்டியிருப்பதை நிதானிக்கவோ, முன் நோக்கவோ அச்சுநாடு அதிகாரிகளினால் முடியவில்லை.”

(செப்டம்பர், 12-ல் ஸீனர் அன்ஸால்டோ ஒலிபரப்பில் பேசியது).

“பிரிடிஷ் அயல்நாட்டு வியாபார ஸ்தலங்களைக் கைப்பற்றவேண்டுமென்று அமெரிக்க வியாபாரிகள் வேண்டுமென்றே யுத்தத்தை நீடிக்கச் செய்கிறார்கள்.”

(ஆங்கிலத்தில் ஜெர்மன் ஒலிபரப்பு, செப்டம்பர் 16).

“வெகு வருஷங்களாக அவர் தாக்குதலில் கலந்துகொண்டிருப்பது போல ரூஸ்வெல்டுப் பேச்சிலிருந்து முடிவாக ரூபிக்கப்பட்டிருக்கிறது.”

(ஜெர்மன் பாஷையில், ஜெர்மன் ஒலிபரப்பு, செப்டம்பர் 14).

“சந்தேகப்படாத ஜனங்களை ஏமாற்றின இவர் பேச்சைப்போல, எப்பொழுதுமே கிடையாது”.

(யுனைடெட் ஸ்டேட்ஸில் ஜெர்மன் ஒலிபரப்பு, செப்டம்பர் 13)

“வெடி மருந்து பீப்பாய்க்குத் தீப்பொறி வைக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டு தயார்.”

(ஆப்டன் பிளேடட் பத்திரிகை நிருபர் சொன்னதை ஜெர்மன் ரேடியோ அறிவித்தது, ஜூலை 1941).

## நாம் கவனியாமல் இருந்தால்......

“ஜெர்மன் சமாசார அறிவிப்பின் கொள்கை முதன்மையாகவும் போர்ப் படைகளுக்கு மட்டும் தான் உபயோகப்படுகிறது.”

(அமெரிக்காவுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, செப்டம்பர் 16).

---



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 65—(2-வது பிரிவு).

| 1941— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 11, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 12, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் | ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| | 13, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| | 14, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | | காலை | 10.15 |
| | | பெருமாநாடு | ... | மாலை | 6.00 |
| | | புல்வயல் | ... | ,, | 6.30 |
| | 15, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் | ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | | ,, | 10.15 |
| | | திருமயம் | ... | மாலை | 6.00 |
| | | கோனாபட்டு | ... | ,, | 6.30 |
| | 16, வியாழக்கிழமை .. | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| | 17, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் | ... | ,, | 6.00 |
| | | விராலிமலை | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 66—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 21, செவ்வாய்க்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | ராசியமங்கலம் | ... | ,, | 6.30 |
| 22, புதன்கிழமை ... | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 6.00 |
| | ராயவரம் | ... | ,, | 6.30 |
| 23, வியாழக்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | | காலை | 10.00 |
| | காலேஜ் (B) தமிழ் | ... | ,, | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | | ,, | 10.15 |
| | கோட்டைக்காடு | ... | மாலை | 6.00 |
| | காரம்பக்குடி | ... | ,, | 6.30 |
| 24, வெள்ளிக்கிழமை... | அன்னவாசல் | ... | ,, | 6.00 |
| | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |

இருந்தாலும் அவர்களுக்கு எதிர்செல்ல வண்டிகள் தேவை. அதற்காக இரானிலுள்ள ஒவ்வொரு லாரியையும் வயல் மார்க்கம் செல்லும் வண்டிகளையும் அவர்கள் பலவந்தமாகப் பிடிக்கவேண்டியிருந்தது. இந்த மாதத்திலிருந்து அவர்களுக்கு வண்டிகளும், பீரங்கிகளும் கிடைக்கும்.

ஸிரியாவிலும், பாலெஸ்டைனிலும் இரண்டு மாதம் இளைப்பாறின பிறகு ஆஸ்திரேலியர்கள் முறுக்காக இருக்கிறார்கள்.

கால்வாய் வழியாக இரண்டு வருஷகாலமாக பீரங்கிகள் போடப்பட்டு இப்பொழுது அவை மறைவாக வைக்கப்பட்டிருக்கின்றன. இரானிலிருந்து எகிப்து வரையிலும் எங்கே பார்த்தாலும் பிரிடிஷ் சைனியத்தின் பகுதிகள் இருந்தன. நைல் பிரதேசத்திலுள்ள தளகர்த்தர் ஆச்சின் லேக்கின் சைனியத்தையும், டைகிரீஸ், யுபரெடீஸ் பிரதேசத்திலுள்ள ஜெனரல் வேவல் சைனியத்தையும் இவை ஒன்று சேர்க்கின்றன. இது திருப்திகரமான விஷயம்.

---

# அச்சு நாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

## ஸெப்டம்பர் 22—29, 1941.

### ஹிட்லரும் ருஷ்யாவும்.

“பூகோள அமைப்புப்படி ருஷ்யா இருக்குமிடத்திற்கு நேசதேசத்தார்கள் உதவி அனுப்பவே முடியாது.”
(ஆங்கிலத்தில் ஜெர்மன் பேச்சு, ஸெப்டம்பர் 23).

“பிரிடனுவது யுனைடெட் ஸ்டேட்ஸாவது திரும்பி ஸப்ளை செய்ய முடியாதபடி அவ்வளவு ஆகாய விமானங்களையும், பீரங்கிகளையும், டாங்கிகளையும் ருஷ்யர்கள் இழந்துவிட்டார்கள்”.
(ஆங்கிலத்தில் ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர் 22).

ருஷ்யர்களுக்குத் தேவையான பொருள்களில் மூன்றில் ஒரு பங்கு (அது கொஞ்சமென்று யாரால் நினைக்க முடியும்) ஏற்கனவே பிரிடன் அவர்களுக்கு ஸப்ளை செய்துவிட்டது.

இன்னும் அதிகம் வழியில் வந்து கொண்டிருக்கிறது. ருஷ்யாவிற்கு அமெரிக்கா 10,00,00,000 டாலர்கள் கடன் கொடுத்திருக்கிறது. இரண்டு அமெரிக்க எண்ணெய்க் கப்பல்கள் ருஷ்யாவிற்குச் சேர்ந்துவிட்டன. இன்னும் ஒன்பது வழியில் வந்து கொண்டிருக்கின்றன. பிரிடனுக்காகச் செய்யப்பட்ட அநேக அமெரிக்கப் பைடர் விமானங்கள் பிரிடன் சம்மதத்தின் பேரில் ருஷ்யாவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ருஷ்யாவிலுள்ள பிரிடிஷ் விமானப்படைப்பகுதி யுத்தத்தில் பேர் வாங்கியிருக்கிறது. மூன்று தேச மகாநாடு ருஷ்யாவிற்கு அதிக உதவிசெய்ய திட்டம்போட்டு வருகிறது.



“பிரிடிஷ், ருஷ்ய மல்லர்கள் உண்மையில் ஜெர்மனிக்கு எவ்வளவு (இறந்தவர் 84,354, மொத்தச் சேதம் 4,02,000). இந்த ஐரோப்பிய படையெடுப்பில் நஷ்டம் நேர்ந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்”.
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் சமாசாரம், ஸெப்டம்பர் 22).

1,500 மைல் நீளமுள்ள போர்முனையில் சுமாராக 90 நாட்களுக்கு, ஒரு நாளைக்கு ஒரு மைலுக்கு ஒரு ஜெர்மன் விதம் கணக்காகிறது. ருஷ்யர்களின் சேதத்தை 99,00,000 என்று அவர்கள் மதிப்பதைப் பார்க்க ருஷ்யச் சைனியம் பூராவும் அழிக்கப்பட்டு திரும்பவும் உண்டாகியிருப்பதுபோல் காணப்படுகிறது.

### ஜெர்மன் துயரமும் ஆசையும்.

“இரானில் இங்கிலீஷ்காரர்களின் ஆக்கிரமத்தினால் உலகம் பூராவும் துயரத்தில் ஆழ்த்தப்பட்டிருக்கிறது.”
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் சமாசாரம், ஸெப்டம்பர் 24).

இரான் ஜனங்கள் நேசதேசப் படையை உடனே வரவேற்றி அவர்களுடன் ஒத்துழைத்தார்கள். முந்தின ஷாவினால் சேகரிக்கப்பட்ட இரானியப் படை கொஞ்சம்கூட எதிர்க்க இஷ்டப்படவில்லை. முக்கியமான அராபிய சாமாசாரப் பத்திரிகை ஸவுத் அல்ஹக் தலையங்கத்தில் எழுதியது. “சர்வாதிகாரிகளின் ஆசை உலகத்தார்களுக்கு எதிரே நேரில், தாக்கத்தூண்டியிருக்கிறது........ இரானில் நடந்தது எல்லா ஜனநாயகங்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அது இரானுக்கும் சாதகம். இரானியர்களும் அவர்கள் விருப்பத்தைப்பெறுவார்கள்”.

“பருத்தி அதிக உற்பத்தியின் காரணமாக தெருக்களில் குமிக்கப்பட்டிருப்பதாக அலெக்ஸாண்டிரியாவில் வரும் செய்திகளிலிருந்து வெளியாகிறது......அவை பருத்திக் குப்பையாக இருக்கின்றன. எகிப்து பருத்தியை வாங்குவதாக பிரிடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யவில்லை.”
(அராபியிலும், பார்ஸியிலும் ஜெர்மன் சமாசாரம், ஸெப்டம்பர் 25).

பார்லிமெண்டில் பிரிடிஷ் பருத்தி வாங்கும் சபை பருத்தியும், பருத்தி விதையும் 1941-ம் வருஷம் ஜூன் மாதம் வரை 2,50,00,000 பவுனுக்கு வாங்கியிருப்பதாக மாயின் பிரபு சொன்னார். 1941-ல் பாதி மகசூலை வாங்க பிரிடிஷ் அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

பிந்திய நடவடிக்கையில் வாதிக்குக் கிடைக்கும் லாபத்தில் பாதி உற்பத்திக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் குத்தகைக் கடன் சட்டப்படி இங்கிலாந்திற்குத் தேவையான பருத்தியை அமெரிக்காவிலிருந்து கிடைக்கக்கூடியதென்பதை ஞாபகத்தில் வைத்தால் பிரிடனின் பரோபகாரத்தின் தன்மை தெரியும்,

### அச்சு நாடுகளின் பிரதிகாரம்.

அலக்ஷிய புத்தி—

“முடிந்த வரையில் பிரிடனுக்கு ஏற்கனவே ஜனாதிபதி உதவி செய்து வருகிறார். யுனைடெட் ஸ்டேட்ஸும் நேரில் வந்து சண்டையிட்டாலும், சண்டையிடாமல் போனாலும் யுத்தமுறையில் ஒரு வித்தியாசமும் ஏற்படாது.

(ரோமிலிருந்து ஆங்கில ஒலிபரப்பு, ஸெப்டம்பர் 12).

இருக்கிறது. ஆனால் இப்பொழுதுள்ள சந்தர்ப்பங்களினால் இக்கொள்கையை மாற்ற வேண்டியதாகயிருக்கிறது. பிரிடன்பேரில் ஆகாயவிமானத் தாக்குதல்கள் பலமாக நடந்துவருகிறதென்று கோயபல்ஸ் அறிவித்து வருவதற்கு முக்கியமான பயனில்லாமல் போகவில்லை. கிழக்குப்பக்கத்தில் பெரிய தாக்குதல்கள் நடத்திக்கொண்டு இருக்கும்பொழுது பிரிடிஷ் தீவுகளின்பேரில் வெடிகுண்டுகளை வர்ஷிக்க ஜெர்மனிக்குச் சாத்தியமாக இருக்கிறதென்ற உணர்ச்சியை உண்டாக்க அவருக்கிருக்கும் ஆவலுக்கும், ஜெர்மனியில் உள்நாட்டு ஜனங்களின் நிலைமைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கவேண்டும்.

பிரிட்டிஷ் விமானப்படையின் தாக்குதலின் கொடுமை அதிகரிக்க, அதிகரிக்க இவ்விதமான பொய் நம்பிக்கைகளை உண்டாகவேண்டிய அவசியம் அதிகரித்திருக்கிறது.

வெடிகுண்டு போடுவதினால் பொதுமக்களுக்கு ஏற்படும் குறைவான உணர்ச்சிகளைக் குறித்து வடக்கு, மேற்கு ஜெர்மனியிலிருந்து பிரஸ்தாபம் வரவில்லை. ஆகாய விமானத்தாக்குதல்கள் பயமாகத்தான் கருதப்படுகிறது. அதனால் அதிக ஏற்படக்கூடிய பயம் ஆரம்பிக்கிறது. அடிக்கடி அவர்கள் முணுமுணுப்பது கேட்கப்படுகிறது. இந்தப் புகார்கள் அந்த தேசத்தாரின் குணத்தை ஒத்ததாய் இருந்தாலும் ஜெர்மானியர்கள் எப்பொழுதும் முணுமுணுக்கிறவர்கள்தான். விமான தாக்குதல் பயத்துக்கு ஒரு புதிய காரணமென்பது நன்றாகத் தெரிகிறது.

இதெல்லாம் இருந்தாலும் இந்த அசௌகரியங்களை யெல்லாம் சமாளித்துக்கொள்ளும். புதிய தேசங்களைக் கைப்பற்றுவதாலும், ராணுவ வெற்றிகளாலும், மனமுறிந்த சத்ருக்களுக்கு ஹிட்லர் புத்துயிர் கொடுக்கலாம். கொஞ்சகாலத்திற்காகவாவது கிழக்கில் ஏற்படும் வெற்றிகளைப் பிரசாரம்செய்து அபாயத்தைத் தடுக்கலாம். ஆனால் சைனியம் ஊருக்குத் திரும்பிவரும்பொழுது அவை சொல்லும் கதைதான் பயங்கரமாய் இருக்கும். ஜெர்மானியர்களிடம் பிரஜை வழங்கும் இந்த அரசாங்கத்திற்கு சில கடுமையான பாடங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. ருஷ்யப் போர்முனையிலிருந்து திரும்பிவரும் வீரர்கள் முற்றிலும் மாறுதலடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கொஞ்சகாலமானபிற்பாடு அவர்களுக்கு நேர்ந்ததை அவர்கள் மறந்துவிடுவர். பிரசாரத்தினாலும், ராணுவ வெற்றியினாலும் அவர்கள் கவனம் மாற்றப்படும்.

அவர்கள் நம்பிக்கையை திரும்பிப்பெறுவது ஜெர்மன் பிரசாரத்தின் சக்தியைப் பொறுத்ததில்லை. ருஷ்யர்கள் நீண்டகாலம் எதிர்த்து நிற்பதையும் நாம் அதற்கு உதவுவதையும், நம்முடைய தனிப்பட்ட ராணுவ நடவடிக்கையும் பொறுத்திருக்கும். இதில் ஒரு தவறுமிருக்காது. ஜெர்மன் உள்நாட்டு பொது மக்களிடம் ஏற்படும் சிறிய மனப்பான்மை மாறுதல்கள்மட்டும், உண்மையான விரோதத்தை உண்டாக்கமாட்டாது.

---

## வாரயுத்தச் செய்திகள்.

9—10—41-லிருந்து 15—10—41-வரை.

**மாஸ்கோ யுத்தம்** ஒரு மும்மர நிலையை அடைந்திருக்கிறது. மாஸ்கோவிற்கு 60-மைல் தூரத்திலுள்ள மொஜெயிஸ்க் என்ற இடத்திலும், 1812-ல் நெபோலியன் சண்டை செய்த பொரோடினோ என்ற இடத்திலும் ஜெர்மானியர் சண்டையை நடத்தி பட்டணத்திற்குப் போகும் மார்க்கங்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

மாக்ஷிமை தங்கிய ராஜ சக்கிரவர்த்தி அவர்கள்

# இச்சமயம்

ராணுவத்திற்கும், ஸாப்பர்ஸ் மைனர்ஸ்களுக்கும்,
சமாசாரம் அறிவிப்பு அளிக்கும், யந்திர
வண்டிகளை ஓட்டுவதற்கும் மனிதர்கள்
தேவைப்படுகிறார்கள் என்று

## புதுக்கோட்டை ஸமஸ்தானவாஸிகள்

அறிந்துவருகிறார்களா ?

இவைகளுக்குத் தேவையான யோக்கியதாம்சங்கள் :—

குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம்.

குறைந்த இடைமானம் 110 பவுண்டு.

குறைந்த சம்பளம் மாதம் ஒன்றுக்கு 16 ரூபாயும் இனமாக உணவும் உடுப்புகளும் அளிக்கப் படும்.

பின்னும் மற்ற விபரங்கள் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய படை சேமிப்பு உத்தியோகஸ்தரான
ராவ் பஹதூர் R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களிடம்
தெரிந்துகொள்ளலாம்.

## உற்சாகமுள்ள புதுக்கோட்டை
## மக்களுக்கு
## மகத்தான ஒரு சேவையில் ஈடுபட
# இதுவேதான் நல்ல தருணம்.

பொருள் ஈட்ட வேலைகளிலும் அமரலாம்.

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—12-10-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம்௵ அக்டோபர்௴ 18உ [ந. 66.

பிரஸங்கம் LXVI.

## ஜெர்மானியர்களின் மனப்பான்மை.

## அதிருப்தியின் வெளித்தோற்றம்.

## டாக்டர் கோயபல்ஸின் நடவடிக்கைகள் எதை ரூபிக்கின்றன ?

"மான்செஸ்டர் கார்டியனில்" அரசியல் நிருபர் எழுதியது.

தற்சமயம் உள்நாட்டு ஜனங்களின் மனப்பான்மையை அபிவிருத்தி செய்வதற்காக ஜெர்மன் பிரசாரத்தை அதிகரிக்கச்செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ருஷ்யப் போரிலிருந்தும் இன்னும் இதர காரணங்களினாலும் இந்த அவசியம் ஏற்பட்டிருக்கலாம். ருஷ்யாவுடன் ஹிட்லர் போர் துவக்கியது அநேக ஜெர்மானியர்களுக்குச் சமாதானமேயில்லை. ஏனென்றால் அவர்கள் எப்பொழுதும், ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்துடன் சிநேகபாவத்துடனேயே இருந்து வந்திருக்கிறார்கள். கிழக்கு பாகத்தில் ஏற்பட்ட பயமுறுத்தலைக்கண்டு முதல் முதலில் சற்றுத் திகைப்படைந்தார்கள். இத்திகைப்புடன் ருஷ்யாவில் இப்பொழுது அடைந்துவரும் வெற்றிகள் யுத்தத்தை முடிவுசெய்துவிடாது என்ற உணர்ச்சியும் சேர்ந்துவிட்டது.

கை கால் ஒடிவதும், உயிர்போவதும் வரவர அதிகரித்துவருவதுடன் ஒவ்வொரு நாளும் யுத்தம் நீடிப்பதினால் அதிகப் பிரயாசையும் இன்னும் தியாகமும் வேண்டுமென்று தெரியவருவது பொதுஜன மனப்பான்மையைக் குறைத்து வருகிறது.

ஹிட்லரால் சாமர்த்தியமாக அடையப்பட்ட தேசிய ஒற்றுமை முதல் முறையாக சிறிதளவில் குலைக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய லக்ஷியங்களில் வரிசையாக ஒவ்வொன்றிலும் தன் ஜனங்களின் மனதைத் திருப்பியும், தான் குறிப்பிட்ட

கிலந்திப்பூச்சிபோல் லெனின்கிராட், கலினின், வியாஸ்மா, பிரயான்ஸ்க், ஓரெல் பக்கங்களிலிருந்து நாலாபக்கங்களிலும் எதிரி நெளம்பியிருக்கிறான். கலினினைப் பிடித்து மாஸ்கோவைச் சூழ்ந்து, கிழக்குப் பக்கம் தாக்க உத்தேசம். ஆனால் பின் பந்தோபஸ்து பலமாக வைத்துக்கொண்டு கடைசிவரை சண்டை செய்யும்படி மாஸ்கோவில் உள்ளவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக நிலை முத்திவந்தாலும் மோசமாக இல்லை. குண்டுகளால் தாக்கப்பட்டு, பலாத்காரம் செய்யப்பட்டாலும், ருஷ்யச் சேனை முறிபடவில்லை. புதிய சேனை வந்து கொண்டிருக்கிறது. லாவக்ஸி சொல்லும் விதமாக ஜெர்மானியருக்கு விமான ஆதிக்கம் ஏற்படவில்லை. மேலும் பிரான்ஸில் பீடேன், லவால் இருந்து எதிரியிடம் சரண் அடைந்தமாதிரி ருஷ்யாவில் ஒருவரும் செய்யமாட்டார்கள். ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு ருஷ்யச் சேனை பின்னே போக நேர்ந்தாலும் மாஸ்கோ விழுந்தாலும் ருஷ்யர்கள் எதிர்ப்பு கலைபடாமல் கடைசிவரை யுத்தம் செய்வார்கள். 'சோவியத் ருஷ்யா ராணுவ முறையில் ஜயிக்கப்பட்டதென்றும்,' 50 முதல் 70 சைனியப் பிரிவுகளுடன் டிமோஷென்கோ சூழப்பட்டதாயும், ஒடிஸாவை நீடத்தில் அடைத்துவிட்டதாயும், புடன்னிபாடு 'தீர்ந்து விட்டதென்றும் ஜெர்மன் பிரசாரத்தலைவன் (அக்டோபர் 9-ல்) சொன்னதெல்லாம் 'வீண் தற்புகழ்ச்சி'தான்.

மற்ற இடங்களில் உணர்ச்சி குன்றாமல் யுத்தம் நடக்கிறது. மாரியோ போலைப்பிடித்து அங்கிருந்து எதிரி டாம்பஸ், டகன்ராக் என்ற இடங்கள் வழியாக ரோஸ்டவ்வைச் சேர முயலுகிறான். இவனுக்குத் தடைகள் பலமாக இருக்கின்றன. ஒடெஸா காலிசெய்யப்படுவதாக வதந்தி. லெனின்கிராட்டில் ருஷ்யர்கள்தான் எதிரியை எதிர்த்துவருகின்றனர்.

**படையெடுப்புக் கூச்சல்.**—மாஸ்கோ நிலை முன் சொன்னவிதமாக இருக்கும் தருணத்தில் தற்காப்புப்படையை அனுப்பி ருஷ்ய முயற்சியை பிரிடன் வெறுவாக்கக்கூடாதா என்றெல்லாம் விவாதிக்கப்படுகிறது. உதாரணமாக பிரிடிஷ் கம்யூனிஸ்டு கக்ஷியார், ஜெர்மனியின் மேற்கே படையெடுக்க பிரிடனுக்கு சமயம் வந்துவிட்டதாகச் சொல்லுகின்றனர். 'பிரிடனின் கௌரவத்திற்கு ஹானிவந்து விட்டதால் இவ்விதம் மறு போர்முனையை ஏற்படுத்தும்படி சொல்லப்படுகிறது. இத்துடன் சில பிரிடிஷ் பத்திரிகைகளும் 'ஹிட்லர் உங்கள் நேசதேசங்களை ஒன்றன்பின் ஒன்றாய் பிடித்தும்பொழுது வீணே பார்த்துக்கொண்டிருந்தால், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவது சிரம சாத்தியமாகும்' என்று சேர்ந்து சொல்லுகின்றன. ஆனால் அப்ஸர்வர் பத்திரிகை பிரசுர கர்த்தாவான ஜெ. எல். கார்வின் பின்வருமாறு நினைக்கிறார். இதுவே மெஜாரிடி அபிப்பிராயமாகும். 'ஏற்கனவே எண்ணிக்கை குறைந்திருக்கும் பிரிடிஷ் சைனியத்தினால் ஹிட்லர் பிடித்த நாடுகளைப் பிடிக்கமுடியுமென்று நினைப்பது வீண் எண்ணம்' என்றார். இதைத்தான் 'கடைசியான எதிர்ப்பு' என்று டெயிலி மெயில் சொல்லிற்று. 'ஸ்யானுபவமில்லாதவர்களின் ஆத்திரப்பேச்சு' என்று டெயிலி டெலிகிராப் பத்திரிகை எழுதியது:—

'ஆபிரிக்காவிலுள்ள இதாலிய நாடுகளை வெற்றிகரமாக சரியான சமயத்தில் தாக்கிய பிரிடிஷ்காரர்கள் மற்ற இடங்களிலும் தாக்கமுடியும். ஆனால் இதைத் தீர்மானிப்பதற்கு யுத்தத்தை மேற்பார்க்கிறவர்களுக்குத்தான் தெரியும். மேலும் பக்குவமான நிலை வந்தால்தான் அவ்விதம் செய்யமுடியும். ஆகையால் 'வெறும் பேச்சுப்பேசி, ஆபத்தான நிலைகளில் மாட்டிக்கொள்ளுவதைக் காட்டிலும் அதிகம் சாமான்கள் செய்ய பிரயாசை எடுத்துக்கொள்வதுதான் ருஷ்ய நிலைக்கு உதவுவதாகும்.'



**ஸப்ளைகள்.**—கடும் பிரயாசைதான் தேவை, லார்டு பீவர்புருக் சொல்லும் விதமாக எல்லா வாரங்களிலும், டாங்கிகள், விமானங்கள், பீரங்கிகள் செய்து ருஷ்யாவுக்கு அனுப்பவேண்டும். 'மாஸ்கோவிற்கு நேசதேசங்கள் வாய்வார்த்தை சொல்லிவிட்டு வருவதற்காகப் போகவில்லை. ஆனால் சிரமப்படும் ஜனங்களுக்கு உதவிசெய்யும் நோக்கத்துடன்தான் சென்றனர்' என்று மிஸ்டர் அவெரல் ஹாரிமனும் சொல்லியிருக்கிறார். சந்தர்ப்பம் வாய்க்கும் விதமாக இவ்வுதவி செய்யப்பட்டுவருகிறது. பிரிடனால் கொடுக்கக்கூடிய பீரங்கிகளும் இதர சாமான்களும் மாஸ்கோவுக்கு அனுப்பப்படுகின்றன. இம்மாதத்திற்குள்ளாகவே ருஷ்யாவுக்குக் கொடுப்பதாகச் சொன்ன தளவாடங்கள் அனுப்புவதாக பிரஸிடென்டு ரூஸவெல்டும் சொன்னார்.

**முஸோலினியின் இதாலி** இப்பொழுது அவனை வெறுக்க ஆரம்பித்துவிட்டது. இதாலிய சைனியத்தை கிழக்குப் போர்முனைக்கு ஹிட்லர் இழுத்துச் சென்றான். பாஸிஸ்ட் கக்ஷிக்குள் பிளவு ஏற்பட்டு ஜெர்மன் ரகசியப் போலீஸால் அடக்கப்பட்டிருக்கிறது. 445 இதாலியர்கள், ரகசிய கலகங்களுக்காகத் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். பாஸிஸ்ட் கக்ஷியிலிருந்து இம்மாதிரியானவர்களை விலக்கவேண்டியிருக்கிறது. விலைவாசிகள் அதிகமாகி ஆகாரக் கஷ்டம் வந்திருக்கிறது.

**ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்.**—ஏற்கனவே பல தடவைகளில் சொல்லப்பட்டபடி இந்நாடுகளில் கலகம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஜெர்மன் சிப்பாய்களைத் தாக்கியதாக 73-ம் தடவையாகப் பாரிஸில் கொலை நடந்தது. ஆறு மாதங்களில் மூன்று தடவை ரோனியூவிலுள்ள ஸப்ளை கிடங்கு தீ மூட்டப்பட்டது. அதற்காக 6,000 பிராங்க் அபராதம் விதிக்கப்பட்டு 10 கைதிகளும் பிடிக்கப்பட்டனர். ஸெர்பியாவில் ஸ்திரீ, புருஷர், குழந்தைகள் 3,30,000-வரையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஸெகோஸ்லோவாகியாவில் ஹீட்ரிச் கொடுங்கோல் நடத்தி வருகிறார். 79 வருஷங்களாக இருந்த ஸோகோல் என்ற சங்கம் கலைக்கப்பட்டது. ஓரிரவில் 250 ஸெக்கர்கள் கொலைசெய்யப்பட்டனர். டானியூபிலுள்ள ருஸ்ட்சுக் என்ற துறைமுகத்தில் ஏராளமான ஆயுதங்கள் வைத்துக்கொண்டதற்காக 200 பேர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். போலந்தில் எதிரிகளைக் கொரில்லாப்படைகள் தாக்கிவருகின்றன.

**பிரிடிஷ் விமானப்படை.**—மேற்கே பலமாகத் தாக்கிவருவதால் ஜெர்மனியின் எதிர்ப்புகளுக்குத் தடையேற்பட்டுவருகிறது. இவ்வாரத்தில், பவேரியாவில் இரண்டாவதாக பெரும் பட்டணமும், ஸீமென்ஸ் ஷுக்கெர்டு மின்சாரவேலை செய்யப்படும் இடமுமான நியூரம்பர்க் என்ற இடம் தாக்கப்பட்டது. இதைப் பற்றி டெயிலி டெலிகிராப் சொல்லுகையில், 'டிமோஷென்கோவின் படைகளுக்கு நியூரம்பர்க்கில் பிரிடிஷ் விமானங்கள் செய்த செய்கையை மாஸ்கோவிலிருந்து ரேடியோ மூலம் அனுப்பியதால் பிரிடன் ருஷ்யாவுக்கு உதவவில்லை என்று கண்மூடித்தனமாகப் பேசுவது பிசகு என்று சொல்லிற்று. மேலும் ஒரெலில் ஜெர்மானியர் செய்யும் அட்டூழியங்களுக்கு ப்ரெமன், கொலோனில் பிரிடிஷார் வசம் அவஸ்தைப்படுகிறார்கள்' என்றும் அவ்வொலிபரப்பில் கண்டிருந்தது. ராட்டர்டாம், ஆஸ்டெண்டு, டன்கர்க், போர்டோ முதலியதும் எதிர்க்கப்பட்டன. ஜெர்மன் விமானங்கள் இங்கிலீஷ் கால்வாயைக்கடந்து வராததிலிருந்து லுப்ட்வாபியின் பலம் குறைந்தது தெரியவருகிறது. இதன்பாதி அமெரிக்கருடன் சண்டைநேர்ந்தால் தேவையாயிருக்குமென்று வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அது கிழக்குப் போர்முனைக்குப் போயிருக்கிறது.

**கடலில்.**—பிரிடிஷ் கப்பற்படை முன்போல் எதிரிக்கு நாசத்தை விளைவித்து வருகிறது. லேடிஷெர்லி என்ற பிரிடிஷ் படகு ஒரு யூ படகை வசப்படுத்தியது.

தேசகருமான இரண்டு பிரசித்திவாய்ந்த ஜெர்மானியர்கள் தாய்லாந்திற்கு, ஜெர்மனியின் அரசாங்க சம்பந்தத்தை ஸ்தாபிக்கவும், அதன்மூலம் கலகங்கள் ஏற்படுத்தவும் சென்றிருக்கின்றனர்.

மஞ்சுகோ, மங்கோலிய எல்லைகளை நிர்தாரணம் செய்ய ருஷ்யாவும் ஜப்பானும் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன.

**போர்ச்சுகலின் நடத்தை.**—விசித்திரமாக இருக்கிறது. ஜெர்மனியின் அழைப்பின் பேரில் போர்ச்சுகீஸ் ராணுவ கோஷ்டி ஒன்று ஜெர்மனிக்குச் சென்றதாகச் சொல்லப்பட்டது. இன்று போர்ச்சுகலுக்குச் சொந்தமான கிழக்கு இந்தியத் தீவுகளில் ஜப்பானுக்கும் டிமோருக்கும் விமான மார்க்கம் ஏற்படுத்த அனுமதி கொடுக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இந்த வழியை ஜப்பான் செப்பனிட்டு உபயோகித்துக்கொள்ளும். ஆஸ்திரேலியாவிற்கு இப்பொழுதுள்ள விமான மார்க்கத்தை இது தடை செய்வதால் A. B. C. D. நாடுகளுக்கு இச்செய்கை திருப்தியில்லை.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அழைப்பின் பேரில் போர்ச்சுகீஸ் ராணுவ கோஷ்டி பீரங்கி, நிலைகளை கவனிக்க லண்டனுக்கு வந்திருக்கிறது.

**மத்திய ஆபிரிக்க விமானவழி.**—அட்லாண்டிக்கை கடந்துவரும் [illegible] விமானங்கள் மத்திய ஆபிரிக்காவிற்கு போர்ரி மூலம் வந்து அங்கிருந்து ஸுடான், மத்தியக்கிழக்கு நாடுகளுக்குச் செல்லும். இதனால் விமான உதவி துரிதப்படும்.

**ஐக்கியநாடுகள் ஸர்வதேச வாலிபர் கூட்டம்.**—ஒன்று அக்டோபர் 11-ல் லண்டனில் நடந்தது. அன்று 10,000 வாலிபர்கள் 20 தேசங்களிலிருந்து வந்திருந்தனர். ஜெர்மானியரும், இதாலியரும் காணப்பட்டனர். மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியும், பிரதம மந்திரியும் வாழ்த்து அனுப்பியிருந்தனர். நாஸி வியாதியிலிருந்து உலகம் ஸ்வஸ்தமாகும் வரை இவர்கள் சும்மாயிருக்கக் கூடாதென்று 'ஏற்பாடு' செய்துகொண்டனர்.

ஸ்லோவோகியா.—சிறு அரசாங்கத் தலைவரான டாக்டர் தூகா, ஜனங்களால் தாக்கப்பட்டு, பிறகு ஜெர்மன் அதிகாரிகளால் ஜெயிலிலும் வைக்கப்பட்டார்.

யூகோஸ்லாவியா.—எதிரிக்கு உதவிய ஜெனரல் நெடிச்சும் கொலைகாரனான பாவலிட்ச்சும் தங்களால் நாட்டை அடக்கமுடியாததை ஒப்புக்கொண்டனர். "செர்பியாவில் ஏற்படும் கலகங்கள் கலகாஸ்பதமாக" இருக்கின்றனவென்று தனியே பிரிந்துசென்ற யூகோஸ்லாவியர்களின் மனவிப்பையும் கேட்கும்படி அந்த ஜெனரலுக்கு நேர்ந்தது. பாவலிட்சின் தந்திரம் பலிக்காததால் க்ரோ வியாவில் நாஜி அரசாங்கத்தால் டாக்டர் மாட்சாக் என்பவர் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு ஜனங்களிடம் கொஞ்சம் செல்வாக்கு உண்டாம். இங்கே நாஜி ஆட்சிக்கு விரோதமானவர்களை பலாத்கிரமாக அடக்குவது முடியாது. ஆனால் நாஜிகள் தந்தோபாயத்தினாலேயே தான் வசப்படுத்தப் பார்க்கின்றனர்.

நார்வே.—பலமாக முன்பு எதிரிக்கு உதவிய இவ்விடத்திலேயே எதிரியின் ரகசிய வேலை நடைபெறவில்லை. குவிஸ்லிங் அதிகாரம் பலிக்காததால், அவமானப் பட்டு ஜெர்மன் அதிகாரியான டெர்போவன் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறார். இவர் வந்ததும், ராணுவச் சட்டம் என்ற பெயரால் இஷ்டப்படி கொடுங்கோல் செலுத்தினார். ஒரு வாரமானதும் மறுபடி பழையபடி குவிஸ்லிங் சகலதி அதிகாரத்திற்கு வந்தது. எத்தனை நாளைக்கு இந்த நிலை! ஆனால் எவ்வளவு காலம் இருந்துவிடும்?

வி வி வி வி வி

கைதிகளின் கதி.

பழமையான சண்டைகளில் இதைப் பற்றி கேட்டிருக்கிறோம். காட்டுமிராண்டிகளின் சண்டைகளில் இம்முறை அதிகம் உண்டு. ஆனால் இக்காலத்தில் அவர்களுக்குச் சமமான ஜெர்மானியர், கைதிகளை நடத்தும் கொடிய விதம் எல்லோருக்கும் அவர்களுக்கு அபகீர்த்தியை உண்டாக்கும். புதிதாக வந்த ஜெர்மானியரைப் பிடிக்காததால் அங்காங்கு உள்ள யாவரும் கலகத் தொழிலில் ஈடுபட்டு கோஷ்டமாகவோ மறைவாகவோ தொந்தரவு செய்கின்றனர் என்பது நம்பமுடியாது. போலந்தில் 100 பேர்களை ஜெயிலில் அடைத்தும், பிரான்ஸ் பெல்ஜியம், இங்கே 25 பேர்களை தடைசெய்தும் 'பிரான்ஸில் சமீபத்தில் செய்த விதமாகவும்,' விசாரணையின்றி தண்டிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு விசாரணை கிடையாது. யாது முறையென்று தெரியாது. சுருக்கச் சொல்லில் அருகிலுள்ள ஒரு கூட்டத்தாரைப் பிடித்து யூதரோ, ஒரு பகுதியோ குண்டுகளால் தாக்கப்படுகிறது. இந்த கோரச் செய்கை பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படுகிறது. ஆனால் கலகம் அடங்குவதில்லை. சாதாரணமாக, உண்மையில் கொலை செய்தவரோ, எதிரியின் ஒற்றரோ கொலைசெய்யப்பட்டால் யோக்கியமானவர்கள் அதன் அவசியத்தைப்பற்றி சிந்தித்துக் கவலைப்படுவதுண்டு. ஒன்றுமறியாத ஒரு உயிருக்கு அபாயம் நேரிடுவதை அவர்கள் சகிப்பதில்லை. ஆனால் ஒன்றுமறியாத கூட்டத்தார்களை அடியோடு கொலை செய்யும் அருவருப்பான காரியத்தில் ஈடுபடுவதை மனித சுபாவம் பொறுத்துக் கொள்ளாது. தன் அரசாங்கம் பலமாக இல்லாததாலும், குற்றம் செய்தவனை கண்டுபிடிக்க முடியாததாலும் தான் இக்கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் ஜெர்மானியர் மனிதர்களின் வரம்பையெல்லாம் மீறினவர்கள். ரகசியப் போலீஸ் வைத்துக்கொண்டதற்காகவே உலகம் அவர்களை நிந்திக்கிறது. கொலை முதலியவைகளையும் கையாண்டால் உலகம் இருக்கும்வரை அபகீர்த்தி போகாது.

வி வி வி வி வி

சில வேற்றுமைகள்.

பிரேக்கில், ஸெக்கோஸ்லோவாகியா ரசாயன சாஸ்திரிகளும் பண்டிதர்களும் நாஜிகளால் கொல்லப்பட்டனர். லண்டனில், மனிதவாழ்க்கையைச் சரியாக நடத்துவதற்கான



மார்க்கங்களை தேட ரசாயன சாஸ்திரிகள் கூடினார்கள். ஜெர்மன் ஆட்சியில் ஆக்கிரமித்த நாடுகளின் சொத்து கொள்ளையடிக்கப்பட்டு, விளைபொருள்கள் திருடப்பட்டு, பொருளாதாரங்கள் தன்னலத்திற்காக உபயோகப்படுத்தப் படுகின்றன. கிரேட் பிரிடனோ, தன் பிரதேசத்திலுள்ளவர்களுக்கு எல்லா உதவியும் கொடுக்கிறது. உதாரணமாக நடுக்கிழக்கு நாடுகளுக்கு சமமான வியாபார உரிமைகளும், நாணய மாற்றலும், முக்கிய உணவுப்பொருளையும் கொடுத்து ஏழைகளின் கதியை விருத்தி செய்து வருகிறது.

ஜெர்மன் ஆக்கிரமணம் என்பது ராணுவங்களை பலாத்காரமாகப் போக விடுவதுதான். அப்பேற்பட்ட ராணுவங்களின்முறை பயங்கரமானதால் அவை களை யாவரும் வெறுக்கின்றனர். அச்சமயத்தில் உள்நாட்டு சட்டதிட்டங்களை மாற்றி ராணுவ ஆட்சியும் ரகசியப் போலீஸும் அதிகாரம் பெறுகின்றன. ஆனால் பிரிடன் வியாபித்த நாடுகளில் ஒருவித நஷ்டமும் கிடையாது. அரசாங்கங்களோடு நீதியான ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளுகிறது. நியாயம், பொதுஜன அரசாக்ஷி முதலியன உள்ளூர் அரசாங்கங்களிடமே ஒப்புவிக்கப்படுகின்றன.

கடாசியாக, ருஷ்யாவை எதிர்த்து ஹிட்லர் போடும் சண்டையை அவனுக்கு அடங்கிய நாடுகளே அனுமதிக்கவில்லை. ஆனால் அவனை அடக்க பிரிடன் போடும் யுத்தத்திற்குத் தைரியமான உதவி அதிகரித்தேவருகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 6—10—41. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | | |
| | பகலில்.—4 ஜெர்மன் கவசம் பூண்ட டிராலர் கப்பல்கள்—(Belgian) பெல்ஜியன் கடற்கரைக்கப்பால். | 1 கப்பல் மூழ்கடிக்கப் பட்டது; மற்றொன்று சேதமாயிற்று. | ... | ... |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | ... | ... | ... |
| | **கிரீஸ் (Greece).** | | | |
| | எண்ணெய் சேமித்து வைக்குமிடங்கள், துறைமுகம், கட்டடங்கள், கப்பல்கள்.—பிரேவ்ஸ் (Piraevs). | பெருந்தீக்கள் மூட்டப் பட்டன; பலத்தவெடிகள் கிளம்பின. | ... | ... |

வடமேற்கு மாகாணமும் இருளாக்கப்பட்டன. சைனிய வரிசைகளின் நடமாட்டமும் இருந்தது. முக்கிய ஸ்தானங்கள் பரீக்ஷையாகத் தாக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வந்தன. ராவல்பிண்டி, கைபர் இடங்களில் ஜெர்மானியர் எதிர்க்கும் விதமும் அதற்கு பிரதியும் காட்டப்பட்டன. கடைசியில் லாஹூரில் 'குண்டுகள் போடப்பட்டு' 'சேதம் செய்யப்பட்டது'. இச்சமயத்தில் குடைவிமானங்களும் பாமபர்களும் தோன்றின. இவைகளை லேசான டாங்கிகளும் மோட்டார்களும் எதிர்த்தன. இதனால் பிரிடிஷ் விமானிகளின் பயிற்சியும் விமான எதிர்ப்பு தற்காப்பு கோஷ்டிகளின் சீரான அமைப்பும் தெரியவந்தன. இவைதான் இக்காலத்திய யுத்தங்களுக்குத் தேவையானவை.

**கிரீன்லாந்தில் நாஜி ரேடியோ.**—இங்கே ரகசியமாக நாஜிகள் வைத்திருந்த ரேடியோ நிலயத்தை அமெரிக்கக் கப்பற்படை கண்டுபிடித்துவிட்டது. ஸெப்டம்பர் மாதத்தில் அமெரிக்கர் காவல்புரியும் சமயத்தில் ஒரு சிறிய நார்விஜிய கப்பலை—60டன்—பார்த்தனர். இதில் 20 ஜெர்மன் ஏஜண்டுகள் இங்கே ரேடியோ நிலயத்தை ஸ்தாபிக்க வந்தனராம். பிறகு கவனித்ததில் கடற்கரையில் ஒரு ரேடியோ நிலயமே இருந்ததாம். இப்பொழுது அது ஆக்கிரமிக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் பிடிக்கப்பட்டனர். அக்கப்பல் 'அமெரிக்காவுக்குக் கொண்டு போகப்பட்டது. 15-ம் தேதி சபைமுன்னால் கர்னல் நாக்ஸ் பின்வருமாறு தெரிவித்தார். "பூரா பிரதேசத்தை காபந்து செய்திருக்கிறோம். இவை நாஜிகளின் தூண்டுதலால்தான் நடந்திருக்கவேண்டும்" என்றார்.

---

## யுத்தக் குறிப்புகள்.



மூன்றாவதாக, துருக்கியர்கள் தங்கள் ஸ்வதந்திரத்தையும், வியாபாரத்தின் முழுநேர்மையையும் ஸ்தாபித்ததோடு, அதிக வருமானம் தரக்கூடிய நடுநிலை நாடுகளுடன் வியாபாரம் செய்வோமென்று சொல்லிவிட்டனர். இதனால் முறை தவறின ஜெர்மனிக்கு விரோதமாக பிரிடன் சார்பாக இருந்ததைத் தெரியச் செய்தனர்.

யுத்த சாமான்களில் க்ரோம் ஒரு தேவையான பதார்த்தம்தான். ஜெர்மனிக்கு இதை மறுத்ததினால் இது வியாபார வழியைக் காட்டினும் அரசியல் முறையில் முக்கியமான சம்பவம் ஆகிறது. மேலும் துருக்கியிலுள்ள க்ரோம் பூரா, பிரிடனுக்கு யுத்த சாமான்கள் செய்ய அமெரிக்காவுக்குப்போவதால் பிரிடனும் அமெரிக்காவும் மிகவும் பெரும் சாதகமாக நினைக்கின்றன. ஜெர்மனிக்கு அது பாதகம்தான்.

ஃ ஃ ஃ ஃ ஃ

**துருக்கியும் பிரிடனும்.** ஐந்து லக்ஷம் பவுன் பொருமானமுள்ள பிரிடிஷ் சாமான்கள் ஒவ்வொரு மாதமும் துருக்கிக்குப் போகின்றன. மற்ற நாடுகளைப்போல் இந்நாடும் தங்களுக்குப் பிடித்த நாடுகளுடன் வியாபாரம் செய்ய ஏற்கனவே அனுமதிக்கப்பட்டதால்தான் அபாயகரமான ஜெர்மனியுடன் வெளிநாட்டு வியாபாரத்தை அதிகம் செய்தது. இப்பொழுது அநேகமாக ஜெர்மனியின் பொருளாதார ஆதிக்கத்திலிருந்து சுழட்டிக் கொண்டுவிட்டது அலெக்ஸாண்டிரட்டா, மெர்ஸின் என்ற துறைமுகங்களைச் சீர்படுத்த துருக்கி வியாபார மந்திரி ஸெப்டம்பர் 26-ம் தேதி லார்டு கார்லைல் என்பவருடன் பெரும் ஒப்பந்தம் செய்துகொண்டார். பாஸ்ரா மூலம் இந்திய சாமான்களை சீக்கிரம் அனுப்பவும், சாமான் ஸப்ளை, போக்குவரவு வசதி முதலியவைகளை சர்ச்சை செய்யவும், பாலஸ்தீனத்தில் ஒரு கூட்டம் கூடப் போகிறது. இதற்கு பிரிடிஷ் வியாபாரச் சங்கத்தின் பிரதிநிதிகளும், தென் ஆபிரிக்கா, இராக், இரான், பாலஸ்தீனம், ஸிரியா, எகிப்து, துருக்கி நாடுகளின் பிரதிநிதிகளும் வருவார்கள்.

ஃ ஃ ஃ ஃ ஃ

**எதிரிக்கு ரகசிய உதவி ஏற்படவில்லை.** சர்ச்சில் சொல்லும்விதமாக "ஐரோப்பாவில் அடிமையான நாடுகள் ஜெர்மனிக்கு விரோதமாகக் கிளம்புவதிலிருந்து" ஜெர்மானியர் செய்த ஒரு பெரும்பிழை வெளியாகிறது. விரோதம் விரோதத்தையும், கொடுங்கோன்மை பழிவாங்கும் எண்ணத்தையும்தான் உண்டாக்கும். விரோதமும் பழிவாங்கும் எண்ணமும் ஆரம்பத்தில் எவ்வளவு சிறிதானாலும் நாளாக ஆக விருத்தியாகும். ஏனென்றால், மனிதனின் ஆத்மா ஒருநாளும் அழியாது. இதை ஹிட்லர் நம்பினாலும் சரி இல்லாதபோனாலும் சரி, ஆத்மாவில்தானே இந்த எண்ணங்கள் தோன்றுகின்றன. இவ்வாத்மாவில் ஏற்பட்டுள்ள 'உணர்ச்சியை அழித்துவிடலாமென்று ஜெர்மானியர் நினைக்கிறது ஒரு தவறு. மேலும் ஜெர்மனி ஜயித்த நாடுகளிலேயே உள்ளவர்களில் தனக்குச் சாதகமாக இருப்பவர்கள்மூலம் தங்கள் வேலையைச் செய்யச் சொல்லுவதும் தவறுதான். இது கீழான தந்திரமானதால் பலிக்காது. பிரகிருதத்தில் 'ஆக்கிரமித்த' நாடுகளில் ஜனங்கள்' ஜெர்மன் ஆட்சிக்கு உடன்படாமலிருப்பதால் கொடுங்கோல், கொலை முதலியவை நடக்கின்றன. உதாரணமாக:—

**பொஹீமியா, மொரேவியா.**—பேருக்கு மந்திரியாயிருந்த ஜெனரல் இலயஸ் கொலை செய்யப்பட்டும், வான் நீயூராத் அவமதிக்கவும்பட்டார். ஹிட்ரிச் என்று சொல்லக்கூடிய அடக்குமுறையாளர்கள் தங்களுக்குப்படியாதவர்களை இஷ்டப்படி கொலை செய்கிறார்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **6—10—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

ஸிஸிலி (Sicily).

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானம் நிற்குமிடங்கள், இறங்கு மிடங்கள்.—மார்ஸாலா (Marsala). | ... | ... | ... |
| | விமானங்கள் பிரிந்து செல்லப்படும் பிரதேசம்.—ஜெர்பினி (Gerbini). | ... | ... | ... |
| | பண்டகசாலைகள்.—லிகடா(Licata)வின் வடபாகம். | ... | ... | ... |
| | ரயில் இஞ்ஜின்கள் நிற்குமிடங்கள், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—கடேனியா (Catania)வில். | ... | ... | ... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | துறைமுகம், வியாபாரக் கப்பல்.—ட்ரிபோலி (Tripoli). | ... | ... | ... |
| | முக்கிய ராணுவ லக்ஷியங்கள்.—காம்பூத் (Gambut). | ... | நஷ்டமில்லை. | 2 விமானங்கள் சேதமாயின. |

ருஷ்ய விமானங்களால்.
கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 12 விமானங்கள். | 19 விமானங்கள். |

**7—10—41.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | தீப்பற்றியது. | ... | ... |
| | ஒரு கப்பல்.—ட்ரிபோலி(Tripoli)க்கு மேற்கில். | மூழ்கியது. | ... | ... |
| | மோட்டார் போக்குவரத்துகள்.—மிஸுராடா (Misurata) விலிருந்து ஸர்டி (Sirte)க்குப் போகும் பாதையில். | அநேக லாரிகள் சேதமாயின; ஒரு பெட்ரோல் ஏற்றிச் செல்லும் வண்டி தீப்பற்றியது. | | |
| | விமான மிறங்குமிடங்கள், தரையிலுள்ள விமானங்கள்.—எல்காஸாலா (El Gazala). | அநேக விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—10—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டை, விமான தளங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 17 விமானங்கள். | 34 விமானங்கள். |

**8—10—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—ஸப்ளைக் கப்பல்கள்—வெஸ்டு பிசார்டு (Vestfjord) பிரதேசத்தில். | 2 கப்பல்கள் மூழ்கின. | ... | ... |

இரவில் நடந்த சம்பவங்களைக் குறித்து தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | துறைமுகம், கப்பல்கள் — ட்ரிபோலி (Tripoli). | ... | ... | ... |

ஸிஸிலி (Sicily).

| | | | | |
|---|---|---|---|---|
| | விமான நிற்குமிடங்கள், சைனிய வாஸஸ்தலங்கள்—காமிஸோ (Comiso) விமான நிலயத்தில். | ... | ... | ... |
| | தொழிற்சாலைகள், விறகு டெப்போக்கள், தோங்குபாலங்கள், கட்டடங்கள்—பெர்க்கா (Berka). | ... | ... | ... |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | | |
|---|---|---|---|---|
| | இரண்டு விரோதிக் கப்பல்கள்—மத்தியதரைக்கடலி(Mediterranean)ல். | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது; மற்றொன்று சேதமாயிற்று. | ... | ... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விரோதி பான்ஸர் துருப்புகள்—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 27 விமானங்கள். | 39 விமானங்கள். |

**9—10—41.** (வியாழக்கிழமை)

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| பகலில்.—ரோந்து — கலே (Calais)ப் பிரதேசத்தில். | ... | ... | ... |
| துறைமுகம், கப்பல்கள்—ஆஸ்டெண்டு (Ostend). | 1 கப்பல் தீப்பற்றியது; மற்றொன்று சேதமாயிற்று. | நஷ்டமில்லை. | 1 விமானம்; 1 கடல் விமானம். |
| விரோதி எஸ்கோர்ட் கப்பல்.—செர்பர்க்கு (Cherbourg)க்கப்பால். | ... | | |
| இரவில்.—கப்பல் துறைகள், கப்பல்கள் இன்னும் இதர லக்ஷியங்கள்—எல்லெஸண்டு (Aalesund). | ... | நஷ்டமில்லை. | ... |
| கம்பியில்லாத் தந்தி நிலயம்—எல்லஸண்டு (Aalesund)க்கருகாமையிலுள்ள தீவில். | ... | ... | ... |

**ஸிஸிலி (Sicily).**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமான நிலயம்—காமிஸோ (Comiso). | ... | | |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | ... | | |
| விமான நிலயங்கள்—பெர்க்கா (Berka), பெனினு (Benina)விலும். | ... | | |
| மோட்டார் போக்குவரத்து டாங்கிகள், பெர்க்கா(Berka), பெனினு(Benina)விலும். | ... | 5 விமானங்கள். | ... |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்— போர்முனை முழுவதிலும். | ... | 25 விமானங்கள். | 64 விமானங்கள். |

**10—10—41.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | ... | ... | ... |



**10—10—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விரோதிக் கப்பல்கள்—ஹாலந்து (Holland) கடற்கரைக்கப்பால். | ஒரு ஸப்ளைக் கப்பல் தாக்கப்பட்டது. | நஷ்டமில்லை. | ... |
| இரவில்.—தொழிற்சாலைகள் — கொலோன் (Cologne), ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland) இன்னும் அநேக இடங்கள். | தீக்கள் கிளம்பின; எங்கும் பலத்த சேதம். | ... | ... |
| கப்பல் துறைகள்—ராட்டர்டாம் (Rotterdam), ஆஸ்டெண்டு (Ostend), டன்கர்க் (Dunkirk), போர்டியாக்ஸ் (Bordeaux). | ... | ... | ... |
| விமான நிலயங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள். | ... | 10 விமானங்கள். | ... |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| துறைமுகம், தொழிற்சாலைகள்.—பார்டியா (Bardia). | ... | ... | ... |
| மின்சார உற்பத்திசாலை — டெர்னு (Derna). | தீக்கள் கிளம்பின. | ... | ... |

**ஸிஸிலி (Sicily).**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமான நிலயம்—காமிஸோ (Comiso) | ... | ... | ... |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள். | ... | 11 விமானங்கள். | 27 விமானங்கள். |

**11—10—41.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்— எம்டென் (Emden), மேற்கு ஜெர்மனி (Germany)யிலுள்ள இன்னும் சில இடங்கள். | தீக்கள் கிளம்பின. | ... | ... |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**11—10—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| 2 ஸப்ளைக் கப்பல்கள்.—நார்வே (Norway)க் கடற்கரைக்கப்பால். | ... | ... | ... |
| ஒரு ஸப்ளைக் கப்பல்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால். | ... | ... | ... |
| மின் எண்ணெய் தொழிற்சாலை.—நார்வே (Norway). | ... | 1 விமானம். | ... |
| விரோதி விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France). | ... | ... | ... |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகங்கள், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi), ட்ரிபோலி (Tripoli). | ... | | |
| மோட்டார் வண்டிகள் பழுதுபார்க்கும் இடங்கள்.—பார்டியா (Bardia). | ... | | |
| ஒரு விமான நிலயம்.—எல்காஸாலா (El Gazala). | ... | | |

## ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| சைனிய வாஸஸ்தலங்கள்.—பஸ்ஸாரோ (Passero) முனை. | ... | | |

## மத்தியதரைக் கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| விரோதித் துணைக்கப்பல்.—மத்தியதரைக் கடலி (Mediterranean)ன் மத்தியில். | 3 கப்பல்கள் சேதமாயின. | | |
| வியாபாரக் கப்பல்.—மத்தியதரைக் கடலி (Mediterranean)ன் மத்தியில். | ... | 4 விமானங்கள். | ... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விரோதித் துருப்புகள், அவைகளின் ஸ்தானங்கள்.—போர் அரங்கம் முழுவதிலும். | ... | 27 விமானங்கள். | 122 விமானங்கள். |

**12—10—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| பகலில்.—கப்பல் துறைகள், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—புலாயின் (Boulogne). | ... | 2 விமானங்கள். | 4 விமானங்கள் |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**2—10—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| ஒரு துணைக்கப்பல்.—டச்சு (Dutch) கடற்கரைக்கப்பால். | 1 எண்ணெய்க் கப்பலும் மற்றொரு கப்பலும் தாக்கப்பட்டன. | 2 விமானங்கள். | ... |
| விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel). | ... | ... | 3 விமானங்கள். |
| இரவில்.—தொழிற்சாலைகள், இன்னும் இதர லக்ஷியங்கள்.—நோரம்பர்க் (Noremberg). | ... | ... | ... |
| அநேக லக்ஷியங்கள்—மேற்கு, வடமேற்கு ஜெர்மனி (Germany). | ... | ... | ... |
| கப்பல் துறைகள்—புலாயின் (Boulogne). | ... | ... | ... |
| லக்ஷியங்கள்—ப்ரெமன் (Bremen) | ... | ... | ... |
| ஒரு விமான நிலயம்—ஹாலந்து (Holland). | ... | ... | ... |
| விரோதிக் கப்பல்கள்—டச்சு(Dutch)க் கடற்கரைக்கப்பால். | ஒரு ஸப்ளைக் கப்பல் தாக்கப்பட்டது. | ... | ... |
| விரோதிக் கப்பல்—நார்வே (Norway)க்கப்பால். | விமானங்களால் தாக்கப்பட்டது | ... | ... |
| ரசாயன தொழிற்சாலைகள் மின்சார உற்பத்திசாலை—மாஸின்கார்ப் (Mazingarbe). | தீ மூட்டப்பட்டது. | 1 பாம்பரும், 12 பைடர் விமானங்களும். | ... 20 பைடர் விமானங்கள். |
| விமானச் சண்டைகள்—விரோதி ஆக்கிரமித்த தேசங்களில். | ... | | |

## கிரீஸ் (Greece).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகம்—பைரேஸ் (Piraeus) | ...தீக்கள் மூட்டப்பட்டன. | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—10—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானமிறங்கும் இடங்கள் போர் சாமான்கள் சேமித்து வைக்குமிடங்கள்—எல் கஸாலா (El Gazala). | தகர்க்கப்பட்டன. | ... | ... |
| | பீரங்கிவைக்குமிடம்-டெர்னு (Derna). | ... | ... | ... |
| | விமானமிறங்குமிடம், தரையிலிருக்கும் விமானங்கள்—பார்டியா (Bardia). | அநேக விமானங்கள் சேதமாயின. | ... | ... |
| | துறையுடன் கூடிய ரோந்து மோட்டார் லாரிகள்-ட்ரிபோலி (Tripoli)க்கும், பெங்காஸி (Benghazi)க்கும் மத்தியிலுள்ள ரஸ்தாவில். | யந்திர பீரங்கிகளால் எதிர்க்கப்பட்டன. | ... | ... |
| | விரோதி ஸ்தானங்கள்—லிபியா (Libya), எகிப்து (Egypt) இவைகளின் எல்லைப்புற பிரதேசம். | ... | ... | ... |
| | ரோந்து கப்பல்கள்—வட ஆபிரிக்கா (Africa) கடற்கரைக்கப்பால். | ... | நஷ்டமில்லை. | 1 விமானம். |

### ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானத் தளங்கள், விமான நிலையங்களிலுள்ள விமானங்கள் விரோதி பாளைத் துருப்புகள்—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 23 விமானங்கள். | 89 விமானங்கள். |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—10—41. (செவ்வாய்க்கிழமை). | | | | |

### பிரிடன் (Britain).

| | | | | |
|---|---|---|---|---|
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள், தென்மேற்கு இங்கிலாந்து (England), தெற்கு வேல்ஸ் (Wales). | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—10—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

### ருஷ்யா (Russia).

| | | | | |
|---|---|---|---|---|
| | ருஷ்யப் போக்குவரத்துகள்.-போர்முனைக்குப் பின்புறத்தில். | ... | ... | ... |
| | மாஸ்கோ (Moscow). | ... | 10 விமானங்கள். | ... |

### எகிப்து (Egypt)

| | | | | |
|---|---|---|---|---|
| | ஸூயஸ் (Suez) கால்வாய்ப் பிரதேசம். | ... | 2 விமானங்கள். | ... |
| 8—10—41. (புதன்கிழமை). | | | | |

### பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

### ருஷ்யா (Russia).

| | | | | |
|---|---|---|---|---|
| | மாஸ்கோ (Moscow). | ... | 8 விமானங்கள். | ... |
| 9—10—41. (வியாழக்கிழமை). | | | | |

### பிரிடன் (Britain).

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை. | ... | 2 விமானங்கள். | ... |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தென்மேற்கு கடற்கரையில் ஒரு இடம். | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். | ... | ... |

### ருஷ்யா (Russia).

| | | | | |
|---|---|---|---|---|
| | மாஸ்கோ (Moscow). | ... | 12 விமானங்கள். | ... |

### பாலஸ்தீனம் (Palestine).

| | | | | |
|---|---|---|---|---|
| | ஹெய்பா (Haifa). | ... | ... | ... |
| 10—10—41. (வெள்ளிக்கிழமை). | | | | |

### பிரிடன் (Britain).

| | | | | |
|---|---|---|---|---|
| | இரவில்.—இரண்டு இடங்கள்—(England) இங்கிலாந்தின் கிழக்கு பாகம். | சொற்பச் சேதம். | 1 விமானம். | நஷ்டமில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **10—10—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | டோப்ருக் (Tobruck). | ... | ... | ... |
| **11—10—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 4 விமானங்கள். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மர்மான்ஸ்க் (Murmansk). | ... ... | 2 விமானங்கள். | ... |
| **12—10—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசத்திற்கு அருகாமையில் வெகு சொற்ப விமான நடமாட்டம். | ...... | 1 விமானம். | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ...... | 4 விமானங்கள். | ...... |
| **13—10—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் கடற்கரைப் பிரதேசங்களில். | ...... | 2 விமானங்கள். | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | போக்குவரத்து ஸ்தானங்கள், பாலங்கள் இன்னும் இதர ராணுவ லக்ஷியங்கள்.—ருஷ்யத் துருப்புகளுக்குப் பின்னால். | ...... | ... | ...... |
| | மாஸ்கோ (Moscow) ... | ...... | 7 விமானங்கள். | ...... |



## பிரிட்டிஷ் விமானப்படையின் எதிர்ப்பினால் ஐரோப்பாவில் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்கள்.

## ஜெர்மனிக்கு ஏற்படும் நஷ்டங்களை நாஜிகள் மறைக்க முடியாது.

## ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள மனப்பான்மை.

L. V. பிரேஸர் எழுதியது.

ஜெர்மன் லுப்ட்வாபி லண்டனைத் தாக்கிய ஒரு வருஷத்திற்குப்பிறகு இப்பொழுது பெர்லினை பிரிடிஷ் விமானங்கள் பலமாகத் தாக்கிவருகின்றன. இதாலியும் தாக்கப்படுகிறது. பிரிடிஷ் குண்டுகளின் சப்தத்தை பெர்லினிலுள்ளோரும் கேட்டனர்.

இம்மாதிரி பிரிடிஷ் விமானங்கள் படையெடுப்பது சாதாரணமாக, எதிரிகளுக்கு ஞாபகமூட்டுவதற்காக மாத்திரமல்ல. மும்மரமாக முன்னேறி எதிரி நாடுகளை எதிர்த்துவருவது தெரிகிறது. மாதாமாதம் எதிர்ப்புகள் விருத்தியாகி வருகின்றன.

லக்ஷியம் எங்கேயிருந்தாலும், ஜெர்மன் ராணுவங்களின் நிலைகளை லக்ஷியம்செய்யாது பிரிடிஷ் விமானங்கள் செல்லும். பகல் வேளைகளைக்காட்டிலும் இரவுகளில் எதிர்ப்புகளை அதிகம்செய்யும்.

ஜெர்மானியர் ஜாக்கிரதை செய்துகொள்ள முடியவில்லை. எதிர்ப்புகள் நடக்கப்போவதாக எச்சரிக்கையும் பெறவில்லை. இவைகளினால் ஏற்படும் நஷ்டங்களைப் பெரியதாக நாம் நினைக்காமல் ஜனங்களிடமுண்டாகும் உணர்ச்சியைக் கவனிக்கவேண்டும்.

### ஜெர்மனிபேரில் எதிர்ப்புகள்.

உதாரணமாக ஒரு தினத்தில் பால்டிக் துறைமுகமான ஸ்டெடின் என்ற இடத்தில் இரவில் பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் ஏராள நஷ்டத்தை விளைவித்து பகலில் நார்வே, ஜெர்மனி, பிரான்ஸ், டச்சுக் கடற்கரை முதலிய லக்ஷியங்களையும் தாக்கின.

எம்டன் என்ற இடத்தையும், ஜெர்மன் துறைக்கப்பல்களையும் எதிர்த்தன. ஒரு வெடிகுண்டினால் எண்ணெய்க் கப்பல் ஒன்று சேதமாக்கப்பட்டது. நான்கு வியாபாரக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. செர்பரோவில் உள்ள கப்பல் செப்பனிடும் இடமும், ருவனுக்குப் பக்கத்தில் ஸீன் நதிக் கரையிலுள்ள கப்பல் தளங்களும், ஹேஸ்பிரக், அபிவில்லியிலுள்ள ரயில்வண்டி நிறுத்துமிடமும் அதே சமயத்தில் தாக்கப்பட்டன.

இதனிடையில் கடற்கரைக்காவல் விமானங்களும், பைடர் விமானங்களும் சரியாக தங்கள் வேலையைச் செய்துவந்தன. இவைகள் வேவுபார்க்கும் விமானங்களுக்குத் துணைபுரிந்தன. அக்காலத்தில் 15 விரோதி விமானங்கள் வீழ்த்தப்பட்டன.

விரோதி நாடுகளிலிருந்துவரும் தகவல்களிலிருந்து ஏற்பட்ட நஷ்டத்தை ஒருவாறு சொல்லமுடிகிறது. பிரிடிஷ் விமான எதிர்ப்புகள் பலமாக இருக்கின்றன. ஏற்படும் சேதத்தை நாஜிகள் சிரமப்பட்டு சாமர்த்தியமாக மறைக்க யத்தனித்தாலும், பாதிபாகம்தான் மூடமுடிகிறது.

பெர்லினில் பிரான்ஸ்டிராஸி, ஸீன்டார்ப்டிராஸி என்ற இடங்களுக்கு இடையிலுள்ள ஒரு கூட்டமான 20 கட்டடங்கள் இடிந்துபோனதால் இவைகளை மறைக்க ஏற்பாடுசெய்யப்பட்டது. ஆனால் அன்டர் டென் லிண்டனில் இருந்த

டிராமாக் கொட்டகை, எல்லா ஜெர்மானியரும் பார்க்கும்படி எரிந்த மிச்சம்தான் இருக்கிறது. சுவர்கள் தான் மீதம்.

அரசாங்க புத்தகசாலை சேதமாயிற்று. ஷவீஸர் வீடு தாக்கப்பட்டது. கோயர்லிட்ஸ் ரயில்வேஸ்டேஷனுக்கு அருகிலும், ஸாவிக்னிபிளாட்ஸ் என்ற இடத்திலுமுள்ள கட்டடங்கள் இடிந்துபோயின.

பெர்லினைத்தவிர கொலோன், கார்ல்ஸ் ரூஹி என்ற இரண்டு ரயில்வே ஸ்டேஷன்களும் மற்றுமுள்ள கட்டடங்களும் சேதமாயின.

மன்ஸ்டரில் அதிகமாக பிரிடிஷ் விமானங்களால் சேதமேற்படுவதால் அங்கிருப்பவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

பல தடவைகளில் விமானத் தாக்குதலில் தப்பியதால் ஜெர்மன் பிரசாரகர்கள் இதை வீரர் பட்டணம் என்று சொல்லுகின்றனர். ஒரு பிரயாணி கொடுத்த கணக்கிலிருந்து மன்ஸ்டர், டூயிஸ்பர்க், கொலோன் இந்த இடங்களில் 14,000 பேர் வீடுகளில்லாமல் தவிக்கின்றனராம். ஹீடல்பர்க்கும் டார்ட்மண்டும் விஸ்தாரமாகத் தாக்கப்பட்டதோடு ஜனங்களுக்கு பயமும் அமைதிக்குறைவும் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

பெர்லினில் "அஹன்யஹனி காலம் தள்ளுவது" முக்கியக் கவலைக்கிடமாக இருக்கிறதாம். ஹனோவரில் டிராம் வண்டிகளின் டெப்போ சேதத்தினால் 90 டிராம் வண்டிகளும் மற்ற முக்கிய கட்டடங்களும் சேதமாயின.

மற்ற பட்டினங்களிலிருந்தும், சுருக்கமானாலும் சரியான தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

"இங்கே நாங்கள் கலக்கமடைந்திருக்கிறோம். ஒவ்வொரு இரவிலும் பிரிடிஷ் விமானங்கள் வருகின்றன. குண்டுகளையும் பலமாக வீசுகின்றன. இதனால் பெர்லின் ஜனங்கள் கலக்கமடைந்திருக்கிறார்கள். பிரிடிஷ் விமானங்களிடமிருந்து பயப்படுகிறார்கள். இவர்களைவிட கீலிலுள்ளோர் இன்னும் அதிகமாக பயப்படுகின்றனர். ஒவ்வொருவருக்கும் இன்றே சமாதானம் செய்ய இஷ்டம்தான். ஆனால் இதை வெளியேசொன்னால் ஒரு ஜெயிலில் அடைக்கப்படுவோம்."

ப்ரெமனுக்குப்போய்வந்த ஒருவர் "இங்கேதான் நல்ல காப்பி குடிக்கக் கிடைக்கிறது. புத்தாங்கத்தில் நாங்கள் அது கூட கிடைக்காமல் அவஸ்தைப்படுகிறோம்." என்று சொன்னார்.

கொலோனுக்குப்போய்வந்த மற்றொருவர் "எங்கும் ஒரே சந்தோஷமாக இருந்த இப்பட்டணத்தை விமானத் தாக்குதலுக்குப் பிறகு பார்க்க என் மனம் திகிலடைகிறது. ரைன்லாந்து, வெஸ்ட்பேலியா, வடகடல் ஓரங்களிலுள்ள ஜெர்மானியர்கள், யுத்தத்தால் ஏற்பட்ட கொடுமையையும், பொருளாதாரக் கட்டுப்பாட்டினால் உண்டான சிரமங்களையும் இப்பொழுதுதான் அதிகம் அனுபவிக்கின்றனர்" என்று சொன்னார்.

இதேவிதமாக டஸ்ஸல்டார்பிலும் "சென்ற 18 மாதங்களில் 280 இரவுகள் பூமிக்குள்ளிருக்கும் சுரங்கங்களில் வசிக்க நேர்ந்தது. ஒரு குண்டு வெடித்ததினால் ஒருபெரும் கட்டடத்தில் சிறிதுபாகம் மிஞ்சியதாக ஆயிற்று. அதனால் அதன் அக்கம்பக்கங்களில் சேதம் ஏற்பட்டது" என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

## ஆக்கிரமித்த நாடுகளில் விமான எதிர்ப்புகள்.

இப்பிரதேசங்களில் ஜெர்மானியருக்குச் சொந்தமான இடங்களைத்தாக்கி, சாமான் உற்பத்தியும், போக்குவரவும் கெடுதலடைந்ததால் பலமாறுதல்கள் ஏற்பட்டன.



சில சமயம் பகல்வேளைகளில் செய்த பிரிடிஷ் விமான எதிர்ப்புகளை ஆங்காங்குள்ள ஜனங்கள் மெச்சி, பிரியமாக நினைக்கின்றனர். ஜெர்மானியருக்கு கவலை உண்டாகும்படி தெருவுகளில் வந்து குண்டுகள் வெடிப்பதைப் பார்க்கிறார்கள். "பல மின்சார யந்திரங்கள் தாக்கப்பட்டன. இங்கிலீஷார் வருகையைக் காண யாவரும் வெளிவந்தனர். யுத்தத்தால் ஏற்பட்ட செலவு அதிகம்! ஜனங்களின் அபிப்பிராயத்தில் வேறுவிதமாறுதலில்லை. தாங்கள் ஸ்வதந்திரம் பெறவேண்டுமானால் இங்கிலீஷ்காரர்கள் வரத்தான் வேண்டுமென்று யாவரும் நினைக்கின்றனர்."

"ஜெர்மனியில் வேலைகளை தடை செய்ய மின்சார சக்திகளெல்லாம் உடைக்கப்பட்டன. இப்பொழுது வேலைகளே நடைபெறவில்லை. சுரங்கங்களில் வேலை இல்லை" என்றும் தகவல் கிடைத்திருக்கிறது.

இம்மாதிரி ஒவ்வொரு இடத்திலும் ஜெர்மன் ஏற்பாடுகளைக் குறைக்க பிரிடிஷ்காரர்கள் வரவேண்டியது தான் என்ற கருத்து உண்டாகியிருக்கிறதைக் காணலாம்.

இதாலிய எல்லைகளிலும் நோக்கம் மாறிவருகிறது. பாலர்மோவில் கொஞ்சமும் திருப்தி ஏற்படவில்லை. "பிரிடிஷ் படையெடுப்பு என்னைத் திகிலடையச் செய்தது. இரவில் இன்னும் அதிக பயமும் ஏற்படுகிறது. இவ்விதமான ஆபத்துகள் தீர்ந்து சுகம் பெறும் சமயத்தை எதிர்பார்த்து வீட்டிற்குள் அடைப்பட்டிருந்தோம்".

"இந்த தினம் எங்களுக்கு அதிக ஆபத்து விளைந்தது. ஆனால் மறுபடி உயிர் பிழைத்தெழுந்தோம். எங்களுக்கு அருகில் 5 குண்டுகள் வெடித்தன. தூங்கும் சமயத்தில் குண்டுகள் வெடித்து திடுக்கிட்டு எழுந்து பயந்தால் எவ்விதம் சுகம் ஏற்படும். காலையில் எழுந்தால் உடம்பிற்கு அசௌகரியம் தான் விளைகிறது" என்றும் சொல்லுகிறார்கள்.

இவ்விதமாக அச்சுநாடுகள் பூரா பிரிடிஷ் விமானங்களால் ஏற்படும் கெடுதியைக் கண்டு பயம் ஏற்பட்டிருக்கிறது. நேரில் சேதத்தைப் பார்ப்பதாலும், அறிக்கைகள் பரவுவதாலும், ரகசிய வழிகளில் செய்திகள் எங்கும் செல்வதாலும், அரசாங்க பிரசாரத்தால் உண்மையை மறைக்க முடியாது.

---

## ஜெர்மனி கப்பற்படையைத் தயாரித்தவிதம்.

## சிறு சண்டைக் கப்பல்களினால் வியாபாரக் கப்பலைத் தாக்க முடியும்.

## வேகமாகச் செல்லக்கூடிய ஆயுதம் ஏற்றிய கப்பல்கள் கொள்ளையடிக்க உதவும்.

## பிரிடிஷ் கப்பல்களுடன் நேருக்குநேர் சண்டைநேராமல் தப்பிக்கப் பார்ப்பது.

லப்டினண்டு கமாண்டர் தாமஸ் உட்ரோப் சமீபத்தில் பி. பி. ஸி-யில் பேசியது.

இந்த யுத்தம் ஆரம்பிக்குமுன்னேயும், ஹிட்லர் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னேயும் பிரிட்டனை எதிர்க்கக்கூடிய அவ்வளவு பெரிய கப்பற்படையைக் கட்ட சாத்தியமில்லை என்று ஜெர்மன் அதிகாரிகள் தீர்மானித்திருந்தனர். ஆகையால் எதிரிகளின் வியாபாரக் கப்பலைத் தாக்கக்கூடிய கப்பல்களைக் கட்டுவதில் ஈடுபட்டனர். சமுத்திரத்தில் ஆதிக்கத்தைப்பெற விரும்பவில்லை.

அதற்குத் தேவையானபடி நீர்மூழ்கிகளும், சுரங்க வெடிகளும், தூரலக்ஷியங்களைச் சுடக்கூடிய பீரங்கிகளும், சிறு சண்டைக் கப்பல்களும் தயாரித்தனர்.

டிரெட் நாட் என்ற கப்பல் செய்ததிற்குப்பிறகு இப்பொழுதுதான் சிறிய கப்பல்களே கட்டப்படுகின்றன.

10,000 டன்னுக்குமேல் கப்பல்களை ஜெர்மனி வைத்துக்கொள்ளக்கூடாது என்று வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை சொல்லுகிறது. ஆகையால் சிறியவைகளாகச் செய்தது.

இவை வேகமாகச்செல்லும். நீண்ட காலம் சமுத்திரத்தில் நிற்கலாம். ஆயுதங்களையும் ஏற்றிச்செல்லும். முக்கியமாக கடல்கொள்ளையில்தான் ஈடுபட்டிருந்தன. எந்த விதமான யுத்தக் கப்பலின் அருகிலிருந்தும் வேகமாக ஓடிவிடும். இவைகளிலுள்ள 11 அங்குல பீரங்கிகள் எவ்விதமான நாசகாரிகளையும் தொலைத்துவிடும். தப்பமுடியாத தருணத்தில் எதிரியின் கப்பலை மூழ்கடித்துவிடும்.

## இருக்குமிடத்தை கண்டுபிடிப்பது சிரமம்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது இம்மாதிரியாக மூன்றே கப்பல்கள்தான் பிரிட்டனிடம் இருந்தது. ஹுட், ரினௌன், ரிபல்ஸ். இவை தனியாக பீரங்கி ஏந்திச் செல்லும். 8 அங்குல குருயிஸர்களால் ஒரு சிறு கப்பலைத்தாக்கி விடலாமென்று நினைக்கப்பட்டது.

உலக அமைப்பில் கடலுள்ள பிரதேசத்தில் எந்த பாகத்திலும் எதிரியின் சிறு கப்பல்கள் தோன்றும். அந்த இடத்திற்கு ரெய்டர் கப்பலைக்கொண்டுவர வேண்டும்.

ஆகையால் பிரிடிஷ் கப்பல் இலாகாக்காரர்கள் என்ன செய்வதென்பதைப் பற்றிக் கவலைகொண்டனர். தரையில் நுட்பமான உளவுகளால் எதிரியின் நிலையை கண்டுகொள்ளமுடியும். ஜனங்களும் சொல்லிவிடுவார்கள். எதிரி என்ன செய்யக்கூடுமென்றும் என்ன செய்யப்போகிறானென்றும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். பிரதேசத்தைப் பார்த்தாலும் பட்டணங்களின் வழியேயும் எதிரி சென்றிருப்பதைக் காணமுடியும். ஆனால் கடலில் கப்பல் சென்றிருக்கிறதா இல்லையா என்று அம்மாதிரி காணமுடியாது.

பிரயாணத்தைப் பூரா செய்யாத ஒரு S. O. S. பாதி வழியில் கண்டுபிடிக்கப்படும். ஒரு வியாபாரக் கப்பல் துறைமுகம் சேரவில்லையென்று அறிவிக்கப்படும். அல்லது உயிர்படகுகளில் பூரா பசிதாகத்துடன் மனிதர்கள் நிரம்பி எங்கேயோ போய்ச்சேருவார்கள். இவைகளைக்கண்டு எதிரி நடமாட்டத்தை ஊகிக்கவேண்டும். அதற்குள் எங்கேயாவது எதிரி போய்விடலாம். இவ்விதமாக அவனைப் பிடிப்பது முடியாததாகக் காணப்பட்டது.

ஆனால் ரெய்டர் கப்பல்களுக்கு ஒரு சிரமம் இருக்கிறது. தனிவழி செல்லும் கப்பல்களைத் தாக்க விரும்பினால் அநேகமாக பிரயாண மார்க்கங்களில் சஞ்சரிக்க வேண்டும். அப்பொழுது நாம் காவல் புரியப்படாத கப்பல்களை வேறிடங்களில் மாற்றியனுப்பமுடியும். வியாபார மார்க்கங்களை நாம் காப்பாற்ற முடியும்.

இதைத் தவிர விமானமூலம் வேவுபார்க்க முடியும். கப்பல்கள் பலமாதங்களில் செல்லக்கூடிய வழிகளில் இவ்விமானங்கள் வாரக்கணக்கில் செல்லும். இவை சஞ்சரித்தால் ரெய்டர்களுக்குக் கஷ்டம்தான். இவ்விமானங்கள் விரும்புவதெல்லாம் கொஞ்சமான உதவியுடன் கப்பல்கள் சென்றுகொண்டிருந்தால் போதுமானது. ஜார்விஸ்பே என்பதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இந்த



உதவிக்கப்பல்களில் பாதி கவிழ்க்கப்பட்டிருந்தாலும் பாதகமில்லை. இவ்விமானங்கள் உதவியளிக்கும். இதற்காக பலமான உதவி அளிக்கப்பட்டுவருகிறது. சென்ற கிருஸ்துமஸ் தினத்தன்று பேர்விக் என்ற பிரிடிஷ் கப்பலிடம்வந்த ஒரு ரெய்டர் சேதம் விளைவிக்க முடியாமல் தப்பி ஓடிவிட்டது.

## இருவகைப்பட்டவை.

ஒன்று யுத்தக்கப்பல் இனத்தைச் சேர்ந்த ரெய்டர்கள். இவை சிருங்கலையான கருவிகள் கொண்டது. ஸப்ளைக் கப்பல்களிலிருந்து எண்ணெய் முதலியதைப் பெற்றாலும், சுத்தம்செய்ய தளங்களுக்குத்தான் போகவேண்டும். அப்படிச் செல்லுவதற்கு கொஞ்ச அவகாசம்தானிருக்கும்.

ஜெர்மன் ரெய்டர்கள் அவ்வளவு தொந்தரவானவை அல்ல. கிராப்ஸ்பீ கேவலமான முடிவை அடைந்தது. ஷார்ன் ஹார்ஸ்டு, நீஸ்நௌ, இவை ட்ரெஸ்ட் துறைமுகத்தை நோக்கி விரட்டப்பட்டது. பிஸ்மார்க் மூழ்கடிக்கப்பட்டது. வெளி சஞ்சாரத்திற்குப் புறப்படுகையில் லட்ஜல் கவுக்கப்பட்டது.

மற்றொன்று வியாபாரக்கப்பல்களில் ரெய்டர் கருவிகளைக் கொண்டவை. இவைகள் வேறுவிதமான பிரச்னைகளைக் கொண்டிருக்கின்றன. கடலில் வெகுகாலம் இவை நிற்கமுடியும். ஒருவருஷகாலம் வெளியே இருக்கலாமென்று ஜெர்மனியை விட்டுப் புறப்படுகின்றன. ஒரு சமயம் ஆல்ட்மார்க் என்ற கப்பல் வடதுருவக் கடலில் ஒருமாத காலம் சுழன்றுகொண்டிருந்த பிறகு அங்கிருந்து புறப்பட்டதாம்.

இவைகள் பல வேஷம்போட முடியும். பல தேசக் கொடிகளுடன் செல்லும். உதாரணமாக ஜெர்மானியர், ஜப்பான், பிரெஞ்சு, டச்சுக்கொடிகளை உபயோகித்திருக்கின்றனர். பாய்மரமில்லாமலும், யந்திரம் வேலை செய்யாதது போலும் காணப்படும். தனது நிஜவர்ணத்தை மாற்றிக்கொண்டு பெயரையும் வேறு வைத்துக்கொள்ளும்.

ரெய்டர் என்பது ஆபாசமான ஒரு வியாபாரக் கப்பலென்றும் சில சமயம் ஜப்பானியக் கப்பலைப்போலும் ஆஸ்திரேலியக் கப்பலைப் போலும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவைகளை எளிதில் பழுதாக்கமுடியாது.

ஆனால் யுத்தக் கப்பலைப்போல் அவ்வளவு பலமானவையல்ல. ஆகையால் துணிந்து சண்டையில் ஈடுபடமுடியாது. மேலும் பெரும்படியான ரிபேர்களைப் பார்க்கும் கருவிகள் இதில் இல்லை. அதற்காக நடுநிலை நாட்டுத்துறைகளுக்கு வந்தால் இவைகளின் உண்மை நிலை மாறிவிடும்.

## கஷ்ட ஜீவனம்.

ஆகையால் தந்திரமான இடங்களில் கடலில் தனிக்கப்பல்களை எதிர்பார்த்துக்கொண்டுதான் இவை இருக்கும். நெருக்கமான கப்பல் உள்ள இடங்களுக்கு தைரியமாக இவை போகா.

அதிக சேதத்தையும் இவைகள் விளைவிக்க முடியாது, துர்பலஹிம்சையாகத்தானிருக்கும். சில சமயங்களில் கைதிகளை ஒரு கப்பலிலிருந்து ஸப்ளைக் கப்பல்களுக்கு மாற்றும். அநேகமாக கைதிகளைத்தான் சுமந்து செல்வதில்லை.

பிரிடானியா கப்பலின் பிரயாணிகள் 23 தினங்கள் 1,600 மைல் தூரத்திலுள்ள பிரஸீலிக்குப் போகும்போது காபந்தில்லாத படகுகளில் சென்றனர். 84-ல் 46 பேர் இறந்தனர். துஷ்ட மீன்கள் உள்ள பிரதேசங்களில் மீதியுள்ளோர் கட்டைகளைக்கொண்டு மிதக்கவும் நேர்ந்தது.

## வெடிகண்ணிகள் பரவப்பட்டிருக்கும் கடலை நாமுழுக்கள செய்யும் வேலைகள்.

பிரிட்டிஷ் தீவுகளில் வந்து போய்க்கொண்டிருக்கும் கப்பல்கூட்டத்தில் சேர்ந்து செல்லும் வியாபாரக் கப்பல்களை லக்ஷியங்களாக வைத்துத் தாக்க ஜெர்மன் நீர்மூழ்கிகள் தங்கள் விமானங்களின் துணைகொண்டு எதிர்ப்பது சுலபம். ஆனால் நம்முடைய நீர்மூழ்கிகளோ வெடி கண்ணிகள் நிறைந்தும், எதிரிக் கப்பல்களும், விமானப்படையும் பாதுகாத்துவரும் சமுத்திரக்கரைகளுக்கும் போய் தாக்கவேண்டியிருக்கிறது.

அநேக வாரங்களாக சேர்ந்தாற்போல் சமுத்திரத்திற்குள் திருஷ்டி கருவி மூலம் எதிரிகளின் வருகையைப்பற்றி தேடிப் பார்த்துக்கொண்டும், இராக் காலங்களில் எதிரியைத் தாக்க முடியாமல் போனாலும், தங்கள் பாட்டரியை மறுபடி சார்ஜ் செய்து கொள்ளவும், அவைகளிலுள்ள சிப்பந்திகள் சுத்தமான காற்றை சுவாசிக்கச் செய்யவும் வெளியே வருகின்றன.

துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்டது முதல் திரும்பி வரும் வரை நீர்மூழ்கிக் கப்பலிலுள்ள மனிதர்கள் பெரும்பாலும் பகல் வெளிச்சத்தைப் பார்க்கிறதே இல்லை. சிப்பந்திகள் ஐம்பது அறுபது பேர்கள் அதனுள் இருப்பதால் உள்ளே மிகவும் நெருக்கமாயிருக்கும். யுத்த காலத்தில் சிப்பந்திகள் தங்கள் உடைகளை மாற்றுவதும் கிடையாது, தோய்ப்பதும் கிடையாது.

சிப்பந்திகளுக்கு நல்ல உணவு கொடுக்கப்படுகிறது. கப்பற்படை திட்டத்தில் சேராத உபரியாகத் தானியங்கள், காய்கறிகள், புதிய பழவர்க்கங்கள், தகரங்களிலடைத்த திணுசுதிணுசான சூப்புகள், மசாலையிட்ட இறைச்சி, முட்டைகள், சாக்லெட்டு, வகைபரா தினபண்டங்கள் மாலுமிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஜலத்தில் மூழ்கியிருக்கும்பொழுது, துர்நாற்றமும், சூடும் ஏற்படக்கூடுமாதலாலும், சமைப்பதற்கு வேண்டிய மின்சார சக்தியை படகு போய்க்கொண்டிருக்கும்பொழுது கொடுக்க முடியாமலிருப்பதாலும் அங்கு சமைக்க முடிவதில்லை. இதனால்தான் இராக் காலத்தில் படகு சமுத்திரத்தில் மேலேயிருக்கும்பொழுது பகலில் சமைக்கவேண்டிய உணவை இரவில் சமைத்து, இருட்டினவுடன் காலை போஜனமும், நடுநிசியில் சிற்றுண்டியும் உட்கொண்டு வருகிறார்கள். அவர்கள் சுத்தமான காற்று வாங்கும் பொழுதுதான் உஷ்ணமான உணவு எடுத்துக் கொள்ளக்கூடும். அப்பொழுதுதான் அவர்கள் சுருட்டு பிடிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இராக் காலங்களிலும்கூட எதிரி தென்பட்டால் உடனே "திடீரென்று மூழ்கித் தாக்க"த் தயாராக இருக்கவேண்டும். இதில் வேலைபார்ப்பதில் ஆபத்து அதிகம். யார் முதலில் தாக்குகிறார்களோ அவர்களுக்குத்தான் ஜயம். பகல் காலம் பூராவாக பகைவரை எதிர்த்த நீர்மூழ்கிகள் பகைவர்களின் ஆழவெடிகளால் திரும்பத் தாக்கப்படும். எதிரிகளின் வெடிகள் சில சமயம் சமீபத்திலும், சில சமயம் தூரத்திலும் விழுந்துகொண்டிருக்கும். அவர்கள் பிழைப்பதும் இறப்பதும் ஆழ வெடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது. ஒரு சமயம் "வெடிகுண்டுகளை எண்ணும் கருவி" 100 என்று குறிப்பிட்டபிறகு கெட்டுப்போய்விட்டது.

நீர்மூழ்கிக் கப்பலில் ஆழவெடி விழும்போது ஒருவித உணர்ச்சி ஏற்படுமென்று என் சிநேகிதர் பின்வருமாறு வருணித்தார்:—"அருகில் வெடிகுண்டுகள் வந்து வெடிப்பது கப்பலை அசைத்தும், கருவிகளை உடைத்தும், விளக்குகளை அணைத்தும் விடுகின்றன. மூலைகள் வழியாகவும், பொருத்தப்பட்டிருக்கும் இடங்கள் வழியாகவும் ஜலம் உள்ளே வரும்.............இன்னும் எந்த சமயத்திலும் எந்தவிதமான விபத்தும் சம்பவிக்கும்".

நீர்மூழ்கியில் உள்ள சிப்பந்திகள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் என்றே சொல்லலாம். மணிக்கணக்காக எதிரிகளின் வெடிகுண்டுகளின் ஓசையும், கப்பலை நடத்தும் கருவிகளின் ஓசையும் தலைக்குமேல் எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருக்கும். இருந்தாலும் அவர்களுக்கு பயம் என்பது கிடையாது. மேலும் இவர்களுக்குத் தோல்வி என்பதே கிடையாது.

## முப்பது நீர்மூழ்கிகள் நஷ்டம்.

நீர்மூழ்கிகளில் ஏற்பட்ட சேதவிகிதம் போல் பிரிட்டிஷ் சைனியத்தின் வேறு எந்தப் பகுதியிலும் நஷ்டம் ஏற்படவில்லையென்று பிரதம மந்திரி அறிவித்தார். யுத்தம் ஆரம்பித்ததுமுதல் நமக்கு 30 நீர்மூழ்கிகள்தான் சேதம். மரித்த வீரர்களும், அவர்களை மூடிக்கொண்டிருக்கும் எஃகு தகடுகளும் சமுத்திரத்திற்கு அடியில் கிடக்கின்றன. அலைகளினால் ஏற்படும் நுரையே அவர்களுடைய கல்லறையிலுள்ள சிலைகள். அவர்களின் சரித்திரச் சுருக்கம், அவர்களைத் தெரிந்தவர்களின் ஹிருதயத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் வாலிபர்கள்; பிரிட்டிஷ் மக்களில் முதன்மையானவர்கள். ஆனால் அவர்கள் மரணம் வீண் போகவில்லை. அவர்களின் சாமர்த்தியம், சிரத்தை, தியாகம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு மட்டுமல்ல, இந்த தர்ம யுத்தத்திற்கே விலைமதிப்பு இல்லாதவை.

---

## ஜெர்மானியர்களும், அவர்கள் தலைவர்களும்.

## இரண்டு வருஷ யுத்தத்தின் பலன் என்ன?

## நாஜி யுத்த யந்திரம் அழிக்கப்படவேண்டும்.

## ரீச்சில் கலகம் ஏற்படும்.

டல்ப் என்பவர் எழுதுகிறார்.

இரண்டு வருஷ யுத்தத்துக்கு முன் ஹிட்லர் யுத்தம் ஆரம்பித்தது முதல் ஜெர்மானியர்களைப் பொறுத்த பலவித பிரஸ்தாபம் வந்தது. வெளியூர்களில் பொய் ஜோஸியம் சொல்லுகிறவர்களாலும், தேசத்துரோகிகளின் உதவியாலும், ஜெர்மன் பிரசாரத்தினால் இவ்வித பிரஸ்தாபம் ஏற்படுத்தப்பட்டது. ஜெர்மன் ஆக்கிரமிப்பைத் தெரியாமல் இருந்த ராஜ்ய அதிகாரிகளை ஏமாற்றி, ஜெர்மானியர்கள் பயன் பெற்றுவந்தார்கள்.

யுத்தத்திற்கு முந்தி ஜெர்மனியில் தேசிய சமத்துவத்திற்கு எதிர்ப்பு இருந்து வந்தது. எல்லா வகுப்பு ஆண், பெண் அடங்கிய எல்லோரும் ஜெர்மனிக்கு மாத்திரமல்ல, எதிர்கால நாகரீகத்திற்கே அது அபாயமென்று தெரிந்து அதை ஒழிக்க தைரியமாகப் போராடினார்கள்.

அவர்கள் ஆட்சேபித்தார்கள்; அதற்காகத் தண்டனையும் அனுபவித்தார்கள். காவல் கைதி செய்யப்பட்டவரின் எண்ணிக்கை அதிகமாயிற்று. ஆனால் இந்த எதிர்ப்பு அரசாங்கம் நடத்துவதைப் பாதிக்கவில்லை, ஏனெனில், எதிர்ப்பவர்கள் முன்வேலிக்குள் அடைபட்டு தண்டிக்கப்பட்டார்கள். நாஜிக்கு எதிர்க் கக்ஷியிலும் ஒற்றுமையில்லாமல் இருந்துவந்தது.

அவர்களுக்குக்கூட இந்த தேசிய சமத்துவக் கக்ஷியில் உள்ள சில கெட்ட மனிதர்கள் போய்விட்டால், ஜெர்மானியர்களின் வாழ்க்கைக்கே அந்தக்கொள்கை நலமாயிருக்குமென்று தோன்றிவிட்டது.



ஹிட்லர் அரசாட்சி ஆரம்ப காலத்தில் குறைகூறுபவர்களை ஏமாற்றவும், அவர்கள் தலைவர்களை அழிக்கவும் சுலபமாக இருந்தது. யுத்தம் ஆரம்பித்த பிறகு ஜெர்மனிக்கு வெளியிலுள்ள சிலர், ஜெர்மனியிலுள்ள நல்ல மனிதர்கள் சர்வாதிகாரத்தை ஒழித்துவிடுவார்கள் என்று எண்ணினது ஏமாற்றமாய்விட்டது. அவர்கள் ஜெர்மானியர்களின் சக்தியையும், தேசாபிமானத்தையும் குறைத்து மதித்து விட்டார்கள். ஜெர்மன் பிரசாரத்தினால் ஜெர்மனி தாக்கப்பட்டிருக்கிறதென்றும், அதன் நிலைமை அபாயகரமாய் இருக்கிறதென்றும், ஜெர்மானியர்களுக்குத் தோன்றும்படி செய்யப்பட்டுவிட்டது. சிலர் யுத்தத்தில் ஜயம், தேசிய சமத்துவக் கொள்கை நன்றாக அபிவிருத்தியடையும் என்று தேர்ச்சிசெய்து கொண்டார்கள்.

## மனமாற்றம் இல்லை.

இரண்டு வருஷத்திற்கப்பால்? இதுவரையில் அந்தத் தன்மையில் மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஜெர்மானியர்கள் சமாதானத்தைக் கோரலாம். ஆனால் அதற்கு விலை கொடுக்கமாட்டார்கள். அவர்கள் உலகத்திலேயே தங்கள் தேசத்தின் மேன்மையையும், ஒவ்வொரு தனிப்பட்ட ஜெர்மானியருக்கும் பயன் பெற்ற சாதகங்களுடனும் வெற்றி பெற்றவனுக்குள்ள சமாதானம் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

ஜெர்மன்படைகள் ஜயத்துக்கு மேல் ஜயம்பெற்று ஐரோப்பாவில் குறுக்கிலும், நெடுக்கிலும் வியாபித்ததைப் பார்த்து இப்பொழுது வெற்றியின் பயனை அனுபவிக்க விருப்பப்படுகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்வரை அவர்களின் நம்பிக்கைக்குக் குறைவு வரும்படி ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால், சமீபத்தில் பிரிட்டிஷ் விமானப்படை அவர்களுக்கு அருகில் யுத்தம் நடத்தியிருக்கிறது. ஜெர்மன் நகரங்கள் தாக்கப்பட முடியாதென்று ஏற்கனவே சொல்லிவந்ததற்கு விரோதமாக பலத்த விமானப் படை எதிர்ப்புகள் ஏற்படுமென்று உத்தியோக முறையில் எச்சரிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மேலும் விமானத் தாக்குதல் அதிகரிப்பதைப் பார்த்து பிரிடன் தோற்கடிக்கப்படவில்லை என்று ஜெர்மானியர்களுக்கு இப்பொழுதுதான் தெரியவருகிறது. இங்கிலாந்தும், அமெரிக்காவும் சேர்ந்துகொண்டு ஐரோப்பாவில் கிடைத்த கொள்ளைப்பொருள்களையும் அபகரிக்கப்பட்டு, நாஜிப் பொருளாதாரத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுவிடுமோ என்று சந்தேகம் தோன்றலாம்.

மூன்றாவதாக, ருஷ்யாமேல் படையெடுப்பு விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதன் முடிவு எவ்வாறாகயிருந்தாலும். உயிர்ச் சேதம் ரொம்ப அதிகம் ஏற்படவேண்டுமென்று தோன்றுகிறது. இவ்வளவு சேதம் ஏற்பட்ட பிறகு ஜயம் அடைந்தாலும் அத்துடன் யுத்தம் நின்றுவிடாது. சைனியங்கள் சண்டையிடாமல் சிறிது காலம் பிரிக்கப்பட்டு, வீட்டிற்குத் திரும்பிவிடாமல் மீண்டும் சண்டையிடும்படிதான் நேரிடும்.. ருஷ்யாவிலுள்ள எதிர்ப்புகள் எல்லாம் அழியும் வரை அவர்கள் சண்டையிடத்தான் வேண்டும்.

ஹிட்லருக்கு ராணுவ வெற்றிமட்டில் போதாது. ருஷ்யாவுடன் சமாதானத்திற்குச் சமாதானங்கள் ஏற்படுத்தி, ஜயித்தவனுக்கும், தோற்றவனுக்குமுள்ள சிநேகத்தை உண்டாக்கவேண்டும். அப்படிச் செய்யாமல்போனால், கிழக்குப் பக்கத்தில் ஏற்படும் அபாயம் பூராவும் நீங்காமல், அவனுக்கு ஜனங்களிடமுள்ள மதிப்பும் குறைந்துவிடும். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு இருபக்கங்களிலும் சண்டை நேரிடுமென்று அவனுக்குக் கிலிபிடித்து

# அமெரிக்கனின் அபிப்பிராயம்.

---

"அரசியல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் புயல் காற்று."

## நடுநிலைச் சட்டம் ரத்து செய்யப்படுமா?

## ஐந்தாம் படையின் எதிர்ப்பின் அறிகுறிகள்.

*ஜார்ஜ் ஹோல்மான் எழுதியது.*

அமெரிக்கர்கள், ஜனாதிபதி எத்தனித்ததை எதிர்த்ததும், அவர் செய்து முடித்ததும் அதைப் பிற்பட்டு ஆமோதித்ததையும் குறித்து பிராடரிக் நெல்ஸன் (பால்டிமோர் "ஸன்" பத்திரிகையைச் சேர்ந்தவர்) சொன்னது எவ்வளவு சரி என்பதை இந்த வார சம்பவங்கள் ரூபித்திருக்கின்றன.

11-ம் தேதி ஜனாதிபதி ஒலிபரப்பியது முதல் அமெரிக்கப் பொது மக்களுக்கு ஒரு க்ஷணங்கூட ஓய்வில்லை. தேசத்தார் எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்ற பிரகடனைக்குப் பிறகு குழப்பமும், சஞ்சலமும் இருந்துவந்தது போக, கிளர்ச்சியான நடவடிக்கைகள் சுழல்காற்றுபோல் எழும்பி இருக்கின்றன.

யுனைடெட் ஸ்டேட்ஸின் தரைப்படை, கப்பற்படைகளின் பிரதம தளகர்த்தர் என்ற முறையில் முதலில் "உயிரை மாய்க்கும்படி அடி" என்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு உத்தரவிட்டிருக்கிறார். நாலு நாட்களுக்குப் பிறகு கப்பற்படைக் காரிய தரிசி கர்னல் நாக்ஸ் அன்று நடுஇரவிலேயே ஜனாதிபதியின் உத்தரவுப்படி நடந்து கொள்ளும்படி அமெரிக்கக் கப்பற்படைக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகவும் சொன்னார்.

இதிலிருந்து ஜனாதிபதி ஒலிபரப்பியது முதல் நாக்ஸ் தெரியப்படுத்தும்வரை அந்த நாலு நாட்களுக்குள் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து ஐஸ்லாந்துக்கும் பக்கத்திலிருக்கும் கடல்களிலும் யுத்தசைக்கடன் பொருள்கள் கொண்டுசெல்லும் எந்தக் கொடி கட்டிய கப்பல்களுக்கும் "தகுந்த பாதுகாப்பளிக்க" ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

கடைசியாகப் பாதுகாப்பளிக்கும் முறையை அமெரிக்க அரசாங்கம் எடுத்துக் கொண்டதாகவே உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

'அமெரிக்கப் பாதுகாப்புக் கடல்கள்' என்பதற்கு கர்னல் நாக்ஸ் கொடுத்த விமர்சனம் இப்பால் அரசாங்க இலாகா செய்திருக்கும் விவரப்பத்திரத்தில் மாற்றப் பட்டிருக்கிறது. அதன்படி அமெரிக்கக் கப்பல்கள் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் சிலபாகங்களுக்கு யுத்தப் பொருள்களையும், பிரயாணிகளையும் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக நடுநிலைச் சட்டத்தின் கீழ் "ஐக்கிய அரசாங்கம்" என்ற ஜனாதிபதி உபயோகித்த பதம் இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, வேல்ஸ், வடக்கு ஐயர்லாந்து இவைகளைத்தான் குறிக்குமென்ற யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்க நியாயவாதி, மிஸ்டர் பிரான்ஸிஸ் பிடில் (Biddle) செய்த புதிய தீர்மானத்தை ஒத்திருக்கிறது. அந்தப் பிரகடனத்தில் ஐக்கிய அரசாங்கம், இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து, தென்

ஆகவே 1941-ல் 10,00,000-டன் நிறையுள்ள 115 கப்பல்கள் 1941-லும், 36,90,000 டன்னுள்ள 400 கப்பல்கள் 1942-லும் செய்யப்படும். பிரிடனில் ஒரு வருஷத்தில் 20,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் கட்டப்படுவதோடு ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் மும்மரமாக செய்யப்படுகின்றன.

இதனால் அட்லான்டிக் யுத்தத்தில் சேரும் கஷ்டத்தை ஈடுசெய்வதோடு அதிகமாகக் கப்பல்கள் உபயோகத்தில் இருக்கும்.

ருஷ்யாவுக்கு, பிரிடன் விலைபொருள்களும், பூர்த்தியான சாமான்களும் அனுப்பி வந்ததில், இவை அமெரிக்காவிலிருந்து நேரே ருஷ்யாவுக்குப் போகின்றன. ஆனால் இதுமாத்திரம் போதாது.

ஸெப்டம்பர் கடைசி வாரத்தில் பிரிடனில் செய்யப்பட்ட டாங்கிகளின் கணக்கு அதிகப்பட்டிருக்கிறது. இது பூராவும், மற்ற யுத்த சாமான்களான தகரம், ரப்பர், மருந்து சாமான்களும் அனுப்பப்படுகின்றன. பிரிடனின் வெளி நாடுகளிலிருந்து தகரமும், ரப்பரும் நேரே ருஷ்யாவுக்குப் போகின்றன. பழைய ஏற்பாட்டின்படி ருஷ்யக் கப்பல்களில் இவை போகாமல் மூன்றில் இரண்டு பங்கு பிரிடிஷ் கப்பல்களில் செல்லுகின்றன.

---

## பர்மா முக்கியத்வத்தின் அதிகரிப்பு.

---

### அமெரிக்கப் பைடர் விமானங்கள் பர்மா ரஸ்தாவை பாதுகாக்கின்றன.

இந்தோ-சைனாவில் ஜப்பான் புதுவிதமான தந்திரத்துடன் நடப்பதற்குப் பதில் சொல்வதிலும் வெறும் வார்த்தை, வியாஸங்கள் எழுதுவதிலுமில்லை. அதிக வேகமுள்ள அமெரிக்கப் பைடர் விமானங்கள் அடங்கிய விமானப்படையின் வேலைதான் அதற்குப் பதில்.

ஏற்கனவே சைனாவுக்கு அமெரிக்கப் பைடர் விமானங்களைத் தூக்கிச் சென்ற பழமையான லாரி போக்குவரத்துள்ள பர்மா ரஸ்தாவுக்குமேல் இப்பொழுது அவை தாங்களாகவே பறக்கின்றன. இதோடு, பர்மா விமான தளங்களில் உள்ள பிரிடிஷ் விமானப்படைக்கு அமெரிக்கப் பைடர் விமானங்கள் போய்ச் சேர்க்கப்படுகின்றன.

ஐராவதி நதியில் அமெரிக்கக் கப்பல்களும், வியாபாரக் கப்பல்களும், யுத்தசைக்கடன் பொருள்களைக் கொண்டுவந்து ரெங்கூனில் கொட்டுகின்றன. ஐரோப்பாவிலும், தூரக்கிழக்கிலும் ஆக்கிரமிப்பை இப்பொழுது நிறுத்தப்படுவது தான் யுத்தகைக்கடனுக்கு அர்த்தம். கப்பல்களிலிருந்து சாமான் இறக்கப்பட்டவுடன் 50 அடி உயரமுள்ள விமானங்கள், டிரக்குகள், யுத்தப்பொருள்கள் அடங்கிய பெட்டிகளில் வைத்து பர்மா தேசம் பூராவும் கொண்டுபோகப்படுகின்றன. இது அமெரிக்கா முழு உதவி செய்வதை நிரூபிக்கிறது.

நேற்றுவரை அதிகம் கவனிக்கப்படாமலிருந்த பர்மா இப்பொழுது தூரக்கிழக்கில் முக்கியத்வம் வாய்ந்த இடமாய்விட்டது. இந்தோ-சைனாவில் ஜப்பான் புதிய விமான தளங்களைச் சம்பாதித்து இம்மாதிரி மாறுதல்களை உண்டாக்கிவிட்டது. தாய்லாந்தில் லஷியா-மீர்ப் ஆகாய விமான தளம் இந்தோ-சைனா எல்லையில் ஹாங்காருக்குப் பக்கமிருக்கிறது, அது ரெங்கூனிலிருந்து 500 மைல் தூரம். இந்தோ-சைனாவில் லெபாஸ்மாகாணத் தலைநகரான வெண்டெயின் ரெங்கூனிலிருந்தும், லேஷியோவிலிருந்தும் 400 மைல் தூரத்திலிருக்கிறது.



லஷியா-மீர்ப்பிலிருந்தாவது, வெண்டெயினுவிலிருந்தாவது பாதுகாப்பில்லாத பர்மா ரோடைத் தாக்கினால் யுத்தகைக்கடன் பொருள்கள் சைனாவுக்குப் போய்ச் சேராவிடாமல் செய்யக்கூடும். சைனாவின் யுத்தக் கப்பல்களும் பிடுங்கப்படும். ஆனால், பர்மாவில் பிரிடிஷ் விமானப்படைக்காக இருக்கும் அதிவேக முள்ள அமெரிக்கப் பைடர்களும் சைனாவுக்குப் போகும் பர்மா ரஸ்தாக்களின் மேல் பறக்கும் விமானங்களும் அம்மாதிரி தாக்குதல்களை அழித்துவிடும்.

இந்தோ-சைனாவிலிருந்து வரும் பாம்பர்கள் பூராவும் பைடர் விமானங்களால் பாதுகாக்கப்பட்டு பறக்க முடியாத அவ்வளவு தூரத்திலிருக்கின்றன. தெற்கு சைனாவிலும் பர்மாவின் கிழக்கு எல்லைக்கு அருகில் விமான சாதனங்களின் தொடரில் வைக்கப்பட்டிருக்கும் அதிவேகமாய்ச் செல்லும் பைடர் விமானங்கள் அவைகளைத் துண்டுதுண்டாக்கிவிடும். எங்கெங்கே தாக்குதல்கள் இருக்கிறதோ, சீக்கிரத்தில் அங்கங்கே தத்தித் தத்திப்போக பைடர் விமானப்படைக்குச் சாதகமாக புதிய விமான தளங்கள் இருக்கின்றன.

இந்தப் புதிய ஆகாய விமான தளங்களில் ஜப்பான் மேற்கேபோக இனி மேலும் ஏற்பாடு செய்வதை நிறுத்திவிட பாம்பர்களையும் அங்கு தங்கச் செய்யக் கூடும்.

உத்தியோக முறையில் இதற்கு விமர்சனமில்லை. ஆனால் பிரிடிஷ் விமான ஓட்டிகள், யந்திர வேலைக்காரர்கள், அமெரிக்க நிபுணர்கள், சைனா பூ சாஸ்திர நிபுணர்கள், துரைத்தனத்தில் பற்றுள்ளவர்கள், மேற்கே ஜப்பானியர்கள் ஆக்கிரமிக்காமல் தடுக்க பர்மாவில் அவர்கள் வேலைசெய்வது, அமெரிக்கா, பிரிடன் சைனா இவைகள் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பதைக் காட்டுகிறது.

---

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம். ஸெப்டம்பர் 30—அக்டோபர் 5, 1941.

---

### உங்களுக்குத் தெரிந்ததா?

"இரவு 8 மணியிலிருந்து காலை 6 மணி வரை இந்திய மக்கள் அவரவர்கள் வீட்டிலிருந்து வெளிக்கிளம்பக்கூடாதென்று தடைபட்டிருக்கிறார்கள்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் ஒலிபரப்பு, ஸெப்டம்பர் 30).

### டாங்கி வாரம் கோயபெல்ஸைத் தடுமாறச் செய்கிறது.

"ஜெர்மனி ஏராளமான விகிதத்தில் கப்பல்களை மூழ்கடித்துக்கொண்டு வருகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸில் சேகரிக்கப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான டன்கள் நிறையுள்ள ஸப்ளைப் பொருள்கள் கப்பல்களில் ஏற்றியனுப்ப முடியாமல் அழிந்துவிடும்".

மாஸ்கோவில் கூடிய மகாநாட்டின் வெற்றியும், ருஷ்யாவிற்கு வந்து சேர்ந்த ஏராளமான உதவியும், ஜெர்மன் பிரசாரத்தில் குழப்பம் உண்டாக்கின. அன்றைய தினமே அமெரிக்க ஸப்ளைகள் ருஷ்யாவிற்கு வந்துகொண்டிருந்ததென்று பெர்லினி

ஆபிரிக்கா இவைகளுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நேரிட்டிருப்பதாகக் குறித்திருக்கிறது. இந்தப் பிரகடனத்தில் வெளிப்படையாக குறிப்பிட்டிருக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் பிரதேசங்களை நீக்கிப் பார்க்க அமெரிக்கக் கப்பல்கள் போக்குவரத்துக்கு ஏடன், மலேயா, ஸ்டெரியிட் ஸெட்டில்மெண்ட்ஸ், பிரிடிஷ் போர்னியோ, பிரிடிஷ் மேற்கு, கிழக்கு ஆபிரிக்கா, பிரிடிஷ் ஸோமாலிலாந்து இவையும் இருக்கின்றன.

அரசியல் இலாகா இதைப் பிரசித்தப்படுத்த சற்றுமுன், ஜனாதிபதி ஒயிட் ஹவுஸில் நடுநிலைச் சட்டத்தை மாற்றுவதைக் குறித்து காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்து வெகுநேரம்வரை விவாதித்தார். ஒன்றும் முடிவடையவில்லை. நடுநிலைச் சட்டம் பூரா ரத்து செய்யப்படாவிட்டாலும் மாற்றுவதற்கு அடுத்தபடியாக காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது. அந்தச் சட்டத்தை பாதிக்காமல் எவ்வளவு தூரம் விஸ்தரிக்கச் செய்யலாம் என்பது இப்பொழுது ரூபித்திருப்பதால் அந்தச் சட்டத்தை மாற்றும்படி முடிவுக்குவர காங்கிரஸுக்கு உதவியளிக்கவேண்டும். நடுநிலைமை ஏற்கனவே புரக்கணித்த பிறகு ஏன் நடுநிலைச் சட்டம் இருக்கவேண்டும்?

ரூஸ்வெல்டு ஒலிபரப்புச் செய்த 24-மணி நேரத்திற்குப் பிறகு டென்மாயின்ஸிலிருந்து சார்லஸ் ஆகஸ்டு லிண்ட்பர்க் அவருடைய அரசியல் துறையில் நாம் கேட்டறியாத பெரிய பிரசங்கத்தைச் செய்ய விமானத்தில் சென்றார். யூதர்கள், பிரிடிஷ்காரர்கள், ரூஸ்வெல்டின் அரசாங்கம் முதலியவைதான் தேசத்தை சண்டையில் ஈடுபடும்படி செய்கின்றன என்று அவர் சொன்னார். அவர் பொருக்கியெடுத்த வார்த்தைகள் அவருடைய ராஜீய வித்தை முதலியதைக் காண்பித்தன.

சண்டையில் சேரக்கூடாதென்ற கொள்கையில் உள்ளவர்களின் முக்கிய ஸ்தலமான சிகாகோவில்கூட அவர் விமர்சனம் துக்ககரமான பயனை உண்டாக்கியது. ராண்டல்ப் ஹியர்ஸ்டுக்குச் சொந்தமான, ரூஸ்வெல்டுக்கெதிரிடையான சமாசாரப் பத்திரிகைகள்கூட லிண்ட்பர்க் விமர்சனத்தை பலமாகக் கண்டித்தன. இருந்தபோதிலும் லிண்ட்பர்க் கக்ஷியாரின் கோபம் சண்டையில் சேரக்கூடாது என்ற முழு அபிப்பிராயமுள்ளவரின் தன்மையைக் குறித்ததாக இருக்கிறது. சாதாரண அமெரிக்கரின் தேசாபிமானத்தைக் கொடுக்கும்படியான தேசீய வாதம் ஏற்பட்டாலும் சண்டையில் சேரக்கூடாத கொள்கையுடையவர்களின் பக்கம் தோல்விதான்.

பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு பிரதம தளகர்த்தர் என்ற ஹோதாவில் பேசினார். இந்நிலைமையில் அந்த உத்தரவுக்குப் புறம்பாகக் கண்டனம் செய்தால் ராஜத்துரோகமாகும். ஹிட்லரின் மூன் அணிப்படையில் எவர்களிருக்கிறார்களென்று ரூஸ்வெல்டு விவரித்தபொழுது, அமெரிக்காவில் வசிக்கும் ஹிட்லரால் மயக்கப்பட்டவர்களையும், ஏமாற்றப்பட்டவர்களையும் அவர் சேர்த்துக்கொண்டார். இதிலிருந்து ஹிட்லரின் ஏமாற்றத்துக்குட்பட்டிருக்கும் லிண்ட்பர்க் முதலானவர்கள் ஐந்தாம் படையென்று கருதி சிக்ஷிக்கப்படுவார்கள் என்று யூகிக்கலாம்.

பழய கக்ஷிகள் மாறிவிட்டன. யுத்தத்தில் சேருவதா, இல்லையா என்று இரண்டு கக்ஷிகள்தான் இப்பொழுது வியக்தமாய்த் தெரிகிறது. ஏற்கனவே தற்காப்பு முறைகளை அமெரிக்க ஸர்க்கார் ஏற்படுத்திவிட்டதால், லிண்ட்பர்க் போன்றவர்கள் இனி ரேடியோவிலும், பத்திரிகைகளிலும் ராஜத்துரோக முறையில் பேசவும், எழுதவும் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால் நியாய வழியில் சாதாரண பிரசாரத்திற்குத் தடையிருக்காது.



# ஜனநாயக நாடுகள் யுத்த தளவாடம் சேமிக்கும் விதம். ஏராளமான அமெரிக்க ஸப்ளைகள். அமெரிக்கக் கப்பற்தொழிற்சாலைகளின் முன்னேற்றம்.

ஆல்வால்ட் டச் எழுதியது.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் சிலநாட்களுக்கு முன் பிரசுரிக்கப்பட்ட கணக்கைப் பார்த்தால், அட்லாண்டிக் மார்க்கமாக இங்கிலாந்திற்கு ஏராளமான உணவு ஸப்ளைகள் வருவது தெரியவரும்.

இவைகளில் இங்கிலாந்திற்கு மாத்திரம் வரும் சாமான்களுக்குப் பிரதான்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்து சாம்ராஜ்ஜிய நாடுகள் பூராவும் தேவையான இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

## சாமான்கள்.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் 1-ம் தேதி முதல் 1941-ம் வருஷம் ஸெப்டம்பர் 1-ம் தேதி வரையிலும், அதாவது சுமார் 730 நாட்களுக்குள் 1,10,00,00,000 பவுன் மதிப்புக்கு மேலாகவே பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திற்குச் சாமான்கள் வந்திருக்கின்றன. சுமார் தினம் 15 லக்ஷம் பவுன் வீதம் ஆகிறது. முதல் மாதங்களில் கொஞ்சமாயும் வரவர அதிகமாயும் அனுப்பப்பட்டது.

அநேகமாய் இவையெல்லாம் 1940-ம் வருஷம் முடிவதற்குள் செய்த ஆர்டர்களுக்கு அனுப்பப்பட்டவை. குத்தகைக் கடன் மசோதாப்படிக்கு 4,30,00,000 பவுன் விலையுள்ளவை சென்ற மூன்று மாதங்களாக சென்றிருக்கின்றன.

இதைத் தவிர 1,75,00,00,000 பவுன் பொருமானத்திற்கு ஆர்டர் வந்திருப்பதாயும், அவைகளுக்கு ஸப்ளை செய்ய அமெரிக்கச் சபை அனுமதிருப்பதாயும் ரூஸ்வெல்டு கூறினார். இதற்காக 1,50,00,00,000 பவுன் உபரி கொடுக்கப்பட்டு, இதைக்கொண்டு செய்யப்படும் சாமான் ஹிட்லர் விரோதிகள் யாவருக்கும் அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆகையால், வரும் இரண்டு வருஷங்களில் அமெரிக்க ஸப்ளை தினம் 40,00,000 பவுனுக்கு வரும்.

தூரக்கிழக்கின் பொருளாதாரச் சங்கத் தலைவர் டாக்டர் கிராடியின் அபிப்பிராயத்தில் அமெரிக்காவில் செய்யப்படும் சாமான்களில 100-க்கு 50 அல்லது 60 வீதம் பிரிடிஷ் மக்களின் தேவைக்குப்போகிறது. ஆனால் இவை யாவும் இங்கிலாந்திற்கே போகாது. நடுநிலைச் சட்டத்தை மாற்றி அமைத்தால், அமெரிக்கக் கப்பல்களில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய நாடுகளுக்கும் செல்லும். முக்கியமாக, ஏடன், ஸிலோன், சிங்கப்பூர், பர்மா, ஹாங்காங், போர்னியோ, பிரிடிஷ் மேற்கு ஆபிரிக்கா நாடுகளுக்குச் செல்லும்.

இப்படிச் செய்வதால் பிரிடிஷ் கப்பல்களுக்கு ஒரு சாதகம் ஏற்படுவதுடன், மத்திய தூரக்கிழக்கு நாடுகளுக்குத் தடங்கலின்றியில் போகமுடியும்.

## கப்பல்கள்.

சமீப வாரங்களில் கப்பல்கள் செய்ய பிரிடன் அமெரிக்காவுக்கு ஆர்டர்கள் அனுப்பியிருக்கிறது. அங்கே 5,000 முதல் 16,000 டன் நிறை வரையிலும் 1,200 கப்பல்கள் செய்ய ஏற்பாடாகிவிட்டது. அதாவது, 1939 முதல் 1943-க்குள் அமெரிக்கக் கப்பற்தொழில் பதினைந்து மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இவை யாவும் பிரிடன் ஆர்டர்களுக்குச் செய்யப்பட்டவை.

அமெரிக்கக் கப்பற்தளங்களில் 1939-ல் 2,41,052-டன் நிறையுள்ள 28 கப்பல்களும், 1940-ல் 4,44,703-டன் நிறையுள்ள 53 கப்பல்களும், 1941-வருஷ முதல் பாதியில் 3,26,789-டன் உள்ள 40 கப்பல்களும் கட்டப்பட்டன.

(ஆங்கிலத்தில் ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர், 30).

லிருந்து வந்த செய்தியில் வெளியாயிற்று. "தளர்ச்சியடைந்த ஸோவியத் படைக்கு ஆலைகள் வந்து சேருவதற்குள் காரியம் நிறுத்திப்போகுமென்று நம்பிக்கையிலுல் தங்களைத் தாமே தேற்றிக்கொண்டார்கள்.

"படையெடுப்புக்கு ஒரு வருஷத்திற்கு முந்தியே மாஸ்கோவிற்கு யுத்தப் பொருள்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. நேசதேசத்தார்கள் நீண்டகாலமாக ஜெர்மனியின் பேரில் படையெடுக்க திட்டம் போட்டே வந்திருப்பதை நிரூபிப்பதாக" மறுநாள் (அக்டோபர் 1-ல்) ஹிந்துஸ்தானியில் வெளிவந்த ஜெர்மன் ஒலிபரப்பில் சொல்லப்பட்டது.

## ஐந்தாம்படை ஆகாயத்தில் மறைந்தது.

"டாபிரிஸ் உள்பட வடமேற்கு இரான் பிரதேசத்தை ஆர்மீனியாவுடன் சேர்த்துக்கொள்ள ருஷ்யர்கள் எண்ணங் கொண்டிருப்பதாக இரானிய அரசியல் நிபுணர் வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப் பட்டுவருகிறது

அராபிக், பர்லியன் பாஷைகளில் வந்த ஜெர்மன் செய்தி, அக்டோபர், 2.

அராபிக்கில் இதாலியச் செய்தி, அக்டோபர், 2.

"இரானியர்களுக்கும் அங்குள்ள அமைதியாயிருந்த ஜெர்மன் குடியேற்ற நாட்டினுள்ளவர்களுக்கும் போல் ஷிவிக் கக்ஷியினர் பலாத்காரமான செய்கைகள் செய்திருக்கின்றனர், சர்வதேச சட்டத்தையும் மீறிவிட்டார்கள்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர், 30).

பொய் விஷயங்களில் அக்கரையிருக்கக் கூடிய "அரசியல் நிபுண வட்டாரங்கள் ஜெர்மனி, இதாலி இவற்றைச் சேர்ந்த ஐந்தாமபடை தான் சரியான சமயத்தில் அவர்களை வளைத்துக்கொள்ளப் பட்டது. அச்சுநாடுகளின் ஒலிபரப்புகளில் இம்மாதிரி பொய் விஷயங்கள் இருந்துவருவதால், அவர்களை இரானை விட்டு வெளிக்கடத்த வேண்டியது அவசியமென்று காட்டுகிறது.

இரானில் ஸோவியத் துருப்புகள் பிரவேசித்தது முதல் பொது உபயோகத்திற்காக இரானுக்கு 5 லக்ஷம் மீட்டர் துணிமணிகளும், 1,770 டன் சக்கரை, 9,680 டன் கோதுமையும் ஸோவியத் அரசாங்கத்தால் அனுப்பப் பட்டிருக்கிறது. இன்னும் அநேக சாமான்கள் வந்து சேரவேண்டியிருக்கிறது.

## ஸிரியாவைப்பற்றிய கட்டுக்கதையும், உண்மைநடப்பும்.

"ஸிரியாவிலிருந்தும், லெபானன் என்ற இடத்திலிருந்தும் வரும் செய்திகளிலிருந்து அங்கு எங்கு கண்டாலும் கலகங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பசிப்பிணியும், பட்டினியும் ஜனங்களின் துக்கத்தை மிகவும் அதிகரிக்கச் செய்திருக்கின்றன. பிரிடிஷ் துருப்புகள் அங்குள்ள உணவுப்பொருள்களை எடுத்துக் கொண்டுவிட்டார்கள்."

ஸிரியாவில் பொதுவாக ஸப்ளை செய்யும் நிலைமை குறிப்பிடத்தகுந்த விதமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. இன்னும் சில மாதங்களில் மத்தியக் கிழக்கில் ஏற்றுமதி, போக்குவரவு திட்டம் பூர்த்தி செய்யப்பட்டால் இன்னும் அதிகமாகவே அபிவிருத்தியடையும். 10,000 டன் கோதுமை, இன்னும் 5,000 டன் நிறையுள்ள கனடாவில் செய்யப்படும் கோதுமை



(பர்லியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர், 29).

பீரட்டுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கு ஏராளமாக சக்கரை, மண்ணெண்ணெய், அரிசி, காப்பிக்கொட்டை இவைகள் அந்த தேசத்தில் வந்திறங்கியிருக்கின்றன.

| இப்பொழுது ஹிட்லர் என்ன சொல்லுகிறார். | அன்று என்ன அர்த்தம்? |
|---|---|
| **யூதர்.** | |
| "இந்த இரண்டு வருஷங்களாக ஜெர்மனி ஒவ்வொரு எதிரியாக தோற்கடித்து வருவது சரித்திர சம்பந்தமான உண்மை ... ... நான் அதை முதலில் விரும்பவில்லை." | "யுத்தம் அழியாதது. யுத்தம் எங்கும் வியாபித்திருக்கிறது. யுத்தமே ஜீவன்".—ராஸ்னிங்குக்கு ஹிட்லர் சொல்லியது. "இவ்வுலகத்தையே ஆளக்கூடிய சக்திவாய்ந்த தேசத்தாரின் வெற்றிகரமான ஆளுகையின் கீழ் சமாதானத்தை நான் தேடுகிறேன்".—மெயின் காம்பில் ஹிட்லர் எழுதியது. |
| **ருஷ்யர்கள்.** | |
| "எனக்கு இதைச் சொல்ல உரிமை உண்டு: எதிரி ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டான். | "போர் முனையில் யுத்தப் படைகளின் நடமாட்டங்களில் சிக்கல்கள் உண்டாகியிருப்பதால் வளைத்துக் கொள்ளப் பிரயத்தனப்படும் நம படைகள் சிலசமயம் எதிரிகளால் வளைத்துக் கொள்ளப்படுகின்றன."—புதாபெஸ்டுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை, 20. |
| **ஹிட்லரின் பலிகள்.** | |
| "இது சமயம் நாம் நேச தேசங்களின் ஆதரவை வெற்றிகரமாக சம்பாதித்தோம் ..இதாலியர்கள், ஹங்கேரி பின்லாந்துக்காரர்கள், ருமேனியர்கள், ஸ்லோவோக்கியர்கள், ஸ்பானிஷ்காரர்கள், க்ரோஷியர்கள், பெல்ஜியர்கள், டச்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள், நார்விஜியர்கள், இவர்களுடன் பக்கத்தில் நின்று நமது ஜெர்மன் வீரர்கள் சண்டையிடுகிறார்கள்". | "பெல்ஜியர்கள் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்; பிரிடிஷ் ஒலிபரப்புக் கேட்பதற்காக டச்சுக்காரர்கள் சிறைச் சேதம் செய்யப்படுகிறார்கள். நார்வேயில் ஸெப்டம்பர் மாதத்தில் கொடுமை ஆட்சி நடக்கிறது. லக்ஷம் ஸ்லோவோக்கியர்களுக்குமேல் ஜெர்மனிக்காக ருஷ்யப் போர்முனையில் தங்கள் உயிர்களை இழந்து விட்டார்கள். டாக்டர் நேக்கா தன் உயிருக்காக தப்பி ஓடுகிறார். ஸர்பியாவிலுள்ள நெடிட்சு தேசத்திலும், க்ரோஷியாவிலுள்ள பாவிலுட்சு தேசத்திலும் குழப்பம் அதிகமாக இருப்பதால் அச்சுநாடுகளின் கொலையாளிகள் அங்கு அதிகம் தேவையாய் இருக்கிறது". |

**ஜெர்மன் அறிக்கைகள்.**

"ஜெர்மன் அரசாங்கத்தின் அறிக்கைப் பத்திரங்கள் உண்மையான தஸ்தாவேஜுகள்".

முந்திய ஜெர்மன் ஒலிபரப்புகளின் உதாரணங்கள் இங்கே கண்டிருக்கின்றன :

ஜூன் **26.**—"ஸோவியத் இருப்புகளால் இனி எதிர்த்து நிற்க முடியாது."

ஜூன் **30.**—"ருஷ்யர்கள் நிலை தப்பி ஓடுகிறார்கள்".

ஜூலை **1.**—"ஸோவியத் படைகள் மீளக்க முடியாத குழப்ப நிலையில் இருக்கின்றன".

ஜூலை **7.**—"ருஷ்யாவில் வைத்திருந்த இரும்புப் பொருள்கள் யாவும் செலவழிந்துவிட்டன".

ஜூலை **13.**—"லெனின்கிராட்டுக்கும், மாஸ்கோவிற்கும், கீவுக்கும் செல்லும் பாதை திறப்பாகவேயிருக்கிறது".

ஜூலை **17.**—"ருஷ்யர்களின் கடைசியான படைகளும் போருக்கு வந்துவிட்டன".

**சர்ச்சில் பிரகடனங்கள்.**

"இன்றைக்கு நான் இங்கிலீஷ் பிரதம மந்திரியாக இருந்தால், ஒருக்கால் நானும் பேசிக்கொண்டேதான் இருப்பேன்".

சர்ச்சில் வார்த்தைகளை ஹிட்லர் என் பொருட்படுத்த வேண்டும்? அயல்நாட்டு ஒலிபரப்புகளைக் கேட்பதற்கு மரண தண்டனை ஏற்பட்டிருந்தபோதிலும், சர்ச்சில் பேசுவதை ஜெர்மானியர்கள் கேட்கிறார்கள். இது ஹிட்லருக்குத் தெரியும்.

---



## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 66—(3-வது பிரிவு).

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| அக்டோபர் | 21, செவ்வாய்க்கிழமை. | ஆலங்குடி ... | மாலை | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| | 22, புதன்கிழமை ... | ராமச்சந்திரபுரம் ... | ,, | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 23, வியாழக்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | கோட்டைக்காடு ... | மாலை | 6.00 |
| | | காம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 24, வெள்ளிக்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 67—(4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 25, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6 30 |
| 26, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | கீரப்பழனி ... | ,, | 6.00 |
| | ஆலூர் ... | ,, | 6.30 |
| 27, திங்கட்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 28, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | காரையூர் ... | மாலை | 6.00 |
| | கீழத்தானியம் ... | ,, | 6.30 |
| 29, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | நார்த்தாமலை ... | மாலை | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 30, வியாழக்கிழமை .. | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | மழையூர் ... | ,, | 6.30 |
| 31, வெள்ளிக்கிழமை ... | (பொன்னமராவதி) புதுப்பட்டி. | ,, | 6.00 |
| | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |

# முக்கியமான விளம்பரம்.

---

பிரிடிஷ் அரசாங்கத்தார் தயாரித்த

கியாதி பெற்ற

'ஸ்பாடன் தீவுகளை பிரிடிஷ் கடல்

படை தாக்குதல்'

என்ற

யுத்த சம்பந்தமான பிலிம்

தமிழில்

புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கிஸில்

அக்டோபர் 27 முதல் 4 நாட்கள்

காண்பிக்கப்படும்.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் இதை

ஜனங்களுக்குப் பிரசுரம் செய்கிறது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—18-10-11.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் அக்டோபர் மீ 25உ [ந. 67.

பிரஸங்கம் LXVII.

## ருஷ்யாவுக்கு எவ்விதம் நாம் ஒத்தாசை செய்வது.

---

ருஷ்யாவுக்கு வந்துள்ள இக்கடுமையான நிலையில் நேசதேசங்களின் யுத்த முறைகளைப்பற்றி ஏதோ பொழுதுபோக்குப் பேச்சாக சில குறைகள் ஒரு வாரகாலமாக சொல்லப்பட்டு வருவதை யாவரும் கேட்டிருப்பீர்கள். நான் தலைநகரில் அவ்வமயம் இல்லாத காரணத்தால் தற்போது அக்குறைகளுக்கு பதிலுரைக்கப்படுகிறது. ஸோவியத் சைனியத்தின்பேரிலும், அரசாங்கத்தின் பேரிலும் ஹிட்லர் உண்டாக்கிவரும் கடுமையான பாரத்தை லகுப்படுத்த உடனே பிரிடிஷ் படையெடுப்பு ஒன்றை ஐரோப்பா பேரில் செய்யவேண்டுமென்று இங்கிலாந்திலுள்ள சில பத்திரிகைக்காரர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். மேலும், நேசதேசங்களுக்கு முதல்தரமான தைரியம்பெற்ற தோழனை ருஷ்யாவுக்குப் போதுமானபடி, பிரிடனால் உதவியளிக்கப்படவில்லையென்றும், (சென்ற சரத் காலத்தில் ஹிட்லரின் படையெடுப்பு முயற்சி வீணானதிலிருந்து) இங்கிலாந்தின் உள்நாட்டு பந்தோபஸ்துதான் இன்னும் முக்கியமானது என்று சொல்வது இங்கிலீஷ்காரர்களின் யுத்த உணர்ச்சிக்கும், சமீபத்தில் துரிதமான முயற்சியுடன் 'முன்னேற்ற படையெடுப்பு' செய்யப்படுவதாக மந்திரிகள் சொல்லும் வார்த்தைகளுக்கும் மாறுபட்டதென்றும் இவர்கள் குறைகூறுகின்றனர். ஆனால், இவர்கள், கிணற்றுத் தவளையின் வளப்புபோல், தங்கள் நிலை சுகமாக இருப்பதால், இவ்வாறெல்லாம் சொல்லுகிறார்கள்.

உண்மையில் இவ்விதமான மனப்பான்மை முற்றிலும் பிசகென்று நாம் சொல்லிவிடலாம். அப்படிச் செய்வதற்கான காரணங்களை கவனிப்போம்.

எல்லா அம்சங்களைடும் கவனிக்கும்கால் இதுவே முதலாவதான காரணம். இங்கிலாந்தில் இருந்து குறைகூறுபவர்களைக் காட்டிலும் நமக்கு, ஐரோப்பாவில் எவ்விதமான தந்திரங்கள் கையாளப்படவேண்டுமென்று ஒன்றுமே தெரியாது

ஆனால், மிஸ்டர் சர்ச்சிலின் அரசாங்கத்திற்கோ, அவைகளைப்பற்றி தெரிந்து கொண்டும். எதிரிக்கு, தாங்கள் தெரிந்துகொண்டதை மறைத்துக்கொள்வதும் தான் இரண்டு முக்கிய வேலைகள். மிஸ்டர் சர்ச்சில் (முக்கியமாக செப்டம்பர் 30-ம் தேதி) பேசிய பேச்சுக்களில், பொதுமக்களுக்கு இவ்விஷயத்தில் அக்கறை இருப்பது சரியென்றும், இவ்விதமான பிரச்னைகள் "யுத்தத்தை நடத்துகிறவர்களுக்கும் பலதடவை உண்டாகியிருக்கின்றனவென்றும், இருந்தாலும் 'ஏராள முதல்தரமான படையை இங்கிலாந்தில் வைத்துக்கொண்டு, கடல், தரை, மார்க்கங்களாக வரும், எதிரிகளைத் தடுப்பதே அரசாங்கத்தின் அக்கறை" என்றும் வியக்தமாக வற்புறுத்தினார். ஆகையால், ஐரோப்பாவில் படையெடுப்பதுதான் இப்பொழுது உசிதமான முறை ஆனால், அவ்விதம் செய்யப்பட்டிருக்கும் என்பதற்கு இவர் சொன்னதே அத்தாக்ஷியாகிறது! பிரிடன் அதிக ஆபத்திலிருந்த காலத்திலேயே ஏராளமான டாங்கிகள், மனிதர்கள், மருந்து, கப்பல் முதலியவைகளை சமீபக்கிழக்கு நாடுகளுக்கு அனுப்பிய அரசாங்கம், ஐரோப்பாவை படையெடுப்பதுதான் உசிதமென்றிருந்தால் அப்படிச் செய்யப்பயப்படுகிறதென்று நினைப்பது தவறாகும். இன்னும் இவ்விஷயத்தைக் கொஞ்சம் விவரித்தால் நாம் சொல்வது தெரியவரும்.

'ஐரோப்பாவில் படையெடுக்கும் தந்திரமே' ஒரு ரகசியமான விஷயம். நமது அரசாங்கம் இதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நாம் சொல்லும்போது, ஹிட்லரும் கோயபல்ஸும் இதை ஊகித்து கவனிக்க நேரும். மிஸ்டர் சர்ச்சிலின் பேச்சுக்களைப்பற்றி ஹிட்லரின் அபிப்பிராயத்திலும் இது ரகசியமென்பதை நாம் காணலாம். ஏனென்றால் பிரிடிஷாரின் திட்டத்தைப் பற்றி சரியாக ஒருவித தகவலும் தெரிந்துகொள்ளாததால் ஹிட்லர் ஆத்திரப்படுகிறான். ஏதோ பிரமாதமாக சாமான்கள் செய்யப்படுவதைத்தவிர ருஷ்யாவுக்கு உதவும் விஷயத்தைப்பற்றி பிரிடிஷ் யுத்தகால மந்திரி சபையின் தீர்மானங்கள் மறைந்திருப்பதால் கோபம்கொண்டு, "பிரிடிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் வெறும் பேச்சு பேசுகிறவர்கள், ஹிட்லர் செய்கையில் காண்பிக்கிறவன்" என்று எரிந்து விழுந்தான். ஆகையால் எல்லாரும் எதிர்பார்த்தவிதமாக பிரிடிஷ் துருப்புகள் ஐரோப்பாவில் இறங்கி இருக்கலாம்! இறங்காமலும் இருக்கலாம். 1940ல் டிஸம்பரில் "ஐரோப்பாவில் பிரிடன் கால் வைத்தால் நம் சைனியம் எதிர்க்கும்" என்று ஹிட்லர் மார்தட்டிக்கொண்டு சொன்னதுமுதல் பிரிடன் என்ன செய்யுமென்று கலங்கியிருக்கிறான். ஹிட்லருக்கும் மற்ற ஜெர்மானியருக்கும் இதில் என்ன பயமென்றால், இவர்களுடன், ஜெர்மன் ஆக்கிரமத்தால் தவித்துக்கொண்டு பழிவாங்கும் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சிறு தேசங்களும் சேர்ந்துவிடுமோ என்றுதான். இப்பயம் அதிகமாகத்தான் வேண்டும். எப்பொழுது இது பலிக்குமென்பது சொல்லாமலே தெரிந்தது தான்.

இப்பொழுது படையெடுக்க வேண்டுமென்று சொல்லுகிறவர்களின் கக்ஷியைச் சொல்லி அதற்கு பதில் கூறுவோம்.

(a) ஐரோப்பாவில் பிரிடன் படையெடுத்தால் ஜெர்மனி இரண்டு பக்கங்களில் போர் நடத்தவேண்டி வருமாதலால் பூரா பலத்தை ஒரே பக்கம் வைத்துக் கொள்ளாமல் பிரிக்க நேரும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். சரிதான், ஆனால் பிரிடிஷ் விமானங்கள் ஏற்கனவேயே ஜெர்மனியின் மேற்கே தாக்கிவருவதால் சிரமத்தை விளைவித்துவருகின்றன. மேலும் 'இரண்டு பக்கப் போரினால்' ஜெர்மானியருக்கு அதிக தீங்கு விளையுமென்று அவர்கள் நினைக்கிறார்களா? தனக்கு அதிக நஷ்டம் நேருமென்று தெரிந்தும் ருஷ்யாவை ஹிட்லர் தாக்கவில்லையா? அதே விதமாக, ஜெர்மன் பலத்தைக் குறைக்கப் போனால், எண்ணிக்கைக் குறைவும், தேர்ச்சிக் குறைவும் உள்ள பிரிடிஷ் சைனியம் கலைபடாமலிருக்குமா?



(b) இரண்டாவதாக, ருஷ்யாவுக்கு அதிக மும்மரமான உதவியளித்து ருஷ்யா நாசமாகாமல் பார்க்கும்படி நாம் படையெடுக்க வேண்டுமென்கிறார்கள்.

ஆச்சரியமான விஷயமென்னவென்றால், பிரிடிஷ் படையெடுப்பு பலமானதோ அல்லவோ, ருஷ்யர்கள் இதை விரும்பவில்லை. தங்களுக்குத் தேவையான உதவியின் விதமும், அளவும் வியக்தமாக அவர்களால் சொல்லப்பட்டதை பிரிடனும் அமெரிக்காவும் கொடுத்துவருகின்றன. அதிகமாக மேற்கே எதிர்ப்பு ஏற்பட்டால் ருஷ்யச் சேனைகளுக்குப் போகக்கூடிய ஸப்ளைகள் உடனே குறையும். அதனால் இதுவரை தைரியமாக நின்றுவந்த ருஷ்யச்சேனை முறியக்கூடும்.

(c) அடக்கிவரும் ஜெர்மானியர்களுக்கு விரோதமாக ஆக்கிரமித்த நாடுகளில் இருப்பவர்களை உத்தேஜனம் செய்வதற்கு ஐரோப்பாவில் பிரிடன் படையெடுக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் படையெடுப்பதினால் விரும்பியபடி நடைபெறுமா? போலிஷ்காரர்களையும், ஸெக்கர்களையும் ஜெர்மனி நடத்தும் விதத்தைப் பாருங்கள். அந்நாடுகளை அடக்கியபிறகு ஜெர்மானியருக்குச் செய்யும் எவ்விததீங்கும் பலிக்காமலிருக்கிறது. பிரிடிஷ்காரர்களுக்குச் சாதகமாக கலகங்கள் நேர்ந்தால் ஒரே போடாக ஊர்களைக் கொளுத்துவதற்கு ஹிட்லரோ, ஹிம்லரோ, பின்வாங்குவார்களா என்ன? பெரும் பலம்கொண்ட சைனியங்கள் ஜெர்மனியை எதிர்க்கமுடியாமல் தளர்ந்துபோனபொழுது, ஒருவித ஆயுத பலமும் இல்லாமல் பிரிந்து கிடக்கும் பொது மக்கள் மாத்திரம் என்ன செய்யமுடியும் என்பதை இவர்கள் நினைக்கவில்லைபோலும்.

(d) பிரிடிஷ் சைனியம் ஐரோப்பாவில் இறங்குவதால் ஜெர்மனியில் மனஸ்தாபமும், யுத்த அலுப்பும் கலகங்களை உண்டுபண்ணுமென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் சென்ற யுத்தத்தில் நான்கு வருஷம் தரையில் கடும்போர் செய்த பிறகு இவ்விதம் கலகம் உண்டாகி ஜெர்மனிக்கு பெரும் தோல்வியும் அழிவும் ஏற்பட்டதை நாம் மறக்கலாமா. ஆகையால் இன்னும் கொஞ்சநாள் பொறுத்துப் பார்க்கவேண்டும். ஒரு படையெடுப்பினால் மாத்திரம் ஜெர்மன் யுத்த வெறி தணிந்துவிடுமென்று சொல்லமுடியாது. மேலும் அவ்விதம் நார்வே, பெல்ஜியம் இவைகளுக்கு உதவிக்குச் சென்ற பிரிடிஷ் படையின் நிலைமை யாவருக்கும் தெரிந்தது தானே?

(e) கடைசியாக இவர்கள், அமெரிக்காவை, பிரிடன் காரியாம்சையில் உதவும்படி தூண்டவேண்டுமென்று சொல்லுகின்றனர். சென்ற சரத் காலம் முதற்கொண்டே அமெரிக்கரின் தோற்றம் மிகவும் சாதகமாகவேதானிருந்து வருகிறது. பிரிடிஷ் மக்கள் ஒவ்வொரு தருணத்திலும் முயற்சி, தியாகம் செய்துவருகின்றனர். இது அமெரிக்கர்களுக்கும் தெரியும். சமயம் நேர்ந்துவிட்டதாக அந்தத் தலைவர்கள் நினைக்கும்பொழுது பின்வாங்காமல் உதவுவார்கள். மேலும் நிலை பக்குவமாவதற்குள் தரை, கடல், ஆகாயம் இவைகளில் கலந்து பெரும் யுத்தம் செய்து நஷ்டமடைந்தால் தான் சிநேகபாவம் இருக்கிறதாக நினைப்பதும் தவறு. இது அந்த ஜனநாயகத்திற்கும் தெரியும்.

இவ்விதம் வியவகாரம் செய்து பார்க்கும்போது படையெடுப்புக்குப் பாதகமான காரணங்கள்தான் அதிகம் இருக்கின்றன. ஏற்படும் மனித, பொருள் நஷ்டங்களை இதில் சர்ச்சைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. நியாய வழியில் செலவு செய்வதற்கு பிரிடிஷார் எப்பொழுதும் பின் வாங்கியதே இல்லை. பிரகிருதத்திலும் திருந்த செலவுகள் செய்தும், இனி செய்யவும் போகிறார்கள். இருந்தாலும் உண்டாகும் செலவையும் கவனிப்பது நல்லது. ராணுவ சாஸ்திரப்படி இது ஒரு பெரும் தத்துவமாகும். அதாவது ஒரு லக்ஷியத்தை அடைவது சரியென்றால் செலவை கவனியாமல் அடைந்தே தீரவேண்டும். இருக்கட்டும், சண்டைக்கு நேரே இறங்கியதாக வைத்துக்கொள்வோம். ஏராளமான எதிரி சைனியங்களுக்கு முன்

எவ்வளவு முன்றிப்பு கொண்டிருந்தாலும் எண்ணிக்கைக் குறைவு இருந்தால் நினைத்தபடி காரியம் செய்யமுடியுமா? ஒரு பத்து லக்ஷம் வீரர்களை, குறைவாயிருந்தாலும் பாதகமில்லை, சிறிது தூரத்திற்கு விமான மார்க்கமாக அனுப்பலாம். கடல் சுரங்க வெடிகள் நிறைந்த பாதையில் ஏராளமான டாங்கிகளும், பீரங்கிகளும், லாரிகளும் தளவாடங்களும் உதவிக்கு அனுப்ப 5,000 மனிதர்களும், 10,000 டன் நிறையுமுள்ள 200 கப்பல்கள் தேவையாயிருக்கும். இதைத் தவிர 20 லக்ஷம் டன் கப்பல்களும் வேண்டியிருக்கும். எங்கேயும் சாமான்கள் தேவையுள்ள சமயத்தில் இது பெரும் காரியமாகும். இதையும்விட இவைகளுக்கு பாதுகாப்பு அளிக்க கப்பற்படை, விமானங்கள் தேவைதான். தற்சமயமோ பிரிடனுக்கு வரும் சாமான்களுக்குப் பாதுகாப்பளித்து, மத்தியக்கிழக்கு நாடுகளுக்கு உதவிகொடுத்து, ருஷ்ய துறைமுகங்களையும் இவைகள் காப்பாற்றிவருகின்றன. இவ்விதமான செலவைத்தான் கவனிக்கவேண்டுமே தவிர எதிரி முன்னால் சண்டை செய்தால் நேரும் மனிதநஷ்டத்தைப்பற்றி நாம் சொல்லவில்லை, ஏனென்றால் எதிரியின் நீர்மூழ்கிகள், சுரங்க வெடிகள், நில பீரங்கிகள், மூழ்கி விமானங்கள், முதலியவைகளை நாமும் எதிர்த்து சண்டை செய்வோமாதலால் அவைகளுக்கும் சேதம் ஏற்படும். இருந்தாலும் ஜெர்மன் சேனையுடன் சண்டைசெய்து தோற்கடித்துத்தான் நாம் வெற்றிபெறவேண்டும். இதுவரை சிறுசேனைகளுடன் சண்டை செய்து ஜெர்மானியர் ஜயம் பெற்றிருந்தாலும் நாமும் ஒரு நாள் அவர்களுடன் சண்டை செய்வோம். நம் தலைவர்கள் அவ்விதம் செய்வதாகத் தீர்மானித்தும் இருக்கின்றனர். இதை ஹிட்லரும் தெரிந்துகொண்டிருக்கிறான். நாம் எப்பொழுது செய்யப்போகிறோம், இப்பொழுதோ, பின்னாடியோ, அல்லது யுத்தம் ஆரம்பிக்கும் பொழுது ஜெர்மனி வசமிருந்த யுத்த தளவாடம், விமானங்கள், டாங்கிகள், சேனை, நமக்குச் சேர்ந்த பிறகா என்பதை எல்லாம் நாம் கவனிக்கக்கூடாது. நம்மால் நியமிக்கப்பட்ட தலைவர்களிடம் விட்டுவிட வேண்டும். அவர்களுக்குத்தான் இது தெரியும். காரியம் கைகூடும் மார்க்கத்தை தெரிந்து தேவையானதை, எதிரியோ-நாமோ—என்ன நேரப்போவதென்று தீர்மானிப்பதற்குள் தலைவர்களே செய்வார்களென்ற நம்பிக்கை வேண்டும்.

---

அனுபந்தம்.

---

## கிழக்கில் ஸோவியத் தொழிற்சாலைகளின் பலம்.

## யூரல், ஸைபிரியா, வால்கா பிரதேசங்களில் உள்ள ஏராளமான இரும்பு, எஃகு, நிலக்கரி, எண்ணெய் உற்பத்தியும் யந்திர தொழிற்சாலைகளும்.

## வட காகஸஸ் பிரதேசத்தை ருஷ்யர்கள் இழந்துவிட்டால் அவர்களின் நிலை கெட்டுவிடாது.

கிழக்கில் ஸோவியத் தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி லண்டனில் சமீபத்தில் பிரசுரமான "ஸோவியத் லிவேஷன்" என்ற அறிக்கையில் யூரலிலிருந்து வந்த கைத்தொழில் நிபுணர் விவரித்திருக்கிறார். ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்திற்குத் தேவையான 8 உலோகங்களில் 87 சதவிகிதம் ஈயமும், துத்தநாகம், நிக்கல் இவற்றில் பெரும்பாகமும், 96·5 சதவிகிதம் தாமிரமும் யூரலிலும், அதற்கடுத்த காஸாகஸ்தான் ஜில்லாவிலுமிருந்து உற்பத்தியாகிறது.



ருஷ்யா தேசத்தின் தங்கம், பிளாடினம், தகரம், டங்கிஸ்டன் (Tungestin), நீலாஞ்சனக்கல் (Antimony) இன்னும் அபூர்வமான உலோகங்கள் பெரும்பாலும் ருஷ்யாவின் கிழக்குபாகத்தில் சுரங்கங்களில் வெட்டியெடுக்கப்படுகின்றன. அலுமினியம், கந்தகம் சம்பந்தமாய் ஏராளமான தொழிற்சாலைகள் அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மகாக்னீஸும் (Magnesium) அங்கு தயாரிக்கப்படுகிறது. ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் உபயோகப்படும் வெடிஉப்பு (Potassium), கல்நார் (Asbestos) இவைகள் பூராவும் யூரலிலிருந்து வருகின்றன.

1929-ம் வருஷத்தில் மட்டில் பூராதேசத்திலும் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரும்பு மொத்தம் 80 லக்ஷம் டன் நிறையுள்ளவை. இரண்டாவது ஐந்து வருஷதிட்டத்தின் கடைசியில் அதாவது 1937-ல் கிழக்கு பாகத்தில் மட்டில் உற்பத்தியானது 82 லக்ஷம் டன்கள். அடுத்த மூன்றாவது ஐந்து வருஷ திட்டத்தில் அடுத்து வந்த நாலு வருஷங்களுக்குள் கிழக்கு ருஷ்யாவில் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரும்பு முந்தியைக்காட்டிலும் அதிகம். மேலும் அங்கு இனி வெட்டியெடுக்கப்படவேண்டிய இரும்பு மிருப்பு பூராதேசத்தின் பொருளாதாரத் தேவைக்குத் தக்கபடி இருந்திருக்கிறது.

## மாக்னிட்னயா மலையில் கிடைக்கும் "ஏராள தனம்."

மாக்னிட்னயா மலையில் இவ்வளவென்று மதிப்பிட முடியாத ஏராளமான பொருள்கள் உற்பத்தியாகின்றன. பெய்க்கால் சுரங்கங்களில் வெட்டியெடுக்கும் இரும்பு, இவ்வுலகத்திலேயே மிகவும் சிறந்தது என்று சொல்லக்கூடிய ஸ்வீடிஷ் தேசத்து இரும்புக்கு ஒரு விதத்திலும் மட்டமில்லை. காலிலோவில் விலைமதிப்புள்ள உலோகங்கள் அதாவது குரோமியம், நிக்கல், டிடேனியம் (Titanium) இவை இருக்கின்றன.

யூரல் பிரதேசத்தில் பெரிய எஃகு தொழிற்சாலைகளில் பெரும்பான்மை சென்ற பத்து வருஷங்களுக்குள் ஏற்படுத்தப்பட்டன. அவைகள் வட துருவத்திலிருந்து சமவெளி பிரதேசம் வரையுள்ள விசாலமான பிரதேசத்தில் இங்குமங்கும் நிறைந்திருக்கின்றன. மாக்னி டோகார்ஸ்க், ஸ்டாலின்ஸ்க் தொழிற்சாலைகள் தான் மிகவும் முக்கியமானவை. இவ்வுலகத்திலேயேயுள்ள பெரிய இரும்பு, எஃகு தொழிற்சாலைகளில் இவைகளும் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

1937-ல் ஸோவியத் கிழக்கில் (யூரல், ஸைபீரியா வால்கா பிரதேசங்கள்) முதல் ஐந்து வருஷ திட்டத்தின் கடைசியில் ருஷ்யா மொத்தத்தில் எவ்வளவு எஃகு உற்பத்தி செய்ய முடிந்ததோ அதைவிட 63 லக்ஷம் டன் நிறையுள்ள எஃகு உபரியாக உற்பத்திசெய்யப்பட்டது. மூன்றாவது ஐந்து வருஷ திட்டத்தின் பயனாக ஏராளமாக உற்பத்தி செய்யக்கூடிய புதிய, பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. கலப்பு உலோகங்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை ஒன்று யூரலில் தெற்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அது தான் ருஷ்ய தேசத்திற்கே பெரிய தொழிற்சாலையாக விளங்குகிறது.

## இரும்பு, எஃகு தொழிற்சாலைக்குத் தேவையான நிலக்கரி.

மேற்சொல்லிய பிரம்மாண்டமான இரும்பு, எஃகு தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலக்கரி பூராவும் ருஷ்யாவுக்குக்கிழக்கிலுள்ள ஏராளமான சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன. ஸைபீரியாவின் மேற்கு பாகத்திலுள்ள குஸ்னீட்ஸ்க் நிலக்கரி சுரங்கங்களில் நேர்த்தியான பாதி சுட்ட நிலக்கரி கிடைக்கிறது. மத்திய ஆசியாவில் காரகண்டாவில் பத்து வருஷத்திற்கு முன்

ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் மூன்றாவதாகச் சொல்லப்பட்ட பெரிய நிலக்கரிப் பிரதேசத்தில் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி துரிதமாக அபிவிருத்தி யடைகிறது. காரகண்டா நிலக்கரியைத் தெற்கு யூரலுக்குக் கொண்டுசெல்ல ஆக்மொலின்ஸ்க்கிலிருந்து கார்டாலிவரை புதிதாகப் போடப்பட்ட இருப்புப்பாதை நேர்வழியாக இருக்கிறது. யூரல் பிரதேசத்தில் இரும்பு, எஃகு கைத்தொழில்கள் துரிதமாக அபிவிருத்தியடைவதற்கு அனுகூலமாக அங்கு இம்மாதிரி பாதி சுட்ட நிலக்கரி விசேஷமாகக் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது.

ஸோவியத் கிழக்கு பாகத்தில் 1937-ம் வருஷத்திலேயே 4,10,00,000 டன் நிறையுள்ள நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டது. அது 1929-ம் வருஷத்தில் தேசம் பூராவிலும் வெட்டியெடுக்கப்பட்ட நிலக்கரியைக் காட்டிலும் அதிகம். அது 1933-ம் வருஷத்தில் டொனல்ட்ஸ் அடிவாரத்தில் எடுக்கப்பட்ட நிலக்கரிக்குக் கிட்டத்தட்ட சமமாக இருக்கும். காஸாகஸ்தானிலும், கொலோவ் பிரதேசத்திலும் புதிதாக நிலக்கரிச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ருஷ்யாவின் கீழ் பாகத்தில் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையும் இருக்கிறது. பாஷ்கிரியா, (Bashkiria) காஸாகஸ்தான் (Kazakastan) என்ற இடங்களிலும் மோல்டோவ் (Moltov), ஸ்வெர்டெலோவ்ஸ்க் (Sverdlovsk), குயிபீஷவ் (Kuibyshev) என்ற பிரதேசங்களிலுள்ள புதிய எண்ணெய்க் கிணறுகளிலிருந்தும், இன்னும் இதர ஜில்லாக்களிலுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்தும் ஏராளமாக எண்ணெய் எடுக்கப்படுகிறது. 1938-ம் வருஷத்திலேயே இத்தப்புது எண்ணெய்க் கிணறுகளிலிருந்து 55,00,000 டன் நிறையுள்ள எண்ணெய் எடுக்கப்பட்டது. அது இராக்கிலிருந்து உற்பத்தியாகும் எண்ணெயைக் காட்டிலும் இன்னும் அதிகமாகவும், ஜெர்மனி தயார் செய்யும் கலவை எண்ணெயைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகவும், இருக்கிறது. ஸோவியத்தின் கிழக்கு பாகத்தில் உற்பத்தியாகும் உலோகங்களை ருஷ்யப்படைகளின் முன்னணிக்கும், பின்னணிக்கும் வேண்டிய யுத்த தளவாடங்களாக அந்த இடத்திலேயே செய்து முடிக்கப்படுகிறது.

நவீன முறையில் யந்திரத் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு, திறமை வாய்ந்த தொழிலாளிகளின் மேல்பார்வையின் கீழ் அநேக தினுசுகளான யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அமெரிக்க இஞ்சினியர்களும், தொழிலாளிகளும் சேர்ந்து இத்தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க அதிகப் பிரயாசை எடுத்துக்கொண்டார்கள்.

## வட காகஸஸிலுள்ள எண்ணெய் தளங்கள்.

நீபர் நதியைக்கடந்து முன்னேறிச் செல்லும் ஜெர்மன் சைனியங்கள் காகஸஸுக்குள் நுழையமுடியாத போதிலும், வட காகேஸஸிலுள்ள க்ரோஸனி (Grozny), மெய்க்காப் (Maikop) எண்ணெய்த் தளங்களை கைப்பற்றிக்கொண்டதாய் வைத்துக்கொண்டால் அதனால் ஜெர்மனிக்கு ஏற்படும் லாபம் என்ன? ருஷ்யாவிற்கு ஏற்படும் நஷ்டமென்ன?

மெய்க்காப், க்ரோஸனி எண்ணெய்த் தளங்களிலிருந்து வருஷத்தோறும் 50,00,000 டன் எண்ணெய் எடுக்கப்படுகிறது. அது ஐக்கிய ஸோவியத் அரசாங்கத்தில் எடுக்கப்படும் பக்குவம் செய்யாத எண்ணெயில் சுமார் 15 சதவிகிதமுள்ளது. அப்பிராந்தியத்தில் வருஷத்தோறும் ஒருகோடி டன் நிறையுள்ள எண்ணெயைச் சுத்தி செய்யக்கூடும். க்ரோஸனி (Grozny) யிலிருந்து ரோஸ்டருக்கும், (Rostor) மெய்க்காப் வழியாக கருங்கடலிலுள்ள துயாப்ஸி (Tuapse) துறைமுகத்திற்குக் குழாய்கள் மூலம் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. க்ரோஸனியிலிருந்து காஸ்பியன் கடற்கரையிலுள்ள மக்காச்காலா (Makhach Kala) என்னுமிடத்திற்கும் குழாய்கள் மூலம் பாதையும் போடப்பட்டிருக்கிறது



ருஷ்யர்கள் மேற்சொல்லிய எண்ணெய்க் கிணறுகளையும், எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலைகளையும் அழித்துவிடுவார்கள்.

எண்ணெய்க் கிணறுகளை நவீன முறையில் பழுது பார்க்கத் திறமையுள்ள ஜெர்மானியர்கள் சில மாதங்களில் அவைகளிலிருந்து ஸ்வல்ப எண்ணெய் எடுக்கக் கூடும். மேலும் அவர்கள் அப்பிராந்தியத்தில் புதிய எண்ணெய்க் கிணறுகளைத் தோண்ட ஆரம்பிக்கலாம்.

பக்குவப்படாத எண்ணெய் சுத்தம் செய்யாவிடில் யாதொரு பிரயோஜனமும் அளிக்காது. ஏற்கனவே பூரா தகர்க்கப்பட்ட எண்ணெய் சுத்திசெய்யும் யந்திரங்களை மறுபடியும் ஸ்தாபிப்பது வெகு எளிதில் முடியாது. குழாய்களை சீக்கிரம் பழுது பார்ப்பார்கள். அப்படிப் பழுதுபார்த்தால் துயாப்ஸி (Tuapse) துறைமுகத்திற்குக் குழாய்கள் வழியாக ஜெர்மானியர்கள் எண்ணெயைக் கொண்டு போவார்கள். அங்கிருந்து கான்ஸ்டன்ஸா (Constanza) வுக்கு எண்ணெய்க் கப்பலிலும் அல்லது டார்டனல்ஸ் வழியாகச் சென்று ஏட்ரியாடிக் வழியாகவும் டிரயஸ்டே (Trieste)வுக்குக் கொண்டுபோக முடியும்.

## ஸ்வல்பம்தான் கிடைக்கும்.

அநேக மாதங்களில் ஜெர்மானியர்களுக்கு எண்ணெய் கொஞ்சம் தான் கிடைக்கும். இப்பொழுது ஜெர்மனிக்கு இருக்கும் எண்ணெய்க் குறைவை தாத்காலிகமாக ஈடுசெய்ய இது போதும்.

சமீபத்தில் அவர்கள் கைக்குக்கிடைக்கும் முக்கியமான தொழிற்சாலைகளிலும் விவசாயப் பிரதேசங்களிலும் ஜெர்மானியர்கள் வேலை செய்ய இப்படிக் கிடைக்கும் எண்ணெய் நிச்சயமாகப் போதாது. யுத்தத்தினால் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை சீக்கிரம் ஈடுசெய்தாலும், ருஷ்யாவின் பூ தகன முறையிலிருந்து தப்பினாலும் அதிகமாக எண்ணெய் அவர்களுக்குக் கிடைக்காது. ஜெர்மனியில் குறைவாகயிருக்கும் மசெண்ணெய் லாரிகளுக்கும், யந்திரங்களுக்கும், பொதுமக்களுக்கு அவசியமான தேவைக்கும், (குதிரைகள் இல்லாமலிருப்பதால் அவைகளுக்குப் பதிலாக) விவசாயக் கருவிகளை ஓட்டவும், தேவையான பெட்ரோல் உள்நாட்டிலிருந்து ஜெர்மானியர்கள் ஸப்ளை செய்யக்கூடியதைக் காட்டிலும் மிகவும் அதிகமாகயிருக்கிறது. இதற்காக ஐரோப்பிய நாடுகளிலிருந்து தேவையானதை எங்கிருந்து ஜெர்மனிக்குக் கிடைக்கப்போவது என்று சொல்வது கஷ்டம்.

## பாகுவிலிருந்து போக்குவரத்தின் நஷ்டங்கள்.

மெய்காப்பு, க்ரோஸனே எண்ணெய் தளங்கள் போனால் ருஷ்யாவிற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடாது. ஆனால் ஜெர்மன் விமானப்படை டேஜஸ்டனில் (Degston) நிலைத்தால், பாகு எண்ணெய் காஸ்பியன் கடலுக்கு மேல்கொண்டு செல்லமுடியாது. பாகுவிலும், பாட்டுமே (Batum)லும் உள்ள சுத்திசெய்யும் தொழிற்சாலைகளிலும் வெடிகுண்டுகள் போடப்படும். ஆகையால் ருஷ்யப் படைகள் எம்பா, (Emba) யூரல் எண்ணெய் தளங்களிலிருந்தும், துருக்கி மத்திய ஆசியா குடியரசு நாடுகளிலிருந்தும் கிடைக்கும் எண்ணெயை நம்பியிருக்க வேண்டும். தெற்கு காகேஸஸிலும், வடக்கு இரானிலும் உள்ள படைகளுக்கு பாகு எண்ணெய் உபயோகப்படும்.

வருஷத்திற்கு எம்பா, யூரல், மத்திய ஆசியா எண்ணெய் தளங்களிலிருந்து 30,00,000 டன் எண்ணெய் எடுக்கப்படுகிறது. அதிக கஷ்டமன்னியில் எண்ணெய் எடுப்பதை அபிவிருத்தி செய்யக்கூடும். ஓர்ஸ்க் (Orsk), ஸ்டர்லிட்டாமாக்,

யின் வெளிநாட்டு சம்பந்தக் கமிட்டி வெள்ளிக்கிழமை சர்ச்சையை முடிக்கும் நடுநிலைச் சட்டத்தை 'உடனே மாற்றும்படி' மிஸ்ட்டர் வெண்டல் வில்கி முதலிய நூறு தலைவர்கள் அபிப்பிராயங்களைச் சொல்லியிருக்கின்றனர். அப்படிச் செய்யாதது 'கள்ளத்தனத்தையும், அவமானத்தையும்' உண்டுபண்ணுவதாக அவர்கள் நினைக்கின்றனர்.

**மற்றுமுள்ள அமெரிக்கச் செய்திகள்.**—அமெரிக்காவின் கிழக்குப் பக்கத்தின் கடல் பிரயாணத்திற்குத் தேவையான எண்ணெயை 15 கப்பல்களில் பிரிடன் கொடுத்திருக்கிறது.

இங்கே வந்து எதிரி தாக்கினால் ஹலிபாக்ஸ் முதல் டோரண்டோ வரையில் உள்ள துறைமுகங்களை அமெரிக்கா, கனடா கப்பற்படைகள் உபயோகிக்கும்.

**ஜப்பானின் புதிய மந்திரி சபை.**—கோனுயி இளவரசர் மூன்று மாதகாலம் உத்தியோகத்திலிருந்து உலகாக் கிரமணத்தில் ஆசைகொண்ட ஜெனரல் டோஜோ என்பவனிடம் அரசாங்கத்தை ஒப்பிவித்திருக்கிறார். டோஜோ இந்த 'யுத்தகால மந்திரி சபையில்' தலைமைப் பதவியையும், யுத்த சம்பந்தத்தையும் வகிப்பான். முதல் நாளே அவன் வந்தவுடன் ஜப்பான் 'இருப்பதா, இறப்பதா' என்று சொன்னான். அவன் முதல் ஒலிபரப்புச் செய்ததில் 'சைனு விஷயம், சமஅந்தஸ்து', அச்சு நாட்டுக் கட்டுப்பாடு முதலிய விஷயங்களைப்பற்றி எப்போதையும் போல் ஆத்திரமாகத்தான் பேசினான்.

ஜப்பானில் பல தடவைகளில் அரசாங்க மாறுதல் ஏற்படுகிறது. உள்நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் ஸ்தாபனங்களை சரிசெய்ய இவ்விதம் எல்லாம் சேருகின்றன. அல்லது அயலார்களைத் தாக்க யுத்த வெறிகொண்டு இருக்கலாம். ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள் முறிந்தாலும் இவ்வாறு ஏற்பட்டிருக்கலாம். ஒழுங்கு முறையான வார்த்தைகளை அமெரிக்கா கேட்குமே ஒழிய, தற்புகழ்ச்சி கொண்டு அயல் நாடுகளை அவமதிக்கும் ஜப்பானின் சொல்லை அமெரிக்கா சமாதானப்படுத்த முயற்சிக்காது. ருஷ்யாவில் ஏற்பட்டுள்ள சில தோல்விகளால் ருஷ்யாவைப் பின்புறமாக, பிரான்ஸை இதாலி தாக்கியதுபோல், தாக்கலாம். ஆனால் பிரான்ஸ் மாதிரி ருஷ்யா ஆய்விடாது. இவை எப்படியானாலும், ஜப்பானின் நடவடிக்கைகள் கட்டுப்பட்டதாலும், தன் வழியாக வ்ளாடிவாஸ்டக்கிற்கு அமெரிக்கக் கப்பல்களில் சாமான்கள் தைரியமாகப் போய்ச் சேருவதாலும், வால்காட்டினால் பிரிடனும் அமெரிக்காவும் தன் பேரில் பஸிபிக்கில் சண்டையை துவக்கிவிடுவார்கள் என்ற பயம் ஜப்பானுக்கு உண்டு.

ஆரம்பத்தில் மந்திரி சபை மாறுதலால் ஏதோ தூரக் கிழக்கில் பிரமாதம் ஏற்படும்போல் இருந்தாலும், தயக்கம் என்பதுதான் ஜப்பானின் முறை என்பது தெரியும். அமெரிக்காவுடன் அரசாங்க சம்பந்தப் பேச்சுவார்த்தை இன்னும் முறிபடவில்லை. ஜப்பான் டைம்ஸ், அட்வர்டைஸர் என்ற பத்திரிகைகள் 'பிரகிருத மந்திரிசபை முன்னைவிட ராணுவ முறையுள்ளதாக இருக்கிறது' என்று சொல்லியிருக்கின்றன. இப்பத்திரிகைகள் அரசியல் பற்றுள்ளவை.

**ஆப்கனிஸ்தானம்.**—பிரிடிஷ், ருஷ்ய அரசாங்கங்களின் பேரிலுள்ள சிநேக பாவத்தினால் அவர்கள் சொன்னபடி அச்சு நாட்டினரை வெளியேற்ற ஒப்புக்கொண்டது. 90 ஜெர்மானியரும் மற்ற சில இதாலியரும் போகவேண்டியிருக்கிறது. ஆனால் பத்திரமாக ஐரோப்பாவிற்குக் கொண்டுபோய் சேர்ப்பதாக நேசதேசங்கள் சொல்லியிருக்கின்றன. இதனால் இந்தியாவுக்கு சமீபத்திலுள்ள ஒரு பயம் தீர்ந்தது. இராணிய அரசன் போலல்லாமல் ஆப்கனிஸ்தான் அரசன், நிலைமையை அறிந்து சாதுர்யமாக நடந்துகொண்டது மிகவும் திருப்திகரமாக இருக்கிறது.



இதற்குப் பிரதியாக ஜெர்மனிக்கு சமீபத்திலுள்ள ஏதோ ஒரு நாட்டில் இருந்து பிரிடிஷார் அப்புறப்படுத்தப்படுவாரென ஜெர்மானியர் சொல்லியுள்ளார். பிரிடிஷார் அங்கிருப்பது ஜெர்மனிக்குக் கெடுதலாம்.

**பிரான்ஸ்.**—அக்டோபர் 20-ம் தேதி நான்டிஸ் என்ற இடத்திலிருந்த ஜெர்மன் கமாண்டர், ஜெனரல் ஹோல்ட்ஸ் சுடப்பட்டார். இதற்காக கைதி செய்யப்பட்டு 50 பேர் சுடப்பட்டனராம். குற்றவாளியைக் காண்பிக்காமல் போனால் இன்னும் 50 பேர் சுடப்படுவார்களாம். போர்டோவிலும் ஜெர்மன் அதிகாரி சுடப்பட்டு அதற்காக 50 பேர்கள் கைதி செய்யப்பட்டனர்.

**இரான்.**—இங்கே சொன்னவிதமாக அமைதியை ஸ்தாபித்து, அச்சுநாட்டுக் கலவரமில்லாமல் செய்து அரசாங்கத்தையும் ஸ்தாபித்துவிட்டு, ருஷ்ய, பிரிடிஷ் சைனியங்கள், காஸ்பியன் கடலுக்கும், ஹாமடனுக்கும் முறையே சென்றன.

**பிரிடிஷ் விமானப்படை.**—இவ்வாரத்தில் ப்ரெமனும், நேபிள்ஸூம் தாக்கப்பட்டன. நேபிள்ஸில் 5 மணி நேரம் செய்த தாக்குதலால், தொழிற்சாலைகளும், கப்பல் துறைகளும், ரயில் வண்டிகளும் நாசமாயின.

**கடல் யுத்தம் : புதிய தந்திரம்.**—ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அதிகமான நேசதேசக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதால் எதிரி வேறு புதிய தந்திரத்தை கையாளுகிறான். தனியே அனுப்பாமல் நீர்மூழ்கிகளை கூட்டமாகஅனுப்பி துணைக் கப்பல்களை விட்டுவிட்டு பல இடங்களில் தாக்கப் பார்க்கிறான். இதற்குத் தகுந்தவாறு பலம் செய்துகொள்வதுடன் எதிரி நீர்மூழ்கிகளை அதிகமாகப் பிடித்துவிடலாம். 'ஆண்டிலோப்' என்ற பிரிடிஷ் நாசகாரி இரண்டு விரோதி நீர்மூழ்கிகளைப் 'பிடித்தது.'

**டிரபால்கர் ஸ்கோயர் கூட்டம்.**—அக்டோபர் 31-ம் தேதி டிரபால்கர் சண்டையின் 136-வது வருஷதினம் கொண்டாடப்பட்டது. ஒவ்வொருவனும் தன் காரியத்தைச்செய்து முடிக்கவேண்டுமென்ற நெல்ஸனின் கொள்கையைப் பறக்கவிடப்பட்டது. அப்பொழுது நெபோலியனைச் சாய்த்த கப்பற்படை இன்னும் கடலாதிக்கத்தைக் கொண்டிருக்கிறதென்பது ஒரு உத்ஸாகத்தை மூட்டக்கூடிய விஷயம்.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 13—10—41. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—டஸ்ஸல்டார்ப் (Dussel Dorf); கொலோன் (Cologne). | ... | ... | ... |
| | கப்பல் துறைகள்.—புலாயின் (Boulogne). | ... | ... | |
| | விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch), பிரெஞ்சு (French)க் கடற்கரைக் கப்பால். | ... | 5 விமானங்கள். | ... |

(Sterlitamak), யூபா (Ufa), ஸாராடோவ் (Saratov), பெர்ம் (Perm) இந்த இடங்களில் பக்குவப்படாத எண்ணெயை சுத்திசெய்ய தொழிற்சாலைகள் இருக்கின்றன.

## பெருந்தேவைகள் இல்லை.

இந்தக் கிணறுகளிலிருந்து கிடைப்பது ஸ்வல்பமாகயிருக்கும். நிலைமையில் யுக்ரேனிலும், லெனின்கிராட்டிலும் பெரிய கைத்தொழிற் பிரதேசங்களுக்கும் மேற்கு ருஷ்யாவிலுள்ள அதிக பொதுமக்களின் தேவைக்கும் எண்ணெய் தேவையில்லை. இதனால் எண்ணெய் உபயோகம் அதிகம் குறையும். மேலும் யூரலிலும், அதற்கு பின்புறமும் எண்ணெய் இருப்பிலிருக்கிறது. தூரக் கிழக்குக்கு வேண்டிய எண்ணெய் அமெரிக்காவிலிருந்து கிடைக்கும். மத்திய ஆசியாவிற்கு இரான் இருப்புப்பாதை மூலமாகவும், காஸ்பியன் கடல் மூலமாகவும், அபாடானிலிருந்து அடையலாம்.

வட காகஸஸை இழந்தாலும் ருஷ்யர்கள் யுத்தத்தைத்தொடர்ந்து நடத்தக் கூடும். ஆனால் இப்பொழுதுள்ள படையெடுப்பு மாதிரி தீவிரமான போராய் இருக்காது.

---

# வாரயுத்தச் செய்திகள்.

---

## 16—10—41-லிருந்து 22—10—41-வரை.

**மாஸ்கோ யுத்தம்** இன்னும் கலினின் முதல் ஓரல் வரையில் சுற்றிலும் நடந்துவருகிறது. மெஜெயிஸ்க் எதிரி வசப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற மூன்று தினங்களாக எதிரியின் முன்னேற்றம் இல்லாததால் ருஷ்யர்கள் மும்மரமாக இருகோடிகளிலும் தாக்கிவருகிறார்கள் என்று தெரிகிறது. இவ்விதம் ருஷ்யர்கள் பலமாக குறுக்கு எதிர்ப்புகள் செய்தால் நடுபாகத்தில் இருக்கும் எதிரியின் நிலை ஆபத்துக்குள்ளாகிவிடும். சிமோலென்ஸ்க் நிலையும் மாறுபட்டு வருகிறதால் மூன்று வாரங்களாக ராக்ஷஸ யுத்தம் செய்து நஷ்டமடைந்ததை எதிரிக்கு ஈடுசெய்யப் போதுமான அவகாசம் இல்லை.

மாஸ்கோவின் தற்காப்பைப் பலப்படுத்தவும் தேச துரோகிகளை அகற்றவும் ஸ்டாலின் எச்சரிக்கை செய்திருக்கிறார். க்யூபிஷேவ் (ஸமாரா) என்ற இடத்திற்கு அரசாங்கம் மாற்றப்பட்டிருக்கிறது. இது வால்கா நதிக்கரையில் மாஸ்கோவிற்குக் கிழக்கே 550 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே நிர்ப்பயமாக இருக்கலாம். இதனால் மாஸ்கோ விடப்பட்டதாகக் கருதக்கூடாது. கடைசியான ருஷ்யர் இருக்கும் வரையில் காப்பாற்றப்படும். இரும்புக் கோட்டையினால் இது சூழப்பட்டிருப்பதோடும், இரவும் பகலும் பொது ஜனங்களாலும் காபந்து செய்யப்பட்டுவருகிறது. அரசாங்கம் கொஞ்சதூரத்தில் இருப்பதால் பயம் இல்லாமல் அரசாங்கத்தையும் யுத்தத்தையும் நடத்தமுடியும். ருஷ்யச் சைனியம் 'துலைக்கப்பட்டது' என்று டாக்டர் கோயபல்ஸ் சொல்லுவது போலல்லாமல், கலைபடாமல் தைரியமாக நின்று வெற்றிபெறும் வரையில் சண்டை செய்யும். மேலும் இப்புதிய இடம் யூரல் மலைச் சாரலுக்கு சமீபத்தில் இருப்பதால் புதிய தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க முடியும்.



**டானட்ஸ் தடா.**—டானட்ஸ் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளையும் காகேஸஸ் எண்ணெய் ஸ்தலங்களையும் கைப்பற்றும் எண்ணத்துடன் ரோஸ்டவ் வைச்சுற்றி மாஸ்கோவை எதிர்ப்பதுபோல் ஜெர்மானியர் தாக்கிவருகின்றனர். ஸ்டாலினோ எதிரிவசமாயிற்று, ஆனால் டாகன்ராக்கையும் பிடித்ததாக எதிரி சொல்லுகிறான்.

**லெனின்கிராட்.**—தனியே எதிரியுடன் நேருக்குநேர் நின்று டாங்கிகளையும் மனிதர்களையும் தாக்கிவருகிறது. ஏராள நஷ்டமடைந்ததால் எதிரியின் பலம் தளர்ந்துவருகிறது. இதைப் பிடிக்க முடியாததற்கு ஜெர்மன் ஒலிபரப்பு மந்திரி பல நொண்டிக் காரணங்களைச் சொல்லுகிறான். அதைப்பிடிக்க அவசரமில்லை என்றும், ஒடெஸ்ஸாவைப் பிடிக்க 60 நாட்கள் ஆனதால் இதற்கு இன்னும் அதிகம் அவகாசம் தேவையாக இருக்கும். மேலும் அனாவசியமாக உயிர்ச்சேதம் விளைவிப்பதற்கு இஷ்டமில்லை என்றும் அப்பிரதேசத்தில் தரைச் சுரங்கவெடிகள் அதிகம் இருக்கிறதால் எச்சரிக்கை தேவையாக இருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது.

**ஒடெஸ்ஸா.**—இதை ருஷ்யர்கள் காலிசெய்தது தெரிந்ததுதான். ஆனால் அப்பட்டணத்தைப் பிடித்ததாக அடிக்கடி எதிரிகள் பலமாக வீண் பிரசாரம் செய்து வருகிறார்கள். உண்மையில் முற்றுகை மூலம் நகரங்களைப் பிடிப்பதில் எதிரியின் தந்திரம் பலிக்கவில்லை. உதாரணமாக லெனின்கிராட் இன்னும் எதிர்த்து நிற்கிறது. ஒடெஸ்ஸா ஆகஸ்டு மாத முதல் தைரியமாக நின்றது. எதிரி ஒடெஸ்ஸாவிற்குக் கிழக்கே முன்னேறி இப்பட்டணத்திற்கு வந்துகொண்டிருந்த ஸப்ளை ஸ்தானங்களைப் பிடிக்கப் பார்த்ததாலும், கொஞ்சகாலம் எதிரியின் முன்னேற்றத்தை நிறுத்திவைக்கவே இப்பட்டணத்தில் ருஷ்யர்கள் பலப்படுத்தியதாலும் பின்னால் இப்பட்டணம் காலிசெய்யப்பட்டு தேவையான இடங்களுக்கு இச்சைனியம் கொண்டுபோகப்பட்டது. 8 நாள்வரை சாவகாசமாக ருஷ்யர்கள் பின்னேறினர். அதன் பிறகுதான் விரோதிகள் பட்டணத்திற்குள் நுழைந்தார்கள். ருமேனியர் இப்பட்டணத்தை வெற்றிகரமாக முற்றுகை போட்டிருந்தாலும் இதைப் பிடிக்கவில்லை.

ஆனால் ஒடெஸ்ஸா நகரத்தில் விரோதிகள் பிரவேசித்தது முதல் அது ருமேனியாவுடன் சேர்க்கப்பட்டும். டிரான்ஸ் நீஸ் டிரிய என்ற ருமேனிய மாகாணத்திற்கு இது தலைநகரமாகச் செய்யப்பட்டதாம்.

**அட்லான்டிக்கில் எதிரியின் துணிச்சல்.**—இவ்வாரத்தில் ஒரு நாசகாரி உள்பட மூன்று அமெரிக்கக் கப்பல்கள் அட்லான்டிக்கில் நாஸிகளால் மூழ்கடிக்கப் பட்டன. இவைகளில் போல்டு வென்சர், கீர்னி என்பவை ஐஸ்லாந்திற்குத் தென்மேற்கிலும். லேஹை என்பது 'ஆபிரிக்காவின் மேற்கே' தென் அட்லான்டிக்கில் 19-ம் தேதி மூழ்கடிக்கப்பட்டன. யுத்தப் பிரதேசத்திற்கு வெளியே வியாபாரத்திற்குச் சென்றபொழுது தாக்கப்பட்டது. ஜெர்மன் நீர்மூழ்கி தாக்குவதற்கு முன்னால் பிரெஞ்சுத் துறைமுகத்தில் எண்ணெய் எடுத்துக்கொண்டிருக்கலாமென்று சொல்லப்படுகிறது. அமெரிக்க நாசகாரி சேதமான நிலையில் அமெரிக்கத் துறைமுகத்தை அடைந்தது. அதில் 10-பேருக்குக் காயம், 11-பேர்களின் விவரம் தெரியவில்லை. இதைப்பற்றி ஜெர்மனிக்குத் தெரியப்படுத்திச் சொல்லும்போது கார்டல் ஹல்லும், மிஸ்டர் ரூஸ்வெல்டும், 'ஐரோப்பியக் கொள்ளைக்காரனோடு' பேசி பிரயோஜனமில்லை என்கிறார்கள். அட்லான்டிக்கில் ஆதிக்கமடைய நாஸிகளின் வேலை என்பதில் சந்தேகமில்லை. நடுநிலைச் சட்டத்தை மாற்ற உத்தேசிக்கும் சமயத்தில் இது நேர்ந்தது சாதகம்தான். ஐஸோலேஷனிஸ்ட் கக்ஷியின் பலம் குறைந்து இனி வியாபாரக் கப்பல்களுக்கும் ஆயுதம் ஏற்ற அனுமதி கொடுக்கப்படும்.

இதற்குத் தேவையான கப்பல்களில் ஆயுதம் ஏற்றும் மசோதாவிற்கு 259 பேர்கள் சாதகமாயும், 138 பேர் பாதகமாயும் வாக்களித்தனர். ஸெனெட் சபை

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **13—10—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | துறைமுகம், ரயில்வே தொழிற்சாலைகள், ரேடியோ நிலயம்—பெங்காஸி (Benghazi). | 3 பெரிய கப்பல்கள் தாக்கப் பட்டன. | ... | ... |
| | துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ... | ... | ... |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | விமான நிலயம்.—காஸ்டல் வெட்ரானோ (Castel Vetrano). | வெடிகள் கிளம்பின. | ... | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | விரோதித் துணைக்கப்பல்.—மத்தியதரை கடலி (Mediterranean)ன் மத்திய பாகத்தில். | ... | 1 விமானம். | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள் விரோதி பான்ஸர் துருப்புகள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 11 விமானங்கள். | 36 விமானங்கள். |
| **14—10—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ஸப்ளை கப்பல்கள்.—நார்விஜியன் (Norwegian) கடற்கரைக் கப்பால். | 3 கப்பல்கள் தாக்கப் பட்டு, சேதமாயின. | ... | ... |
| | விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாயிலு (English Channel)ம், வடபிரான்ஸிலு (France)ம். | ... | ... | ... |
| | ஒரு சாமான் ரயில் வண்டி, விரோதி வேவு பார்க்கும் கப்பல்.—பிரெஞ்ச (French)க் கடற்கரையில். | ... | நஷ்டமில்லை. | 1 விமானம். |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—தெற்கு ஜெர்மனி (Germany)யில் | ... | 4 விமானங்கள். | ... |
| | ஒரு ஸப்ளை கப்பல்.—நார்விஜியன் (Norwegikn) கடற்கரைக்கப்பால். | மூழ்கடிக்கப் பட்டது. | ... | ... |
| | மற்றொரு கப்பல்.—பிரீஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால். | மூழ்கடிக்கப் பட்டது. | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **14—10—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | விரோதி விமானமிறங்குமிடம்.—டெர்னா (Derna), டொப்ருக் (Tobruck) ஸ்தாவிற்கு வடக்கே. | ... | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | ... | ... |
| **15—10—41.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.-விரோதிக் கப்பல்கள்—டச்ச (Dutch)க் கடற்கரைக்கப்பால். | ... | 7 பாம்பர் விமானங்களும், 1 பைடர் விமானமும். | ... |
| | கப்பல் துறைகள், துறைமுகத்திலும், துறைமுக மேடைகளிலும் உள்ள கப்பல்கள்.—லஹாவர் (Lehavre). | ... | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | ... | ... | ... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | தீக்கள் மூட்டப் பட்டன. | ... | ... |
| | விமான நிலயங்கள்.-பெர்க்கா (Berka), மார்டூபா (Martuba). | ... | ... | ... |
| | விரோதி சாமான் கிட்டங்கி.—பார்டியா (Bardia)வுக்குத் தெற்கே. | ... | ... | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | கட்டப்பட்டிருக்கும் விரோதி வியாபாரக் கப்பல்.—ட்ரிபோலிடேனியா (Tripolitania) கடற்கரைக்கருகாமையில். | ... | நஷ்டமில்லை. | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விரோதித் துருப்புகள், பீரங்கிப்படை, விமானச் சண்டைகள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 28 விமானங்கள். | 43 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—10—41.** (வியாழக்கிழமை). | | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| இரவில்.—ராணுவ லக்ஷியங்கள் தொழிற்சாலைகள்-டூயிஸ்பர்க் (Duisburg), ரூர் (Ruhr) பிரதேசத்தில் ஏதோ ஒரு இடம். | ... | ... | ... |
| கப்பல் துறைகள்.—கலே (Calais), ஆஸ்டெண்டு (Ostend), டங்கர்க் (Dunkirk). | சேதமாயின. | ... | ... |
| விரோதிக் கப்பல்கள்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக்கப்பால். | ... | ... | ... |
| விரோதிக் கப்பல்கள்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால். | ... | 4 விமானங்கள். | ... |

இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| டார்பிடோக்கள் செய்யும் தொழிற்சாலை, யுத்த தளவாடம் செய்யும் தொழிற்சாலையைச் சேர்ந்த கட்டடங்கள், விமானம் சேர்க்கும் தொழிற்சாலை, ஆல்பா ரோமியோ (Alfa Romeo), தொழிற்சாலைகள், கப்பல் துறைகள், இருப்புப்பாதைகள், இஞ்ஜின்கள் நிற்குமிடங்கள் நேபிள்ஸ் (Naples). | பலத்த சேதம்; தீக்களும் வெடிகளும் கிளம்பின. | ... | ... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சவாரிடைகள், விமான நிலயங்களிலிருந்து விமானங்கள்—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | ... | 17 விமானங்கள். | 28 விமானங்கள். |

**17—10—41.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| கடல் விமானதளம்.—ஸிரக்யூஸ் (Syracuse). | ... | ... | 1 விமானம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **17—10—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| போக்குவரத்து வண்டிகள்.—ட்ரிபோலிடேனியாவி(Tripolitania)ல், ஸூயாரா (Zuara)விலிருந்து ஸர்டி (Srite)க்குப் போகும் கடற்கரை ரஸ்தா. | அநேக வண்டிகள் நாசமாக்கப்பட்டன; மற்றவை சேதமாயின. | ... | .. |
| விமான நிலயம், சைனிய வாஸஸ்தலங்கள், கட்டடங்கள், படைக்காவலர் வீடு.—எஸ்ஸாயுயா (Ezzauia). | ... | ... | 1 விமானம்; அநேகம் சேதமாயின. |
| விரோதி ஸ்தானங்கள்.—ஆம்பாஜியார்ஜிஸ் (Ambageorgis)க்குத் தெற்கில். | ... | நஷ்டமில்லை. | ... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| விமானச் சவாரிடைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 27 விமானங்கள். | 52 விமானங்கள். |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| விரோதித் துணைக்கப்பல்.— மத்தியதரைக் கடலி(Mediterranean)ன் மத்திய பாகத்தில் | 2 பெரிய கப்பல்களும், 1 சிறிய கப்பலும் தாக்கப்பட்டு சேதமாயின. | ... | ... |

ஸார்டீனியா (Sardinia).

| | | | |
|---|---|---|---|
| விமான நிலயம், படையை விட்டோடினவர்கள், சைனிய வாஸஸ்தலங்கள், விமான நிற்குமிடங்கள்.—எல்மாஸ் (Elmas). | ... | நஷ்டமில்லை. | ... |

**18—10—41.** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| விமான நிலயம், படையை விட்டோடினவர்கள், விமான நிலயத்தைச் சேர்ந்த கட்டடங்கள்.—ட்ராபினி (Trapini). | தீக்கள் கிளம்பின. | ... | 1 விமானம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 18—10—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | விமான நிலயம், தரையில் அங்குமிங்குமிருந்தும் விமானங்கள்.—டெர்னு (Derna). | அநேக விமானங்கள் சேதமாயின. | ... | ... |
| | விமானமிறங்கும் இடங்கள், முகாம்.—எல் கஸாலா (Elgazala). | சேதமாயின. | ... | ... |
| | கப்பல்கள், துறைமுக ஸ்தாபனங்கள்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | விரோதி ஸ்தானங்கள்.—அஸோஸோ (Azozo) பிரதேசம். | ... | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 17 விமானங்கள். | 38 விமானங்கள். |
| 19—10—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—ரேடியோ நிலயங்கள், விமான நிலயங்கள், விமானங்கள்,—செர்பர்க் (Cherbourg) பிரதேசம். | சேதமாயின. | ... | ... |
| | விமான எதிர்ப்புகள்.—புலாயின் (Boulogne), டீப்பி (Dieppe) பிரதேசங்களிலும், பிரெஞ்சு (French)க் கடற்கரையிலும். | ... | நஷ்டமில்லை | ... |
| | இரவில்.—விமான நடமாட்டமில்லை. | ... | ... | ... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | விரோதி சாமான் வைக்குமிடம்.—ஸோலும் (Sollum). | தகர்க்கப் பட்டது. | ... | ... |
| | விரோதி விமான மிறங்குமிடங்கள்.—லிபியா (Libya) | சேதமாயின. | ... | ... |
| | துறைமுகம், துறைமுகத்திற்கடுத்த கட்டடங்கள், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலை, மின்சார உற்பத்திசாலை—லிக்டா (Licata). | தகர்க்கப் பட்டன. | ... | ... |
| | விமான நிலயம்.—காமிஸோ (Comiso) | ... | 1 விமானம். | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 19—10—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | பீரங்கிப்படை, காலாட்படை, விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 7 விமானங்கள். | 23 விமானங்கள். |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 14—10—41. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | 8 விமானங்கள். | ... |
| 15—10—41. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—கிழக்கு இங்கிலாந்தி (England)ல் அங்குமிங்கும் சில இடங்கள். | சொற்பச் சேதம். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | 9 விமானங்கள். | ... |
| | விமானச் சண்டைகள்.—ருஷ்யப்படைகளின் பின்புறத்திலுள்ள போக்குவரத்துகள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | ... | ... |
| 16—10—41. (வியாழக்கிழமை) | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரை, சொற்ப விமான நடமாட்டம். | வெடிகள் போடப்படவில்லை. | 1 விமானம். | ... |

யில்லை. அப்பொழுதே, மாஸ்கோ பொது சமாசார நிலயத்தின் டைரக்டரான ஷேர்பாகவ்விடமிருந்து நடுநிலை நாடுகளுக்கு ருஷ்யச் சேதக் கணக்கு வந்திருக்கிறது. இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் பின்வருமாறு.

| | ஹிட்லர் சொல்லுவது. ருஷ்ய நஷ்டம். | | ஷேர்பாகவ் சொல்லுவது. ருஷ்ய நஷ்டம். | |
|---|---|---|---|---|
| மனிதர்கள் | கைதியானவர்கள். | 25,00,000 | இறந்தவர்கள், காயம் அடைந்தவர்கள். விவரம் தெரியாதவர்கள். | 11,28,000 |
| பீரங்கிகள் | ... | 22,000 | | 8,900 |
| டாங்கிகள் | ... | 18,000 | | 7,000 |
| விமானங்கள் | ... | 14,500 | | 5,316 |

| | ஜெர்மன் நஷ்டம். | | ஜெர்மன் நஷ்டம். | |
|---|---|---|---|---|
| மனிதர்கள் | கைதியானவர்கள். | ? | இறந்தவர்கள், காயம் அடைந்தவர்கள். | 30,00,000 |
| பீரங்கிகள் | ... | ? | | 13,000 |
| டாங்கிகள் | ... | ? | | 11,000 |
| விமானங்கள் | ... | ? | | 9,000 |

இவ்விதம் அதிக வித்தியாசத்துடன் அறிக்கைகள் வெளிவருவதற்குக் காரணம் என்ன என்பதை கவனிப்போம்.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னும் பின்னும் ஜெர்மானியர் கொஞ்சமும் பின்வாங்காமல் அபாண்டமான பொய்களைச் சொல்லிவருகிறார்கள் என்பதை நம்முடைய அறிக்கைகளிலும் மற்ற நேசதேசப் பிரசுரங்களிலும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இதை ஜெர்மானியர் தெரிந்துகொள்ளவில்லை. பொய் சொல்வதையே ஒரு கல்வியாகப் பயின்றுவருகின்றனர். "பொய் பெரிதாயும் பன் முறைகளிலும் சொல்லப்பட்டால் அது நிஜமாகிவிடும்" என்பதுதான் அவர்கள் கொள்கை போலும். அனாவசியமானவைகளைச் சேர்த்துக்கொள்வதுபோல் முக்கியமானவைகளை விட்டுவிடுகிறார்கள். ஏனென்றால் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பூரா நஷ்டங்களை இதுவரையில் அரசியல் வழியில் பிரசுரித்ததேயில்லை. வேறு யாராவது பிரசுரித்தால் கூடினவரையில் குறைந்த எண்களையே கொடுக்கிறார்கள்.

ருஷ்யர்களோ ஒரேவிதமாக தங்கள் நஷ்டங்களை வெளிப்படுத்துகிறார்கள். ஏற்பட்டிருக்கும் நிலைமைகளை மறைத்ததும் இல்லை. தற்புகழ்ச்சியோ, ஏமாற்றமோ அவர்களிடம் கிடையாது. உதாரணமாக ஸ்டாலின் 'பூ தகன முறையைச் செய்யும்படி சொல்வதிலிருந்தே அரசாங்கத்தாரின் பஹிரங்கநிலை தெரியவரும்:

ஆகையால் யார் கொடுக்கும் கணக்கு நிஜமாகும்? ருஷ்யர்கள் கொடுப்பது தான்.

வி வி வி வி வி

**நடுநிலை நாடுகள் நினைப்பது.** முன் சொன்னவைகளை மாத்திரம் நம்ப வேண்டாம். மற்ற நிதர்சனங்களும் இருக்கின்றன. நடுநிலை நாடுகளின் உத்தேசங்களையும், ஜெர்மானியரின் அறிக்கைகளையும் ஒத்து ஊடுருவிப் பார்ப்போம். ஜூன் 23-ல் ஜெர்மானியருக்குக் கட்டு



பட்ட புதாபெஸ்டு ரேடியோவில் ருஷ்ய விமானங்களின் முழுபலம் 7,000 என்று சொல்லப்பட்டது. ஜூன் 30-ல் இதாலியப் பத்திரிகைகளில் 6,000 முதல் 10,000-வரை யிருக்கலாமென்று சொல்லப்பட்டது. ஆனால் ருஷ்யா இன்னும் தைரியமாகவும் வெற்றியுடனும் சண்டை செய்யும் சமயத்தில் 14,500 விமானங்களை வீழ்த்தியதாக ஹிட்லர் சொல்லிக்கொண்டு திரிகிறான் ?!

விமானக்கதை இவ்விதம். மனிதர்கள் கணக்கைப் பார்ப்போம். ஸெப்டம்பர் 22-ல் ஜெர்மானியருக்கு இறந்தது, காயம்பட்டது, கைதியானது உள்பட ஐந்து லக்ஷத்திற்குக் குறைவுதான் என்று ஜெர்மனியில் லார்டு ஹாஹா தெரிவித்தான். ஆனால் ருஷ்யருக்கு இருபது லக்ஷம் இறந்ததாயும், இருபது லக்ஷம் கைதியானதாயும் ஆக 40,00,000 என்று கூறப்படுகிறது. இதில் காயமடைந்தவர்கள் சேர்க்கப்படவில்லை. இப்பொழுது ஜெர்மன் ரேடியோவில் மூன்றுபேர் காயமடைந்ததற்கு ஒருவர் வீதம் கொல்லப்பட்டதாகச் சொன்னால் ருஷ்யரின் மொத்த நஷ்டம் 1,00,00,000 ஆகவேண்டும். அதாவது ஒரு ஜெர்மானியருக்கு 20 ருஷ்யர் வீதம் ஆகிறது! இவை இரண்டும் எவ்வளவு விரோதமாக இருக்கிறது. கடைசியாக ருஷ்யர்கள் கொடுத்துள்ள கணக்கு கொஞ்சம் அவர்கள் பக்ஷமாயிருந்தாலும் ஒரு ருஷ்யரின் சேதத்திற்கு 3 ஜெர்மானியர் வீதம் நாசம்—11,00,000 ருஷ்ய நஷ்டத்திற்கு 30,00,000 ஜெர்மானியர் சேதம் என்றுதான் முடிகிறது.

இதைத் தவிர நடுநிலை நாடுகளின் கணக்கும் கிடைத்திருக்கிறது. யதார்த்தமான கணக்கைக் கொடுக்கும், லஜராப், ரூட் என்ற இரண்டு அமெரிக்கர்கள் ஜூலை 11-ல் ஜெர்மன் நஷ்டம் சுமாராக 10-லக்ஷமென்று சொன்னார்கள். அதற்கு 10 வாரம் கிரமித்து சிகாகோவிலுள்ள டெயிலி டெலகிராப்பின் ஐரோப்பிய நிருபர் ஹாம்பர்க்கில் ஒருவாரத்தில் இறந்தவர்களின் கணக்கு கொடுக்கப்பட்டிருந்ததை அறிவித்தார். அதில் 67 உத்தியோகஸ்தர்கள், ராணுவ சம்பந்தமான அனுபவ உத்தியோகஸ்தர்கள் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. இது மொத்தச் சேதத்தில் 100-ல் 15. அதாவது அவ்வாரத்தில் அப்பட்டணத்தில் இறந்தது 1,000 என்று ஆகும். இன்னும் ஜனங்களின் மொத்த விகிதத்தில் பார்த்தால் அவ்வாரத்தில் 86,000 ஜெர்மானியர் ருஷ்யப் போர்முனையில் இறந்திருக்கின்றனர். இவ்விதம் யுத்தம் நடந்த 15 வாரங்களில் 13,00,000 ஜெர்மன் நஷ்டமாகும். மூன்று பேர் காயமடைந்ததிற்கு ஒருவர் கொல்லப்பட்டாரென்ற கணக்கின்படி 39,00,000. ஆகவே ருஷ்யர் கொடுத்த கணக்கு குறைவாகத்தான் ஆகிறது!

வி வி வி வி வி

**மாரிகாலம் வந்தால்.** (ருஷ்ய யுத்தத்தைப் பற்றி) "போக்கு வரவுப் பிரச்னை ஒன்றுதான் இருக்கிறது" என்று கடைசியாகப் பேசிய சமயத்தில் ஹிட்லர் சொன்னான். ஸெப்டம்பர் 29-ல் ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பில் ரஸ்தாக்களில் தண்ணீர் தேங்கி இருக்கிறதென்றும் சொல்லப்பட்டது. மழை ஜலம் உள்ளே இறங்கவில்லையாம்.

சீதோஷ்ண நிலையைப் பார்த்தால் கிரிமியாவிலும் டானட்ஸ் குடாவிலும் நவம்பர் மத்திவரையிலும் அவ்விதம் தானிருக்குமென்று தெரிகிறது. உடனே உஷ்ணம் தணிந்து உறைபனி வந்து, தரை கெட்டியாகிவிடும். அப்பொழுது கெட்டியான பனியின் மேல் ஆயிரக்கணக்கான கைதிகளைக் கொண்டு ஜெர்மானியர் பாதைகள் போடச் செய்வார்கள். அதனால்தான் மாரிகாலம் வந்தால் ருஷ்ய யுத்தம் நிற்காதென்றும், கிழக்கு நோக்கிப் போவதை ஜெர்மானியர் நிறுத்தமாட்டார்கள் என்றும் நாம் சொன்னோம்.

ஆனால்........! ருஷ்யர்களைவிட அதிகம் ஜெர்மானியரைத் தடை செய்ய மாரிகாலத்தில் இரண்டுவிதமான தொந்தரவுகள் உண்டு. ஒன்று எண்ணெயைப் பற்றியது. குறைந்த உஷ்ண நிலையில் பெட்ரோல் ஆவியாக மாறாது. பனி

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—10—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | .. | .. | ... |
| **17—10—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலிலும், இரவிலும் வெடிகுண்டுப் பிரயோகத்தைப்பற்றி யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | 14 விமானங்கள். | ... |
| | ஸோவியத் நாட்டுப்புறம், போக்குவரத் நகரம்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | ... | ... |
| **18—10—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | 16 விமானங்கள். | ... |
| | **மால்டா (Malta).** | | | |
| | மால்டா (Malta) ... | மிகவும் சொற்பச் சேதம். | ... | ... |
| **19—10—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியன் (East Anglian) கடற்கரையிலும், இங்கிலாந்தி (England)ல் ஏதோ ஒரு இடம். | சொற்பச் சேதம். | 1 விமானம். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | ... | ... |
| **20—10—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—அநேக இடங்கள்—மெர்ஸி ஸைட் (Merseyside), வேல்ஸ் (Wales)ன் வடக்குப் பிரதேசம் உள்பட இங்கிலாந்தி (England)ல் | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப் பட்டனர். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | ... | ... |



# யுத்தக் குறிப்புகள்.

**ஒரு தோற்றம்.** மாரி காலத்தில் நேசதேசங்களுக்கு சில சௌகரியங்கள் ஏற்படலாம். ஆனால் அவர்கள் ருஷ்யாவிற்கு ஏற்பட்டிருக்கும் சாமான்களின் குறைவை ஈடுசெய்யவேண்டும். பிரிடனும் அமெரிக்காவும் எடுத்துக்கொண்ட முயற்சிகளை விருத்திசெய்து வந்தால் ஜெர்மானியர் யுத்தத்தை நிறுத்தும்படி செய்யாமல் போனாலும் யுத்தத்தில் சில மாறுதல்கள் ஏற்படும். இரு நாடுகளின் முயற்சி குறைந்தால் விரோதியின் பலமும் முஸ்தீப்பும் அதிகமாகத்தான் காணப்படும். ஆனால் வரவர கொஞ்சம் மட்டுப்படலாம். தரை யுத்தத்தில் இதுவரை ஈடுபடாத இந்த இரு ஜன நாயக நாடுகளின் தொழிற்சாலைகளின் முயற்சியை ஒன்றுபடாமல் செய்ய ஹிட்லர் தன்னால் முடிந்தவரை ஜப்பானையும் யுத்தத்தில் இழுத்துவிடப் பார்க்கிறான். அதனால், தான் அடைய நினைத்திருக்கும் வெற்றி நிச்சயமாகக் கிடைக்குமென்றும் நினைக்கிறான்.

உலக நாகரிகத்தைத் தொலைக்கப் பார்க்கும் நாஸிச் சைனியங்களை எதிர்த்து, பிரிடனும் ருஷ்யாவும், காஸ்பியன் கடலிலிருந்து பர்ஸியன் குடா வரையிலும், கருங்கடலிலிருந்து லெவான்டு வரையிலுமுள்ள சதுர வெளியில் தான் சண்டை செய்யவேண்டியிருக்கிறதாக ராணுவ நிலையிருக்கிறது. மாஸ்கோ எதிரி வசமாக நேர்ந்தாலும், டிமோஷென்கோ பின் வாங்கினாலும், நடுபாகத்தில் வந்தது வரட்டுமென்று தாக்க வடக்கு, தெற்கு, பாகங்களிலுள்ள ஜெர்மன் சைனியங்களையும் சேர்த்துக்கொண்டு சமீபக் கிழக்கு நாடுகளை இருபக்கங்களில் எதிரி தாக்கப் பார்ப்பான்.

ஆனால் சமீபக் கிழக்கில் நேசதேசங்கள் பெரும் பலங்கொண்ட சேனையைத் தயார்செய்து வைத்திருக்கின்றன. இதற்குத் தடையாக கொஞ்சம் அச்சநாட்டுச் சைனியம் லிபியாவில் இருக்கிறதே ஒழிய அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 'எங்கள் சொந்தக்குளம்' என்று மத்தியதரைக்கடலைப்பற்றி பிரதாபமாகச் சொன்ன இதாலியர்களால் ஒன்றும் முடியாததாலும் ஆபிரிக்காவைக் காப்பாற்றிக்கொள்ள முடியாததாலும் அவர்களை ஜெர்மானியர் நிந்திக்கின்றனர். ஆபிரிக்காவிலுள்ள அச்சநாட்டுச் சேனையின் உதவிக்குவரும் ஒவ்வொரு கப்பலும் பிரிடிஷாரால் மூழ்கடிக்கப்படுவதாலும், பெங்காஸி, ட்ரிபோலி, ஸிஸிலியின் துறைமுகங்கள், இதாலிய தளவாட சாலைகள் முதலியவைகளை பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் விடாமல் தாக்கி வருவதாலும், நைல்நதி தீரத்திலுள்ள பிரிடிஷ் சைனியங்களுக்கும், யூக்ரேனிலுள்ள புடன்னிக்கும் அதிக உதவியாயிருக்கிறது. மத்தியதரைக்கடலில் கன்னிங்ஹாம், ஸோமர்வில்லி என்ற பிரிடிஷ் ஜெனரல்கள் செய்துவரும் தீரச் செய்கைகளின் பலன் அடுத்த வருஷத்தில் நன்றாகத் தெரியும்.

வி வி வி வி வி

**“உண்மையின் விளக்கம்.”** ஹிட்லர் வெளியிடும் அறிக்கைகளில் இவ்விதமாக அனாவசியமான வார்த்தைகளை ஏனோ சேர்த்துச் சொல்லுகிறான்? அவ்வறிக்கைகள் உண்மையானவையானால் இப்படிச் சேர்த்துச்சொல்ல அவசியம் ஏது? அதாவது தனது நாட்டினுள் இருக்கும் சந்தேகத்தையும், குற்றம் கூறும் தன்மையையும் போக்க இவ்வாறு பகிரங்கமாக சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் இது ஒரு பெரும் ஆச்சரியமில்லை. ஏனென்றால் அக்டோபர் 3-ம் தேதி (பிரமாதமாக) ருஷ்ய நஷ்டங்களைப் பற்றி சொல்லும்போது தனக்கு நேர்ந்ததைப்பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கவே

திய பிறகு அதிலுள்ளவர்கள் சாமர்த்தியமில்லாதவர்களாயும், 18-வயதுள்ளவர்களாயும்தான் காணப்பட்டனர். திரும்பி வந்த பிரிடிஷ் பைடர் விமானிகள் சொல்லும் சண்டை விவரங்களிலிருந்தும் நாஜி விமானிகளின் சாமர்த்தியக் குறைவும் ருஷ்யாவிலிருந்து கிடைத்த செய்திகளின் உண்மையும் தெரிகிறது.

இதுவும், இரண்டு வருஷங்களில் அடைந்த ஏராள ஜெர்மன் விமான நஷ்டங்களும் எதிரியின் குறைவைக் காண்பிப்பதைத்தான் பிரதம மந்திரி சொன்னது. ஜெர்மனியும் இக்குறைவினால், லுப்ட்வாபியை முன்போல பலமும், தேர்ச்சியும் கொண்டதாகச் செய்யமுடியவில்லை.

---

## ஜிப்ரால்டர் கப்பற்படையிலிருந்த நெல்ஸன் என்ற கப்பலின் திறமை.

## எதிரியை எரிக்கும் தன்மையுள்ளது.

## விமான எதிர்ப்பு பிரங்கிகள் டார்பிடோ விமானங்களை சுலபமாக விழ்த்துவதற்குக் காரணம்.

பிரிடிஷ் கப்பல் இலாகா மந்திரி வெளியிட்ட மற்ற சில தகவல்களிலிருந்து, ராணுவக் கப்பல்களை மத்தியதரைக்கடலில் இதாலியர் தாக்கும் பொழுது நெல்ஸன் என்ற சண்டைக் கப்பல் நீர்மூழ்கியின் தாக்குதலிலிருந்து தப்பிய விவரம் தெரிவதாக மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் கப்பல் விவர நிருபர் அக்டோபர் 1-ம் தேதி எழுதினார். இதற்குமுன், இக்கப்பல் பிரிடன் தற்காப்புப் படையிலிருந்து பிரிந்து வெளிநாடுகளுக்குச் சென்ற விவரம் தெரியாது. இக்கப்பல் மத்தியதரைக்கடல் பிரிடிஷ் கப்பல் கூட்டத்துடன் சேர்ந்ததினால் தளகர்த்தர் ஸோமர்வில்லியின் படைக்கு அதிக உதவி ஏற்பட்டது. ஏனென்றால் இது அதிக விஸ்தாரமாயும், கனமாயும், இருந்ததால், ஹுட் போன்ற மற்ற க்ரூயிஸர்களைக் காட்டிலும் ஜிப்ரால்டர் படைக்கு உதவியளிக்கமுடிந்தது.

அப்பொழுது நேர்ந்த சண்டையில் பிரிடிஷ் கப்பல்களிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகள் குறி தவறாமல் அடித்து எதிரியின் 13-ல் ஏழு விமானங்களை வீழ்த்தியது தெரியவருகிறது. ஆனால் இவைகளில் 6 டார்பிடோ பாம்பர்களும் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. இந்த டார்பிடோ பாம்பர்கள் குண்டு வீசு முன்னே 50 அடிகள் தண்ணீருக்குள் போகவேண்டும். லக்ஷியத்திற்கு ½ மைல் தூரத்திலிருந்து தான் சரியாக இவைகள் தாக்கமுடியும். அதற்குள் பெரிய கப்பல்களிலுள்ள பல பீரங்கிகள் எரி குண்டுகளை இவை மூழ்கும்போது போட்டு நாசம் செய்துவிடும்.

இதுவேதான் டாரன்டோ சண்டையின் பரம ரகசியம். அங்கே 11 பிரிடிஷ் மூழ்கி விமானங்களில் இரண்டுதான் சேதம். ஏனென்றால் இவைகள் இத்தந்திரத்தை அறிந்து, துறைமுகத்தில் நெருக்கமான இடத்தில் எல்லாவிதமான விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கும் சமீபத்தில் வந்துவிட்டன.

---



## “ வி ” அடையாளம் ‘விஞேஸ்லிவோஸ்ட்’ என்ற பதத்தைக் குறிக்கிறது !.

(விடாமுயற்சி, ஒரு பொருளை நிரந்தரமாகச் செய்தல்.)

“ ஸ்டாலின் நிலை நிறுத்தப்படவேண்டும் ”.

—பீவர்புருக்.

## ருஷ்யர்களுக்கு அதற்குத் தகுந்த வார்த்தை இருக்கிறது.

*சமீபத்தில் பிரசுரமான புஸ்தகத்தில் ஸர்பெர்னார்டு பாரிஸ் எழுதுவது :—*

ருஷ்யரின் அருமையான குணத்திற்குத் தகுதியான ருஷ்ய வார்த்தை இருக்கிறது. விஞேஸ்லிவோஸ்ட், “என்ற பதத்திற்கு ஒரு பொருளை நிரந்தரமாகச் செய்தல்” என்று பொருள்படும். “அது ஒரு மனிதனுக்கு மட்டும் பொருந்தக்கூடியதல்ல: தேசத்தாருக்குக்கூட பொருந்தும். உடலுக்கு மாத்திரம் பொருந்தக்கூடியதில்லை : மனதிற்கும் பொருந்தும்.”

இந்த அருமையான குணம் வியாஸ்மாவைச் சுற்றிலும், பிரியான்ஸ்க், ஒரெல் இவைகளுக்கு வடக்கிலும் வெளிக்காட்டப்படுகிறது. 150 கிலோமீட்டர் பின்புறத்திலிருக்கும் மாஸ்கோவைப் பாதுகாக்க ஸோவியத் சிப்பாய்கள் ஒவ்வொருவரும் தங்கள் முழு சக்தியையும் காட்டிவருகிறார்கள்.

ருஷ்ய மனப்பான்மையில் திட புத்தியாக இருப்பதில் பிளவின் அறிகுறி இருக்கிறதா என்பதை ஹிட்லர் வியக்தமாகத் தேடவேண்டும். இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் அவன் அனுப்பியிருக்கும் 14,000 டாங்கிகள் ருஷ்யர்களைப் பயமுறுத்தி விரட்டமுடியவில்லை. மேலும் கோயரிங்கின் பாய்ச்சல் பாம்பர்களும், குடைப்படையும், அவர்களின் உத்ஸாகத்தைக் குறைக்க முடியவில்லை. பிரிடிஷாரைப்போல், இவர்களும் ஹிட்லர் அவர்கள் மேல் எறியும் எல்லா ஆயுதங்களையும் தாங்கிக்கொண்டு திடமாக நின்று தங்கள் முறை வரும்பொழுது பலமாகத் திருப்பியடிக்க ஆவலாக இருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி

ப்ரவ்தாவின் வாக்கியம், “அபாயம் பெரியதாகவும் பயங்கரமாகவும் இருக்கிறது” என்பது எதைக்குறித்துச் சொல்லுகிறதோ அவ்விதமே நடப்பிலும் இருக்கிறது. ஆனால் பிரெஞ்சுப்படையெடுப்பில் இவ்வித வாக்கியங்கள் கிட்டத்தட்ட எல்லாம் அழிந்துவிட்டது என்று குறிப்பிட்ட மாதிரி இப்பொழுது இவ்வாக்கியம் குறிக்கவில்லை. மாஸ்கோ எதிரி கையில் வசப்பட்டாலும்கூட ஏன் எதிர்ப்பை தொடர்ந்து நடத்தக்கூடாதென்பதற்கு ராணுவப்படை சார்பாக யாதொரு காரணமும் இல்லை. ஸோவியத் அரசாங்கம் தனக்குண்டான சம்பவங்களை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதிலும், தனக்கு ஏற்பட்ட குறைகளை பலமாக நிந்தித்துக் கொள்ளுவதிலும் பேர்போனது. முதலில் சொல்லியதற்கு ஜுலையில் ஸ்டாலின் பேசியது உதாரணம்: இரண்டாவதாகச் சொன்னதற்கு ஜெர்மன் படையெடுப்புக்குச் சிலமாதமுன் கூடிய மகா நாட்டில் ருஷ்யப் போக்குவரத்து சாதனங்களைக் குறித்து பலமாக நிந்தித்துக் கொண்டது உதாரணம்.

நடமுறையில் ருஷ்யர்கள் போக்குவரத்து ஸாதனத்திலும், விமானப் படை, கப்பற்படை, டாங்கிப்படை, மோட்டார்படை இவைகளின் திறமையை வார்த்தையைக் காட்டிலும் அதிகமாக நடத்தையில் காட்டியிருக்கின்றன. ஹிட்லர் கூட ருஷ்ய பலத்தையும், ருஷ்யர்கள் பொறுக்கக்கூடிய சக்தியையும் தான் குறைவாக மதித்ததில் ஏற்பட்ட பெரிய தவறுதலை ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று.

25° வரையிருந்தால் இயற்கை காற்றைக்கொண்டு பெட்ரோல் புகையை உண்டாக்கலாம். அதற்கு அதிகமான நிலையில் பெட்ரோலை உபயோகிக்க முடியாது. ஸ்மாலென்ஸ்க், லெனின்கிராட் பிரதேசங்களில் பனி 75° வரை குளிர்ந்து விடுகிறது.

இதைத் தவிர, மசகு எண்ணெயையும் உபயோகிக்க முடியாது. உஷ்ணம் தணியத் தணிய, எண்ணெயின் கனம் குறைந்து இஞ்ஜின்களை வேலைசெய்ய விடாது. இந்தக் கஷ்டம் இருதிறத்தார்களுக்கும் உண்டு. ஆனால் ஜெர்மானியர்தான் வெகுதூரம் யந்திரங்களை நடத்திச் செல்ல வேண்டியிருக்கிறது.

அடுத்தது சர்ப் பிரயாசை. ருஷ்யாவில் மாரிகாலம் மிகக்கடுமையாக இருக்கும். குளிர் தாங்க முடியாது. நீண்டகாலம் குளிர்காற்றில் அடிபட்டு பொட்டல் வெளிகளில் பனிக்கட்டிகளின் மேல் நிற்பது சிரமம். இதில் பழக்கமானதால் ருஷ்யர்கள் சமாளிப்பார்கள். தற்சமயம் சைபீரியாவில் பனிகாலத்திற்கு லாயக்கான சைனியத்தை தயார் செய்கின்றனர். இதற்காக உடம்பை சூடாக்கும் உடுப்புகள் தேவை. இதை ஜெர்மானியர் தேடிக் கொண்டிருக்கிறார்கள். யுத்தத்திற்கு முன் வரை ருஷ்யாவிலிருந்து 100-க்கு 70 வீதம் ஜெர்மனி கம்பளி வாங்கி வந்ததில் பிரிடிஷ் கட்டுப்பாட்டினால் இதில் 100-க்கு 80 குறைந்தது. ருஷ்யாவின் கம்பளி 100-க்கு 80 பாகம் அவர்கள் வசமேயிருக்கிறது. மெல்லிய ஆட்டு ரோமம் பூரா அவர்களிடம் இருக்கிறது.'

ஆகையால் கிரீஸைப் பிடிக்கும்போது அங்குள்ள அரைச் சல்லடம் கிடைக்கும் இடங்களைக் கொள்ளையிட்டுக் கடைகளிலுள்ள ஸ்திரீகள் உடைகளையும் ஜெர்மனி அபஹரித்ததாக கிரீஸ் பிரதம மந்திரி லண்டனில் சொன்னது ஆச்சரியமில்லை!

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்தக் கல்வி.** மழையின் பயம் இருக்கும்பொழுதே 21-ம் தேதி மாலை மதராஸ் ராணுவ ஸர்க்கஸைப் பார்க்க ஏராள ஜனங்கள் வந்திருக்கின்றனர். மாலை 6 முதல் 8 மணி வரை அமைப்புடன் கூடியும், நன்கு விவரிக்கப்பட்டும் பலவகைப்பட்ட நவீன ஆயுதங்களை உபயோகிக்கும் விதம் காண்பிக்கப்பட்டது. (கவசமணிந்த மோட்டார்கள், பிரென், டாமி துப்பாக்கள், விஷவாயுத்தடை, ரம்ப வேலை, தண்ணீர் குழாய், படகுகள், பாலங்கள், தரை சரங்கவெடிகள் முதலியன). மதராஸ் காலாட்படை, சுரங்கவெடிகளைப் போடுகிறவர்கள், அவைகளை எடுப்பவர்கள், இவர்களுடைய சுருசுருப்பான வேலைப்பாடுகளும் காண்பிக்கப்பட்டன. இவ்விதம் இந்த தமிழர்களின் பகுதி, இரும்புத் தொப்பி அணிந்து, முகமூடிகளும், சட்டைகளும் தரித்து, திருட சரீரத்துடன் அடங்கி உத்ஸாகமாகவும் ஊக்கமாயும் நடிப்பது அங்கு வந்திருந்தவர்களுக்கு உணர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். அவ்விதம் இவர்களும் செய்தால், தங்கள் வீடு வாசல்கள், இந்தியா, பிரிடிஷ் சாம்ராஜ்யம் இவைகளை யுத்தத்திலிருந்து காப்பாற்றலாம். புதுக்கோட்டைக்கு இன்னும் யுத்தம் வரவில்லையென்று இருப்பது தவறு.' இதைத்தான் சைனியத்திற்கு ஆள் சேகரம் செய்யும் ஒரு உத்தியோகஸ்தரும் சொன்னார்: "யுத்தம் என்பது ஒரு அபாயமான வேலைதான், அது வரும்வரை காத்திருக்காமல் அதை தூரத்தில் தள்ள நின்று சேருங்கள்?"

---



## நாஸிகளின் ஆகாய பலக் குறைவைப்பற்றி மிஸ்டர் சர்ச்சிலின் குறிப்பு.

## நேர்ந்த விமானிகளின் குறைவை குறித்ததாகும்.

## பிரிடிஷ் சைனியத்தைப்பற்றி அவர் சொன்னது துலக்கப்படுகிறது.

ஜெர்மனியின் "அதிகமான ஆகாய பலக் குறைவு" என்று மிஸ்டர் சர்ச்சில் சொன்னபொழுது விமானிகளைத்தான் அவர் குறித்திருக்கிறார் என்று மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் அரசியல் நிருபர் அக்டோபர் 2-ம் தேதி எழுதியுள்ளார். பிரிடனைக் காட்டிலும் ஜெர்மனிக்கு எண்ணிக்கை அதிகம் உண்டு. ருஷ்யாவில் அவஸ்தைப்பட்டாலும் கொஞ்சம் சிரமப்பட்டால் இன்னும் அதிகமான விமானங்களையும், ருஷ்யாவில் நிலைத்துவிட்டால் ஏராளமாயும் தயார் செய்ய முடியும். ஜெர்மனி, ருஷ்யாவில் முக்கிய ஸ்தானங்களில் விமான ஆதிக்யம் பெறுவதற்கு மற்ற இடங்களில் ஏராள நஷ்டத்துடன் தோல்வியை அடைந்ததால் விமான நஷ்டம் அடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

மிஸ்டர் சர்ச்சில் கொடுத்த விவரங்களைப் பற்றி பார்லிமெண்டு சபையில் சில சந்தேகங்கள் உண்டாயின. சைனியத்தை அதிகரிக்கமுடியாதென்று அவர் சொன்னது, சைனியப் பகுதிகளை விருத்தி செய்ய முடியாதென்று சொன்னதாகவே கருதவேண்டும்.

ராணுவ நிலைகளுக்கு ஏற்றவாறு இவ்வெண்ணிக்கையை யுத்த மந்திரி சபை நிர்தாரணம் செய்திருக்கிறது. இதனால் சைனியத்தில் புதிய ஆட்கள் சேர்க்க முடியாதென்று சொல்லக்கூடாது. இதுவரை 1,00,000 முதல் 2,00,000 பேர் குறைந்திருப்பதை ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது. இதற்காக சிறு வயதுள்ளவர்களையும், தாங்களாகப் பயிற்சி பெற்றிருப்பவர்களையும், ஸ்திரீகளை சில ஸ்தானங்களில் நியமித்து அங்குள்ளவர்களையும் சேர்க்கப்படுகிறது. முக்கியமாக விமான எதிர்ப்பு பீரங்கி வேலைகளில் ஸ்திரீகள் நியமிக்கப்படுகின்றனர். ஏனென்றால் டைப் அடிப்பது போல் இந்த பீரங்கிகளை உபயோகிப்பது பழக்கமாகி விடுவதால் ஸ்திரீகளை அதற்குத் தயார் செய்யப்படுகிறது. அதிகம் யந்திரத்திற்குரிய வேலையாதலால் முதல் முதலாக பிரிடிஷ் சேனையின் முன்அணியில் ஸ்திரீகள் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

## ஆள் எண்ணிக்கை குறைவு எவ்வாறுபாதிக்கும்.

இவ்விதமாக யுத்த நிலையை பரிசீலனை செய்யும்போது, எதிரிக்கு ஆகாய பலம் குறைந்திருப்பதாக மிஸ்டர் சர்ச்சில் சொன்னதாக மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் விமான நிருபர் எழுதுகிறார். அப்படி பிரதம மந்திரி குறைவைப் பற்றி சொல்லும்பொழுது, குறைவு, விமானிகளிலா, விமானங்களிலா, இரண்டிலுமா என்று அவர் துலக்கவில்லை.

ஆள்பலம் குறைந்தால் ஜெர்மன் லுப்ட்வாபி தளர்ந்துவிடும். விமான உத்பத்தியை துரிதப்படுத்தி விமானக் குறைவை ஈடுசெய்யலாம். ஆனால் புதிதாக, நவீன முறைகளுக்கு தக்கவாறு பிரயாணிகளைப் பயிற்சி செய்வதில் அதிக சேதம் ஏற்படாமல் செய்வது முடியாது. அவசரப்பட்டு கற்றுக் கொடுத்தால் பூர்ணமாயும், உணர்ச்சியுடனும் பயற்சி இருக்காது.

இதுவரை கிடைத்த விவரங்களிலிருந்து, ருஷ்யர்கள் அடைந்த பயிற்சி மிகவும் மேலானதென்று, தெரியவருகிறது. பிரிடிஷ் விமானிகளின் தேர்ச்சிக்குச் சமமானது. சென்ற சில வாரங்களாக ஜெர்மன் விமானங்களைக் கீழே வீழ்த்

## வட துருவப் போர்முனையில் பிரிடிஷ் விமானங்களின் வேலை.
## பின்லாந்து அரசாங்கத்தின் அபிப்பிராயம்.
## டானட்ஸ் குடாவில் பெரும் யுத்தம் நேரலாம்.
## பிரதேச நஷ்டம் ருஷ்யர்களை எவ்வாறு பாதிக்கும்.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகைக்கு ஸ்டாக்ஹோமிலிருந்து ஆரியன் கவுல்டுடிங் கேபிள் மூலம் அனுப்பியது).

வட துருவப் போர்முனையில் பிரிடிஷ் விமானங்கள் யுத்தம் செய்கின்றன. மர்மான்ஸ்க் பேரில் செய்த ஜெர்மன் எதிர்ப்பை பிரிடிஷ் ஹரிகேன் பைடர் விமானங்கள் பூராவாகத் தடைசெய்ததாக பின்லாந்து ராணுவ இலாகாவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. லிட்ஸா நதிவரையிலும் நாஸிகள் மறுபடி விரட்டப்பட்டனர். இந்நதி இப்பட்டணத்திற்கு 35 மைல் மேற்கு ஓடி பின்லாந்து எல்லைக்கருகில் வட துருவக் கடலில் விழுகிறது. இன்னும் மற்ற பிரிடிஷ் விமானங்கள் தெற்கு நோக்கிப் பறந்து, வீடுகள் மேலிருந்து எதிரியைத் தாக்கும் லெனின்கிராட்டில் நடக்கும் விமானப்போரில் கலந்துகொண்டன. ருஷ்யக் கரேலியாவிலுள்ள சில தளங்களை இவைகள் உபயோகித்துக்கொண்டன.

இவ்விதம் ருஷ்யாவில் பிரிடிஷ் விமானங்கள் முதலில் செய்த விமானப் போரில் அடைந்த வெற்றியை பின்லாந்து அரசாங்கம் ஆச்சரியத்துடன் கவனித்து மெச்சி வருகிறது. சென்ற வருஷம் மேற்குப் போர்முனையில் லுப்ட்வாபியை பிரிடிஷ் விமானங்கள் நேருக்கு நேர் எதிர்த்து கை ஓங்கி யிருந்த சமயத்திலும் பின்னிஷ்காரர்கள் கௌரவமாக நினைத்தனர். ஆகையால் தங்கள் எல்லையைத் தாண்டி ருஷ்யாவில் படையெடுக்கக் கூடாதென்ற பிரிடிஷ் அரசாங்கத்தின் எச்சரிக்கையை பின்லாந்து மீறினால், பின்லாந்துக் கடலிலும், ஓரங்களிலும் இருக்கும் பிரிடிஷ்படை, பின்லாந்தை எதிர்க்கக்கூடிய பலமுள்ளது என்று ஞாபகப்படுத்தியதாகவே ஆகும்.

### ஜெர்மானியரின் ஆச்சரியம்.

அதிக பீரங்கிகள் ஏந்திய பிரிடிஷ் பைடர் விமானங்கள் மர்மான்ஸ்க் முனையில் தோன்றியது ஜெர்மானியருக்கு பெரிதானதும், விரும்பத்தகாததுமான ஆச்சரியத்தை உண்டாக்கியது. ஆஸ்திரியர்களடங்கிய ஜெர்மன் சைனியம் லிட்ஸா நதியைக் கடந்து, சில நாட்களுக்கு முன், முன்னேறும் பொழுது, நாஸித் தந்திரங்களைக் கையாண்டு பலமான ஜெர்மன் யூங்கர் விமானங்களால் ருஷ்ய நிலைகளைத் தொலைக்க யத்தனித்தது. அச்சமயத்தில் நதிக்குமேல் பிரிடிஷ் ஹரிகேன் காவல் விமானங்கள் அவைகளை பலமாகத் தடைசெய்து விட்டு காலைக்குள் மறைந்துவிட்டன. இதேமாதிரி ஜெர்மானியர் தடைபட்டதால் மெஸ்ஸர்ஷ்மிட்—109s என்ற ஜெர்மன் பைடர் விமானங்களை பின்லாந்திலுள்ள பெட்ஸாமோ என்ற இடத்திலிருந்தும், வட நார்வேயிலுள்ள கர்க்னீஸ் என்ற இடத்திலிருந்தும் கொண்டுவர நேரிட்டது. இவைகள் வந்தும் பிரயோஜனப்படவில்லை.

ஏனென்றால் இருபடைகளும் உறை பனியுள்ள காலைவேளைகளில் துண்ட்ராஸ் சமவெளிகளில்தான் மோதிக்கொண்டன. சில சண்டைகளுக்குப் பிறகு ஜெர்மானியர் ஓடிப்போய்விட்டனர். இவ்விதம் விமான பலம் குறைந்ததால், ஜெர்மானியருக்குத் தற்காப்பு செய்துகொள்ளவேண்டியதாயிற்று. பிறகு தங்கள் சைனியங்களைச் சீர்படுத்திக்கொண்டு ருஷ்யர்கள் முன்னேறி நாஸிகளை லிட்ஸா நதிக்குப் பின்னால் 10 மைல் தூரம் விரட்டியதாகப் பிரஸ்தாபம்.



ஆதலால் பிரிடிஷ் விமான பலம் போரில் ஈடுபட்டுச் செய்யும் காரியங்களெல்லாம் ரகசியமானவைதான். நாஸி அதிகாரிகள் இதை அறிந்தபோதிலும் இரண்டு காரணங்களால் பிரசுரிப்பதில்லை. பின்லாந்தில் பொதுஜன உணர்ச்சி இதைத்தெரிந்து, மாறிவிடுமென்றும், யுத்தத்தில் அலுப்படைந்த ஜெர்மன் பொதுமக்கள் ருஷ்யாவுக்கு வரும் உதவியைக்கேட்டு சும்மா இருக்கமாட்டார்கள் என்பதும்தான்.

யூக்ரேனின் கிழக்கில் பெரும் பயங்கர எதிர்ப்பை வான் ருண்ஸ்டெட் செய்யப்போகிறாராம். டானட்ஸ் குடா யுத்தம் என்ற இதுவே ருஷ்ய மஹா யுத்தத்தில் பெரும் சண்டையாக இருக்கலாம். லண்டனில் அதிகார பூர்வமாக இதை ஒப்புக்கொள்ளாததோடு ருஷ்யரும் ஒருவித அறிக்கையையும் வெளிவிடவில்லை. கீவிற்கும் க்ரெமென்சுக்கிற்கும் இடையிலுள்ள ருஷ்ய சேனையில் முக்கால் பாகத்தை காஸ்லக் மார்ஷல் மீட்டிக்கொண்டு போல்டாவாவிற்குக் கிழக்கில் மூஸ்திப்பு செய்துவருகிறார். இதில் 2,00,000 மனிதர்கள்தான் சேதம். இங்கே குறுக்கு எதிர்ப்பினால் நாஸிகளின் முன்னேற்றத்தைத் தடுத்து போல்டாவா கார்கவ் இருப்புப் பாதைக்குச் சரியாக சோர்வடைந்த தன் சைனியத்தை மறுபடி பலப்படுத்தினார். இந்த இடம் வால்கிக்கு மேற்கே 50 மைல் தூரத்தில் இருக்கிறது. இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாகப் பின் நகர்ந்து கார்கவ்விற்கு மேற்கே 35 மைல் தூரத்தில் நிற்கிறார்.

### ருண்ஸ்டெட்டின் எதிர்ப்பு திட்டம்.

முன்சொன்னதற்கு நேராக வான்ருண்ஸ்டெட், தொழிற்சாலை நிலையான கிழக்கு யூக்ரேனிலுள்ள கார்கவ்வை நோக்கி பலமான எதிர்ப்பு செய்யத் தயார் செய்கிறான். இதை பின்ஸர் படையெடுப்பென்றே சொல்லலாம். முதலில் ஜெர்மன் பான்ஸர் பிரிவுகள் பட்டணத்திற்கு வடக்கிலும், தெற்கிலும் வழி செய்து கொடுத்தபிறகு வான்ரிச்சனோவின் காலாட்படை செல்லும். அதே சமயம் வான் ருண்ஸ்டெட், அஸாவ் கடலின் கரைவழியாக வடக்கு நோக்கி மெரியோபோல், ஸ்டாலின் என்ற பட்டணங்களைக் குறித்துவைத்து, கார்கவ்விற்கு புடன்னியின் படை வரவொட்டாமல் செய்துவிடுவான். ஆனால் இதுவரை இவைகளெல்லாம் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை.

இருந்தாலும் கார்கவ் சண்டை பலமாகத்தானிருக்கும். ஏனென்றால் சக்தி சற்று குறைந்தாலும், புடன்னியின் சைனியங்கள் கலையாமல் நின்று, 8,00,000 பொதுமக்களின் உதவிபெற்று பயங்கரமாகச் சண்டை செய்யும் நிலையிலிருக்கின்றன. இந்த ஜனங்கள் இரண்டுமாத காலமாக ஓய்வு இல்லாமல் பலப்படுத்தி வந்திருக்கின்றனர். ஏற்கனவேயே பெரிய ருஷ்யப் பின்பலம் கார்கவ்விலும், டானட்ஸுக்குச் சமீபத்திலுள்ள ஸ்தலங்களிலும் இருக்கின்றன. மேலும் மாஸ்கோ கணக்குப்படி லுப்ட்வாபியைவிட ருஷ்ய விமானப்படை சிறியதல்ல.

### கொரில்லாச் சண்டை.

மேலே ஜெர்மானியர் போகப்போக பின்புறம் ருஷ்யர்கள் தாக்கி வருவதால் அதிகம் எதிரிக்குத் தொந்தரவு உண்டாகுகிறது. ஏற்கனவே சேமித்திருந்த சாமான்களைச் செலவு செய்துவிட்டதால் பிரதி தினம் எதிரிகள்மேல் வரவை எதிர்பார்க்கின்றனர்.

இருந்தாலும், மாரிகாலத்திற்குள் டானட்ஸிலுள்ள தொழிற்சாலைகளைக் கைப்பற்றுவதென ஹிட்லர் தீர்மானித்திருக்கிறான். இதனால் மாரிகாலத்தில் ஏற்படும் யுத்தத்தின் கொடுமையால் ருஷ்யாதான் பாதிக்கப்படுமாம். எல்லாவித எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் இருக்கக்கூடிய ராணுவம் நாஸி வசம் இருக்கிறது. டாங்கிகள் அதிகம் உண்டு. ஆத்ம நம்பிக்கையைக் கொஞ்சம் தள்ளிவிட்டு ருஷ்யா

டானட்ஸ் பிரதேசத்தை கிருஸ்னமஸ்லிற்குள் இழக்காமல் இருக்கும்படி நாம் யத்தனம் செய்யவேண்டும். இதனால் நாஸிகள் சுலபமான வெற்றியடையும் நிலையிலிருப்பதாகவும் நினைக்கக்கூடாது. ஏனென்றால் ருஷ்யர்கள் பலமாக எதிர்த்து எதிரிக்கு ஒன்றும் மிஞ்சாமல் செய்துவிடுவார்கள்.

## எவ்விதம் நஷ்டத்தை ஈடுசெய்யலாம்?

எப்படியிருந்தாலும் இங்கே நஷ்டம் அதிகம்தான் ஏற்படும். கார்கவ்வில் இரண்டு விமானத் தொழிற்சாலைகளும், டாங்கிகள் செய்யுமிடமும், சைனிய போதனாப் பள்ளிக்கூடமும், டிராக்டர் விமானம் கட்டுமிடமும்—இதுதான் ருஷ்யா விலேயே பெரியது—யந்திர சாமான்கள், இஞ்ஜினியரிங் யந்திரங்கள், டர்போ பாக்டரி முதலியவை இருக்கின்றன. இதைத் தவிர சக்தி என்ற இடத்தில் நல்ல கரிச் சுரங்கமும், லுகன்ஸ்க், ஸ்டாலின் என்ற இடங்களில் சாதாரண கரிச் சுரங்கமும், ஸ்டாலினில் மருந்து செய்யுமிடமும், ஆர்டெமோவாக்கில் உப்பு தயாரிக்குமிடமும், ஸ்லாவியன்ஸ்கில் மருந்து, காரிய மண் தயாரிக்குமிடமும், ரோஸ்டவ்வில் பெருந்துறைமுகமும், தொழிற்சாலையும் இருக்கின்றன. இவைகளைப் பிடிக்க ஜெர்மானியருக்குப் பலவாரங்கள் பிடிக்கும். அதுவும் ஏராள நஷ்டங்களின் பேரில்தான் முடியும். இவைகளை ருஷ்யா இழக்க நேர்ந்தால் பிரிடனும் ருஷ்யாவும் ஈடுசெய்யும். அதெப்படி என்பதை யோசித்து யுத்தம் முடியு முன்னே தயாரிக்கவேண்டும்.

---

## ஜெர்மனியின் "புதுதிட்டம்" என்பது என்ன?
## ஆக்கிரமித்த நாடுகளின் அனுபவங்கள்.
## ஜெர்மன் அரசாங்கம் அடிமை நாடுகளுடன் வியாபாரம் நடத்தும் விதம்.
## நாஸிப் பொருளாதார திட்டம் வேலைசெய்யும் விதம்.

நோயல் பார்பர் எழுதியது.

[ஜெர்மனிக்கும், அருக்கிக்கும் சமீபத்தில் நடந்த வியாபாரப் பேச்சுவார்த்தைகளின் போக்கை நாம் கவனித்து வந்தோம். டாக்டர் கிளாடியஸ் முயற்சி பலிக்காததிலிருந்து உண்மையில் ஜெர்மனி அந்தரங்கமாகக்கொண்ட மனப்பான்மை இவ்வியாசத்தில் துலக்கப்பட்டிருக்கிறது. பத்திராதிபர்.]

ஒரு வருஷத்திற்கு அதிகமாகவே ஐரோப்பாவில் அதிக பாகத்தை ஜெர்மனி வசப்படுத்திவைத்திருக்கிறது. எந்த சமயத்திலும் தனது "புதுதிட்டத்தை" ஸ்தாபிக்க முடியும். உண்மையில், இப்பொழுதே, ஆக்கிரமித்த நாடுகளை சரியாக கொள்ளையடித்து வருவதாலும், கிரேக்கர்களைப் பட்டினிபோட்டும், மற்ற நாடுகளிலுள்ள பொருளாதாரங்களை ஜெர்மனியின் நலத்திற்காக உபயோகித்து வருவதாலும் அதைக் கையாண்டு வருவதுதெரியும்.

ஐரோப்பா முழுவதும் இதைத் தெரிந்துகொண்டிருக்கிறது. அதிக கொடூரமாக யாவரையும் அடக்கி பல வருஷங்களாக வைத்திருந்ததினால் கோயபல்ஸ் சொன்னதெல்லாம் வெறும் ஆடம்பரத்துடன்கூடிய தற்புகழ்ச்சி என்று வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிட்டது. "புதுதிட்டப்படி" ஜெர்மன் மக்களுக்கு, உயர்ந்த ஜீவனமும், சந்தோஷமும் கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்டது.



ஐரோப்பா பூராவும் யுக்தமான பொருளாதார உற்பத்தியைத் திட்டப்படுத்தி, அவைகளைத் தான் உபயோகித்துக்கொண்டும், ஜெர்மனியின் தொழிற்சாலை சாமான்களை மாத்திரம் மற்றநாடுகள் வாங்கும்படிக்கும் செய்யப்படுமாம்.

அச்சமயம், லேவாதேவி வியவகாரங்கள் லண்டனிலில்லாமல் பெர்லினில் ஏற்படும். பிறகு ஆபிரிக்காவில் ஜெர்மானியருக்கு வசதியான இடங்கள் கிடைக்குமாம்.

ஆனால் ஆக்கிரமித்த நாடுகளிலுள்ளோருக்கு வேறுவிதமான அர்த்தம் சொல்லப்படுகிறது. இந்த திட்டப்படி அவர்களுக்கு அதிகமான சாதகம் என்ன ஏற்படுமென்றால், அந்நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படுமாம். ஆனால் ஆங்காங்கு மிஞ்சிப்போகும் விளைவு பதார்த்தங்களை ஜெர்மனிக்கு அனுப்ப வேண்டும். தொழிற்சாலை வேலைகளை ஜெர்மானியருக்கே விட்டுவிடவேண்டும். இதனால் ஆக்கிரமித்த நாடுகளில் விவசாயத்தை விருத்திசெய்யும்படி ஜெர்மனி 'அண்டியதாக' ஆகிறது.

"மிஞ்சிப்போகும் விளைவு பதார்த்தம்" என்றால் ஜனங்களுக்குப்போதுமானது இருக்கிறதாக அர்த்தமாகிறது. அப்படி இருக்கிறதா? இல்லை. ஆனால் ஜெர்மனியில் "புதுதிட்டம்" ஆரம்பிக்கப்பட்டதாக ஜெர்மன்மக்களுக்கு காண்பிப்பதற்காக மற்றநாடுகளிலுள்ளவைகளைக் கவருகிறார்கள். வருங்காலத்தைப் பற்றிய கவலை அவர்களுக்கு உண்டாகவில்லை.

ஒன்றுமாத்திரம் நிச்சயம். இரண்டு வருஷ யுத்தத்திற்குப்பிறகு நாஸிப் பிரசாரத்தில் மறைந்திருக்கும் தந்திரங்களும், ஏமாற்றல்களும், வெளித்தோற்றங்களும் ஐரோப்பிய வாசிகளால் அறியப்பட்டிருக்கின்றன. இவர்கள் பட்டினியால் வருந்தும்பொழுது நாஸிகள் வாக்குறுதிகள் இவர்கள் பசியை அடக்காது. இவர்களுக்குக் கட்டத்துணியில்லாதபோனால் ஏழைகளாகத்தான் ஆகிறார்கள்.

இன்னும் அதிகம் விசாரிக்கப்போனால் புதுதிட்டமென்பது நாஸிகள் அரசியல் கொள்கைகளின் தோற்றமே பொருளாதார அமைப்புடன் காணப்படுகிறது. மேலும் அவர்கள் செய்யும் யுத்தம் தர்ம சிந்தனையுடனிருப்பதாக எல்லோரும் நினைக்கவேண்டுமென்றும் இவ்வாறு செய்யப்படுகிறது.

உலகாக்கிரமணமே ஜெர்மனியின் திட்டம். மற்றெல்லா நாடுகளும் அதன் சொல்படி நடக்கவேண்டும். பிரான்ஸின் நிலையைப் பார்த்தாலும், அதிலிருந்து ஜெர்மனி தானியங்களின் ஸப்ளையைப் பெறவேண்டுமென்று தீர்மானிக்கிறது. டென்மார்க்கை ஜெர்மனியின் பாற்சாலையாக செய்ய நினைக்கிறது. இதற்கெல்லாம் பிரதியாக பிரான்ஸுக்கும் டென்மார்க்கிற்கும் யந்திரங்களும், தொழிற்சாலை சாமான்களும் அனுப்புவதாகச் சொல்லப்படுமே தவிர ஒரு வருஷமானாலும் அவ்விதம் செய்வதில்லை.

பண்டமாற்று வியாபாரம் செய்வதில் ரொக்கம் தீர்ப்பது என்பது ஒரு ஏற்பாடு உண்டு. பண்டமாற்று வியாபாரமாவது, ஒரு நாட்டிற்குத் தேவையில்லாத சாமான்களைத் தேவையுள்ள நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்து தனக்குத் தேவையானவைகளை அதே பொருமானத்திற்கு வாங்கிக் கொள்வதுதான். அப்படி செய்துவருவதில் ஒரு நாடு, தனக்குவரும் சாமான்களைவிட அதிக பொருமானத்திற்கு அனுப்பிவிட்டால் ஏற்றக்குறைவு ரொக்கம் கொடுத்து தீர்க்கப்படும். சாதாரண நிலைமைகளில் ரொக்கப்பணம் கொடுக்கப்படும். அல்லது கணக்குத் தீரும்வரை உபரியாக சாமான்களை அனுப்பாமல் நிறுத்திவிடும்.

இந்தமுறை டென்மார்க்கிற்கு எவ்வாறு அன்வயிக்குமென்று பார்ப்போம். இங்கே சாதாரண நிலைமையிருக்கிறதாக நாஸிகள் காண்பித்து வருகின்றனர். நாஸி "புதுதிட்டத்தை" பரிசுதிக்கவே இவ்வாறு செய்கின்றனர். ஏனென்றால்

ஜெர்மானியர் வந்து எட்டு மாதங்களுக்குள் 40,00,00,000 க்ரோனர் என்ற டென்
மார்க் நாணயம், ஜெர்மனி கடன்கொடுக்கவேண்டும். இதை இனி வசூலிக்க
முடியாது. ஆனால் ஜெர்மானியரால் இவ்வளவுதான் டென்மார்க்கிற்கு நஷ்டம்
வந்திருப்பதாக நினைக்கக்கூடாது. அவர்கள் வந்ததுமுதல் அவர்களுடைய
செலவுக்கு டென்மார்க்கு உள்நாட்டு பாங்கிலிருந்து கடன் வாங்கிய பணத்தையும்
சேர்த்துக்கொள்ளவேண்டும்.

போதும் உன் கடையைக்கட்டு என்று ஜெர்மனியைப்பார்த்து தைரியமாக
டென்மார்க், ஸ்வதந்திரமில்லாததால் சொல்லமுடியாது. தனக்கு ஜெர்மனி இட்ட
கட்டளையைத்தான் செய்யவேண்டும். தனக்குப் பிரதியாக ஜெர்மனியிலிருந்து
வரும் பொருள்களில் தேவையானவைதான் வரவேண்டுமென்றும் சொல்ல
முடியாது. ஆனால் கடன்தான் அதிகரிக்கிறது.

ஏனென்றால் ஜெர்மனி திருப்பிகொடுக்க முடியாததால் காகித செலாவணியை
இவர்களுக்குத் தந்து தன் ஊரில் அமைதியைக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.
இதுவே மற்ற நாடுகளிலும் செய்யப்படும். உதாரணமாக பிரான்ஸில் ஜெர்மன்
நாணய மதிப்பு, நாணய மாற்றல் விகிதங்களில் அகப்படுத்தப்பட்டு சல்லிசாக
பிரெஞ்சு சமான்களை வாங்க உத்தேசம். இத்துடன் ஜெர்மானிய செலவு தினம்
40,00,00,000 பிராங்குகள் ஆகின்றன. மேலும் ஏராளமான பிரெஞ்சுப் பணத்தைக்
கொண்டு பிரெஞ்சுக் கம்பெனிகளில் ஜெர்மானியர் முதல் போடுகின்றனர்.

யூகோஸ்லாவியாவிலும், பழைய ஸெர்பியர்கள் ஜெர்மனிக்கு கொடுக்க
வேண்டிய கடனை சென்ற யுத்தம் முதல் கணக்குப்பார்த்து கொடுக்கும்படி
பலாத்காரம் செய்யப்படுகிறது.

ராம ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதாக ஜெர்மனி சொல்லுவதெல்லாம் சீட்டாட்
டத்தில் சீட்டு இல்லாமல்போனால் துப்பாக்கியை நீட்டி ஜயம் பெறுவதுபோல்
தான் ஆகும்.

ஆகையால் இந்த யுத்தத்தில் ஜெர்மானியர் வெற்றிபெற்றால் இந்த திட்டங்க
ளெல்லாம் நாமடங்கு அதிகரிக்கும். தனக்கு வேண்டியவைகளையெல்லாம்
பிடுங்கி அதற்குப்பதிலாக படிச்செலவுதான் கொடுக்கும். ஜனங்கள் தங்களுக்கு
இடப்பட்ட கட்டளையைச் செய்யவேண்டும். தங்கள் ஸ்வதந்திரங்களை இழந்து,
இஞ்ஜினியர் உழும்படிக்கும், கணித சாஸ்திரி பன்றிக்கிடையை சுத்தம் செய்யும்
படிக்கும் வந்தால் ஜெர்மானியர் விருத்தியடைவார்களே ஒழிய ராம ராஜ்ஜிய
மென்ற சுபிக்ஷ நிலையின் களைமாறிவிடும். இப்பேற்பட்ட "புதுதிட்டத்தின்"
வாக்குறுதிகளால் விளைந்த தீங்குகளை ஆக்கிரமித்த நாடுகள் நன்கு உணர்ந்து
கொண்டன.

---

## யுத்தம் எவ்வளவு காலம் நடக்கும்?
## பத்து வருஷங்கள் என்று ஒரு இதாலியத் தலைவர் சொல்லுகிறார்.

### ஒரு துருக்கிய வியாக்யானம்,

(இஸ்தான்புல் பத்திரிகையான "கும்ஹூரியட்" என்ற பத்திரிகையில் அபிடின்டேவர் எழுதியது).

இதாலியப் படிப்பு இலாகா மந்திரி "இந்த யுத்தம் பத்துவருஷ காலம்
நடக்கும், இதை இதாலிய ஜனங்கள் அறியும்படி செய்யவேண்டும்" என்று ஒரு
பத்திரிகையில் எழுதினாலும். இதனால் இதாலிய ஜனங்கள் நீண்ட யுத்தத்திற்குத்
தயாராக இருக்கவேண்டுமென்று சொன்னதாக ஆகிறது. இதே அபிப்பிராயத்தைத்
தான் கவுண்டு கயாடோவின் பத்திரிகையும் கூறுகிறது.



எவ்வளவு காலம்தான் இந்த யுத்தம் நடக்கும்? இதாலிய, மந்திரியின்
அபிப்பிராயப்படி பத்து வருஷங்கள் நடைபெறுமா? இதை நிர்ணயிப்பது
அசாத்தியம். சமீபத்தில் லார்டு ஹாலிபாக்ஸ் 20-வருஷ யுத்தத்திற்குத் தயார்
செய்வதாகச் சொன்னபோதிலும், முடிவுவரை பிரிடன் யுத்தத்தை நடத்தும்
என்றும் அது 20 வருஷமானாலும் தீவிரமாகச் சண்டைசெய்யும் என்றும்
சொன்னார். இதனால் பிரிடிஷ் மக்களின் தீர்மானமும் விடாமுயற்சியும்
தெரிகிறது.

1941-ம் வருஷ கோடை காலத்திற்குள் வெற்றியை எதிர்பார்த்த இதாலியர்கள்
தான் பத்து வருஷ யுத்தத்திற்குத் தயார்செய்கிறார்கள். இவர்கள்தான் எகிப்தை
ஜயித்து, ஸூயஸ்ஸை அடைத்து, ஜிப்ரால்டரை முற்றுகையிட்டு, மால்டாவைக்
கைப்பற்றி, மத்தியதரைக்கடலை இதாலியருக்குச் சொந்தமான ஏரியைப்போல்
செய்ய நினைத்தவர்கள் கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்க உத்தே
சித்த மாதிரி பிரிடிஷாரை ஆபிரிக்காவிலிருந்தே விரட்டிவிடலாமென்றும் நினைத்
தனர். 1940-ம் வருஷ ஜூன் 10உ முதல் 1940-ம் வருஷ டிஸம்பர் 9உ வரை இதாலி
சண்டையைத் துவக்கியதும் லிபியாவை பிரிடிஷ்காரர்கள் தாக்கினவுடன், யுத்த
மில்லாமல் வெற்றிபெறும் மார்க்கம்தான் மேலானது என்ற அஹிம்ஸையை,
இதாலியப் பத்திரிகைகளும், ரேடியோக்களும் ஒலிபரப்ப ஆரம்பித்தன.

அக்காலத்தில் "யுத்தமில்லாமலே வெற்றி" அடைய இதாலியர் தயாரா
யிருந்து போக, 14½ மாதங்களாகச் சண்டையில் ஈடுபட்டும் இன்னும் 10 வருஷ
யுத்தத்திற்கு முஸ்தீப்பு செய்கிறார்களாம். இதற்குக் காரணம் என்ன? எவ்வளவு
சரியாகக் கணக்கு செய்துபார்த்தாலும் யுத்தத்தின் கெடுவைச் சொல்லமுடியாது.
இதாலியர்கள் ஏன் 10 வருஷத்தை குறிப்பிடவேண்டும்? இதன்படி மற்றவர்களை
பயமுறுத்த எண்ணமென்றால் பிரிடிஷ்காரர்களை பயமுறுத்த முடியாது.
ஏனென்றால் அவர்கள் நீண்ட யுத்தத்திற்குத் தயாராக இருக்கின்றனர். அதனால்
அவர்களுக்கு இது திருப்திகரமாகத்தானிருக்கும். பிரகிருத நிலையில் பிரிடிஷார்
அமைதியுடனும், தீவிரமாயும் இருப்பதால் நீண்ட யுத்தம் சாதகம்தான்.
இதாலியர், பிரெஞ்சுக்காரர்கள்போல் பிரிடிஷ்காரர்கள், ஆத்திரமும், பரபரப்பும்
கொண்டவர்களல்ல. திடீரென்று பாய்ந்து பிறகு பலக்குறைவு அடைவதில்லை.
ஆகையால் 10 வருஷ காலம் இவர்களுக்கு அனுகுணமானதால் பயத்தைச்
செய்யாது. இந்த ஜோஸியம் நல்ல சமாசாரம்தான். இதாலியருக்குத்தான்
ஆபத்து.

இவ்விதம் இதாலியர் சொன்னதால் சுலபமாயும், சீக்கிரத்திலும் வெற்றி
கிடைக்குமென்ற நம்பிக்கை இதாலியருக்கு இல்லை என்று தெரிகிறது. 1912-ம் வருஷ
முதல் மற்ற தேசங்களைவிட இதாலி பலதடவை யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது.
துருக்கி, ட்ரிபோலி, மஹாயுத்தம், லிபியா, அபிஸீனியா, ஸ்பெயின் உள்நாட்டுச்
சண்டை, இந்த உலக யுத்தம் இவைகளிலிருந்து ஓய்ந்த இதாலி இன்னும்
10 வருஷம் சண்டை செய்வது ஒரு இதாலியனுக்கும் உத்ஸாகத்தை அளிக்காது.

---

# அச்சு நாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

### அக்டோபர் 8—15, 1941.

---

### ஆஸ்திரேலியாவும், அச்சுநாடுகளும்.

"யுத்தம் நடத்துவதற்கு பிரிடனுக்குப் பூரண உதவியைக் கொடுக்கும். அரசாங்கத்தின் கொள்கையை தொழிலாளிக் கக்ஷி ஆக்ஷேபிக்கிறது".

(பாரசீகத்திலும், அராபியிலும் ஜெர்மன் சமாசாரம், அக்டோபர் 6.)

(ஆங்கிலத்தில் ஜெர்மன், இதாலிய சமாசாரம், அக்டோபர் 7.)

ஆஸ்திரேலியா உள்நாட்டு விஷயங்களிலிருந்து அச்சுநாடுகள் இராஜீய லாபம் அடைய எத்தனிப்பது மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது.

அக்டோபர், 8-ம் தேதியில் மிஸ்டர் கர்டின் பிரதம மந்திரி சொன்னதாவது.—"ஆஸ்திரேலியா பிரிடிஷ் நீதியையும், பிரிடிஷ் சட்டத்தையும் வைத்துக்கொள்ள விரும்புகிறது. அப்படிச்செய்ய நம்முடைய முழுப் பிரயத்தனத்துடன் சண்டை செய்ய வேண்டுமென்று தெரிந்துகொண்டிருக்கிறது. பூரணவெற்றி கிடைப்பதற்கு இந்த யுத்தத்தில் அரசாங்கத்திற்கு ஸ்வதந்திர ஆண், பெண், கொடுக்கும் நன் கொடைகளைப்போல ஆஸ்திரேலியப் பொதுமக்கள் தங்கள் சொத்து பூராவையும் கொடுப்பார்கள் என்று நான் விரும்புகிறேன்"

மந்திரி சபையில் யுத்தப் பிரயத்தனத்தில் ஏதாவது ஒரு விதத்தில் சம்பந்தப்பட்ட பிரக்யாதி பெற்றவர்களேயிருக்கிறார்கள். தொழிலாளி கக்ஷியின் உபதலைவர் மிஸ்டர் போர்டு அக்டோபர், 4-ல் சொன்னதாவது.—தொழிலாளிக் கக்ஷியால் நடத்தப்படும் ஆஸ்திரேலிய பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தில் பிரதான நபராக கௌரவமாகவும். தீவிரமாகவும் தன் பாகத்தைப் பூர்த்தி செய்யக்கூடும்".

### ஆழமாய்ப் பதிந்த எண்ணங்கள்.

"ஹிட்லர் பேசியது வெளிநாட்டிலுள்ளவர்களின் மனதில் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது."

(இங்குஸ்தானியில் ஜெர்மன் சமாசாரம் அக்டோபர் 6.)

"யுத்தத்தில் நடக்கும் சம்பவங்களிலிருந்து ஹிட்லருக்கு சந்தோஷமில்லாத நோக்கமிருக்கிறதென்று தெரி-



-கிறது. ஜெர்மனிக்கு ஏற்படும் பெருத்த ஜயங்கள் இருந்தபோதிலும், ருஷ்யாவில் யுத்தப் பொருள்களும் வெடிமருந்து அபிவிருத்தியடைவதை ஹிட்லர் ஒப்புக்கொண்டிருக்கிறார்".

(யோமியூரி, ஜப்பானிய பத்திரிகையில் ஹிட்லர் பேச்சு.)

வி

"அக்டோபர் 5-ல், பிரிடிஷ் விமானப் படை ராட்டர்டாமில் தாக்கியது. குடியிருப்பு வீடுகள் மட்டிலும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. டச்சு மக்களின் கோபம் அதிகரிக்கிறது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் செய்தி அக்டோபர் 7.)

வி

டச்சு மக்களின் கோபம் அதிகரிக்கிறது. ஆனால் எவர்கள் பேரில்? பிரிடன் பேரில் அவர்களுக்குள்ள தன்மையைக் காட்டியிருக்கிறார்கள். ஜூலையில் பிரிடிஷ் விமானத் தாக்குதல்களில் ஹாலந்திலுள்ள ஜனங்கள் தெருக்களில் வெளியே வந்து ராணுவ லக்ஷியங்களை நன்றாகத் தாக்குவதற்கு, விமான ஓட்டிகளுக்கு உதவிசெய்ய ஸமிக்ஞை செய்தார்கள். ஜெர்மனி சார்பிலுள்ள அரசாங்கத்திற்கு இம்மாதிரி இவர்கள் செய்யாமலிருக்கும்படி உத்தரவிட நேர்ந்தது. ஆனால் இன்னும் அவர்கள் அம்மாதிரி செய்கிறார்கள்.

### 1940-ல் கோயபல்ஸ் சொன்னது.

#### ஏராளம்.

"யுத்தத்தினால் பிரான்ஸில் கோதுமை அறுவடை சேதமடையவில்லை. நவீன தேச சரித்திரத்தில் முதல் முதலாக அதிக செழிப்பாக தானியம் விளையும் போலாந்தில் ஜெர்மானியர்கள் தீவிரமாக விவசாயம் செய்தார்கள். இவை இரண்டும் இன்னும் ஜெர்மனியிலிருந்து கிடைக்கும் ஸப்ளைகளும் ஐரோப்பாவில் உணவுப்பொருள்கள் குறைவு என்று சொல்லும் வதந்திகளுக்கு ஆதாரமில்லையென்று நிச்சயமாய் நிரூபிக்கும்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 17, 1940.)

"ஐரோப்பாவில் இப்பொழுது அறுவடை ஆரம்பித்திருக்கிறது. அவை திருப்தியாகயிருப்பது என்பதில் சந்தேகமில்லை. இந்த வருஷத்திற்கும் அடுத்த வருஷத்திற்கும் வேண்டிய தானியங்கள் சேமித்துவிட்டால் ஜெர்மனிக்குத் தானியத் தட்டு ஏற்படாது."

(ஆங்கிலத்தில் ஜொமன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 4, 1940.)

#### வறுமை.

"பிரெஞ்சுப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களைப் பட்டினிபோட பிரிடன் விரும்புகிறது. ஏனெனில் பஞ்சம் ஏற்பட்டால் உள்நாட்டுக் கலகம் ஆரம்பமாகும்."

(பிரெஞ்சு பாஷையில் ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 15, 1940.)

"ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்கு உணவுப்பொருள்கள் போய்ச்சேரவிடாமல் இங்கிலாந்து மறுதளித்தால் இந்த ஜனங்கள் தங்கள் பசிப்பிணியை நீக்க, ஜெர்மனியைக் கெஞ்சிக் கேட்கக்கூடாது, அவர்கள் பிரிடிஷாரைக் கேட்கவேண்டும்."

(டச்சு பாஷையில் ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 9, 1940.)

"ஐரோப்பாவில் பட்டினி,முக்கியமாக ஜெர்மன் ஜனங்களுக்கு பசிப்பிணி இந்த சமயம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்வது பிரிடிஷாரின் தோற்றம். பிரிடனின் கிரேகிதமான பொதுமக்களின் பட்டினி யுத்தத்திற்கு முன்பே மறைந்து விட்டது. இப்பொழுது இங்கிலாந்தில் அநேகமாய் எல்லா உணவுப்பொருள்களும் குறைந்திருக்கின்றன. நிலைமை வரவர கெட்டுப்போகிறது."
(ஹங்கேரிக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூன் 28, 1940.)

"பொருளாதார முற்றுகைக் கொள்கையை பிரிடன் விட்டுவிட்டால் உணவுப்பொருள்கள் அதிகம் குறைந்திருப்பதைத் தவிர்க்கக்கூடும். ஜெர்மனிக்கு கொஞ்சமேனும் உதவியன்னியில் அவ்விதம் ஏற்படக்கூடும்."
(பிரஜீலுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 10, 1940.)

## 1941-ல் கோயபல்ஸ் சொல்லுகிறது.

### ஏராளம்.

"ஐரோப்பாவிலுள்ள அநேக தேசங்களில் நல்ல வெள்ளாமை கிடைக்கும்."
(ஆங்கிலத்தில் ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 1, 1941.)

"முந்திய வருஷங்களைக் காட்டிலும் 1941-ல் தானிய வெள்ளாமை மிகவும் நன்றாய் இருக்கிறது."
(ஜெர்மன் 'ட்ரான்ஸ் ஓஷன்' பத்திரிகாலயம், ஆகஸ்டு 1, 1941.)

### வறுமை.

"அறுவடைக்கு சிதோஷ்ண நிலைமை தகுதியாகயில்லை. தானியங்கள்,உருளைக் கிழங்கு, காய்கறிகள் இவைகளில் பெரும்பான்மை இன்னும் கொண்டு வரப்படவில்லை. நிலைமை கொடியதாக இருக்கிறது."
(ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள நார்வே ரேடியோ, ஸெப்டம்பர் 12, 1941.)

"இந்த வருஷம் தானிய அறுவடையைக் கேட்காத, பார்க்காத, சொல்லாத குடியானவர்கள் இருக்கிறார்கள். வழக்கம்போல் இந்த வருஷம் வெள்ளாமை கிடைக்கவில்லை."
(ஜெர்மன் பாஷையில் ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 25, 1941.)

ஜெர்மானியரின் அறுவடை நன்றாகயிருக்கிறதென்று டாக்டர் டார்ரே நமக்குச் சொல்லியிருக்கிறார். இருந்தபோதிலும் 1940-ல் போலாந்திலிருந்து 7,00,000 டன் நிறையுள்ள ரொட்டி தானியத்தை ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்?

15,00,000 பன்றிகளையும், 70,00,000 பெட்டைக்கோழிகளையும், 1,50,000 பசுமாடுகளையும் ஏன் டென்மார்க்கிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டும்?

இனசரி 200 டன் மீன், 20,000 டன் சர்க்கரை நார்வேயிலிருந்து ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்?

நெதர்லாந்திலிருந்து அதன் இருப்பிலுள்ள வெண்ணெய் 90 சத விகிதமும், 43,000 டன் உருளைக்கிழங்கும் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்?

ஏனெனில்.

கொழுப்பை வெடிகளுக்கு வேண்டிய பசையாக மாற்றக்கூடும்.

மாவுப்பசையினால் சாராயம், சாடி, கிளிஸரின் இவை உண்டாக்க உபயோகப் படுத்தக்கூடும்.

சர்க்கரையும் சர்க்கரவெள்ளிக்கிழங்கும் சாராயமாக எளிதில் மாறக்கூடும்.



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 67—(4-வது பிரிவு).

1941—

| | | | மணி. |
|---|---|---|---|
| அக்டோபர் 25, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 26, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | நீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | ஆவூர் ... | ,, | 6.30 |
| 27, திங்கட்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 28, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | காரையூர் ... | மாலை | 6.00 |
| | கீழத்தானியம் ... | ,, | 6.30 |
| 29, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | நார்த்தாமலை ... | மாலை | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 30, வியாழக்கிழமை .. | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | மழையூர் ... | ,, | 6.30 |
| 31, வெள்ளிக்கிழமை... | (பொன்னமராவதி) புதுப்பட்டி. | ,, | 6.00 |
| | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 68—(5-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் ... 1, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 2, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| 3, திங்கட்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | புத்தாம்பூர் ... | ,, | 6.30 |
| 4, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | திருவரங்குளம் ... | மாலை | 6.00 |
| | வம்பன் ... | ,, | 6.30 |
| 5, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | புலியூர் ... | ,, | 6.00 |
| | கண்ணங்குடி ... | ,, | 6.30 |
| 6, வியாழக்கிழமை ... | மேலூர் ... | ,, | 6.00 |
| | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| 7, வெள்ளிக்கிழமை... | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |

# முக்கியமான விளம்பரம்.

---

பிரிடிஷ் அரசாங்கத்தார் தயாரித்த
கியாதி பெற்ற

## 'லபாடன் தீவுகளை பிரிடிஷ் கடல் படை தாக்குதல்'

என்ற

## யுத்த சம்பந்தமான பிலிம்

தமிழில்

## புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்

அக்டோபர் 27 முதல் 4 நாட்கள்
காண்பிக்கப்படும்.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் இதை
ஜனங்களுக்குப் பிரசுரம் செய்கிறது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—25-10-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ நவம்பர் ௴ 1௳ [ந. 68.

பிரஸங்கம் LXVIII.

## தாய்லாந்து.

---

"அரசர்களான முதலாவது ராமன், ஆறுவது ராமன், ஆனந்தன்," "அயோத்தியா நகரம்"—இதுபோன்ற பெயர்களைக் கேட்டவுடன் இவைகள் சகஜமாக இந்தியாவில் ஒரு பாகத்திலுள்ளவைதான் என்று யாவரும் தீர்மானிப்பார்கள். ஆனால் இந்தியாவுக்குக் கிழக்கில் ஆயிரம் மைல் தூரத்தில் உள்ள ஸயாம் அல்லது தாய்லாந்து என்று சொல்லப்படும் சிறுபாகத்தில் வழங்கப்படும் பெயர்கள் என்றால் ஆச்சரியமாகத்தானிருக்கும். இப்பிரதேசத்தைப்பற்றிய விவரங்கள் பிரசித்தமாகத் தெரியாததால் இங்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

**அதன் முக்கியத்துவம்.** பிரெஞ்சு இந்தோ-சைனாவிற்கும், பிரிடிஷ் பர்மாவிற்கும் இடையில் 'தாய்லாந்து ராஜ்ஜியம்,' 'முவாங்தாய்,' 'சுயேச்சையானவர்களின் தேசம்' என்று சொல்லக்கூடிய கவர்ச்சியுள்ள விசித்திரமான பாகம் இருக்கிறது. இதன் பயிற்சி, நாகரீகம், படிப்பு, மத அனுஷ்டானம் முதலியவை இந்தியாவிலுள்ளவைகளுக்கு ஒற்றுமையாக இருந்தாலும், இந்தியாவைவிட மிகவும் சிறியதாயும் (2,00,000 சதுர மைல்) 150 லக்ஷம் ஜனங்கள்தான் இருப்பதாலும் இந்தியாவிற்கு அந்தரங்கமான பிரயோஜனம் இல்லாததுபோல்தான் காணப்படும். இருந்தாலும், பிரிடிஷ்காரருக்குச் சொந்தமான பர்மாவிற்கும், பிரெஞ்சுக்காரருக்கு (தற்போது ஜப்பானியற்கும்) சொந்தமான இந்தோ-சைனாவிற்கும் இடையில் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த சிறு நாடானதால் பலம்பெற்ற ஐரோப்பிய நாடுகள் இதில் ஒரு கண்வைத்து இருப்பதால்தான் இதற்கு முக்கியத்துவம் அதிகம். தென்கிழக்கு ஆசியாவிலுள்ள சைனா, ஜப்பான், அமெரிக்கா, யாவரும் இதை கவனித்தே வருகின்றனர்.

அதனால்தான், ஆதிகாலம் முதற்கொண்டு இங்கே பல ஸர்வ தேச ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் ஏற்பட்டுவருகின்றன. முக்கியமாக (1914—18) சென்ற மஹா யுத்தம் நடந்த நான்கு வருஷங்களுக்கு முன்னும் பின்னும் தாய்லாந்தில் ஸர்வ தேச அரசியல் நடமாட்டங்கள் நடந்தேறின. இந்த யுத்தம்

ஆரம்பமான முதலும் இதன் அயலார்கள், முக்கியமாக ஜப்பான், ஆசையுடன் நோக்கிவருவதால் இதன் நிலை கொஞ்சம் கொஞ்சமாக ஆபத்துக்குள்ளாகி வருகிறது. தென்கிழக்கு ஆசியாவின் அமைப்பை கவனித்தால், இங்கே ஜப்பான் தலையிட ஆரம்பிப்பதால், பிரிடன், அமெரிக்கா, பிரான்ஸ், சைனா, பர்மா, கடைசியாக இந்தியா இவைகளுக்குள்ள சௌகரியங்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் என்பதும், அவைகளைக் காப்பாற்றிக்கொள்ள யுத்த மூலம்தான் ஆகுமாதலால் தாய்லாந்தே ஒரு யுத்தரங்கமாகலாம் என்பதும் தெரியவரும். ஆகையால் பிரதேச ஞானம் இல்லாத இவ்விடத்தைப்பற்றி மேலெழுந்த வாரியாகவாவது அறியவேண்டியது அவசியம்தான்.

**மேல்பரப்பின் அமைப்பும், பொருள் ஆதார நிலைகளும்.** இது பெரும் காடுகள் அடர்ந்த மேடு பள்ளங்களுள்ள பீடபூமிகளைக் கொண்டது. மேனம் நதி ஓடும் பிரதேசம்தான். செழிப்பும் ஜனநெருக்கமும் உள்ளது. அரிசி, தேக்கு, ரப்பர், தகரம், தென்னை அதிகம். இவைகளும் புகையிலை, மிளகும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. யானைகள், குதிரைகள், எருமைகளும், பூமத்தியத்தில் வசிக்கக்கூடிய பிராணிகளும் இருக்கின்றன. இதில் முன்சொன்னவை பாரம் இழுக்க உபயோகப்படுகின்றன.

தாய்லாந்தின் பொருளாதார நிலை அதிக மேன்மையானதல்ல. இந்தியாவில் இருப்பதுபோல் இங்கிருக்கிறவர்களும் குடியானவர்கள். கடன்வாங்கியே ஜீவனம் செய்யவேண்டும். அரிசி, மீன் ஆகாரத்திற்கு உபயோகப்படுகின்றன. இருந்தாலும் புத்த மதத்தின்படி மாமிச ஆகாரம் தள்ளுபடியானதால் மீன் அதிகம் தின்கப்படுவதில்லை. இங்கிருப்பவர்கள் தாம்பூலம் உபயோகிப்பது உண்டு. புருஷர்கள்தான் பீடி முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பார்கள், ஒரு கெஜ அகலம், 3 கெஜ நீளம் உள்ள துணி புருஷர்களுக்கும் இதைவிட ஸ்திரீகளுக்கு ஒரு மேல் வஸ்திரமும்தான் சாதாரணமான ஆடை. பணக்காரர்கள், சட்டை, கால் சட்டை, செருப்பு, தொப்பி முதலியதை அணிவார்கள்.

**மதம்; பயிற்சி.** வீர புத்த மதம்தான் பொதுவான மதம். 150 லக்ஷமுள்ள தாய் அல்லது லாஓஸ் என்பவர்களில் 110 லக்ஷம் இம்மதத்தைத் தழுவுகின்றனர். இங்கிருக்கும் மலேயா நாட்டினர் 50 ஆயிரம் மகமதிய மதத்தைச் சார்ந்தவர்கள். இதைத் தவிர, சீனர், கம்போடியர், பர்மியர், இந்தியர், மானியர், காரெனியர், அன்னமதியர், காச்சர், லாவர், இன்னும் சிலரும் இருக்கின்றனர்.

ஆகையால் ஸயாம் வாசிகளை இந்திய-சீன இனத்தினர் என்று சொல்லுவதுண்டு. ஏனெனில் இவர்களுடைய மதம், பழக்கம், ஒழுக்கம், படிப்பு, ஆசாரம், எல்லாம் இருவிதத் தன்மையுள்ளவைகளாக இருக்கின்றன. பிரகிருதம் முக்கிய பட்டணமான பாங்காக்கில் ஹிந்துக்களின் சம்பந்தம் பல இடங்களில் இருக்கிறது. பொதுவான சடங்குகளில் ஹிந்து புரோகிதர்களே உதவுகின்றனர். கிருஸ்தவப் பாதிரிகள் நாகரீகத்தையும், படிப்பையும் விருத்தி செய்திருக்கின்றனர். தாய்லாந்தினருக்கு மதசம்பந்தமான ஆசாரங்களில் அதிக ஊக்கம் உண்டு. இதற்கும், சமூக சம்பந்தமாயும் ஊர்வலங்களும், சடங்குகளும் அதிகம் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு அடுத்தபடியாக கல்வி. கிழ்தரக் கல்வி நாடெங்கும் புத்த சமயத்தினரால் பரவப்பட்டிருக்கிறது. மேலும் ராணுவம், கப்பற்படை: சட்டம், போலீஸ், முதலியவைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மாகாணடிராயினிங் கல்லூரியும் இருக்கிறது.

இரண்டு வருஷங்களுக்கு ராணுவப் பயிற்சி, யாவருக்கும் நிர்பந்தமாக உண்டு. 10 பகுதி கொண்ட சேனையும், சிறிய கப்பற்படையும், கொஞ்சம் விமான பலமும் உண்டு, பொதுவாக இது நவீன மார்க்கத்தில் தயரான ஒரு



சிறு ராஜ்யம். ராணுவ முக்கியம் வாய்ந்தது அல்ல. சமீபத்தில் தேசிய உணர்ச்சி நாடெங்கும் பரவிவருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களும் தாய்லாந்து என்ற மாதரு பூமிக்கு உவக்கும் புது உணர்ச்சியின் காரணத்தால் உண்டானவையே.

**புராதன சரித்திரம்.** ஸயாமில் தாய், லாஓஸ் என்பவர்கள்தான் புராதனமானவர்கள். இவர்களால் 16-வது நூற்றுண்டின் இறுதியில் லாண்பன் என்ற பட்டணம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சமயத்தில்தான் தனிப்பழக்கங்களுடன் இந்த ஜாதியினர் உண்டானது. 13-வது நூற்றுண்டில் ஏராளமான, தாய்லாந்தினரும், லாஓஸ் என்பவர்களும் உட்புகுந்ததால் இவர்களுக்கு அங்கே பிரதான்யம் ஏற்பட்டது. 1349-ல் அயோத்தியா (அயுதியா) என்ற நகரம் நிர்மாணிக்கப்பட்டு முதல் தலைநகரமாக விளங்கிற்று. பிறகு முன் ஸயாமில் இருந்தவர்கள் பலம்பெற்று கம்போடியா, அஙிகோர், மௌல்மீன், டவாய், தெனஸரின், மலாக்கா வூராவும் பரவிவிட்டனர்.

15, 16-வது நூற்றுண்டுகளில் பர்மா, பெகு முதலிய இடங்களிலிருந்து புலத்தலைவர்கள் ஸயாமைத் தாக்கி 16-வது நூற்றுண்டின் மத்தியில் அயோத்தியா பட்டணத்தையும் பிடித்துக்கொண்டனர். பிறகு சீக்கிரத்தில் ஸயாம் தலைவன் பாரா நாரத் என்பவன் அதிகாரம் பெற்று இழந்த கௌரவத்தை மீண்டும் அடைந்தான். இருந்தாலும் 1769-ல் பர்மியர் மறுபடி பிடித்துக்கொண்டனர். மறுமுறையாக பாயாடக்ஸின் என்ற வீரன் சிதறிக் கிடந்த சைனியத்தை ஒன்று கூட்டி சீர்படுத்தி பாங்காக்கை தலைநகரமாக ஸ்தாபித்தான். இவனுக்கு பிறகு பாயா சாக்கா என்பவன் முதலாவது ராமன் என்ற பெயர்பெற்று பிரகிருதம் அரசாளும் சந்ததியை 1782-ல் நிலைநிறுத்தினான்.

**அடுத்து நடந்த சரித்திரம்.** அதுமுதல் இச்சந்ததியார் கிரமமாக அரசாங்கம் நடத்தினதில், 1925-ல் ஆறுவது ராமன் என்ற அரசன் காலமானான். இவனுக்குப்பிறகு இவன் தம்பி, ஸுகோதயத்தைக் சார்ந்த பிரஜாதிபக் என்றவன் அரசனாக இருந்ததில் 1935-ல் அரசியலை விட்டுவிடும்படி நேர்ந்தது. இதன் காரணம் இன்னும் தெரியவில்லை. இவன் மருமகன் ஆனந்தனென்பவன் சிறு வயதானபொழுதே அரசனென்று சொல்லப்பட்டு அவனுடைய 16-வது வயதின் ஆரம்பவிழாகூட சென்ற மாதத்தில் பிரமாத ஆடம்பரத்துடன் நடத்தப்பட்டது.

**அரசாங்கம்.** ஸயாம் சமீபகாலம்வரை அரசனுக்கடங்கிய நாடாகத்தானிருந்தது. ஐந்து அங்கத்தினர்களடங்கிய உயர்தர சபையால் உபதேசம் பெற்ற அரசனிடம் ஸர்வாதிகாரமும் இருந்தது. இதைத்தவிர 10 மந்திரிகள் கொண்ட மந்திரி சபையும், ஒரு சட்டசபையும் இருந்தன. ஆனால் 1932 ஜூன் மாதத்தில் ஜன ஆட்சியைக் கோரி ஏற்பட்ட புரட்சியின் காரணமாக, லுவங் பிராடிட் என்ற நியாயவாதியின் கீழ் அமைந்த கூட்டத்தார் அரண்மனையார்களைக் கைதிசெய்து அரசனையும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தினார்கள். ஜனசபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. திடீரென்று 1933 ஏப்ரல் மாதத்தில் அரசன் அச்சபையைக் கலைத்துவிட்டு, லுவங் பிராடிட்டை தேசப்பிரஷ்டம் செய்தார். சிறிதுகாலம் கிரமித்து 1935 மார்ச்சு மாதத்தில் பிரஜாதிபக் அரசன் அரசியலைத் துறந்து தேசாந்திரம் சென்றான். இவனுடைய மருமகனான ஆனந்த மஹிதால் என்பவன் அரசனானான். இவனுடைய இளமையில் மூன்று ரீஜண்டுகளடங்கிய சபை அரசாங்கத்தை வகித்து ராஜரீக முறையில் இருந்துவருகிறது.

**ஐரோப்பியர்களின் சம்பந்தம்.** ஐரோப்பிய நாடுகளின் கவனம் இதைப் பற்றி அதிகம் ஏற்பட்டதால்தான் இங்கே அரசியலில் மாறுதல்கள் நிகழ்ந்தன. உதாரணமாக 16-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே போர்ச்சுகீஸ்காரர்கள் ஸயாமுடன் வியாபார சம்பந்தம் பெற்றனர். பிறகு டச்சுக்காரர்கள் வந்தனர். 17-வது நூற்றாண்டில் ஆரம்பிக்கும்பொழுது முதலாவது ஜேம்ஸுக்கும், ஸயாம் அரசனுக்கும் கடிதப்போக்குவரவும் ஏற்பட்டது. இங்கிலீஷ் கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனியும் தலையிட்டு 1855-ல் இங்கிலாந்திற்கும் ஸயாமுக்கும் உடன்படிக்கை ஏற்படுத்திற்று. இதன் பயனாக பாங்காக்கில் இங்கிலீஷ் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டார். இதற்குள் ஸயாமிற்கு அடுத்துள்ள அன்னம், டாங்காங்க், கொச்சின்-சைனா, பிரதேசங்களை விரைவாக பிரெஞ்சுக்காரர்கள் ஆக்கிரமித்துக்கொண்டதால், அன்னம் மாகாணத்தின் எல்லைத் தகராறைப்பற்றி ஸயாமும், பிரான்ஸும் 1893-ல் கொஞ்சம் சண்டையிட நேர்ந்தது. 1896-ல் அதிகச் சிரமப்பட்டு இங்கிலீஷ்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் செய்த உடன்படிக்கையின்படி தாய்லாந்து ஸ்வதந்திரமாக்கப்பட்டது. இருந்தாலும் பிரான்ஸும் ஸயாமும் பின்னால் 1904, 1907-ல் தேசப்பிரிவினை சம்பந்தமாக உடன்படிக்கை செய்துகொண்டன. 1917-ல் நடந்த யுத்தத்தில், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரிபேரில் ஸயாம் யுத்தம் துடங்கிற்று. சமீபத்தில் 1920-ல் அமெரிக்காவுடனும், 1924-ல் ஜப்பானுடனும் 1925-ல் பிரான்ஸ், ஹாலந்து, ஸ்பெயின், போர்ச்சுகல், டென்மார்க், ஜெர்மனி, பிரிடன் முதலியோருடனும் உடன்படிக்கை செய்துகொண்டது. இப்பொழுது ஸர் ஜோஸியா கிராஸ்பி K. B. E., C. I. E., சர்வாதிகார மந்திரி, இங்கிலாந்தின் பிரதிநிதியாக இருக்கிறார்.

**சமீப சரித்திரம்.** 1940 ஜூனில் ஸயாம், பிரிடன், பிரான்ஸுடன் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொண்டது. ஆனால் இவர்களைவிட தனக்கு ஏதோ அதிக ஸ்வதந்திரம் இருக்கிறதாக நினைத்து ஜப்பான், பிரெஞ்சு இந்தோ-சைனாவில் சில சாதகங்களை விரும்பியது. இவைகளைக்கொண்டு சைனா பேரில் படையெடுக்கவேண்டுமாம். பிரான்ஸ் வீழ்ந்ததினால், ஜப்பானின் தூண்டுதலினால் அச்சு நாட்டுப் பிரியம் வாய்ந்த, தாய் மந்திரிகள் ஜப்பானுக்கு இந்தோ-சைனாவின் சில பாகங்களைக் கொடுக்க சம்மதித்தனர். ஆனால் விஷி அரசாங்கம் கொடுக்க மறுத்துவிட்டது. இதற்குப் பின் ஸயாம் பிரிடனுடன் நட்பு பாராட்டிவருகிறது. இதனால் பல சிருங்கலையான பேச்சு வார்த்தை நடந்தது. ஆக்கிரமிக்கும் கக்ஷியினர் பலம் பெற்றனர். உடனே ஸயாமிற்கும் இந்தோ-சைனாவிற்கும் எல்லைத் தகராறு உண்டாயிற்று. காத்திருந்த ஜப்பானுக்கு தருணமும் வந்தது.

ஸைகோனுக்கு அருகில், இரு நடுகளுக்கும் ஜப்பான், சமாதானத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவேயுள்ள ஜப்பானுடைய ஆசைகள் வலுப்பெற்றன. அதன் பயனாக ஜப்பானுடைய ராணுவங்கள் பிரெஞ்சு இந்தோ-சைனாவில் புகுந்தன. இக்காரணங்களால் தான் தாய்லாந்தின் நிலை சிரமமாயும் எதிரிகளுக்கு உட்புகுர அவகாசத்தையும் தருகிறதாக ஆகிவிட்டது. ஏனென்றால் அதன் சைனியம் இந்தோ-சைனாவிலும், கப்பற்படையின் ஒரு பகுதி ஸயாம் குடாவிலும் காரா என்ற ஜலசந்தியிலும் இருக்கின்றன. (இது ஸயாமிற்கும் பர்மாவுக்கும் இடையிலுள்ளது). இதற்கு இடையில் ஜப்பான் நிலைமை சைனாவுடனோ, பிரிடன், அமெரிக்காவுடனோ சண்டை துவக்கக்கூடியதாக இருக்கிறதை அறியவேண்டும்.

**நற்கால நிலை.** மற்ற நாடுகள் எவ்விதம் இருந்தாலும், தான் நடுநிலை வகிப்பதாக தாய்லாந்து பல தடவைகளில் சொல்லியிருக்கிறது. பிரிடனும், அமெரிக்காவும் இத்துடன் சிநேக பாவம் கொண்டிருப்பதால் இதன் நடுநிலையைக் காப்பாற்றுவார்கள். ஜப்பானுடைய 'சம-மேன்மை' திட்டமுள்ள கிழக்கு நாடுகளில், அமெரிக்கா, பிரிடன்,



டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகளும் ஒத்துழைக்க மறுத்ததோடு தாய்லாந்து அரசாங்கமும், "ஜப்பானுடைய ஏமாற்றத்திற்கு உட்படாது" என்றும், "நாட்டை மெதுவாக ஜப்பனியர் கவரப்பார்ப்பதைத் தடுப்பார்கள்" என்றும் சொல்லிவிட்டனர். மூன்று வாரங்களுக்கு முன் (ஸெப்டம்பர். 20) தான் தாய்லாந்தின் பிரதம மந்திரி பீல்ட்மார்ஷல் லுவங் பிபல் ஸாங்கிராம் "தாய்லாந்தை சம்பந்தப் படுத்த யுத்தம் வந்தால் தாய்லாந்து கோபம் கொள்ளும்" என்று எச்சரிக்கை செய்ய வேண்டியதாயிற்று. இவ்விதம் இவர் சொன்னது சாமர்த்தியம் வாய்ந்த தந்திரிகள், எதிரிகளைத் திருப்தி செய்து தன் நிலையை ஸ்தாபிக்கச் செய்யும் முறை மாதிரிதான் ஆகும். ஏனென்றால் இவரின் மொழிகளால் வெளிப்படையாக ஒரு மாறுதலும் உண்டாகவில்லை. மேலும் அரசனின் 16-வது ஆண்டு விழா நடக்கும் தருணத்தில் அபசகுனமான இந்த அறிக்கையை இவர் வெளியிட வேண்டியிருக்கிறது! முன் எச்சரிக்கையுடன் இருப்பது முன் பலம் பெற்ற மாதிரிதான். இருந்தாலும் அச்சுநாட்டுத் தலைவர்கள் ஸர்வதேச கௌரவங்களையெல்லாம் புதுவிதமாக அமைத்துவரும் இந்நாட்களில் வெறும் எச்சரிக்கை பயன்படாது! உதாரணமாக சில நாட்களுக்கு முன் அச்சுநாட்டுப் பத்திரிக்கைகளும், ரேடியோவும், கொஞ்சமும் ஆதாரமன்னியில், பிரிடன், தாய்லாந்தை சில சாதகங்கள் கேட்பதாயும், அவைகளை மறுத்தால் "பிரதி நடவடிக்கை எடுக்கும்" என்றும் பிரசித்தம் செய்தன. பிரிடன் ஆக்கிரமணத்திலிருந்து விடுவிக்க, தாய்லாந்து ஜப்பானை உதவி நாடவேண்டும் போலும்! இந்த விதமாக நடுநிலை நாடுகளைப் படையெடுக்க வேண்டியிருப்பதாக அச்சுநாடுகள் கூறும் காரணத்தை பிரிடிஷ் மந்திரி ஸர். ஜோஸியா, கிராஸ்பி அக்டோபர் 9-ம் தேதி சொல்லியுள்ளார். "அபாண்டமாக பிரசாரம் செய்யும் இவர்கள் வார்த்தையில் கொஞ்சமும் உண்மையில்லை. தாய்லாந்தைப்பற்றியும் அவர்கள் சொல்ல ஆரம்பித்திருக்கின்றனர், இந்த யுத்தமே வீண் பயமுறுத்தல் தானே," என்று பரிஹாசமாகச் சொல்லியுள்ளார். ஒருக்கால் அதன் பயனாகவே தாய்லாந்தின் அருகே யுத்தம் வாராமலிருக்கலாம். இருந்தாலும் அதைச் சுற்றித்தான் இருக்கிறது. இவ்விதம் பலவிதமான ஹேஷ்யங்களுள்ள நிலைமையை விளக்கிவிட்டோம். ஆனால் எப்படிச் செய்தால் நன்மையுண்டாகும் என்பதை தாய்லாந்தின் தலைவர்கள் உணர்ந்திருந்தால் தான் தாங்கள் தலைமை வகிப்பதற்கும், தாய்லாந்தின் நிலைக்கும் பொருத்தமானதாக ஆகும்.

---

அனுபந்தம்.

---

## மனிலா மகாநாட்டின் முக்கியத்துவம்.

## தூரக்கிழக்கில் பலாத்கார முறைகளை தேசத் தற்காப்புக்கு அநுகுணமாகச் செய்வது.

## நேசதேசங்கள், அமெரிக்கா, சைனா இவைகளுக்குள்ள ஒற்றுமை.

ரோஜர் லீல் எழுதியது :—

தூரக்கிழக்கில் பொதுவான பாதுகாப்பு அரண் ஏற்படுத்த வேண்டிய பொதுவான நோக்கத்தை முன்னிட்டு நீண்ட காலமாக விவாதங்களும், படைகள் இடம் மாறிக்கொண்டும், யுத்தத்திற்கு ஆயுதங்களும் செய்யவரப்பட்டன. பிலிப்பைன் தீவுகளில் மனிலாவில் சமீபத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிடிஷ் சாம்ராஜ்யம் இவைகளின் பிரதிநிதிகள் கூடியிருந்த மகா நாட்டில் அதற்கு ஒரு முடிவான நிலைமை ஏற்பட்டது.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு, 1932-ம் வருஷம் மஞ்சுகோவை ஜப்பான் எதிர்த்து, பலாத்கார முறைகளை ஆரம்பித்தது. பிந்திய வருஷங்களில் அதன் அச்சுநாட்டு கூட்டாளிகளின் பலாத்கார முறைகளையே கையாண்டுவருகிறது. தூரக்கிழக்கில் ஜப்பானியக் கொள்கை, ஹிட்லர் தன்னுடைய எதிரிகளைப் பிரித்து விட்டு ஒருவர்பின் ஒருவராக விழுங்கி வருவதைப்போல், இருப்பது வெளிப் படையாகத் தெரிந்த விஷயம். ஐரோப்பாவில் ஹிட்லர் ஏராளமாகச் சேதம் விளைவித்து, அநேக தேசங்களைக் கைப்பற்றிக் கொள்ளும்வரை ஆக்கிரமத்தைத் தடுக்கப் போதுவான அரண் ஏற்படுத்தவில்லை. இதற்கு மாறாக தூரக்கிழக்கில் யுத்தத்தில் ஹாலந்து அகப்பட்டபொழுது அதாவது 1940-ம் வருஷம் மே மாத முதல் ஜப்பானினுடைய ஆக்கிரமிப்பு—சூழ்ச்சிகளுக்கு ஒருபடி முந்தியே தற்காப்பு முஸ்தீப்புகள் தயாராகிவிட்டன. இவ்வளவு காலம் கடந்தும் தாய் நாடான பிரான்ஸ் அழிந்தபிறகு, யார் வசத்திலும் எளிதில் சிக்கக்கூடிய இந்தோ-சைனாவை மட்டும் ஜப்பான் ஆக்கிரமித்துக்கொண்டது.

தூரக்கிழக்கு பலாத்காரத்தில் இவ்விதம் நடந்தது ஹிட்லருக்குத் திருப்தி யளிக்கவில்லை. ஜப்பானைத் தன் கருவியாக எப்பொழுதும் பாவிக்கவேண்டும் என்பதே ஜெர்மனியின் நோக்கம். மேலும் தூரக்கிழக்கில் பிளவுக்குமேல் பிளவுகளை ஏற்படுத்த ஜப்பானைத் தூண்டிவிட்டு அதன் பயனாக யுனைடெட் ஸ்டேட்ஸும் கிரேட் பிரிடனும் தங்கள் கவனத்திலும் பலத்திலும் ஒரு பகுதியை அந்தப் பக்கம் செலுத்த நேரிடுமென்றும், அதிலிருந்து ஐரோப்பா போர் முனையில் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் தளர்ந்துவிடுமென்றும் ஜெர்மனி எதிர்பார்க்கிறது.

ருஷ்யாவைத் தாக்கியதில் இந்தப் போதுவான ஜெர்மன் முறை வியக்தமாகத் தெரியப்படுத்தப்பட்டது. அநேக நாஸி சஞ்சாரிகளும், நிபுணர்களும், ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தை தூரக்கிழக்கில் உடனே தாக்கவேண்டுமென்று ஜப்பான் எதிர்பார்க்கப்படுவதாக அடிக்கடி சொல்லிவந்தார்கள். இம்மாதிரி செய்ய ஜப்பானியர்களுக்கு ஜெர்மானியர்கள் என்ன ஆசை காட்டினார்களோ தெரியவில்லை. இருந்தபோதிலும் அவர்கள் காட்டின ஆசை போதவில்லை; ஜப்பானியர்கள் எச்சரிக்கையாக இருந்துவிட்டார்கள்.

சைனா சம்பவத்தில் ஜப்பானுக்கு ஏற்கனவேயே ஏற்பட்டிருக்கிற பொறுப்பு களையும், தூரக்கிழக்கில் இருக்கும் ருஷ்ய சைனியத்தின் பலத்தையும், ஸைபீரி யாவைத் தாக்குவதினால் ஹிட்லரின் திட்டத்திற்குப் பொருந்துமே தவிர தங்களுக்கு யாதொரு சாதகமும் இல்லையென்று தெரிந்துகொள்ளக்கூடிய ஜப்பானியரின் நுண்ணறிவையும் கவனித்தால் இதில் ஆச்சரியம் உண்டாகாது. இந்த முக்கியமான காரணத்தினால் ஜப்பானின் மந்திரி சபையில் குழப்பம் உண்டாயிற்று; ஜப்பான் இந்தோ-சைனாவில் படையெடுத்தது.

ஜப்பான் தன் கொள்கையைப்பற்றி முடிவிற்கு வருவதற்குள், வடக்கே தோன்றும் பயத்தை முன்னிட்டு பிரிடிஷ் மலேயா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா யுனைடெட் ஸ்டேட்ஸ், இவைகளுக்குள் சிநேகிதம் பலப் பட்டது. சிங்கப்பூர் அளவிடப்படமுடியாதபடி பலப்படுத்தப்பட்டது, பாது காப்பிற்குப் போதுவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன; போதுவாக பொருளா தாரக் கொள்கையும் தீர்மானிக்கப்பட்டது.

ஜப்பான் ஒருவித முடிவிற்கு வந்து தெற்கே நோக்கிச் செல்ல தீர்மானித்த பொழுது, அங்குள்ள நாடுகள் ஏற்கனவேயே எதிர்க்க முடியாதபடி பலமான தற்காப்பு ஏற்பாடுகள் எடுத்துக்கொண்டதை அது உணர்ந்தது. அதனால் அது இந்தோ-சைனாவில் பாயத் தீர்மானித்தது.



அப்படியே சில மாதங்கள் சென்றன. இப்பொழுது புதிய சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் சைனா. ஏற்கனவே அரைகுறையான ஜப்பான் தாக்குதல்களுக்குப் பிறகு, சைனாவில் அதிகம் ஒன்றும் நேரவில்லை. வஸந்த காலத்திலும், கோடை காலத்திலும், ஜப்பானியர்கள் புதிதாக சரத் காலத்தில் தாக்குவார்கள் என்பதை எதிர்பார்த்து, சீனர்கள் அமைதியாக யுத்தத்திற்குத் தயாரித்துக்கொண்டும், தங்கள் பலத்தை அதிகரித்துக் கொண்டிருந்தார்கள். அதுபோல் அதிகமாக ஹூனன் மகாணத்திலும், காண்டனுக்கு வடக்கேயுள்ள பிரதேசத்திலும் இந்தத் தாக்குதல்கள் சம்பவித்தன. ஜப்பானியர்கள் எண்ணிய படிக்கில்லாமல் அநேக கோடி மடங்கு ஆயுதம் பூண்டும், தயாராகவும், சீனர்கள் புருந்து தேசத்தின் நடுமத்திக்கு எதிரிகளை இழுத்துச் சென்றுவிட்டார்கள். உடனே திரும்பி பக்கங்களிலிருந்து தாக்கி ஏராளமாக ஜப்பானியர்களுக்குச் சேதம் விளைவித்து, அவர்களைத் தோற்கடித்தார்கள். அதனால் ஒரு ஜப்பானியப் படைத் தலைவன் தற்கொலை செய்துகொண்டான்.

கர்னல் நாக்ஸ் சொன்ன பிரகாரம் முடிவில் ஜயம் கிடைக்கும் வரை யுனை டெட் ஸ்டேட்ஸ் சைனாவுக்கு உதவி செய்யத் தீர்மானித்திருக்கிறது. பிரிடிஷா ருடன் ஏற்பட்ட மணிலா மகா நாட்டிற்கு வந்திருந்த அமெரிக்கப் பிரதிநிதிகளில் சைனாவுக்கு வந்திருந்த அமெரிக்க ராணுவ தூதுகோஷ்டியிலுள்ள நபர்களும் இருந்தார்கள். பிரிடிஷ், அமெரிக்க பிரதிநிதிகள் விவாதித்த அம்சங்களில், சீனப் படைக்கு பர்மா ரோடு வழியாக ஸப்ளைகளை அதிகரிக்கச் செய்வது ஒன்று. சீனர்கள் தங்களால் செய்யக்கூடியதைக் காட்டின பிறகு, தங்களுக்கு ஏற்பட்ட சாதகத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஜப்பானியர் தாப்பில் தோல்வி விளைவித்து. சாஸ்வதமாக அவர்களைத் தற்காப்பு நிலைமையில் இருக்கும்படி நிர்ப்பந்திக்கக் கூடுமென்று நம்புகிறார்கள். போதுமான யுத்தப் பொருள்களும், விமானங்களும், பீரங்கிகளும் வந்துகொண்டிருந்தால்தான், சைனா இம்மாதிரி செய்யக்கூடும். இப்பொழுது ருஷ்யாவிலிருந்து அதற்கு கிடைத்துவருகிறது எவ்வளவு என்பது தெரியவில்லை. ருஷ்யர்கள் எல்லாம் ஜெர்மானியர்களுடன் சண்டையிடும்வரை சைனாவுக்குக் கிடைப்பது அதிகமாக இராது. ஸப்ளைகள் யுனைடெட் ஸ்டேட்ஸி லிருந்துதான் வரவேண்டும். பர்மா ரோடு வழியாக அவைகளை பிரிடிஷாரின் உதவியினால்தான் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும்.

இந்த மகத்தான திட்டம் தூரக்கிழக்கில் பாலாத்காரத்தைத் தற்காப்பு நிலைமைக்குக் கொண்டுவந்துவிடும். நேசதேசத்தார்களும், யுனைடெட் ஸ்டேட்ஸும் சைனாவும் அம்மாதிரி முடிவுக்கு வர ஒத்துழைப்பார்கள். மணிலா மகா நாட்டின் முக்கியத்வம் அதுதான். தூரக்கிழக்கில் இந்தப் பெரிய திட்டத்தை நடை முறைக்குக் கொண்டுவர ஏற்பாடுகளைப்பற்றி அந்த மகா நாட்டில் யோசிக்கப்பட்டது.

---

## வாரயுத்தச் செய்திகள்.

---

### 23—10—41-லிருந்து 29—10—41-வரை.

**மாஸ்கோ.**—கொஞ்சமும் வேகம் குறையாமல் மாஸ்கோவிற்கு வரும் மார்க்கங் களில் 250 மைல் நீளத்தில் யுத்தம் நடக்கிறது. சமீபத்தில் மழைகள் பெய்து சதுப்புள்ளதாகச் செய்யப்பட்ட போதிலும் காலினின் பட்டணத்தில் ஒவ்வொரு தெருவிலும் ருஷ்யச்சேனைகள் நின்று எதிரியைத் தாக்கி எதிரிக்கு வரும் ஸப்ளைகளைத் தடுத்துவருகின்றன. ரிஷெவ்விற்கும் மாஸ்கோவிற்கும் இடை யிலுள்ள வோலொகலம்ஸ்க் என்ற இடத்திலும் சண்டை நடப்பதாகச் செய்தி

வந்திருக்கிறது. மெஜெயிஸ்க், மாலோயாரோ என்ற இடங்களில் கடுமையான யுத்தம் நடந்து எதிரி கொஞ்சம் முன்னேறியதாகச் சொல்லப்படுகிறது. தூலா, கலூகா, ஓரெல் என்ற மற்ற பாகங்களிலும் முடிவு இல்லாமல் போர் நடக்கிறது. மாஸ்கோவின் வழியிலுள்ள நாரா, ஓகா நதிகளைக் கடக்க எதிரி முயன்றதும், விமான மூலம் தொழிற்சாலை லக்ஷியங்களைத் தாக்கப்பார்த்ததும் வீணாயின.

ஆகவே இவ்வாரத்தில் எதிரியின் முன்னேற்றம் தடைபட்டும் சேதம் பெற்றும் இருப்பதாகச் சொல்லலாம். மாஸ்கோவுக்குக் கெடுதிவந்தால் ருஷ்யர்களை விட ஜெர்மானியருக்குத்தான் ஆபத்து அதிகம். ஏனென்றால் ருஷ்யர்கள் எதிர்த்து நிற்பார்களாதலால், ருஷ்யாவைப் பிடிக்கமுடியாமல் போனால் ஹிட்லருக்குத் தோல்வி என்றுதான் சொல்லப்படும். பிறகுதான் இந்த ரத்தவெள்ளம் நின்று ஹிட்லரின் நோக்கங்களெல்லாம் நிற்கும்.

**டான், டானட்ஸ் பிரதேசம்.**—இப்பிரதேசங்களைப் பிடிக்க மாஸ்கோ பிரதேசத்தைவிட மிகக்கடுமையான எதிர்ப்புகள் செய்யப்படுகின்றன. ஸ்டாலினோ எதிரி வசமாயிற்று. கார்கவ் காலி செய்யப்பட்டது. ரோஸ்டவ்விலிருந்து 15 மைல் தூரத்தில் எதிரி இருக்கிறான். நீபர் அணையைப்போல நிலக்கரிச் சுரங்கங்களும், எஃகு தொழிற்சாலையும் உள்ள ஸ்டாலினோவும் முக்கியமானதுதான். கிழக்கு யூக்ரேனுக்குத் தலைநகரமான கார்கவ்வில் தளவாடங்களும், விமானங்களும், செய்யப்படுகின்றன. டான் நதி முகத்வாரத்தில் ரோஸ்டவ் ஒரு கேந்திரமான துறைமுகம். பெரிகாப்பின் வழியே கிரிமியாவினுள் எதிரி சென்றதாகச் சொல்லுவது இன்னும் ஊர்ஜிதமாகவில்லை. லெனின்கிராட்டில் எதிர்ப்புகள் செய்து ருஷ்யர்கள் இரண்டு இடங்களைப் பிடித்துக்கொண்டனர்.

**அதிகார மாற்றம்.**—இதுவரை நடுபாகத்தில் எதிரியின் முன்னேற்றத்தை வெற்றிகரமாகத் தடுத்துவந்த டிமோஷென்கோ தெற்கே வந்திருக்கிறார். ஒரோஷிலாவும், புடென்னியும் வால்கா நதிக்குப்பின்னால் புதிய சேனைகளைச் சேகரம் செய்கின்றனர். மாஸ்கோவிற்கு ஜுகவ் என்பவர் தலைமை வகிக்கிறார்.

**எதிரிகளின் கஷ்டங்கள்.**—இவைகளுக்கு இடையில் எதிரிகளுக்கு இடைஞ்சலாக பல சம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன. மாரிகாலம் பூரா வந்துவிட்டது. கிடைத்த இடங்களிலெல்லாம் துணிகளைத் திருட ஆரம்பிக்கிறான். செல்ல முடியாதபடி ரஸ்தாக்கள் சகதியாகிவிட்டன. ஆகையால்தான் பனிவிழுந்து கெட்டியாகும்வரை மாஸ்கோவைச் சுற்றி எதிரி தயக்கம் செய்கிறான். யுத்த முனைக்கு விமானங்களால் எண்ணெய் கொண்டுவரப்படுவதில் 100 விமானங்கள்வரை ருஷ்யர்களால் ஓரெலில் சேதமாக்கப்பட்டன. தன் பக்கத்தில் காயமடைந்தவர்களின் கணக்கு அதிகமாக ஆக இடவசதியில்லாமல் கஷ்டமடைகிறான். பூராவாக ஜெர்மானியர் அடங்கிய சேனையில்லாமல், இதாலியர் ஹங்கேரியர், ருமேனியர், ஸ்லோவாக்கியர் நிறைந்த கதம்பச் சேனையை நடத்திச் செல்வதால் இன்னும் அதிகமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

**ருஷ்யர்களுக்கு வரும் ஸப்ளை மார்க்கங்கள்.**—ஆர்கேஞ்சல், பெர்ஸியன்குடா, வ்ளாடிவாஸ்டக் என்ற மூன்று மார்க்கங்கள் தடைபடவில்லை. ஆர்கேஞ்சல் என்பது மாரிகாலத்தில் பனி சூழப்பட்டாலும், அமெரிக்காவுக்குச் சமீபத்திலுள்ளது. இதை பிரிடிஷ் கப்பற்படை பாதுகாக்கிறது. பெர்ஸியன்குடா அமெரிக்காவிலிருந்து 12,000 மைல் தூரத்தில் இருப்பதால் இரானில் உள்ள இருப்புப்பாதை செப்பனிடப்படுகிறது. ஆகையால்தான் ஏராளமான ரயில்வே இஞ்ஜின்களும் மற்ற சாமான்களும் அனுப்பப்படுவதாக லார்டு பீவர் புருக் அறிவித்தார். வ்ளாடிவாஸ்டக் அதிக தூரத்தில் இருந்தாலும், ஜப்பானின் பயமுறுத்தல்கள், இங்கிலீஷ்-அமெரிக்க மனப்பான்மையால் தடைப்பட்டன.



**புதிய போர்முனை.**—ருஷ்யரின் சிரமத்தைக் குறைப்பதற்கு ஐரோப்பாவின் மேற்கே ஒரு போர்முனையை ஏற்படுத்தவேண்டுமென்ற அபிப்பிராயம் இன்னும் தணியவில்லை. ஞாயற்றுக்கிழமை 10,000 லேபர் கக்ஷியினர் கூடிய கூட்டத்தில் 'ருஷ்யாவுக்குப் பூரா உதவி' செய்யவேண்டுமென்று உள்நாட்டு மந்திரியின் காரியதரிசி எல்லன் வில்கின்ஸன் என்பவர் பேசும்போது 'மேற்குப் போர்முனை' என்று கூச்சலிடப்பட்டதாம். அதேமாதிரித் தடைகள் லார்டு ஹாலிபாக்ஸ் நியூயார்க்கில் பேசும்போதும் ஏற்பட்டதாம். பார்லிமெண்டின் இரண்டுசபைகளிலும் இது விவாதத்திற்கு வந்தது. மிஸ்டர் ஈடன், ருஷ்யாவுக்கு எல்லா விதத்திலும் உதவியளிப்பதாகச் சொன்னதால் இப்பேற்பட்ட விவாதங்களுக்கே தேவையில்லை. ருஷ்யாவுக்குக் கப்பல் சாமான்களை ஏற்றிச்சென்று எதிரிகளை 14 தடவை தாக்கியிருப்பதாகக் கப்பல் இலாகா மந்திரி ஸர் A. V. அலெக்ஸாண்டர் தெரிவித்துள்ளார். மர்மான்ஸ்க் முதல் எகிப்து வரையில் நேசதேசங்களின் படைகள் நிற்கின்றன. இது போலவே மற்றொரு பாகத்திலும் ருஷ்யாவும் பிரிடனும் சேர்ந்து, பல போக்குவரவு உதவிகளுடன் ஸோஹூம் முதல் சிங்கப்பூர் வரை நிற்பதும் விசேஷம் என்று டைம்ஸ் பத்திரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ருஷ்யாவுக்குச் சாதகமாக தூரக்கிழக்கில் ஆங்கிலேய-அமெரிக்க முஸ்தீபும் இருக்கிறது. ஆகையால் மேற்கே ஒரு போர்முனையை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லுவது ஆதாரமில்லாத வெறும் பேச்சுதான்.

**பிரதீகாரக் கொலைகள்.**—நான்டிஸ் என்ற இடத்திலுள்ள ஜெர்மன் ராணுவப் போலீஸ் தலைவனை ஹோல்ட்ஸ் கொல்லப்பட்டதின் காரணத்தால் 100 கைதிகளைக் கொலை செய்திருக்கின்றனர். இது ஜெர்மானியரின் அக்கிரமச் செய்கைகளுக்கு ஒரு உதாரணமாகும். மேலும் ஏதோ ஒரு தந்திக் கம்பத்தை பசு கீழே தள்ளியதிற்காக பூரா பட்டணத்திற்கும் 17,000 பவுன் அபராதம் விதித்தான். குற்றவாளி பசுதானென்று தெரிந்தாலும் அபராதத்தை மாற்றவில்லை.

மார்ஷல் பிடேன் தன் நாட்டினரை ஜெர்மன் ஆக்கிரமணத்தைப் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டதிலிருந்து அவரின் பயந்த நிலை தெரிகிறது. டிகாலுக்கும் இவருக்கும் உள்ள வித்தியாசம் வெளியாகிறது. வெள்ளிக்கிழமை இதைத் தடுக்கும் எண்ணத்துடன் 5 நிமிஷங்கள் மௌனம் சாதிக்கும் படிக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அமெரிக்காவும் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றும் அங்கிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

ஆகையால் குற்றத்திற்குப் பிரதிகாரமாகக் கொலைகள் செய்யப்படுவதை உலகம் நிந்திக்கிறது. ஒருவன் செய்த குற்றத்திற்கு மற்றவனைக் கொலை செய்வதைப் பற்றியுள்ள ராக்ஷஸச் செய்கையை எத்தனையோ காலமாக நாகரீக நாடுகளில் கைவிடப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும். இந்தக் கொடிய செய்கை 'ஜயம் பெற முடியாது என்று தெரிந்து கொண்டவன் கடைசியாகச் செய்யும்' காரியம் என்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு சொல்லுகிறார். குற்றவாளிகள் பேரிலும், அவர்கள் உள்ள நாட்டினர் பேரிலும் தண்டனை விதிப்பதைப் பற்றி நிந்தனையாகப் பேசி 'யுத்தத்தில் இனி இது ஒரு பெரும் லக்ஷியமாகக் கருதப்படும்' என்று மிஸ்டர் சர்ச்சிலும் சொன்னார். மதாபிமானம் பெற்றவர்களான வீரர்கள் இறந்து மத ஸ்வதந்திரம் ஸ்தாபித்ததுபோல் இவ்விதமாகக் கொலைகள் ஏற்படுவதைப் பார்த்தாவது பிரான்ஸில் ஸ்வதந்திரம் வரட்டும்.

**இதாலி.**—பிரென்னர் பேச்சு வார்த்தைகள் நடக்கும்போது இருந்த மாதிரி இப்பொழுது ஹிட்லருக்குச் சமமாக முஸோலினி ஆக முடியாது. அச்சுநாட்டு சம்பந்தம் வைத்துக்கொள்ளவும் லாயக்கில்லை. ஜெர்மன் ரகசியப் போலீஸுக்கு

உட்பட்டு ஜெர்மனிக்கு இஷ்டமான அரசாங்கம் செலுத்துகிறன். அவன் சைனியங்கள் கழுதையைப்போல் சுமை இழுக்கும் வேலையைச் செய்கின்றன. கிரீக், ஸ்லாவ் கைதிகளை அடக்கவும், ருஷ்யாவில் நாஸிப்படைகளுக்குப் பின்னுல் செல்லும்படியும் இருக்கிறது, விஷயத்தில் இவர்களை ஜெர்மானியர் கலந்து கொள்வதில்லை. டாக்டர் புங்கும் டாக்டர் கிளாடியஸ்ஸும் இதாலிக்கு வந்து பொருளாதார சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்திலிருந்தே கடைசியாக நடந்த ஜெர்மன் ஆக்கிரமணம் வெளியாகிறது. இதாலியச் சைனியத்தை ருஷ்யாவிற்கு அனுப்பியதைத் தடுத்து முஸோலினியின் ஆட்களே கலகம் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகத் தன்கூறியிலிருந்த 60 உத்தியோகஸ்தர்களை விலக்கிவிட்டாராம்.

**ஒரு நாளைக்கு ஒரு கப்பல்.**—மத்தியதரைக்கடலில் இரண்டுமாத காலமாக அமுக்கிய கப்பல்களின் கணக்கு தினம் ஒன்று வீதம் ஆகிறது. கப்பல் அதிகாரி ஸர் ஆண்டிரு கன்னிங்ஹாம், இதாலிய துறைகளிலிருந்து சென்ற கப்பல்களில் 30 சதவிகிதம் ஸெப்டம்பர் மாதத்திலேயே மூழ்கடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

**விரோதியின் வெகுமானம்.**—தங்கள் வேலையைப்பற்றி சொல்லும்போது அட்லாண்டிக் யுத்தத்தில் பிரிடன் பெற்ற வெற்றியைப்பற்றி அச்சுநாட்டினர் சொல்லிவிட்டார்கள். சமீபத்தில் பெர்லின் கம்பியில்லாத ஒலிபரப்பில் :—

“துணைக்கப்பல்கள் கொண்ட கப்பற்கூட்டத்தை தாக்குவது காலாட்படைகள் தற்காப்புள்ள கோட்டைகளை எதிர்ப்பதுபோல் ஆகும். பிரிடிஷ் கப்பல்கள் இப்பொழுது, எப்பொழுதும்போல் பந்தோபஸ்துள்ள யுத்தக் கப்பல்களால் காபந்து செய்யப்பட்டிருக்கின்றன. எல்லா வியாபாரக் கப்பல்களும் பல விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் யந்திர பீரங்கிகளையும் ஏற்றிச் செல்லுகின்றன. மேலும் இவைகள் தடைசெய்யும் பலூன்களும் எஃகுக் கம்பிகளும் ஏந்திச் செல்லுகின்றன.”

“ஆகையால் விமான பயம் இவைகளுக்கு ஏற்படுவதில்லை. எதிரி பலமாயும் ஜாக்கிரதையாயும் இருக்கிறன். இதன் பயனாக, நமது பாம்பர் விமானங்கள் செல்லும்போது பிரமாதமாக நெருப்புவந்து விழுகிறது. அந்த சமயத்தில் ஆகாயம் பூரா நெருப்பு பரவுகிறது. நமது விமானங்கள் கப்பலைத் தாக்குவதென்றால் அதிக ஆபத்துதான்”.

**ஹைடராபாட், பரோடா** ஸமஸ்தானங்களிலிருந்து உதவப்பட்ட சிறு கப்பல்களும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானங்களும் இவ்வாரத்தில் உபயோகப்படுத்தப்பட்டன.

**வேலை நிறுத்தல் பயம்.**—சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று அமெரிக்காவில் 53,000 சுரங்க வேலைக்காரர்கள் இருக்கும் 7 பெரிய எஃகுக் கம்பெனிகளில் வேலைநிறுத்தம் செய்யும்படி மிஸ்டர் ஜான் L. லூயி. பயமுறுத்தியதால் யுத்த சாமான்கள் செய்வதற்குக் கொஞ்சம் தடையேற்படலாம். இவரை பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு, நாட்டின் க்ஷேமத்தை முன்னிட்டு அவ்விதம் செய்யாமலிருக்கும்படி கேட்டிருக்கிறார்.

**நடுநிலைச் சட்டம்.**—அமெரிக்க ஸெனட்டிற்கு இச்சட்டம் விவாதத்திற்கு வந்திருக்கிறது. அச்சமயம் கன்னலி என்பவர் “ஜெர்மனியின் சீர்மூழ்கித் தொந்தரவு, கொலை, கொடுங்கோல், பலம் முதலியதைக் காண்பிக்கிறது” என்று சொன்னார். பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு தைரியமாக இச்சட்டத்தைப்பற்றி முயற்சி எடுப்பதை யாவரும் ஆவலாக கவனிக்கின்றனர். அவர் வியாபாரக் கப்பல்களுக்கு ஆயுதம் ஏற்றுவதும், யுத்தப் பிரதேசங்களுக்கு அவை செல்லுவதையும்தான் விரும்புகிறார்.



**கப்பற்படை தினக்கொண்டாட்டம்.**—திங்கட்கிழமை இந்த சந்தர்ப்பத்தில் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு பேசியது நாஸிகளைக் கடுமையாகக் கண்டித்து அதிக ஊக்கமாகப் பேசியுள்ளார். அவர் சொன்னதாவது :—

“நமது சரித்திரமே பல வீர வாதங்கள் நிறைந்ததுவதான். பிறர் சொன்ன வீர வார்த்தைகளை மீறியே நமது நிலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பொறுவான கடல்கள், பெரும் காடுகள், பாலைவனம், பொட்டல்கள், வெள்ளம், பஞ்சம், அயல் நாட்டுக் கொடுங்கோல்மன்னர்கள், மல்யுத்தம், சமூகம், பொருளாதாரம், அமைப்பு முதலிய கடுமையான பிரச்னைகள், இவைகளையெல்லாம் ஜயித்து பெரும் நாடு என்ற பெயர் வாங்கியுள்ளோம்.”

“இன்று, புதிய விரோதி வார்த்தைகளுக்கு பதில் செய்ய யுத்தத்திற்கு லாயக்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம்”

அவர் பேசியதில் நாஸிகள் அமெரிக்காவை அபகரிக்கப் போவதற்கான திட்டங்களையும், மதங்களைக் கெடுப்பதற்கான எண்ணங்களையும் கண்டித்துப் பேசியுள்ளார்.

**அமெரிக்காவுக்குள்ள ஆபத்து.**—“அமெரிக்காவைப் பிடிக்கும் எண்ணம் ஹிட்லருக்கு இல்லையென்று பலதடவைகளில் அவன் சொல்லியிருக்கிறன். ஆனால், அவனுடைய சூழ்ச்சிகள் வேறுவிதமாகச் செய்கின்றன. இப்படித்தான் அவன் புது திட்டம் இருக்கிறது.

உதாரணமாக என்வசத்தில் ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட ஒரு படம் இருக்கிறது. இதை புது திட்டத்தை ஏற்படுத்தும் ஹிட்லர் அரசாங்கம் தயாரித்தது. தென் அமெரிக்காவையும் நடு அமெரிக்காவையும் ஹிட்லர் சீர்திருத்தம் செய்யப் போகிறனும்.

இப்பிரதேசத்தில் 14 தனி நாடுகள் இருக்கும்போது இப்படத்தில் எல்லா எல்லைகளையும் கலைத்து 5 பாகமாகச் செய்யப்பட்டு நாஸி ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

இதில் பனமா குடியரசையும் அமெரிக்காவின் ஜீவ நாடியான பனமாவையும் சேர்த்திருக்கின்றனர்.

ஆகவே தென் அமெரிக்கா மாத்திரம் அன்னியில் வடஅமெரிக்காவிலும் நாஸித் தோற்றங்கள் வெளியாகின்றன.”

“**மதத்திற்குள்ள கேடு.**—மற்றொரு யாதாஸ்தும் கிடைத்திருக்கிறது. இதுவும் ஹிட்லரால் தயாரிக்கப்பட்டதுதான். இதை அவர்கள் பிரசுரம் செய்யாமல் புதுதிட்டப்படி ஸ்தாபிக்க விரும்புகின்றனர்.

“இதன்படி பிராடெஸ்டெண்டு, கதோலிக், மகமதியமதம், ஹிந்து, புத்த மதம், யூதர் மதம், எல்லாம் ஒழிக்கப்படுமாம்.

“ஜெர்மன் அரசாங்கம் எல்லா கோவில்களின் சொத்துக்களை அபகரிக்கும். எல்லாவித மத அடையாளங்கள் அழிக்கப்படும். பாதிரிமார்கள் இப்பொழுது பொதுமக்கள், கொலைசெய்யப்படும் ஜெயிலில் அடைக்கப்படுவார்கள். ஏனென்றால் கடவுளைவிட ஹிட்லர் பெரியவனும்.

“இப்பொழுது இருக்கும் நாகரிக நாட்டின் கோவில்களுக்குப் பதிலாக ஸர்வதேசக் கோவில்கள்தான் உண்டு. இங்கே நாஸிகள் அனுப்பும் பேச்சாளர்கள் தான் உபந்நியாசம் செய்வார்கள்.

“பைபிள் போன்ற வேத புஸ்தகங்களுக்குப் பதிலாக மெயின் காம்ப் புஸ்தகம்தான் வாசிக்கப்படவேண்டும். ஸ்வஸ்திகா அடையாளமும் உறையில்லாத கத்தியும் தான் வைக்கப்படும். வாத்ஸல்யம், தயவு இவைகளுக்குப் பதிலாக கொடுங்கோல் ஏற்படும்”.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**21—10—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டை.—மத்தியதரைக் கடல் (Mediterranean). | ... | ... | 1 விமானம். |

இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| சாமான் சேமிக்கும் கிடங்குகள், இருப்புப் பாதைகள், ரயில்வே ஸ்டேஷன், இதர ராணுவ லக்ஷியங்கள்.—நேபிள்ஸ் (Naples). | ... | ... | ... |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| கடேனியா (Catania), மற்ற பட்டணங்கள், ஸிஸிலி (Sicily). | ... | ... | ... |

ருஷ்ய விமானங்களால்.

ருஷ்யா (Russia).

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலையங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 8 விமானங்கள். | 34 விமானங்கள். |

**22—10—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வடபிரான்ஸ் (France). | ... | | |
| விரோதி விமான நிலையம்.—ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸ் (France). | சேதமாயின. | ... | ... |
| சிறு கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 கப்பல்கள் தாக்கப்பட்டன. | நஷ்டமில்லை. | ... |
| இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—ரைன்லாந்து (Rhineland), மான்ஹீம் (Manheim) இன்ன தொழிற்சாலை உள்படவும். | ... | ... | ... |
| கப்பல் துறைகள்.—லெஹாவர் (Le Havre) | ... | ... | ... |
| துறைமுகம்.—ப்ரெஸ்ட் (Brest). | ... | 5 விமானங்கள். | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**22—10—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| கப்பல் துறைகள், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | தீக்கள் கிளம்பின. | ... | ... |
| விமான மிறங்குமிடங்கள், வெடிமருந்து கிட்டங்கிகள் காஸ்ர் எலாரியிட் (Oasr El Aryid). | தீக்கள் கிளம்பின. | ... | 1 பைடர் விமானம். |
| மோட்டார் போக்குவரத்துகள்—கபுஸோ (Capuzzo) கோட்டைக் கருகாமையில். | அநேக வண்டிகள் சேதமாயின | ... | ... |
| விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள், டேர்ரு (Derna). | அநேக விமானங்கள் சேதமாயின. | ... | ... |
| விரோதி ஸ்தானங்கள் —கோண்டாரு (Gondar)க்குத் தென்பாகம். | ... | ... | ... |
| கப்பல்கள், துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | ... | ... | ... |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| விரோதி வியாபாரக் கப்பல்—மத்தியதரைக்கடல் (Mediterranean). | ... | நஷ்டமில்லை. | ... |

இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| ரசாயன தொழிற்சாலைகள்.—க்ரோடோன் (Crotone). | ... | ... | ... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 11 விமானங்கள். | 37 விமானங்கள். |

**23—10—41.** (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| பகலில்.—விரோதி விமான நிலயங்கள்-கலே (Calais). | ... | ... | ... |
| மற்றொரு விமான நிலயம்.—லானியான் (Lanion). | ... | நஷ்டமில்லை. | ... |
| இரவில்.—விரோதி துறைமுகங்கள், கப்பல் தளங்கள், கீல் (Kiel) ஹாம்பர்க் (Hamburg). | ... | ... | ... |
| கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest) செர்பர்க் (Cherbourg), லெஹாவர் (Le Havre). | ... | 2 விமானங்கள். | |

இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| நேபிள்ஸ் (Naples). | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன | ... | ... |

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **20—10—41.** (திங்கட்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| பகலில்.—யுத்த தளவாடமேற்றிச் செல்லும் ரயில்வண்டி, விரோதி சாமான் ஸப்ளை வண்டிகள், துருப்புகள் பீரங்கி ஸ்தானங்கள். | ... | ... | ... |
| தரையிலுள்ள விரோதி விமானங்கள்—வட பிரான்ஸி (France)ல். | ... | ... | ... |
| விரோதியின் காவல்புரியும் கப்பல்—பிரஞ்சு (French)க் கடற்கரைக் கப்பால். | ... | ... | ... |
| விரோதி ஸப்ளைக் கப்பல்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | ... | 2 விமானங்கள். | 1 விமானம். |
| விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| இரவில்—துறைமுகங்கள்—ப்ரெமன் (Bremen). | பலத்த சேதம். | ... | ... |
| வில்ஹெல்ம்ஷாவன், (Wilhelmshaven), எம்டன் (Emden). | ... | ... | ... |
| அநேக லக்ஷியங்கள்.—வட மேற்கு ஜெர்மனி (Germany)யிலும், ஆக்கிரமித்திருக்கும் பிரதேசத்திலும். | ... | 10 விமானங்கள். | ... |
| விரோதி கடல் விமானதளம், தொழிற்சாலை.—வட டென்மார்க் (Denmark). | கட்டடங்கள் தாக்கப்பட்டன; விமானங்கள் தீப்பற்றின. | ... | ... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| துறைமுகம்,—ரயில்பாதை மாறுமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| விரோதி வெடிமருந்து கிட்டங்கிகள்.—பார்டியா (Bardia)வுக்கருகாமையில் | தீக்கள் மூட்டப்பட்டன. | ... | ... |
| விரோதி ஸ்தானங்கள்.—அஸோஸா (Azozo) பிரதேசத்தில் அபிஸீனியா (Abyssinia). | தாக்கப்பட்டன. | நஷ்டமில்லை. | ... |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **20—10—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| காலாட்படை, பீரங்கிப்படை. | ... | ... | ... |
| விமான ஸ்தாபனங்கள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 7 விமானங்கள். | 20 விமானங்கள். |
| **21—10—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| பகலில்.—ஒரு எண்ணெய்க் கிணறு—ஆஸ்டெண்டு (Ostend)க்கருகாமையில். | தீப்பற்றியது. | ... | ... |
| சாமான் வண்டிகள், எண்ணெய் ஏற்றி வரும் வண்டிகள்.—அபிவில்லி (Abbiville) பிரதேசத்தில். | ... | ... | ... |
| விமானம் தங்குமிடங்கள், விமானநிலயங்களிலுள்ள ஜெர்மன் துருப்புகள்.—லெடோக்வட் (Letouquet). | ... | ... | ... |
| விமான எதிர்ப்பு பீரங்கிகள் உள்ள கப்பல்கள், துணை புரியப்பட்ட விரோதி காவல் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | இரண்டு கப்பல்கள் தாக்கப் பட்டன. | 3 பாம்பர் விமானங்கள். | ... |
| விமான எதிர்ப்பு.—பாஸ்-டி-கலே (Pas De Calais). | ... | 9 பைடர் விமானங்கள். | 13 பைடர் விமானங்கள். |
| இரவில்.—சிறு துறைமுகம்—ப்ரெமன் (Bremen). | ... | ... | ... |
| இதர லக்ஷியங்கள்.—வட மேற்கு ஜெர்மனி (Germany). | ... | ... | ... |
| கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest), லோரியண்ட் (Lorient). | ... | ... | ... |
| துறைமுகம், விரது, நிலக்கரி டிப்போக்கள்.—ஆர்ஹஸ் (Aarhus), வட டென்மார்க் (Denmark). | ... | ... | ... |
| விமான நிலயங்கள்.—லான்வியாக் (Lanveock). | ... | ... | ... |
| விரோதி விமான நிலயங்களில் விமான எதிர்ப்புகள்.—ஹாலந்து (Holland), வட பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**25—10—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகம், ஆராய்ச்சி விளக்குவைக்கும் ஸ்தானங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ... | ... | ... |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) | தீப்பற்றியது. | ... | ... |
| விரோதி கூடாரங்கள், குடிசைகள், பள்ளங்கள்—குராம்பா பிரதேசத்தில. | | 1 விமானம். | 2 விமானங்கள். |

### மால்டா (Malta).

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டை.—மால்டா (Malta) | ... | ... | 1 விமானம். |

### ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் பூராவும். | ... | 17 விமானங்கள். | 39 விமானங்கள். |

**26—10—41.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| காலையில்.-விரோதித் துணைக்கப்பல்கள் டெர்ஷிலிங் (Terschilling). | 2 கப்பல்கள் தாக்கப்பட்டன. | ... | ... |
| மற்றொரு துணைக்கப்பல்.—இஜ்மடன் (Ijmuiden). | 1 கப்பல் தீப்பற்றியது. | ... | ... |
| விமான எதிர்ப்புகள்.—வடபிரான்ஸ் (France). | ... | ... | ... |
| பிற்பகலில் விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch) கடற்கரைக்கப்பால். | ... | ... | ... |
| லக்ஷியங்கள்.—டீப்பே (Dieppe) செர்பர்க் (Cherbourg), ப்ரெஸ்ட் (Brest) பிரதேசங்கள். | ... | 2 விமானங்கள். | ... |
| இரவில்.—ஹாம்பர்க் (Hamburg) இதர லக்ஷியங்கள் மேற்கு ஜெர்மனி (Germany)யில். | ... | ... | ... |
| கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg). | ... | ... | ... |
| கப்பல் துறைகள், கப்பல்கள்.—தெற்கு நார்வே (Norway), மேற்கு பிரான்ஸி (France)லுள்ள நான்டிஸ் (Nantes). | ஒரு ஸப்ளைக் கப்பல் தீப்பற்றியது. | ... | ... |
| விரோதி விமான நிலயங்கள்.—வடபிரான்ஸ் (France). | ... | 4 பாம்பர் விமானங்கள். | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**26—10—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகம், பட்டணம்.—பெங்காஸி ((Benghazi). | ... | ... | ... |
| விமான எதிர்ப்பு, கடற்கரைப் பாதுகாப்பு பீரங்கிகள்.—பார்டியா (Bardia). | ... | ... | ... |
| வெடிமருந்து கிட்டங்கிகள்.—காம்பூத் (Gambat)துக் கருகாமையில். | தீப்பற்றியது. | ... | ... |
| கடற்கரை ரஸ்தாவில் மோட்டார் போக்குவரத்துகள்.-ஸர்டி (Sirte) வலைகுடா. | அநேக வண்டிகள் தாக்கப்பட்டன. | நஷ்டமில்லை. | ... |

### ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள் விரோதி பான்ஸர் துருப்புகள் விரோதி ஸ்தானங்கள்.—யுத்த அரங்கம் பூராவும். | ... | ... | ... |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**21—10—41.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain).

| | | | |
|---|---|---|---|
| இரவில்.-கடற்கரைப் பட்டணம்—தென் கிழக்கு இங்கிலாந்து (England). | வீடுகள் இடிக்கப்பட்டன; சிலர் கொல்லப்பட்டனர். | ... | ... |
| அநேக பட்டணங்கள்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம். | ... | ... |

### ருஷ்யா (Russia).

| | | | |
|---|---|---|---|
| மாஸ்கோ (Moscow). | ... | 17 விமானங்கள். | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—10—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

### ஸிஸிலி (Sicily).

| | | | | |
|---|---|---|---|---|
| | இருப்புப்பாதை, தொழிற்சாலை.—ராகுஸா (Ragusa). | ... | ... | ... |
| | மற்றொரு தொழிற்சாலை.—லிகடா (Licata). | ... | ... | ... |

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | | |
|---|---|---|---|---|
| | கப்பல்கள்.—மத்தியதரைக்கடலி (Mediterranean)ன் மத்தியில். | 2 கப்பல்கள் தாக்கப் பட்டன. | ... | ... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli), பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | மோட்டார் போக்குவரத்து, கூடாரங்கள்.—எகிப்து (Egypt)க்கும் லிபியா (Libya)வுக்கும் நடுவிலுள்ள எல்லைப் புறப் பிரதேசத்திற்கருகாமையில். | வெடிகளும் தீக்களும் கிளம்பின. | 1 விமானம். | ... |

### ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள் விமானச் சண்டைகள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 6 விமானங்கள். | 32 விமானங்கள். |
| **24—10—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | ... | 1 விமானம். | ... |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள் தொழிற்சாலைகள்.—ரைன்லாந்து (Rhineland), மேற்கு ஜெர்மனி (Germany)யில் ஏதோ ஒரு இடம். | ... | ... | ... |
| | கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest). | ... | ... | ... |
| | விரோதிக் கப்பல்கள்.—நார்வே (Norway), கடற்கரைக்கப்பாலும், பிரிஸியன் (Frisian) தீவுகளிலும். | ஒரு பெரிய ஸப்ளைக் கப்பல் தாக்கப்பட்டு தீப் பற்றியது. | 1 பாம்பர் விமானம். | ... |

### இதாலி (Italy)

| | | | | |
|---|---|---|---|---|
| | நேபிள்ஸ்—(Naples). | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **17—10—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | துறைமுகம், வண்டிகள் மாறுமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | வண்டிகள் மாறும் இடங்கள் அழிக்கப்பட்டன. | ... | ... |
| | போக்குவரத்து ரஸ்தாக்கள், கடைகள்.—ட்ரிபோலி (Tripoli). | ... | ... | ... |
| | ரஸ்தாவில் போக்குவரத்து.—ஸாயூரா (Zaura). | அநேக வண்டிகள் சேதமாயின. | 1 விமானம். | ... |
| | விமான நிலயம்.—ஸாயூரா (Zaura). | தரையிலுள்ள விமானம் சேதமாயிற்று. | | |

### ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் பூராவும். | ... | 16 விமானங்கள் | 35 விமானங்கள். |
| **25—10—41.** (சனிக்கிழமை). | | | | |

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—கால்வாயி(Channel)லும், வட பிரான்ஸி (France)லும் டச்சு (Dutch)க் கடற்கரையிலும். | ... | ... | ... |
| | ராணுவ லக்ஷியங்கள்.—செர்பர்க் (Cherbourg) தீபகற்பம். | ... | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| | இரவில்.—விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | ... | ... | ... |
| | கப்பல் துறைகள்.—லோரியண்ட் (Lorient), ப்ரெஸ்ட் (Brest). | ... | ... | ... |
| | துறைமுகம், விரகு, பெட்ரோல் கிடங்குகள்.—டென்மார்க் (Denmark)கிலுள்ள ஆர்ஹஸ். | ... | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **22—10—41.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.-அங்குமிங்கும் சில இடங்கள்.-வேல்ஸி (Wales)ன் வடபாகம், மெர்ஸிஸைட் (Merseyside). | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப் பட்டனர். | 3 பாம்பர் விமானங்கள். | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | சேதமில்லை; ஒருவன் கொல்லப் பட்டான். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 24 விமானங்கள். | ... |
| **23—10—41.** (விபாழக்கிழமை) | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—ஒரு இடம்-வட ஸ்காத்லாந்து (Scotland). | சேதமில்லை; உயிர்ச்சேதமும் இல்லை. | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | 4 விமானங்கள். |
| **24—10—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்து (England) மேற்கு, தென் மேற்கு பாகங்கள். | சொற்பச் சேதம். | 1 விமானம். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 17 விமானங்கள். | ... |
| | **அபிஸீனியா (Abyssinia).** | | | |
| | விமானச்சண்டை.—டாபாஸ் (Dabas)க் கருகாமையில். | ... | 1 விமானம். | ... |
| **25—10—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—அங்குமிங்கும், தூக்குதூக்காய் உள்ள சில இடங்கள்.—வடமேற்கு இங்கிலாந்து (England). | சொற்ப உயிர்ச் சேதம். | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—10—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 14 விமானங்கள். | ... |
| **26—10—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—சில இடங்கள்.—தென் மேற்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| **27—10—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—இங்கிலாந்து (England) கிழக்குக்கரை. | ... | ... | 2 விமானங்கள். |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | ... | ... | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 8 விமானங்கள். | ... |

---

# யுத்தக் குறிப்புகள்.

**பிரிடன் ஐரோப்பாவில் படையெடுக்கவேண்டுமா?** இவ்விஷயத்தைப்பற்றி சென்ற வாரத்திலெ யங்கத்தில் ஒரு வியாசம் பிரசுரித்திருக்கிறோம். ஆகஸ்டு 23-ம் தேதி பிரசுரிக்கப்பட்ட "நியூ ஸ்டேட்ஸ்மன் அண்டு நேஷன்," என்ற பத்திரிகையில் அதன் ராணுவ நிருபர் கொடுத்துள்ள விஷயம் தற்சமயம் பிரசுரிக்கப்படுகிறது. இந்தப் பிரச்னைக்கு அது பொருத்தமானதால் வியாக்கியானமில்லாமலேயே இங்கே அச்சிடுகிறோம்.

"வரும் மாரிகாலம் பூரா, ருஷ்யா எதிர்த்து நிற்குமென்று மிஸ்டர் ரூஸ்வெல்டு நிச்சயமாக நினைக்கிறார். மிஸ்டர் சர்ச்சிலுடன் அவர் கலந்து பேசியதின் பயனாக ஆங்கில-அமெரிக்கத் தொழிலின் ஐகமத்தியத்தினால் விளைவுபொருள்களும், விமானங்களும், யுத்தசாமான்களும் கப்பல்களில் ஏற்றி துரிதமாக ருஷ்யாவுக்கு அனுப்பப்படும். இருந்தாலும் சாமான்களின் உதவி மாத்திரம் போதுமா என்ற பிரச்னையையும் நிவர்த்திக்க வேண்டியதுதான். 1942–43-ல் நாம் வெற்றியடைய விரும்பினால்—ஜெர்மனியின் பெரும்பாகமான சேனை கிழக்கே "ஈடுபட்டிருப்பதால்" அதன் மேற்கு பாகத்தில நாம் தாக்கி ஜெர்மனியின் சைனியத்தை மேற்கிலும் தற்காப்பு செய்துகொள்ளும்படி நாம் செய்யக்கூடாதா? என்ற பிரச்னை இருக்கிறது.

1941-ம்௵ ஜூன்௴ 22உக்கு முன்பு அச்சநாட்டிற்கும் அத்துடன் சேர்ந்த நாடுகளுக்கும் சேர்ந்து ஐரோப்பாவில் 350 பகுதிகள்தான் யுத்தத்தில் அனுப்பமுடிந்தது. இதுவே மிகவும் குறைவுதான். இதில் ருஷ்ய யுத்தத்தில் 50 பகுதிகள் நாசமாயின. இன்னும் சேதமாகக்கூடியதையும் தள்ளுபடிசெய்து 1942-ல் நார்வே முதல் கருங்கடல்வரையுள்ள "ஜெர்மன் ஐரோப்பாவை" 250 பகுதிகளைக்கொண்டுதான் தற்காப்பு செய்துகொள்ளமுடியும். இவைகளை ஒரே இடத்தில் வைக்கமுடியாமல் பல இடங்களில்தான் நிறுத்த நேரும். நல்ல காலத்திற்கு அனுகுணமாக அடுத்தகோடையில் எதிரியின் 100 முதல் 150 பகுதிகள் ருஷ்யாவிலேயே ஈடுபடும்படியிருக்கும். ஆகவே மீதி இருக்கும் 50 முதல் 100 பகுதிகளைக்கொண்டுதான் மேற்கே ஏற்படும் படையெடுப்பை ஜெர்மனி தடுக்கநேரிடும். ஆனதால் ஐரோப்பாபேரில் படையெடுப்பைச் செய்யலாமென்றும், ஜெர்மனிக்கு விரோதம் பலமாக இருக்கும் நாடுகளிலும் தாக்கலாமென்றும் சொல்லக்கூடிய பிரச்னை இருக்கத்தான் இருக்கிறது. இதற்காக பிரிடனும் தனது சாமான் உற்பத்திக்குக் கெடுதலில்லாமல் சேகரம் செய்யக்கூடிய சைனியத்தைக்கொண்டு செல்லலாமென்றும் சொல்லலாம்.

ஐரோப்பாவிற்கு அனுப்பக்கூடிய பிரிடனின் பாதுகாப்புப்படையின் பலம் ஒரு ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் (விமானப் பாதுகாப்பு உள்பட) அதிகமாக பாதுகாப்புப்படை இங்கிலாந்திலேயே இருக்கவேண்டி இருக்கிறது. மத்தியக்கிழக்கு நாடுகளில் பெரும் சைனியம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எவ்வளவு ருஷ்ய உதவி இருந்தாலும் அச்சநாட்டின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாக தரையில் சேகரம் செய்யமுடியாது. பலவழிகளில் உபரியாக விருத்திசெய்ய முடிந்தாலும், சாமான்களின் உற்பத்தியைத் தடைசெய்யாமல், இவர்களைக்கொண்டு படையெடுக்கமுடியாது.

இருந்தாலும் அச்சநாட்டினரை தரையில் தோற்கடிக்க முடியாது என்பது அல்ல. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், அமெரிக்கச் சைனியம் வருவதுடன், நாம் கடல், விமான பலம்பெற்று எதிரியைத் தோற்கடிக்கும்படியான நோக்கத்தைக் கொள்ளவேண்டும். 1916—18-போல் நிலைகளை ஸ்தாபிக்க முடியுமென்று நினைக்கக்கூடாது. இதற்காக விமானப் படையெடுப்புகளை விருத்தி செய்து எதிரியின் சைனியங்கள் கலைந்து, புதுதிட்டம் முறியும்வரை சைனியத்தை உபயோகிக்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பமாக, சிலமாதங்களுக்குமுன் எகிப்தில் ஜெனரல் ஆகின்லக் ஏதோசொன்னதை விவரிக்கும்பொழுது நாம் சொன்னதாக ஞாபகம். நாம் சண்டையை ஜயிக்கவேண்டுமென்றால் அமெரிக்காவிலிருந்து மனித உதவி தேவையாக இருக்குமென்று அவர் சொன்னது உடனேயிருக்கும் தேவையைப் பற்றி அல்ல. ஏனென்றால், சாமான் உற்பத்தியில் தடையேற்படும். முன் கொடுத்திருக்கும் விவரத்திலிருந்து ஜெனரல் சொன்னதும் சரிதான் என்று தெரியும். நம்முடைய எச்சரிக்கை சில மாதங்களுக்கு முன்பே செய்யப்பட்டது. அதன் பிறகு அமெரிக்காவும் யுத்த முயற்சியில் பூரா ஈடுபட்டுவிட்டது. ஆகையால் சண்டைக்கோ, தொழிற்சாலைக்கோ ஆட்கள் தேவையானால் தன்னிடமுள்ளவர்களை நிச்சயம் கொடுக்கும். ஏனென்றால் அதன் வசம் ஏராளமாக இருக்கிறது.

வி வி வி வி வி வி

**டிமோஷன்கோ.** இப்பத்திரிகையை வாசிப்போர், இதில் விரோதமான அபிப்பிராயங்கள் கொடுக்கிறோமென்றாவது, மனதிற்குத் திருப்திகரமான செய்திகளை மாத்திரம் பொறுக்கி அச்சிடுகிறோமென்றாவது நினைப்புக் கொள்ளவேண்டாம். ஆகையால் பின்வரும் செய்திகளை எதிர்ப்பார்த்து அனாவசியமாக மனம் தளர வேண்டியதில்லை. ருஷ்யாவின் நடுபாகத்திலுள்ள சேனைகள், எதிரியால் வெறும் பொட்டல் வெளிகளில் தாக்கப்படுவதால் மறுகிச்செல்லும் சாமர்த்தியத்தை இழந்த



மாஸ்கோவின் நகரப் பாதுகாப்பில் ஈடுபடவேண்டியிருக்கிறது. வியாஸ்மா, பிரயான்ஸ்க் போன்ற கடும் யுத்தரங்கங்களிலிருந்து கழட்டிச் செல்லும்போது ஏராளமாகத்தான் மனிதர்களும் சாமான்களும் ருஷ்யர்களுக்குச் சேதம். (நோர்டி), கார்கவ்விலிருந்தும், லெனின்கிராட்டிலிருந்தும் மாஸ்கோவிற்குப் போக்குவரவு தடைபட்டிருக்கிறது. மாஸ்கோவில் உள்ள தொழிற்சாலைகள் வேலை செய்யாததால் அங்கிருந்து யந்திரங்களும், யந்திர சாமான்களும் அனுப்ப முடியாததால் யூரல் மலைச்சாரலில் உள்ள பெரும் தொழிற்சாலைகள் வேலை செய்யமுடியாது. இவைகள் மனவருத்தத்தை உண்டுபண்ணத்தான் செய்யும். ஆனால்......... "டிமோஷன்கோ" இருக்கும் வரை கொஞ்சமும் கவலையில்லை. அதனால் தான் அவர் பெயர் முதலில் குறிக்கப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி

**மறுபடியும் டிமோஷன்கோ.** பல மைல்கள் பின்வாங்கினாலும் ருஷ்யச் சைனியம் எதிர்த்து நிற்கும்வரை எதிரியின் முன்னேற்றம் கொஞ்சம் குறையத்தான் வேண்டும். ருஷ்ய எதிர்ப்பு பலமாக ஆக, எதிரியின் போக்குவரவு நின்றுவிடும். அதனால்தான் நான்காம் தடவையாக ஏற்பட்ட ஜெர்மன் எதிர்ப்பு மிகவும் கடுமையாக இருக்கிறது. அரங்கத்தில் ருஷ்யச்சேனை சரண் அடைவதை விரும்புவதுபோல், மாஸ்கோ, லெனின்கிராட், பாகு, முதலியவை வசமாவதை ஹிட்லர் விரும்பவில்லை. ஆகவே ஜெர்மானியர்களையோ, ருமேனியர்களையோ, இதாலியர்களையே ஒன்று திரட்டி கலைபடாமல் நிற்கும் ருஷ்யச் சேனையைத் தொலைக்கப்பார்க்கிறான்.

இதுவரை ஜெர்மானியர்களுக்கு சேதம் விளைவித்ததும், இனி விளைவிக்கக் கூடியவரும் மார்ஷல் டிமோஷன்கோ தான். அவர்தான் ஜெர்மனியின் நேர்த்தியான யந்திரப்படையை ஸ்மாலென்ஸ்கிலிருந்து மாஸ்கோவரை எதிர்த்து நின்றார். ருஷ்யச் சேனையின் தலைமையை வகித்து நின்றதால்தான் லெனின் கிராட், கீவ் முதலிய இடங்களில் எதிரிக்குச் சிரமம் ஏற்பட்டது. யுத்தரங்கத்தில் கலையாமல் நின்று இப்பொழுது மாஸ்கோவிற்கு மேற்கே புதிதாக பலமான உதவிப்படை சேகரித்துக்கொண்டு ஆபத்துள்ள இடங்களுக்கு போகிறார். சென்ற இடங்களில் எல்லாம் நீண்டகால யுத்தத்தில் தோற்கடிப்பது என்ற முறையைக் கையாண்டு ஜெர்மானியருக்கு வசப்படாமல் தீவிரமாயும், தைரியமாயும், எதிர்த்து நிற்பார் என்று நம்பலாம். பிரதேச நஷ்டத்தையும் தொழிற்சாலை தேசத்தையும் இதில் கவனிக்கமுடியாது.

ஆகையால் மார்ஷல் டிமோஷன்கோவைப்பற்றி ஹிட்லர் நல்ல அபிப் பிராயம் கொள்ளமுடியாததுதான்.

வி வி வி வி வி வி

**நேசதேசங்கள் செய்யவேண்டிய வேலை.** இம்மாதிரி சிறிய அளவில் நடந்த உள்நாட்டுக்கலகத்தில் ஸ்பெயினின் தலை நகரான மாட்ரிட் எதிரியின் வசப்படவில்லை. ஆகையால் மாஸ்கோவும் எதிரிவசமாகாதென்றே சொல்லலாம். அப்படி வசப்படாவிட்டால் நாம் முன் சொன்னதற்கு மாறுபாடாக ஜெர்மனிக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும். அவ்விதம் வசப்பட்டால் பட்டணத்தைக் காலிசெய்துவிட்டு ருஷ்யப் படை கலைபடாமல் கிழக்கு நோக்கிச் செல்லவேண்டும். அப்பொழுது என்ன நேரிடுமென்று பார்ப்போம். இப்பொழுது இருப்பதைவிட அதிகமாக ருஷ்யாவின் நிலை கெட்டுவிடுமா? கெடாது. போக்குவரவு சாதனங்கள் கொஞ்சம் தடைபட்டதாலும், முக்கியமான தொழிற்சாலை பிரதேசங்கள் யுத்த அரங்கங்களாக மாறியதாலும் மாஸ்கோவின் நிலை கொஞ்சம் மாறியிருக்கிறது. மேலும் வெகுநாளாக வேலைத் திறமையுள்ளவர்களும், இஞ்ஜினியர்களும் மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு, யூரல பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளைப் பலப்படுத்த

போயிருக்கிறார்கள். இதனால் நீண்டகால யுத்தத்திற்கு உதவி ஏற்ப இருந்தாலும் பாக்கியுள்ள யூக்ரேன் பிரதேசம் எதிரி வசமானால் ருஷ்யாவுக்கு விளைபொருள்கள் கிடைக்காமல் நிச்சயமாக சிரமம் ஏற்படும். ஆகையால் நேச தேசங்கள் வேண்டிய உதவியைக் கொடுத்து மீதியுள்ள ருஷ்யச் சேனையை மாரி காலத்திற்குப் பிறகு யுத்தத்தை நடத்தி வெற்றி பெறும்படி செய்யவேண்டும். ருஷ்யாவின் கிழக்கிலுள்ள தொழிற்சாலைகளோடும் பிரிடன், அமெரிக்கா இரண்டும் சேர்ந்து இப்பொழுது தேவையாயிருக்கும் ஸப்ளைகளைச் செய்தால் மாரிகாலம் வரும்வரை சில வாரங்கள் ருஷ்யர்கள் சமாளித்து வருவார்கள். இருந்தாலும் வரும் சரத் காலத்தில் பிரமாதமகச் சண்டை செய்யவேண்டு மென்றால் அமெரிக்காவும், பிரிடனும் அதிகமாக உதவி புரியவேண்டும். இவ் விதம் உதவியளிப்பதைப் பற்றி ருஷ்யர்களுக்கும், லார்டு பீவர்புருக், மிஸ்டர் ஹாரிமன் இவர்களுக்கும் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஏனென்றால் இனி செய்ய வேண்டியதைப்பற்றி இவர்கள் திட்டம் செய்துவிட்டார்கள். பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம், அமெரிக்கா இவைகளுடைய கௌரவத்தை அடமானம் செய்து உதவியளிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். "ருஷ்யாவுக்கு சாமான்கள் அனுப்ப கப்பல்கள் தேவையானால், வெளிநாட்டிலிருந்து சப்பல்களில் வந்திறங்கும் உணவுப் பொருள்களை இழந்தாவது அக்கப்பல்களில் அனுப்புவோம். ருஷ்யப் பட்டணங்களைப் பாதுகாக்க யுத்த தளவாடங்கள் தேவையாயிருந்தால் எங்கள் ஓய்வு நேரங்களில் அவைகளைத் தயாரித்து அனுப்புவோம் .......ஆனால் யுத்தத் திற்கு வேண்டிய உதவியைப் பெற்று சரத் காலத்தில் யுத்தத்தை, ருஷ்யர்கள் தொடங்கும்படி செய்யவேண்டும்........இவைகள்தான் ஸ்டாலினுக்கு மாஸ்கோ வில் நாங்கள் கொடுத்த வாக்குறுதிகள். இவ்விதம் நாங்கள் ஏற்றுக் கொண்டதைச் செய்து முடிப்போம்", என்று லார்டு பீவர்புருக் சொன்னார்.

இவை சாதிக்க முடியாத விஷயத்தைப்பற்றிய எண்ணங்கள் அல்ல. நிலையை அறிந்தவர்களால் அவசியமாகச் செய்யப்படவேண்டிய அறிக்கையைத் தான் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலை இவ்விதமிருக்கும்பொழுது முன்னைவிட அதிகமாக யுத்த பயம் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்தியாவிலுள்ளோர் யுத்த முயற்சியை தடுத்துப்பேசுவது கேவலமான காரியமல்லவா? ருஷ்யாவுக்கு உதவுவது அவசியமென்று அவர்கள் நினைக்காவிட்டாலும், தன் நாட்டிற்கு வந்திருக்கும் ஆபத்தைக் கண்டும், யுத்தம் பரவிவரும் பிரதேசத்தைப் பார்த்தும், ரேடியோ, பத்திரிகைகள் இவைகளிலிருந்தும் யுத்தத்திற்கு உதவுவது அவசியமென்று தெரிந்துகொள்ளவேண்டும்!

**"சொற்ப காலம் வரைதான் எல்லோரையும் ஏமாற்றமுடியும்......"**

ருஷ்ய யுத்தம் ஆரம்பித்தது முதல் பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியில் விளைவிக்கும் சேதத்தைப்பற்றி தன் நாட்டினரை ஏமாற்றிவிடலாமென்று டாக்டர் கோயபல்ஸ் நினைக்கிறான். ஆகையால், ருஷ்யாவுக்குக் கொடுப்பதாகச் சொல்லும் பிரிடிஷ் உதவி வீண்ஜம்பமென்றும் ஜெர்மனியில் செய்யும் பிரிடிஷ் விமானப்படையெடுப்பைப் பற்றி கொசுக்கடியைப்போல் ஒருவரும் கவனிக்கவில்லையென்றும், லுப்ட்வாபி அதைத்தடுத்து வருகிறதென்றும், ஜெர்மனியில் இரண்டு தொழிற்சாலைகள், ஒரு ரயில்வே ஸ்டேஷன், இரண்டு ஜங்ஷன்களும், பனிரெண்டு நாஸி விமானங்களும் ஆகிய இவைகள் தான் சேதமென்றும், "லக்ஷியங்களை அடைய பிரிடிஷ் விமானங்கள் முயற்சி செய்தன" என்றும் பிரதிதினமும் சொல்லிவருகிறான். ஆனால் அதே சமயத்தில் பிரிடிஷ்காரர்கள், லுப்ட்வாபி படையெடுப்பினால் நடுங்குகிறார்கள் என்றும் உத்ஸாகமாக வர்ணிக்கிறான் (லுப்ட்வாபி இருக்கிற இடமே தெரிய வில்லை). ஜெர்மன் விமான நஷ்டத்தை ஒரு பொழுதும் பிரசுரிப்பதில்லை. (மிகவும் அதிகமாக நஷ்டமேற்பட்டிருந்தால் அவையாவும் பிரிடிஷாருடைய நஷ்டமென்று சொல்லிவிடுகிறான்!)



"ஆனால் எல்லோரையும், எப்பொழுதும் ஏமாற்ற முடியாது." கோயரிங் இதில் ஏமாறவில்லை! ஏனெனில் ருஷ்யர்களுக்கு எதிராக ஒவ்வொரு விதமான எதிர்ப்பைச் செய்யும்பொழுது பிரிடிஷ் விமானப்படையெடுப்பைத் தடுப்பதற்காக தன்னுடைய பாதி விமான பலத்தை மேற்கே வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது! ஜூன் 22 முதல் அக்டோபர் 15 வரை லுப்ட்வாபிக்கு 739 விமானங்கள் நஷ்டமென்று அவனுக்குத் தெரியும். இதில் (87 சதவிகிதம்) 644 பைடர் விமானங்கள், ருஷ்ய யுத்த ஆரம்பம் முதல் பிரிடிஷ் விமானங்கள், சண்டையில் ஈடுபட்ட ஜெர்மன் விமானங்களை 6 சதவிகிதத்திற்கு அதிகமாகவே நாசம் செய்திருக்கின்றனவென்று குறைந்த பக்ஷமாகச் சொல்லலாம்.

பாதுகாப்பு முறையிலேயே. ஏராளமாக ஜெர்மன் விமானிகள் நாசமானதை அறிந்த கோயரிங்குக்கு டாக்டர் கோயபல்ஸ் மாறுபாடான விஷயத்தை எடுத்துரைக்க முடியாதுதான்!

வி வி வி வி வி

**'வி' வெற்றிச்சின்னமுள்ள டயரி.**

யுத்த நிதிக்கு புதுவிதமாக உதவ, 1942-ம் வருஷத்திய, குறிப்பு புஸ்தகமுமான டயரியை பிரசுரிப்பதென்று யுத்த அறிக்கை நிலயத்தில் தீர்மானித்தபடி அச்சாபீஸில் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இச்சிறு புஸ்தகம் மனதைக் கவருகிறது. இதில் 40 பக்கங்களில் யுத்தத்தைப் பற்றியும், யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகளைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஒரு பக்கத்திற்கு இரண்டு வீதம் உள்ள தேதிகளில் அந்தந்த தேதிகளில் யுத்த காலத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதன் முதல் பக்கத்தில் சமீபத்தில் எடுக்கப்பட்ட மாட்சி தங்கிய நமது மன்னர்பிரான் அவர்களின் அழகிய போட்டோ படம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரின் சொந்த உபயோகத்திற்கும், புதுவருஷ ஆரம்பத்தில் பிறருக்கு அனுப்புவதற்கும் தகுதியுள்ளது. இதை வாங்குவதினால் யுத்த முயற்சிக்கு நேரே உதவுவதாகத் திருப்தியடையலாம். ஏனென்றால் மாட்சி தங்கிய மன்னர்பிரான் அபிப்ராயப்படி இதனால் கிடைக்கும் பூரா லாபமும் யுத்த நிதியைச்சேரும்.

இவ்வறிக்கை பிரசுரமாகும் தினத்தன்றே நமது நிலய ஆபீஸிலும், அச்சாபீஸிலும் விலைக்குக்கிடைக்கும்.

கித்தான் பைண்டு ரூ 1—4—0, நீலத்தோல் பைண்டு ரூ 1—8—0, உயர்ந்த மொராகோ தோல் பைண்டு ரூ 2—0—0.

---

## ஆப்கனிஸ்தானத்தைப்பற்றிய கேள்விகளும், விடைகளும்.

---

**(i) ஆப்கன் அரசாங்கம் அச்சு நாட்டினரை நேசத்தை விட்டகலும்படி ஏன் உத்தரவிட்டார்கள்?**

லண்டனிலிருந்தும், மாஸ்கோவிலிருந்தும் நல்ல எண்ணத்துடன் சொல்லப் பட்டவைகளுக்கு சிநேகமுறையில் காபூல் இணங்கிற்று.

**(ii) இங்கிலீஷ்காரர்களும், ருஷ்யர்களும் ஏன் இந்த வேண்டுகோளை விடுத்தார்கள்?**

இரானில் ஏற்பட்டிருப்பதைப்போல அச்சு நாட்டு யந்திர வேலைக்காரர்கள் அச்சு நாட்டில் இருப்பது, இந்தியாவுக்கும், மத்திய கிழக்குப்பாகங்களின் பாதுகாப்பிற்கும் மேலும் அவர்களை ஆதரித்து வந்த நாட்டிற்கும் மறைமுகமாக அபாயம் ஏற்படலாம் என்ற பயம் அங்கு ஏற்பட்டதினால் தான்.

### (iii) ஆப்கனிஸ்தானம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை எதைக்குறிக்கிறது?

இது ஐந்தாம் படையின் பலத்தினால் அபாயம் ஏற்படுமென்று காபூல் அரசாங்கம் உணர்ந்திருப்பதாகக் குறிக்கிறது.

இரானில் அச்சு நாடுகளின் பிரதிநிதிகள் ஆயிரக்கணக்காக இருந்தார்கள். அவ்விதமிருந்தது அக்கம் பக்கத்தார்களுக்கு மட்டுமல்ல, தன் ஜனங்களுக்குக்கூட அபாயம் உடனே உண்டாகும். ஆப்கனிஸ்தானத்தில் அச்சுநாட்டினர் நூற்றுக் கணக்காகத்தான் இருந்தனர். அதனால் இரானில் பழைய மன்னர் நடத்தைக்கும், ஆப்கனிஸ்தானம் காட்டிய சாமர்த்தியத்திற்கும் ஒன்றுக்கொன்று எதிர்பாடாக இருக்கிறது.

### (iv) ஆப்கனிஸ்தானத்தில் அச்சு நாடுகளின் நடவடிக்கை இந்தியாவை எவ்விதம் பாதிக்கும்?

காஸ்பியன் கடலிலிருந்து 500 மைலுக்கப்பாலும் காகேஸஸிலிருந்து 800 மைலுக்கு அப்பாலும் ஹீராட் இருக்கிறது. கிழக்குப் போர்முனையின் தென் பாகத்தில் காஸ்பியன், காகேஸஸ் இவ்விரண்டும் தான் ஜெர்மானியர்களின் தாக்குதல்களுக்கு முக்கிய கேந்திரங்களாக விளங்குகின்றன.

ஆப்கனிஸ்தானத்திலிருக்கச் செய்திருக்கிற பிரதிநிதிகளின் சகாய வேலைகளினால் ஒரு பாதை ஏற்படும். அதன் வழியாக ஹிட்லரின் சைனியங்கள் இரான் இராக், ஸிரியா இந்த இடங்களில் வெளிப்பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருக்கும் நேசதேசப்படைகளை பக்கங்களிலிருந்து தாக்கி கைபர் கணவாய் வரை தள்ளி வரக்கூடும்.

சமீபக் கிழக்கில் சீக்கிரத்தில் யுத்தம் துடங்கும். அங்கு நடக்கும் போரில் இந்தியா பிரதான தளமாகக் கருதப்பட்டு அங்கிருந்து யுத்த அரங்கத்திற்கு சாமான்கள் ஸப்ளை செய்யப்படும். ஆப்கனிஸ்தானத்திலுள்ள விமான நிலயங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் ஸப்ளைகள் வரும் இடங்களை எதிரிகள் வெடிகுண்டுகளால் தாக்க மிகவும் எளிது. அதன் பயனாக காகேஸஸ் போர்முனையிலுள்ள நேசதேசப்படைகளுக்கு இருப்பதற்கே பெருத்த ஆபத்து ஏற்பட்டுவிடும்.

### (v) ஆப்கனிஸ்தானத்தின் தற்கால நிலை என்ன?

ஆப்கனிஸ்தானம் முற்றிலும் நடுநிலை வகிக்கிறது. இப்பொழுது அது எடுத்துக்கொண்ட நடவடிக்கை அச்சுநாடுகளின் நேசதேசத்தார்களுடனாவது அல்லது வேறு எந்த தேசத்தினருடனாவது அதற்குள்ள சாதாரண ராஜீய பாந்தவ்யங்களுக்கு யாதொரு குறைவும் ஏற்படும்படி நடந்து கொள்ளவில்லை.

### (vi) வெளிக்கடத்தப்பட்ட அச்சு நாட்டினர்களை என்ன செய்வது?

கிழக்கு ராஜ்ஜியங்களின் புராதன ஆதரிப்பை ஒத்தும், ஆப்கனிஸ்தானம் நடுநிலைமையாக இருப்பதின் கௌரவத்திற்கு அறிகுறியாக, அவர்கள் ஐரோப்பாவில் அவரவர்கள் தாய்நாட்டிற்கு அனுப்பப்படுவார்கள்.

## உணவுப் பிரச்னை.

சமீபத்தில் பிரிட்டிஷ் விவசாய இலாகா மந்திரி ஆர். எஸ். ஹட்ஸன் பேசியதிலிருந்து கீழே சில குறிப்புகள் கண்டிருக்கின்றன.

**டென்மார்க்கில்.**—மாசக் கணக்காக குடியானவர்களுக்கு உணவு இல்லை. யுத்தம் முடியும்வரை அது கிடைக்க அறிகுறியுமில்லை. சென்ற மாரிகால முடிவில் ஆடுமாடுகள் மிகவும் பலஹீனமாக இருந்தன. பில்லை மேய அவிழ்த்து விட்டால் அவைகளால் நிற்கக்கூட முடியாது.



**ஹாலந்தில்.**—குடியானவர்களுக்கு போதுமான உரம் கிடைக்கவில்லை. சாதாரண காலங்களில் அவர்களிடம் இருக்கக்கூடிய உப்புகளும், உப்பு வாயுவும் முறையே 10 சதவிகிதமும், 70 சதவிகிதமும் குறைவாக இப்பொழுது அவர்களிடம் இருந்து வருகிறது.

**பெல்ஜியத்தில்.**—உணவுக் குறைவு மிகவும் கொடுமையை விளைவித்திருக்கிறது. சென்ற சரத் காலத்தில் நிலங்களில் பாவியிருந்த விதை உருளைக்கிழங்குகளைப் பட்டினியாயிருந்த கிராமவாசிகள் இரவிலேயே தோண்டி பெடுத்து விட்டார்கள். உருளைக்கிழங்கு தோலியைக்கொண்டு பெல்ஜியக் குழந்தைகள் தங்களுக்கு உணவு தயாரிக்க வேண்டியிருக்கிறதென்றும், வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டவூர் பிரதேசத்திலிருந்து வெளிக்கடத்தப்பட்ட ஜெர்மானியர்களுக்கு பெல்ஜியர்களுக்குள்ள உணவு திட்டத்தைப்போல் இரண்டு பங்கும், அங்கு வியாபித்திருக்கும் ஜெர்மன் சிப்பாய்களுக்கு நாலு பங்குமாக கொடுத்துவருகிறார்களென்றும் தெரியவருகிறது.

**பிரிடனில்.**—பன்றிகள், ஆடுகள் இவைகளின் மொத்த எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. கோழி முதலிய ஜந்துக்களின் மொத்தத்திலும் கொஞ்சம் குறைவு ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்திற்கு முன்னிருந்த ஆடுமாடுகளில் எண்ணிக்கைகள் எவ்வளவு அதிகமாக இருந்ததோ அதைப்போல இப்பொழுதும் இருக்கிறன. பால் தரும் ஆடுமாடுகளின் எண்ணிக்கை கொஞ்சம் அதிகரித்திருக்கிறது.

வரப்போகும் மாரிகாலத்தில் அங்குள்ள பிராணிகளைப் போஷிப்பதற்கு வேண்டிய பொருள்களை உள்நாட்டிலேயே விளைவித்து ஏராளமாகச் சேமித்து வைத்திருப்பதாகத் தெரிகிறது.

கோதுமை, சக்கரை, இன்னும் இதர உணவுப் பொருள்கள் யுத்த ஆரம்ப காலத்தில் இருந்ததைவிட இன்னும் அதிகமாகவே பிரிடன் வசமிருக்கிறது.

ஐக்கிய அரசாங்கத்தில் 1,60,00,000 ஏகர் விஸ்தீர்ணமுள்ள நிலங்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றன. அவைகளில் கிடைக்கும் மொத்த வருமானம் சென்ற அநேக வருஷங்களாகக் கிடைத்து வந்ததைவிட பன்மடங்கு அதிகமாகவே இருக்கிறது.

உள்நாட்டில் உற்பத்தி அதிகரித்து வருவதில் உணவுப்பொருள்களின் இறக்குமதி வரவர குறைந்து கொண்டேவருகிறது.

பிரிடிஷ் மக்கள் அனாவசியமான ஆடம்பரங்களைச் சிக்கனம் செய்தும் தங்களுக்கு வேண்டிய அவசியமான உணவுப்பொருள்களை உள்நாட்டில் உற்பத்திசெய்தும் வருகிறார்கள்.

இப்பொழுது ருஷ்யாவிற்கு யுத்த தளவாடங்களும், விளைபொருள்களும் கொண்டு செல்ல கப்பல்களின் முதல் தேவையாக இருக்கிறது. பிரிடிஷ் மக்கள் தங்கள் வயிற்றுப்பாட்டைவிட இதை முக்கியமாகக் கருதுகிறார்கள். "ருஷ்யாவிற்குக் கப்பல்கள் தேவையானால் அயல்நாட்டிலிருந்து வரும் உணவுப் பொருள்களைக் கொண்டுவருவதை விட்டுவிடுவோம். அவர்கள் நகரங்களைப் பாதுகாக்க யுத்த தளவாடங்கள் தேவையானால் நமக்குள்ள ஓய்வு நேரத்திலும் வேலைபார்ப்போம். அவர்களுக்கு ஏற்பட்ட துக்கத்தை நாமும்கூட சகிப்போம். அவர்களுடைய கஷ்டத்தை நாமும் பங்கிட்டுக் கொள்வோம்" என்று பீவர்புரூக் சொன்னார்.

# துருக்கியின் அபிப்பிராயம்.

(இஸ்தான்புல்லில் உள்ள "கும்ஹூரியட்" என்ற 11—9—41ட பத்திரிகையில் இருந்து எடுக்கப்பட்டது).

அபிடின்டேவர் எழுதியது.

## அது உண்மையானால்.

யுத்தம் நடக்கும் சிலநாடுகளில் என்னை ஒலிபரப்பும் இலாகாத் தலைவனாகச் செய்தால், உள்நாட்டிற்குரியது வெளிநாட்டிற்கு அனுப்பவேண்டியது என்று பிரசாரத்தை இருபிரிவாக முதலில் பிரிப்பேன். ஏனென்றால் எங்கிருந்து இப்பிரசாரம் வருகிறதோ அந்நாட்டில் இருப்போர், யுத்தத்தில் அடைந்துள்ள வெற்றிகளையும், செய்திகளையும் எளிதில் நம்புவார்கள். ஆனால் வெளிநாட்டில் உள்ளோருக்கு உண்மை தெரியுமாதலால் அதைக்கேட்டு பரிஹாசம் செய்வார்கள். அதனால் கெடுதல்தான் விளையும். இதற்காக வெளிநாட்டிலிருந்து செய்திகள் உள்ளேவராமல் இருக்க பிரசாரத்தடையை, ஏற்படுத்தியும், அயல்நாட்டு ரேடியோக்களைக் கேட்கக்கூடாதென்று தடுத்தும் செய்வதால் அந்நாட்டில் உள்ள ஜனங்கள் கொஞ்சம் பரபரப்பில்லாமல் இருக்கமுடியும். நடுநிலை நாடுகளிலோவெனில் சண்டையிலீடுபட்ட எல்லா நாட்டின் அறிக்கைகளைப் படிக்கவும், செய்திகளை அறியவும், ரேடியோக்களைக் கேட்கவும் முடியுமாதலால் பிரசாரம் செய்வோரின் எண்ணத்திற்கு மாறுபாடான முடிவுதான் இங்கே ஏற்படும்.

இதை ஸ்திரப்படுத்தக்கூடிய செய்திகளை, பத்திரிகைகளிலும், ரேடியோவிலும் பார்க்கலாம். ரேடியோவில் ஒலிபரப்பும் செய்திகள் ஸ்திரமான யாதாஸ்துகளில்லாததால் கண்டபடியெல்லாம் சொல்லப்படுகிறது. சாமர்த்தியமாகவும், உண்மையையே ஒலிபரப்புவதாகச் சொல்லும் பிரசாரங்களிலும் இப்பிசகு காணப்படுகிறது.

நடப்பை மீறிச்செய்யும் பிரசாரத்திற்கு உதாரணமாக சில நாட்களுக்கு முன், பிரிடிஷ் கப்பல்களை மூழ்கடித்த விவரத்தைக் கொடுத்த இதாலியரின் பிரசுரத்தில் காணலாம். இதன்படி ஜூன் 10, 1940 முதல் ஆகஸ்டு 31, 1941 வரையிலுள்ள 15 மாதங்களில் இங்கிலீஷ்காரருக்குச் சொந்தமான 122 வியாபாரக் கப்பல்களும், 23 எண்ணெய் டாங்கிகளும், 49 க்ரூயிஸர்களும், 42 நாசகாரிகளும், 34 நீர்மூழ்கிகளும் மத்தியதரைக்கடலில் மூழ்கடிக்கப்பட்டதாயும், 52 சாமான் கப்பல்கள், 6 எண்ணெய் டாங்கிகள், 4 க்ரூயிஸர்கள், 2 நாசகாரிகள், 3 நீர்மூழ்கிகள் அட்லாண்டிக்கடலில் மூழ்கடிக்கப்பட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறதாம். இவை யாவும் இதாலியரின் வேலையாம்.

கப்பல் பிரச்னைகளில் ஆவல்கொண்டு நிருபராக இருக்கும் எனக்குத்தெரிந்த வரையில் இக்கணக்கில் பூரா விவரங்கள் இல்லாததோடு, அதிகமாயும் இருக்கிறது. இதில் பிரிடிஷ் சண்டைக் கப்பலும், விமானம்தாங்கும் கப்பலும் மூழ்கியதைச் சேர்க்கவில்லை. இதாலியர் நேற்றுவரை, பல பிரிடிஷ் சண்டைக் கப்பல்களையும் விமானங்களையும் அமுக்கியதாக பல அரசியல் அறிக்கைகள்மூலம் சொல்லியிருக்கின்றனர். ஒருக்கால் இவைகளை அதில் சேர்க்க மறந்துபோயிருக்கலாம்.

கணக்கு அதிகமாக இருக்கிறதென்பதையும் நிரூபிக்கலாம். 53 க்ரூயிஸர்கள், 44 நாசகாரிகள், 37 நீர்மூழ்கிகள் நாசமானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் நம்பமுடியாது. ஏனென்றால் முதலாவதாக, இது உண்மையானால் பிரிடிஷ் கப்பற்படை பலம் இழந்து கடலாதிக்கத்தை வைத்திருக்கமுடியாது. இரண்டாவதாக ஜெர்மானியருக்கு அமுக்குவதற்கு சண்டைக் கப்பலே இருந்து இருக்கமுடியாது.



யுத்த ஆரம்பத்தில் பிரிடனுக்கு 15 பெரிய க்ரூயிஸர்களும், 49 சிறிய க்ரூயிஸர்களும் ஆக 64 இருந்தன. இதாலியரின் கணக்குப்படி பார்த்தால் 11 க்ரூயிஸர்தான் மிஞ்சியிருக்கவேண்டும். மேலும் 194 சிறு கப்பல்களும் நாசகாரிகளும் இருந்ததில் இதாலிய கணக்குப்படி இப்பொழுது 150 தான் இருக்க முடியும். 62 நீர்மூழ்கிகளில் 25 தான் மிஞ்சியிருக்கும். இவைகளுடன் ஜெர்மானியரால் மூழ்கடிக்கப்பட்டதாகப் பிரிடிஷார் சொல்லும் கணக்கையும் கூட்டினால் பிரிடிஷ் கப்பற்படையில் ஒன்றுமே மிச்சம் இருக்கமுடியாது. அப்பொழுது ஒரு கேள்வி கேட்கலாம்.

"இவ்வளவு கப்பல்கள் பிரிடனுக்கு நாசமாகியும் மத்தியதரைக்கடலில் இதாலியர் ஏன் ஆதிக்கம் பெறவில்லை ?"

என் கணக்குப்படி பிரிடிஷாருக்கு அதிகமாகப்போனால் 9 க்ரூயிஸர்கள் தான் சேதமாயிருக்கலாம். மற்ற 9 க்ரூயிஸர்கள் மூழ்கிய விவரம் தெரியவில்லை என்று சொல்லலாம். ஆகையால் 18 தான் ஆகுமே தவிர 49 இல்லை. இந்த 9 க்ரூயிஸர்களை ஜெர்மானியர்கள்தான் மூழ்கடித்தனர்.

ஆகவே இதாலியர் சொன்னது உண்மையானால் பிரிடனுக்கு கடல்பலம் குன்றி யுத்தத்தை அல்லவா இழந்திருக்கவேண்டும். அப்படி நேரவில்லையே.

---

## ருஷ்யாவில் பிரிடிஷ் விமானப்படையில் உள்ள விமானிகள்.

## அவர்களை அனுப்பியதின்பேரில் பின் உள்ள கதை.

## தேச நிலைமையைக் குறித்து விமானிகளுக்கு ஏற்படும் முதல் தோற்றம்.

## பிரிடிஷ் விமானப்படை உதவியின் மதிப்பு எங்கே இருக்கிறது.

(பக்கப் படைத்தலைவர் எல். வி. பிரேஸர் எழுதியது).

பிரிடிஷ் விமானப்படையில் ஒரு பகுதி, பைடர்கள் சண்டைக்கும் போகும் வரை ருஷ்யாவுக்குப் போய்ச்சேர்ந்ததை ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. முதலில் மூன்றும், பிற்பாடு நாலு ஜெர்மன் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டு ஒரு பிரிடிஷ் விமான பைடர் சேதமடைந்தபோதுதான் ஜெர்மானியர்களுக்கு அது விவரம் தெரியும். பிற்பாடு சமாசாரம் வெளியில்வர அனுமதிக்கப்பட்டது.

இதற்கடுத்தாற்போல் மற்றொரு கதையுமுண்டு. அது பெருங்கதை. இப்பொழுது நான் அதைச் சொல்லக்கூடும், பிரிடிஷ் விமானப்படையின் அந்தப் பகுதி யாதொரு கெடுதியன்னியில் குறித்த இடம்போய் சேர்ந்து, தன்னந் தனியே ஓர் பகுதியாய் இருந்து சண்டைசெய்ய ஜோதுகரமாய், ஒற்றுமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது. விமானங்களும், விமானிகளும் மாத்திரம் அல்ல, தரையிலுள்ள விமானிகள், அப்படையை நடத்தும் உத்தியோகஸ்தர்கள், சமையல்காரர்கள், வைத்தியர், சிகிச்சை செய்கிறவர்கள், யந்திர வேலைக்காரர்கள், கட்பல் வேலையாட்கள் விஷயம் தெரிவிக்கக்கூடியவர்கள், யந்திரம் ஓட்டிகள், துப்பாக்கி வீரர்கள், கவசமணிந்த வீரர்கள், முழுதும் கப்பலுக்குச் சகாயம் செய்கிறவர்கள், பழுது பார்க்கிறவர்கள் ஆகிய எல்லோரையும் சேகரித்து அனுப்பவேண்டியதாயிற்று. இந்த நடவடிக்கை பூராவும் ரகசியமாகவும், மௌனமாகவும் நடத்தப்பட்டது. சென்ற வருஷத்தில் இங்கிலீஷ் போர்முனையில்

நடந்துகொண்டதுபோல், இப்பொழுது பிரிடிஷ் விமானப்படை அதன் நேசர்களுடன் ருஷ்ய பாம்பர் விமானங்களுக் துணையாகசென்று ருஷ்யப் போர்முனையில் ஐப்ட்வாபியைத் தாக்குகிறது.

அவைகள் சண்டையிட ஆரம்பித்ததும் நாஜிகள் நம்மனால் தயாரிக்கப்பட்ட விமானிகளுக்கு சமமில்லாதவர்களென்று ரூபிக்கப்பட்டது. ருஷ்யாவில் உள்ள பிரிடிஷ் விமானப்படை வீரர்களுக்கு 'விடாமுண்டர்கள்' என்று பெயர் வந்துவிட்டது. அவர்கள் அந்த வேலைக்கு வலுவில் போனார்கள். அந்தப் பகுதியில் இங்கிலீஷ்காரர்கள், ஸ்காட்லாந்து தேசத்தினர், ஐரிஷ்காரர்கள், கனேடியர்கள், ஆஸ்திரேலியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பகுதிப் படைத்தலைவர் எச். ஜி. என். ராம்ஸ்பாட்டம் ஐஷர்வுட் என்ற நியூஜீலாந்துக்காரர். அவருடைய விமான இலாகா உத்தியோகஸ்தர், ஜமெய்கா தேசத்தினர். அதன் இஞ்ஜினியர் பிரிட்டனில் முன்னேற்றமடைந்த ஆகாயப்படையுடன், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு வெற்றிகரமாக வேலைபார்த்து பதக்கம் பெற்றவர். அவர் 39 வயதுள்ளவர்.

சில விமானங்களின் கூட்டத்தை பகுதி என்று சொல்லலாம். இதன் உட்பிரிவுகளை இஷ்டப்படி சஞ்சரிக்கும் ஸ்க்வாட்ரன் என்று சொல்லுவார்கள். இதற்குத் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் சக்தியிருப்பதால் உதவிப் படையன்றியிலும் வேறு கவனிப்பில்லாமலும், அநேக காலத்துக்கு எங்கே வேண்டுமானாலும் அனுப்பலாம். ஏற்கனவே சொல்லப்பட்ட தரைப்படை, ஆகாயப்படையை விட, யுத்த களத்தில் வேலைபார்ப்பவர்களும், ரணச் சிகிச்சை செய்யத் தூக்கிச்செல்பவர்களும், தண்ணீர் கொண்டுபோகிறவர்களும், நெருப்பை அணைக்கும் கருவிகளும், பிராணவாயுக் குழாய்களும், பிரிடிஷ் விமானப்படை தங்கியிருக்க கூடாரமும், அதில் உஷ்ணம் உண்டாக்கவும், மாசர்மான்களும், சொகு வலைகளும் அனுப்பப்பட்டன. இன்னும் அவர்களுக்குத் தேவையானவைகளையும் அவர்கள் பெட்டில் வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் துணிமணிகளும், ஆட்டுத்தோல் ஆடைகளும், உரைபனி பாதரக்ஷைகளும், உபரியான போர்வைகளும், வழக்கப்படியுள்ள பையும் உண்டு. அநேக டன் நிறையுள்ள சாமான்கள் அவர்கள் சௌகரியத்திற்கென்று கட்டு ஒட்டப்பட்டு இருந்தது. அவற்றில் கிராமபோன்களும், பிளேட்டுகளும், லாகிரி வஸ்துக்களும், சிகெரெட்டுகளும், சீட்டுக்கட்டுகளும், ரேடியோ செட்டுகளும் இருந்தன.

படையைச் சேர்ந்த ஆட்கள் ஒரு வழியாகவும் விமானப்படை மற்றொரு வழியாகவும் சென்றன. அதில் சம்பந்தப்பட்ட சிலரைத் தவிர அவை போவதைக் குறித்தாவது, குறித்தஇடம் எதுவென்றாவது தெரியாது. சுருக்கு வார்த்தைகளில் அதில்போகும் சாமான்கள் 'பர இலாகாவுக்கு' என்று மட்டில் தெரியும்படி உத்தரவு போடப்பட்டிருந்தது.

வேகமாகச் செல்லக்கூடிய பழக்கமுள்ளவர்களும், அந்தத் தன்மையில் பொருந்தக்கூடியவர்களும், அவர்கள் போய்ச்சேர்ந்து மும்முரமாக வேலையில் இறங்கியிருக்கிறார்கள். விமானிகளில் ஒருவர் அந்த நிலைமையைக் குறித்து தன் வீட்டிற்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கண்டிருக்கிறார். "எங்களுக்கு ருஷ்யர்கள் அதிக சௌகரியம் கொடுத்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் இருந்தால் எப்படியோ அவ்வளவு நன்றாக பிரிடிஷ் விமானப்படைகள் கவனிக்கப்படுகின்றன. ஜெர்மன் விமானப்படையில் ஒரு அம்சம் வெட்கப்படுகிறதுபோல் இருக்கிறது. நாம் இளைசரி வேவுபார்த்தாலும், சங்கதிகள் தெரிந்து சொல்லக்கூடியவர், நமது பைடர் விமானங்களைப் பார்த்தவுடன், நாஜிகள் திரும்ப ஓடுகிறார்கள் என்று சொல்லுகிறார். இந்தப் பிரதேசத்தில் தலைமை வகிக்கும் தளகர்த்தர் நமக்கு உதவி செய்யவும், சாதகமாக இருக்கிறார். ஒரே ஒரு கஷ்டம் என்னவென்றால் நான் பிற்பகலில் 10½ மணிக்குப் படுக்கப்போகிறேன். ஆனால் அவர் இரவு 1 மணிவரை நடக்கக்கூடிய மகாநாட்டில் அடிக்கடி கலந்துகொள்ளுகிறார்."



ஒரு சந்திப்பில் நடந்ததைக் குறித்து அந்த லெட்டரில் எழுதியிருக்கிறது. அதில் ருஷ்யப்படைத் தலைவரும் பிரிடிஷ் விமானப்படை உத்தியோகஸ்தரும், சிரானி நிறைந்த பெரிய குளிக்கும் அறையில் பேசினதைக் கண்டிருக்கிறது. ஒரு ருஷ்ய விமானிகள் பிரிடிஷ் விமானப்படையிலுள்ள சிலரை விருந்துக்கு அழைத்தனர். எல்லாவற்றிற்கும் வாழ்த்துக் கூறியபிறகு ருஷ்யாவிலுள்ள பழைய வழக்கப்படி, நாட்டியத்தில் கலந்துகொண்டு ஒரு அளவை இரண்டுபேரும் சேர்ந்து மிதித்து, ருஷ்யப்படைத் தலைவரும் பிரிடிஷ் விமானப்படை உத்தியோகஸ்தரும் கௌரவம் பாராட்டிக் கொண்டார்கள். நம்முடைய உத்தியோகஸ்தர் அதில் நன்றாக ஈடுபட்டு பொதுவாக எல்லாருடைய திருப்தியையும் சம்பாதித்தார்.

அன்னிய பிரதேசத்தில் அசாதாரணமான காலநிலையிலும், சந்தோஷமான நிலைமையிலும். பொதுவான எதிரிக்கு விரோதமாக பிரிடிஷ் விமானப்படை ஆட்கள் ருஷ்யர்களுக்கு உதவிபுரிய அதிக விமானங்களையும், அதிக பீரங்கிகளையும் கொண்டுபோகிறார்கள். சிலருக்குத்தான் மற்றவருடைய பாஷை தெரியும். ஆனால் பைடர் ஒன்றுசேர்ந்து பாய்ந்து, பக்கத்திலிருந்து தாக்கி அவர்கள் துப்பாக்கியால் ஒரே சமயத்தில் சண்டை செய்கிறார்கள். ருஷ்யப் போர்முனையின் பரிமாணத்தையும் ருஷ்யாவும், ஜெர்மனியும் தங்கள் வசமுள்ள ஏராளமான மூலபொருள்களை ஈடுபடும்படி செய்வதையும் சேர்த்து ஒப்பிட்டுப்பார்த்தால் பிரிடிஷ் விமானப்படைப்பகுதி ஒரு பெரிய படையல்ல என்று தோன்றும். பிரிட்டன் வெகுதூரத்திலிருக்கிறது. ஆனால் பிரிடிஷ் விமானப்படையின் உதவி சண்டையில் ஈடுபட்டிருக்கும் விமானங்களின் எண்ணிக்கையை மட்டில் குறிக்காது. மேலும் ருஷ்யப் பிரதேசத்தில் அவையிருப்பது பிரிடிஷ் சிநேக பாவத்துக்கு ஒரு அடையாளம். ஜெர்மானியர்கள் ஜயிக்கப்படக்கூடியவர்களல்ல என்ற பழமொழியை மாற்றிவரும் ஸோவியத்படைக்கு நேரேநின்று தைரியத்தை ஊட்டுகிறது.

---

## ருஷ்யாவின் தந்திரம்.

## எதிரியின் படைகளைக் கலைக்க நேரிட்டது.

## செம்படைத் தலைவர்களின் திரும்பத் தாக்குதல்களின் அடிப்படையான முறை.

"ஸ்டிராடாஜிகஸ்" எழுதியது:—

ஜெர்மன் சூழ்ச்சி தெரிந்தது. நடந்த சம்பவங்களின் தோற்றங்கள், அவற்றின் பயனை உண்டாக்காமல் இருக்கமாட்டாது. ஆனால் ருஷ்யாவின் தந்திரம் வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் ராணுவ முறைப்படி அதைப் போல் ஆமோதிக்கத்தக்கது. அந்தச் சூழ்ச்சி அன்னியதாகவும், உயிர்ச் சேதம் விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. இதைப் பாராட்டாமலிருப்பதற்கு ஒரு காரணம் என்னவென்றால் ஜெர்மனி, தான் குறித்த நேரத்தில் தாக்கி பெரிய தளகர்த்தர்களின் கோட்பாடுகளின்படி தாக்கிக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. திடீரென்று யுத்தத்தை ஆரம்பித்ததால் ஜெர்மானியர் கைமேலாகிவிட்டது. இதன் அவசியத்தை உணர்ந்த இவர்கள் அதைக் கைவிடாது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை ருஷ்யர்களுக்கு மாற்றுவது மிகவும் சிரமமாகயிருக்கிறது.

ஒரு ருஷ்யப்படைத் தலைவர் இந்த யுத்தத்தில் எவ்வளவு ஜெர்மானியர்களைக் கொல்லக்கூடுமோ அவ்வளவு பேர்களைக் கொல்ல முக்கியமான கொள்கையாக

தன் தேசம் கொண்டிருப்பதாகவும், உதவிப் படைகள் யுத்தத்தின் முடிவைத் தீர்மானிக்குமென்றும் அறிவித்தார். இது ராணுவக் கோட்பாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட நீதி. ஆனால் ருஷ்யச் சூழ்ச்சியில் இதைக்காட்டிலும் அதிகமிருக்கிறது. ஒரு இடத்தில் அதிக எண்ணிக்கை ஜயத்திற்கு ஆதாரமாக இருக்கலாம்; ஆனால் ஏமாற்றம் அல்லது வஞ்சனையான நிர்பந்தத்தால் ஒரு இடத்தில் அதிகமான எண்ணிக்கை எதிரிக்கு ஏற்படாமல் தடுத்துவிட்டால் ஜயம் ஏற்பட சம்பாவிதம் இருக்காது. அதுதான் ருஷ்ய தந்திரம்.

இல்மான் ஏரியைச் சுற்றிலும் ஏற்பட்ட எதிர்ப்புகளில் தன்னுடைய பலத்தினாலும், விடாமுயற்சியினாலும் வொரோஷிலாவ் லெனின்கிராட்டுக்கு முன்னால் வான்லீவுக்குப் போதுமான அதிக எண்ணிக்கை ஏற்படாமல் இதுவரை தடுத்திருக்கிறார். இதுவரை நகரத்தை உடனே தாக்குவதைத் தடுக்கமுடியாமல் போனாலும் தாக்குதல் பலமாக இல்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றினால் ஜெர்மன் துருப்புகள் பரவலாகப் போகும்படி செய்யப்பட்டிருக்கின்றன. ஹிட்லர் ஒரே இடத்தில் படைகளைச் சேகரிக்க அடிக்கடி முயன்றதில், அதை எதிர்த்த ருஷ்யத் தந்திரத்தால் படைகள் பரவலாகப் போகும்படி ஆயிற்று.

மத்தியப் போர்முனையில் டிமோஷன்கோ இதே தந்திரத்தைக் கையாண்டு வருகிறார். புடன்னிக்குத் தோல்வி ஏற்படாமல் செய்ய முடியாமல் போனாலும் பெருத்த சேதம் ஏற்படாமல் செய்துவிட்டார். கீவை அழித்து அதிலிருந்து தன்னுடைய சைனியத்தை புடன்னி அப்புறப்படுத்தினார். இதற்குக் காரணம் மற்றொரு போர்முனையில் ஜெர்மானியத் துருப்புகளில் ஒருபகுதியை டிமோஷன்கோ நிறுத்திக்கொண்டதுதான். கீவிலுள்ள பொதுவான சாதனங்கள் மோரி சாதனங்கள் உள்பட தன்னுடைய படையை இழந்து போனாலும்கூட அழித்துவிடும்படி புடன்னிக்கு முடிந்தது. சாமர்த்தியமாகவும், விடாமுயற்சியுடனும் டிமோஷன்கோ தாக்காமலிருந்திருந்தால் அதிக எண்ணிக்கையைக் கொண்டு புடன்னி பக்கம் தாக்கப்பட்டிருக்கும்.

இந்தத் தந்திரத்தினால் சத்துருவுக்கு ஓயாத நஷ்டத்தை உண்டாக்கி அவன் சைனியத்தையும் சிதற அடித்துவிடுகிறது. இதனால் பகட்டான வெற்றி ஏற்படாவிட்டாலும், நோக்கத்தில் நாசத்தையும் முடிவில் எதிரிக்குத் தோல்வியையும் விளைவிக்கும். மேலும் எதிர்பாராமல் ஒருவர் அகப்பட்டுக்கொள்ளப்படும். யுத்தத்தில் நுண்ணியதாகவும், சவதானமான தந்திரம் இதுதான். இது ருஷ்யர்களின் தந்திரம் மாத்திரமல்ல. நேச தேசத்தார்களின் தந்திரமும் இதுதான். ஒரு யுத்தம் தான் நடக்கிறது. தந்திரமும் ஒன்றேதான்.

மேற்கு ஐரோப்பாவில் வடக்கு முனையிலிருந்து பிரான்ஸ் வரையில் பிரிட்டன் இதே தந்திரத்தை கையாண்டுவருகிறது. இந்த விஸ்தாரமான பிரதேசத்தில் எங்காகிலும் தாக்குதல் ஏற்படுமோ என்ற பயத்தினால் திரள் திரளாக படைகளையும், யுத்தப் பொருள்களையும் ஹிட்லர் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இந்த நிலைமையில் பெருத்த தாக்குதல்கள் ஏற்படாதென்று எண்ணினாலும் நார்வே, ஜெர்மன், ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் இந்த தேசங்களில் போருக்குத் தயாராக கொஞ்ச சைனியமாவது கிழக்குப் போர்முனைக்குக்கொண்டு போகாமல் வைக்கப்பட்டிருக்கிறது.

மத்தியதரைக்கடலிலும், மத்தியக்கிழக்கிலும் இதே மாதிரிதான் இருக்கிறது. பிரிட்டிஷ் படைகள் ஆபிரிக்காவிலிருந்து இதாலியை விரட்டிவிடவும் இதாலிய பிரதானப் பிரதேசங்களில் படையெடுக்கவும் பயமுறுத்துவதால், அவனுக்குத் தேவையான உதவிப் படைகளை இதாலி அனுப்பக்கூடவில்லை.

நம்முடைய படைகளை சிங்கப்பூரில் பரவச் செய்திருப்பதில் நமக்கும் இந்தக் கஷ்டம் நேரிட்டிருக்கிறது. அம்மாதிரி ஸைபீரியாவில் ருஷ்யப்படை வைக்க



வேண்டியிருப்பதில் ருஷ்யாவும் இதைப் பொறுக்க வேண்டியிருக்கிறது. நாம் இந்தத் தந்திரத்தை மேற்கேயும், தற்சமயம் மத்தியதரைக்கடலிலும் பிரயோகிக்கிறோம்.

ஒரு இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் அதிக எண்ணிக்கை அடையவேண்டுமானால் எதிரியின் பலத்தைக் கலைக்க முதலில் நிர்ப்பந்திக்கவேண்டும். நேய தேசத்தார்கள் இப்பொழுது இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ருஷ்யாவும், பிரிட்டனும் ஜெர்மனியின் மூலப்பொருள்களை வெகுவாக அழித்துவருவதால் பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, ஸ்லோவேக்கியா இந்த தேசங்களிலிருந்து உதவிப்படைகளை அடைய ஜெர்மனி முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

ருஷ்யா போரில் ஈடுபடுவதற்கு முன் பொருளாதார முற்றுகையினாலும், ஆகாய விமானத் தாக்குதல்களினாலும். ஜெர்மன் பலத்தைக் குறைப்பதில்தான் நேசதேசத்தார்களின் தந்திரம் ஈடுபட்டிருந்தது. பொருளாதார முற்றுகையினால் யுத்த தளவாடங்களுக்கு வேண்டிய சாமான் ஸப்ளைகள், ஜெர்மனியை அடைய விடாமல் தடுக்கப்பட்டன. ஆகாய விமானத் தாக்குதல்களினால் ஜெர்மன் தொழிற்சாலைகளிலிருந்த யுத்தப் பொருள்கள் அழிக்கப்பட்டன! இப்பொழுது ருஷ்யப் படையெடுப்பினால் யுத்த அரங்கத்தில் அவைகள் அழிக்கப்படுகின்றன.

---

## ருஷ்யாவில் நாஜிகள் ஈடுபட்டிருப்பது ஆகாயப் படை பலத்தை எவ்வாறு பாதிக்கிறது.

## உடனுக்குடன் தாக்கும் சக்தி குறைவுபட்டிருப்பது மாத்திரம் ஒரு முடிவான பயனில்லை.

## புதுமாதிரி விமானங்கள் கட்டுவதில் போட்ட திட்டங்கள் மாறுதலடைந்திருக்கின்றன.

## பிரிட்டன் உற்பத்தி செய்துகொண்டே போவதற்குச் சந்தர்ப்பம்.

டைம்ஸ் பத்திரிகையின் விமான இலாகா பத்திரிகைநிருபர் எழுதியது :—

கிழக்குப் போர்முனையில் ஜெர்மனிக்கு ஏற்படும் வெற்றிகளுக்காக ஜெர்மனி பலிகொடுத்துவரும் ஆகாயப்படை பலம் மிகவும் அதிகம். அதில் ஆயிரக்கணக்கான விமானங்களும், விமானிகளும் சேதம். இது இப்பொழுது தாக்கும் பலத்தில் ஏற்பட்டிருக்கும் குறைவைக் காட்டுகிறது. புதுதினுசான விமானங்கள் கட்டுவதிலும், விமானப்படைக்குத் தகுதியான எண்ணிக்கைகள் சேகரிப்பதிலும் அதன் திட்டங்களில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் இன்னும் அதிகமாகப் பாதிக்கிறது. ஜெர்மனிக்குக் கிடைக்காமல் ருஷ்யப்படையில் ஈடுபட்டு இருப்பதினால் விமானங்கள் குறைவுபட குறைவுபட, கிரேட் பிரிட்டன் விமானங்களை அதிகரிக்கச் செய்ய அதற்கு அவகாசம் ஏற்பட்டிருப்பது மிகவும் முக்கியமான பாதிப்பு. நூறு நாட்கள் கோரமான ருஷ்ய யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதே எப்பொழுது ஆச்வாஸம் பெறுவோமென்ற எண்ணத்தை ஜெர்மனிக்கு உண்டாக்கப்போதுமானது.

லுப்ட்வாபியின் ஐந்து ஆகாய விமானப்படைகளில் நாலு ருஷ்யப் போரில் ஈடுபட்டிருக்கின்றன. முதல்தரமாக போரில் ஈடுபடக்கூடிய ஆகாய விமானங்கள் மூவாயிரத்துக்கு மேல் நஷ்டம். விமானப் படைகளை போஷித்துவரும் பிரச்னை கொடியதாக வருகிறது. இப்பொழுதுதான் முதல்முதலில் எதிரி தன்வசம் சுற்றிப்போகப் போதுமான விமானங்களும், விமானப்படையும்

கையிருப்பில் இல்லை என்பதைக் காண்கிறோம். லுப்ட்வாபி இன்னும் மிகுந்த பலமுள்ளதாகத்தான் இருக்கிறது. ஆனால் அதன் பொறுப்புகள் ஏராளம். அதில் ஐந்து விமானப்படைகளும், மூன்று விமானப் பகுதிகளும் இருக்கின்றன. அவைகள் விஸ்தாரமான யுத்த அரங்கங்கள் பூராவிலும் எட்டி, எட்டி. அங்குமிங்கும் கொஞ்சம் கொஞ்சமாக பரவியிருக்கின்றன. லுப்ட்வாபி பொதுவாக வைத்திருக்கும் விதம்:—

**ஆகாய விமானப் படை I.** கெல்லரி(Keller)ன் கீழ்: லெனின்கிராட் முன்னால்—பூராவும் ஈடுபட்டிருக்கிறது.

**ஆகாய விமானப் படை II.** கெஸல்ரிங் (Kesselring) ஸ்மாலென்ஸ்க்குப் பின்னால்—குலைந்து, சிதறியிருக்கிறது.

**ஆகாய விமானப் படை III.** ஸ்பெர்ரி (Sperrie) மேற்கு ஐரோப்பாவில்—ஒரே ஒரு பாம்பர் பகுதியை மாத்திரம் வைத்துக்கொண்டு பிரிட்டிஷ் விமானப் படை தாக்குதல்களை எதிர்த்துவருகிறது.

**ஆகாய விமானப் படை IV.** லோகர் (Lochr) யூக்ரேனில் முன்னேறி வருகிறது.

**ஆகாய விமானப் படை V.** ஸ்டம்ப (Stumpff) பின்லாந்திலும், வடக்கு நார்வேயிலும்—மொர்மான்ஸ்க்கைத் தாக்க உதவிப்படைகளைத் துரிதமாக அனுப்பக் கேட்டுவருகிறது.

மிகவும் பிரஸ்தாபிக்கப்பட்டுவரும் ஸ்துக்காக்களும், டிராக்பைடர் படைப் பகுதிகளும் அடங்கிய ரீச்தோபன் (Reichthofen) படைப்பகுதிகள், லெனின்கிராட்டைத் தாக்க மேற்சொல்லிய கெல்லர் படையிலுள்ள இடைவெளிகளை நிறப்ப அனுப்பப்பட்டிருக்கிறது.

ப்யூலோன் தலைமையின் கீழ் லிபியாவிலுள்ள ஆபிரிக்கன் படைப்பகுதி, இதாலிய விமானங்களுடன் சேர்ந்து அங்கு இடைவிடாது தாக்கப்படுவதினால் திணறுகின்றது.

சாதாரண காலங்களில் ரிசர்வ் சைனியமாக வைக்கப்பட்டிருக்கும் ஸ்பீடல் தலைமையின் கீழ் உள்ள ஜெர்மன், ருமேனியப்படை, இப்பொழுது பால்கன் நாடுகளைக் காவல்புரிந்துவருகின்றன.

பிரிட்டனைத் தாக்கவோ அல்லது லிபியாவைப் படையெடுக்கவோ, புதிய தாக்குதல்களை ஆரம்பிக்க இனி உதவிப் படைகள் இல்லை—இருந்தபோதிலும் இப்பொழுது விமானப்படைகளை நிலைநிறுத்த இருப்புப்படைகள் எல்லாம் தேவை: அடிக்கடி அவைகள் தருவித்துக்கொள்ளப்படுகின்றன.

ருஷ்யாவை அழிக்க ஜெர்மனி பூரா பலத்தையும் உபயோகித்து முற்றிலும் தளர்ச்சியடைவதா, அல்லது ருஷ்யாவில் நிர்ப்பந்தத்தைக் குறைத்து லுப்ட்வாபிக்கு அவகாசம் கொடுத்து, (a) யுனைடெட் ஸ்டேட்ஸினால் பலப்படுத்தப்பட்டு வரும் கிரேட் பிரிட்டனின் விமானப்படை அபிவிருத்தியடைவதைத் தடுக்கும்படி செய்வதா; (b) ஜெர்மனியை எதிர் காலத்தில் மகத்தான பலமடையக் கூடிய பிரிட்டிஷ் விமானப்படைக்கு சமமாகயிருக்கும்படி செய்வதா; இந்த மத்தியக்கிழக்கில், இந்த மாரிகாலத்தில் பிரதிபலிக்கும் ஐயத்தையடைந்த ஜெர்மானியர்களின் உத்ஸாகத்தை அதிகப்படுத்த முயலுவதா? என்ற இவ்வித பிரச்னைகளில் ஜெர்மன் அரசாங்கம் உடனே ஒரு முடிவான தீர்மானத்திற்கு வரவேண்டும்.

முதலில் சொன்னவை இரண்டும் மிகவும் முக்கியமானது. சென்ற ஆறு மாதங்களில், பிரிட்டிஷ், ஜெர்மன் விமானக் கைத்தொழில்களின் அந்தரங்க



நிலைமைகள் தலைகீழாக மாறியிருக்கின்றன. எப்படியெனில் கிழக்குப் போர் முனைக்கு ஜெர்மன் விமானப்படை போவதற்கு முன், ஜெர்மனி ஒழுச்சியாக பிரிட்டன்மேல் வெடிகுண்டு போட்டு வந்ததினால் பிரிட்டிஷ் கைத்தொழில்களில் சிறிதளவு தடங்கல் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது ஆறு மாத காலமாக கிரேட் பிரிட்டனில் வெடிகுண்டு போடப்படவில்லை. அதன் உற்பத்தியும், அபிவிருத்தியும் அதிகரிக்கின்றன. மேலும் ஜெர்மனி பலமாக வெடிகுண்டுகளால் தாக்கப்படுவதால் அதிகமாகச் சேதமடைந்து வருகிறது.

இம்மாதிரி இருவகையிலும் ஜெர்மன் விமானப்படையின் சக்திக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. கிழக்கில் நடக்கும் யுத்தத்தில் விமானங்கள் சேதமடைகின்றன. பிரிட்டிஷ் பகற்காலத் தாக்குதல்களினால் உற்பத்திக் குறைவினால் மறைமுகமாக விமானங்கள் எண்ணிக்கையில் குறைவு ஏற்படுகிறது. ஆனால் நமக்கு இருவிதத்திலும் சாதகம். விமான நஷ்டம் மிகவும் குறைவு; உற்பத்தி இடைவிடாது செய்யப்படுகிறது. அமெரிக்காவிலிருந்தும் உபரியாக விமானங்கள் அனுப்பப்பட்டுவருகின்றன.

ஜெர்மனியின் நஷ்டத்தைக் கூர்மையாகக் கவனித்தால் சில விருப்பமான சங்கதிகள் வெளியாகும். பின்லாந்துக்கும், ருமேனியாவுக்கும், நடுவில் ருஷ்யாவிற்கு எதிரே லுப்ட்வாபி 8,000 விமானங்களைப் போரில் ஈடுபடச்செய்தது. அந்தப் படையில் அவ்வளவு இருப்பது அசம்பாவிதம். ஒரு நாளில் இவைகளில் 3,000-மாவது சண்டையில் ஈடுபட்டிருக்கும். சண்டையின் இந்த நூறு தினங்களில் மட்டில் 3,000 விமானங்களும், 5,500 விமானிகளும் சேதமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் பிரதிதினம் ஒரு சதவிகிதம் மும்முரமாக சண்டையில் ஈடுபடும் உதவி விமானப்படைக்கு ஏற்படும் சேதம் இதில் சேரவில்லை.

இந்த எண்ணிக்கை கவனிக்கத் தகாதபடி சிறிதென்று தோன்றலாம். ஆனால் எதிரி படையெடுப்புக்குப் போட்ட திட்டத்தைவிட நாட்கள் நீடித்துவிட்டன. முதலில் வந்த படைகளில் நாற்பது சதவிகிதம் அழிக்கப்பட்டிருக்கின்றன. பலாத்காரத்தை நிலைநிறுத்த ஜெர்மானியர்கள் உதவிப் படையைத்தான் நம்பியிருக்கவேண்டும். புதிதாகச் சேர்க்கப்படுகிறவர்களுக்கு முன் படையுடன் சேர்ந்து பழக்கிக்கொள்ள அவகாசமில்லை. அவர்களும் எப்பொழுதும் நேராகக் கடுமையான போரில் முதல்முதலில் ஈடுபடுகிறார்கள். அபாயம் அதிகரித்தும், யுத்தம் செய்யும் திறமை குறைந்துகொண்டும் வருகிறது. இம்மாதிரி நீண்டகாலம் சேதமேற்பட்டு வருவதை நியாயமாக ஜெர்மன் அரசாங்கம் சும்மா விட்டுவைக்க முடியாது.

---

# 1,800 மைல்கள் விஸ்திரணமுள்ள யுத்த அரங்கம்.

பைத்தியம் பல விதம். சில பைத்தியங்களைப் பார்த்தாலே நம்மை அறியாமலே சிரிப்பு வந்துவிடும். பெர்ஜஸ்கேடனில் உள்ள பவேரியா மலைகளின் இயற்கை அழகைக் கெடுத்து சுரங்க வழிகளும், எஃகு கதவுகளும்போட்டு ஜெர்மானியர்கள் ஏராளமாகச் செலவழித்து வேலைப்பாடுகள் செய்திருக்கின்றனர். இத்தெருக்கூத்துக்கு அவர்கள் தங்களைத்தானே பரிகசித்துக்கொள்ள வேண்டும். ஆனால் மிருகத்தன்மையுள்ள ஹிட்லருக்கு இது மாறான விஷயம். அவருடைய காட்டுமிராண்டித்தனத்தை நாஜிக்களிடத்தில் வெகுகாலத்திற்கு முன் வெளிப்படுத்தியிருக்கிறோம். "சென்ற நாலு மாதங்களாக ருஷ்யாவில் அது

எதிர்ப்பை பொறுக்கமுடியாது" என்று தூதன் பதிலளித்தான். ஹிட்லர் மாஸ்கோவிற்குப் போனாலாவது அல்லது ருஷ்யா தோற்கடிக்கப்பட்டதென்று நினைத்தாலாவது வேறுதூதர்கள், அல்லது அவனே மிதமிஞ்சிப் போவதற்குள் சமாதானம் செய்து கொள்ளும்படி வேண்டிக்கொள்ளலாம். நம் ஜனங்களின் சுபாவம் எனக்குத் தெரியுமென்பது சரியாய் இருக்கும் பக்ஷத்தில் 1917-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் நடுநிலைமை தூதனுக்கு என்ன பதில் கிடைத்ததோ அது ஹிட்லருக்கும், அவன் பிரதிநிதிகளுக்கும் கிடைக்கும். யார் இந்த பலாத்காரத்தைப் பொறுக்கக்கூடுமென்பதை மறுபடியும் பார்க்கலாம்."

## இந்தியாவிற்கு ஹிட்லர் வந்தால்?

"ஜெர்மானியர்கள் தங்கியிருப்பதற்காக நம்முடைய ஜனத்தொகையை குறைக்க நேரிடும். ஜனத்தொகை குறைவதற்கு உள்ள முறையை அபிவிருத்தி செய்யவேண்டும்: ஜனத்தொகை குறைவது எதைக் குறிக்கிறது என்று கேட்டார்கள். ஜாதியார்கள் பூராவும் வேரிடம் போகவேண்டியது தான். நான் அதைச் செய்ய எண்ணுகிறேன். பெரும்பாலாக இதுதான் என் வேலை. இயற்கை கொடுமையாக இருக்கிறது. ஆகையால் நாமும் கொரேமாக இருக்கலாம்."

"ஜெர்மானியர்களில் முக்கிய வீரர்களின் விசேஷமான ரத்தத்தைச் சிந்தி, சிறிதும் இரக்கமின்றி ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருந்தால், உலகத்திற்கு கெடுதல் விளைவிக்கும். தொத்து நோய் போல் வியாபித்திருக்கும் புழுக்கள் போன்ற கீழ் ஜாதியினரை உலகத்தைவிட்டு அகற்ற எனக்கு உரிமையுண்டு."

"ஹிட்லர் பேச்சு" என்னும் பத்திரிகையில் ஹெர்மான் ராஷ்நிக்கால் ஹிட்லரின் சம்பாஷணை என்று பிரசுரித்தது.

## யாத்திரையின் முடிவு.

ஒரு ஜெர்மன் தளகர்த்தர் பின்வருமாறு சொன்னதாகப் பிரஸ்தாபிக்கப் பட்டது.

"கிரீஸைக் கைப்பற்ற கிரீஸுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம்;
கிரீட்டைக் கைப்பற்ற கிரீட்டுக்குப்போய்க்கொண்டிருக்கிறோம்;
ஸைப்ரஸைக் கைப்பற்ற ஸைப்ரஸுக்குப் போய்கொண்டிருக்கிறோம்;
எகிப்தைக் கைப்பற்ற எகிப்துக்குப் போய்க்கொண்டிருக்கிறோம்;
நரகத்தைக் கைப்பற்ற நரகத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறோம்;
ஆனால் ஒருபொழுதும் மறுபடியும் ஜெர்மனியை திரும்பப் பார்க்கப்போவதில்லை."

---



# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

### அக்டோபர் 11—18, 1941.

நாஸி மாறுபாடு.

"ஒரு தடவை ஜெர்மனியும் இங்கிலாந்தும் நேரே பேசிக்கொண்டால் ஒருவரையொருவர் அறிந்து இக்கடும் போரை நிறுத்தலாம்."

(அச்சுநாட்டின் உத்தரவுப்படி ஸ்பெயின் ரேடியோ, அக்டோபர் 11, 1941.)

"ஆங்கில அமெரிக்க தயாளக்கூற்றை அழிக்கும் ஒருகாரியம் தான் பாக்கியிருக்கிறது."

(ஸெக்கோஸ்லோவாகியாவுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, அக்டோபர் 11, 1941.)

ருஷ்யாவைப் பற்றிய வீண் அதிர்ச்சிகள்.

"ருஷ்ய-ஜெர்மன் யுத்தம் ஆரம்பித்து $3\frac{1}{2}$ மாதங்களுக்குள் 30 லக்ஷம் ருஷ்யர்களுக்கு அதிகமாகவே கைதியாக்கப்பட்டனர்."

(இங்கிலீஷ், ஹிந்துஸ்தானி பாஷைகளில் ஜெர்மன் செய்தி, அக்டோபர் 15.)

இவர்கள் கொடுத்த கணக்கு நிஜமானால் எல்லா ருஷ்யச் சேனையும் அழிந்திருக்கவேண்டும். அப்படியிருக்க பெர்லினிலிருந்து "எல்லாம் திட்டப்படி நடக்கிறதாக" அறிக்கைகள் வருகின்றன. எதிரியில்லாத வெறும் ஆகாயத்தையா தாக்குகின்றனர்? ருஷ்ய யுத்தத்திற்கு முன்னுடியே எல்லா ருஷ்யர்களையும் ஜயித்து, பிரிட்டனுக்குச் சொந்தமானதைக் காட்டிலும் அதிகமாக கப்பல்களை, அமுக்கிவிட்டு கயறு வித்தை செய்கிறார்கள் போலும். (அதாவது கயிற்றை ஆகாயத்தில் எறிந்து ஆதாரமற்ற அதன் பேரில் இந்திர ஜாலிகள் நடந்து காட்டுவான்.)

வி வி வி வி வி

"மார்ஷல் டிமோஷங்கோவின் படையை சூழ்ந்து, தகத்தியதிலேயே ஜெர்மன் வெற்றிகள் தோன்றிவிட்டன."

(இங்கிலீஷ், ஹிந்துஸ்தானி பாஷைகளில் ஜெர்மன் செய்தி, அக்டோபர் 11.)

ஜெர்மானியருக்கு ஏற்பட்டுள்ள பத்து லக்ஷம் சைனிய நஷ்டத்தை ஈடு செய்யும்படி சொல்லப்பட்டவுடன், மாரிகாலம் "இரும்பைப்போல் உறைந்து" விடுவதைப் பார்த்து இதாலியர் வேறு விதமான தகவல்களைக் கொடுக்க ஆரம்பித்து

விட்டனர். இதாலிய ஸ்டாம்பா என்ற பத்திரிகை எழுதுவதாவது:—"ருஷ்யச் சேனையை ஜெர்மானியர் பூரா சுற்றிக் கொள்ளவில்லை. இன்னும் பெரிய ருஷ்ய சேனைகள் பத்திரமான நிலையிலிருக்கின்றன" மாஸ்கோ இவைகளால் தற்காப்பு செய்யப்பட்டு வருகிறது.

### ஹிட்லருடைய ஆத்ம சிநேகம்.

"1941 ஜூன் 22-ல் ஹிட்லர், ருஷ்யாவை எதிர்த்தபொழுது, சர்ச்சிலின் ஆத்மாவில் மறைந்து இருந்தபடி தான் செய்தார் என்பதில் சந்தேகம் உண்டா?"

(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, அக்டோபர் 15.)

வி வி வி வி வி

### ஹிட்லரும் மதமும்.

"ருஷ்யர்கள் லிதவேனியாவில் மத ஸ்வதந்திரத்தைப் பிடுங்கிவிட்டனர்."
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி அக்டோபர் 15.)

ஸ்டாலின் அரசாங்கச் சட்டத்தின் 121-வது பிரிவு ருஷ்யாவில் தனிப்பட்டவர்களுக்குள்ள மத அபிப்பிராயங்களை அனுமதிக்கிறது. மதத்தைக் கைக்கொள்ளவும், தன்னுபடி செய்யவும் இடம் கொடுக்கிறது. அரசாங்கத்தின் பரீக்ஷா நிலையில் இதை ஒப்புக்கொண்டாலும் சரிதான் இல்லாவிட்டாலும் பாதகமில்லை.

ஹிட்லர் மதத்தைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயம் ஒரே விதம் தான். 1933-ல் ஹெர்மன் ராஷ்னிக்கிற்கு அவன் சொன்னதாவது "மதங்களுக்கு இனிமேல் இடமில்லை—நிச்சயமாக ஜெர்மனியில் இல்லை."

வி வி வி வி வி

### துருக்கியரின் ஆனந்தம்.

"துருக்கி ஜெர்மன் ஒப்பந்தம் ஏற்பட்டதால், பிரிடிஷ் பிரசாரம் பயன்படவில்லை என்று துருக்கியின் உபதலைவர் சொல்லுகிறார்."
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, அக்டோபர்.)

இது கோயபல்ஸால் கட்டிவிடப்பட்டது. உண்மையில் க்ரோம் கிடைக்காமல் க்ளாடியஸ் பெர்லினுக்குத் திரும்பவேண்டிவந்தது. கௌரவமாக துருக்கி பிரிடனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் முடிந்த பிறகுதான் 1943-ல்



ஜெர்மனிக்கு கிடைக்கும். அதுவும் துருக்கிக்குத் தரவேண்டிய ஜெர்மன் சாமான்கள் வந்த பிறகுதான்.

க்ளாடியஸ்ஸும், வான் பேபனும் நினைத்தபடியல்லாது துருக்கி ஜெர்மானியரைக்கண்டு பயப்படவுமில்லை, நம்பிக்கை கொள்ளவுமில்லை.

## புது பயம்.

### ஹிட்லர் சொல்லுவது.

தற்சமயம் மற்ற நாடுகளுக்கு புது அபிப்பிராயத்தைக் கற்றுக்கொடுப்பது தான் பிரச்னை. அதாவது புது திட்டத்தின் புதிய எண்ணத்தின்படி பொதுவான அமைப்புடன் ஒவ்வொருவரின் நன்மைக்குப் பாடுபடுவது.

(தென் அமெரிக்காவிற்கு ஜெர்மன் செய்தி, ஸெப்டம்பர் 1941.)

### ஹிட்லர் அறிந்து கொண்டது.

"நாட்டினுள் பிரவேசிக்கும் சைனியங்களை சில மூடர்கள் தாக்குகிறார்கள். இவையெல்லாம் அக்கரையில்லாமல் செய்யப்படும் செய்கைகள்."
(இங்கிலீஷில் ஜெர்மன் பேச்சு, அக்டோபர் 5, 1941.)

### நார்வே.

நார்வேக்குச் செய்த வாக்குறுதிகளை ஜெர்மனி காப்பாற்றிவருகிறது. நார்வே ஸ்வதந்திரத்தை அடையுமென்று ஜெர்மனி சொல்லியிருக்கிறது.
(ஆஸ்லோ ரேடியோ, ஸெப்டம்பர் 26, 1941.)

### நார்வே.

ஜெர்மன் அரசாங்கம் தனது ஆளுகைக்குள் நார்வேயை எடுத்துக் கொள்ளும் அல்லது ஜெர்மானியருடன் சிநேகமாக கைகோர்த்துக்கொண்டு செல்லக்கூடிய மனப்பான்மையை நார்வே ஜனங்கள் கொள்ளவேண்டும்.

(நார்வேக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, அக்டோபர் 4, 1941.)

### யூகோஸ்லாவியா.

"நல்லெண்ணம் கொண்ட எல்லா நாடுகளும் சமமான உரிமைகளுடன் இருக்கும்படி ஜெர்மனி விரும்புகிறது."
(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 25, 1941.)

### யூகோஸ்லாவியா.

"இப்பொழுது உள்நாட்டுக்கலகம் ஏற்படும் போல் இருக்கிறது."
(குவிஸ்லிங் நிடிச் ஒலிபரப்பு, ஸெப்டம்பர் 14, 1941.)

### பிரான்ஸ்.

"புது ஐரோப்பிய திட்டத்திற்கு உடன்பட்டு ஜெர்மனியுடன் சேர்ந்து உழைக்க பிரான்ஸ் தீர்மானித்திருக்கிறது."

(ஜெர்மன் ஒலிபரப்பு. ஸெப்டம்பர், 1941.)

### பிரான்ஸ்.

"அரசாங்கத்திற்கு விரோதிகள் பிரான்ஸில் எங்குமிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரையும் பிரான்ஸிலுள்ள ஜெயில்கள் கொள்ளாது."

(ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு, ஸெப்டம்பர் 26, 1941.)

கோரமான பயனை விளைவிக்கிறது. ஜெர்மானியர்களில் முக்கிய வீரர்களின் விசேஷமான ரத்தத்தைச் சிந்தி, சிறிதும் இரக்கமின்றி ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டு இருந்தால் உலகத்திற்குக் கெடுதல் விளைவிக்கும், தொத்துநோய்போல் வியாபித்திருக்கும் புழுக்கள்போன்ற கீழ் ஜாதியாரை உலகத்தைவிட்டு அகற்ற கண்டிப்பாக எனக்கு உரிமையுண்டு" என்று 1933-ம் வருஷத்தில் ஜெர்மனியில் அதிகாரம் பெற்ற புதிய குருவான ஹிட்லர் சொன்னான்.

இரண்டு வருஷத்திற்கு மேற்பட்ட காலமாக ஏராளமாக உயிர்ச்சேதம் விளைவித்தும், ஹிட்லர் இன்னும் அதேவிதமான காட்டுமிராண்டித்தனத்துடனும், அதே கொள்கையுடனும் இருந்துவருகிறான். இதே குதர்க்கமான எண்ணம் அவர் இடம் மாத்திரமல்ல, இன்னும் அநேகரிடத்தில் இருக்கிறது, இறந்தவர்களின் கணக்கை ஜோஸியர் மூலம் தெரிந்துகொள்ள நாஸிப் பிரசாரர்களின் ஆவலும், வேண்டுமென்றே 1,800 மைல் விஸ்தீரணத்திற்கு யுத்தரங்கத்தை வியாபிக்கச் செய்து சம்ஹாரம் நடப்பதைப் பெருமையாகப் பேசப்படுவதும் தெரியவரும்.

ஆனால் இதேமாதிரி மற்றொரு போர்முனையிருக்கிறது. அதைப்பற்றி நாஸிகள் ஒன்றும் பிரஸ்தாபிக்கவேயில்லை. டொப்ருக்கிலிருந்து டெஹ்ரான் வரையுள்ள போர்முனை 1,800 மைல் உள்ளது. ஒரு வருஷத்திற்குமுன் ஹிட்லரின் சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்த தெற்கேயுள்ள பிரதேசங்களில் அப்போர்முனை வியாபித்திருக்கிறது. அந்தப் போர்முனைக்குத் தரையிலும், கடலிலும் பாதுகாக்கப்பட்ட நீண்ட லைப்லைன் வழிகள் இருக்கின்றன. இப்பால் பிரிட்டிஷ்காரர்கள், ருஷ்யர்கள், அமெரிக்கர்கள் அவைகளை ஒன்றாக நெருக்கிப்பிடிக்கிறார்கள். இதுதான் இந்தியாவின் ஜீவநிலையான பாதுகாப்பு அரங்கம். இப்பாதுகாப்பை பலப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் அதிகமாய் இருந்தாலும் முடிவில் அச்சு நாட்டினரின் பிரயத்தனங்கள் வீணாகும்.

அங்காராவின் ராஜ தந்திரங்களின் சபைகளிலும், மத்தியக் கிழக்கிலுள்ள கடைகளிலும், சைனிய வாஸஸ்தலங்களிலும், யுத்தத்தில் அனுகூலம் சமீபத்தில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிற வெகுதொலையிலுள்ள எல்லா இடங்களிலும், கோடிக்கணக்கான ஜனங்கள் இருவர்களைப்பற்றித்தான் நினைக்கிறார்கள். நாலுமாதங்களுக்குச் சற்றுமுன்பு அதாவது ஹிட்லர் தனக்குக் கீழ்புறமுள்ள அண்டை நாட்டில் துரோகமான முதல் தாக்குதல் செய்த சில நாட்களுக்குள்ளேயே இரண்டு அர்த்தகோளங்களில் வெளியாகும் பத்திரிகைகளின் தலையங்கங்களில் வேவல், ஆச்சின்லக் இவர்களின் பெயர்கள் பெரிய எழுத்துக்களில் தோன்றின. சில இடங்களில் அவர்கள்பேரில் அவநம்பிக்கையும், மற்ற இடங்களில் அவர்கள் செய்வதில் குறைகூறுவதும், அநேக இடங்களில் அவர்கள்பேரில் மனஸ்தாபமும், அச்சுநாடுகளின் ரேடியோவிலிருந்து ஏராளமாக ஏளனமும் இருந்துவந்தன.

வேவலும், ஆச்சின்லக்கும் தங்கள் அதிகாரங்களை மாற்றிக்கொண்டார்கள். அது சமயம் "யாருக்கு மேன்பதவி, யாருக்கு கீழ்பதவி" என்ற பிரச்னையில் ஈடுபட்டிருந்தவர்கள் சில நிகழ்ச்சிகளைக் கவனிக்கவில்லை. உதாரணமாக ராணுவ நோக்கப்படி மத்தியக்கிழக்கில் இருந்து சில பெரிய பிரதேசங்களை இந்திய அதிகாரத்துக்குள் சேர்க்கப்பட்டதும், இந்தியாவைவிட்டு புறப்பட்டுபோகும் பொழுது ஆச்சின்லக் சுட்டிக்காட்டிய இந்தியப் பாதுகாப்புக்கு வரிசை வரிசையாக ஏற்பட்டிருக்கிற பெரிய பிரதேசங்களை சுற்றளவு அதிகாரத்திலிருந்து அடிவார அதிகாரத்திற்கு ராணுவ முறையில் மாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அப்பிரதேசங்கள் இந்தியாவின் முன் அணியாக வைக்கப்பட்டு காபந்து செய்யப்படுகின்றன. வேவலுக்கு ருஷ்யாவைப்பற்றியும், ருஷ்ய பாஷை பேசுவதிலும் அவருக்குள்ள திறமையைப்பற்றி, முன்பின் யோசியாமல் சொல்லும் வியாக்தியான கர்த்தர்கள் ஒருக்கால் மறந்திருக்கலாம்.



## போலந்தில் பயங்கரம்.

மத்தியப் போலந்தின் நிலைமையைப்பற்றி மாடம் நூஸிலே பிரான்ஸ்கா அக்டோபர் 15-ல் பி. பி. ஸி. மூலம் ஒலிபரப்பினாள். அது மிகவும் நேர்த்தியாக இருந்தது. அவள் இங்கிலாந்தில் பிறந்திருந்தும், போலந்தினரை மணந்து அங்கு பத்து வருஷகாலம் இருந்தாள். ரீச் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டிருந்த மேற்கு மாகாணங்களிலிருந்து 90 லக்ஷம் போலந்தினரை மத்திய போலந்திலுள்ள ஜில்லாக்களுக்கு கெஸ்டாபோ என்னும் ரகசிய போலீஸ் பலாத்காரமாகக் கொண்டுவந்திருக்கிறது என்று அவள் சொல்லுகிறாள். குடியானவர்களை இருட்டுக்காலங்களில் பலாத்காரமாக வெளிக்கிளப்பி கூட்டம் கூட்டமாக கிழக்கு நோக்கிச்செல்லும் ரயில்களிலும், லாரிகளிலும் ஏற்றி அனுப்பப்படுகிறார்கள். அடிக்கடி ரயில்வண்டியோ, லாரியோ நிற்கிறது. அதற்கு துணைசெல்லும் உத்தியோகஸ்தர்கள் அதற்குள்ளிருப்பவர்களை அழைத்து அதிலுள்ள பிரேதங்களை எடுத்தெறியச் சொல்லுகிறார்கள். மாரிகாலத்தில் சிறு குழந்தைகளே அதிகம் மடிகின்றன. பனியின் கொடுமையால் சிறு குழந்தைகள் விறைத்து இறக்கின்றன. வண்டிகளில் ஏற்றிவரும் மனிதர்களை ஏதோ ஒரு கிராமத்தில் ஏற்கனவே வேலையகப்படாமலும், கட்டத்துணியின்றியும், சாப்பிட ஆகாரமின்றியும் வறுமைப்பிணியால் பீடிக்கப்பட்ட ஜனங்களின் மத்தியில் நின்று, இறக்கிவிடப்படுகிறார்கள். ஜெர்மன் தொழிற்சாலைகளில் பலவந்தமாக வேலைசெய்வதற்காக அடிக்கடி ஆட்களைச் சேகரிப்பதில் இவர்களுக்கு வேலை கிடைக்கிறது. ஜெர்மன் சைனியத்திற்கு கிராமங்களிலுள்ளவர்கள் ஈவுப்படி உணவுப்பொருள்களைக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஏதோ ஒரு ஜில்லா அவ்விதம் கொடுப்பதை மறுத்துவிட்டால் அங்குள்ள ஆண்மக்கள் கொண்டுபோகப்பட்டு, சவுக்காலும், கையாலும் அடித்தும், கைகால்களை ஒடித்தும், கண்களைக் கெடுத்தும் இவ்வித அவஸ்தைகளுக்கு உட்படுத்துகிறார்கள்.

> "ஓ தெய்வமே! மனிதவர்க்கத்தில் கடைசியாயும், இழிவாயுமுள்ள ஜாதியனரின் கொடுமைக்கு அடிமையாக எவ்வளவு நாள் ஜனங்கள் கஷ்டப்பட்டு உயிர்வாழ வேண்டும்."

1851-ம் வருஷத்தில் லார்டு டெனிஸன் என்ற ஆங்கிலக் கவி போலந்து நிலைமையைப்பற்றி இவ்விதம் வர்ணித்திருக்கிறார். அது இன்று நாஸிக் கொடுமையால் தவிக்கும் போலந்தின் நிலைமைக்குப் பொருந்தும்.

## "விநோஸ்லிவோஸ்டு" அல்லது விடாமுயற்சி.

### மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் ஒலிபரப்பில் பேசியது.

"1917-ம் வருஷக்கடாசியில், அதாவது கபொரெட்டோ என்னுமிடத்தில் இதாலி பலமாகத் தாக்கப்பட்டு சேதமடைந்த பிறகும், 1918-ம் வருஷத்தின் சரத் காலத்தில் முடிவான வெற்றியடைய பலமான எதிர்ப்புகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளை, ஊடன்டாப் செய்துகொண்டிருக்கும்பொழுது, நடுநிலை நாட்டிலிருந்து பிரஞ்சுக்காரர்களை சண்டையில்லாமல் சமாதானத்திற்கு இணங்கும்படி கிரேக முறையில் ஒரு தூதர் பாரிஸ் நகரத்திற்கு அனுப்பப்பட்டார்." "நாங்கள் யுத்தத்திற்கு பயப்படவில்லை" என்று அவருக்குப் பதில் சொல்லிவிட்டனர். "உங்களுக்கு என்ன நேருமென்று தெரியாது. நான் ஜெர்மனிக்குப் போயிருக்கிறேன். எனக்குத் தெரியும். உங்களைக் கட்டாயம் நசுக்குவார்கள். ஆதலால் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதைப்போல், காரியம் மிஞ்சிப் போவதற்குள் சமாதானம் செய்து கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்." என்று தூதன் சொன்னார். "நாங்கள் பயந்து விடவில்லை" என்று தான் அதற்கு மறுபடியும் பதில் வந்தது. "அது உண்மையானால், நீங்கள் உண்மையில் பயம் அடையாவிட்டால் எதிர்த்து நில்லுங்கள், ஜெர்மனியால் நீண்டகாலம் அந்த

# ஒவ்வொருவரும்

யுத்தத்தில் நேசதேசங்களின் வெற்றியை
விரும்புகிறார்கள்

மேலும்

# ஒவ்வொருவரும்

நல்ல பாகெட் டயரியையும்
விரும்புகிறார்கள்

ஆகவே ஒவ்வொருவரும் வெற்றி சின்னத்தோடு
பிரசுரிக்கப்படும்

1942-ம் 'வி' டயரி
வருஷத்திய புஸ்தகத்தை
வாங்கவேண்டும்

**இது குறிப்புப் புஸ்தகமுமாகும்**

விலை :—ரூ. 1—4—0, 1—8—0, 2—0—0.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் ஆபிஸிலும்,
ஸ்டேட் பிரஸிலும் கிடைக்கும்.

---

நிகர் லாபம் பூராவும் யுத்த நிதியைச் சேரும்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—1-11-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வரு நவம்பர்மீ 8உ [ந. 69.

பிரஸங்கம் LXIX.

## யுத்தப் பிரமுகர்கள்.

---

**பூர்வ பீடிகை.** ருஷ்யாவில் ஜெர்மானியரின் முன்னேற்றத்தால் அதிக பயமேற்படுவதாகக் காணப்படலாம். ஆபத்து மிகுந்த இந்நிலையில் நமக்குக்கிடைத்திருக்கும் சில சாதனங்களைப்பற்றி விசாரிப்பது பொருத்தமானதுதான். இவைகளால் ஏற்படும் உதவிகளைப்பற்றி அதிக விஸ்தாரமாக நான் இன்று சொல்லப்போவதில்லை. ஆனால், நாம் தற்காப்பு செய்துவரும் முறைகளுக்குள்ளிருக்கும் ஏதாவது ஒன்றிரண்டு அம்சங்களை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அதாவது, நமக்கு தெய்வபலம், சரீரபலம்; மனிதபலம், யந்திரபலம்; தலைவர்கள், சாமான்கள் இவைகளின் உதவியிருந்துதான் முன் நிற்கிறோம். இதில் தலைவர்களைப்பற்றி விசாரிப்போம்.

**தலைவர்கள்.** தலைமை வகிப்பது என்பது சிலருக்குத்தான் பிரத்தியேகமான குணமில்லை. ஆனால் ஒவ்வொரு ஸ்திரீ புருஷனுக்கும் இருக்கிறதென்று இந்த யுத்தத்திலிருந்து தெரிகிறது. மேலும் போர்க்களத்தில் பராக்கிரமம் வாய்ந்தவர்களுக்குத்தான் உண்டென்றும் சொல்லமுடியாது. ஏனென்றால் விமானம், தரை, கடல் முதலிய இடங்களில் நிற்கும் வீரர்களுக்குச் சரியாக வெற்றிபெறுவதற்கான சாதனங்கள் தொழிற்சாலைகளிலும் வீடுகளிலும் தயார் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாம் எவ்வளவு அவசியமானாலும் தலைவர்கள் இல்லாவிட்டால் பிரயோஜனப்படாது. ஆகையால் எவ்வளவோ பேர்களிடையில் முக்கியமாக நமது வருங்காலத்தை திட்டப்படுத்தும் சிலரைப்பற்றி சொல்லுகிறேன்.

**அரசர்கள்.** பொதுவாகப் பேசும்போது 'அரசியல் வர்க்கத்தினரை ஒரு பெரும் உதவியாக நினைக்கலாம். சாம்ராஜ்யத்தில் நமது அரசரும் அரசாணியும் ஒற்றுமை ஏற்படுத்தக்கூடிய தன்மையுள்ளவர்கள். தங்களது கம்பீரமான செய்கையால் அவர்கள்

### க்ஷேமம்.

"ஐரோப்பாவின் க்ஷேமத்தை முன்னிட்டு எல்லா ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேரவேண்டுமென்பதே தான் புது திட்டத்தின் நோக்கம்."

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஸெப்டம்பர் 1941.)

### ஆனால் யாருக்கு?

"ஜெர்மனியில் பதினேழு லக்ஷம் வெளிநாட்டு தொழிலாளிகள் இருக்கின்றனர். டென்மார்க்கின் மீன்களும், ஹாலாந்தின் வெண்ணெயும், பெல்ஜியத்தின் உருளைக்கிழங்கும், ருமேனியப் பழங்களும் நமக்கு கிடைக்கின்றன."

(பெல்ஜியம், ஹாலாந்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, அக்டோபர் 1941.)

---



## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 68—(5-வது பிரிவு).

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| நவம்பர் ... | 1, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| | 3, திங்கட்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | புத்தாம்பூர் ... | ,, | 6.30 |
| | 4, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருவரங்குளம் ... | மாலை | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 5, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |
| | 6, வியாழக்கிழமை ... | மேலூர் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 7, வெள்ளிக்கிழமை... | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 69—(1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 8, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 9, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| 10, திங்கட்கிழமை ... | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | பொம்பூர் ... | ,, | 6.30 |
| 11, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| 12, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | கீரனூர் ... | மாலை | 6.00 |
| | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| 13, வியாழக்கிழமை .. | அரிமளம் ... | ,, | 6.00 |
| | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| 14, வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | ள்ளுகோட்டை ... | ,, | 6.30 |

அரசபுரியும், ஜனங்களுக்கு திருஷ்டாந்தமாக இருக்கிறார்கள். இவர்களைப் போலவே, நாஜித் தொந்தரவை அழிப்பதில் முயற்சிகொண்ட, நார்வேயின் அரசரான ஹாகான், ஹாலந்து ராணி, லக்ஸம்பர்க்கின் தலைவி, கிரீஸ் அரசரான ஜார்ஜ், யூகோஸ்லாவிய இளவரசன் முதலியோர் ஸ்வதந்திரத்தை அடைவதற்காக செய்த முயற்சிகள் அநேகரை எதிர்பார்க்கக்கூடிய உணர்ச்சியை மூட்டுகின்றன. இவ்விதம் 'இயற்கையாகவே பெரிய மனிதர்களான' இவர்களைப் பற்றி தெரிவித்து, மற்றும் மனித வர்க்கத்திற்கு உபகாரமாயுள்ள மேலானவர்களைப்பற்றி சொல்லுகிறேன்.

**மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில்.** கால சக்தியும் தலைவனும்.—காலசக்தியினால் ஒருவன் தலைவனாகிறானா அல்லது தன் சக்தியால் காலசக்தியை உண்டுபண்ணுகிறானா? பல வருஷங்களுக்குமுன்பே கார்லைல் என்பவர், வீரன் இயற்கையான குணமுள்ளவனென்றும், உலகிலுள்ள தீங்குகளை நிவர்த்திக்கவே அவதரிக்கிறானென்றும் சொன்னார். ஆகையால் தெய்வீக சக்தியுள்ள அப்பேற்பட்ட தலைவன் சொல்வதை மௌனமாக பொது மக்கள் பயபக்தியுடன் அனுசரிக்கின்றனர் என்று சொல்வதுபோல் ஆகிறது. இதற்கு நேர் விரோதமாக, காலசக்தியால் தலைவன் அமைக்கப்படுகிறான் என்று சொல்லப்படுகிறது. உண்மை இந்த இரண்டு அபிப்பிராயங்களுக்கும் இடையில் இருக்கிறது. ஏனென்றால் தலைவன் புதிய விஷயங்களை சிருஷ்டிப்பதால் இயற்கையான மேன்மையுள்ளவனும், உசித காலத்தின் சம்பவங்களால் தலைமையைப் பெறுவதால் சில கட்டுப்பாட்டிற்குள் அடங்கியவனாகவும் ஆகிறான். ஆகவே சர்ச்சில் நன்மையளிக்கக்கூடிய அம்சங்களை சிருஷ்டிப்பதாகவோ, ஹிட்லர் தீமைகளை விளைவிக்கும் காரணங்களை உண்டுபண்ணுகிறதாகவோ சொல்லக் கூடாது. ஆனால் இருவரும் முறையே நன்மை, தீமை இவைகளுக்குக் காரணமான அம்சங்களைப் பின்பற்றுகிறார்கள் என்றுதான் சொல்லலாம். ஏனென்றால் நன்மை உண்டாகக்கூடிய பிரிடனில் ஹிட்லரும், தீமையிருக்கும் ஜெர்மனியில் சர்ச்சிலும் காலம் தள்ளமுடியாது. உஷ்ணப் பிரதேசத்தில் வளரக்கூடிய பூஞ்செடியை பனிப்பாங்கான இடத்தில் நடுவதால் பட்டுத்தானே போகும்.

**அவருடைய தேர்ச்சி.** அதிகார ஆசையினாலும், மனிதர்களைக் கொலைசெய்யும் எண்ணத்தாலும் ஜெர்மனியிலுள்ள புரட்சியே உருவெடுத்ததாக ஹிட்லரைச் சொன்னால், சர்ச்சில் 'இங்கிலீஷ்காரரின் சுவபாவமே' உருவெடுத்தவர் என்று சொல்லலாம். பிரிடிஷாரின் கீழ்படியாத உணர்ச்சியும், ஷேக்ஸ்பியர், டிரேக், ராலே, நெல்ஸன் போன்றவர்கள் வாழ்ந்த நாட்டிற்கு உவக்கும்படியான தன்மையும் பூண்டவர். அப்பேற்பட்ட நாட்டை அதிகம் பயமுறுத்த பயமுறுத்த சமயத்திற்கேற்க அதிகம் தைரியமாக எதிர்த்து நிற்கும். சுயம் கல்வியால் பலபுஸ்தகங்கள் எழுதியுள்ளார். அதோடு சிப்பாயாகவும் இருந்து வடமேற்கு மாகாணம், ஸூடான், தென் ஆபிரிக்கா, பிரான்ஸ் முதலிய இடங்களில் சண்டைகளிலும் ஈடுபட்டு இருக்கிறார். இவ்விதம் 40 வருஷங்கள் பொதுஜன சேவையிலேயே ஈடுபட்டு இருந்ததால் ஐரோப்பாவிலேயே நல்ல விஷயமறிந்தவர் என்றே இவரைச் சொல்லலாம்.

**அவரின் முன்னறிவு.** சென்ற யுத்தத்தில், வெர்ஸெய்ல்ஸ் உடன்படிக்கை ஏற்பட்ட சில வாரங்களுக்குள்ளேயே அதிலுள்ள கெடுதல்களைப்பற்றிச் சொல்லி மறுபடியும் யுத்தம் வருமென்று சொன்னார். அதன் பிறகு ஹிட்லருக்கு முதலாவதான எதிரி என்று பெயர் எடுத்தார். ஜெர்மனிக்குத் தகுந்தவிதமாக பயமுறுத்தக்கூடிய தண்டனை விதிக்கப்படவில்லை என்றும் அதை சின்னாபின்னப்படுத்தினால்தான் யுத்த முஸ்தீப்பு குறையுமென்று சொல்லிவந்தார். 1934-ம் வருஷத்திலேயே பிரிடனின் தற்காப்பிற்கு பெரிய விமானபலம் தேவையென்றார். "நமது தீவைக் காப்பாற்றப் போது



மான பந்தோபஸ்து கடலாதிக்கத்தால் மாத்திரம் கிடைக்காது; விமான பலமும்
வேண்டும்" என்றார். 'அதிக தன்னறிவால் ஹிட்லரின் தந்திரங்களை அறிந்தார்.
"ஹிட்லருக்கு தாக்ஷிண்யம் காட்டக் காட்ட மேலும் கேட்பான்" என்று அவர்
சொன்னது பலித்துவிட்டது. இப்படி விட்டதாலேயேதான் ஹிட்லரின் ஆசை
யும் அதிகரித்தது. முஸோலினி என்ற சர்பத்திற்குப் பால் வார்த்த விதமாக
மினிஸ்டர் ஈடன் உத்தியோகத்திலிருந்து விலக்கப்பட்டபொழுது "உலகம் பூரா
ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு அரசாங்கத்திலும், இங்கிலாந்தின் நண்பர்கள்
அவஸ்தைப்படுகின்றனர். அதன் எதிரிகளுக்குத்தான் கொண்டாட்டம்" என்று
மிகக்கடுமையாக சர்ச்சில் சொன்னார். ஆஸ்திரியா மீது ஹிட்லர் பாய்ந்தவுடனே
ஸெக்கோஸ்லாவாகியாவும் அடுத்த லக்ஷியமாகும் என்று சர்ச்சில் சொன்னதை
குறுகிய நோக்கம் கொண்டு, எப்படியாவது சமாதானம் தான் தேவை என்று
பொறுமையாக அப்பொழுது இருந்த பிரிடிஷ் அரசாங்கம் கேட்கவில்லை.
ஜோஸியம் சரியாகச் சொல்லியும் ஒருவரும் கேளாததால் கஸ்ஸான்டிராவைப்
போல சர்ச்சில் கவலைப்பட்டார். இவ்விதம் சொல்லுவதால் இவரை யுத்த
வெறி பிடித்தவர் என்று சொல்லிக்கொண்டு, பொம்மைகள் நிறைந்த மந்திரி
சபை அப்பொழுது இருந்ததால் ஹிட்லர் நொறுக்கிவிட்டு முன்னேறினான்.

**பிரதம மந்திரி பதவி.** நல்லகாலம் வந்தது. எட்டு மாதங்களுக்குப் பிறகு நார்வேமேல் படையெடுத்து,
டென்மார்க், ஹாலந்து வழியே ஹிட்லர் செல்லும்போது 1940-ஞ் மே மீ
11-டயில் அவரின் 66-வது வயதில் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டார்.
அச்சமயம் ஜனங்களுக்கு அவர் தெரிவித்தது பகிரங்கமாயும், தைரியமாயும்,
நம்பிக்கையுடனும், ஜாக்கிரமாயும் இருந்தது.

"இச்சமயம் ரத்தம், பரிச்ரமம், கண்ணீர் வியர்வை முதலியவைகளைத்
தவிர வேறே எதையும் பற்றிச் சொல்லமுடியவில்லை. கடுமையான நிலை இனி
இருக்கிறது. பல மாதங்கள் அவஸ்தைப்பட்டு யுத்தம் செய்யவேண்டியிருக்
கிறது."

"நமது கடமை என்னவென்றால் நமது பலத்துடனும், கடவுள் பலம்
பெற்றும், தரை, கடல், விமானங்களில் யுத்தம் செய்யவேண்டுமென்றதுதான்
பதில். இந்த யுத்தத்தால், மனிதன் செய்யக்கூடிய பெரும் பாபமும், இதுவரை
நேராததுமான கொடுங்கோலை ஒழிப்பதுதான் நமது திட்டம்."

"நமது லக்ஷியம் என்ன என்பதற்கு வெற்றியடைவதுதான். இந்த
வெற்றியை எப்படியாவது, எவ்வளவு சிரமம் நேர்ந்தாலும், எவ்வளவு காலம்
பிடித்தாலும், அடையவேண்டியதுதான். அது கிட்டாவிடில் நாம் எஞ்ச
முடியாது."

"அதை அடைவதற்கான மார்க்கத்தை ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனும்
பின்பற்றுகிறேன். ஏனெனில் எல்லாருடைய உதவியும் இருப்பதாக நான்
நினைக்கிறேன். ஆகவே 'வாருங்கள், நாம் எல்லோரும் ஒன்றுபட்டு பலமடைந்து
வெற்றியடைவோம்' என்று சொல்லுகிறேன்."

இவ்விதம் அவர் சொல்லி சில வாரங்களுக்குள்ளேயே பலிதமடைந்தது.
டன்கர்க் வெற்றிகரமாகக் காலிசெய்யப்பட்டது. பிரான்ஸ் விழுந்து, இதாலி
பிரிடிஷாருடன் உள்ள 70 வருஷத்திய சிநேகத்தை முறித்த துரோகியாகியது.
ஆகஸ்டு ஸெப்டம்பர் மாதங்கள் சென்றன. அப்பொழுது பிரிடன்பேரில் பலமான
விமானத்தாக்குதல் செய்யவும், கடல் மார்கம் தாக்கவும் தீவிரமாக எதிரி முயற்சித்
தான். ஆஸ்டர்லிட்ஸ் சண்டையில் பிட் என்பவரின் நிலையிருந்த மாதிரி இச்
சமயம் 'ஐரோப்பாவே எதிரிவசமாகும் போல் காணப்பட்டது.' ஆனால்
சர்ச்சிலின் கம்பீரமான தைரியத்தால் பிரிடனும் உலகமும் காப்பாற்றப்பட்டது.

இந்தத் தருணத்தை நினைக்கும்போதெல்லாம் பால்யத்தில் படித்த இப்பாட்டு நினைப்புக்கு வருகிறது :—

"ரோமாபுரியின் அதிபதியின் முகம் வாட்டமாயிற்று. பேச்சு மௌனமாயிற்று. விசாரத்துடன் முகம் கறுத்த ரோமின் கோட்டைச் சுவற்றை எவ்விதம் காப்பதென்று பார்த்தார். ஆனால் எதிரி கோட்டைவாசலை அடைந்தான்.

இந்த ஆபத்தான தருவாயில் தலைவாசல் காவல்காரனான வீர ஹொரேஷியஸ் தலைவனைப்பார்த்து மனம் விட்டு இவ்வாறு கூறினான்.

"இன்றோ நாளையோ பிறந்தவர் இறப்பது நிச்சயம். அதிக சத்துருக்களை எதிர்த்து முன்னோர்களின் சாம்பல் நிறைந்த புண்ணிய பூமிக்காகவும், கொண்டாடும் தெய்வங்களின் இல்லங்களுக்காகவும் இறப்பதைவிட வேறு புனிதமான மரணம் கிடையாது".

இதேவிதம் சர்ச்சில் முன்வந்தார். சமயத்திற்கேற்ற தலைவனானார். அவர் சொன்னதாவது :—

"யுத்த பயத்திலிருந்து தப்பியும், கொடுங்கோல் பயத்தைத் தள்ளியும் பல வருஷங்கள்வரை தேவையானாலும், இத்தீவைத் தற்காப்பு செய்துகொள்ள முடியுமென்று நான் நிச்சயமாக இருக்கிறேன். எல்லாக் கடல்களிலும், விமான மூலமும் தைரியமாக சண்டை செய்வோம். என்ன நேர்ந்தாலும் தற்காப்பு செய்வோம். கடற்கரைகளிலும், விமானம் இறங்குமிடங்களிலும், யுத்த அரங்கங்களிலும், தெருக்களிலும், மலைகளிலும் யுத்தம் செய்வோம். ஒரு நாளும் எதிரியிடம் சரண் அடையமாட்டோம்..........!."

"கோரமாயும், ஹடமாயும், வித்யாசமில்லாமல் லண்டன் மேல் குண்டுகள் வீசுவதென்பது ஹிட்லரின் படையெடுப்பின் திட்டம்தான். இந்த துஷ்டனும், மனதுக்குப் பிடிக்காத விரோத எண்ணங்களுக்கே இருப்பிடமானவரும், முன் செய்த குற்றங்களாலும், வெட்கத்தாலும் உண்டுபண்ணப்பட்டவருமான இவன், ஈவிரக்கமில்லாத தீங்கால் இத்தீவை அழிக்கப்பார்க்கிறான்".

"இவ்விதம் அவன் செய்வது பிரிடிஷாரின் மனதில் விரோதமான நெருப்பை விருத்தி செய்வதுபோல்தான் ஆகிறது. இந்த யுத்தம் முடிந்த பிறகும் அது எங்கும் பரவும்".

"கடைசியான நாஜிப் பூண்டு அழியும் வரை இந்த நெருப்பு எரிந்து கொண்டுதானிருக்கும். அதற்குள் அமெரிக்காவும் பிரிடனும் ஒன்று சேர்ந்து மனிதனின் ஸ்வதந்திரத்தையும், கௌரவத்தையும் சீக்கிரத்தில் சுலபமாக அழிக்க முடியாதபடி ஸ்தாபிப்பார்கள்."

பிறகு சரக்காலம் வந்து, மாரிகாலமும் தாண்டி, பிரிடனும் விமான யுத்தத்தை ஜயித்தவுடன் சர்ச்சில்தான் நாட்டின் நிஜமான தலைவரானார் :—

"முன் ஹொரேஷியஸ் சொன்னபடி வெற்றி பெற்ற கதையை யாவரும் இன்னும் சொல்வதுண்டு. அப்பொழுது பட்டணத்திற்கு வந்த ஆபத்தை நினைத்தால் அழுகையும் வெற்றியைக்கேட்டு ஆனந்தமும் உண்டாகும்" இது சந்தர்பத்திற்கு ஏற்றதாகும். அது முதற்கொண்டு அநேக முக்கிய சம்பவங்கள் நடந்தன. முக்கியமாக இதாலிய ஆபிரிக்க சாம்ராஜ்யம் அழிந்தது சர்ச்சிலின் தீர்க்க திருஷ்டியால் தான் ஏற்பட்டது. "கேட்ட மாத்திரத்தில் கிடைக்கும், மேலும் இடித்த மாத்திரத்தில் திறக்கும்", என்று அவர் வேவலுக்கும் சொன்னார்.



அவருக்கும் அலங்காரமாகப் பேசும் திறமையிருப்பதுடன் அவர் மனது எப்பொழுதும் வேலைசெய்துகொண்டிருக்கிறது. இவரின் நோக்கம் கேவலம் மனோராஜ்ஜியமல்ல. அவர் ஆயுள் முழுவதும் பொதுவுடைமைக் கொள்கையை எதிர்த்து வந்தாலும், ருஷ்யா போரில் புகுந்தவுடன் அதை வரவேற்றது எங்கும் பிரகாசித்தது. "நாஜிகளுடன் சண்டையிடும் ஒவ்வொருவரும் நமக்குச் சிநேகிதன்" என்று பகிரங்கமாய்ச் சொன்னார். பின்புறமிருந்து ஜெர்மன் விமானங்களைத் தாக்கி ருஷ்ய முயற்சிகளுக்கு உதவி கொடுப்பதாக பிரிடிஷார் சார்பாக வாக்களித்தார்.

"நாம் அல்லும் பகலும் அதிகரித்துக்கொண்டே வரும் விதமாக மாதா மாதம் ஏராளமான வெடிகுண்டுகள் ஜெர்மனியில் போட்டு மனித வர்க்கத்திற்கு ஜெர்மானியர்கள் செய்திருக்கும் துன்பங்களுக்கு அவர்களை இன்னும் அதிகமாக உணரும்படி செய்வோம்," என்றார்.

முடிவில் அமெரிக்க கூட்டுறவை சம்பாதிக்க வார்த்தை, பேச்சு, நடவடிக்கை மூலம் இவர் பாடுபட்டதுபோல் வேறொருவரும் உழைக்கவில்லை. உதாரணமாக அவருக்கு பிராங்ளின் ரூஸ்வெல்டுடன் அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஏற்பட்ட சரித்திர பிரக்யாதிபெற்ற சந்திப்பில் மானிட உரிமைகளை ஸ்தாபிக்க வரைந்திருக்கும் சாஸனமானது இவருடைய நோக்கங்களின் பரிபக்குவமாகும். அவர் பெரிய ராஜீய ஞானி என்பதை இது காட்டுகிறது. இப்பொழுது தற்காலத்திய தேவைகளை மட்டில் நினைக்காமல் வருங்காலத்தின் நன்மையை நாடி தன்னுடைய கல்பனையையும் விவேகத்தையும் கொண்டு உலகத்தின் சாச்வதமான சமாதானத்தை புனருத்தாரணம் செய்ய திட்டம் போட்டிருக்கிறார். அவர் மனக் கோட்டை கட்டுகிறவர் அல்ல. கேவலம் மனோராஜ்யத்தில் அவர் பட்டாபிஷேக கல்பனை செய்யவில்லை. இப்பொழுது ஹிட்லரின் கொடுமையை அழிக்காத போனால் வரும் காலத்தில் அமைதி இருக்காதென்று அவருக்குத் தெரியும். அவர் போட்டிருக்கும் திட்டத்தில் மற்ற எந்த விதமான கொள்கைக்கும் இடமிருக்கிறது.

**பிரக்யாதிபெற்ற மற்றவர்கள்.** இவர் இங்கிலீஷ்காரனானாலும், நம்மோடு ஈடுபட்டவரானதாலும், மிஸ்டர் சர்ச்சிலைப் பற்றி சற்று விஸ்தாரமாய் சொல்லும்படியாயிற்று. அவரைப்பற்றி சொல்லாமல் இருக்கமுடியவில்லை. ஆனால் இது சமயம் நாகரீகம் அழிந்துவிடாமல் காப்பாற்றக்கூடிய மற்ற மேதாவிகளும் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி சுருக்கமாக இங்கு சொல்லுகிறேன். அவர்களின் முதன்மையானவர் ஜனாதிபதி ரூஸ்வெல்டு. அவர் ஸ்வதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் வெல்ல முடியாத சிநேகிதர். இந்தக் காலத்திலும், மற்ற எந்தக் காலத்திலும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய பெரிய மனுஷ்யர்களில் இவர் ஒருவர். அட்லாஸ் பர்வதத்தை ஒரு பூதம் தலையில் தாங்கி நிற்பதாக புராணங்களில் சொல்வதைப்போல இவர் சர்வ தேசங்களின் பொறுப்பையும், வகிக்கிறார். அவருடைய விவேகத்தினாலும், காருண்ய புத்தியினாலும், திறமையினாலும், யுத்தத்தை பாராட்டாமலிருந்த அமெரிக்காவை ஜயத்திற்காக யுத்தப் பொருள்கள் உற்பத்திசெய்யும் ஆயுத சாலையாக மாற்றிவிட்டார்.

இந்தப் புதிய உலகத்தில் தோன்றியிருக்கும் இந்தப் பெரிய மனிதரைக் குறித்து இன்றிரவு நான் அதிகம் பேசவில்லை. பொதுவுடமைக் கக்ஷியை வெற்றிகரமாக நடத்தி, அதற்குத் தலைவராகி, இப்பொழுது திடமனதோடு ருஷ்ய யுத்தத்தை நடத்திவரும் ஸ்டாலினைப் பற்றியும் பேசுவதாக உத்தேசமில்லை. பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கு நெருங்கிய சிநேகிதர்களாக இருக்கும் பேரோக் மன்னரைப் பற்றியும் பிரஸிடெண்டு யூனேனுவைப் பற்றியும், நான் சொல்லவில்லை. போலந்திலிருந்த ஜான் மெஸரிக், ஸெக்கோஸ்லாவியாவிலிருந்து பீன்ஸ், ஸ்வதந்திரப் பிரெஞ்சுக்காரர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் டிகாலி இவர்களைப்

பற்றியும் நான் சொல்லவில்லை. குடியரசு நாடுகளில் இக்காலத்தை அனுசரித்து பெரியோர்கள் தோன்றியிருக்கிறார்கள். ஏற்கனவே பிரிட்டனுக்கு விரோதியாயிருந்த தளகர்த்தர் ஸ்மட்ஸ் இப்பொழுது உண்மையான மதிப்பும், நம்பிக்கையும் பெற்ற வீரராகவும், ராஜதந்திரியாகவும் இருக்கிறார். பிரிடிஷ் அரசாங்கத்தின் குறைதோஷங்களைக் கவனித்துக் கண்டிப்பதில் பின்வாங்காதவரும், லிபரல் கக்ஷியைச் சேர்ந்தவருமான மெகன்ஸி கிங் என்பவர் இப்பொழுது சாம்ராஜ்ய பக்தியில் ஆழ்ந்த விச்வாசத்தைச் செலுத்தி, யுத்தத்திற்கு வேண்டிய சாமான்களை அனுப்புகிறார். ஆஸ்திரேலியாவிலுள்ள மென்ஸீஸ், இதரர்கள் முழு மனதோடு யுத்த காரியங்களை நடத்துவதற்காக தன்னுடைய பிரதம மந்திரிப் பதவியை ராஜீநாமா செய்தார். அவருடைய பதவிக்கு இப்பொழுது வந்திருக்கும் மிஸ்டர் கர்டினும், அவரை ஆதரிக்கும் தொழில் கக்ஷிக்காரரும் முழுமனதோடு நடத்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பலவித கக்ஷிகளடங்கிய மேதாவிகளான பிரிடிஷ் மந்திரிகள் மிஸ்டர் சர்ச்சிலின் தலைமையின் கீழ் சாம்ராஜ்ய காரியங்களை நடத்திவருகிறார்கள். அவர்கள் ஈடான், பீவர்புருக், பெவின், மாரிஸன், ஸிங்க்ளேர், டால்டன், வுல்டன், கிங்ஸிலி வுட். மேலும் நம்முடைய மாட்சிமை தங்கிய வைஸிராயைப் போன்ற பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். பொதுமக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் ஸர் ராபர்ட் புருக்பாபம், அயல் நாட்டில் கொண்டாடப்படும், புதுவகை தூதர்களான ஹாலிபாக்ஸ் பிரபு, ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ராணுவத் தலைவர்களான பிரிடிஷ் தரைப்படையில் மிகுந்த புத்திசாலியான ஸர்ஜான் டில், ஏழுகடல்களை மௌனமாகக் காத்துவரும் ஸர்டட்லி பவுண்டு, மெடபன் கடல் யுத்தத்தில் ஜயித்த ஸர் ஆண்ட்ரு கன்னிங்ஹாம், ஆபிரிக்கா யுத்தத்தில் பெயர்பெற்ற ஜெனரல் வேவலுடன் அவர் தலைமையின்கீழ் போர்புரிந்து பிரக்யாதிபெற்ற, மேற்சொல்லியவரின் சகோதரரான A. G. கன்னிங்ஹாம், இவர்களைப்பற்றி பேச இப்பொழுது தருணம் கிடைக்கவில்லை என்று வருத்தப்படுகிறேன். ஆனால் வீரரான ஸர் ஆர்ச்பால்டு வேவலைப்பற்றி சற்று சொல்லாமல் இருக்கமுடியாது. இந்திய சைனியத்தின் தலைமையில் அவர் பெருமைகொண்டவர். அதேமாதிரி இந்தியா, அவர் தலைமை வகிப்பதில் பெருமைகொண்டிருக்கிறது. இக்காலத்தில் அவருடைய தீர்க்காலோசனை, சாமர்த்தியம், வீரம் இவைகள் நம் பாதுகாப்புக்கு வேண்டியிருப்பதால், அவரைப்பற்றி இரண்டொரு நிமிஷங்கள் சொல்வது மிகையாகாது.

**ஸர் ஆர்ச்பால்டு வேவல்.**

**அவர் வீரச் செயல்கள்.** ஸர் ஆர்ச்பால்டு வேவல் மேற்கு பாலைவனத்தின் மந்திரவாதியைப்போல் யாவரும் வியக்கும்படி வட ஆபிரிக்காவில் இதாலியின் சாம்ராஜ்யத்தைச் ஜயித்தவர். அவர் பிரிடிஷ் தரைப்படையின் புராதனமான கியாதியை அழியாமல் நிலைநிறுத்திவருகிறார். அவருடைய அரிய சாமர்த்தியங்களை நமது விரோதிகள்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மன் தளகர்த்தரின் தலைவர் கிடல் வெகு காலத்துக்குமுன் இங்கிலாந்து பிரவேசிக்கும் எந்த பெரிய போரிலும், வேவல் ஒருவரே மற்ற எல்லா தலைவர்களைக் காட்டிலும் தானே சமாளித்துக் கொள்வார். பிரிடிஷ் தளகர்த்தர்கள் எல்லோரிலும் இவர் சிறந்தவர் என்று ப்ரௌசிட்ஸ் சொல்லியிருக்கிறார். வடக்கு, கிழக்கு ஆபிரிக்காவில், லிபியாவில் எண்ணிக்கையில் சிறந்த எதிரிப் படைகளை அழித்தும், ஸோமாலிலாந்தை அவர்களிடமிருந்து கைப்பற்றியும், கொன் மலைப்பிரதேசத்தைப் பிடித்தும், அபிஸீனியா ராஜ்யத்தை ஏற்கனவே துரத்தப்பட்ட மன்னருக்கு மீண்டும் கைப்பற்றிக்கொடுத்தார். அவருடைய ராணுவ சாமர்த்தியத்தினால் இராக்கில் கலகம் உயிர்ச்சேதமில்லாமல் அடக்கப்பட்டது. ஸிரியாவில் கலகம் செய்தவர்கள் அடக்கப்பட்டார்கள். இரானில் துரோகிகள் நிர்மூலமாக்கப்பட்டார்கள். இவ்வளவு காரியங்களும் உயிர் நஷ்டமில்லாமல் முடிக்கப்பட்டன.



**அவர் சரித்திரம்.** 39 வருஷங்களுக்கு முன் பிரக்யாதிபெற்ற பிளாக் வாட்ச் ஸ்காட்டிஷ் படைப் பகுதியில் அவர் வேலைக்குப் புகுந்து, முந்தி தென்ஆபிரிக்காவிலும், இந்தியாவில் வடமேற்கு எல்லைபுறத்திலும், பிரான்ஸிலும், பாலஸ்தீனிலும் இருந்து வந்திருக்கிறார். ஸைப்ரஸில் சண்டையில் ஒரு கண்ணை இழந்தார். பாலஸ்தீனில் தளகர்த்தர் அலென்பி என்பவரின் தலைமையின்கீழ் பாலைவன யுத்த முறையையும், அராபியர்களின் தன்மையையும் நேரில் தெரிந்துகொண்டார். அந்தப் பழக்கம் இந்த மத்தியகிழக்குப் படையெடுப்புகளிலும் முஸ்லீம்களை ஒன்று சேர்ப்பதிலும் அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது. மாஸ்கோவில் ராணுவ தூதராக இருந்த சமயம் காகேஸஸிலுள்ள ருஷ்யப் படையுடன் அவர் நெருங்கிப் பழகி, பிரிட்டனில் ருஷ்யர்களைப்போல ஒரு குடை விமானப் படையைத் தயாரித்தார்.

நவீன யுத்த முறையில் ஆயுதங்கள் விசேஷமாக உபயோகப்படுகின்றன. மேலும், நில, நீர், ஆகாயப் படைகள் ஒத்துழைக்கும்படி செய்வதுதான் முக்கியமான விஷயம். வேவல் லிபியாவில் செய்த படையெடுப்பில் தரைப்படை, விமானப்படை, கடற்படை இம்மூன்றும் சேர்ந்து ஒத்துழைத்தது சிறந்த உதாரணம். இருந்தபோதிலும் அவருக்கு யந்திரங்களைக் காட்டிலும் மனிதர்களில்தான் நம்பிக்கை.

அவர் இனிய சுபாவம் உடையவராகவும் இருக்கிறார். மிருகத்தன்மையாகவும், பிரங்கியால் சுட்டழிக்கக்கூடியதுமான ஜெர்மன் தாக்குதல்களில் வரும் கூட்டங்களைக் காட்டிலும் அவர், தந்திரத்தையே பெரிதாக மதிக்கிறார். முரட்டுத்தனமாக சிப்பாய்களை கும்பல் கும்பலாக பலி கொடுப்பது ஜெர்மானியர்களின் கொள்கை. அவர்கள் மிருக பலத்தினால் முடிவில் சிலர்கள் மட்டில் பிழைத்து எதிரியின் ஸ்தானத்தைக் கைப்பற்றுவார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் தள்ளப்படுவார்கள். ஜயம் கிடைக்குமென்ற நம்பிக்கையின்பேரில் அவர் ஒருபொழுதும் தன் வீரர்களை பலி கொடுக்கவில்லை. ஜயம் நிச்சயமாகக் கிடைக்கும் என்று தோன்றும் வரை அவர் வேலை செய்வார். பெரிய வெற்றிகளைக் குறைந்த உயிர் சேதத்தோடு அடையும் பிரக்கியாதியை இவர் பெற்றிருக்கிறார்.

அவர் படைகளை வகித்து ஆதரித்து நடத்துவது, ஜாக்கிரதையாக தயாரிப்பது, ஸப்ளைகள் சரியாக இருக்கும்படி செய்வது, அவர் வீரர்களிடம் வாத்ஸல்யம் காட்டுவது இவைகள் அவருடைய விசேஷ குணங்களாகும். நைல் நதி பிரதேசத்திலுள்ள படையில் பல தேசத்தினர்கள் சேர்ந்திருந்தபோதிலும், ஒவ்வொரு தனிப் பகுதியைக் குறித்து வேவல் முழு விவரமும் தெரிந்துகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது மத்தியகிழக்கு போர்முனையைப்பற்றி அவர் நன்றாய் தெரிந்துகொண்டிருக்கிறார். யுத்த தந்திரத்தில் நிபுணர். இந்த சாமர்த்தியம் அநேக யுத்த அரங்கங்களில் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது இந்தியா அதன் தேச சரித்திரத்திலேயே இல்லா நிலைமையில் அதாவது ஆபத்து அணுகியிருக்கும் காலத்தில் அவர் அதிர்ஷ்ட வசவாய் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். அவருக்கு இந்தியா தேசம் நன்றாய்த் தெரியும். அவருக்கு இந்தியர்களிடத்தில் அபிமானம் உண்டு. இந்தியாவில் மேற்கு பாகத்தில் ஏற்கனவே அணைபோட்டுவிட்டார்.

இவரைப் போன்ற மஹா வீரர் வேறொருவர் இந்தியாவுக்குக் கிடைப்பது அரிது. அவர் தலைமையின்கீழ் ஒற்றுமையிலும், வேலையிலும், பொருளுதவியிலும், சிப்பாய்கள் சேர்ப்பதிலும், கீழ்படிந்து அவர் கட்டளைக்குக் கீழ்படிந்து முடித்து வைப்பதுதான் நமது கடமை.

# வாரயுத்தச் செய்திகள்.

30—10—41-லிருந்து 5—11—41-வரை.

**மாஸ்கோ.**—மாஸ்கோவைச்சுற்றி கடுமையாக யுத்தம் நடந்து வந்தாலும், இப்பாகத்தில் எதிரிகள் கொஞ்சம் முன்னேறியதாகச் சொல்வதற்கில்லை. காலதாமதத்திற்குச் சீதோஷ்ண நிலைமையின் கொடுமையைச் சொல்லுகிறார்கள். அங்கு பனி அதிகமாக விழுந்து ரஸ்தாக்களில் உறைந்து நிற்பதால், நூதனமான எதிர்ப்புகள் ஆரம்பித்திருக்கிறதாக சமீபத்தில் வந்த செய்திகளிலிருந்து தெரிய வருகிறது. துலாவிலிருந்து எதிரிகளின் மிரட்டல்கள் அதிகமாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது எதிரிகள் அதைப் பிடித்துவிட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கலினின் பக்கத்திலும் அபாயம் இருக்கிறது. ஏற்கனவே எதிரி பிடித்திருந்த ஒரு பாகத்தை ருஷ்யர்கள் திரும்பப் பிடித்திருக்கிறார்கள். மொஜேஸ்க், வோலாகொலாமஸ்க் இவ்விடங்களிலும் அபாயம் இருக்கிறது. அங்கு ருஷ்யர்கள் பலமாக எதிர்த்து நிற்கிறார்கள். நாரா நதியைக் கடப்பதற்கு ஜெர்மானியர்கள் செய்த பிரயத்தனங்கள் வீணாயின. இருந்தாலும் அவர்கள், வால்கா நதிக்கரையில் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கு ருஷ்யர்களைப் பின்னேறும்படி செய்துவிட்டனர்.

மர்மான்ஸ்க்கை அடைய சண்டை செய்யும் பின்லாந்துக்காரர்கள் வெள்ளைக்கடல் (White Sea) பக்கம் ருஷ்யக் கரேலியாவிற்குள் பிரவேசித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. கோவஸ்டோச்கப்பாவுள்ள அநேக தீவுகளை அவர்கள் கைப்பற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**யூக்ரேன்** பிரதேசத்தில் டான் நதி, காகேஸஸ் இவைகளை நோக்கி முன்னேறிச்செல்ல பிரமாதமாக ஏற்பாட்டுடன் புதிய முறையில் தாக்க ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

**கிரிமியாவில்** பூசந்திக்குள் கடந்து சென்றதாகவும், கிரிமியாவின் தலைநகரான ஸிம்பெராபோலையும், ஸெபாஸ்டபூலுக்கும், கெர்ச்சுக்கும் இடையிலுள்ள துறைமுகமான தியடோஷியாவையும், ஜெர்மானியர்கள் பிடித்துக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்னும் இது ஊர்ஜிதப்படவில்லை. இருந்தாலும், 'ரெட் ஸ்டார்' பத்திரிகை "கிரிமியா மிகவும் அபாயநிலையில் இருப்பதாக" கூறுகிறது. இன்னும் ஜெர்மானியர்கள் கிரிமியாவில் ஒருபாகத்தைப் பிடித்துவிட்டதாகவும், அந்த யுத்தத்தில் ஒருசைனியம் பூராவும் இழந்துவிட நேர்ந்ததென்றும், அதில் குறைந்த பக்ஷம் இறந்தவர்களும், காயமடைந்தவர்களும் 90,000 பேர்களும், 150 விமானங்களும், 205 பீரங்கிகளும், நஷ்டமென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் எதிரிகள் ருஷ்யப்படைப் பகுதிகளை முறியடிக்க முடியாமலும், அவர்கள் எதிர்ப்பைக் குறைக்கமுடியாமலும் போனது மிகவும் முக்கியமான விஷயம்.

**காகேஸஸுக்கு அபாயம்.**—ஜெர்மானியர்கள் கிரிமியாவில் முன்னேறியது, காகேஸஸுக்கு அபாயத்தைக் குறிக்கிறது. முதலாவது பலன், ருஷ்ய சைனியத்துக்கு காகேஸஸிலிருந்து வரும் எண்ணெய் தடைபட்டுவிடும். ஆனால் பூதகனமுறைப்படி நீண்டகாலத்திற்கு ஜெர்மானியர்கள் அங்குள்ள எண்ணெயைக் கைப்பற்ற கொண்டிருக்கும் ஆவல் நிஷ்ப்பிரயோஜனமாக்கப்படும். கொஞ்சகாலம் போரை நிறுத்தி, ஓய்வு எடுத்துக்கொண்டு பிற்பட்டு மத்தியக்கிழக்கிலும், ஆபிரிக்காவிலும் சேகரிக்கப்பட்டிருக்கிற பிரிடிஷ் படைகளைத்தாக்கும் பைத்தியக்காரவேலையில் ஈடுபடுவார்கள். அல்லது மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் தளங்களைத் தாக்கவும் ஆரம்பிப்பார்கள்.



**கருங்கடல்.**—ஆனால் இங்கு இன்னும் எதிரியின் மிரட்டல் இல்லை. இதுவரை கருங்கடல் ருஷ்யாவின் பூரா ஆதிக்கத்தில் இருந்துவருகிறது. இது விவரம் ஒடெஸ்ஸாவிலிருந்து துருப்புகள் வெற்றிகரமாக வெளியேறியதிலிருந்தும், அங்கிருந்து யுத்தப் பொருள்கள், ஸெபாஸ்டபூலுக்குச் செல்லப்பட்டதிலிருந்தும் தெரியவருகிறது. ஸெபாஸ்டபூல் பலமாகக் காபந்து செய்யப்பட்டிருக்கிறது. கருங்கடலில் ருஷ்யக் கப்பற்படைக்கு ஒரு யுத்தக் கப்பல், 5 க்ரூயிஸர்கள், 27 நாசகாரிகள், 50 மோட்டார் படகுகள், 50 நீர்மூழ்கிகள் இருக்கின்றன. ஆனால் அச்சுநாட்டுக்கு 5 நாசகாரிகள், 5 மோட்டார் படகுகள், இரண்டொரு நீர்மூழ்கிகள் தான் இருக்கின்றன. இந்தக் கப்பற்படை அழிவடையாமலும், கருங்கடலில் ருஷ்யத் துறைமுகங்கள் பிடிபடாமலும் இருக்கும்வரை காகேஸஸுக்கு அபாயமில்லை. கடைசியில் ருஷ்யக் கப்பற்படை ஸெபாஸ்டபூலிலிருந்து நோவோரோஸிஸ்க், துயாப்ஸி, போத்தி, காஸ்பியன் கடலிலுள்ள பாடும் இந்த இடங்களுக்குச் சென்றுவிடலாம். இந்தக் கப்பற்படையை அழிக்க டார்டனெல்ஸ் வழியாக அச்சுநாடுகள் உதவிப்படை கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவந்தால் துருக்கியும் போர்தொடங்கும்.

நவம்பர் 2-ம் தேதியில் துருக்கி அரசாங்க சபையின் மாரிகால கூட்டம் ஆரம்பித்தபொழுது, துருக்கி யுத்தத்திற்கு நடுவே தனிப்பட்டிருந்தாலும், தாக்குதலை எதிர்க்கவும், தன்னுடைய ஸ்வதந்திரத்தையும், பால்கன் நாடுகளின் ஸ்வதந்திரத்தையும் நிலைநிறுத்தத் தீர்மானித்திருப்பதாக பிரஸிடெண்டு யூனுனு சொன்னதிலிருந்து தெரியவருகிறது.

இவ்விதம் உறுதி சொன்னது நல்ல தருணம். அது திருப்தியை அளிக்கிறது. இருந்த போதிலும் யுத்தம் வந்தால் துருக்கி தன்னந்தனியாகச் சமாளிக்க முடியாது. மாரிகாலம் வந்ததினால் காகேஸஸ் தாக்க முடியாமல் போய், யுத்தம் சிறிது காலத்திற்கு தாமதிக்கப்படும். ஆனால் வசந்தகாலம் வந்தவுடன் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கலாம். இதனிடையில், ஒரு புறம் ஜெர்மானியர்கள் காகேஸஸ் பக்கம் முன்னேறப் பிரயத்தனப்படுவதற்கும், மத்தியக்கிழக்கு பூராவிலும் தற்காப்புகள் பலப்படுத்துவதற்கு பிரிடிஷார்கள் பிரயத்தினப்படுவதற்கும் போட்டியுண்டாகும். வேவல் எச்சரிக்கை செய்திருக்கிறார். அவர் நவம்பர் மாதம் 4-ம் தேதி சிங்கப்பூரிலிருந்து பேசியதில் ருஷ்யாவின் நிலைமை அபாயகரமாக இருப்பதாகவும், ஆனால் ஜெர்மானியர்கள் இந்தியா பக்கம் வந்தால் வடமேற்கு எல்லைப்புறம் நெடுகிலும் பலமான எதிர்ப்பு ஏற்படும் என்றும் தெரிகிறது. இன்னும் அவர் சொல்லியதில் இந்தியத் துருப்புகள் அனுப்பப்படாவிட்டாலும், இந்திய ஸப்ளைகள் ஏராளமாக ருஷ்யாவுக்குப் போய்க்கொண்டிருப்பதாகவும் இந்தியாவுக்கும், ஸோவியத் அரசாங்கத்திற்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்தியா ஏமாளித்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனென்றால் எதிரி அதன் கோட்டைவாயிலில் இருக்கிறான்.

**ஸப்ளை மார்க்கங்கள்.**—பர்ஸியன் குடாக்கடல் போக்குவரத்துக்குப் புதிய வழிகள் கண்டுபிடிக்கவும், கிரிமியாவில் யுத்த நிலைமை அபாயம் அதிகரித்துவிட்டதால், ஏற்கனவேயுள்ள வழிகளை அபிவிருத்தி செய்யவும் அவசியம் நேரிட்டிருக்கிறது. இது தான் மத்தியக்கிழக்கில் பிரிடிஷ் அரசாங்கத்தாரின் வேலை. பண்டர்ஷா ஒரு சிறு துறைமுகம். இரான் வழியாகச் செல்லும் இருப்புப்பாதை செங்குத்தாகச் செல்லவேண்டியிருக்கிறது. உள்ளே போக வேறுவழிகள் கண்டுபிடிக்க வேண்டும். பர்ஸியன் குடாக்கடலையும், இராக், இந்தியா, ருஷ்யா இவற்றையும் பிணைத்து உபரியாக இருப்புப்பாதை போடப்பட்டுவருகிறது.

**ஆர்க்கேஞ்சலும், விளாடிவாஸ்டாக்கும்.**—ருஷ்யாவிற்குச் செல்லும் ஆர்க்கேஞ்சல் மார்க்கம் போஸ்டன் அல்லது நியூயார்க்கிலிருந்தும், மற்றொன்று விளாடிவாஸ்டாக் மார்க்கம் ஸான் பிரான்ஸிஸ்கோவிலிருந்தும் சமதூரத்திலிருக்கின்றன.

இருந்தபோதிலும் மாரிகாலத்தில், அதாவது நவம்பர் முதல் மே மாதம் வரை, பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தாலும் ஆர்க்கேஞ்சல் மார்க்கத்தை மேலாகக் கருதப்படுகிறது. நூற்றுக்கணக்கான கப்பல்கள் தங்கியிருக்க வசதியுள்ள ஒரு துறைமுகம் அங்கேயிருக்கிறது. மேலும் உள்நாட்டிலிருந்து நன்முயிருக்கும் ரயில்வே ஏற்பாட்டினுலும் ஒபி, எனுஸே, லேனு இந்த நதிகளினுலும் இணைக்கப் பட்டிருக்கிறது. மாரிகாலத்திலும் கூட பனிக்கட்டியை அகற்ற ஏற்பாடு செய்து கொண்டு அந்த மார்க்கத்தைத் தடங்கலன்னியில் வைத்துக்கொள்ளலாம். அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் வேவு பார்க்கும் கப்பல் திட்டம் நன்முய் அமைக்கப்பட்டிருக்கிறது. யுனைடெட் ஸ்டேட்ஸின் உற்பத்தி ஸ்தானங்கள் போஸ்டனுக்கும் நியூ யார்க்குக்கும், உள்ள தூரம் ஸான் பிரான்ஸிஸ்க் கோவை விட சமீபத்தில் இருக்கிறது. ஏற்கனவே பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் அட்லாண்டிக் வழியாகவும், பிலிபையின் கடல் தீவுகள் ஆஸ்திரேலியா, வழியாகவும் கிழக்கு இந்தியத் தீவுகள், அதாவது ஆர்க்டிக் கடல் வழியாகவும், ஆர்க்கேஞ்சலுக்கு ஸப்ளைகள் வந்துகொண்டிருக்கின்றன. ராஜ்ஜிய தந்திரமான ஜயத்தைக்கோரி ஜப்பான் வ்ளாடிவாஸ்டாக்கை கைவிட்டதாக ஜப்பானில் சொல்லப்படுகிறது.

**பின்லாந்து.**—மர்மான்ஸ்க் பிரதேசத்தில் பின்லாந்துக்காரர்கள் புதிய தாக்குதல் ஆரம்பித்ததில் இன்னும் ஆக்கிரமிப்பில் இருந்தால் அமெரிக்க சிநேகிதத்தை பின்லாந்து இழந்துவிடுமென்று யுனைடெட் ஸ்டேட்ஸ் எச்சரிக்கை செய்திருக்கிறது. திருப்திகரமாக பதில் சொல்லாவிடில் ஏன் பின்லாந்து பேரில் யுத்தம் துடங்கக்கூடாதென்பதை பிரிடன் யோஜித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**தூரக்கிழக்கு.**—பொருளாதார முற்றுகை ஜப்பானை பாதிக்க ஆரம்பித்து விட்டது. இனி நெதர்லாந்து கிழக்கு இந்தியத் தீவுகள் இவற்றுடன் ஜப்பான் செய்து கொண்டிருந்த ஒப்பந்தம் இந்த மாதத்தில் முடிந்துவிட்டதாலும் புதிப்பிக்கப்பட வில்லை யாதலாலும், ஜப்பானுக்கு ஒரு சொட்டு எண்ணெய் கூட இனிமேல் கிடைக்காது. பிலிபைன் தீவுகளிலிருந்து இரும்பு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடைபட்டிருக்கிறது. ஜப்பானின் பழம், மீன் இவைகள் கெடாமல் பெட்டியில் அடைத்து வெளியூருக்கு அனுப்பும் வியாபாரம், வாங்குவோர் இல்லாததால் குறைந்துவிட்டது. இந்தியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் விளைபொருள்கள் ஸப்ளை இல்லாததினுல் பருத்தி, க்ரெயான் (Crayon) பட்டு நெசவு கைத்தொழில்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சீன யுத்த தளங்களில் ஜப்பானுக்கு அதிக நஷ்டம் நேர்ந்துவிட்டதால் தொழிலாளிகள் பிரச்னை கிளம்பியிருக்கிறது. வேலைசெய்யும் காலம் நீடிக்கப்பட்டும், ஸ்திரீகளையும் வேலைசெய்ய நியமிக்கப்பட்டும் வருகிறது.

ஜப்பானுக்கு இவ்வளவு கஷ்டமிருந்தபோதிலும் அதன் அதிகார ஆசை மாத்திரம் குறையவில்லை. தூரக்கிழக்குப் பிரச்னை வரவர கெட்டு வருகிறதென்று சில சூசகங்களிலிருந்து தெரியவருகிறது. ஜெர்மானியர்கள் இந்தியாவை நோக்கி கிழ்பக்கம் முன்னேறி வருவதில், தளகர்த்தர் வேவல் மேற்கே சிங்கப்பூருக்குப் போய் முதன்மையான ஸ்தானத்தை வகிக்கிறுர். இரண்டு ராஜ்யங்களுக்குள்ள நிலைமையை முன்னிட்டு பஸிபிக் சமுத்திரத்திலிருக்கும் கூவம், மிட்வே, வேக் இந்தத் தீவுகளிலிருந்து, அமெரிக்க ஸ்திரீகள் காலிசெய்து வருகிறுர்கள். தூரக் கிழக்குப் பிரதம சேனுதிபதியான ஸர் ராபர்ட் புரூப் பாபம், கப்பற்படை உதவித் தலைவர் ஸர் ஜாப்ரே லெய்ப்டன் இவர்களிடம் வேவல் பேசியதிலிருந்து மேற் சொல்லிய விஷயம் தெரியவருகிறது. மத்தியதரைக்கடலிலிருக்கும் ஆஸ்திரேலியக் கப்பற்படைப் பகுதிகள் ஆஸ்திரேலியாவின் வடக்குப்பக்கமான சமுத்திரக் கரைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே விஷய இலாகா மேலதிகாரியாக இருந்த ஸர்கீத்மெர்ஸ்டாக் சொல்லுவதாவது: "ஜப்பான் தன்னை விட்டு



வைக்கும் வரையில் முன்னேறிச்செல்லும். உண்மையில் ஜனநாயகங்கள் தங்கள் பலத்தைச் சேகரித்திருப்பது, நிச்சயமாக இருந்தால் பஸிபிக் பிரச்னை கூடிய சீக்கிரத்தில் தீர்ந்துவிடும். பஸிபிக் சமுத்திரத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படை வந்து சேர்ந்தபிறகு யுத்த நிலைமை முந்தியைக் காட்டிலும் அனுகூலமாகயிருக்கிறது. ஆனுல் இன்னும் யுத்தம் வரும்போலிருக்கிறது".

**ஆஸ்திரேலியா.**—முடிந்தால் ஒரு கை, ஆஸ்திரேலியாவையும் ஜெர்மனி பாயப் பார்க்கும். இதற்கு ஒத்தாட்போல் அட்மிரல் லட்ஸெள, ஆஸ்திரேலியாவை ஜப்பான் தாக்கவேண்டும் என்று தயாளமான உபதேசம் செய்திருக்கிறுர். ஒருக்கால் ஆஸ்திரேலியத் தற்காப்பு தளர்ந்துவிட்டதாயும், புதிய மந்திரிகளுக்கு யுத்தத்தில் அலுப்பு ஏற்பட்டிருப்பதாயும் அவர் நினைக்கிறுர் போலும். அப்படியானுல் இரண்டு நோக்கங்களும் தப்பாகும். புதிதாக அமைக்கப்பட்ட லேபர் மந்திரி சபை பூராவாக யுத்தத்தில் இறங்கியிருப்பதோடு உத்தியோகத்திற்கு வந்ததுமுதல் யுத்த முயற்சியை அதிகம் செய்திருக்கிறது. இதற்கு அனுகுணமாகத்தான் லண்டனிலுள்ள ஆஸ்திரேலியப் பிரதிநிதி ஸர். ஏர்ல்பேஜ் சொன்னுர். "ஆஸ்திரேலியா முன்பைவிட அதிகமாக ராணுவ பலம் கொண்டிருக்கிறது. யுத்தத்தை ஜயிக்க ஒற்றுமையும் பெற்றிருக்கிறது. இதற்காக 4,50,000 சைனியத்தில் சேர்ந்தும், யுத்த ஆரம்பகாலத்தைவிட 20 மடங்கு யுத்த தளவாட உற்பத்தி அதிகரித்திருக்கிறது. 60 மடங்கு ஆகும். 60,000 விமானங்கள் இருப்பதோடு மேலும் விருத்தியாகிறது. சாம்ராஜ்யம் இப்பொழுது ஜப்பான் விஷயத்தில் கொஞ்சம் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கும் என்று புதிய பிரதம மந்திரி மிஸ்டர் கர்டின் தெரியப்படுத்திவிட்டார்".

**அமெரிக்கா.**—இவ்வாரத்தில் ஐஸ்லாந்திற்கு அருகே மேலும் இரண்டு அமெரிக்கக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது. இதில் ஒன்று ஸாலினுஸ் என்ற எண்ணெய்க் கப்பல். இது அக்டோபர் 29-30லும், மற்றொன்று ரூபன் ஜேம்ஸ் என்ற நாசகாரி இது 30-31-லும் மூழ்கின. இதற்கு பிரதியாக, அமெரிக்கச் சண்டைக் கப்பல்கள் அட்லாண்டிக்கில் காவல்புரிந்து யூ படகுகளை தொலைத்துவருகின்றன. இவ்விவரங்கள் பிரசுரிக்கப்படாத போனுலும் 'அமெரிக்காவிற்கு நேர்ந்த நஷ்டத்தைக் காட்டிலும் ஜெர்மனிக்கு அதிகம் விளைந்திருக்கிறது, என்று அதிகார பூர்வம் தெரிகிறது.

மிஸ்டர் ஜான், L லூயி, சுரங்கத் தொழிலாளர் சங்கத் தலைவன் வேலையை மறுபடி தொடங்க ஏற்பாடு செய்துவிட்ட விஷயம் சந்தோஷகரமானது. ஆகவே உள்நாட்டு வியவசாயங்களிலும் பிரஸிடெண்டின் அரசியல் சாதுர்யம் பலித்து வருகிறதென்று தெரிகிறது. இதுபோலவே (நியூஜெர்ஸி) பெண்டிக்ஸ் விமானத் தொழில் சச்சரவுகளும் தீர்ந்துவிட்டன. இந்த சமயம் பிரஸிடெண்டு கொஞ்சம் பயமுறுத்தியே காரியத்தை முடித்திருக்கிறுர். நடுநிலைச் சட்டத்தைத் திருத்தியமைக்கும் விஷயத்திலும் அவரது பொறுமையும், அறிவும் பலித்து வருகின்றன. அமெரிக்கா பூரா ஒற்றுமையுள்ள லக்ஷியத்தை அடைய விரும்புவதோடு பிரஸிடெண்டின் நோக்கத்திற்கு அதிகமாகவும் அமெரிக்க காங்கிரஸ் சபை செல்ல விரும்புகிறது. உதாரணமாக பிரஸிடென்டு, வியாபாரக் கப்பல்களுக்கு ஆயுதம் ஏற்ற அனுமதி கோரினுல், அவைகளை நேசநாட்டுத் துறைமுகங்களுக்கு அனுப்ப சபை விரும்புகிறது. பிரஸிடெண்டு 'தனக்குத் தோன்றியபடி கடுமையாகச் செல்லாமல் ஜாக்கிரதையாக இருக்கிறுர்' என்று மிஸ்டர் வெண்டல் வில்கி அபிப்பிராயப்பட்டார்.

**திருட்டுச்சரக்கு, கள்ளவியாபாரம்.**—ஜெர்மனியின் உபயோகத்துக்காக யுத்த சாமான்களை விஷி அரசாங்கம் கள்ளத்தனமாய் தன் கப்பல்களில் உணவுப் பொருட்களென்று பாசாங்குசெய்து ஏற்றிவந்து ஸப்ளைசெய்கிறது. இந்தத் திருட்டு வியாபாரம் சென்ற ஒரு வருஷமாக செப்டம்பர் மாதத்திலிருந்து

துவக்கப்பட்டு, இதுவரையில் இந்தச் சரக்குகளைக்கொண்டுவந்த 1,64,000 டன் நிறையுள்ள 39 பிரெஞ்சுக் கப்பல்கள் பிரிடிஷ் கடல்காவல் படைகளால் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதேமாதிரி, சமீபத்தில் 39,000 டன் நிறையுள்ள 5 வியாபாரக் கப்பல்கள் ஆபிரிக்காவுக்குச் சமீபத்தில் துணைகாவலோடு வரும்போது பிரிடிஷ் கடற்படையால் மறித்துக்கொள்ளப்பட்டன. அப்பொழுது இவைகளில் 3 கப்பல்கள் தற்கொலை செய்துகொள்ளப் பார்த்தன. அதாவது தானே தன்னை உடைத்துக்கொண்டு, மூழ்கிவிடப்பார்த்தன. ஆனால் இவ்வாறு சேதமாகாதபடி தடுக்கப்பட்டன. ஜெர்மனிக்கு யுத்தத்தை நடத்த ரப்பர் அவசியமாயிருக்கிறது. இதை பிரான்ஸ் இருட்டுத்தனமாய் கொண்டுவந்தாலொழிய அடைய வேறுவழியில்லை. இப்பொழுது விஷியின் வியாபாரக் கப்பல்களெல்லாம் ஜெர்மனியின் ஆதினத்திலிருக்கின்றன. இப்பொழுது இவைகள்போகவேண்டிய இடங்கள், பாதைகள், ஏற்றவேண்டிய சாமான்கள், ஆகிய ஒவ்வொரு விவரமும் ஜெர்மனியால் நிர்ணயிக்கப்படுகிறது. கப்பல்கள் அகப்பட்டுக்கொண்டால் தற்கொலை செய்துகொள்ளவேண்டுமென்று ஜெர்மனி பிரப்பித்திருக்கும் உத்தரவும் இப்பொழுது பிரிடிஷார் கைவசமிருக்கிறது. ஆகவே இது விஷயத்தில் விஷி அரசாங்கம் குறைகூறுவதில் பிரயோஜனமில்லை. நிதானித்துப் பார்த்தால் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் பிரான்ஸின் பாகத்துக்கும், விஷி பிரான்ஸ் என்ற பாகத்துக்கும் வித்தியாசத்தைக் காணோம். வித்தியாசம் காண்பிப்பதும் பரிகாசத்துக்கிடமாகும். பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையில் வட ஆபிரிக்காவுக்கும் பிரெஞ்சு மத்திய தரைக்கடலுக்கும் நடுவே பிளவு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு விஷிதான் காரணம். இதை அடைக்கவேண்டும்.

**பிரிடிஷ் விமானங்கள்.**—ஆர்க்டிக் சமுத்திரத்திலிருந்து லிபியன் கடற்கரை வரையுள்ள பிரதேசங்களில் விடாமலும், தளராத ஊக்கத்துடன் தாக்கிவந்தன. கீல், ப்ரமென், கொலோன், கார்ல்ஸ் ருஹி, ஹாம்பர்க் என்ற இடங்களையும்; நார்வேயில் டங்கர்க், 'புலாயின்' அயாப்ஸண்டும்; இதாலியில் நேபிள்ஸ், ஸிட்டர்கோ, ஸோவரூடோ, லோகிரில்ஸாம்; ஸிஸிலியில் பாலெர்மோ, கொடா முதலிய இடங்களையும் இவ்வாரத்தில் தாக்கிவந்தன. மத்தியதரைக்கடல் மார்க்கமாக உணவுப்பொருள்கள், எண்ணெய் இன்னும் இதர யுத்த தளவாடங்களையும் இன்னும் முன்னைவிட அதிகமாக எதிரிகள் ஸப்ளைகள் கொண்டுவருவதைத் தடுக்க நேபிள்ஸிலும், லிபியன் கடற்கரையிலுள்ள பெங்காஸி, ட்ரிபோலி இவைகளிலும் மிகவும் கடுமையான விமான எதிர்ப்புகள் ஏற்பட்டன. நேபிள்ஸ் துறைமுகம் ஜினோவாவிற்கு அடுத்தபடியாக முக்கியத்வம் வாய்ந்திருப்பதாலும், அதிலிருந்து தான் லிபியாவுக்குத் துணைக்கப்பல்கள் அனுப்புவது எளிதாய் இருப்பதாலும் மேலும் மத்தியக்கிழக்கிலுள்ள பிரிடிஷ் விமான தளங்களிலிருந்து இதற்குள்ள தூரம், ஜினோவா துறைமுகத்திற்குள்ள தூரத்தைவிட 400 மைல் அருகாமையில் இருப்பதாலும், முக்கியமாக இத்துறைமுகத்தில் கவனம் செலுத்திவந்தன. மேலும் நேபிள்ஸில் கப்பல்கட்டும் துறைமுகங்களும், பழுதுபார்க்குமிடங்களும் ஏராளமாக இருந்தன. அதற்கருகாமையிலுள்ள ஆல்போரோமியே தொழிற்சாலைகளில்தான் விமான யந்திரங்களும் அதன் பாகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**கோயபல்ஸின் அழுகை.**—சென்ற மூன்று மாதங்களாக இங்கிலாந்திலிருந்து வரும் பாம்பர் விமானங்கள் ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களிலும் 10,000 டன் நிறையுள்ள வெடிகுண்டுகள் போட்டுவந்தன. ஸெப்டம்பர் மாதத்தில் போட்ட குண்டுகளைக் காட்டிலும் அக்டோபர் மாதத்தில் போட்ப்பட்ட வெடிகுண்டுகள் இரண்டுபங்கு கனமுள்ளவை. நாஜிப்பிரசாரத் தலைவரான கோயபல்ஸ் தன்னுடைய நாட்டினருக்கு வெளியிட்டிருக்கும் பின்வரும் செய்திகளிலிருந்து, பிரிடிஷ் விமானப்படையினால் ஜெர்மனிக்கு ஏற்பட்ட சேதத்தை தெரிவிப்பதுபோல் வேறொன்றும் தெரிவிக்கவில்லை.



"ஜெர்மனிக்குத் தலைநகரமான பெர்லின் நிலைக்கவேண்டுமானால் நாமெல்லோரும் ஒத்துழைத்து கஷ்டப்படத்தான் வேண்டும்.

"ஆனால் இப்பொழுது பெர்லின் மட்டுமல்ல, இன்னும் இதர நகரங்களும் பிரிடிஷ் விமான எதிர்ப்பால் கஷ்டப்படுகின்றன. எது வந்தாலும் நாம்தான் சகித்துக் கொள்ளவேண்டும். உங்கள் அதிகாரிகள் கூறியிருக்கிறபடி நமக்கு கஷ்டகாலம் வந்திருக்கிறது. உங்களுடைய ஸ்திரிகள் காய்கறிக்கடைகளுக்கு முன் மணிக்கணக்காக காத்திருந்து சில காய்கறிகளைப் பெறவேண்டியிருக்கிறது. சில சமயம் சிகரெட் கள்ளு (பீர்) முதலிய சாமான்கள்கூட அகப்படுவதில்லை. தொழிலாளிகளெல்லோரும் யுத்த களத்துக்குப் போய்விட்டதால் வீட்டுக்கு வேண்டிய நிலக்கரியை நீங்களோ சுமந்து கொண்டுவரவேண்டியிருக்கிறது. பாதுகாப்புக்காகக் கட்டப்பட்டிருக்கும் சில அறைகளில் நீங்கள் நித்திரைசெய்ய நேரிட்டிருக்கிறது. சில சமயங்களில் இரண்டுமணிநேரம்கூட தூங்காது எழுந்திருந்த உடனே வேலைக்குப்போக வேண்டியிருக்கிறது.

இவ்விதமாக பெர்லின் நகரவாசிகள் கஷ்டப்படுகிறார்கள். இதைப்போலவே மற்ற நகரங்களும் கஷ்டப்படுகின்றன. சில இடங்களில் இதைவிட கஷ்டங்கள் அதிகமாகவுமிருக்கின்றன."

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசநேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட கஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான கஷ்டம். | விரோதி விமானங்களின் கஷ்டம். |
|---|---|---|---|---|
| **27—10—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ், பெல்ஜியம் கடற்கரை | ... | ... | ... |
| | விரோதிக் கப்பல்கள் படகுகள்.—பெல்ஜியத்திற்கு அருகாமையில். (Belgium). | 2 மிதக்கும் விமானங்கள் சமுத்திரத்தில் நாசமாயின. | ... | 3 பைடர் விமானங்கள். |
| | ஜெர்மன் காவற்படை.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | ... | 2 பாம்பர், 9 பைடர் விமானங்கள். | ... |
| | இரவில்.—விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசங்கள். | ... | ... | ... |
| | **இதாலி (Italy)** | | | |
| | ரயில்வே ஸ்டேஷன், ரயில்வே பாலம் சாமான் ஏற்றிச் செல்லும் ரயில் வண்டி—கொட்ரோனு (Cotrone)க்கருகாமையில். | ... | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **27—10—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | ரயில்வே ஸ்தாபனங்கள், கட்டடங்கள், துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | சேதமாயின. | ... | ... |
| | விமான நிலயம்.—மெகெல்லி (Mechelli). | ... | ... | ... |
| | எண்ணெய், வெடிமருந்து கிட்டங்கிகள்.—பார்டியா (Bardia) விலிருந்து டொப்ருக் (Tobruck)-குக்குச் செல்லும் ரஸ்தா. | தகர்க்கப்பட்டன. | ... | ... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதும். | ... | ... | ... |
| **28—10—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—விமான எதிர்ப்புகளுடன் பாதுகாத்தல்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| | சிறு படகுகளும் மற்ற லக்ஷியங்களும்.—டங்கர்க் (Dunkirk) பிரதேசம். | ... | ... | ... |
| | தரையிலுள்ள எதிரி பைடர் விமானம்.—பெர்க் (Berck) விமான நிலயம். | பைடர் நாசமாயிற்று. | ... | ... |
| | விரோதி துணைக்கப்பல்கள்.—டெர்ஷெல்லிங்குக்கு (Terschelling) அப்பால் | ... | நஷ்டமில்லை. | 6 பைடர் விமானங்கள். |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்.—தெற்கு, தென்மேற்கு ஜெர்மனி (Germany). | ... | ... | ... |
| | கப்பல் கட்டுமிடம்.—சேர்பர்க் (Cherbourg). | ... | நஷ்டமில்லை. | ... |

ஸிஸிலி (Sicily).

| | | | | |
|---|---|---|---|---|
| | விமான நிலயம், நிலயக் கட்டடங்கள், விமானம்தங்க உதவும் ஸ்தானங்கள்.—ஸிஸிலி (Sicily). | ... | நெருப்பு மூட்டப்பட்டது. | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **28—10—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | | |
|---|---|---|---|---|
| | ராணுவம் தங்குமிடம்.—பியூரட் எல் ஹஸன் (Buerat el Hsun). | கட்டடங்கள் சேதம்; நெருப்புகள் மூட்டப்பட்டன. | ... | ... |
| | மோட்டார் போக்குவரவு சாமான்கள்.—எல்லைப்புறம். | ... | ... | ... |
| | எதிரி ஸ்தானங்கள்.—அம்பாஸோவிற்கு (Ambazzo)த் தெற்கு. | ... | ஒரு விமானம். | ... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்கள்.—போர் அரங்கம் பூராவும். | ... | 12 விமானங்கள். | 31 விமானங்கள். |
| | விரோதி போக்குவரவு.—ஜெர்மன் அணிகளுக்குப் பின்னால். | ... | ... | ... |
| **29—10—41.** (புதன்கிழமை). | | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—ராணுவ லக்ஷியங்கள்—பெல்ஜியம் (Belgium). | ... | ... | ... |
| | விமான நிலயங்கள்.—வடபிரான்ஸ் (France). | ... | நஷ்டமில்லை. | 1 பைடர் விமானம். |
| | இரவில்.—துறைமுகத்திலுள்ள கப்பல் கூட்டம், மீன் எண்ணெய் தொழிற்சாலை, ராணுவக் கட்டடங்கள், விமான எதிர்ப்பு பீரங்கி ஸ்தானங்கள்.—ஏல்ஸண்டு (Aalesund). | 4 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; மற்றொன்று தீ மூட்டப்பட்டது. | ... | ... |
| | ஒரு விரோதி ஸப்ளைக் கப்பல் ஸ்டாட்லாந்திற்கு அப்பால் (Statland). | ... | ... | ... |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—பெர்ஜன் (Bergen). | ... | நஷ்டமில்லை. | ... |

இதாலி (Italy).

| | | | | |
|---|---|---|---|---|
| | ராணுவக் கட்டடங்கள், ரயில் வண்டி நிற்குமிடம், தண்ணீர் யந்திரம் ரயில்வே பாதை.—ஸொவராடோ (Sovarato). | அநேக தீக்கள் மூட்டப்பட்டன. | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **31—10—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ஸிஸிலி (Sicily). | | | |
| | ஒரு தொழிற்சாலை.—லிகடா (Licata). | ... | ... | ... |
| | ஒரு துறைமுகம்.—பாலர்மோ (Palermo) | ... | ... | ... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | | |
| | ராணுவ ஸ்தானங்களும், விமானம் தங்க உதவும் இடங்கள்.—பெர்கா (Berka) விமான நிலயம். | வெடிகளும் தீக்களும் உண்டாயின. | ... | ... |
| | விமான நிலயம்.—எல் கஸாலா (El Gazala). | ... | ... | ... |
| | இதாலிய ஸ்தானங்கள்.—கோண்டாருக்குக் (Gondar) கிழக்கு. | ... | நஷ்டமில்லை. | ... |
| | ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை பூராவும். | ... | ... | ... |
| **1—11—41.** (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வடபிரான்ஸ் (France). | ... | ... | ... |
| | இரவு.—கப்பல் தளம்—கீல் (Kiel). | ... | ... | 4 பைடர்கள். |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—பிரெஸ்ட் (Brest), லஹாவர் (La Havre). | ... | ... | |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—ஸெயின்ட் நாஸர் (St. Nazaire). | ... | ... | |
| | இதாலி (Italy). | | | |
| | இடிதண்டு கப்பல் விமானம் கட்டும் தொழிற்சாலை, ரயில்வே ஸ்டேஷன்.—நேபிள்ஸ் (Naples). | ... | ... | ... |
| | ஸிஸிலி (Sicily). | | | |
| | ரயில்வே ஸ்டேஷன்.—கனிக்கட்டி (Canicatti). | ... | ... | ... |
| | கந்தகசாலை.—லிகடா (Licata) ... | ... | ... | ... |
| | கடல் விமானதளம்.— பாலர்மோ (Palermo). | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—11—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | | |
| | துறைமுகமும், கப்பல்களும்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | பெட்ரோல் எண்ணெய்க் கிடங்கு.—பெர்கா (Berka) விமானதளம். | தீ மூண்டது. | ... | ... |
| | தரையிலுள்ள விமானங்கள்.—டெர்ணு (Derna). | பல சேதமாயின. | ... | ... |
| | மோட்டார் போக்குவரவு.—பெனினு ரஸ்தா (Benina). | மோட்டார் வண்டிகள் எரிந்தன. | ... | ... |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—ஸர்ட் (Sirte) குடா. | ... | ... | ... |
| | ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள்—போர் அரங்கம் பூராவும். | ... | ... | ... |
| **2—11—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| | இரவில்.—விரோதி கப்பல்கள் ஹாலந்துக்கருகில் (Holland). | ஒரு எண்ணெய் கப்பலும் ஸப்ளைக் கப்பலும் தாக்கப்பட்டன. | ... | ... |
| | மீன் எண்ணெய் தொழிற்சாலை கம்பியில்லாத் தந்தி நிலயம்—நார்வேக்கடற்கரை (Norway). | | | |
| | வியாபார சாலை ஒரு சிறு ஸப்ளைக் கப்பல் நார்வே (Norway) குடா. | ... | 1 விமானம். | ... |
| | ஸிஸிலி (Sicily). | | | |
| | கந்தகசாலை லிகடா (Licata). | வெடிகளும் தீக்களும் கிளம்பின | ... | ... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | | |
| | விமான நிலயம், நிலயத்திலிருந்த விமானங்கள்—காஸ்டல் பெனிடோ (Castél Benito). | பெரும் தீக்கள் மூண்டன. | | 1 விமானம். |
| | தளவாடசாலை.—காம்பூத் (Gambut) பிரதேசம், பார்டியா-டொப்ருக் (Bardia-Tobruk) ரஸ்தாவிற்குத் தெற்கு. | ... | 2 விமானங்கள். | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **29—10—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ஒரு தொழிற்சாலையும், கட்டடங்களும்.—லாக்ரி (Locri). | ... | ... | ... |
| | ஒரு தொழிற்சாலை, காஸ் (gas) சாலை.—ஸிடெர்னோ (Siderno). | நெருப்புகள் கிளம்பின. | ... | ... |
| | ஒரு தொழில்சாலையும் ரயில்வண்டியும்.—கடான்ஸாரோ (Catanazaro). | ... | ... | ... |
| | **கிரீட் (Crete).** | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ஸூடா (Suda) குடா, ஹெராக்லியான் (Heraklion) | ... | ... | ... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | இருப்புப்பாதைகள், கட்டடங்கள், இஞ்ஜின்ஷெட், வண்டிகள் சேர்க்கும் இடம்.—ட்ரிபோலி (Tripoli). | சேதமாக்கப்பட்டது. | | |
| | கப்பல்களும் கட்டடங்களும்.—பெங்காஸித் துறைமுகம் (Benghazi). | ... | | |
| | விமானம் இறங்குமிடம்.—எல்ட்மிமி (Eltmimi). | ... | | |
| | துறைமுகத்திலுள்ள கப்பல்கள், தங்குமிடம்.—பார்டியா (Bardia). | ... | ... | ... |
| | லக்ஷியங்கள்.—விரோதி அணிகளுக்குப் பின்னால். | ... | ... | ... |
| | விமானச் சண்டை.—எல்லைப்புறம் ... | ... | 6 விமானங்கள். | 1 விமானம். |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை பூராவும். | ... | ? | 65 விமானங்கள். |
| **30—10—41.** (வியாழக்கிழமை) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விரோதிக் கப்பல்கள் போலோன் (Boulogne) லஹாவர் (La Havre). | ... | ... | ... |
| | விமான நிலயம்.—மோர்லே (Morlaix). | ஒரு ஹாங்கர் திமுண்டது. | ... | ... |
| | கப்பல் தளம்.—ப்ரெஸ்ட் (Brest) ... | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—10—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | விரோதி விமான தளங்கள்.—தாழ்ந்த பிரதேசங்கள் ஹாலந்து, பெல்ஜியம். | ... | 1 விமானம். | ... |
| | இரவில்.—தகவலில்லை. | ... | ... | ... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | தகவலில்லை. | ... | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விரோதி ஸ்தானங்கள்.—போர் அரங்கம் பூராவும். | ... | 18 விமானங்கள். | 37 விமானங்கள். |
| **31—10—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—எதிர்ப்புச் சண்டைகள்.-வட பிரான்ஸ் (France) இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ... | ... | ... |
| | மின்சாரத்தை பிரித்துவிடும் ஸ்டேஷன் தொழிற்சாலை கட்டடங்கள், ரயில்வே போக்குவரவு, கால்வாய் பாலங்கள்.—வட பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| | மூன்று சிறு கப்பல்கள்.—பிரெஞ்சுக் கடற்கரை. | ... | ... | ... |
| | இரவில்.-எதிரிக் கப்பல்கள் (Norway) நார்வே கடற்கரை (Frisian) பிரிஸியன் தீவுகள். | 10 கப்பல் தாக்கப்பட்டன. | 2 விமானங்கள். | ... ... |
| | கப்பல்கட்டுமிடங்கள்.—போலோன் (Boulogne), டங்கர்க் (Dunkirk). | ... | ... | ... |
| | கப்பல்கட்டுமிடங்களும், ரயில்வேக்களும்—ஹாம்பர்க் (Hamburg), ப்ரெமன் (Bremen). | நெருப்புகள் மூட்டப்பட்டன. | 6 பைடர் விமானங்கள். | ... |
| | **இதாலி (Italy).** | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—நேபிள்ஸ் (Naples). | ... | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—11—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், நிலயத்திலிருந்த விமானங்கள். | ... | ... | ... |
| | ஜெர்மன் ஸ்தானங்கள்.—போர் அரங்கம் பூராவும். | ... | 3 விமானங்கள். | 13 விமானங்கள். |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **28—10—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | இரவில்.—சில இடங்கள்.—தென்மேற்கு இங்கிலாந்து (England). | சிலர் கொல்லப்பட்டனர். | 1 விமானம். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| **29—10—41.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—ஒரே இடம்.—தென்மேற்கு இங்கிலாந்து (England). | சேதமுமில்லை. ஒருவரும் காயப்படவில்லை. | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 41 விமானங்கள். | ... |
| | ருஷ்ய அணிகளுக்குப் பின்னாலுள்ள நஷ்யப் போக்குவரவுகள். | ... | ... | ... |
| | மாஸ்கோ முனை (Moscow). | ... | ... | ... |
| | **எகிப்து (Egypt).** | | | |
| | அலெக்ஸான்டிரியா (Alexandria). | சேதமில்லை. | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—10—41.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—தென்மேற்கு.— இங்கிலாந்து (England). | ... | ... | ... |
| | இரவில்.—சில இடங்கள்-கிழக்கு ஆங்கிலியா (Anglia) மேற்கு, தென்மேற்கு இங்கிலாந்து (England). | சிறிது சேதம். சிலர் கொல்லப்பட்டனர். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| | நஷ்யப் போக்குவரவுகள்—ருஷ்ய அணிவகுப்புக்களுக்குப் பின்னால். | ... | ... | ... |
| **31—10—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் கிழக்குக்கரை (England). | ... | 1 விமானம். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| **1—11—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவு.—மெர்ஸிஸைட் (Merseyside). மற்றும் சில இடங்கள்—இங்கிலாந்து (England), வேல்ஸ் (Wales). | சிறிது சேதம். சிலர் கொல்லப்பட்டனர். | 6 பாம்பர்கள். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| | ராணுவ லக்ஷியங்கள்—கிரிமியா (Crimea). | ... | ... | ... |
| **2—11—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—வெவ்வேறான சில இடங்கள்-கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), கிழக்கு ஆங்கிலியா (Anglia). | சிறிது சேதம், சிலர் கொல்லப்பட்டனர். | 2 பாம்பர்கள். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 4 விமானங்கள். | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—11—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—ஓரிடம்—வடகிழக்கு இங்கிலாந்தின் கடற்கரை (England). | சொற்பச் சேதம் தான். | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow) | ... | 2 விமானங்கள். | ... |
| | ருஷ்யப் போக்குவரவும் நிலைகளும்—அணிகளுக்குப் பின்புறம். | ... | ... | ... |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**மற்றொருமுறையாக சமாதானப் பேச்சு**

ஏதோ ஜெர்மானியர் "யுத்தம் ஆரம்பித்தது முதல் பூராவாக பிரசாரவேலையில்" ஈடுபட்டிருப்பதாக நமக்கு நிச்சயமான தகவல் கிடைத்திருக்கிறது: ஆனால் அவ்வித பிரசாரத்தைப்பற்றி நாம் அதிகம் கேட்டதில்லை. சமீபத்தில் பி. பி. ஸி-யில் மிஸ்டர் W. A. ஸின்கிளேர் பேசும்போது, இந்த மாரிகாலத்திய தாக்குதல் மூலம் ஜெர்மன் நோக்கப்படி சமாதானத்தை ஏற்படுத்த முயலுவது, முன் பிரயத்தனங்களைக் காட்டிலும் வித்தியாசப்படும் என்று சொன்னார். இதே திட்டம்தான், சில மாறுதல்களுடன், மற்ற நாடுகள் பேரிலும் வற்புறுத்தப்படுமென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார். ஜெர்மானியர் செய்கை எப்படி இருந்தாலும், தங்கள் அபிப்பிராயத்தை உலகத்தார் நம்ப வேண்டுமென்றுதான் அவர்கள் நினைப்பது. அதாவது:—

1. ருஷ்யாவையும், ஐரோப்பாவையும் ஜெர்மானியர் ஏற்கனவேயே பிடித்துவிட்டதாயும், இப்பொழுது செய்யும் சண்டைகளெல்லாம் முடிவான வேலைப்பாட்டைக்குறிக்கிறதாயும்,

2. ஜெர்மனியின், கீழ் ஐரோப்பா பூரா புதுதிட்டத்தின்படி ஒன்று சேர்ந்ததாயும்,

3. ஜெர்மனியை இனி ஒருவரும் படையெடுக்க முடியாதென்றும், பிரிடன், அமெரிக்கா, கலகம் செய்யும் மற்ற நாடுகளெல்லாம் இனி ஒன்றும் செய்யமுடியாதென்றும் உலகம் நினைக்கவேண்டுமாம்.

ஆகையால் ஒலிபரப்பும் கருவிகளில், சரிசப்பிரயாசையுடன் ஒலிபரப்புவதற்குக்கூடத் தேழ்வையிருக்காதுபோல் காணப்படலாம். இருந்தாலும் இந்தியா முதலிய கிழக்கு நாடுகளுக்குப் பிரமாதமாக, ஹிட்லரின் பழைய வழக்கத்தை அனுசரித்து ஒலிபரப்பப்படுகிறது. இவ்விதம் அச்சு நாட்டுச் செய்திகளை மறதியாகக்கேட்டாலும் இவ்விஷயங்களை கவனிக்கவேண்டும். முதலில் சொல்லப்பட்டதைக்குறித்து:



அக்டோபர் 8உ முதல் ருஷ்யச் சைனியம் 'குழப்பட்டு விட்டதாயும்' 'எதிர்த்து நிற்க முடியவில்லை' என்றும் சொல்லப்பட்டது. இருந்தாலும் அதற்குப்பின் ஒரு மாதமாகியும் லெனின்கிராட்டில் ருஷ்யச் சைனியம் எதிர்ச் சண்டைகள் செய்வதாயும், மாஸ்கோ தற்காப்பு பலமாய் இருப்பதாயும், தெற்கே, கார்கவ் விழுந்தாலும், ஜெர்மன் முன்னேற்றம் தடைபட்டு போக்குவரவு மார்க்கங்களைத் தற்காப்பு செய்யும்படிக்கும் நேர்ந்திருக்கிறது. பெரிகாப், கிரிமியா முதலியவைகளை இன்றும் பிடித்தபாடில்லை.

இரண்டாவது விஷயத்தைப்பற்றி தங்கள் ராஜ்யம் சரியானது என்று காண்பித்துக்கொள்ள புது திட்டம் ஸ்தாபிக்கப்பட்ட ஆக்கிரமித்த நாடுகளில் ஒன்றும் அறியாத பொதுமக்களை 5, 10, 50 கணக்கில் தனித்தனியே நாலு நாடுகளில் கொலைசெய்யவேண்டியிருக்கிறது!

மூன்றாவது விஷயத்தைப்பற்றி இதில் மாத்திரம் ஜெர்மானியரின் எண்ணம் பலித்ததுபோல் காணப்படலாம். ஏனென்றால் இதற்கு அறிகுறியாக, மேற்கே ஒரு யுத்த அரங்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயப்படுவதும், அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள சுரங்கவேலை நிறுத்தத்தையும் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இங்கிலாந்து ஒரு சிறு தீவு ஆனதால் இதை ஜயிப்பது ஒரு பிரமாதம் இல்லை என்றும் ஜெர்மன் ஒலிபரப்பில் சொல்லப்படுகிறது. இது ஒரு கதையை ஞாபகம் மூட்டுகிறது. ஒரு குள்ளன், கோபம்கொண்ட ஒரு பூதத்தைக்கண்டு பயந்து, சிநேகிதர்கள் கையைப் பிடித்துக்கொண்டு, "என்னைப்பிடியுங்கள், பிடியுங்கள் இல்லாவிடில் இப்பூதத்தை அடித்துவிடப்போகிறேன்" என்று கோபமாகக் கத்தினானாம். அதுபோலத்தான் ஜெர்மன் வார்த்தையும் இருக்கிறது.

**மெக்ஸிகோ.**

இந்நாடு சமீபகாலம் வரை அடிக்கடி எல்லா நாடுகளோடு விரோதமாக நடந்துகொண்டிருந்தது. இதைப்பற்றின விவரம் அதிகம் தெரியாமலும் இருந்தது. தனக்குள்ள நிர்ப்பந்தங்களை மீறிக்கொண்டு இப்பொழுது சாவதான நிலைக்கு வந்துவிட்டது.

பிரஸிடெண்டு கமாசோ, ஸெப்டம்பர் மாதத்தில் செய்த பிரசங்கத்தில் ஜெர்மனியின் ஆக்கிரமணத்தைப்பற்றி வெகுவாகக் கண்டித்தார். மெக்ஸிகோவில் அச்சு நாட்டுப் பிரதிநிதிகளைத் தடுத்துவிட்டதைப்பற்றி புகழ்ந்தார். அங்கு இருந்த அச்சுநாட்டுக் கப்பல்களை அமெரிக்க உள்நாட்டு வியாபாரத்தில் உபயோகம் செய்துவிட்டதாயும் அறிவித்தார். இவருக்கு அடுத்துப்பேசிய டான்பாடில்லா என்ற வெளிநாட்டு மந்திரியும், ஹவானா அறிக்கையை ஊர்ஜிதப்படுத்துவதாயும், அமெரிக்காவில் அச்சுநாட்டுத் தாக்குதல் ஏற்பட்டால் மெக்ஸிகோவும் அமெரிக்க நாடுகளுடன் சேருமென்றும் சொன்னார்.

இப்பொழுது பிரிடனும் மெக்ஸிகோவுடன் அரசியல் சம்பந்தம் வைத்துக் கொள்ளுவதாகத் தீர்மானித்திருக்கிறது. இதற்கு முன்னே அமெரிக்காவும் இதை "நல்ல அயலான்" ஜாபிதாவில் சேர்த்திருக்கிறது. ஆகவே எல்லா நாடுகளும் கண்வைத்திருந்த எண்ணெய்ப் பிரதேசத்தின் முக்கியத்துவத்தை அறிந்து பிரஸிடெண்டு கமாசோ, பிரிடிஷ் எண்ணெய்க் கம்பெனிகளின் சொத்துக்களைத் திருப்பிக்கொடுத்துவிடுவார் என்று எதிர்பார்க்கலாம். பிரதிநிதியான கார்டனஸ் ஏற்கனவேயே, கம்பெனிகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஒற்றுமை ஏற்படுத்திக்கொண்டு யந்திரங்களை ஸ்தாபிக்க முயன்றான். ஆனால் அப்பொழுது பலிக்கவில்லை. ஆகவே இரண்டாம் தடவையாகப் பிரயத்தனம் செய்தார்.

வெற்றி தோல்விகளுக்குத் தக்கபடி மாற்றக்காணோம். "ஒவ்வொரு வார முடிவிலும் ஒரு வெற்றி" என்று ரேடியோவும், பத்திரிகைகளும் சொல்லிவருகின்றன. சென்ற வாரத்தில் கார்கவ் விழுந்ததை முக்கியமாகச் சொல்லப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | ஸெப்டம்பர் 20 | கியீவுள் பிரவேசித்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. |
| ஷை | ... | ,, 27 | "கிவ் சண்டை முடிந்து" புடன்னியின் படை "குலைந்தது." |
| வெள்ளிக்கிழமை | | அக்டோபர் 3 | எல்லா சண்டைகளிலும் வெற்றி பெற்றதாக ஹிட்லரே சொன்னான். |
| சனிக்கிழமை | ... | ,, 11 | புடன்னியின் படை "முறிந்ததாக" அரசாங்க முறையில் அறிவிப்பு. |
| ஷை | ... | ,, 16 | டிமோஷன்கோவின் படை "முறிந்ததாக" அரசாங்க அறிவிப்பு. |

இதன் இறுதியில்தான் "மாஸ்கோ விழுந்ததாகவும்" சொல்லப்பட்டது. ஆனால்........வெறும் அஜங்களான ஜெர்மன் மக்களும், பெரும் பட்டணங்களை வரும் வஸந்தகாலம் வரை தற்காப்பு செய்துகொண்டிருப்பதாகக் காணப்படும் சைனியங்கள் "முறிந்தன" என்பதை எப்படித்தான் நம்புகிறார்களோ!

---

# (வெடி விமானம்) பாம்பர் விமானப்படை.

[பிரிடிஷ் விமான இலாகாவால் பிரசுரிக்கப்பட்ட அதிகம் விலையான பிரசுரத்தின் முதல் பகுதி.]

## ஜெர்மன் கப்பற்படைமேல் பிரிடிஷ் விமானங்கள் செய்த ஆரம்பத் தாக்குதல்கள்.

## முன்னேற்ற எதிர்ப்புகளுக்குப் பிரெஞ்சு அதிகாரிகளின் ஆக்ஷேபனை.

('பாம்பர் விமானப்படை' என்ற புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட சில சுருக்கமான விஷயங்களில் முதல் பாகத்தைப் பிரசுரிக்கிறோம். (H. M. சாதல்வார் ஆபீஸில் 1 ஷில்லிங் 6 பென்ஸுக்கு கிடைக்கும்). இது கிரேட் பிரிடனில் பிரசுரமான உடனேயே 3,00,000 காப்பிகள் விலையாயின. விமான இலாகாவுக்காக அறிக்கை இலாகாவால் பிரசுரிக்கப்பட்ட இப்புஸ்தகத்தில் யுத்தத்தின் முதல் 22 மாதங்களில் பாம்பர் விமானங்கள், ஜெர்மனியின் கப்பல் படை, கடல் விமான தளங்கள்பேரிலும், எதிரி பிரிடனைப் படையெடுக்க கைப்பற்றியிருக்கும் துறைமுகங்களையும், அட்லாண்டிக் யுத்தத்திலும், ஜெர்மனியில் உள்ள ராணுவ தொழிற்சாலை லக்ஷியங்களையும் தாக்கிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விருத்தாந்தத்தில் சில இடங்களில் இவைகளுக்கு நேர்ந்த வியசனகரமான சம்பவங்களும், சந்தோஷிக்கத்தக்க வெற்றிகளும் நன்கு விவரிக்கப்பட்டிருப்பதோடு, விமானிகளின் தைரியம், துணிச்சல், விடாமுயற்சி முதலியவைகளால் எங்கும் வெற்றிகரமாகச் செய்த எதிர்ப்புகள் நேர்த்தியாக



விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விமானிகள் தைரியமாகச் செய்துமுடித்த காரியங்கள் பல. எடுத்ததை எல்லாம் தைரியமாகச் செய்திருக்கின்றனர். இவர்களின் தீரச்செயல்கள் ஒரே விதமாகத் தொடர்ந்து இரவும் பகலும் இன்னும் வெற்றிகரமாக நடக்கின்றன. அநேகமாக இதில் பழைமையான பாட்டல், பிளன்ஹீம், ஹாம்டன், வெல்லிங்டன், விட்லி போன்ற விமானங்களின் வேலைப்பாடு குறிக்கப்பட்டிருக்கிறது. நவீனமான பெரிய விமானங்கள் ஆகிற ஸ்டல்லிங், மான்செஸ்டர், ஹாலிபாக்ஸ், பறக்கும் கோட்டைகள் முதலியவைகளின்செயல்கள் புஸ்தகத்தில் கடைசியாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலில் சொல்லிய விமானங்கள் யுத்தத்திற்கு முன்செய்யப்பட்டு ஜெர்மனியை எதிர்ப்பதற்கு முக்கியமாக இதுவரையில் உபயோகப்பட்டுவந்தன. இவைகளில் விமானிகள் 2,40,00,000 மைல்கள் சஞ்சரித்தனர். இப்பொழுது செய்யும் சண்டைகளுக்கெல்லாம் அக்காலத்தில் செய்த காரியம் அஸ்திவாரம் போல் இருந்தது.)

பாம்பர் விமானிகள் பெறக்கூடிய பயிற்சிக்கும், அனுபவத்திற்கும், எதிர் ...மானம் அல்லது ஸ்பிட்பையர், புயல்விமானம் அல்லது ஹரிகேன் விமானிகளுக்கு ...ற்பட்டிருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. பாம்பர் விமானிகளுக்கு அதிக சரீர ...டமும், மனோவலிவும் இருக்கவேண்டும். ஏனென்றால் விரோதி நாடுகள் பேரிலும், ...பலுள்ள கடலைக் கடந்தும் 9, 10, 11, அல்லது பன்னிரெண்டு மணி நேரம் ...மானத்திலேயே சஞ்சரிக்க நேரும். இவர்களுக்கு விசேஷமான சில போர் ...லுவல்கள் உண்டு. அநேகமாக வாலிபர்களாகவேதான் இருக்கவேண்டும். ...கையால் இவர்களுக்கு வாழ்க்கையில் பிரியமும், வெறுப்பும் சகஜமாகிவிடும். ...ச்சமயத்திலும் உயிர் துறக்கத் தயாராக இருக்கவேண்டும்.

யுத்தம் தொடங்கின முதல் ஆறு மாதங்களுக்கு மேலாகவே ஜெர்மனியில் ...ண்டுகள் வீசப்படாமல், ஜெர்மன் கப்பற்படையே தாக்கப்பட்டது. இவர்...ளுக்கு எதிரி நாட்டிலுள்ள பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடாதென்றும் ...ற்றுமதி இறக்குமதி செய்யப்படும் இடங்களிலுள்ள கப்பல்களில்கூட குண்டுகள் ...போடக்கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவு போடப்பட்டது.

இந்த யுத்தத்தில் முன் சொன்ன மாதங்கள் பூராவும், அதாவது நார்வே ...த்தம் நடக்கும்பொழுது, கடுமையாயிருந்த சீதோஷ்ண ஸ்திதியை அதிகம் ...வனிக்கவேண்டியிருந்தது. ஏப்ரல் மாதத்திலகூட நார்வேயில் மாரிகாலம் ...ாணப்படும். இவ்விதமாக இருந்த காலநிலையைப்பற்றி 1940-ம் ஞு ஏப்ரல் 16-ல் ...டாவென்ஜரைத் தாக்கச்சென்ற பல ப்ளன்ஹீம் விமானங்களின் ஒரு விமானி...ன் அனுபவத்தை திருஷ்டாந்தமாகக் கொடுக்கலாம்:—

"இங்கிலாந்து கடற்கரையிலிருந்து, நாங்கள் புறப்பட்டதும் கடுமையான ...ழை பிடித்துக்கொண்டது. சற்று தாமதித்து நாங்கள் உயரப் பறந்ததும், ...ந்த உயரத்தில் மழை பனியாக மாறியது. 13,000 அடி உயரத்தில் நாங்கள் ...சல்லும்பொழுது இரண்டு பிளன்ஹீம் விமானங்களின் என்ஜின்கள் பனியால் ...வாரப்பட்டு வேலை செய்யவில்லை. அதில் ஒன்று நிர்வகிக்க முடியாது கீழே ...ழ, சமுத்திரத்திற்கு 600 அடி உயரத்தில் வரும்பொழுது, மறுபடியும் தானே ...ன்ஜின்வேலை செய்யத் தொடங்கிற்று. மற்றொன்று தண்ணீர் மட்டத்திற்கு ...ரும் சமயத்தில் வேலைசெய்ய ஆரம்பித்துத் தப்பியது. ஆனால் இதன் பின் ...க்கரம் முறிந்தது. இருந்தாலும் இவ்விரண்டும் தளத்திற்கு பத்திரமாக ...ண்டு வந்தன," என்று அந்த விமானி தெரிவித்தான்.

ஆகவே இக்காரணங்களால் அந்த நிலைமையில் ஸ்டாவென்ஜர் வரை, அந்த ...ளன்ஹீம் விமானக் கூட்டத்தில் ஒரு விமானம்தான் சென்றது. ஸ்டாவன்...ருக்கு சமீபத்தில் அவ்விமானம் சென்றபொழுது விமான ஓட்டிக்கும், குறி

அமெரிக்காவிற்கும் மெக்ஸிகோவிற்கும் சொந்தமான விமான தளங்களை உபயோகித்துக்கொள்ள ஏற்பாடாகிவருகிறது. தினம் ஒரு விமானம் ஒரு தடவையில் செல்லலாம். பனமா கால்வாய்க்கு அருகில் மெக்ஸிகோ இருப்பதால் இந்த ஏற்பாடு அதிக முக்கியமாகிறது.

**ஜப்பானியரின் குழப்பமும்.** ஜெனரல் டோஜோ பிரதம மந்திரியாக ஆனவுடன், ஜப்பானின் சமமேன்மைக் கொள்கைகளில் 'அக்கரையுள்ள' நாடுகளில் கொஞ்சம் கவலை ஏற்படும்போல் தோன்றியது. ஆனால் ஜப்பான் டைம்ஸ் அட்வர்டைஸர் என்ற பத்திரிகை அபிப்பிராயப்படுவதுபோல் "கைதேர்ந்த சாமர்த்தியமுள்ள ராணுவ அதிகாரியைத் தலைமையில் வைத்துக்கொள்ளுவதின் நோக்கத்தை அதிகம் விஸ்தரிக்க வேண்டியதில்லை." அதிகாரத்திற்கு வந்தவுடனேயே "நமது யுத்தகால அமைப்பை உள்நாட்டில் ஸ்திரப்படுத்துவதோடு உடன்படிக்கை ஏற்பட்டுள்ள நாடுகளுடன் நட்பை அதிகரிக்கவேண்டும்" என்று அவர் சொன்னார். அக்டோபர் 16உயில் ஜப்பானிய ரேடியோவும், அடிப்படையான. தேசிய திட்டத்தில் ஒருவித மாறுதலும் இல்லையென்றும் சொல்லிவிட்டது. அந்ததிட்டமாவது :—

1. சைனா விஷயத்தை முடிப்பது.
2. பொது க்ஷேம பிராந்தியமாகிற விஸ்தாரமான கிழக்கு ஆசியாவை ஸ்தாபிப்பது.
3. மூவரசு ஒப்பந்தப்படி நடப்பது.

புதிய அரசாங்கம் வந்து பல வாரங்களாகியும் ஒரு நடவடிக்கையும் காணப்படவில்லை. நாம் முன் கவலையென்று சொன்னது ஜப்பானியப் பொது மக்களுக்கும், A. B. C. D. நாடுகளுக்கும் ஏற்பட்டதைச் சொன்னதாகவே ஆகும். இதனால் தான் அதிகம் ராணுவம், தேசாக்கிரமணம் முதலிய அபிப்பிராயங்கள் கொண்ட அரசாங்கத்தால் யுத்தரங்கத்தில் தைரியமாகக் குதிக்க முடியவில்லை. மஞ்சுகோவிலும், இந்தோ-சைனாவிலும் சைனிய நடமாட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கேள்வி. போர்ச்சுகலுக்கும் டிமோருக்கும் வியாபார ஆகாய மார்க்கம் ஏற்பட்டிருப்பதாயும் பிரஸ்தாபம். எப்படியானாலும் டோஜோ மேல் பதவிக்கு வந்தது. இதுவரை ஜெர்மானியருக்கு திருப்தி கொடுக்காது.

**ருஷ்ய யுத்தமும்.** இவ்விதம் ஜப்பானியர் குழம்புவதைப் பற்றி ஒருவர் வியாக்கியானம் செய்யும்போது ருஷ்ய யுத்தத்தின் போக்கிற்கும், ஜப்பானின் அரசியல் மாறுதலுக்கும் உள்ள சமகால நேர்மையை கவனிக்கும்படி சொன்னார்.

இதற்காக ஜூலை முதல் பார்ப்போம். அப்பொழுது ருஷ்யாவில் தடபுடலாக ஜெர்மானியர் முன்னேறினர். அப்பொழுது கோனுயி இளவரசரின் கீழ் யுத்த நோக்கமுள்ள மந்திரிசபை ஸ்தாபிக்கப்பட்டது.

கடைசியாக அக்டோபர் 3-ம் தேதி ஒரு கடும் எதிர்ப்பு ஏற்பட்டு ஹிட்லரும் பெரிய வெற்றிகள் அடைந்ததாயும் சொன்னான். அக்டோபர் 18உ தேதிக்குள் ருஷ்யர்களும், ஜெர்மானியர் 'துளைத்துச் செல்லுவதை' அங்கீகரித்ததாலும், பிரதிநிதிகள் மாஸ்கோவை விட்டு அகல நேர்ந்ததாலும் ஜெர்மானியருக்கு அதிக வெற்றிகளும் கிடைத்ததாக வைத்துக்கொள்ளலாம். ஆனதால் அக்டோபர் 16உ ஒரு புதிய ஜப்பானிய மந்திரி சபை யுத்த வெறி கொண்ட டோஜோவின் கீழ் அமைந்தது. இருந்தாலும் அது முதல்

1. ஜெர்மன் ரேடியோவும், பத்திரிகைகளும் யுத்தம் சீக்கிரம் முடியுமென்று நினைக்க வேண்டாமென்று சொல்லிவருகின்றனர்.
2. இதற்குக் காரணம் சீதோஷ்ண நிலையென்று சொல்லப்படுகிறது.



அக்டோபர் 25-ல் அமெரிக்க மந்திரி கர்னல் நாக்ஸ், ஜப்பானிய நோக்கங்களை யுத்தம் செய்யாமல் அடையமுடியாதென்று சொன்னதை ஜப்பானிய அரசியல் வர்த்தகத்தார் புரிந்து கொள்ளவில்லையென்பதை ஜப்பானியப் பொதுமக்கள் தெரிந்துகொண்டனர்.' ஆனால் அக்டோபர் 26உ "ஜப்பானின் பொது க்ஷேம திட்டத்தின் தர்மமுறையை" அமெரிக்கர் தெரிந்து கொள்ளவில்லையென்று ஜப்பானியப் பத்திரிகைகள் குறைகூறின.

ஆகவே இம்மாதிரி தற்செயல் சம்பவங்கள் ஆச்சரியமாகவே இருக்கின்றன. ருஷ்யா விழுந்துவிடும்போல் காணப்பட்டால், ஜப்பானிய ராணுவ பலம் பெற்றவர்கள் அரசியலில் மாறுதலை ஏற்படுத்துகின்றனர். இரண்டுதடவையாக ஏமாறிப் போனதால் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இக்குழப்பம் வெகுநாள் இருக்க வேண்டும் என்பதுதான் நமது பிரார்த்தனை!

## உதாஸீனம் வேண்டாம்!

ருஷ்யர்கள் பிரமாதமாக எதிர்த்து நிற்பதும், ஜெர்மன் சைனியம் 'பிரமாதமானது' என்ற எண்ணம் முறிந்ததும், மாரிகாலத்தின் வருகையும், மாஸ்கோ, லெனின்கிராட் பாக்கியாயிருந்து சண்டை செய்வதும் மிகவும் சாதகமாயிருப்பதால், இனி இந்த யுத்தம் சாதகமாகிவிடுமென்று திருப்தியடைந்துவிடக்கூடாது.

ஏனென்றால், நடுபாகத்திலும், தெற்கிலும் ஜெர்மானியர் அதிக ஆவேசத்துடன் சண்டை செய்வதற்குத் தகுந்த வெற்றிகள் கிடைக்கலாம். அந்தவிதம் வெற்றிகள் கிடைக்காவிட்டாலும், ருஷ்ய எதிர்ப்பு கலைபடாமல் இருந்தாலும், ருஷ்யர்களுக்கு நேரக்கூடிய நஷ்டங்களை நாம் கவனிக்கவேண்டும். சண்டையினால் ருஷ்யர்களுக்கு ஏராள மனிதர்களும், சாமான்களும் நஷ்டமென்பதில் சந்தேகமில்லை. மேலும், மாஸ்கோ, டானட்ஸ் பிரதேசங்களிலுள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி நின்றுவிட்டது. இதனால் ஏற்பட்ட குறைவை அமெரிக்காவும், பிரிடனும்தான் ஈடுசெய்ய முடியும். ஆனால் வரும் வஸந்த காலம்வரை ருஷ்யர்கள் சண்டை செய்யக்கூடியவர்களாகவே இருக்கவேண்டும்.

ஜனஸ்திதி விவரம் கொடுப்பவர்கள் டான், வால்காவிற்குப் பின்புறமாக ருஷ்யர்கள் சென்றாலும் அவர்களுடைய (பூர்த்தியடையாத) கிழக்கிலுள்ள பொருள்களைக்கொண்டு முதல்தரமான சைனியத்தைத் தயார் செய்யலாம். ஆனால் அது 12 மாதங்கள் பிடிக்கும்! ஜெர்மானியரின் பலத்தை அறிந்த பிறகு, இந்த அவகாசம்கூடப் போதாதுதான். ஏற்படும் காலத்தைப் பாதி குறைப்பதற்குத்தான் பிரிடனும், அமெரிக்காவும் பாடுபடுகின்றன. இதுதான் தங்கள் வேலையென்பதை தலைவர்கள் உள்பட யாவரும் அறிந்தும் இருக்கின்றனர். இதோடுமாத்திரம் போதாது. இந்தியா, புதுக்கோட்டை முதலிய இடங்களிலுள்ள ஒவ்வொருவரும் உலகின் க்ஷேமமே தங்கள் கையில் இருப்பதாக உணர்ந்து ருஷ்ய வெற்றி, நேசதேசங்களின் வெற்றி, ஸ்வதந்திரம் கௌரவம் அடைவதற்குப் போதுமானபடி பாடுபடவேண்டும். (இதற்காக வெற்றிச்சின்னமுள்ள "வி" டயரியை வாங்கினாலும் உதவுவதுபோல்தான் ஆகும்). இச்சமயத்தில் அலக்ஷியமாக இருப்பதும், ஒத்துழைக்காமலிருப்பதும், எதிரி வசம் சரண் ஆவதும் எதிரியுடன் கொஞ்சிக் குலாவுவதும் ஒருமாதிரிதானாகும்.

## ருஷ்யா இன்னும் எதிர்த்து நிற்கிறது.

முதலில் சொன்னவிதமாக இங்கும், ஜெர்மனியில் பிரசாரம்தான் முக்கியமான தொழில் என்று தெரிவிக்கிறோம். புது திட்டம், ஆப்ட்வாபி முதலியதைப் போல் தினம் இதையும் விருத்திசெய்தே வருகின்றனர். நீண்ட யுத்தத்திற்குத் தக்க திட்டங்களைக் கோயபல்ஸ் போடுகிறானே ஒழிய, சைனியங்களுக்குநேரும்

பார்ப்பவனுக்கும் ஸ்டாவன்ஜர் இருக்கும் நிலையைப்பற்றி வாக்குவாதம் ஏற்பட்டது. "குறி பார்ப்பவனென்று பெயர் வைத்துக்கொண்டு இருக்கிறயே" என்று விமானஓட்டி கேட்டான். "அது சரிதான்; இடம்........ எங்கே" என்று குறி பார்ப்பவன் கேட்டான். அச்சமயத்தில் கீழிருந்து விமான எதிர்ப்பு பீரங்கிகளிலிருந்து விழுந்த குண்டு இதிலுள்ள முன் அரைக்கூரையை பிரித்தெரிந்துவிட்டது. இதனால் ஸ்டாவன்ஜரை அடைந்து விட்டதாக இவர்கள் அறிந்துகொண்டனர்.

ஆனால் இது பின்சேர்ந்ததால் இதற்குமுன்நடந்த சம்பவத்தை கவனிப்போம்.

1939-ம் வருஷ ஸெப்டம்பர் 4-ல் முதல் தடவையாக பிரிடிஷ் எதிர்ப்பு ஜெர்மனியில் சேர்ந்தது. அச்சமயத்தில் கனமான மழை பெய்து, மேகங்கள், ஜெர்மன் கடல்கரை ஓரங்கள் பூரா வெகுசமீபத்தில் சஞ்சரித்தன. அச்சமயத்தில் பல பிரிடிஷ் விமானங்கள் சிதறிப்போக நேர்ந்தாலும் ஒரு விமானம் ப்ருன்ஸ்புதல் என்ற இடத்திற்கு வந்துசேர்ந்த ஒரு சண்டைக் கப்பலைத் தாக்கிற்று. ஆனால் முடிவு தெரியவில்லை.

பிறகு வில்லிக் ரோடுகள் என்ற இடத்தை ஐந்து பிளன்ஹீம் விமானங்கள் அடைந்தன. இவைகள் 11 ஸெகண்டு தாமதித்து வெடிக்கக்கூடிய 500 பவுண்டு குண்டுகள் ஏற்றிச்சென்றன. தனித்தனியே கடல் மட்டத்திற்கு 500 அடி உயரத்தில் பறந்தன. பின்னால் சென்ற இரண்டு விமானங்கள் கூடச்செல்ல முடியவில்லை. ஆனால் முன்னால் சென்ற மூன்றும் விடாமல் சென்றபொழுது, பெரும் மழைகளுக்கு இடையில், வான் ஷீர் என்ற ஜெர்மன் யுத்தக்கப்பலைப் பார்த்துவிட்டன. இது இவர்களுக்கு இடதுபக்கம் இருந்தது. இரண்டாம் நம்பர் விமானம் வலதுபுறமாக முதல் விமானத்திற்கு சரியாகப் போவதைவிட்டு, திடீறென முன்சென்றதால் கப்பலை முதலில் தாக்க சாத்தியமாயிற்று. அச்சமயம் இது போட்ட முதல் குண்டு கப்பலுக்கு 10 கெஜம் அப்பால் விழுந்தது. இரண்டாம் குண்டு விமானத்திலேயே மாட்டிக்கொண்டது.

இதற்குள் கப்பலைத் தாக்கக்கூடிய இடத்திற்கு நேரே முதல் விமானம் வந்தது. குண்டுகள் வீச கடல்மட்டத்திற்கு அருகிலும் இறங்கிற்று. இருந்தாலும் துணைக்கப்பல் ஒன்று இக்கப்பலுக்குப் பின்புறமாக இருந்து மறைத்து விட்டதால் விமானம் இறங்கியதை கப்பலிலுள்ளோர் பார்க்கவில்லை. உடனே விமானம், துணைக்கப்பலைத் தாண்டிக்கொண்டு, வான் ஷீரின் பாய்மரம் தெரியும்படியான இடத்திற்கு நேரே நின்றது. அப்பொழுது, விமானத்திலிருக்கும் குறிபார்ப்பவன் கப்பலில் கம்பி வேலிமீது சாய்ந்து பேசிக்கொண்டிருக்கும் மாலுமிகளையும், உயரப் போட்டிருந்த வஸ்திரங்களையும் பார்க்கக்கூடிய சமீபத்தில் இருந்து குண்டுகள் போடப்பட்டன. கப்பலிலிருந்து விமானங்களை வெளியே அனுப்ப உதவும் கவண் கருவி முறிந்து சிதறிற்று.

இதற்குப்பின்னும் ஐந்து பிளன்ஹீம் விமானங்கள் கொஞ்சம் தாழ்ந்த நிலையிலிருந்து தாக்கின. ஒன்றுதான் பத்திரமாகத் திரும்பிற்று. மற்றவைகளின் கதி தெரியவில்லை. ஆனால் இதற்குப்பின் ஒருமாதம் கழித்து ஒரு ஜெர்மானியப் பிரயாணி, இந்த எதிர்ப்பைப்பற்றி, தன் சிநேகிதனிடம் இதாலியின் வடபாகத்தில் ரயிலில் சென்று கொண்டிருக்கும்போது, பிரிடிஷ் விமானிகளின் அஞ்சாத பராக்கிரமத்தைப்பற்றி பிரஸ்தாபித்தான். ஆகையால் இவைகள் எங்கேயாவது தாக்கிச் சென்றிருக்கலாம். ஒரு பிளன்ஹீம் விமானம் எதிரியின் கப்பலுக்கு அதிக அருகில் சென்று குண்டுகள் போட்டு, வெடித்த நெருப்பினால், தான் நாசமானதாகவும் சொல்லப்படுகிறது. மொத்தத்தில் இரண்டு வெல்லிங்டன் விமானங்களும், 5 பிளன்ஹீமும் நஷ்டம்.



இவ்விதம் எதிரி நாட்டிலுள்ள முக்கிய ஸ்தானங்கள் வரை சென்று, பாம்பர் படை, விடாமல் தாக்குவதில் முயற்சி எடுத்ததின் பயனாக அங்கே சேதம் விளைந்தது. இவ்விதம் செல்லும் விமான ஓட்டிகளுக்கும் பிரயாணிகளுக்கும் கடல் மார்க்கமாக பறந்து செல்லும் அனுபவம் இல்லாமலிருந்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பெற்றுவந்தனர்.

மற்ற விமானங்களை, குண்டுகள் ஏற்றிக்கொண்டு, தாக்குவதற்கு லாயக்காக உதவிக்கு அழைத்துக்கொண்டு, பாம்பர் விமானங்கள் வேவு பார்க்கும் வேலையில் ஈடுபடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த முறையைக் கையாளும் எண்ணத்துடன், ஸெப்டம்பர் 29-ல் ஹெலிகோலந்து கடல்கரையை காவல் புரிந்துவந்த ஹாம்டன் விமானப்படை ஒன்று, இருபகுதிகளாகச் சென்று, இரண்டு எதிரி நாசகாரிகளைக் கண்டுபிடித்துத் தாக்கின. முதலில் ஒருபகுதி ஆறு விமானங்களாயும் பின்னாடி 5 விமானங்கள் உள்ள பகுதியுமாகச் சென்றதில் ஏதோ கால தாமதத்தால் இரண்டு பிரிவும் சேர்ந்து செல்ல முடியவில்லை. இரண்டாவதான கூட்டம் லக்ஷியத்திற்கு நேரே வருவதற்குள் எதிரி ஆக்கிரமத்தையாரி சண்டையைத் துவக்கிவிட்டான். 5 விமானங்களும் தடுக்கப்பட்டன. ஒன்றும் திரும்பவில்லை. ஆனால் இவைகள் எல்லாவற்றையும் ஜெர்மானியர் வீழ்த்தியதாயும் தங்களுக்கு 2 பைடர் விமானங்கள் தான் நஷ்டமென்றும் சொல்லுகின்றனர்.

இந்த அனுபவத்திலிருந்தும், ஸெப்டம்பர் 4-ம் தேதி ஏற்பட்ட அனுபவத்திலிருந்தும், அதிகம் ஆயுதம் ஏற்றிய கப்பல்களைத் தாழ்ந்த உயரத்திலிருந்து நேரே தாக்குவது அபாயமுள்ளதென்று தெரியவந்தது.

இதன் பிறகு, நார்வே சண்டையின்போது துண்டுக் காகிதங்கள் போடப்பட்டன. பிளாண்டர்ஸ் சண்டை நடந்தது. பிரான்ஸும் விழுந்தது. இந்தக் காலங்களில் செய்த முயற்சிகளைப் பற்றியும் விவரங்கள் கிடைத்திருக்கின்றன. இப் புத்தக மூலம் நேசதேசத் தலைமை அதிகாரிகள் செய்த திட்டங்களும் அதனால் விளைந்த பயன்களும் வெளியாகின்றன. அச்சமயத்தில் தங்கள் நாட்டை எதிரிகள் தாக்காமல் இருக்கும்படியாக பாதுகாப்பு வேலையிலேயே ஈடுபட்டிருக்கிறதாக ஆரம்பத்திலேயே பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தனர். பாம்பர் விமானங்களைக்கொண்டு எதிரி நாட்டிலுள்ள தொழிற்சாலைகளைத் தாக்குவது சாத்தியமில்லை என்று அவர்கள் நினைத்தனர். அவ்விதமான அபிப்பிராயத்தை பிரிடிஷ்காரர்களிடமும் தெரிவித்தனர். இத்தகைய எண்ணங்கொண்டு ஜெர்மன் படையெடுப்புகளைத் தடுக்க பிரிடிஷ் பாம்பர் விமானங்களின் உதவியை நாடினார்கள். இவ்வித உதவி கொடுப்பதாயும் உறுதிகொடுத்தோம்.

மேலும், பிரெஞ்சுக்காரர்கள் வசம் பகல்காலத் தாக்குதலுக்கு லாயக்காக 40 விமானங்கள்தானிருந்ததால் பகல் காலத்தில், எதிர்ப்புகள் செய்யவும் மறுத்தனர். ஆனால் நார்வே, டென்மார்க், வடஜெர்மனி முதலிய இடங்களுக்குப் போகும் விமானங்களைத்தவிர, மீதியுள்ள பூரா பலத்துடன் எதிரி வரும் பிரதேசங்களிலும், எதிரிக்கு உதவி வரும் பாதைகளிலும், ரைன்லாந்தின் கிழக்கு ஜில்லாக்களிலும் எதிர்ப்புகள் செய்வதாக ஏப்ரல் 14-ல் பிரெஞ்சு அதிகாரிகளுக்கு நாம் வாக்குக் கொடுத்தோம்.

அதற்கு அடுத்தநாள், நேசதேசங்களில் பொதுமக்கள் மீது ஜெர்மனி குண்டுகள் வீசினால் ஒழிய, ஜெர்மனியில் சென்று சேதம் விளைவிக்கக்கூடாதென்று பிரெஞ்சு யுத்த அதிகாரிகள் உத்தரவு போட்டுவிட்டனர். இதனால் யுத்த ரங்கத்திற்கு வந்துகொண்டிருக்கும் எதிரி சைனியத்தை மாத்திரம்தான் தாக்கும்படி ஆயிற்று. ஆனால் பிரிடிஷ் பெரிய பாம்பர் விமானங்களைக்கொண்டு அவ்வித

லக்ஷியங்களைத் தாக்கமுடியாதென்றும், இவைகள் வேறு பிரயோஜனத்திற்காக ஏற்பட்டவை என்றும் பிரெஞ்சு தளகர்த்தரான ஜெனரல் காமலினுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. அவர் இதை நம்பவில்லை.

1941 ௵ மே ௴ 10-ம் தேதி முழுபலத்துடன் எதிரி பிரான்ஸைத் தாக்க ஆரம்பித்தான். அச்சமயம் நேசதேசச் சைனியத் தலைவனான காமலின் ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்களையும் துருப்புகளையும் குண்டுகளால் தாக்க அனுமதிக்கவில்லை. மே 10-ம் தேதி பிற்பகலுக்குப் பிறகுதான் முன்னணியில் இருந்த விமானங்கள், லக்ஸம்பர்க் வழியே வந்துகொண்டிருந்த ஜெர்மன் சைனியத்தையும், மறுநாள், நடுத்தரமானதும், பெரியதுமான பிரிடிஷ் பாம்பர்படை எதிரி சைனியத்தையும், போக்குவரவு மார்க்கங்களையும் தாக்கியது.

இச்சமயத்தைக்காட்டிலும், இதாலி யுத்தத்தில் ஈடுபட்ட சமயம், இதாலியத் தொழிற்சாலை லக்ஷியங்களை பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் தாக்க வேண்டும் என்று நாம் சொன்னபோது பிரெஞ்சுஅதிகாரிகளுடைய ஆக்ஷேபம் மிகவும் அதிகம் காணப்பட்டது. அது பின்வருமாறு நடந்தது. 1940-ம் ௵ ஜூன் 3ட திங்கட்கிழமை அன்று, இதாலியும் யுத்தத்தில் ஈடுபடுமென்று அறிந்து, அந்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளைத் தாக்க தனி பாம்பர் பகுதிகளைத் திட்டம் செய்யும்படி உத்தரவு அனுப்பிக்கப்பட்டது. மார்ஸெயில்ஸுக்கு சமீபத்திலேயே ஸாலன் என்ற இடத்திலுள்ள தளங்களிலிருந்து செல்ல ஏற்பாடும் செய்யப்பட்டு இருந்தது.

ஜூன் 10-ம் தேதிக்குள் எல்லாவித ஏற்பாடும் முடிவுபெற்றது. மேலும், உதவிக்கு மறுநாள் பிற்பகல் 3 மணிக்கு இங்கிலாந்திலிருந்தும் சில வெல்லிங்டன் விமானங்களும் வந்தன. அன்று சாயந்திரம் மிலானைத் தாக்குவதற்கான உத்தரவும் பிரிட்டனிலிருந்து கிடைத்தது. சீக்கிரம் ஏற்பாடுகள் செய்துகொண்டு புறப்படும்பொழுது பிரெஞ்சு அதிகாரிகளுடன் கொஞ்சம் தகராறு ஏற்பட்டது.

பிரிடன் தலைமை அதிகாரிகளிடமிருந்து வந்துள்ள உத்தரவு, பிரெஞ்சு அரசாங்கத்தின் விருப்பங்களுக்கு விரோதமானதால் அவ்வுத்தரவுப்படி நடக்கக் கூடாதென்று பிரெஞ்சு அதிகாரிகள் தடுத்தனர். இந்தத் தாராறு இரவு 7½ மணி முதல் நடுநிசிவரை நடந்தது.

அங்குள்ள பிரிடிஷ் அதிகாரிக்குக் கிடைத்துள்ள உத்தரவு வியக்தமாயும் பல முறை டெலிபோன் மூலம் ஊர்ஜிதமானதாயும் இருந்தது. பிரெஞ்சு அரசாங்கத்தின் சம்மதி பேரில்தான் இவ்வுத்தரவு ஏற்படுத்தி அதன் பயன் ஆகவே ஸாலன் தளமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது அவனுக்குத் தெரியாது. ஆகவே கிடைத்த உத்தரவுப்படி பிரெஞ்சு ஆக்ஷேபனைகளை மீறி புறப்பட யத்தனித்தான்.

நடு இரவிற்கு அரைமணி பின்னர், வெல்லிங்டன் விமானங்கள் புறப்படும் தருணத்தில் திடீரென பல பிரெஞ்சு மோட்டார் லாரிகள் தளத்தில் புகுந்து விமானங்களை பறக்கமுடியா வண்ணம் பிரிந்து நின்று மறித்துக்கொண்டன. விமானங்களை பறக்க விடாதபடி பார்த்துக்கொள்ளத் தனக்கு உத்தரவு வந்து இருப்பதாயும் பிரெஞ்சுத் தலைவன் பிரிடிஷ் அதிகாரிக்கு எச்சரிக்கையும் செய்தான்.

பஹிரங்கமான கலகம் ஏற்படாமலிருக்க வேண்டுமென்று நினைத்து, இதாலியை படையெடுக்காது, வந்த வெல்லிங்டன் விமானங்கள் பிரிடனுக்கு அமைதியாக மறுநாளே திரும்பின. அவைகள் வந்து சேருவதற்குள், பிரிடன் விமான தள அதிகாரிகளிடம், ஏதோ இவ்விதம் தடை செய்ய நேர்ந்ததைக் குறித்து வருத்தப்படுவதாக பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தார்கள். அதன் பின்னர் மறு உத்தரவு ஏற்படுத்திக்கொண்டு ஜூன் 15, 16 இரவில் இதாலியிலுள்ள ஜினோவா தாக்கப்பட்டது. பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் பிரெஞ்சு தளங்களிலிருந்து செய்த படையெடுப்புகளில் இதுதான் கடைசியானது.



## இதாலியில் பிரிடிஷ் விமான எதிர்ப்புகள்.

## தலைநகர், சாம்ராஜ்யம், போக்குவரத்துகள் இவைகள் எல்லாம் இதாலியர்களுக்கு நஷ்டம்.

தலைவர் எல். வி. பிரேஸர் எழுதியது :—

இதாலிக்குச் சொந்தமான ஆபிரிக்க சாம்ராஜ்ஜியம் குலைந்து, அதில் பெரும் பாகம் நஷ்டமேற்பட்டு இப்பொழுது அதன் உள்நாட்டிலேயே நிச்சயமாக யுத்தம் பரவும்போல் தோன்றுகிறது. சீதோஷ்ண நிலை நீண்டகாலம் மாறுமல் இருந்ததினால் தாக்குதல் இல்லாமல் நின்று, இப்பொழுது பிரிடிஷ் விமானப்படை மறுபடியும் தாக்கிவருகிறது. பிரிடன் தளங்களிலுள்ள பெரிய பாம்பர்கள் எதைச் சுற்றித்தான் செல்வது என்று தெரியாமல் இருக்கின்றன. மத்தியக் கிழக்கிலுள்ள பாம்பர் விமானங்கள் மற்றொரு பக்கமாக வருகின்றன. இப்பொழுது இதாலி இருபக்கங்களிலும், மத்தியிலும் வெடிகுண்டுகளால் தாக்கப்படுகின்றது.

இதாலியை எதிர்ப்பதின் நோக்கம், அதன் சாம்ராஜ்ஜியத்தையும், போக்குவரத்து பாதைகளையும் அழிப்பதேதான். போடப்படும் ஒவ்வொரு குண்டும், ஏதோ ஒரு உயிர்நிலையான இடத்திலோ, அல்லது சாமான் ஸப்ளை ஸ்தலத்திலோ, குறிவைத்துப் போடப்படுகிறது. ஜினோவாவிலுள்ள கைத்தொழில் பிரதேசத்தில் பெரும்பாகம் பிரிடிஷ் விமான எதிர்ப்புகளினால் சேதமாயிற்று. மிலானில் லகநாஹு என்று சொல்லப்படும், பெரிய தொழிற்சாலை (சைனியத்திற்கு வேண்டிய ஆடைகள் தயாரித்துக் கொடுப்பதில் ஈடுபட்டிருக்கும் பெரிய இதாலிய நெசவு தொழிற்சாலைகளில் ஒன்று) அழிக்கப்பட்டு, அதனால் ஆயிரம் தொழிலாளிகளுக்கு வேலை நின்றுவிட்டது. நேபிள்ஸில் இன்னும் அதிகச் சேதம் ஏற்பட்டு விட்டது. எண்ணெய் சுத்தம் செய்யுமிடம் தாக்கப்பட்டது. எண்ணெய் கிணறுகள், பெட்ரோல் கிணறுகள் தீ மூட்டப்பட்டு இரண்டு நாள் பூராவாக எரிந்தன. ஒரு ரயில்வே ஸ்டேஷன் சேதமாயிற்று. அநேக ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். முக்கியமாக அரசாங்கம் நடத்துமிடமும், நெசவு தொழிற்சாலையும் அதிகமாக பாதிக்கப்பட்டன.

கெடேனியாவில் 30,40 விமானங்கள் எரிக்கப்பட்டன; விமானம் தங்கும் இடம் ஒன்று தகர்க்கப்பட்டது. விமான நிலயத்தை எதிர்க்கும்பொழுது மற்றொன்று சேதமாயிற்று. வெடிகுண்டுகளுக்குப் பயந்து இருப்பதற்குப் போதுமான வசதிகள் இல்லாமல் போனாலும் நகரவாசிகள் வேறொரு தேசத்திற்கு தப்பி ஓடினார்கள்.

மத்தியதரைக்கடலுக்கப்பால் இதாலிக்குச் சொந்தமான துறைமுகங்கள் இன்னும் அதிகமாகச் சேதமாயின. மேலும் அதன் உள்நாட்டுத் துறைமுகங்கள் ட்ரிபோலியிலுள்ள துறைமுகங்கள் இவைகளிலுள்ள, கப்பல்களாவது, சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களாவது பத்திரமாக இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. இவைகளுக்கு எல்லாம் ஆபத்துதான். ஒன்றும் தப்ப வழியில்லை. இருந்தாலும் சிலவை பத்திரமாய் போய்ச்சேருகின்றன. வட ஆபிரிக்கத் துறைமுகத்திற்குச் செல்லும் பாதை மிகவும் சமீபம். இதற்கிடையில் அநேகங்கள் மூழ்கடிக்கப்பட்டு, சிலவைதான் தப்புகின்றன. துறைமுகங்களுக்குப் போய்ச் சேரும் கப்பல்களுக்கும் கூட அவ்வளவு அதிக அபாயமும், சேதமும் ஏற்பட்டு விடும். பிரிடிஷ் விமானங்கள் பெங்காஸி, ட்ரிபோலி இவைகளை நீண்ட காலம் தாக்காமல் இருக்கிறதில்லை; ஏதேனும் ஒரு லக்ஷியம் தென்பட்டால் அது உடனே தாக்கப்படுகிறது. பெங்காஸி, ட்ரிபோலி இவ்விரண்டு இடங்கள் வழியாகத்தான் ஸப்ளைகள் செல்லவேண்டும். இவ்விடங்களை அடிக்கடி வழக்கமாக பிரிடிஷ் விமானங்கள் எதிர்த்து வருகின்றன. ட்ரிபோலியில் சமீபத்தில் நடந்த விமான எதிர்ப்பிலிருந்து நேர்ந்த விவரம் வெளியாகிறது.

பாம்பர்கள் துறைமுகத்திற்கு நேரே வந்தன. முன் அணியான விமானம் கீழே யுள்ள எண்ணெய் ஏற்றிச்செல்லும் கப்பலைத் தாக்க, 4,000 அடி கீழே பாய்ந்தது. அதில் கிளம்பிய ஏராளமான வெடிகுண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக கீழே விழுந்தன. பிரகாசமான வெளிச்சம் தோன்றிற்று. அதன் மேல் கரும் மேகம் போல் புகை சப்தத்துடன் கிளம்பியது. அதன் வெளிச்சத்தால் மற்ற பாம்பர்களும் லக்ஷியத்தைத் தாக்க வந்து துறைமுகத்திலுள்ள மற்ற கப்பல்கள், சிறு கப்பல்கள் படகுகள் இவைகள் பேரில் அதிக சேதத்தை விளைவிக்கும் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. மிக்வும் அனுபவம் வாய்ந்த விமானிகள் இது வரை பார்த்திருக்கும் மிகவும் ஆச்சரியமான சம்பவங்களில் இது ஒன்று. உடைபட்ட கப்பலிலிருந்த எண்ணெய் துறைமுகத்தில் தண்ணீரில் மேல் சிதறி பரவலாக எரிந்தது. அங்கு தாக்குதல் இரண்டு மணிநேரம் இருந்தது.

பிரிடிஷ் விமானிகள் வெகு திறமையுடன், எதிர்ப்படும் லக்ஷியங்களை ஒன்று விடாமல் எதிர்க்கிறார்கள். ரஸ்தாவிலுள்ள எண்ணெய் ஏற்றிச் செல்லும் வண்டி தகர்க்கப்பட்டு தூள் தூளாய் விட்டது. இன்னும் இதர வண்டிகளும் வெடி குண்டுகளால் தகர்க்கப்பட்டு தூக்கியெறியப்பட்டன. துருப்புகள்வண்டியிலிருந்து குதித்து மறைவிடத்துக்கு ஓடும்பொழுது யந்திர பீரங்கிகளால் சுடப்பட்டனர்.

பிரிடிஷ் விமானங்கள் மத்தியதரைக்கடலில் விடாமலும், பல விதத்திலும் தாக்கி வருவதை இதாலியர்கள் தெரிந்து கொள்ளாமலிருக்க முடியாது. எப் பொழுதுமே உற்சாகக் குறைவுள்ள இதாலியர்கள் தங்கள் உள்நாட்டில் தாக்குதல்கள் ஏற்பட்டவுடன் மிகவும் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். மேலும் மத்தியதரைக்கடலுக்கு அப்பாலுள்ள ஆப்ரிக்காவில் அவர்களைச் சேர்ந்த மற்ற இதாலியர்களும் கஷ்டப்படுகிறார்கள் என்று கேள்க்கவும் அவர்களுடைய துக்கம் இன்னும் அதிகரிக்கிறது. இதற்காக சரியான பந்தோபஸ்து செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. முஸோலினி, இதாலிய பைடர் விமானங்களையும், இன்னும் அதிகமாகத் தரைப்படைகளையும் அனுப்பவேண்டும். பிரிடிஷ் விமானங்களின் எதிப்பு தடுக்கப்படவேண்டும்.

ஆனால் பிரிடிஷ் விமானங்களை ஒருபொழுதும் வராமல் தடுக்கமுடியாது. இதற்குமாறாக பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. அவைகள் கப்பல்களை கொடிமரம் உயரம் பறந்துவந்து தரையில் மரங்களின் உச்சிவரை கீழே பறந்து வந்தும் தாக்குகின்றன.

---

## மாரிகாலத்தில் பிரிடிஷ் விமானங்கள் இதாலியையும் "தாக்கும்."

## இதாலியில் அமைதிக் குறைவு விருத்தியாகிறது.

## ஜெர்மானியரின் மேல் வெறுப்பு.

(டெயிலி டெலகிராப்பின் ஆசிரியல் நிருபர் எழுதியது.)

இதாலியப் பொதுமக்களுக்கு யுத்தத்தில் வெறுப்பு ஏற்பட்டிருப்பதை உணர்ந்த பிரிடிஷ் அரசாங்கம், கூடினவரையில் மாரிகாலத்தில் இதாலியையும் தாக்குவதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரிடிஷ் விமானங்கள் சமீபத்தில் வட. இதாலியில் உள்ள பட்டணங்களை பலமாகத்தாக்கியதிலிருந்து இனிமேல் தொடர்ந்தும் ஏற்படுமென்று அறியலாம்.



இதாலிய ஜனங்களுக்கு அதிகமாக யுத்த அலுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. சில இடங்களில் பஹிரங்கமாய் இதைப்பற்றி பேசவும்படுகிறது. முஸோலினியுடன் உறவு கொண்டாடி வந்த அரசவர்க்கத்தினர், செல்வாக்கு குறைந்து, இருக்கும் இடமே தெரியவில்லை. இதேமாதிரி எல்லாப் பொதுக் காரியங்களில் தலையிட்டுக்கொண்டு அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்ற ஜெர்மானியரையும் வெறுக்கின்றனர்.

ஆனால் தலைமை வகித்துயாரும் இதைத்தடுக்க முன்வரவில்லை. ஏனென்றால் யுத்தத்தில் இதாலி ஈடுபடுவதற்கு முன் 100 முக்கியமான தலைவர்களைப் பாஸிஸ்டு ரகசியப் போலீஸ் கைது செய்துவிட்டது. மேலும் ஜெர்மன் ரகசியப் போலீஸும் எல்லாவித அடக்கு முறைகளை ஏற்படுத்திவருகிறது.

எங்கும், தற்போது இதாலியருக்கு நேரும் நஷ்டங்களிலிருந்தும், அவர்கள் பிடித்த நாடுகளை இழந்து வருவதாலும் ஜனங்களுக்கு சமாதானமேற்படவில்லை என்பது மாத்திரம் தெரிகிறது.

முன் சொன்னபடி, பால்கன் நாடுகளில் அச்சுநாடுகள் ஜயம் பெற்ற பொழுதும், வெய்யில் காலங்களிலும் இருந்தால், மாரிகாலமும் வந்து, நிலக்கரி அகப்படாமல், ஆகாரம், உடைகளிலும் கட்டுப்பாடு வந்தால் கேட்கவேண்டுமா. இன்னும் அதிகமாகும்.

உடனே ஜனங்கள் அரசாங்கத்தை தள்ளிவிட முடியாத போனாலும், வரும் சரத் காலத்தில், முஸோலினி, அரசர் இவர்களுடைய நிலை ஆபத்துக்குள்ளாகும் என்று சொல்லலாம்.

## ஜெர்மானியர் இதாலியரைப் புகழும் காரணம்.

ருஷ்ய யுத்தத்தால், முன் சொன்ன விதமாக, இதாலியருக்கு அரசாங்கத்தின் பேரில் மனஸ்தாபமும், நம்பிக்கையில்லாத தன்மையையும் ஏற்பட்டிருப்பதை ஜெர்மானியர் தெரிந்துகொண்டு பலமான பிரசாரங்களைச் செய்துவருகிறதாக அக்டோபர் மாதம் 2-ம் தேதி மான்செஸ்டர் கார்டியனின் அரசியல் நிருபர் எழுதினார். இதுவரையில் கிழக்குப் போர்முனையில் இதாலியர் செய்த உதவியைப் பற்றி ஒன்றும் சொல்லாமல், சென்ற இரண்டு நாட்களாக மட்டும் ஜெர்மன் கம்பியில்லாத் தந்தியில் ருஷ்யாவில் இதாலிய சைனிய அணிவகுப்புகள் பிரமாதமாகச் சண்டையிடுவதாகச் சொல்லப்பட்டது.

## சாமன்களின் குறைவு அதிகம் பாதிக்கிறது.

இதாலியின் நிலை மிகவும் ஆபத்துக் குள்ளாகி வருகிறதாக அங்காராவிலுள்ள டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் கேபிள் மூலம் தெரிவித்திருக்கிறார். யுத்த முஸ்தீப்பு சாமான்களும், விலைபொருள்களும் குறைந்துவிட்டதாம். 10 சைனியப் பகுதிகளை ருஷ்யப்போரின் உதவிக்கு ஜெர்மனி கேட்டபொழுது இதாலி மூன்று பகுதிகளும், நான்கு கருப்புச்சட்டை இதாலியப் பட்டாளப் படையும் தான் அனுப்ப முடிந்ததாம். எங்கும் அமைதி இல்லாமலும், ஸிஸிலியில் பெரும் கலகமும் உண்டாகியிருக்கிறதாம்.

## அமெரிக்க நிருபர் கொடுக்கும் விவரம்.

ரோமில் பலமான பிரசுரத்தடைக்குப் பின்னர் வந்துள்ள செய்தியை நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் எழுதியதை (டெயிலி டெலகிராப்பின் நிருபர் நியூ யார்க்கிலிருந்து கேபிள் செய்திருக்கிறார்) இங்கே கொடுக்கிறோம்.

வியாபாரத் தடையினால் இதாலியருக்கு உண்டாகியிருக்கும் பலமான நஷ்டத்தைப் பற்றி அவர் சொல்லியிருக்கிறார். "இம்மாதிரியான வியாபாரத் தடைகள் திடீரென்று தோன்றி பாதி இதாலிய தொழிற்சாலைகளைக் கெடுத்துவிட்டன". 15 நாட்களுக்கு ஒருவித வியாபாரமும் செய்ய முடியாத போதிலும், கடைகளைத் திறந்து வைத்துக்கொள்ளவேண்டுமாம். ஸ்திரீ புருஷர்கள் அணியும் உடுப்பு, தொப்பி முதலிய சாமான்களுக்கும் தடை உண்டு. ஆகையால் ஜெர்மானியர் ஏன் இங்கே வந்தனர் என்று நினைக்கப்படுகிறது. தெற்கே இன்னும் அதிகமான கஷ்டங்கள் இருக்கின்றன. பிரிடிஷ் விமானங்கள் ஸிஸிலியைத் தாக்கியதிலிருந்து பாஸிஸ்ட் கக்ஷிக்கு விரோதமாக கலகம் ஏற்பட்டிருக்கிறது.

---

## ஜெர்மானியர்கள் அணுகி விபத்தை விளைவிக்கப் பார்க்கும் இந்த சமயத்தில் மாஸ்கோ வாஸிகள் நடந்துகொள்ளும் விதம்.

ஜெர்மனி இம்மாதிரி மிரட்டி வரும்பொழுது மாஸ்கோவில் ருஷ்யர்கள் எவ்விதம் உயிர் வாழ்கிறார்கள்? என்று (ஆங்கிலோ-அமெரிக்க தூது கோஷ்டியுடன் மாஸ்கோவிலிருந்து திரும்பி வந்த) வர்னன் பார்ட்லெட் என்பவர், அக்டோபர், 16-ல் நியூஸ் கிரானிகிள் பத்திரிகையில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். ஒரு வருஷத்திற்குமுன் பிரிடனில் நடந்த யுத்தத்தில், லண்டன், லண்டன் வாசிகளைக் குறித்த அநுபவங்கொண்டு எழுதுகிறவர்களும், விமர்சகர்களும் தூரத்திலிருப்பவர்கள் கேட்கவும், படிக்கவும், தங்கள் எண்ணங்களையும், செய்கைகளையும் சாதுர்யமாக வர்ணித்திருந்த போதிலும், அபூத கல்பனையாகவும், பிசகாகவும் அபிப்பிராயங்கள் ஏற்பட்டது ஞாபகம் இருக்கும். இப்பொழுது மாஸ்கோவில் அதிக கஷ்டங்களுக்கிடையில் முன்னிருந்ததைவிட சிறு கூட்டமாக இருக்கும், விசேஷ நிருபர்களை நம்பவேண்டியிருக்கிறது.

மாஸ்கோவைத் தாக்க முக்கியமாக தென்பக்கத்திலிருந்து வரும் மிரட்டல்கள் சந்தேகமன்னியில் பீதியை விளைவிக்கிறது. ஆனால், சென்ற வாரமெல்லாம் சந்தோஷம் குறையாமல் நாடகங்கள் நடந்து வந்தன. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்கூட லெனின்கிராட்டில் உள்ள பிரதம நடனமாது புலியாகோவாவும், அவள் போன்ற மாஸ்கோவிலிருக்கும் பேட்டிக்காரி லாபிஸ்பின்ஸ்காயா என்பவளும் சேர்ந்து பெருத்த கும்பலுக்கு முன் நடித்தார்கள்: வழக்கம்போல் இவர்களுடைய சாமர்த்தியத்தைப்பற்றி பார்த்தவர்கள் ரசித்தார்கள். இது ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் படகு பந்தயக் கக்ஷிக்காரர்களைக் குறித்து பேசுவதைப் போலிருக்கிறது.

பிரிடனில் எதிரிகள் குண்டுகள் வீசி, சேதம் விளைவித்ததைப்பற்றி "பிரிடன் அவ்வெதிர்ப்பை சகித்துக்கொள்ளும்" என்ற படம்பிடித்து சினிமா காண்பிக்கப்படுகிறது. அதே மாதிரியாகவே மாஸ்கோவை ஜெர்மானியர்கள் தாக்குவதை மேற்சொல்லிய விதமாகவே எடுக்கப்பட்ட சினிமா படம் மனதிற்கு அவ்வளவு பீதியை உண்டாக்கவில்லை. ஏனென்றால் மாஸ்கோவில் எதிரிகள் இன்னும் அதிகமாக குண்டுகள் வீசவில்லை என்ற காரணத்தினால்தான்.

மாஸ்கோவைப்பற்றி பொய் சொன்னதைப்போல் இவ்வளவு முழுப்பொய்யாக வேறு எந்தக் காலத்திலும் டாக்டர் கோயபல்ஸ் சொல்லவில்லை. அநேக வருஷங்களாக, ரொட்டி, பால், பத்திரிகைகள் இவைகளுக்காக நீண்டகாலமான பிரச்னையாகவும், மற்ற பொருள்களுக்கு கொஞ்ச காலமான ஆக்ஷேபனைகளாகவும் இருக்கின்றன. பத்திரிகாலயங்களில் பத்திரிகை பிரசுரிப்பதில், அடக்கியிருக்கும்



தேசங்களில் வம்பு கேட்கும் அடக்கமான ஜனங்கள் தங்கள் தங்கள் அறையில் போய்த்தான் முணுமுணுக்க வேண்டும். ஆனால் கொஞ்சம்கூட தோல்வியாவது பீதியாவது சொல்லப்படவில்லை.

எனக்குத் தெரிந்தமட்டில் ருஷ்யாவில் தேசத் துரோகிகள் கிடையாது. விசேஷ நிருபர்கள் அதிகமான உற்சாகத்தை அளிக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி சொல்லாததினால், ருஷ்ய ஜனங்களுக்கு உற்சாகம் குறைவுபட்டிருந்தால், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தீர்மானம் அதிக வலிவானது. ஒரு தலைமுறையாகவே அவர்கள் தேசத்தில் யுத்தம் நேரிடுமென்றே எதிர்பார்த்து அவர்கள் தயாராகி வந்திருக்கிறார்கள். விரோதிகள் எந்த தேசத்தினராக இருப்பார்கள் என்ற சந்தேகமட்டில் இருந்ததே தவிர, யுத்தம் நிச்சயமாக எதிர்பார்க்கப்பட்டது. அவர்கள் தங்களுடைய சௌகரியங்களையும், அவசியமானவைகளையும்கூட, பரித்தியாகம் செய்து ராணுவ பலத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள். சென்ற யுத்தத்தில் அநேகமாக ஆயுதங்கள் இல்லாமல் இருந்தபோதிலும் பிடிவாதத்துடனும், தைரியமாகவும் யுத்தம் புரிந்தனர். ஆனால் இந்த யுத்தத்தில் அவர்களுக்கு முந்தியதைக் காட்டிலும் நல்ல முன்நிப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும் தங்கள் தேசத்தைப் பாதுகாக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. ருஷ்யாவில் அறிவிப்புக் கட்டுமுறை அதிகமாகயிருக்கிறது. இது ஆக்ஷேபிக்கக் கூடியதுதான். ஆனால் ருஷ்யர்களுடைய திடத்தையும், தீர்மான புத்தியையும் எவனும் ஸ்தோத்திரம் செய்யாமல் இருக்கமுடியாது.

---

## ஹிட்லர் விரும்பிய ஐரோப்பிய மகாநாடு கூடமுடியவில்லை.

## ருஷ்யாவும், ஆக்கிரமித்த ஐரோப்பாவும் ஹிட்லரை ஏமாற்றியவிதம்.

## நாஸி புது "திட்டத்திற்கு எதிர்ப்பு."

## பயங்கர அரசாட்சியில் ரகசிய யுத்தத்தை அடக்க முடியவில்லை.

யூஜின் லென்ஹாப் எழுதியது.

1941-ம் வருஷம் அக்டோபர் முடிவில் ஆக்கிரமித்த ஐரோப்பாவில் அரசாங்க முறையை ஸ்தாபித்துவிட வேண்டுமென்று ஹிட்லர் நினைப்புக் கொண்டார். இதற்காக வியன்னாவில் ஒரு ஐரோப்பிய சமாஜத்தைக்கூட்டி "புது திட்டத்"திற்கான நிச்சய அஸ்திவாரங்களைப்போட ஜெர்மனிக்கு உதவுகிறவர்களும் அதன் தலைவர்களும் ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாயும் அறிவிக்கப்பட்டது. இதற்கான நிகழ்ச்சிக் குறிப்புகள், ருஷ்யாவைத் தாக்குவதற்குமுன் போடப்பட்டன. ருஷ்யாவை சீக்கிரத்தில் ஜெயித்து விடலாமென்று நினைத்தான். ருஷ்ய யுத்தத்தால் வியன்னாக் கூட்டம் தாமதிக்கும் என்று கோயரிங் முதலியோர் பயந்ததையும் அசட்டைசெய்தான். இருந்தாலும் "குறித்த நாளில் பிறகு இக்கூட்டம் கூடும்" என்று சொல்லி ஒரே போடாகப் போட்டுவிட்டான்.

ஆனால் பின்னாடிகூடும் என்று அவன் சொன்னது ஒரு பிசகு. ஏனென்றால் காலவரையில்லாமல் ஒதுக்க நேரிட்டது. புதுதிட்டத்தைப்பிரசாரமாக ஜெர்மன் அதிகாரிகள் போட்டதோடு, ஆக்கிரமித்த நாடுகளில் ரகசியப்

போலீஸின் உதவியால் "புது திட்டத்தை" ஸ்தாபிக்க முயன்றதும் பலிக்கவில்லை. ஹிட்லர் வசப்படுத்த நினைத்த எவரும் இப்"புது திட்டத்தை" அங்கீகரிக்கவில்லை. ஜெர்மனியுடன் சேர்ந்த நாடுகளிலும், "தாத்காலிகமாக ஆக்கிரமித்த" நாடுகளிலும், மற்ற சிறு நாடுகளிலும் இதை பலமாக எதிர்க்கின்றனர்.

இப் "புது திட்டத்தை" ஏற்கனவேயே ஸ்தாபித்த இடங்களில் செய்த வஞ்சனை, சரித்திரத்திலேயே காணமுடியாது: யுத்தம், ஜெயில்கள், கூட்டமாகக்கொலை, பொருளாதார முறிவு, பலாத்காரமாக ஸ்திரீ, புருஷர்களை ஜெர்மனியில் வேலை செய்ய இழுத்துச்செல்வது முதலியவைதான் ஐரோப்பாவிற்கு ஹிட்லர் செய்துள்ள அனுக்ரஹங்கள். சிறிய நாடுகளிலுள்ள ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் ருஷ்யக் கொலைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஜெர்மனியின் சொல்படி நடக்காமல், தட்டிக்கிட்டு சில வாலிபர்கள் அறியாமல் நாஸிகளைத் தாக்கினால் பீரங்கி வாயில் வைக்கப்படுகின்றனர். இவ்விதம் அவர்களைக் கொல்வதில் ஹிட்லருக்கு பரமதிருப்தி.

"புது திட்டத்தை" காப்பாற்ற, ஹிட்லரால் நியமிக்கப்பட்டவர்களும் பயங்கர ஆக்ஷி, கொலை முதலியதில் ஈடுபட்டவர்கள்தான். அப்பேர்ப்பட்டவர்களின் பெயரைச் சொன்னாலே அவர்கள் வேலை தெரிந்துவிட்டது: உதாரணமாக (ஸெக்கோஸ்லாவாகியா) 'ரக்ஷகனை' ரீன்ஹார்டு ஹிட்ரீச்; (க்ரோஷியா) தலைவன் பாவ்லிச், ஜெர்மன் மந்திரி காஸ்சி; (பிரான்ஸ்) "ஜெனரல்" டியான்கிஸ்; (க்ராகவ்வின் கவர்னர்) டாக்டர் வாயச்டர்; (ருமேனியா) மார்ஷல் அன்டோனஸ்க்யூ, ஜெர்மன் மந்திரி கில்லின்ஜர்; (பல்கேரியா) இவான் மெக்கெய்லாப், ஜெர்மன் மந்திரி பெக்ரீல்; (ஹாலந்து) ஸெயிஸ் இன்குவார்டு; (போலந்து) கவர்னர்ஜெனரல் பிராங்க்; (ஸெக்கோஸ்லாவாகியா) உபமந்திரி கார்லஹெர்மன்; (நார்வே) ஜோஸப் டெர்போவன்; (ஸ்லோவனியா) டூயிபிரேக்கர்; (ஸ்லோவாகியா) கார்மாஸின் முதலியோர். இவர்கள் ஆட்சியை எதிர்த்து ரகசிய ஏற்பாடுகள் நாளுக்கு நாள் பலமடைந்தே வருகின்றன. தேசபக்தர்கள் உத்தரவை மீறுகின்றனர். ஆங்காங்கு ஏற்படும் கலகங்களை அடக்க ஜெர்மன் துருப்புகளும், ரகசியப் போலீஸாரும் வைக்கப்பட்டிருந்தாலும், உள்நாட்டினருக்கு ஆயுத பலம் இல்லாதபோதிலும், கூட்டம் கூட்டமாக கொலைகள் செய்யப்பட்டாலும் கலகம் ஒன்றும் அடங்கவில்லை. ஜெர்மானியர் செய்யும் வெறுக்கக்கூடிய அடக்குமுறையைப் பொறுத்துக்கொண்டு ஒருவரும் இருக்கவில்லை. நாஸி யுத்த சக்தியை குறைக்க முடிந்தவரை ஜனங்கள் தீவிர உணர்ச்சியுடனிருக்கிறார்கள். யுத்தத்திற்குத் தேவையான சாமான் உற்பத்தியைக் குறைத்தும், போக்குவரவு சாதனங்களைக் கெடுத்தும் வருகின்றனர். அடக்கப்பட்டும், ஏமாற்றமடைந்தவர்களின் ஜனங்கள் பேரில் "புது திட்டத்தை" பலவந்தமாக ஏற்படுத்த நாஸிகள் விரும்புவதின் எண்ணம் என்று காட்டவே முடிந்தவரை பாடுபடுகிறார்கள். மேலும் ஐரோப்பிய தேசங்கள் நாஸி அரசாங்கத்தை அங்கீகரிக்கமாட்டா என்றும் காட்டப்படுகிறது. ஆனால் அவர்களுக்குப் பொதுவான இயக்கமும் தலைவர்களும் இல்லை. சமமானவர்களுக்கு நேரும் யுத்தமுமல்ல. டாங்கிகளை எதிர்த்து துப்பாக்கியால் சண்டை போடுவதுபோல் இருக்கிறது. மனோலக்ஷியத்துடனும், ஸ்வதந்திரத்தில் வெறியுள்ள ஆசையாலும் பாடுபடுவதால் ராணுவங்களைக்கொண்டு எவ்வளவு அடக்கி வைத்திருந்தாலும், பயமுறுத்தினாலும் பின்வாங்கமாட்டார்கள்.

ஜெர்மனிக்கு எதிராக "மூன்றும் போர்முனை" என்று சொல்லக்கூடிய இந்த ரகசியப் போர் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியில்லை. ஒவ்வொரு ஆக்கிரமித்த நாடுகளிலும் அடிக்கடி கலகங்கள் ஏற்பட்டு மற்ற இடங்களுக்குப் பரவுகிறது.

"நாஸிகளை அடக்கக்கூடியவர்கள் வருவார்கள்" என்று ஹாலந்தின் தேச



பக்தர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். "நாஸிகளுக்கும், அவர்கள் உத்தியோகஸ்தர்களுக்கும் அழிவுகாலம்" என்று ஸெர்பியாவில் சொல்லப்படுகிறது. "ஸத்தியமே ஜயிக்கும்" என்று மாஸரிக்கின் ஸ்வதந்திர வீரர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்விதம் செய்வதால் தெருக்களில் பகிரங்கமாக தங்களுக்குக் கெடுதி ஏற்படுமென்றும், ரகசியப் போலீஸ் தொந்தரவு உண்டாகுமென்றும் தெரியும். தங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் சில நாஸித் தலைவர்களைக் கொலை செய்வதைக்கேட்டு ஹிட்லர் தேசத்தினரை பூராவுக்கும் அழித்து ஐரோப்பா பூரா ரத்த நதி பிரவிக்கும்படி செய்ய கொஞ்சமும் தயங்கமாட்டான். ஆனால் தேசபக்தர்கள் யாவரும் ரகசிய யுத்தம் புரிவதென்ற ஒரே மார்க்கத்தைப் பின்பற்றுகின்றனர்.

ஐரோப்பாவின் மத்திய பாகத்திலும், தென்கிழக்கு பாகத்திலும் இரவில் விளக்கேற்றக்கூடாது என்ற கடுமையான நாஸிச் சட்டத்தை மீறி அறுவடை காலங்களில் பயிர்களுக்கு நெருப்பு வைத்து ஆகாயம் பூரா பிரகாசமாக்கப்பட்டது. ஏராளமான கோதுமை, கம்பு, சோளம், ஓட்ஸ் என்ற தானியம், உருளைக்கிழங்கு முதலியவைகளை ஜெர்மனிக்கு ஏற்றிச் செல்லுவதற்கு முன்பே எரித்துச் சாய்க்கப்பட்டன. பிரான்ஸ், பெல்ஜியம், ஸெர்பியா, ருமேனியா முதலிய இடங்களிலுள்ள ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும், துருப்புகளும், ரகசியப் போலீஸ் ஆட்களும் தெருக்களில் சுடப்பட்டனர். க்ரோஷியாவில் சுரங்கங்களில் தண்ணீரைவிட்டு வெள்ளமாக்கினர். செக், ஹங்கேரிய தொழிற்சாலைகளில் யந்திரங்கள் முறிக்கப்பட்டன. ஜலயந்திரங்கள் பல வாரங்கள் வேலை செய்யவில்லை. உலைகள் அணைக்கப்பட்டன. வெடிமருந்து சாலைகள் திடீரென்று காரணம் தெரியாமல் நெருப்புப்பிடித்தன. ருமேனியாவிலும், கலீஷியாவிலும் உள்ள எண்ணெய்க் கிணறுகளிலும், யுத்தம் செய்யும் இடங்களிலும் உள்ள வேலையாட்கள் பலமாக ரகசியக் கலகம் செய்கின்றனர். பெல்கிரேட்டிலும், ஜாக்ரப்பிலும் உள்ள தபால், தந்தி உத்தியோகஸ்தர்களைக் கொளுத்தி கேபிள் கம்பிகளை அறுத்து, கம்பியில்லாத் தந்தி நிலையங்கள் பாழாக்கப்பட்டன. இவைகள் எல்லாவற்றையும்விட நார்வே முதல் பல்கேரியா வரை ரயில்வேக்களுக்கு ஏற்பட்ட சேதம் மிக அதிகம். அதிகதூரத்திற்கு இருப்புப் பாதைகள் பிளந்தெறியப்பட்டன. வெடிகுண்டுகளால் ரயில்வே ஸ்டேஷன்களும் பாலங்களும் தகர்க்கப்பட்டும், ருஷ்ய யுத்தம் ஆரம்பம்முதல் இந்த இடங்களிலிருந்து துருப்பு, இதர சாமான்கள் ஏற்றிச்செல்லும் ரயில் வண்டிகள் கவிழ்க்கப்பட்டன.

இதற்கெல்லாம் பிரதியாக ஹிட்லர் கடும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறான். ஆக்கிரமித்த நாடுகளில் கைதேர்ந்த கொலைக்காரர்களை முக்கிய ஸ்தானங்களில் பூரா அதிகாரம் கொடுத்து அதிகமாக நியமிக்கிறான். ஹிட்ரிச், டெர்போவன், பாவ்லிச், கில்லின்ஜர், ஸ்டுயல்ப்நாகல் முதலியோரின் அரசாங்கத்தில் "புது திட்டம்" என்பது பகிரங்கத் தடியடி அரசாங்கமாகிவிட்டது. ஜெயில்கள் ஏராளமாக உண்டாயின. தனித்தனியாக் கொலைசெய்து முடியாமல் பொது ஜனங்களை சிப்பாய்கள் சுட்டுத் தள்ளுகின்றனர். "ராணுவச் சட்டம்" "அவசர நிலை" போன்ற வார்த்தைகள் ஐரோப்பா பூரா காணப்படுகின்றன.

இந்த பயங்கர ஆட்சியைக்கண்டு கொஞ்சமும் கலங்காமல் ரகசிய சூழ்ச்சிகள் இருந்தே வருகின்றன. தங்களைச் சுடும் நாஸி சிப்பாய்களைப் பார்த்து "நாஸிகளின் அழிவுகாலம் வரத்தான் போகிறது" என்று சொல்லுகின்றனர். இவ்விதம் ஐரோப்பா பூரா ஒரே கொலைக்களமாக ஆக்கியதிலிருந்தே "புது திட்டம்" பலிக்காது என்பதற்கு சரியான அத்தாக்ஷியாகும். இவ்விதமாகத்தான் ஆக்கிரமித்த நாட்டிலுள்ளோரை அடக்க வேண்டும் என்று ஹிட்லர் நினைத்தால், யுத்த அரங்கங்களில் தாத்காலிகமாகத்தான் ஏதோ வெற்றி அடையலாமே தவிர ஜெர்மனிக்கு தோல்வி ஏற்பட்டுவிட்டது என்றே சொல்லிவிடலாம்.

# முன் நடந்ததைப்பற்றியும், இனி நடக்கப் போவதைப் பற்றியும் ஒரு துருக்கியர் சொல்லுகிறார்.

(ஹானேமெடின் ஹானே முந்திய கப்பற்படை ஆலோசனை கூறுபவர் எழுதுகிறார்.)

[சென்ற வாரத்தில் 'துருக்கியரின் அபிப்பிராயம்' என்று பிரசுரிக்கப் பட்டதற்கு அநுபந்தமாக இதன் அடியிற்கண்டதை பிரசுரிக்கிறோம்.]

மூன்றாம் வருஷ ஆரம்பத்தில் இந்த பெரிய யுத்தத்தின் கப்பற்படை சம்பந்தமான ஐந்தொகைக் கணக்கு தயாரிப்பது தவறான காரியமாகாது. சென்ற இரண்டு வருஷ காலமாக தொடர்ச்சியாக நடந்துவரும் இந்த யுத்தம் இனி எப்படி நடக்குமென்பதை தெரிந்துகொள்வதில் நமக்கு ஆவல் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நம்பிக்கையுடன் வெற்றிகரமாக இந்த கோரயுத்தத்தை முடிப்பு செய்ய ஒவ்வொரு திறப்பிலும் என்ன செய்ய எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க நமக்கு ஆவல் ஏற்படுகிறது. இதைப்பற்றி பூராவும் எழுதுவதென்றால் அநேக பக்கங்கள் பிடிக்கும். இரண்டு தனிப்பட்ட வழியில் கப்பல் சண்டையைப்பற்றி கவனிப்போமானால் இப்பொழுதுள்ள நிலைமையைப்பற்றி இதைப் படிப்பவர்களுக்கு விவரித்துச் சொல்லலாம். கடல் யுத்தத்தில் இரண்டு பெரிய கப்பற்படைகள் ஈடுபட்டிருக்கின்றன. ஒன்று எதிர்த்துப் போர்புரியும் கப்பற்படை, மற்றொன்று வியாபாரப் பாதுகாப்புப்படை.

யுத்தம் ஆரம்பித்தபொழுது ஜெர்மனி, இதாலி இவ்விரண்டு கப்பற்படைகளின் மொத்தத்தைக் காட்டிலும் மேன்மையான ஒரு கப்பற்படை பிரிடனுக்கு இருந்தது. சென்ற இரண்டு வருஷகாலமாக இருதிறப்பாருக்கும் கடல் சண்டையில் ஏற்பட்ட நஷ்டத்திற்குப் பிறகும்கூட பிரிடிஷ் கப்பற்படை அடியிற்கண்ட காரணங்களினால் இன்னும் மேன்மையாகவே இருந்துவருகிறது:—

1. சென்ற இரண்டு வருஷ காலத்திற்குள் நல்ல களமுள்ள சண்டைக் கப்பல்களிலும், க்ருயிஸர்களிலும் 10 சதவிகிதமும், நாசகாரிகளில் 7 சதவிகிதமும் பிரிடனுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

2. அதே காலவரையில் ஜெர்மனிக்கு களமுள்ள யுத்தக் கப்பல்களின் மொத்தத்தில் 50 சதவிகிதம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதின் இடையில் கட்டப்பட்ட இரண்டு கப்பல்களும் அதில் சேர்ந்திருக்கிறது. மேலும் க்ருயிஸர்களில் அதற்கு 75 சதவிகிதம் நஷ்டம்.

3. இதாலிக்கு சென்ற இரண்டு வருஷத்திற்குள் புதிதாய்க் கட்டப்பட்ட கப்பல்கள் உள்பட யுத்தக் கப்பல்களில் மூன்றில் இரண்டுபங்கும், க்ருயிஸர்களில் 50 சதவிகிதமும் நஷ்டம்.

மேலே பிரிடனுக்கு இருந்ததாகச் சொல்லப்பட்ட கப்பல்களில், சென்ற இரண்டு வருஷத்தில் திட்டம்போட்டுக் கட்டிய கப்பல்களும், யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து எடுத்துக்கொண்டவைகளும் சேரவில்லை. அவற்றையும் பிரிடிஷ் கப்பற்படைக்குச் சேர்ந்ததாக வைத்துப்பார்த்தால் பிரிடிஷாருக்கு ஏற்பட்ட நஷ்டம் பூஜ்யம்தான். மேலும் யுத்த ஆரம்பத்தில் பிரிடிஷ் கப்பற்படையின் பலத்தைக் காட்டிலும், இன்னும் அதிகமாகவே இப்பொழுது இருந்துவருகிறதென்றும் சொல்லலாம்.



மேலேகண்ட விதமாய் இங்கு சுருக்கமாக ஒப்பிட்டுச் சொன்னதிலிருந்து, பிரிடன், இதாலி, ஜெர்மனி இவைகளின் கப்பற்படைகளின் தற்சமய நிலைமை எவ்விதமிருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும்.

யுத்த ஆரம்ப காலத்தில் ஜெர்மனிக்கும், இதாலிக்கும் இருந்த யுத்தக் கப்பல்கள், க்ருயிஸர்கள், சிறு கப்பல்கள் இவைகளைப்போல் இரண்டு பங்கு கப்பல்கள் பிரிடனுக்கு இருந்திருப்பதையும், இப்பொழுது மூன்றாவது வருஷ ஆரம்பத்தில் பிரிடிஷ் கப்பற்படை முந்தியவிட பலமாகவும், மேன்மையாகவும் இருப்பதை கவனித்து இந்த இரண்டு வருஷங்களில் ஒவ்வொரு திறப்புக்கும் ஏற்பட்ட நஷ்டத்தை மதிப்பிடக்கூடும்.

வியாபாரக் கப்பல் கூட்டங்கள் சம்பந்தமாய் கீழேகண்ட விஷயங்களை சற்று கவனிப்போம்:—

1. யுத்த ஆரம்ப காலத்தில் பிரிடன் வசம் 2,10,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் இருந்தன. இதில் 70,00,000 டன் நிறையுள்ளவைகள் சென்ற இரண்டு வருஷ காலத்திற்குள் நஷ்டம். இவைகளை 1,30,00000 டன் என்று ஜெர்மானியர்கள் கணக்கிடுகின்றனர். இருதிறத்தார்கள் சொல்லும் இவ்விரண்டு எண்ணிக்கைகளுக்குச் சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் இவ்விரண்டு வருஷத்திய பிரிடிஷ் கப்பல்களின் நஷ்டம் 1 கோடி டன் என்று கருதலாம்.

2. இதுவரை பிரிடனின் நேசதேசங்களுக்குச் சொந்தமாயிருந்த 1,10,00,000 டன் நிறையுள்ள கப்பல்களை இப்பொழுது பிரிடன் தன் உபயோகத்திற்கு வைத்துக்கொண்டிருக்கிறது.

3. அதனால் இப்பொழுது பிரிடன் வசம் 2,10,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் இருக்கவேண்டும்.

4. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து பிரிடிஷ் கைப்பற்றிய கப்பல்களை இதில் சேர்த்து கணக்கிடவில்லை.

## ஜெர்மனி.

1. சென்ற இரண்டு வருஷ காலத்திற்குள் 35,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் ஜெர்மானியர்களுக்கு நஷ்டம்.

2. யுத்தத்தின் காரணமாக அநேக ஜெர்மன் வியாபாரக் கப்பல்கள் நடுநிலை தேசங்களின் துறைமுகங்களிலேயே தங்கிவிட்டன.

3. இக்கப்பல்களின் பெரும்பாகம் நடுநிலை அரசாங்கங்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு இருக்கின்றன. இதுவும் ஒரு முறையில் ஜெர்மானியர்களுக்கு நஷ்டம்தான்.

"ஸோவியத் ஆயுதப்படைகளை மீண்டும் தயாரித்துவிடலாம் என்ற பிரச்னைக்கே இடமில்லை. அது முடியாத காரியம்".
(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், அக்டோபர் 22.)

ஆனால் அவர்களுக்குள்ளேயே, நாஸிகள் மேற்சொல்லியபடி வீசிக்கொள்ளவில்லை. "நாம் இன்னும் கடுமையான சண்டை செய்ய வேண்டிவரும். அக்கடும் போரில் நம்முடைய படை அணிகள் சண்டை போட்டுத்தான் ஆக வேண்டும்," என்று அவர்கள் ஜெர்மன் பாஷையில் அக்டோபர், 15-ல் சொன்னார்கள்.

"டானெட்ஸ் பள்ளத்தாக்கில் போல்ஷிவிக் துருப்புகள் வெற்றிகரமாக விடாமல் துரத்தப்படுகிறார்கள். புதிதாகத் தயாரிக்கப்பட்ட ஸோவியத் துருப்புகள் போரில் ஈடுபடும்படி செய்யப்படுகின்றன".
(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், அக்டோபர், 21.)

தெற்கு நோக்கி வியாபித்ததைக் குறித்து ஜெர்மானியர்கள் அதி சீக்கிரத்தில் பெருமையடித்துக் கொண்டதைக் கண்டித்து ஸ்டாக்ஹோம் டிட்னின்ஜெனிலுள்ள பெர்லின் நிருபர் "ருஷ்யர்கள் டானெட்ஸ் பள்ளத்தாக்கில் புதிய பாதுகாப்பு சைனியம் ஒன்று தயாரித்து வருகிறார்கள்", என்று ஒரு எச்சரிக்கை விடுத்தார்.

"தெற்குப் போர் முனையிலிருந்து தளகர்த்தர் புடன்னி மாஸ்கோவில் ஜெயிலில் தள்ளப்பட்டிருக்கிறார். சேனாதிபதி ஒரோஷிலாவும் துலைக்கப்பட்டார்".

இந்தத் தடவை கோயபல்ஸ் பொய் பிரசாரத்தில் சரியானபடி சிக்கிக் கொண்டார். அவருக்குக்கூட இப்பொய்யை மாற்றுவதற்கு வெகு சிரமம்தான்.

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, அக்டோபர்,.25.)

தளகர்த்தர் புடன்னி ஜெயிலில் இல்லை. அவரும் ஒரோஷிலாவும் இன்னும் போர்முனைகளிலிருந்து எதிரிகளைத் தாக்கிவருகின்றனர். அவர்கள், முன்னணிகளுக்குப் பின்னால் சைனியங்கள் தயாரிக்கப்பட்ட பிறகு இன்னும் பலமாக எதிரிகளைத் தாக்குவார்கள்.

"டிமோஷன்கோவை பதவியிலிருந்து நீக்கியதற்கு ஸர்க்கார் திறப்பாக யாதொரு முகாந்திரமும் சொல்லப்படவில்லை. அவர் செய்த பிசகுகள் எதுவாயிருந்தாலும் அவர் மேல் குற்றம் சாட்டப்பட்டிருப்பதில் சந்தேகமில்லை. அவன் அழிவைக் கூடிய சீக்கிரத்தில் எதிர் பார்க்கலாம்.

(ஆங்கிலத்தில் ஜெர்மன் செய்தி, அக்டோபர், 25.)

இப்பொழுது தெற்கே அதிகம் முக்கியத்வம் வாய்ந்த பிரதேசத்தில் டிமோஷன்கோ அனுப்பப்பட்டிருக்கிறார். ஜெர்மானியர்கள் மாஸ்கோவிற்கு வரவொட்டாமல் நாலு மாதகாலம் வெற்றிகரமாக எதிர்த்து வந்ததைப் போலவே, அதே தீரத்துடன் இங்கும் வேலை செய்வார் என்பதில் சந்தேகமில்லை.



## சமாதானம் கோருகிறவர்களுக்குக் கேடுதான் விளையவேண்டும்.

### ஜெர்மனி ஓய்வு எடுத்துக்கொள்ளப்பார்க்கிறது.

அடிக்கடி கோயபல்ஸ் சமாதானப்பேச்சை வெளியிடுகிறான். அது பல வகைப்பட்டது. அவன் அதை பல விதமாச் சொல்லுகிறான். ஆனால் உலகத்தை ஜயிக்க நாஸிகளின் யுக்திகளில் இது முக்கியமாக இருக்கிறது.

ஜெர்மானியர் யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கும் பொழுதே நடத்தவில்லை என்று பாசாங்கு செய்வதுபோல, சமாதானப் பேச்சை நடத்திக்கொண்டே தாங்கள் அதைப்பற்றி சொல்லவில்லை என்று பாசாங்கு செய்கிறார்கள்.

"யுத்தத்தில் பிரிடன் தோற்கடிக்கப்பட்டு, யுத்தத்தை கிளப்பி விட்ட பிறகுதான் சமாதானப் பேச்சு எடுக்கப்படும். அப்பொழுது இங்கிலீஷ்காரர்கள் தான் இச்சமாதானப் பிரஸ்தாபத்தைச் செய்வார்கள்."

(ஆங்கிலத்திலும் ஜெர்மன் பாஷையிலும், நாஸி ரேடியோ மூலம் ஒலி பரப்பியது, அக்டோபர், 13.)

இத்தாலிய ரேடியோவில் பிரிடனுக்கும், யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும், அக்டோபர், 8-ல் சொன்னதாவது :—

"சர்ச்சிலை நிராகரித்து, பொதுவுடைமைக் கக்ஷிக்காரர்களின் கொட்டத்தை அடக்கித்தான் சமாதானம் ஏற்படும். அனாவசியமாக ஏற்பட்ட இந்த யுத்தத்தில் நீங்கள் ஜயிப்பீர்கள் என்று வைத்திருக்கும் நம்பிக்கையை ஜெர்மனி துலைத்துவிடும். முடிவில் போல்ஷிவிக் கொள்கையின் கொடுமையிலிருந்து விடுதலையை உங்களுக்கு ஜெர்மனி நிச்சயமாக அளிக்கும்."

மற்றொரு செய்தி ரோமிலிருந்து பிரெஞ்சு பாஷையில் கனடாவுக்கு அக்டோபர் மாதம், 12-ம் தேதியன்று அனுப்பப்பட்டது:—

"சமீபத்தில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கையிலிருந்து பிரிடிஷ் ஜயிப்பது அசாத்தியமென்று நிச்சயமாகத் தெரிகிறது. அதனால் அது சண்டை போடுவது அனாவசியம். அதற்கு புத்தியிருந்தால், கூடிய மட்டும் உயிர்ச் சேதம், பொருள் சேதமன்னியில் போர்புரிவதை நிறுத்தப் பிரயத்னப்படும். ஆனால் பிரிடனுக்குப் பகுத்தறிவுயில்லை."

அதே வாரத்தில் பெர்லின் தென் ஆபிரிக்காவிற்கு ஜெர்மனி ஒலிபரப்பிய செய்தியாவது:—

"ருஷ்யா தோற்றுவிட்டால், பிரிடிஷார் சண்டையை நிறுத்திவிடுவார்கள். யுத்தத்தை நீடிக்கச் செய்யக்கூடியது ஒரே ஒரு காரணம் தான். அது அமெரிக்கா இந்த யுத்தத்தில் குறுக்கிடுவது தான்."

அதே தினத்தில் ஜெர்மனி இங்கிலாந்திற்கு பின்வருமாறு ஒலிபரப்பிற்று:-

"ஜெர்மானியர் பிரிடிஷாரின் முன்னோர்கள். உலகத்தில் நேசதேசங்களாக இருக்கவேண்டியது யாரென்றால் ஜெர்மானியர்களும், இங்கிலீஷ்காரர்களும் தான்."

இதாலிய வியாபாரக் கப்பல்களின் நஷ்டம் ஜெர்மனிக்குள்ள நஷ்டத்தைப் போல் அவ்வளவு அதிகமல்ல. இதாலி வெருகாலம் வரை யுத்தத்தில் ஈடுபடாமலிருந்ததினுல், அயல் நாடுகளிலிருந்த அதன் கப்பல்களை துறைமுகங்களுக்குத் திருவித்துக்கொள்ள போதுமான அவகாசம் அதற்கு இருந்தது. மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களும், அயல் நாட்டு துறைமுகங்களில் தங்கும்படி நேரிட்ட கப்பல்களும்தான் இதாலிக்கு ஏற்பட்ட நஷ்டம்.

யுத்த ஆரம்பத்தில் ஜெர்மன் விமானப்படை ஜயிக்க முடியாதபடி மேன்பாடு அடைந்திருந்தது. பிரிடிஷ் அமெரிக்கத் தொழில்களின் அபிவிருத்தியினுல் அம்மேம்பாடு இப்பொழுது பிரிடிஷ் விமானப்படைக்கு வந்துவிட்டதென்ற சமாசாரம் சமீபத்தில் கிடைத்திருக்கிறது.

அமெரிக்க, பிரிடிஷ் தொழிற்சாலைகளில் 3,700 விமானங்கள் ஒரு மாதத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றனவென்று பிரிடிஷார் சொல்லிக்கொள்ளுகிருர்கள்; ஜெர்மானியர்களோ ஒரு மாதத்தில் 2,500 விமானங்கள் செய்து முடிப்பதாகச் சொல்லுகிருர்கள்.

யுத்த ஆரம்ப காலத்தில் ஜெர்மனிக்கு 80,00,000 சொச்சம் நன்ருய் பயிற்சி பெற்ற துருப்புகள் ஆயுத முஸ்தீப்புடன் இருந்தார்கள். பொதுவாக வெவ்வேறு இடங்களில் நடந்த யுத்தத்தில் அதிலும் முக்கியமாக ருஷ்யப் போர்முனையில் ஜெர்மனிக்கு எவ்வளவு துருப்புகள், யுத்த தளவாடங்கள் நஷ்டம் ஏற்பட்டது என்று கணக்கிடமுடியாது. ஆனுல் நன்ருய் பயிற்சி பெற்ற 40 அல்லது 50 லக்ஷம் ருஷ்ய வீரர்களை எதிர்த்து யுத்தம் செய்வதென்ருல் எவ்வளவு அபார நஷ்டம் நேரிடுமென்று நாமே எளிதில் யூகிக்கலாம்.

பிரிடனுக்கு சண்டை ஆரம்பத்தில் நன்ருகத் தேர்ச்சியடைந்த சைனியம் ஏராளமாக இருந்ததென்று சொல்வதற்கில்லை. ஆனுல் இப்பொழுது அதற்கு பூரா முஸ்தீப்புடன் கூடிய 40 லக்ஷம் தரைப்படை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சென்ற இரண்டு வருஷ காலமாக பிரிடிஷாருக்கும், ஜெர்மானியர்களுக்கும் நடந்த யுத்தத்தில் ஜெர்மனி பல தேசங்களைக் கைப்பற்றி சேர்த்துக் கொண்டாலும் அதன் சர்வ வல்லமை குறைந்திருக்கிறது. அதனுல் இதே சமயம் பிரிடனின் பலம் மிகவும் அதிகரித்திருக்கிறது. இதன் மத்தியில் ஜெர்மனிக்கு நேசதேசமான இதாலியைச் சேர்ந்த 5 லக்ஷம் துருப்புகள் அபிஸீனியாவிலும், லிபியாவிலும், இறக்கும்படியோ, கைதிகளாகவோ விட்டுவிடும்படியாக நேரிட்டது.

மேலும் ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டதும், அதிருப்தி இருந்துவரும் தேசங்களில் ஜெர்மனி தன்படைகளில் ஒரு பகுதியை ஆங்காங்கு வைக்கவேண்டியிருக்கிறது.

யுத்தம் தொடங்கி மூன்ருவது வருஷ ஆரம்பத்தில் தரைப்படை, கப்பற்படை இவைகளின் நிலைமை இதுதான். ஜெர்மனிக்கு பிரிடனுடன் யுத்தம் செய்யப் போதுமான சாதனங்கள் ஏற்படாத வரையிலும், பிரிடனுக்கு வெகு தூரத்திற்கப்பால் வரவர அதிகரிக்கும் பிரதேசங்களில் தொடர்ச்சியாகச் சண்டை செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்படும்வரையிலும், ஜெர்மனிக்குள்ள பலம் வரவர குறைந்துகொண்டே வரும். ஆனுல் அச்சமயம் பிரிடன் தன் பலத்தை மேலும், மேலும் அதிகரித்துக்கொண்டேவரும். யுனைடெட் ஸ்டேட்ஸ் ராணுவ தயாரிப்புகளைப் பூர்த்தி செய்து



படைகளுடன் 60, 70 லக்ஷம் பயிற்சி பெற்ற புதிய மனிதர்களைச் ...ழுது நேசதேசத்தார்களை எதிர்க்கும் ஜெர்மன் படைகளுக்கு யுத்தத் ...சயும், தளர்ச்சியும் ஏற்பட்டிருக்கும்.

...மென்பது நேசதேசத்தார்களுக்கு அனுகுணமாயிருந்து நல்ல பயனை ...கிறது என்பது இவ்விரண்டு வருஷ சம்பவங்கள் ரூபித்திருக்கின் ...லும் அதிகம் அவகாசம் கிடைத்தால் பிரிடனும், அமெரிக்காவும் ...மானியர்களை எதிர்க்க அவர்களைவிட மேன்மையான தரைப்படை ...ரித்துவிடும். மேலும் ருஷ்யா இப்பொழுது செய்துவரும் எதிர்ப்பு, ...ல் தரைப்படையில் பிரிடிஷார் அதிக மேன்பாடு அடைவதற்கு ...வியாக இருக்கிறதென்பது நிச்சயம்.

---

# ...நாட்டு ஒலிபரப்புப் பொய்களும் ...வைகளுக்கு மறுமொழிகளும்.

---

## ...நியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிப்ரப்பின் வியாக்கியானம்.

### அக்டோபர் 18—25, 1941.

---

"லண்டன் நகர வாசிகள் கிழக்கு பாகத்தில் யுத்தம் அநேகமாய் முடிந்துவிட்ட தென்று வரவர தெரிந்து கொள்ளுகிருர்கள்".

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் சமாசாரம், அக்டோபர், 18).

"புதிதாக வந்த ஸோவியத் துருப்புகள் பூராவும் நிர்மூலமாக்கப்பட்டு கிழக்குப் போர்முனையில் யுத்தம் அநேகமாய் முடிந்துவிட்டது".

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் சமாசாரம், அக்டோபர் 19.)

"டிமோஷன்கோவின் சைனியம் பூராவும் நிர்மூலமாக்கப்பட்டது".

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், அக்டோபர் 20.)

சமீபத்தில் வெளிவந்த ஸ்வீடிஷ் பத்திரிகையில், நாஸிகள் மதிப்பிட்ட கணக்குப்படி 1,20,00,000, ருஷ்யர்கள் கொல்லப்பட்டும், பிடிபட்டுமிருக்கின்றனர். அவர்களுடைய மதிப்பு இன்னும் அதிகரிக்கும். அவ்விதம் ருஷ்யர்களின் சேதத்தை 1,50,00,000 என்று மதிப்பிட்டால், (ருஷ்யர்கள் சேகரித்த சைனியத்தின் பூராத் தொகை) ஜெர்மானியர்கள் ருஷ்யாவில் ஏன் இன்னும் சண்டை போட்டுவருகிருர்கள் என்பதற்குக் காரணம் சொல்வதற்கு முடியாது.

டாக்டர் கோயபல்ஸ், "ருஷ்ய சைனியங்கள் பூராவும் ஓட்டம் பிடிக்கின்றன. டிமோஷன்கோவின் படைகள் நிர்மூலமாக்கப்படுகின்றன", என்று சொல்லிவந்தாலும், அவர் இன்னும் மாஸ்கோவிலிருந்து வரும் ஒலிபரப்புகளைக் கேட்டிருக்கமாட்டார் என்று தெரிகிறது.

அக்டோபர் 15ம் தேதியிலும், 16ம் தேதியிலும் ஆங்கிலத்தில் நாஸி ரேடியோவில் சொல்லியது:—

"சமாதான உடன்படிக்கை வரும் வதந்திகள் ஆதாரமற்றவை. அவை ஜனநாயக நாடுகளால் தான் பரவுகின்றன."

இம்மாதிரி பலாத்கார கோழைத்தனத்தின் தந்திரங்களை ஜெர்மனியின் சூழ்ச்சி என்று அறிந்தவுடனே, அவைகள் நிராகரிக்கப்படவேண்டியவை என்று உடனே புலப்படும். அடுத்த தாக்குதலை ஆரம்பிப்பதற்குள் ஜெர்மனி சமாதானப் பேச்சுகளை விட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளப்பிரயத்தனப்படுகிறது. இம்முயற்சிகள், நேசதேசத்தார்கள் இந்த தொத்து வியாதியை அழித்துவிடக் கொண்டிருக்கும் தீர்மானத்தை இன்னும் பலப்படுத்துகின்றன.

---



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 69—(1-வது பிரிவு).

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| | 8, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 9, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 10, திங்கட்கிழமை ... | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பெரம்பூர் ... | ,, | 6.30 |
| | 11, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 12, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | கீரனூர் ... | மாலை | 6.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 13, வியாழக்கிழமை . | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 14, வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 70—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| நவம்பர் ... | 15, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 16, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| | 17, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 18, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | மலையக்குடிப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | தொலையானூர் ... | ,, | 6.30 |
| | 19, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | பனையப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 20, வியாழக்கிழமை ... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| | 21, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

# ஒவ்வொருவரும்

யுத்தத்தில் நேசதேசங்களின் வெற்றியை
விரும்புகிறூர்கள்

மேலும்

# ஒவ்வொருவரும்

நல்ல பாகெட் டயரியையும்
விரும்புகிறூர்கள்

ஆகவே ஒவ்வொருவரும் வெற்றி சின்னத்தோடு
பிரசுரிக்கப்படும்

**1942-ம் 'வி' டயரி**
**வருஷத்திய புஸ்தகத்தை**

வாங்கவேண்டும்

**இது குறிப்புப் புஸ்தகமுமாகும்**

விலை :—ரூ 1—4—0, 1—8—0, 2—0—0.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் ஆபீஸிலும்,
ஸ்டேட் பிரஸிலும் கிடைக்கும்.

---

நிகர் லாபம் பூராவும் யுத்த நிதியைச் சேரும்.


Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—8-11-41.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ நவம்பர் ௴ 15௳ [ந. 70.


பிரஸங்கம் LXX.

## ஐந்தாவது மாதம்.

ருஷ்யாவை ஹிட்லர் படையெடுக்க ஆரம்பித்து அநேகமாக இவ்வாரத்தோடு ஐந்து மாதங்கள் முடிகின்றன. ருஷ்ய யுத்தத்திற்கு ஜெர்மானியர் போட்ட கால திட்டத்தைவிட இரண்டுமடங்கு ஆகிவிட்டது. அவர்களுடைய கால அளவில், ருஷ்ய ஐக்கிய நாடுகளைப் பூரா ஆக்கிரமித்து, அதற்கு ஜெர்மனியின் கிழக்குமாகாணம் என்று பெயரிட்டு, அங்குள்ள சொத்துக்களையெல்லாம் கொள்ளையடித்துவிடலாமென்று ஜெர்மன் அரசாங்கம் நினைத்திருந்தது. இவ்விதம் நேராமல் கடுமையான சண்டைகள் தினம் நடந்துவருகின்றன. ஒவ்வொரு வாரத்திலும் ஒரு பயங்கர நிகழ்ச்சி சம்பவிக்கிறது. இச் சமயத்தில் எதிரி சைனியத்தைத் துளைத்துச் சென்றாலும், எதிர்ச் சண்டைகள் செய்தாலும் சண்டையின் போக்கை மாற்றிவிடலாம். ஆகையால் தற்காலத்திய, ருஷ்ய நிலையைப்பற்றி சில விவரங்கள் கொடுப்பது மிகையாகாது. மாரிகாலம் வந்துவிட்டது. இதைப்பற்றி ஜெர்மானியர் மிகவும் பயந்துகொண்டிருந்ததாகச் சொல்லப்பட்டது. நேசதேசங்களும் இதில் அதிக நம்பிக்கை வைத்துக்கொண்டிருந்தனர். இதற்கு முன்பே ஜெர்மானியர் அதிகமாக நாடுகளைக் கைவசப்படுத்தி, ருஷ்யர்களுக்கு விளைவுபொருள்களும், தொழிற்சாலை ஸப்ளைகளும் கிடைக்காமல் செய்து விட்டனர். ஆனால் ருஷ்ய யுத்தத்தில் ஜெர்மானியருக்கு ஏராள மனிதர்களும் சாமான்களும் சேதம். மேலும் எதிரிக்கு ஒன்றும் கிடைக்காமலிருப்பதற்காக ருஷ்யாவிலுள்ள தொழிற்சாலைகளையும், விளைவுபொருள்களையும் ருஷ்யர்களும் பாதி நாசமாக்கி விட்டனர். இவ்விதம் அவர்கள் செய்தது வீரத்தனமாய் இருப்பதோடு ஜெர்மானியருக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. மேலும் பயந்து, யுத்தரங்கத்தில் களைத்து, எதிரி வசமாகாமல், ருஷ்ய சைனியம் தைரியமாக ஒன்று சேர்ந்து நிற்கிறது. ஆனால் மாரிகாலம் வந்தால் ருஷ்யாவே ஜயிக்கப்படுமென்று ஜெர்மன் ஒலிபரப்புகளில் சொல்லப்பட்டது. நேச தேசங்களிலும் சிலர் ருஷ்ய யுத்தத்தில் கடைசியாக ஹிட்லர் மடிந்து விடுவானென்றனர்.

இந்த இரண்டு ஜோஸியங்களும் கொஞ்சம்கூட சரியாக இல்லை. அதற்காக மனதை ஸ்திரப்படுத்திக்கொண்டு வரும் காலத்தைக் குறித்து சரியான அபிப்பிராயத்தைக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். மனிதனுடைய மனது டென்னிஸ் பந்து போன்றது. மங்கின வெளிச்சத்தில் தளர்ந்த நரம்புள்ள, கோணலான தடுப்பால் அடித்தால் பந்து கோணலாகப் போவதுபோல், சம்பவங்களை நன்கு தெரிந்துகொள்ளாமல் அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொண்டால் தவறித்தான் போகும். ஆகவே இனிமேல் சரியான அபிப்பிராயம் ஏற்பட, ருஷ்ய யுத்த ஆரம்பமுதல் நடந்த சம்பவங்களை கவனிப்போம்.

**உலகத்தை ஈடுபடுத்திய யுத்தம்.** 1941 ஜூன் 22-ல் ருஷ்யாவை ஹிட்லர் படையெடுத்த சமயத்தில் ருஷ்யாவின் நிலை மட்டுமில்லாமல், உலகத்தின் வருங்காலமே நிச்சயிக்கப்படவேண்டியதாயிற்று. ஆகவே, உலகத்தின் முடிவே ருஷ்ய யுத்தத்தின் முடிவு என்ற அடிப்படையான விஷயத்தைத் தெரிந்து கொண்டால்தான் நாம் வெற்றிபெற முடியும். ஆனால், இச் சமயத்தில், வெற்றி, தோல்வி இவைகளைக் கவனியாமல், ஒரே மூர்க்கத்தனமாக ருஷ்யாவில் படையெடுத்திருக்கிறார்கள் ; இதில் இரு பெரும் சைனியங்கள் மோதிக் கொண்டு, யார ஜயித்தால் என்ன, நமக்கு சமீபத்தில் யுத்தம் வந்தால் பார்த்துக்கொள்வோம் என்று பல நாடுகளில் யுத்த வியாக்யானம் செய்கிறவர்களும் பலர் இருக்கிறார்கள். இதே மாதிரியான அபிப்பிராயம் கொண்டவர்கள், “ஐரோப்பாவின் மேற்கே ஒரு நேச தேச எதிர்ப்பு”ச் செய்வதற்காக மத்தியக் கிழக்கில், கேந்திரஸ்தானங்களிலுள்ள பிரிடிஷ் சைனியங்களையும், ருஷ்யர்களுக்கு அனுப்பும் உதவிகளையும், அட்லாண்டிக் கடலிலுள்ள பிரிடிஷ் கப்பல்களையும் திருப்ப வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நாம் அவ்விதமான அபிப்பிராயம் கொடுக்கவில்லையென்பது இப்பத்திரிகையைச் சரியாக வாசிப்போருக்குத்தெரியும். முன் சொன்ன இரண்டு அபிப்பிராயங்களும் பிசகானவை. நல்லவேளையாக பிரிடிஷாரும் அமெரிக்கர்களும் அவ்விதம் நினைக்கவில்லை. நாம் யோசிக்க வேண்டியதென்னவென்றால் ஐந்து மாத காலமாக ருஷ்யாவில் கடும் யுத்தம் செய்ய நேரிட்டும், ஹிட்லர் இனி என்ன செய்யப் போகிறான் என்றும், உலகாக்கிரமண யோசனை எப்பொழுது ஜெர்மானியருக்குக் குறையுமென்றும், தெரிந்துகொள்ள ருஷ்யாவில் தினம் ஏற்படும் சம்பவங்களையும் ஹிட்லர் நோக்கங்களையும் கவனிக்கவேண்டும்.

**பைத்தியக்காரனின் தோற்றம்.** அடியிற்கண்ட நோக்கங்களுடன்தான் ஹிட்லர் யுத்தத்தை ஆரம்பித்திருக்க வேண்டும். அதாவது :—

1. 1940, சரத்காலத்தில் பிரிடனைத் தாக்கியபோது, அதன் பூரா பலத்தையும் தெரிந்து கொள்ளாததால், ஜெர்மனியின் எண்ணம் பலிக்கவில்லை. எப்பாடுபட்டாவது இங்கிலீஷ்காரர்களை ஒழிக்க எண்ணம் உண்டு. ஆனால் “ருஷ்யாவிடமிருந்து எதிர்ப்பு” ஏற்படும் ஆகையால் ருஷ்யாவை ஜயிப்பதற்குமுன் பிரிடனை மறுபடி தாக்கச் செல்லக்கூடாது என்பது முதல் யோசனை.

2. ஜெர்மனி வசத்தில் ஒரு பெரும் சைனியம் இருக்கிறது. ஆனால் ருஷ்யா யுத்தத்திற்குத் தயாரில்லாமல் இருப்பதினால் அதைப் படையெடுத்தால் சுலபமாக ஜயித்துவிடலாமென்று இரண்டாவதான நினைப்பு.

3. ஜெர்மனி வசத்தில் இப்பொழுது எல்லா சாமான்களும் அதிகம் இருக்கின்றன. ஆனால் மேலும் புதிதாக சேகரம் செய்யவேண்டுமானால் ருஷ்யா போன்ற இடங்களைப் பிடித்தால்தான் வரும் காலத்திற்குப் போதுமான அளவு பொருள்கள் கிடைக்கும். மேலும் பிரிடன் முதலியோர் தங்கள் ஸப்ளைகளைப் புதிதாக சேகரம் செய்துகொண்டே போகிறார்கள். அவைகளுக்குச் சமமாக சாமான் ஸப்ளை பெறுவது மூன்றாவது கவலை.



4. பிரிடன் செய்த பொருளாதார முற்றுகை ஜெர்மனியை அதிகம் பாதிக்கிறது ! ஆகையால், விஸ்தாரமான பிரதேசங்கள் ஜெர்மனி வசப்பட்டிருந்தால்தான், முற்றுகை, ஜெர்மனியை அதிகம் பாதிக்காமல் இருக்கும்.

5. மூன்று மாதத்தில் ருஷ்யாவை ஜயித்து, இதாலியர்கள் நிலை நாட்டிக் கொள்ள முடியாத மத்தியக்கிழக்கு நாடுகளையும் பிடித்துக்கொண்டால் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையே துண்டாக்கிவிடலாம் என்று மற்றொரு யோசனை.

6. மேலும் ருஷ்யப் பொதுவுடைமைக்கொள்கையை அழிப்பதற்காக ருஷ்யா பேரில் படையெடுப்பு செய்யப்பட்டிருப்பதாக எங்கும் தெரியப்படுத்தினால், ஐரோப்பாவிலுள்ள சிறு நாடுகளும் உதவிசெய்ய முன் வருவார்கள். அதனால் புது திட்டத்தை ஸ்தாபித்து விடலாம். பொதுவுடைமைக் கொள்கையை, இங்கிலீஷ்காரர்களும் அமெரிக்கர்களும் எதிர்ப்பதால், இச்சமயத்தில் ஜெர்மனியுடன் சேர்ந்து விடுவதா, ருஷ்யாவையும் எதிர்ப்பதா என்று ஒன்றும் தெரியாமல் அவர்கள் திகைப்பார்கள் என்று பலவாரான யோசனைகள் செய்து ருஷ்ய யுத்தத்தை ஹிட்லர் ஆரம்பித்தான்.

**“ஹிட்லரின் பைத்திய யோசனையிலுள்ள சில நேர்மைகள்”** முன்சொன்ன விதமெல்லாம் ஹிட்லர் ஆலோசனை செய்வதற்கு சாதகமான சில காரணங்களும் இருக்கின்றன. அவையாவன :—

1. தரையில் ஜெர்மனிக்கு அதிகமான யந்திரபலம் இருக்கிறது. ஜெர்மன் டாங்கிகளுடன் ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படையும் ஒத்துழைக்கிறது. அதனால் தான் போலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகள் நாசமாக்கப்பட்டன. ஏனென்றால் அந்த நாடுகள் வசம் டாங்கிகள் அதிகம் இல்லை. அதே மாதிரி ஆக்கிரமித்த நாடுகளிலும் பலாத்காரமாக டாங்கிகளை உண்டு பண்ணும்படி செய்து அந்த உதவியுடன் ருஷ்யாவை எதிர்த்தான். அப்போது ஜெர்மனி வசம் 25,000 டாங்கிகள் இருந்தன. ருஷ்யர் வசம் 15,000 டாங்கிகள் தான் இருந்தன.

2. கிரீஸ் கிரீட் முதலிய நாடுகளை சுலபமாக ஜயித்து விட்டதால் விமான பலமும் இருக்கிறதென்று ஹிட்லர் நினைத்தான். ஆனால் ருஷ்யாவிற்கு விமான பலம் குறைவு என்றும், நவீன விமானங்களே இல்லையென்றும் அவன் நினைத்தது மிகவும் தவறு.

3. ருஷ்ய-ஜெர்மன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்ட பிறகு ஜெர்மனியிடமிருந்து பயம் உண்டாகலாமென்று ருஷ்யர்கள் நினைத்தார்களே ஒழிய திடீரென்று ஜெர்மனி படையெடுக்குமென்று எதிர்பார்க்கவில்லை. இவ்விதம் எதிர்பாராதபடி தாக்கியதால் ஜெர்மானியருக்கு சில ஆரம்ப வெற்றிகளும் கிடைத்தன.

4. ருஷ்யாவுக்கு கஷ்டம் வந்த பொழுது ஜப்பான் கொஞ்சம் தலைகாட்டும் என்றும் ஹிட்லர் நினைத்தான். ருஷ்யாவை நேரே ஜப்பான் தாக்காத போனாலும், அமெரிக்கர்களையும் பிரிடிஷ்காரர்களையும், தூரக்கிழக்கில் உள்ள தங்கள் நாடுகளைக் காப்பாற்றிக்கொள்ளும் படி பயமுறுத்தும் என்றும் ஹிட்லரின் யோசனை. இவ்விதம் செய்தால் ருஷ்யாவுக்கு நேசநாடுகள் செய்யும் உதவி கொஞ்சம் குறையலாம். ஜப்பான், ருஷ்யாவை கிழக்கே தாக்க நேர்ந்தால் ஸைபீரியாவிலுள்ள ருஷ்யச் சேனையை அங்கேயே வைத்துக்கொள்ளும் படி நேரிடும். அதனால் மேற்கிலுள்ள ருஷ்யச் சேனைக்கு உதவி செய்யப்போக முடியாது. இதெல்லாம் ஹிட்லர் எண்ணங்களுக்கு அனுகூலம் போல் காணப்பட்டன.

மேலும் ஹிட்லர் கடுமையான எதிர்ப்புகளை பல பக்கங்களில் தொடர்ந்து செய்கிறான். இவ்விதம் அவன் செய்வது சிறுபிள்ளைத்தனமென்றும், யோசனையில்லாத காரியமென்றும் சொல்லுவதற்கில்லை. தான் செய்யும் சண்டைகளுக்கு

பெரும் தடைகளும், இடைஞ்சலும் ஏற்படுமென்று தெரிந்துகொண்டு, தன்னால் முடிந்த வரை முன்ஜாக்கிரதை செய்துதான் வருகிறான். இருந்தாலும் நிவர்த்தி செய்யமுடியாத பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. முதலாவதாக தனக்கு யந்திர சாதனமும் எண்ணெயும் அதிகமாகத் தேவையாயிருக்குமென்று எதிர் பார்த்தான். போட்ட திட்டப்படி சண்டையை நடத்த முடியாதபோனால் மாரிகாலத்தில் பல ஜெர்மன் பான்ஸர்படைகள் ருஷ்யாவில் அகப்பட்டுக் கொள்ளும். அப்படியிருந்தால் ருஷ்ய எண்ணெய்ப் பிரதேசங்களைக் கைப்பற்ற முடியாது.

இரண்டாவதாக ருஷ்ய யுத்தத்தினாலேயே ஜெர்மன் சைனியம் குறைந்து விட்டால், போதுமான பலத்துடன் பிரிட்டனைத் தாக்கமுடியாமல் போய்விடும். ஆதலால் ருஷ்யா பூராவையும் படையெடுத்து ஜயிப்பதைக் காட்டிலும் சீக்கிரத்தில் ஏதோ வெற்றியடைந்ததாக ஒரு முடிவிக்கு வரப்பார்க்கிறான். இல்லாவிட்டால் சாமான் சேதம் அதிகமாகி, களைக்க நேரும். பிரிடிஷ், அமெரிக்க யுத்த தளவாடங்கள் அதிகரித்து வருவதால் அவைகளை எதிர்த்து நிற்க முடியாமலும் போய்விடும்.

மூன்றாவதாக கௌரவ ஹானி ஏற்பட்டுவிடும் என்ற பயம் அவனுக்கு இருக்கிறது. ஏனென்றால் இதற்கு முன் ருஷ்யாவை படையெடுத்தவர்களெல்லாம் வெற்றிபெறவில்லை. உதாரணமாக ஸ்வீடன் தேசத்து அரசனான 12-வது சார்லஸ்ஸும், நெபோலியனும் ருஷ்ய யுத்தத்தில் மடிந்தார்கள். திட்டப்படி யுத்தத்தை முடிக்காவிட்டால், ஹிட்லரும் அம்மாதிரிதான், பிரமாதமானவன் அல்ல என்ற எண்ணம் ஜெர்மனியிலும் பரவுமென்று ஹிட்லர் பயப்படுகிறான். யுத்த நிலைகளைப்பற்றி ஜெர்மன் மக்களுக்கு உண்மை விவரம் கொடுக்கப்படாத போனாலும், சரித்திர திருஷ்டாந்தம் அவர்களுக்குத் தெரியும்! இவைகள் தான் ஹிட்லருக்குள்ள பாதகங்கள்.

**முயற்சிக்குத் தக்க பலன்.** முன் சொன்ன விதமாக தனக்குள்ள அநுகூல பிரதிகூலங்களைத் தீர ஆலோசித்து ஹிட்லர் துணிந்து ஜூன், 22-ம் தேதி ருஷ்யா மேல் படையெடுத்தான். ஆனால் இதற்கு முன், படையெடுத்த சார்லஸ், நெபோலியன் இவர்கள் செய்த படையெடுப்பில் மின்னல் படையெடுப்புகள் கிடையாது. இதுவரை ஜெர்மன் மின்னல் படையெடுப்பினால் அநேக நாடுகள் மடிந்தன. ருஷ்யாவும் அவ்விதம் மடிந்துவிடுமென்று ஹிட்லர் நினைத்தான். ஆனால் மின்னல் படையெடுப்பு செய்வதானால் அதற்கு அஞ்சல் மூலம் ஏராளமான மனிதர்களும், சாதனங்களும் வரவேண்டும். இவைகளை போகப்போக விருத்தி செய்யவும் வேண்டும். இச் சாமான்களைக் கொண்டுவர ரஸ்தாக்கள் போடவேண்டும். அதற்காகத் தனியந்திரங்களும், வேலையாட்களும் தேவையான இடங்களில் இருந்தால்தான் ரோடுகளையும், இருப்புப்பாதைகளையும் போட்டுச் செப்பனிட முடியும். இவ்வளவு இருந்தாலும், விமானங்கள் வந்து வேவுபார்த்து, பாய்ந்து, குண்டுகளைப் போட்டு தாக்க வேண்டும். இவ்வளவு சாதகங்களும் இருக்கிறதாக நினைத்தே ருஷ்யப் படையெடுப்பை ஹிட்லர் துவக்கினான். இவ்விதம் சென்று, சாமர்த்தியமாக தங்கள் இஷ்டப்படி ருஷ்யச் சைனியத்தை அழித்தும், கோட்டைகளை பிடித்தும், ருஷ்ய அரசாங்கத்தைத் தொலைத்து மூன்று மாதத்திற்குள் ருஷ்யா பூரா வசப்படுத்திவிடலாமென்று ஹிட்லர் நினைத்தான். அதற்குப் பின் மாரிகாலம் வந்துவிடும். அப்பொழுது மறுபடி சைனியங்களை சேகரம் செய்து கொண்டு பிரிட்டனையும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும் சாவகாசமாக எதிர்க்கலாமென்பதுதான் ஹிட்லரின் நோக்கம்.

இந்தப் பெரும் யோசனையில் பைத்தியக்காரத்தனமில்லாததுபோல் தான் காணப்படும். இது சரியானது என்று சில ஜெர்மானியர்தான் நினைத்தார்கள்.



ஏனென்றால் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து உத்சாகமாயும் தைரியமாயும் இருக்கும்படி ஜெர்மன் சைனிய அதிகாரிகள் சொல்லிவருகின்றனர். அப்பேர்ப்பட்டவர்களுக்கு வேலையில்லாத்திண்டாட்டம் இல்லை. செலவுக்கு பணம் கிடைக்கிறது. ஜயித்த நாடுகளிலிருந்து கொள்ளையடித்த விளைவு பொருள்கள் கிடைக்கின்றன. பாங்கிகள் வட்டிவாசிகளை அதிகம் தருகின்றன. ஆகவே ஹிட்லர் செய்யும் பிரயத்தனங்கள் சரியானவையென்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை இது அல்ல. இப்படி நினைப்பது வீண் ஏமாற்றம்தான்.

**ருஷ்ய யுத்தம்.** இதுவரை ஜெர்மானியரின் எண்ணங்களைப் பரிசீலனை செய்தோம். இப்பொழுது யுத்தத்தை கவனிப்போம். நிலை மிகவும் முற்றிவருகிறது என்பது உண்மைதான். ஆனால் தற்போதுள்ள ருஷ்யர்கள் திடசித்தத்துடன் காரியத்தை நடத்திக் காண்பிக்கிறவர்கள். எதிரியின் பக்கமுள்ள குறைவுகளையும் கண்டுகொண்டார்கள். அதாவது எதிரி, ருஷ்யாவின் சேனைகளை குறித்த காலத்திற்குள் அழித்துவிடலாமென்று நினைத்தான். இவ்விதம் செய்ய ருஷ்யர்கள் இடம் கொடுக்காமல் கடைசிவரை ஒன்றுபட்டு நிற்கிறார்கள். மேலும் தெய்வாதீனமாய் அவர்களுக்கு பிரிடிஷ்காரர்களும், அமெரிக்கர்களும் பூரா உதவிகொடுத்து வருகின்றனர். ஆகவே எதிரிக்கு பிரதேசத்தை விட்டுக்கொடுத்தாலும், அவன் போட்ட கால திட்டப்படி செய்யவிடாமல் காலதாமதம் உண்டுபண்ணி எதிரியை களைக்கச் செய்கிறார்கள். பல நாளாகக் கையாண்டுவந்த பூ தகன முறையும் ஸ்டாலின் விருப்பப்படி தைரியமாகச் செய்யப்படுகிறது. இப்படிச் செய்வதால் எதிரிக்கு அதிகம் நஷ்டம் ஏற்படுவதோடு ருஷ்யாவிலுள்ள தொழிற்சாலைகளை எதிரி கைப்பற்ற முடியவில்லை. இவ்விதமாக ருஷ்ய யுத்தம் ஆரம்பித்து ஐந்து மாதகாலம் ஆகிவிட்டது. மாரி காலம் வந்தாலும் வராவிட்டாலும் எதிரி ஒரே மூஸ்தீப்புடன் நிற்கிறான். எதிரி முன்னேற்றம் கொஞ்சம் தடைபட்டிருக்கிறதே தவிர, பூரா ஓயவில்லை. யுத்த முறைகளையும் மாற்றி மாற்றிச் செய்கிறான். இன்னும் எவ்வளவு நாள்தான் இக்கடுமையான நிலை இப்படியே இருக்குமென்று யோசிப்போம்.

மாஸ்கோவை நோக்கி முதல் தடவையாகச்செய்த எதிரி மின்னல் எதிர்ப்பு ஸ்மாலென்ஸ்கிலேயே தடைபட்டது. ருஷ்யச் சேனையைப் பூராவாகச் சூழ்ந்துகொள்வதற்காகச்செய்த பெரும் பின்ஸர் படையெடுப்பு லெனின்கிராட்டிலும் ஒடெஸ்ஸா முன்பாகமும் தோல்வியுற்றது. இருந்தாலும் இந்த இடங்களுக்கு ஆபத்து தீரவில்லை. மறு முறையாக மாஸ்கோ, லெனின்கிராட்டை நோக்கி எதிர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஒருமாத காலத்திற்கு அதிகமாகவே, குபேர உலகம் என்று சொல்லக்கூடிய காகஸஸை நோக்கியும் படையெடுப்பு செய்து வருகிறான். கார்க்கவ், ஸ்டாலினோ எதிரி வசப்பட்டன. கிரிமியா, ஸெபாஸ்டபூல் பயத்திற்குள்ளாகி வருகின்றன. ஆனால் ராஸ்டவ்வில் அவ்வளவு பயம் உண்டாகவில்லை. இதற்கிடையில் மாரி காலத்தின் கொடுமையால் வடக்கே உள்ள ஜெர்மன் சைனியங்களுக்குத் தொந்தரவு அதிகரித்து போக்குவரவுத் தடை ஏற்பட்டிருக்கிறது. கைப்பற்றிய இடங்களில் ஒன்றும் கிடைக்காமல் ருஷ்யரின் பூ தகன முறை செய்துவிட்டது. இப்படியிருந்தும் எதிரிகள் ஏராள மனிதர்களையும் யந்திரங்களையும் கொண்டு எதிர்ப்புகள் செய்கின்றனர். ஆனால் மாரி காலம் வருவதற்குள் ருஷ்யா பூரா பிடித்து (1) சைனியத்திற்கு ஓய்வுகொடுத்து புதிப்பித்துக்கொள்ளவும் (2) கௌரவத்தை நிலைநாட்டிக்கொள்ளவும் (3) ருஷ்ய எண்ணெய்ப் பிரதேசங்களை அடையவும் ஹிட்லர் தீர்மானித்திருந்தான். ருஷ்யாவைப் பிடித்தபாடுமில்லை. எண்ணங்களும் நிச்சயமாக, இதுவரை பலிக்கவுமில்லை.

**நமக்குச் சாதகமான அம்சங்கள்.** நாம், நமக்கு பாதகமான விஷயங்களை முன் சொன்னோம். இனிமேல் சாதகமாயுள்ள அம்சங்களைத் தெரிந்துகொண்டு, பிரிடிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா,

மிகவும் அமைதியாக இருக்கின்றன. கடும் யுத்தம், மாஸ்கோ நகரினுள் பிரவேசம் இம்மாதிரியான நடப்பு ஒன்றுமில்லை. வியன்னாவில் புதுதிட்டத்தை பிரகடனம் செய்யக் கூடுவதாயிருந்த அச்சுநாட்டுக் கூட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. (நவம்பர் 8உ) 'மியூனிச்சில் சாராய அறை தினத்தன்று ஹிட்லர் பேசும்போது மாஸ்கோ வரை சென்றிருந்தாலும் தான் கௌரவம் அடைய விரும்பமில்லை என்று சொன்னான். கோயபல்ஸும், இந்த யுத்தம் எப்பொழுது முடியுமென்று தெரிந்துகொள்ள ஒருவரும் ஆயாசப்படக்கூடாது. ஆனால் எவ்விதம் முடியுமென்றுதான் கேட்கலாம் என்றான். டீன், டியூட்ஸ்லாந்தில் பேசும்போதும் 'வெற்றி பெறுவதற்கான முறைகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஜெர்மானியர் இருப்பதா, இறப்பதா என்று தீர்மானம் செய்யவேண்டியிருக்கிறது' என்றும் சொன்னான்.

லெனின்கிராட்டிற்கு 120 மைல் தென்கிழக்கில் ஆர்கேஞ்ஜலுக்குப்போகும் ரயில் பாதையிலுள்ள டிகுயின் என்ற இடத்தைப் பிடித்ததாக எதிரி சொல்லுகிறான். லடோகா ஏரியின் கரையில் சில இடங்களையும் பிடித்திருக்கிறானாம். ஒருக்கால் இப்படிச் சென்று பின்னர்களுடன் சேர்ந்து லெனின்கிராட் பட்டணத்தை சூழ்ந்து கொள்ளும் எண்ணம் இருக்கலாம். ஆனால் ருஷ்யர்கள் சொல்லுவதைப் பார்த்தால் தற்காப்பு முறையை விட்டுவிட்டு எதிரியை எதிர்த்து ருஷ்யர்கள் தாக்குவதாகத் தெரிகிறது. இந்த விஷயத்தை ஒத்துத்தான் மியூனிச்சில் ஹிட்லர் பேசியிருக்கிறான்: 'லெனின்கிராட்டில் நாங்கள் தற்காப்பு முறையைச் செய்துவருகிறோம். ருஷ்யர்கள் நம்மைக் கலைக்க வேண்டியிருக்கும். ஆனால் நம் பக்கத்தில் ஒரு ஆளையும் சேதப்படுத்தாமல் பார்த்துக்கொள்ளுகிறேன். தொழிற்சாலையான லெனின்கிராட்டை அழிப்பதுதான் என் எண்ணம்.

**மாஸ்கோ.**—ஒரு முடிவும் ஏற்படாமல் பட்டணத்திற்கு வரும் பாதைகளில் கடும் யுத்தம் நடக்கிறது. டூலா, மொஜெய்ஸ்க் நகரங்களைப் பிடிக்க எதிரி செய்யும் பிரயத்தனம் வீணாயின. நாரா நதியும், ஓகா நதியும் சேரும் இடத்தை எதிரி கடக்க முயன்றதெல்லாம் பலிக்கவில்லை. இதற்காக மறுமுறையாக ஜெர்மன் மின்னல் படையெடுப்பு ஏற்படும் போல் இருக்கிறது. ஆனால் மாரி காலம் வந்து விட்டதால் நேசதேசங்களுக்கு ஒரு பெரும் சாதகம்.

**கிரிமியா.**—பக்ஷிஸரை, மரியன்டால் என்ற இடங்களை பிடித்ததிற்கு பின் எதிரிக்கு ஒருவித வெற்றியும் ஏற்படவில்லை. ஸெபாஸ்டபூலையும், கெர்ச்சையும் விமான மூலம் தாக்குகிறான். இரண்டு நகரங்களும் நன்றாக காபந்து செய்யப்பட்டிருக்கின்றன். ஆனால் இவைகளுக்கு அருகில் எதிரி, விமான தளங்களை ஏற்படுத்திக்கொண்டுவிட்டால் ருஷ்யக் கப்பற்படை பாடுமிற்றுப்போக நேரும். இந்த இடங்களிலும் மாரிகாலம் எதிரியைத் தடை செய்யும். கருங்கடலில் பல மாதங்கள் பனி உறைந்துவிடுமாகையால் கிரிமியாவைப்பிடித்துக் கொள்ளமுடியாது.

டானட்ஸ் பிரதேசத்தில் கடும் யுத்தம் நடக்கிறது. ஆனால் ரோஸ்டவ்வைப் பற்றி ஒரு பிரஸ்தாபமும் இல்லை. டிமோஷன்கோ பெரும் படையைத் திரட்டி டான் பிரதேசத்தை வியாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறான்.

**பின்லாந்து.**—ருஷ்ய-பின்லாந்து எல்லையில் யுத்தம் நின்றுவிட்டதாகவும் ஹான்கோவை பின்னர்கள் காலி செய்ததாகவும் அறிவிக்கப்பட்டதே ஒழிய, பின்னர்கள், ஜெர்மன் சைனியங்களுடன் சேர்ந்து லெனின்கிராட்டை சூழ்ந்து கொள்ளுவதற்கு முயற்சி செய்துவருகின்றனர். மர்மான்ஸ்க், ஆர்கேஞ்ஜல் வழியாக ருஷ்யர்களுக்கு வரும் இங்கிலீஷ், அமெரிக்கச் சாமான்களைத் தடை செய்யவும் பார்க்கிறார்கள். இதைப்பற்றி மிஸ்டர் கார்டல் ஹல் அக்டோபர் 3உ



பின்லாந்து மந்திரி ப்ரோகோப்புடன் பேசும்போது ருஷ்யாவில் பின்லாந்திற்குச் சொந்தமில்லாத நாடுகளைப் பிடிக்கக்கூடாதென்று சொன்னார். அப்படிச் செய்யாமலிருந்தால் ருஷ்யாவுடன் ஒரு சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாயும் சொன்னார். இதை அனுசரித்து அமெரிக்க அரசாங்கமும் பின்லாத்திற்கு ஒரு எச்சரிக்கையும் விடுவித்தது. பின்லாந்தின் நோக்கத்தை அமெரிக்கா ஒரு நாளும் அங்கீகரிக்காது.

ருஷ்யாவிலிருந்து பின்னர்கள் பின்வாங்காவிடில் அமெரிக்காவின் சிநேகத்தை இழக்க நேரிடும் என்றும் வியக்தமாகச் சொல்லப்பட்டது.

இதற்குப் பின்லாந்து அனுப்பிய பதில் மிகவும் திருப்திகரமாக இல்லை. ருஷ்யாவில் முன்னேறுவதை இன்னும் நிறுத்தவில்லை. ருஷ்யா தன்னை இனி படையெடுக்காது என்பதற்கு அத்தாக்ஷி இல்லாததால் இவ்விதம் பின்லாந்து செய்கிறதாம். இதனால் அமெரிக்காவிற்கு ஒருவித நஷ்டமுமில்லை. ருஷ்யாவை விட்டு அகலும்படி சொல்லக்கூடாதுதான்.

**ஸ்டாலின் பேசியது.**—இதுவரை அதிகமாக ஒன்றும் வெளிப்படையாக பேசாமலிருந்துவிட்டு இவ்வாரத்தில் இரண்டு தடவை பேசினார். இரண்டு பேச்சுக்களும் ருஷ்யப்புரட்சி தினக்கொண்டாட்டத்தின்போது செய்யப்பட்டன. ஒன்று 6உ மாஸ்கோ நகரசபையின் முன்பு, ஜெர்மன் பீரங்கி சப்தம் கேட்டுக் கொண்டிருக்கும்போதே நடந்தது. மற்றொன்று பட்டணத்திற்கு வர எதிரி வீண் முயற்சி செய்தபோது நடந்தது. ருஷ்யாவிற்கு விரோதமாக ஜெர்மனியுடன் இங்கிலாந்தைச் சேர்க்க ஹெஸ் செய்த முயற்சி ஜெர்மனிக்கு விரோதமாக முடிந்தது. ருஷ்யாவுடன் இங்கிலாந்தும், அமெரிக்காவும் சேர்ந்துகொண்டன என்றும் ருஷ்ய பலத்தை சரியாகத் தெரிந்து கொள்ளாததினால்தான் ஜெர்மனி படையெடுத்தது. என்றும் சொன்னார். தற்சமயம் ருஷ்யர்கள் பின்வாங்க நேர்ந்ததிற்குக் காரணம் டாங்கிகளும் விமானங்களும் குறைந்ததுதான் என்றார். ஆனால் ஹிட்லரின் புது திட்டம் ஒருநாளும் பலிக்காது. ஜெர்மானியரும் யுத்தத்தில் மடியவேண்டியதுதான். நெபோலியன் மாதிரி ஹிட்லருக்கு நாசம்தான் விளையப்போகிறது.

**விரோதி கப்பல் நஷ்டம்.**—சென்ற மூன்று மாத காலமாக அச்சுநாட்டுக்குச் சொந்தமான 80 கப்பல்கள், பிரிடிஷ் கப்பற்படையாலும், பாம்பர் விமானங்களாலும் மூழ்கடிக்கப்பட்டன. (இவைகளின் கனம் 3,39,000 டன்கள்.) (2,67,000 டன் கனமுள்ள) 61 அச்சுநாட்டுக் கப்பல்கள் சேதமாயின. லிபியா கடற்கரையிலுள்ள பெங்காஸி, ட்ரிபோலி முதலியன பலதடவை தாக்கப்பட்டன. வடக்கு ருஷ்யாவில் உள்ள ஜெர்மன் சைனியங்களுக்கு ஸப்ளை சாமான்கள் ஏற்றிக் கொண்டு பிரெஞ்சுக் கடற்கரை, நார்வே வழியாக சென்ற விரோதிக் கப்பல்களும் தாக்கப்பட்டு, சென்ற 6 மாதங்களாக 322 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இதில் அக்டோபர் மாதத்தில் மாத்திரம் 71 கப்பல்கள் தாக்கப்பட்டன.

**மத்தியதரைக்கடலில் நாசமான எதிரிக் கப்பல்கள்.**—அக்டோபர் 8உ சனிக்கிழமை மத்தியதரைக்கடலில் இரண்டு விரோதிக் கப்பல் கூட்டத்தை பிரிடிஷ் கப்பலான அமோராவின் தலைவன், N. G. அக்னியூ பார்த்தான். டாரண்டோவிற்கு தெற்கே, இந்த இரண்டு எதிரிக் கப்பல் கூட்டங்களும் எதிர்ப்பட்டன. ஒரு கூட்டத்தில் 8 கப்பல்களும், மற்றொன்றில் இரண்டு கப்பல்களும் மறுநாள் ஞாயற்றுக்கிழமை பலமாகத்தாக்கப்பட்டன.

பிரிடிஷ் கப்பல்களில் ஒவ்வொன்றும் 5,270 டன் நிறையுள்ளது. அதில் 6 அங்குல பீரங்கிகள் ஏற்றப்பட்டிருந்தன. ஆனால் இதாலியக் கப்பல்கள் ஒவ்வொன்றும் 10,000 டன் நிறையுள்ளதாயும், 8 அங்குல பீரங்கிகள் ஏற்றப்பட்ட

இந்தியா முதலிய நாடுகளிலுள்ள ஒவ்வொரு வரும் வருங்காலத்தில் மிகவும் தைரியமாக இருக்கலாம் : அவைகளாவன :—

1. ஹிட்லர் ருஷ்யாவை படையெடுத்தது எதனுல் பலிக்கவில்லை,

2. ஏன் தற்கால திட்டப்படி காரியங்களை ஹிட்லர் நடத்த முடியவில்லை, மாரி காலம் வந்தும் ஏன் ஜெர்மன் சைனியங்கள் பின்வாங்கவில்லை,

3. அரைவாசி வெற்றியடைந்தாலும் ஹிட்லர் தோற்றுவருகிறுன் என்று நாம் எதிலிருந்து நினைக்கவேண்டும், என்ற விஷயங்களை கவனிப்போம்.

முதல் இரண்டு கேள்விகளுக்கும் பதில் முன்னுல் உள்ள பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்ருவது கேள்விக்கு ருஷ்யரின் நிலையிலிருந்து பதில் சொல்லவேண்டும். அதாவது ஒற்றுமை, முயற்சி, தியாகம் என்ற பதங்களின் மொழிகளைக் கையாண்டுதான் ருஷ்யர்கள் ஹிட்லரின் கால திட்டத்தை முறித்திருக்கிருர்கள். அதுபோல்வே நாம் இனி வரக்கூடிய வருஷங்களில் நின்று ஹிட்லரை முறிக்கவேண்டும்.

இதைத் தவிர வேறு வழிகளால் ஜெர்மானியரைத் தோற்கடிக்கமுடியாது. ஐந்து மாதகாலமாக ருஷ்யர்கள் எதிர்த்து நிற்பதிலிருந்தே அது நன்கு தெரிய வரும்.

1. டாங்கி பலம்பெற்று ருஷ்யாவில் அதிக பாகத்தை கொடூரமான வழிகளில் ஜெர்மானியர் கைப்பற்றியிருந்தாலும் கொஞ்சமும் பின்வாங்காமல் ருஷ்யர் எதிர்த்து நிற்கிருர்கள். பிரெஞ்சுக்காரர்களைப்போலல்லாமல் ருஷ்யப் பொது மக்களும் வீரர்களும் ஒரே விதமான தைரியத்துடன் இருக்கிருர்கள். இதற்குக் காரணம் ஒற்றுமை, முயற்சி, தியாகம், இவைதான்.

2. மேலும் பிரிடிஷ்காரர்களும் அமெரிக்கர்களும் தடைபடாமல் சாமான்களை துரிதமாக சேகரித்து வருகின்றனர்.

3. தங்கள் பூராச் சைனியத்தையும் ஜெர்மானியர் ருஷ்யாவிலேயே ஈடுபடுத்தவேண்டியிருக்கிறதால் பல இடங்களில் யுத்தம் நடத்துவது முடியாது.

4. ஆகவே மின்னல் படையெடுப்பு குறைவுபட்டு யுத்த வெறுப்பினுல் ஜெர்மன் சைனியம் புதிப்பிக்கப்படாமலும், சாமான்கள் குறைந்தும் வருகின்றன. போக்குவரவு மார்க்கங்கள்தான் விருத்தியாகி வருகின்றன.

5. ஆக்கிரமித்த நாடுகளில் ஸ்வதந்திர உணர்ச்சி பரவிவருகிறது. இதை பெரும் படைகளைக்கொண்டு ஜெர்மானியர் அடக்கவேண்டியிருக்கிறது.

6. (மாஸ்கோவைக் கைப்பற்றினுலும், ஸெபாஸ்டபூலை விட்டு ருஷ்யக் கப்பற்படை செல்ல நேர்ந்தாலும், ராஸ்டவ், பெட்ரோகிரேட் விழுந்தாலும்) 1916-ல் பாரிஸுக்கு வடக்கே உள்ள வெர்டு என்ற இடத்தில் ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட நிலைபோல், அவர்களுக்கு தாத்காலிகமான திருப்திதான் ஏற்படும். ஏனென்ருல் மற்ற தேச சைனியங்கள் கலைபடாமல் நின்று முடிவான வெற்றியை அப்பொழுது யடைந்ததுபோல இப்பொழுதும் ஜெர்மனிக்கு விரோதி நாடுகளின் சைனியங்கள் ஒன்று சேர்ந்து வெற்றிபெற முயற்சிக்கின்றன.

இவையெல்லாம் நமக்கு அதிக சாதகமான அம்சங்கள். இவ்விதம் அமைந்திருப்பதற்குக் காரணம் ஒற்றுமை, முயற்சி, தியாகம் என்பதை இரான், இராக், எகிப்து முதலிய நாடுகளைப்போல் இந்தியாவும் உணரவேண்டும். அப்பொழுதுதான் எதிரியின் வசப்படாமல் இருக்கலாம். இத்துடன் ஹிட்லரை விடக்கூடாது. ஏற்கனவேயே அவனுக்கு மானக்கேடு ஏற்பட்டுவருகிறது. பூராவாக அவனை அடித்துச் சாய்க்காமல் போனுல் காயமடைந்த புலி ரோசத்துடன் பாய்வதுபோல் பாயப்பார்ப்பான்!



ஆனுல் "ஏன் இவ்வளவு நஷ்டம் நேர்ந்தும், போக்குவரவு சிரம்ம் ஏற்பட்டும், மாரிகாலம் வந்தும், ஜெர்மன் சைனியங்கள் எதிர்த்துச் செல்லுகின்றன. ஏன் பிரிடன் உதவிப் படையைத் திரட்டிக்கொண்டு ஐரோப்பாவின் மேற்கே போர்தொடங்கவில்லை. ஹிட்லர்தான் இருமுனைகளில் சண்டை வருமென்று பயப்படுகிறுனே. மேற்கே போர்தொடங்கினுல் மத்தியக்கிழக்குக்கு யுத்தம் பரவாமல் தடுத்து விடலாமே" என்றெல்லாம் கேட்கலாம்.

இக்கேள்விக்குப் பதிலாக அரசாங்க அறிக்கையில் பிரசுரிக்கப்பட்டதை இங்கே கொடுக்கிறேம். அதிலுள்ளதாவது :—"ஹிட்லர் ஆதிக்கத்தில் ஐரோப்பிய தொழிற்சாலைகள் பூராவும் இருக்கின்றன. 120 லக்ஷம் சைனியமும் உதவிப்படை 40 லக்ஷமும் கொண்டிருக்கிறுன். இதில் மூன்றிலொரு பங்குதான் ருஷ்ய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. பாக்கியை, பிரான்ஸ், பெல்ஜியம் ஹாலந்து, டென்மார்க், நார்வே முதலிய, நாடுகளில் வைத்திருக்கிறுன். (இந்நாடுகள் பிரிடனுக்கு கிழக்கே அரைவட்டமாகக் காணப்படும்.)"

"தேவையானுல் இதாலி, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா முதலிய இடங்களிலிருந்தும் ஒருகோடி துருப்புகள் சேகரம் செய்யமுடியும். லுப்ட்வாபி என்ற ஜெர்மன் விமானப்படையின் 4 பாகங்கள் ருஷ்யாவில் யுத்தம் செய்கின்றன. பாக்கியுள்ள (5,000 விமானங்கள்) மூன்று பாகங்களைக்கொண்டு மற்ற நாடுகளின், பேரில் ஜெர்மனி எதிர்க்க முடியும். ஆகவே இம்மாதிரியான சாதகங்களால் ஜெர்மனி இருபோர் முனைகளிலும் இருதலைப்பாம்புபோல் சமாளிக்கக்கூடும்."

"15,000 லக்ஷம் ஜனங்களடங்கிய ருஷ்யாவை பிடிக்கப் போகும்போது 20,30 லக்ஷம் ஜெர்மானியர் சேதமானுல் ஒரு பெரிய நஷ்டமில்லை என்று ஹிட்லர் நினைப்பதால், ஒரு உதவியும் செய்ய முடியாமல் இங்கிலீஷ்காரர்கள் சும்மா இருக்கவேண்டியதுதான்."

ருஷ்ய யுத்தத்தில் ஜெர்மனி அதிகம் ஈடுபட்டிருப்பதால் பிரிடன் படையெடுப்பைப்பற்றி பின்னுல் பார்த்துக்கொள்வோம் என்று ஹிட்லர் நினைக்கிறதாக இந்த வார்த்தைகள் மூலம் அறியலாம். அது எப்படியானுலும் முன்கண்ட அறிக்கையில் உள்ள சைனியக் கணக்கின்மூலம் நாம் சில முடிவுக்கு வரலாம்.

இதர நாடுகளிலிருந்து வரக்கூடிய ஒரு கோடி சைனியத்தில் தேர்ச்சிபெற்ற 20 லக்ஷம் சிப்பாய்கள்தான் இருப்பதாகவும், ருஷ்யாவில் ஜெர்மன் சேதம் 30 லக்ஷம்தான் என்று, வைத்துக்கொண்டாலும் நாம் ஒரு விதத்திலும் மனம் தளரவேண்டியதில்லை. ஸ்டாலினே தைரியமாக இருக்கும் பொழுது நமக்கு பயம் வேண்டாம். விஷயங்களை நேரே அறிந்து சமயோசிதம்போல் நடப்பது தான் மேலானது. ஹிட்லர் இன்னும் தோற்கப்படவில்லை. அவனைத் தோற்கடிப்பதற்கான காரணங்கள் பல இருக்கின்றன. ருஷ்யர்கள் மாத்திரம் ஹிட்லரை தோற்கடிக்க முடியாது. ருஷ்யாவுடன் நேசதேசங்களும் சேர்ந்து அவனை ஜயிக்கப்போகின்றன. அதற்காக ஒவ்வொரு வரும் முடிவுவரை முழுமனதுடன் விடாமல் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

---

## வாரயுத்தச் செய்திகள்.

### 6—11—41-லிருந்து 12—11—41-வரை.

**மாரிகாலம்** ருஷ்ய போர்முனையில் ஆரம்பமாகிவிட்டது. போர் நடக்கும் இடங்களெல்லாம் மழையும பனியும் மூடிவருகின்றன. ஜெர்மன் அறிக்கைகள் இவைகளைப்பற்றி சொல்லிவிட்டு, ஏதோ சிற்சில வெற்றிகள் பெறுவதாக

தாயும் இருந்தன. அவைகளின் வேகமும் அதிகம். எதிரிகளின் பத்து வியாபாரக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. இரண்டு இதாலிய நாசகாரிகள் சேதமாயின. ஆனால் பிரிடிஷ் கப்பல்களுக்கு சேதமுமில்லை, நஷ்டமுமில்லை.

மேலும் மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் நீர்மூழ்கிகள், துருப்புகளோ சாமான்களோ ஏற்றிச்சென்ற எதிரியின் 4 கப்பல்களையும் இன்னும் உபரியாக இரண்டு கப்பல்களையும் மூழ்கடித்தன. இரண்டு வியாபாரக் கப்பல்களும், இரண்டு சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்களும் சேதமாயினவென்று பிரிடிஷ் கப்பற்படை தலைவர் சொன்னார்.

**இரண்டாவது போர்முனையில் பிரிடனின் ஆகாயச்சண்டை.**—ஐரோப்பாவின் மேற்குப் பக்கத்தில் பிரிடிஷ் விமானப்படையின் வெற்றிகளைப்பற்றி இங்கு சற்று சொல்லுவோம். சென்ற ஆறு மாதங்களாக பிரிடிஷ் பாம்பர் விமானப்படை

(1) ஜெர்மனியின்பேரில் 20,000 டன் நிறையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறது.

(2) 332 விரோதிக் கப்பல்களை மூழ்கடித்தோ நாசமாக்கியோ விட்டது.

(3) ருஷ்யப் போரில் ஈடுபடாமல் லுப்ட்வாபியின் பாதியை—முதல் தரமான விமானங்களையும், விமானிகளையும்—தடுத்துவிட்டது.

(4) 1,152 விரோதி விமானங்களையும், 2,882 பேர்களையும் சேதமாக்கியது.

(5) அட்லாண்டிக்கிலும், ஆர்டிக்கடலிலும் ருஷ்யாவிற்கு வரும் அமெரிக்க சாமான் ஸப்ளைக் கப்பல்களைப் பாதுகாத்து வந்திருக்கிறது.

(6) அமெரிக்கத் தொழிற்சாலைகள் தாக்கப்படாமல் பாதுகாத்துப் புதிய யுத்த ஆயுதங்களைத் தயாரிக்க உதவிசெய்துவந்திருக்கிறது.

(7) எதிரிக்குப் பீதியை உண்டாக்கி, பிரிடிஷ் விமானப்படையைக்கண்ட மாத்திரத்தில் ஒதுங்கும்படியான மனோபாவம் ஏற்படும்படி செய்திருக்கிறது.

அக்டோபர் மாதத்தில் மட்டில் பிரிடிஷ் விமானப்படையின் வெற்றிகளும், தாக்குதல்களும் மிகவும் அதிகம். இதே மாதத்தில், வடகடலிலும், அட்லாண்டிக்கிலும் 71 விரோதிக் கப்பல்களையும், மத்தியதரைக்கடலில் 30 கப்பல்களையும் மூழ்கடித்தோ, நாசமாக்கியோ விட்டது. சீதோஷ்ணநிலை மிகக் கொடியதாக இருந்தபோதிலும், 5 பகலிலும் 11 இரவுகளிலும் அச்சு நாடுகளின் 81 லக்ஷியங்களில் 195 தாக்குதல்கள் செய்திருக்கின்றது. அந்தத் தாக்குதல்களில் நேபிள்ஸில் 5 தடவை, பெங்காஸியில் 21 தடவை, ட்ரிபோலியில் 13 தடவை, பார்டியாவில் 12 தடவை, ஜெர்மனியில் 17 தடவை, ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் 59 தடவை அடங்கியிருக்கின்றன.

சென்ற வாரம் நவம்பர் மாதம் 7-ம் தேதியில் பெர்லின்பேரில் பெரிய தாக்குதல்கள் ஏற்பட்டன. அதோடு மற்ற லக்ஷியங்களான எஸ்ஸன், இங்கிலீஷ் கால்வாய், லிபியாவின் தளங்களும் தாக்கப்பட்டன.

**ஜப்பான்.**—கடைசி காலத்தில் ஜப்பான், மிஸ்டர் ஸபுரோ குருஷோவை வாஷிங்டனுக்கு அனுப்பி, அங்குள்ள ஜப்பானிய தளகர்த்தர் நோமூராவுடன் சேர்ந்துபேசி, அமெரிக்காவைத் தன்பக்கம் சேர்த்துக்கொள்ள யத்தனப்படுகிறது. ஆனால் இதே சமயத்தில் அது இருதலைமணியன்போல் இந்தோ-சைனா எல்லைப் புறத்தில் பர்மா ரஸ்தாவைக் கைப்பற்ற ஏராளமான படைகளை ரகசியமாகத் திரட்டுகிறது.



ஜப்பான் என்ன எண்ணியிருந்தபோதிலும், பிரிடன், ஜப்பான் போர் தொடங்கியவுடன் எப்படி நடந்துகொள்ளும் என்பதை மிஸ்டர் சர்ச்சில் தெளிவாகச் சொல்லிவிட்டார். அட்லாண்டிக் சமுத்திரத்தையும், மத்தியதரைக்கடலையும் பாதுகாத்து வருவதுடன், இந்து மகா சமுத்திரத்திற்கும், பஸிபிக் சமுத்திரத்திற்கும் ஒரு பலத்த கப்பற்படை அனுப்பப்படுமென்று தெரிவித்தார். ஜப்பான் பேரில் தனக்கு அனுதாபம் உண்டென்றும், இப்பொழுது ஜப்பானின் கொள்கையைப்பற்றி தனக்கு வியப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், மிஸ்டர் சர்ச்சில் ஒப்புக்கொண்டு ஜப்பானை எச்சரிக்கை செய்திருக்கிறார். அது பின்வருமாறு :—

"தூரக்கிழக்கில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு ஏராளமான பொறுப்பு இருப்பது எல்லாருக்கும் தெரியும். பஸிபிக் சமுத்திரத்தில் அமைதியிருக்கவேண்டிய வழியைக் கண்டுபிடிக்க முடிந்தவரையில் அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்கள் முயற்சி பயன்படுமோ, என்னமோ தெரியாது."

"ஆனால், அவர்கள் முயற்சி பயனடையாமல் போய்விட்டாலும், யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும், ஜப்பானுக்கும் போர் தொடங்கினால், அடுத்த மணியில் பிரிடனும் போரில் இறங்கிவிடுமென்று இப்பொழுது நான் சொல்லுகிறேன். அது என் கடமை. (உரத்த கரகோஷம்) போரில் இறங்குவது பெருந்த துன்பத்தை விளைவிக்கத்தக்கது.

பாரபக்ஷமில்லாமல் கவனிக்கையில் ஜப்பான் அனாவசியமாக உலக யுத்தத்தில் இறங்கினால், பஸிபிக் சமுத்திரத்தில் உலகத்தில் முக்கால்வாசி ஜனங்களடங்கிய தேசங்கள் அதற்கு எதிரியாகிவிடும் என்று சர்ச்சில் ஜப்பானுக்கு எச்சரிக்கை செய்தார்.

**ஒற்றுமையாகச் சேர்ந்து தற்காப்பு சாதனங்களை உற்பத்தி செய்தல்.**—யுனைடெட் ஸ்டேட்ஸும், கனடாவும் "ஒன்று சேர்ந்து தற்காப்பு ஸாதனங்களை உற்பத்தி செய்யும் சபை" ஒன்றை ஸ்தாபித்திருக்கின்றன. அந்த சபை தற்காப்புக்கு யுத்தப் பொருள்களை உற்பத்தி செய்வதை ஒற்றுமைப்படுத்துகிறது. அமெரிக்கா, பண உதவியும், நிக்கல்போல மற்ற கைத்தொழில் செய்யப்படாத பொருள்களைச் ஸப்ளை செய்யும். கனடா அவற்றைக்கொண்டு யுத்த தளவாடங்கள் தயார் செய்யும்.

**ஐஸ்லாந்தில் யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பல் தளம்.**—ஐஸ்லாந்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒரு கப்பல் தளத்தை ஸ்தாபித்துவிட்டது. அதில் கப்பல்களும், விமானங்களும் பழுது பார்க்கப்படுகின்றன. அங்கு எண்ணெய் டிப்போக்களும், வெடிமருந்து, இன்னும் இதர யுத்த தளவாட கிட்டங்கிளும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏற்படுத்தி இருக்கிறது.

**நியூபவுந்துலாந்துக்கு அருகாமையில் 'யூ' படகுகள்.**—அமெரிக்காவுக்கும், ஜெர்மனிக்கும் விரோதம் அதிகரிப்பதில் அமெரிக்க சமுத்திரக்கரைப் பக்கம் எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்கள் தோன்றுகின்றன. அவற்றில் அநேகம், ஸெயின்ட் ஜான்ஸில் தங்கியிருக்கும் கனடா விமானப் படையினால் சமீபத்தில் மூழ்கடிக்கப்பட்டன.

**மிஸ்டர் வெண்டல் வில்கி** சமீபத்தில் செய்த பிரகடனத்தில் அநேக உண்மை விஷயங்களை வெளியிட்டிருக்கிறார். (1) இங்கிலாந்துக்கனுப்ப அமெரிக்கா தயார் செய்யும் விமானங்கள், ஜெர்மனி ஒரு வருஷத்தில் தயார் செய்யும் விமானங்களைப்போல் மூன்று பங்கு இருக்கின்றன. (2) அமெரிக்கக் கப்பற்படையும், பிரிடிஷ் கப்பற்படையும் துரிதமாக அட்லாண்டிக் சமுத்திரத்தையும், மத்தியதரைக்கடலையும் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுகின்றன. (3) வெகு காலத்திற்கு முன்னமேயே பஸிபிக் சமுத்திரத்தில் இங்கிலாந்தும், அமெரிக்காவும் சேர்ந்து யுத்தம் புரிய திட்டம் போட்டாய்விட்டது. (4) மாதத்திற்கு 30-வீதம்

அமெரிக்கக் கப்பல்கள் ஸூயஸ் கால்வாய்க்கு வந்துசேருகின்றன. அமெரிக்க யந்திர நிபுணர்கள் மத்தியக் கிழக்கில் 1,800 மைல் நீளமுள்ள போர்முனைக்கு ஏராளமாக டாங்கிகளையும், விமானங்களையும் பழுது பார்த்து அனுப்புகிறார்கள்.

பனாமா.—பனாமா வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த ஜப்பானியர்களை புதிய பனாமா சட்டப்படி வெளிக்கடத்தியதற்காக, ஜப்பான் செய்த ஆக்ஷேபனையை பனாமா புறக்கணித்துவிட்டது. பனாமா சிறிய தேசமாக இருந்தபோதிலும், தங்கள் தேசத்தார்கள் வர்த்தகம் செய்யவேண்டிய முறையை அன்னிய தேசத்து அரசாங்கத்தார்கள் சொல்லும் கிரமப்படி நடக்க இணங்கமாட்டாது.

இந்தியா.—இந்த யுத்தத்தில் 'ராயல் பாம்பே' என்று சொல்லப்பட்ட மராமத்து, சுரங்கவேலைக்குச்சென்ற படைக்கு பி. எஸ். பகத் என்பவர் உபதலைவர். $\frac{4}{6}$ ராஜபுத்தான படைக்குச் சுபேதார் ரிச்பால்ராம். இவர்கள் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். இவ்விருவர்களுடைய வீரச்செயல்களுக்காக பகத்துக்கும், சுபேதார் இறந்துவிட்டபடியால் அவர் மனைவிக்கும், மாக்ஷிமை தங்கிய ராஜப் பிரதிநிதி நவம்பர் மாதம் 10-ம்தேதி நடந்த ராணுவ கவாத்தில் விக்டோரியா பதக்கம் வழங்கினார். இந்த யுத்தத்தில் மேற்கண்ட இரண்டு இந்திய வீரர்களுக்குத்தான் இத்தகைய கௌரவம் கிடைத்தது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—11—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—எதிர்ப்புடன் காவல் புரிவது—இங்கிலீஷ் கால்வாய், (English channel), வட பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| | கப்பியில்லாத் தந்தி நிலயம், பல எதிரி மோட்டார் லாரிகள்—செர்பர்க் (Cherbourg)பிரதேசம். | தாக்கப் பட்டது. | ... | ... |
| | ஒரு மோட்டார் படகு.—செர்பர்குக்கு (Cherbourg) அருகில். | எரிந்தது. | ... | ... |
| | விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ... | ... | 3 பாம்பர் விமானங்கள். |
| | இரவில்.—மின் எண்ணெய் தொழிற் சாலை.—பெர்க்ஸோ (Bergso). | ... | ... | ... |
| | கப்பல் துறைகள்.—ஸெயின்டு நாஸேர் (St. Nazaire). | ... | நஷ்ட மில்லை. | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—11—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | லக்ஷியங்கள்.—நோடோ (Noto) ரோஸோலினி (Rosolini). | ... | ... | ... |
| | நீர்மூழ்கித் தளம்.-ஸிராகூஸ்(Syracuse), லிகடா (Licata). | ... | ... | ... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | விமான நிலயம்.—டெர்னு (Derna). | ... | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்.—போர்முனை பூராவும். | ... | 2 விமானங்கள். | ... |
| **4—11—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.-ஒரு விரோதித் துணைக்கப்பல் கூட்டம்.—பிரிஸியன் தீவுகளுக்கு (Frisian Islands)அருகில். | 1 பெரிய ஸப்ளைக் கப்பல் தாக்குண்டது. | ... | ... |
| | துறைமுகங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | ... | நஷ்ட மில்லை. | ... |
| | இரவில்.—தொழிற்சாலை லக்ஷியங்கள்-ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland). | ... | ... | ... |
| | கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்டு (Ostend), டங்கர்க் (Dunkirk). | ... | ... | ... |
| | காவல் புரிவது.—டச்சு (Dutch) நார்வே (Norweigian) கடற்கரைகள். | ... | ... | ... |
| | விரோதிக் கப்பல்கள்.—டெர்ஷிலிங்குக்கு (Terschelling) அருகில். | ஒரு பெரிய ஸப்ளைக் கப்பல் தாக்குண்டது. | 1 விமானம். | ... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| | விமானம் கட்டுமிடங்கள் விமான நிலயக் கட்டடங்கள்.—பெர்கா (Berka) விமான நிலயம். | பெரும் தீக்கள் மூண்டன. | ... | ... |
| | விமானச் சண்டை.—பெர்கா (Berka) விற்கு மேலே. | 2 விமானங்கள். | ... | ... |
| | பெட்ரோல் எண்ணெய்க் கிடங்குகள்.—பெங்காஸி (Benghazi) பெர்கா (Berka), பெனினு(Benina). | தீ மூண்டது. | ... | ... |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப்படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**6—11—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.**

| | | | |
|---|---|---|---|
| இரவில்.—லக்ஷியங்கள்— வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), ஹாம்பர்க் (Hamburg) வடமேற்கு ஜெர்மனியில் (Germany) மற்ற இடங்கள். துறைமுகம்.—லா ஹவர் (Le Havre). ஒரு விமான நிலயம்.—வட பிரான்ஸ் (France). | | ஒரு இரவு பாம்பர் விமானங்கள். | ... |

**இதாலி (Italy).**

| | | | |
|---|---|---|---|
| ரயில்வே ஸ்டேஷன், துறைமுகம், விமானம் கட்டும் இடம்.—நேபிள்ஸ் (Naples). | ... | ... | ... |
| ஒரு விமான நிலயம்.—கபோடி சினோ (Capodi Chino). | ... | ... | ... |

**ஸிஸிலி (Sicily).**

| | | | |
|---|---|---|---|
| நீர்மூர்கி தளம்.—அகஸ்டா (Augusta). | ... | .. | ... |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| | | | |
|---|---|---|---|
| லக்ஷியங்கள்.— ஸிரெனைகா (Cyrenaica), டிரிபோலிடானியா (Tripolitania). மோட்டார் போக்குவரவு, தொழிற்சாலைகள்.—டெர்ணு (Derna). | தனியாயிருந்த மோட்டார்கள் எரிந்தன. | | |
| டாங்கிகள், மோட்டார் முதலியன.—பிர் ஹகேம் (Bir Hacheim). எதிரி விமான நிலயங்கள்.—மார்டுபா (Martuba), எலாடம் (Eladem), டெர்ணு (Derna). | தரையிலிருந்த பல விமானங்கள் சேதமாயின. | | |
| பெட்ரோல் கிடங்குப் பிரதேசம், யந்திர வண்டிகள்.—ட்ரிபோலி (Tripoli). பெட்ரோல் கிடங்கு.—பெங்காஸி (Benghazi). | | 2 விமானங்கள். | |
| விமானச் சண்டைகள்.—லிபியாவின் (Libya) மேல். | ... | ... | 1 விமானம். |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை பூராவும். | ... | 12 விமானங்கள். | 104 விமானங்கள். |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**7—11—41.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| | | | |
|---|---|---|---|
| பகலில்—எதிர்ப்புடன் காவல்புரிவது.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium). தொழிற்சாலைகள், பீரங்கி நிலைகள், பெட்ரோல் சாமான் ஏற்றிய ரயில்வண்டி.—வட பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | | |
| இரவில்—பெர்லின், கோலோன், மான்ஹைம் (Berlin, Cologne, Manheim). | பலத்த சேதம். | ... | ... |
| தொழிற்சாலை ஜில்லாக்கள்.-ரூர் (Ruhr) ரைன்லாந்து (Rhineland). | ... | ... | ... |
| துறைகள்.—போலோன் (Boulogne), ஆஸ்டெண்டு (Ostend). | ... | ... | ... |
| சுரங்க வெடிகள் போடுவது.-விரோதிக் கடலில். | ... | 35 விமானங்கள். | ... |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| | | | |
|---|---|---|---|
| துறைமுகங்கள்.—பெங்காஸி (Benghazi), பார்டியா (Bardia). | ... | ... | ... |
| ஒரு விமான நிலயம்.—மார்டுபா (Martuba) மோட்டார் போக்குவரவும், ஸ்டோர்களும் ஸொல்லத்திற்கு (Sollum) அருகில். | ... | ... | ... |
| விரோதி ஸ்தானங்கள்.—கோண்டார் (Gondar) பிரதேசம். | ... | ... | ... |
| துறைமுகமும் இதர லக்ஷியங்களும்.—டெர்ணு (Derna). | ... | ... | ... |

**இதாலி (Italy).**

| | | | |
|---|---|---|---|
| விமான தொழிற்சாலை, ரயில் வண்டிகள் நிறுத்தும் இடம், சாமான் ஏற்றும் ரயில் வண்டிகள், சைனியம் வசிக்கும் கட்டடங்கள்.-பிரின்டிஸி (Brindisi). | ... | ... | ... |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், நிலயத்திலிருந்தும் விமானங்கள்.—போர் அரங்கம் பூராவும். | ... | 1 விமானம். | 29 விமானங்கள். |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **4—11—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | | |
| ஸ்டோர்களும் தொழிற்சாலைகளும்.—நெனு (Nena). | தீக்களும் வெடிகளும் கிளம்பின. | ... | ... |
| மோட்டார் போக்குவரவு.—பார்டியா (Bardia). | ... | ... | ... |
| **ஸிஸிலி (Sicily).** | | | |
| ரயில் வண்டி.—நோடோ (Noto)வுக்கு அருகில். | ...... | ... | ... |
| கைகாட்டிப் பெட்டிகள்.—நோடோ வுக்கும் பெஸ்ஸாரோவிற்கும் இடை யில் (Noto and Passaro). | ...... | ... | ... |
| ஒரு தொழிற்சாலை.—பொஸ்ஸாஜியோ விற்கு (Pozaggio) மேற்கு. | ...... | ... | ... |
| ஒரு மோட்டார் போக்குவரவு.—ஒரு ரஸ்தா. | ...... | ... | ... |
| ஒரு விடுதி.—பெஸ்ஸாரோ முனைக்கு (Passaro) அருகில். | ...... | ... | ... |
| ஒரு பாலம்.—கெல்லாவிற்கு (Gela) அருகில். | ...... | ... | ... |
| **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| **கிழக்குப் போர்முனை.** | | | |
| விமானச் சண்டைகள் விமான நிலயங்க ளிலுள்ள விமானங்கள்.—போர் முனை பூராவும். | ...... | ... | ... |
| **5—11—41.** (புதன்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| பகலில்.-வெடிமருந்துக்கிடங்கு, சாமான் ரயில் வண்டிகள், சைனியம் ஏற்றும் மோட்டார் லாரிகள், படகுகள் நிற்கு மிடம், வீடுகள், பீரங்கிகள் வட பிரான்ஸ் (France). | ...... | 1 விமானம் | ... |
| இரவில்.—துணையுடன் சென்ற கப்பல் கள்–பிரிஸியன் தீவுகளுக்கு (Frisian Islands) அருகில். | 1 கப்பல் தீ மூண்டது. | 8 பாம்பர் விமானங்கள். (இரவுத் தாக்குதல்கள் அனைத்திற்கும்) | ... |
| இங்கிலீஷ் கால்வாய் துறைகள்.—கால் வாய்க்குக் கிழக்குப் பக்கம் (English Channel). | ... | | |
| சுரங்க வெடிகள் போடுவது.—விரோ திக் கடல். | ... | | |
| விரோதிக் கப்பல்கள்.–டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அருகில். | ... | | |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **5—11—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| எதிரித் துருப்புகள், பெட்ரோல் டாங்கி கள், லாரிகள்.—அஸடாப்பியாவிற் கும் எல் கஸாலாவிற்கும் இடையி லுள்ள ரஸ்தா (Azedabya and El Gazala). | யந்திர பீரங்கி களால் தாக்கப் பட்டன. | ... | ... |
| மருந்து கிடங்குகள்.—பெர்கா (Berka) விமான நிலயம். | ...... | ... | 1 விமானம். |
| ஸிர்டி (Sirte) குடா, எதிரிக் கப்பல் கள்.—ஸிர்டி (Sirte) குடாவிற்கு அருகில். | ...... | ... | ... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | | |
| விமான நிலயம், கச்சேரிக் கட்டடங்கள் தொழிற்சாலைகள், விமானம் தங்க உதவும் ஸாதனங்கள், சைனியம், தங்கும் கட்டடங்கள்.—காஸ்டல் பெனிடோ (Castel Benito). | ...... | ... | ... |
| மோட்டார் போக்குவரவு.—பிர்ஹாஷீம் (Ber Hacheim). | ...... | ... | ... |
| ஸப்ளை சாமான் கிடங்குகள்.—டெர்னு (Derna). | ...... | ... | ... |
| **(ஸிஸிலி Sicily).** | | | |
| கடல் விமானதளம், சைனியம் தங்கும் கட்டடங்கள்.–அகஸ்டா (Augusta). | ...... | ... | ... |
| ஒரு தொழிற்சாலை.—லிகடா (Licata). | ... | ... | ... |
| **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| **கிழக்குப் போர்முனை.** | | | |
| ஜெர்மன் போக்குவரவு.—ஜெர்மன் சைனியத்திற்குப் பின்னால். | ... | ... | ... |
| விமானச் சண்டைகள், நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் அரங்கம் பூராவும். | ... | 56 விமானங் கள். | 17 விமா னங்கள். |
| **6—11—41.** (வியாழக்கிழமை) | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| பகலில்.—எதிர்ப்புச் சண்டைகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வட பிரான்ஸ் (France). | | 3 பகல் பைடர் விமா னங்கள். (இரண்டு வரிசைகளுக்கும் சேர்த்து) | 3 பகல் பைடர் விமானங் கள். (இரண்டு வரிசைகளுக்கும் சேர்த்து) |
| படகுகளும், பீரங்கிகளும்.—டங்கர்க் (Dunkirk) பிரதேசம். | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**8—11—41.** (சனிக்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| பகலில்.—எதிர்ப்புச் சண்டைகள் வட பிரான்ஸ் (France) இங்கிலீஷ் கால்வாய் (English Channel) | … | … | … |
| ஒரு தொழிற்சாலையும் கட்டடங்களும்.—ஸெயிண்டு. போல் (St. Pol), லென்ஸ் (Lens). | அதிகச் சேதம். தீக்கள் கிளம்பின. | … 15 விமானங்கள் | … 3 பைடர் விமானங்கள். |
| ரயில்வே கோட்டை.—அகர்ஷுஸ் (Akershus). | … | … | … |
| இரவில்.—தொழிற்சாலை ஜில்லா எஸ்ஸன் (Essen) மற்ற ஜில்லாக்கள் —வடமேற்கு ஜெர்மனி (Germany). | அதிக வெடிகளும், தீக்களும் கிளம்பின. | … | … |
| துறைகள்.—ஆஸ்டெண்டு (Ostend), டங்கர்க் (Dunkirk). | …… | … | … |
| விமான நிலயங்கள்.—எதிரி ஆக்கிரமித்த நாடுகள். | …… | … | … |

## இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகம்.—ரயில் வண்டிகளைப் பிரிக்குமிடம்.—நேபிள்ஸ் (Naples). | …… | … | … |

## ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| விமானம் இறங்கும் தளம், எண்ணெய் டாங்கிகள்.—அகஸ்டா (Augusta). | தீக்கள் மூட்டப் பட்டன. | … | … |
| நீர்முழ்கி தளம்.—அகஸ்டா (Augusta). | …… | … | … |
| தொழிற்சாலைகளும், இருப்புப்பாதைகளும்.—பாலர்மோ (Palermo), கடானியா (Catania), ஸிராகூஸ் (Syracuse), மெஸ்ஸினு (Messina), ஸிஸிலியின் தெற்கே மற்ற இடங்கள். | …… | … | … |
| மற்ற தொழிற்சாலைகள்.— பிஸ்காரி (Biscari), கெல்லா (Gela). | … | … | … |
| சிலாஜந்தந் தொழிற்சாலைகள்— ரயில்வே ஸ்டேஷன்.—ராகூஸா (Ragusa). | … | … | … |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| எதிரி விமானங்கள்.—ஜெடாட்யா (Jedadya). | … | … | … |
| மோட்டார் போக்குவரவு.—அகெய்லா (Agheila) விற்குப்போகும் ரஸ்தா. லக்ஷியங்கள்.—பெனிநு (Benina). | பல மோட்டார்கள் நாசமாயின. | … | 2 விமானங்கள். |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**8—11—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

## மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| விரோதித் துணைக்கப்பல் கூட்டம்.—மத்தியதரைக் கடலின் (Mediterranean) மத்தியில். | ஒரு கப்பல் தாக்குண்டது. ஒரு நாசகாரி யந்திர பீரங்கியால் தாக்கப்பட்டது | … | … |

### ருஷ்ய விமானங்களால்.

## கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், நிலயத்திலிருந்தும் விமானங்கள்.—போர்முனை பூராவும். | … | 2 விமானங்கள். | 10 விமானங்கள். |
| போக்குவரவு ஸாதனங்கள்.—ருஷ்யாவிலுள்ள ஜெர்மன் சைனியத்திற்கு பின்புறம். | … | … | … |

**9—11—41.** (ஞாயிற்றுக்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| பகலில்.—விமான எதிர்ப்புகள் இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | … | … | … |
| இரவில்.—கப்பல் துறைகளும், கப்பல் கட்டுமிடங்களும் ஹாம்பர்க் (Hamburg). | சேதமாயிற்று. | … | … |
| துறைகள்.—கக்ஸ்ஹேவன் (Cuxhaven), எம்டன் (Emden). | … | … | … |
| துறைகள்.—டங்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்டு (Ostend). | … | … | … |
| விமான நிலயங்கள்.—எதிரி ஆக்கிரமித்த நாடுகள். | … | 2 விமானங்கள். | … |

## ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| நீர்முழ்கி தளம்.—அகஸ்டா (Augusta). | … | … | … |
| ரயில்வே ஸ்டேஷன்.— மெஸ்ஸினு (Messina). | வெடிகள் கிளம்பின. | … | … |

## இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| துறைமுகப் பிரதேசம், வண்டிகளைச் சேர்க்கும் இடம் இதர லக்ஷியங்கள்.— நேபிள்ஸ் (Naples). | பெரும் தீக்கள் கிளம்பின. பலத்த சேதம். | … | … |